(A) மதுரவசனி – மதுரை மீனாட்சி

(B) மதுரவசனி – தேன் மொழியாள்

(C) மதுரவசனி – தேன் மொழிப்பாவை

(D) மதுரவசனி – அறம் வளர்த்த நாயகி

(E) விடை தெரியவில்லை

27. இரு வினைகளின் பொருள் வேறுபாடு அறிதல்
பணிந்து – பணித்து

(A) வணங்குதல் – எதிர்த்தல்

(B) கட்டுபடுதல் – உத்தரவிடுதல்

(C) ஆமோதித்தல் – ஏற்றுக்கொள்ளுதல்

(D) கட்டளையிடுதல் – ஒத்துக்கொள்ளுதல்

(E) விடை தெரியவில்லை

28. சரியான பொருளை அறிக.
தகளி

(A) அறிவு
(B) அகல்விளக்கு
(C) உலகம்
(D) நெய்
(E) விடை தெரியவில்லை

29. சரியான பொருளை அறிக.
'காருகர்'

(A) வெற்றிலை விற்போர்
(B) எண்ணெய் விற்போர்
(C) நெய்பவர்
(D) உணவு சமைப்போர்
(E) விடை தெரியவில்லை

30. 'நுழாய்' என்பது

(A) இளநெல்
(B) வாழைப்பிஞ்சு
(C) இளம்பாக்கு
(D) எள்பிஞ்சு
(E) விடை தெரியவில்லை

31. குறில், நெடில் மாற்றம், பொருள் வேறுபாடறிந்து சரியான இணையைத் தெரிக.
விதி - வீதி

(A) சட்டம் - தெரு
(B) தெரு - சட்டம்
(C) விதித்தல் - சட்டம்
(D) தெரு - விதித்தல்
(E) விடை தெரியவில்லை

32. குறில் நெடில் மாற்றம், பொருள் வேறுபாடறிந்து சரியான இணையைத் தெரிவு செய்க.

நசி - நாசி

(A) விடம், முகர்தல்
(B) நச்சு, நலிதல்
(C) மூக்கு, சுவாசி
(D) குறைதல், மூக்கு
(E) விடை தெரியவில்லை

33. 'களை' என்னும் சொல்லிற்கு பொருத்தமுடைய இருபொருள்களைக் கண்டறிக.

(A) அழித்தல், ஆக்கல்
(B) ஒழித்தல், ஓடுதல்
(C) வயலில் களை, முகத்தின் ஒளி
(D) வயலில் காளை, எரு
(E) விடை தெரியவில்லை

34. சொல் - இருபொருள் தருக

(A) நில் - பதம்
(B) பதம் - கல்
(C) பதம் - தொல்
(D) நெல் - பதம்
(E) விடை தெரியவில்லை

35. சரியான இரு பொருளைத் தேர்ந்தெடு.

உறவு

(A) பகை - விருப்பு
(B) சுற்றம் - விருப்பம்
(C) விருப்பு - வெறுப்பு
(D) ஒப்பு - பகை
(E) விடை தெரியவில்லை

36. உங்கூருக்கே வர்றேன் - என்பதற்கான சரியான எழுத்து வழக்கைக் கண்டறிக

(A) உங்களுடைய ஊருக்கே வர்றேன்
(B) உம்முடைய ஊருக்கே வருகிறேன்
(C) உன்னுடைய ஊருக்கே வர்றேன்
(D) ஊங்கள் ஊருக்கே வருகிறேன்
(E) விடை தெரியவில்லை

37. வெரசா வந்துருவேன் - என்பதற்கான சரியான எழுத்து வழக்கைக் கண்டறிக

(A) நொடியில் வந்துவிடுவேன்
(B) வேகமாக வந்துருவேன்
(C) விரைவில் வந்துவிடுவேன்
(D) விரைவாக வந்துருவேன்
(E) விடை தெரியவில்லை

38. சரியான வினாச்சொல்லைத் தேர்ந்தெடுக்க.

தற்போது வெகுவாக அழிந்து வரும் பறவையினம் ————————?

(A) எவை
(B) யார்
(C) எது
(D) என்ன
(E) விடை தெரியவில்லை

39. சரியான வினாச்சொல்லைத் தேர்ந்தெடு.

வினைத்திட்டம் என்பது

(A) யாது?
(B) எது?
(C) என்ன?
(D) யாவை?
(E) விடை தெரியவில்லை

40. சரியான வினாச்சொல்லைத் தேர்ந்தெடு

இந்திய நூலகவியலின் தந்தையென அறியப்படுவர் ————————?

(A) எவர்
(B) யாவர்
(C) யார்
(D) எப்படி?
(E) விடை தெரியவில்லை

41. சரியான நிறுத்தற்குறிகள் இடப்பட்டத் தொடரைக் கண்டறிக.

(A) ஆ, எவ்வளவு பெரிய கரடி, கரடிக்கு மரம் ஏறத்தெரியுமா.

(B) ஆ! எவ்வளவு பெரிய கரடி. கரடிக்கு மரம் ஏறத்தெரியுமா?

(C) ஆ எவ்வளவு பெரிய கரடி கரடிக்கு மரம் ஏறத்தெரியுமா?

(D) ஆ! எவ்வளவு பெரிய கரடி கரடிக்கு மரம் ஏறத்தெரியுமா.

(E) விடை தெரியவில்லை

42. பொருத்தமான நிறுத்தற்குறிகளை இட்டத் தொடரைக் கண்டறிக.

(A) பேரறிஞர் அண்ணா, 'செவ்வாழை' என்னும் சிறுகதை எழுதினார்.

(B) பேரறிஞர் அண்ணா 'செவ்வாழை' என்னும் சிறுகதை எழுதினார்.

(C) பேரறிஞர் அண்ணா "செவ்வாழை" என்னும் சிறுகதை எழுதினார்.

(D) பேரறிஞர் அண்ணா 'செவ்வாழை' என்னும் சிறுகதை எழுதினார்!

(E) விடை தெரியவில்லை

43. சரியான நிறுத்தற்குறிகள் இடப்பட்டத் தொடரைக் கண்டறிக

(A) இனியன் நன்கு படித்தான்; அதனால், தேர்ச்சி பெற்றான்.

(B) இனியன் நன்கு படித்தான், அதனால்; தேர்ச்சி பெற்றான்.

(C) இனியன் நன்கு படித்தான். அதனால் தேர்ச்சி, பெற்றான்:

(D) இனியன், நன்கு படித்தான். அதனால்; தேர்ச்சி பெற்றான்.

(E) விடை தெரியவில்லை

44. "மாணவன்" எதிர்பாலுக்குரிய பெயரை எழுதுக.

(A) சிறுமி

(B) மாணவி

(C) தோழி

(D) அரசி

(E) விடை தெரியவில்லை

45. பொருந்தாத இணையைக் கண்டறிக.

(A) 1-க

(B) 2-உ

(C) 3-ங

(D) 4-எ

(E) விடை தெரியவில்லை

46. பொருந்தாதச் சொல்லைக் கண்டறிக.

தாவரத்தின் இளம் நிலையை குறிக்காத ஒரு சொல்.

(A) மடலி

(B) பைங்கூழ்

(C) குருத்து

(D) மட்டை

(E) விடை தெரியவில்லை

47. இவை மூன்றன் நாமம் கெடக்கெடும் நோய் என்னும் திருக்குறளையொட்டி.

பொருந்தாச் சொல்லைக் கண்டறிக

(A) இன்பம்

(B) காமம்

(C) வெகுளி

(D) மயக்கம்

(E) விடை தெரியவில்லை

48. மரபுப்பிழைகள் வினைமரபு.

பால்

(A) குடி (B) பருகு

(C) தின் (D) உண்

(E) விடை தெரியவில்லை

49. மரபுப் பிழைகள் ஒலி மரபு.

கிளி

(A) அகவும் (B) கூவும்

(C) பேசும் (D) குனுகும்

(E) விடை தெரியவில்லை

50. அவிந்தன, நெகிழ்ந்தன, விண்டன, கொண்ட ஆகிய சொற்கள் தரும் பொருளைக் கண்டறிக.

(A) மலர்ந்தன (B) கூம்பின

(C) வளர்ந்த (D) வாடின

(E) விடை தெரியவில்லை

51. தொலி, தோல், தோடு, ஓடு ஆகிய சொற்கள் எதனைக் குறிக்கின்றன.

(A) காய்களின் மேற்பகுதி (B) வீடுகளின் மேற்பகுதி

(C) பழங்களின் மேற்பகுதி (D) மரங்களின் மேற்பகுதி

(E) விடை தெரியவில்லை

52. சரியான அகர வரிசையைக் கண்டறிக.

(A) மன்னா, தளை, அணை, அண்ணா

(B) தளை, மன்னா, அணை, அண்ணா

(C) அண்ணா, அணை, தளை, மன்னா

(D) அணை, தளை, அண்ணா, மன்னா

(E) விடை தெரியவில்லை

53. அகர வரிசைப்படுத்துக.

(A) மதம், மணம், மஞ்சள், மரகதம்

(B) மரகதம், மஞ்சள், மணம், மதம்

(C) மஞ்சள், மணம், மதம், மரகதம்

(D) மணம், மரகதம், மதம், மஞ்சள்

(E) விடை தெரியவில்லை

54. அகர வரிசைப்படுத்துக.

(A) ஓராயிரம், ஓரம், ஓரிதழ், ஓருயிர்

(B) ஓரம், ஓரிதழ், ஓருயிர், ஓராயிரம்

(C) ஓருயிர், ஓரிதழ், ஓரம், ஓராயிரம்

(D) ஓரம், ஓராயிரம், ஓரிதழ், ஓருயிர்

(E) விடை தெரியவில்லை

55. ஒலி மற்றும் பொருள் வேறுபாடு அறிந்து சரியான இணையைத் தேர்வு செய்க.
'இளை–இழை'

(A) மெலிந்து போதல் – நூல் இழை

(B) இளைஞர் – இழைப்புளி

(C) இளமை – இழுப்பறை

(D) இளையோன் – இழைத்தல்

(E) விடை தெரியவில்லை

56. ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான இணையைத் தேர்ந்தெடுக்கவும்.
'நேமி – கோடு'

(A) நற்சொல் – தோள்

(B) சக்கரம் – மலை

(C) நேமிநாதம் – நேரான வழி

(D) மலை – வனம்

(E) விடை தெரியவில்லை

57. சரியான வாக்கிய அமைப்பினைக் கண்டறிக.

(A) "மறைந்த தி.ஜானகிராமன் நினைவாக ஆண்டுதோறும் கூட்டம் நடைபெறும்".

(B) "ஆண்டுதோறும் மறைந்த தி.ஜானகிராமன் நினைவாக கூட்டம் நடைபெறும்".

(C) "கூட்டம் ஆண்டுதோறும் மறைந்த தி.ஜானகிராமன் நினைவாக நடைபெறும்".

(D) "தி.ஜானகிராமன் மறைந்த கூட்டம் ஆண்டுதோறும் நடைபெறும் நினைவாக".

(E) விடை தெரியவில்லை

58. வேர்ச்சொல்லைக் கண்டறிக – 'நடத்தல்'

(A) நட

(B) நடந்த

(C) நடந்து

(D) நடக்க

(E) விடை தெரியவில்லை

59. போட்டேன் – வேர்ச்சொல்லைக் கண்டறிக.

(A) போட்டு

(B) போடு

(C) போட்ட

(D) போடுதல்

(E) விடை தெரியவில்லை

60. 'ஓடு' என்னும் வேர்ச்சொல்லின் வினைமுற்றைத் தேர்ந்தெடுக்க.

(A) ஓடுதல் (B) ஓடி

(C) ஓடினான் (D) ஓடிய

(E) விடை தெரியவில்லை

61. வினைமுற்று, எச்சப்பொருள் தந்து மற்றொரு வினைமுற்றைக் கொண்டு முடிவது எதுவென கண்டறிக.

(A) முற்றெச்சம் (B) வினையெச்சம்

(C) குறிப்பு வினைமுற்று (D) தெரிநிலை வினைமுற்று

(E) விடை தெரியவில்லை

62. படி எனும் வேர்ச்சொல்லின் வினையெச்சச் சொல்லைக் கண்டறிக.

(A) படித்தல் (B) படித்து

(C) படித்த (D) படித்தான்

(E) விடை தெரியவில்லை

63. காண் – என்பதன் வினைமுற்றை தேர்ந்தெடுக்க.

(A) காணுதல் (B) கண்ட

(C) கண்டவர் (D) கண்டேன்

(E) விடை தெரியவில்லை

64. வழுவற்றத்தொடரைக் கண்டறிக.

(A) இல்லத்தின் அருகே புதிதாகக் கூரை போட்டனர்.

(B) இல்லத்தின் அருகே புதிதாகக் கூரை மேய்ந்தனர்.

(C) இல்லத்தின் அருகே புதிதாகக் கூரை முடிக்கினர்

(D) இல்லத்தின் அருகே புதிதாகக் கூரை வேய்ந்தனர்.

(E) விடை தெரியவில்லை

65. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல்லில் சரியானவற்றைக் காண்க.

1. Excavation – அகழாய்வு
2. Epigraphy – ஓலைச்சுவடி
3. Hero stone – நடுகல்
4. Inscription – செதுக்குதல்

(A) 1 மற்றும் 3 (B) 2 மற்றும் 3
(C) 1 மற்றும் 4 (D) 2 மற்றும் 4
(E) விடை தெரியவில்லை

66. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ் சொல்லை அறிக.

(A) Thesis – குறியீட்டியல்
(B) Intellectual – அறிவாளர்
(C) Myth – கலைச்சொல்
(D) Patent – ஆவணம்
(E) விடை தெரியவில்லை

67. பொருந்தா இணையைக் கண்டறிக.

(A) வங்கம் – கப்பல்
(B) நீகான் – நாவாய் ஓட்டுபவன்
(C) எல் – காற்று
(D) மாட ஒள்ளெரி – கலங்கரை விளக்கம்
(E) விடை தெரியவில்லை

68. துஞ்சுபுலி இடறிய சிதடன் போல.....

உவமை கூறும் பொருள் எதுவென கண்டறிக.

(A) துணிதல் (B) அறிதல்

(C) அறியாமை (D) ஆணவம்

(E) விடை தெரியவில்லை

69. உவமையால் விளக்கப் பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெழுதுதல்.

பசுமரத்து ஆணி போல

(A) எதிர்பாராத நிகழ்வு (B) தற்செயல் நிகழ்வு

(C) பயனற்ற செயல் (D) எளிதில் மனத்தில் பதிதல்

(E) விடை தெரியவில்லை

70. விடை வகைகள்

'கடைத்தெரு எங்குள்ளது'? என்ற வினாவிற்கு, 'இப்பக்கத்தில் உள்ளது' எனக்கூறல்

(A) ஏவல் விடை (B) சுட்டு விடை

(C) நேர்விடை (D) மறைவிடை

(E) விடை தெரியவில்லை

71. விடை வகைகள் "உனக்குக் கதை எழுதத் தெரியுமா" என்ற வினாவிற்குக் "கட்டுரை எழுதத் தெரியும்" என்று கூறுவது.

(A) உறுவது கூறல் விடை (B) இனமொழி விடை

(C) சுட்டு விடை (D) மறை விடை

(E) விடை தெரியவில்லை

72. வினாவிற்கு விடையாக மற்றொரு வினாவைக் கேட்பது எவ்வகை விடை?

(A) உறுவது கூறல் விடை (B) இனமொழி விடை

(C) சுட்டு விடை (D) வினா எதிர் வினாதல் விடை

(E) விடை தெரியவில்லை

73. விடை வகைகள்:

'நீ படிக்கவில்லையா?' என்ற வினாவிற்கு 'எனக்குத் தலை வலிக்கிறது' என்று உரைப்பது.

(A) நேர் விடை (B) உற்றது உரைத்தல் விடை

(C) உறுவது கூறல் விடை (D) வினா எதிர் வினாதல் விடை

(E) விடை தெரியவில்லை

74. ஒருமைப் பன்மை பிழையற்ற தொடரைத் தெரிவு செய்க.

(A) பறவைகள் வந்து தங்கியது. (B) பறவைகள் வந்து தங்கினார்கள்.

(C) பறவைகள் வந்து தங்குகின்றது. (D) பறவைகள் வந்து தங்கின.

(E) விடை தெரியவில்லை

75. ஒருமை பன்மை பிழை நீக்கி எழுதுக.

(A) மொழி வளரும் தன்மை உடையன. (B) மொழி வளரும் தன்மை உள்ளன.

(C) மொழி வளரும் தன்மை உடையது. (D) மொழி வளரும் தன்மை உள்ளவை.

(E) விடை தெரியவில்லை

76. சரியான தொடரைத் தேர்ந்தெடு.

(A) பவளவிழியால் பரிசு உரியவள் (B) பவளவிழிதான் பரிசு உரியது

(C) பவளவிழிதான் பரிசுக்கு உரியவள் (D) பவளவிழியின் பரிசு உரியது

(E) விடை தெரியவில்லை

77. சொல் – பொருள் – பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | திகிரி | 1. | கருணை |
| (b) | அளி | 2. | ஆணைச்சக்ரம் |
| (c) | அலர் | 3. | மகரந்தம் |
| (d) | கொங்கு | 4. | மலர்தல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 4 | 3 |
| (B) | 4 | 1 | 2 | 3 |
| (C) | 2 | 4 | 1 | 3 |
| (D) | 1 | 2 | 3 | 4 |

(E) விடை தெரியவில்லை

78. சொல் – பொருள் – பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | புரிசை | 1. | சாளரம் |
| (b) | புழை | 2. | நீர்நிலை |
| (c) | பணை | 3. | மதில் |
| (d) | கயம் | 4. | முரசு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 4 | 2 |
| (B) | 4 | 2 | 1 | 3 |
| (C) | 2 | 1 | 3 | 4 |
| (D) | 3 | 1 | 4 | 2 |

(E) விடை தெரியவில்லை

79. 'வருதல்' என்பதன் வேர்ச்சொல்லைக் கண்டறிக.

(A) வந்தான் (B) வரு

(C) வா (D) வந்த

(E) விடை தெரியவில்லை

80. 'சுடச்சுடரும் பொன்போல்' எனும் உவமை கூறும் பொருளைக் கண்டறிக.

(A) தானம் வளரும் (B) கானம் வளரும்

(C) செல்வம் வளரும் (D) ஞானம் வளரும்

(E) விடை தெரியவில்லை

81. சொற்களை ஒழுங்குபடுத்துக.

"தமது கருத்தைச் சுவையோடு கவிஞர் சொல்வதற்கு உதவுவது அணி"

(A) கவிஞர் தமது கருத்தைச் சொல்வதற்கு சுவையோடு உதவுவது அணி

(B) சுவையோடு கவிஞர் தமது கருத்தைச் சொல்வதற்கு உதவுவது அணி

(C) கவிஞர் தமது கருத்தைச் சுவையோடு சொல்வதற்கு உதவுவது அணி

(D) அணி தமது கருத்தைச் சுவையோடு கவிஞர் சொல்வதற்கு உதவுவது

(E) விடை தெரியவில்லை

82. பிறவினைச் சொற்றொடரைக் காண்க.

(A) மாலை அணிந்தான் (B) மாலை அணிவித்தான்

(C) மாலை அணிந்து கொண்டான் (D) மாலை அணிந்து வந்தான்

(E) விடை தெரியவில்லை

83. வாக்கிய அமைப்பினைக் கண்டறிக.

"நான் இந்த வீட்டைக் கட்டினேன்" என்பது

(A) எதிர்வினை வாக்கியம்
(B) பிறவினை வாக்கியம்
(C) செய்வினை வாக்கியம்
(D) செயப்பாட்டுவினை வாக்கியம்
(E) விடை தெரியவில்லை

84. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுதல் - தன்வினை, பிறவினை, செய்வினை, செயப்பாட்டுவினை வாக்கியங்களைக் கண்டெழுதுதல்.

வாக்கிய அமைப்பினைக் கண்டறிக.

அப்துல் நேற்று வருவித்தான்.

(A) தன்வினை
(B) பிறவினை
(C) செய்வினை
(D) செயப்பாட்டுவினை
(E) விடை தெரியவில்லை

85. 'மயில்' என்பதற்கு பொருந்தி வரும் சொல் எதுவெனக் கண்டறிக.

(A) அகவியது
(B) கூவியது
(C) கொஞ்சியது
(D) கரைந்தது
(E) விடை தெரியவில்லை

86. 'வண்டு' என்பதுடன் பொருந்தி வரும் ஒலிமரபுச் சொல்லைக் கண்டறிக.

(A) ரீங்காரமிடும்
(B) உறுமும்
(C) இசைக்கும்
(D) முரலும்
(E) விடை தெரியவில்லை

87. சரியான இணைப்புச் சொல்லை நிரப்புக.

எமது மக்கள், இந்தப் பூமியை எப்பொழுதும் மறப்பதேயில்லை. ———————— இதுவே எமக்குத் தாயாகும்.

(A) ஏனெனில்
(B) அதனால்
(C) ஆகையால்
(D) எனவே
(E) விடை தெரியவில்லை

88. சரியான இணைப்புச் சொல்லை தெரிவு செய்க.

நான் ஏற்கனவே சென்ற இடம்தான். ———————— அச்சம் ஒன்றும் இல்லை.

(A) ஆதலால்
(B) ஆனால்
(C) ஆயினும்
(D) ஏனெனில்
(E) விடை தெரியவில்லை

89. சரியான இணைப்புச் சொல் எழுதுக.

நாம் இனிய சொற்களைப் பேச வேண்டும் ———————— துன்பப்பட வேண்டும்.

(A) அதனால்
(B) எனவே
(C) இல்லையென்றால்
(D) எனில்
(E) விடை தெரியவில்லை

90. கலைச்சொல் அறிக.

Monolingual

(A) மெய்யெழுத்து
(B) ஒரு மொழி
(C) உரையாடல்
(D) கலந்துரையாடல்
(E) விடை தெரியவில்லை

91. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ் கலைச்சொல்லை எழுதுக.

'Whirlwind'

(A) சூறாவளி
(B) நிலக்காற்று
(C) பெருங்காற்று
(D) சுழல் காற்று
(E) விடை தெரியவில்லை

92. சரியான கலைச்சொல்லைத் தேர்க.

CONICAL STONE

(A) குமிழிக்கல்
(B) நீர் மேலாண்மை
(C) பாசனத் தொழில் நுட்பம்
(D) வெப்பமண்டலம்
(E) விடை தெரியவில்லை

93. ஒரு – ஓர் – சரியான வகையில் அமைந்த தொடரைக் கண்டறிக.

(A) ஒரு இரவும் ஓர் பகலும் சேர்ந்தது ஒரு நாள்
(B) ஓர் இரவும் ஒரு பகலும் சேர்ந்தது ஒரு நாள்
(C) ஒரு இரவும் ஒரு பகலும் சேர்ந்தது ஓர் நாள்
(D) ஓர் இரவும் ஓர் பகலும் சேர்ந்தது ஓர் நாள்
(E) விடை தெரியவில்லை

94. பிழை திருத்துதல்.

சரியான எண்ணடையைத் தேர்ந்தெடு.

(A) ஒரு அடர்ந்து காடு
(B) ஒன்று அடர்ந்த காடு
(C) ஓர் அடர்ந்த காடு
(D) ஒன்னு அடர்ந்த காடு
(E) விடை தெரியவில்லை

95. கீழ்காணும் தொடர்களில் [ஒரு – ஓர்] சரியாக அமைந்த தொடர் எது?

(A) ஓர் தெய்வீக காலைப்பொழுது (B) ஓர் இனிய காலைப்பொழுது

(C) ஒரு அழகிய காலைப்பொழுது (D) ஒரு இனிய காலைப்பொழுது

(E) விடை தெரியவில்லை

கீழ்க்கண்ட பத்தியைப் படித்து வினாவிற்குரிய சரியான விடையைத் தேர்ந்தெடு.

தமிழர் நாகரிக வளர்ச்சியில் சிற்பம் கல்லில் வடித்த கவிதைகள் எனலாம். கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் அமைக்கும் கலையே சிற்பக்கலை. சிற்பக்கலை பற்றி திவாகர - நிகண்டு மணிமேகலை போன்றவற்றில் குறிப்புகள் காணப்படுகின்றன. பல்லவர் . காலத்து தூண்களில் சிங்கம், யாளி, தாமரை மலர் போன்ற சிற்பங்கள் இருந்தன. திருச்சி மலைக்கோட்டை, மாமல்லபுரம் காஞ்சிபுரம் போன்ற இடங்களில் பல்லவர் கால சிற்பம் கலைநுட்பத்துடன் அமைந்துள்ளன. பல்லவர் கால குடைவரைக் கோவில்களில் நுழைவாயில் இரு புறங்களிலும் காவலர் நிற்பது போன்ற சிற்பங்கள் படைக்கப்பட்டன.

96. சிற்பம் கல்லில் வடித்த ———————— எனலாம்.

(A) கவிதை (B) கட்டுரை

(C) படம் (D) காட்சி

(E) விடை தெரியவில்லை

97. திவாகர நிகண்டுவில் சொல்லப்பட்ட கலை எது?

(A) சிற்பம் (B) ஓவியம்

(C) கட்டிடம் (D) வரைகலை

(E) விடை தெரியவில்லை

98. தூண்களில் காணப்படும் சிற்பங்கள் எவை?

(A) தாழி, காளை
(B) புலி, கரடி
(C) சிங்கம், யாளி
(D) மீன், வில்
(E) விடை தெரியவில்லை

99. காவலர் நிற்பது போன்ற சிற்பம் எவ்வகைக் கோவில்களில் செதுக்கப்பட்டன?

(A) கற்கோவில்
(B) பொற்கோவில்
(C) கட்டிடக் கோவில்
(D) குடைவரைக் கோவில்
(E) விடை தெரியவில்லை

100. திருச்சி மலைக் கோட்டையில் காணப்படும் சிற்பம் யாருடைய காலம்?

(A) சேரர்
(B) சோழர்
(C) பாண்டியர்
(D) பல்லவர்
(E) விடை தெரியவில்லை

# பகுதி-அ - கட்டாயத் தமிழ்மொழித் தகுதித் தேர்வு
## (பத்தாம் வகுப்பு தரம்)

# Part-A - Compulsory Tamil Language Eligibility Test
## (SSLC Std)

**வினாக்கள் : 1–100** **மொத்த மதிப்பெண்கள் : 150**

**Questions : 1–100** **Total Marks : 150**

1. கீழ்காணும் தொடர்களில் (ஒரு – ஓர்) சரியாக அமைந்த தொடர் எது?
   (A) ஒரு அழகிய ஊஞ்சல் ஆடுகிறது
   (B) ஓர் ஊஞ்சல் ஆடுகிறது
   (C) ஒரு ஊஞ்சல் ஆடுகிறது
   (D) ஓர் மர ஊஞ்சல் ஆடுகிறது
   (E) விடை தெரியவில்லை

2. சொல் – பொருள் – பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | பண் | 1. | பதித்து |
| (b) | இழைத்து | 2. | இசை |
| (c) | பார் | 3. | பூஞ்சோலை |
| (d) | நந்தவனம் | 4. | உலகம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 3 | 2 | 1 | 4 |
| (D) | 2 | 1 | 4 | 3 |

   (E) விடை தெரியவில்லை

3. பொருந்தா இணையைக் கண்டறிக :
   சொல்லோடு பொருளைப் பொருத்துக.
   1. கா – சோலை
   2. கோ – அரசன்
   3. சோ – மதில்
   4. நா – கொடு
   (A) கா – சோலை
   (B) கோ – அரசன்
   (C) சோ – மதில்
   (D) நா – கொடு
   (E) விடை தெரியவில்லை

4. சரியான தொடரைத் தேர்ந்தெடு :

நான் மழையில் நனைந்தேன்

(A) உணர்ச்சித் தொடர்
(B) பிறவினைத் தொடர்
(C) ✓ உடன்பாட்டு வினைத் தொடர்
(D) பெயர்ப் பயனிலைத் தொடர்
(E) விடை தெரியவில்லை

5. நான் நாளை மதுரை செல்கிறேன் – இது எவ்வகைத் தொடர்?

(A) வினாத் தொடர்
(B) ✓ செய்தித் தொடர்
(C) கலவைத் தொடர்
(D) கட்டளைத் தொடர்
(E) விடை தெரியவில்லை

6. கூட்டப் பெயரைக் குறிப்பிடு.

மக்கள்

(A) ✓ மக்கள் கூட்டம்
(B) மக்கள் தொகை
(C) மக்கள்கள்
(D) மனிதர்கள்
(E) விடை தெரியவில்லை

7. கூட்டப் பெயரை எழுதுக.

திராட்சை

(A) ✓ குலை
(B) கொத்து
(C) குவியல்
(D) கூடை
(E) விடை தெரியவில்லை

8. பொருத்தமான பொருளைத் தெரிவு செய்க.

மலை முகட்டில் மேகம் ———— அதைப் பார்க்கும் மனங்கள் செல்லத் ————

(A) தங்கும் – தயங்கும்
(B) தவழும் – படியும்
(C) கூடும் – தயங்கும்
(D) சேரும் – கூடும்
(E) விடை தெரியவில்லை

9. "முதலைக் கண்ணீர்" – இம்மரபுத்தொடர் உணர்த்தும் பொருள் தெளிக.

(A) முதலையின் கண்ணீர்
(B) பொய்யழுகை
(C) இல்லாத ஒன்று
(D) அவலநிலை
(E) விடை தெரியவில்லை

10. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க. (அவர்கள்)

(A) ஏழாம் வகுப்பு ———— மாணவர்கள்
(B) ———— ஏழாம் வகுப்பு மாணவர்கள்
(C) ———— மாணவர்கள் அவர்கள் உள்ளனர்
(D) நான் ———— மாணவர்கள்
(E) விடை தெரியவில்லை

11. சரியான இணைப்புச் சொல்

காயிதே மில்லத் அவர்கள் மகிழுந்தில் பயணம் செய்வதை விரும்பாதவர். ————அவர் எளிமையை விரும்பியவர்.

(A) ஏனெனில்
(B) அதனால்
(C) ஆகையால்
(D) அதுபோல
(E) விடை தெரியவில்லை

12. சரியான வினாச்சொல்லைத் தேர்ந்தெடு.

நாயன்மார்கள் ———————— பேர்?

(A) என்ன
(B) எப்படி
(C) எத்தனை
(D) எவ்வாறு
(E) விடை தெரியவில்லை

13. பொருத்தமான காலமறிக.

அவன் நேற்று திரைப்படம் ———————— (காண்)

(A) காண்பான்
(B) கண்டான்
(C) காண்பிப்பான்
(D) காண்கிறான்
(E) விடை தெரியவில்லை

14. சொற்களை இணைத்து புதிய சொல்லை உருவாக்கு.

ஆழ், வயல், நாடு, கடல், விண், வளி

(A) ஆழ் கடல்
(B) ஆழ் வயல்
(C) விண் வயல்
(D) வளி நாடு
(E) விடை தெரியவில்லை

15. சொற்களை இணைத்து புதிய சொல் உருவாக்கல்.

பொருத்துக.

| | |
|---|---|
| (a) விண் | 1. மொழி |
| (b) தமிழ் | 2. மீன் |
| (c) நூல் | 3. நூல் |
| (d) நீதி | 4. வெளி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 1 | 3 | 2 | 4 |
| (D) | 2 | 1 | 4 | 3 |

(E) விடை தெரியவில்லை

16. குறில் நெடில் அடிப்படையில் பொருள் வேறுபாடு காண்க.

விடு – வீடு

(A) தங்குமிடம் – விட்டுவிடுதல்
(B) விட்டுவிடுதல் – தங்குமிடம்
(C) விட்டுவிடுதல் – தவிர்த்துவிடுதல்
(D) தங்குமிடம் – தாங்குமிடம்
(E) விடை தெரியவில்லை

17. குறில் நெடில் வேறுபாடு அறிந்து சரியான இணையைத் தேர்க.

சிலை – சீலை

(A) சிற்பம் – புடவை
(B) புடவை – சிற்பம்
(C) கற்சிலை – ஓவியம்
(D) சிற்பம் – ஒழுக்கம்
(E) விடை தெரியவில்லை

18. தழை – தாழை – பொருள் சரியாகப் பொருந்திய இணையைத் தேர்க.

(A) செழிக்கச் செய் – வாடச்செய்
(B) மலர் – மடல்
(C) மலர் – இலை
(D) இலை – மலர் வகை
(E) விடை தெரியவில்லை

19. கூற்று : அயோத்திதாசர் "ஒரு பைசா தமிழன்" என்ற வார இதழைத் தொடங்கினார்.

காரணம் (1) : இவர் தனது ஆசிரியர் பெயரையே தம் பெயராக வைத்துக் கொண்டார்.

காரணம் (2) : ஒரு பைசா தமிழன் என்ற வார இதழ் 1 பைசாவிற்கு விற்கப்பட்டது.

காரணம் (3) : ஓர் ஆண்டிற்குப் பின் இவ்விதழின் பெயரைத் தமிழன் என மாற்றினார்.

(A) கூற்றும், காரணங்களும் சரி
(B) கூற்று சரி காரணம் 1 தவறு 2, 3 சரி
(C) கூற்று சரி காரணம் 1, 2 சரி 3 மட்டும் தவறு
(D) கூற்றும் காரணம் 1, 3ம் சரி 2 மட்டும் தவறு
(E) விடை தெரியவில்லை

20. அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்க.

குச்சு, கிளை, கொம்பு, கவை, கொப்பு

(A) கவை, கிளை, குச்சு, கொம்பு, கொப்பு

(B) கவை, கிளை, குச்சு, கொப்பு, கொம்பு

(C) கவை, குச்சு, கொம்பு, கொப்பு, கிளை

(D) கவை, கிளை, கொம்பு, கொப்பு, குச்சு

(E) விடை தெரியவில்லை

21. வேர்ச்சொல்லை வினையெச்சமாக்குக :

வா

(A) வந்த

(B) வந்தான்

(C) வந்தவன்

(D) வந்து

(E) விடை தெரியவில்லை

22. வேர்ச்சொல்லைக் கொண்டு தொழிற்பெயரை உருவாக்கு :

நடி

(A) நடித்தான்

(B) நடித்தல்

(C) நடித்து

(D) நடித்த

(E) விடை தெரியவில்லை

23. வினையாலணையும் பெயரைத் தேர்ந்தெடு :

உணர்

(A) உணர்ந்தான்

(B) உணர்வான்

(C) உணர்ந்தோர்

(D) உணர்தல்

(E) விடை தெரியவில்லை

24. ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான பொருளையறிதல் :

ஏரி – ஏறி

(A) ஆறு – ஆற்றுப்படுத்தல்
(B) ஏறுதல் – எறிதல்
(C) ஆறு – குளம்
(D) நீர்நிலை – மேலே சென்று
(E) விடை தெரியவில்லை

25. ஒலி வேறுபாடறிந்து சரியான இணையைத் தேர்வு செய் :

மரை – மறை

(A) மறைதல் – மறைத்தல்
(B) தாமரை – மறத்தல்
(C) தாமரை – மறைத்தல்
(D) ஆணி – மறைதல்
(E) விடை தெரியவில்லை

26. பொருள் வேறுபாடறிந்து சரியானவற்றைத் தேர்க.

போரில் பயன்படுத்தியது ————, பூனைக்கு உள்ளது ————.

(A) வாழ், தாழ்
(B) வாள், வால்
(C) கால், காளை
(D) மனம், மணம்
(E) விடை தெரியவில்லை

27. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை அறிதல்.

Confidence

(A) அச்சம்
(B) நம்பிக்கை
(C) பயம்
(D) பொய்மை
(E) விடை தெரியவில்லை

28. பிழையற்றத் தொடரைக் கண்டறிக.

(A) தேர்த் திருவிலாவிற்குச் செண்றனர்

(B) தேர்த் திருவிலாவிற்குச் செண்றணர்

(C) ✓ தேர்த் திருவிழாவிற்குச் சென்றனர்

(D) தேர்த் திருவிழாவிற்குச் செண்றண்ர்

(E) விடை தெரியவில்லை

29. பொருந்தாதச் சொல்லைக் கண்டறிக.

(A) கருங்குவளை

(B) செந்நெல்

(C) ✓ விரிமலர்

(D) செம்மலர்

(E) விடை தெரியவில்லை

30. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக.

(A) தமிழ்நாடு

(B) கேரளா

(C) ✓ இலங்கை

(D) ஆந்திரா

(E) விடை தெரியவில்லை

31. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக.

பாடுகிறாள், நடித்தார், நடிக்கின்றார், சிரிக்கின்றாள்

(A) பாடுகிறாள்

(B) ✓ நடித்தார்

(C) நடிக்கின்றார்

(D) சிரிக்கின்றாள்

(E) விடை தெரியவில்லை

32. 'கிளை' என்னும் சொல்லின் எதிர்ச்சொல்லைக் கண்டறிக.

(A) உறவினர்

(B) தாவர உறுப்பு

(C) வளர்

(D) ✓ பகைவர்

(E) விடை தெரியவில்லை

33. சரியான நிறுத்தற்குறியிட்ட வாக்கியத்தை தேர்ந்தெடு.

(A) வீரன், அண்ணன், மருதன் – ஆண் பால்

(B) வீரன் அண்ணன் மருதன் – ஆண்பால்

(C) வீரன் அண்ணன் மருதன் ஆண்பால்

(D) 'வீரன்' அண்ணன், மருதன் – ஆண்பூரல்.

(E) விடை தெரியவில்லை

34. சரியான நிறுத்தற்குறிகள் அமைந்த தொடரைத் தேர்க.

(A) சிகாமணியின் தந்தை "பண்டுக்கிழவர்".

(B) சிகாமணியின் தந்தை, பண்டுக்கிழவர்.

(C) சிகாமணியின், தந்தை பண்டுக்கிழவர்.

(D) சிகாமணியின்! தந்தை பண்டுக்கிழவர்.

(E) விடை தெரியவில்லை

35. ஊர்ப்பெயரின் மரூஉவை எழுது.

மன்னார்குடி

(A) மதுரை

(B) மன்னை

(C) மானாமதுரை

(D) கோவை

(E) விடை தெரியவில்லை

36. ஊர்ப் பெயர்களின் மரூஉவை எழுதுக.

கும்பகோணம்

(A) குடுமியான் மலை

(B) கூடம்குளம்

(C) குடந்தை

(D) கும்பை

(E) விடை தெரியவில்லை

37. பிறமொழிச் சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல்.

'அலர்ஜி' என்பதன் தமிழ்ச் சொல்

(A) உண்ணாமை
(B) ஒவ்வாமை
(C) படை, சொரி
(D) சிரங்கு
(E) விடை தெரியவில்லை

38. எனக்கு எழுதித் தருகிறாயா? என்ற வினாவிற்கு, "எனக்கு யார் எழுதித் தருவார்கள்?" என்று விடையளிப்பது

(A) மறை விடை
(B) உறுவது கூறல்
(C) வினா எதிர் வினாதல் விடை
(D) உற்றது உரைத்தல் விடை
(E) விடை தெரியவில்லை

39. விடை வகையை கண்டறிக.

'கடைக்குப் போவாயா?' என்ற கேள்விக்கு 'போவேன்' என்று கூறுவது

(A) ஏவல் விடை
(B) சுட்டு விடை
(C) உறுவது கூறல் விடை
(D) நேர் விடை
(E) விடை தெரியவில்லை

40. 'உனக்குக் கதை எழுதத் தெரியுமா?' என்ற வினாவிற்குக் 'கட்டுரை எழுதத் தெரியும்' என்று கூறுவது எவ்வகை விடை?

(A) உற்றது உரைத்தல் விடை
(B) உறுவது கூறல் விடை
(C) ஏவல் விடை
(D) இனமொழி விடை
(E) விடை தெரியவில்லை

41. 'எலியும் பூனையும் போல' உவமை கூறும் பொருளை எழுதுக

(A) பகைமை
(B) ஒற்றுமை
(C) நட்பு
(D) வேற்றுமை
(E) விடை தெரியவில்லை

42. உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடுத்தல்.

மழைமுகம் காணாப் பயிர் போல

(A) மழை பொழியாத நிலை
(B) மழையின் முகம் பயிரின் வருத்தம்
(C) நீண்ட நாள் காணாமல் ஏங்குவது
(D) வருத்தமும், மகிழ்ச்சியும் கலந்த நிலை
(E) விடை தெரியவில்லை

43. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுதல் – தன் வினை, பிற வினை, செய் வினை, செயப்பாட்டு வினை.

செய் வினையைத் தேர்ந்தெடு

(A) கண்ணன் நேற்று வந்தான்
(B) இது நாற்காலி
(C) குமரன் மழையில் நனைந்தான்
(D) கவிதா உரை படித்தாள்
(E) விடை தெரியவில்லை

44. செயப்பாட்டுவினைத் தொடரைக் கண்டறிக.

(A) தோசை வைத்தார்
(B) தோசை வைத்தான்
(C) தோசை வைக்கப்பட்டது
(D) தோசை வைத்தல்
(E) விடை தெரியவில்லை

45. இருவினைகளின் பொருளை வேறுபடுத்துக.

பணிந்து – பணித்து – இரு வினைகளின் பொருள் வேறுபாடு உணர்த்தும் தொடரைத் தேர்க.

(A) ✓ பெரியோர்களிடம் பணிந்து நடக்க வேண்டும் என்று ஆசிரியர் பணித்தார்

(B) இறைவனிடம் பணியாதவர்கள் பணித்தனர்

(C) பணியாதவர்கள் படிப்பறிவில்லாதவர்கள்

(D) பணிந்தால் படிப்பறிவு வளரும்

(E) விடை தெரியவில்லை

46. இருவினைகளின் பொருள் வேறுபாடு அறிக.

மாறு, மாற்று

(A) மாறுபாடு அறிந்து மாற்று

(B) ✓ மனிதராக மாறு, மற்றவரையும் மாற்று

(C) மாறுபாடு அற்ற சமூகமாக மாறு

(D) மனிதராக மாரு சமூகத்தை மாற்று

(E) விடை தெரியவில்லை

47. இருவினைகளின் பொருள் வேறுபாடு அறிக.

சேர்ந்து – சேர்த்து

(A) மாணவர்கள் சேர்த்து சண்டையிட்டனர் ஆசிரியர் சேர்ந்து வைத்தார்

(B) ✓ மாணவர்கள் சேர்ந்து சண்டையிட்டதால் ஆசிரியர் சேர்த்து வைத்தார்

(C) ஆசிரியர் சேர்ந்து வைத்தார் மாணவர்கள் சேர்த்து சண்டையிட்டனர்

(D) மாணவர்கள் சேர்த்தார்களா? ஆசிரியர் சேர்ந்து வைத்தார்

(E) விடை தெரியவில்லை

பத்தியிலிருந்து வினாவிற்கான சரியான விடையைத் தேர்ந்தெடு :

நாகூர்ரூமி தஞ்சை மாவட்டத்தில் பிறந்தவர். இவர் என்பதுகளில் கணையாழி இதழில் எழுதத் தொடங்கியவர். கவிதை, குறுநாவல், சிறுகதை, மொழிபெயர்ப்பு எனப் பல தளங்களில் தொடர்ந்து இயங்கியவர். நரி கால்கள், ஏழாவது சுவை, சொல்லாத சொல் ஆகிய கவிதைத் தொகுதிகள் வெளியாகியுள்ளன. 'கப்பலுக்குப் போன மச்சான்' என்னும் நாவலையும் படைத்துள்ளார். இவரது இயற்பெயர் முகம்மதுரஃபி.

48. நாகூர்ரூமியின் இயற்பெயர் என்ன?

(A) முகம்மதுரஃபி
(B) முகம்மதுரூமி
(C) மகம்மதுரஃபி
(D) நாகூர் முகம்மது
(E) விடை தெரியவில்லை

49. நாகூர்ரூமி எந்த மாவட்டத்தில் பிறந்தவர்?

(A) நாகூர்
(B) தஞ்சாவூர்
(C) நாகை
(D) மயிலை
(E) விடை தெரியவில்லை

50. நாகூர்ரூமி முதன்முதலாக எந்த இதழில் எழுத ஆரம்பித்தார்?

(A) நரியின் கால்கள்
(B) ஏழாவது சுவை
(C) சொல்லாத சொல்
(D) கணையாழி
(E) விடை தெரியவில்லை

51. நாகூர் ரூமியின் கவிதைத் தொகுதிகள் எத்தனை வெளியாகியுள்ளன?

(A) இரண்டு
(B) ஒன்று
(C) ✓ மூன்று
(D) நான்கு
(E) விடை தெரியவில்லை

52. நாகூர்ரூமி எழுதிய நாவலின் பெயர் யாது?

(A) கணையாழி
(B) ✓ கப்பலுக்கு போன மச்சான்
(C) ஏழாவது சுவை
(D) புதிய பார்வை
(E) விடை தெரியவில்லை

53. ஒரு – ஓர் பயன்பாடு சரியாக உள்ள தொடரைத் தேர்க.

(A) ✓ ஓர் அழகிய சிற்றூரில் ஒரு குளம் இருந்தது
(B) ஒரு அழகிய சிற்றூரில் ஓர் குளம் இருந்தது
(C) ஓர் அழகிய சிற்றூரில் ஓர் குளம் இருந்தது
(D) ஒரு அழகிய சிற்றூரில் ஒரு குளம் இருந்தது
(E) விடை தெரியவில்லை

54. பிழை திருத்துக (ஒரு – ஓர்)

பின்வருவனவற்றுள் பிழையற்றத் தொடரைத் தேர்ந்தெடுக்க.

(A) ✓ சென்னை ஒரு மாநகரம்
(B) சென்னைக்கு ஓர் மாணவன் வந்தான்
(C) வந்தாரை வாழ வைக்கும் ஓர் நகரம் சென்னை
(D) சென்னை தொழில் நுட்பப் பூங்காக்கள் நிறைந்த ஓர் நகரம்
(E) விடை தெரியவில்லை

55. சொல் – பொருள் – பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | பொக்கிஷம் | 1. | அழகு |
| (b) | சாஸ்தி | 2. | செல்வம் |
| (c) | விஸ்தாரம் | 3. | மிகுதி |
| (d) | சிங்காரம் | 4. | பெரும் பரப்பு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 1 | 3 | 2 | 4 |
| (C) | 1 | 2 | 3 | 4 |
| (D) | 2 | 3 | 1 | 4 |

(E) விடை தெரியவில்லை

56. ஒருமை, பன்மை பிழையற்ற தொடர் எது?

(A) மேகங்கள் சூழ்ந்து கொண்டன

(B) மேகம் சூழ்ந்து கொண்டன

(C) மேகம் சூழ்ந்து கொண்டனர்

(D) மேகங்கள் சூழ்ந்துள்ளது

(E) விடை தெரியவில்லை

57. ஒருமை, பன்மை பிழையற்ற தொடரைத் தேர்ந்தெடுக்க.

(A) இது பழம் அல்ல

(B) இது பழம் அன்று

(C) இது பழங்கள் அல்ல

(D) இது பழங்கள் அன்று

(E) விடை தெரியவில்லை

58. கீழ்கண்டச் சொல்லின் கூட்டுப்பெயரினை எழுது.

வாழைமரம்

(A) வாழைத் தோப்பு
(B) வாழைக்கன்று
(C) ✓ வாழைத் தோட்டம்
(D) வாழையிலை
(E) விடை தெரியவில்லை

59. பொருத்தமான பொருளைத் தெரிவு செய்க.

| | | | |
|---|---|---|---|
| (a) | விளைவுக்கு | 1. | பால் |
| (b) | அறிவுக்கு | 2. | வேல் |
| (c) | இளமைக்கு | 3. | நீர் |
| (d) | புலவர்க்கு | 4. | தோள் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) ✓ | 3 | 4 | 1 | 2 |
| (C) | 1 | 3 | 2 | 4 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

(E) விடை தெரியவில்லை

60. பொருத்தமான பொருளைத் தெரிவு செய்.

(5) – என்பதன் தமிழ் எண்

(A) ச
(B) க
(C) ✓ ரு
(D) அ
(E) விடை தெரியவில்லை

61. சரியான இணைப்புச் சொல்லினைத் தேர்ந்தெடு

பிறருக்கு கொடுத்தலே செல்வத்தின் பயன் ———— பிறருக்குக் கொடுத்து மகிழ்வோம்.

(A) அதுபோல
(B) மேலும்
(C) ஏனெனில்
(D) அதனால்
(E) விடை தெரியவில்லை

62. சரியான இணைப்புச்சொல்

தமிழகத்தில் மழை பெய்து வருகிறது. இரண்டு நாட்கள் மழை நீடிக்கும் என வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு.

(A) அதனால்
(B) அதுபோல
(C) எனவே
(D) ஏனெனில்
(E) விடை தெரியவில்லை

63. சரியான இணைப்புச்சொல்

அதிக அளவில் மரங்களை வளர்ப்போம். மரங்கள்தான் மழைக்கு அடிப்படை.

(A) ஏனெனில்
(B) ஆகையால்
(C) அதனால்
(D) அதுபோல
(E) விடை தெரியவில்லை

64. சரியான வினாச்சொல் அமைந்த தொடரைத் தேர்க.

(A) இனஎழுத்துகள் என்றால் எப்போது?
(B) இனஎழுத்துகள் என்றால் யார்?
(C) இனஎழுத்துகள் என்றால் ஏன்?
(D) இனஎழுத்துகள் என்றால் என்ன?
(E) விடை தெரியவில்லை

65. பேச்சு வழக்கினை எழுத்து வழக்காக மாற்றுக.

பேப்பரப் படிச்சிக்கிட்டு இரு.

(A) பேப்பரப் படித்துக்கொண்டு இரு

(B) செய்தித்தாளை படித்துக்கொண்டு இரு

(C) காகிதத்தை படிச்சிக்கிட்டு இரு

(D) காகிதத்தை படிச்சிட்டு இரு

(E) விடை தெரியவில்லை

66. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்று.

'வவுத்து வலி'

(A) வருத்து வலி

(B) வயற்று வலி

(C) வயிற்று வலி

(D) வவுறு வலி

(E) விடை தெரியவில்லை

67. இரு பொருள் கொண்ட ஒரு சொல்லால் நிரப்புக.

நீதிமன்றத்தில் தொடுப்பது ————

'நீச்சத் தண்ணி குடி' என்பது பேச்சு ————

(A) சொல்

(B) வலக்கு

(C) விளக்கு

(D) வழக்கு

(E) விடை தெரியவில்லை

68. இரு பொருள் தருக.

'தாரணி'

(A) பூமி, உலகம்

(B) சூரியன், உலகம்

(C) கதிரவன், மதி

(D) கடல், பூமி

(E) விடை தெரியவில்லை

69. கலைச் சொல் அறிக.

Journalism

(A) கணினியியல் (B) மொழிபியல்

(C) ஒலியியல் (D) இதழியல்

(E) விடை தெரியவில்லை

70. கலைச் சொற்களை அறிதல்

Herbs

(A) நோய் (B) மூலிகை

(C) மரபணு (D) ஒவ்வாமை

(E) விடை தெரியவில்லை

71. கலைச்சொல் தருக.

Conical stone

(A) கல் (B) நடுகல்

(C) கல்வெட்டு (D) குமிழிக்கல்

(E) விடை தெரியவில்லை

72. கலைச்சொல் அறிக.

Consonant

(A) உயிரெழுத்து (B) மெய்யெழுத்து

(C) ஒப்பெழுத்து (D) ஆய்த எழுத்து

(E) விடை தெரியவில்லை

73. நடத்தல் – என்பதன் வேர்ச்சொல்லை எழுதுக.

(A) நடந்த
(B) நடந்து
(C) நட
(D) நடந்தவர்
(E) விடை தெரியவில்லை

74. வேர்ச்சொல்லைத் தேர்வு செய்க :

கேட்டனன்

(A) கேல்
(B) கேட்க
(C) கேட்ட
(D) கேள்
(E) விடை தெரியவில்லை

75. ஓடியவர் – என்பதன் வேர்ச்சொல்லை எழுதுக.

(A) ஓடிய
(B) ஓடு
(C) ஓடி
(D) ஓடினான்
(E) விடை தெரியவில்லை

76. வேர்ச்சொல்லைத் தேர்வு செய்தல் : தந்தான்

(A) தந்து
(B) தா
(C) தந்த
(D) தருகின்றான்
(E) விடை தெரியவில்லை

77. மரம்,விலங்கு, பெரிய, அழகு, வண்டு எனப் பொருள் தரும் சொல்லை எழுதுக.

(A) தா
(B) மா
(C) தீ
(D) பூ
(E) விடை தெரியவில்லை

78. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை அறிதல்.

Volunteer

(A) தன்னார்வலர்
(B) தொகுப்பாளர்
(C) தலைவர்
(D) தொண்டர்
(E) விடை தெரியவில்லை

79. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | பள்ளத்தாக்கு | 1. | Plain |
| (b) | புதர் | 2. | Tribes |
| (c) | சமவெளி | 3. | Valley |
| (d) | பழங்குடியினர் | 4. | Thicket |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 4 | 1 | 2 | 3 |
| (C) | 3 | 2 | 1 | 4 |
| (D) | 1 | 2 | 4 | 3 |

(E) விடை தெரியவில்லை

80. மரபுப்பிழையற்ற தொடரைத் தேர்க.

(A) கோழி கொக்கரிக்கும்
(B) கோழி கத்தும்
(C) கோழி அகவும்
(D) கோழி கூவும்
(E) விடை தெரியவில்லை

81. மரபுப் பிழைகளை நீக்கிச் சரியானதைத் தேர்க.

கொடியிலுள்ள மலரை எடுத்து வா

(A) பறித்து
(B) கொய்து
(C) தொடுத்து
(D) எடுத்து
(E) விடை தெரியவில்லை

82. 'எளிது' என்னும் சொல்லின் எதிர்ச்சொல்

(A) அரிது
(B) சிறிது
(C) பெரிது
(D) வறிது
(E) விடை தெரியவில்லை

83. பிரித்தெழுதுக :

தானென்று

(A) தானெ + என்று
(B) தான் + என்று
(C) தா + னென்று
(D) தான் + னென்று
(E) விடை தெரியவில்லை

84. நன்றியறிதல் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.

(A) நன்றி + யறிதல்
(B) நன்றி + அறிதல்
(C) நன்று + அறிதல்
(D) நன்று + யறிதல்
(E) விடை தெரியவில்லை

85. 'மின்னணு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

(A) மின் + அணு
(B) மின் + னணு
(C) மின்ன + அணு
(D) மின்னல் + அணு
(E) விடை தெரியவில்லை

86. எதிர்ச்சொல்லை எடுத்தெழுதுதல்:
நீக்குதல் என்னும் சொல்லின் எதிர்ச்சொல்.

(A) போக்குதல்
(B) தள்ளுதல்
(C) அழித்தல்
(D) சேர்த்தல்
(E) விடை தெரியவில்லை

87. திருநெல்வேலி என்பதன் மரூஉ

(A) நெல்வேலி
(B) மல்லை
(C) தில்லை
(D) நெல்லை
(E) விடை தெரியவில்லை

88. ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுதுக.

திருச்சிராப்பள்ளி

(A) குடந்தை
(B) நெல்லை
(C) மயிலை
(D) திருச்சி
(E) விடை தெரியவில்லை

89. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைக் கண்டறிதல்.

வாடகை

(A) வருமானம்
(B) குடிக்கூலி
(C) செலவு
(D) சிக்கனம்
(E) விடை தெரியவில்லை

90. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை எழுதுக.

'LUTE MUSIC'

(A) வீணை இசை
(B) நாத ஓசை
(C) யாழிசை
(D) குழலிசை
(E) விடை தெரியவில்லை

91. அலுவல் சார்ந்த கலைச்சொற்கள்.

Compact Disk – என்பதன் தமிழ்ச்சொல்லைத் தேர்ந்தெடுக்க.

(A) மின்னஞ்சல் (B) குறுந்தகடு

(C) மென்பொருள் (D) மின்நூல்

(E) விடை தெரியவில்லை

92. கலைச்சொல் தேர்ந்தெழுதுதல்.

Video Conference

(A) கூட்டம் (B) வழிபாட்டுக் கூட்டம்

(C) காணொலிக் கூட்டம் (D) பதிவிறக்கம்

(E) விடை தெரியவில்லை

93. அலுவல் சார்ந்த சொல் (கலைச்சொல்)

Discipline

(A) அடக்கம் (B) ஒழுக்கம்

(C) பணிவு (D) பொறுமை

(E) விடை தெரியவில்லை

94. உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெழுதுதல்

உவமைக்கு ஏற்ற பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

"கண்ணினைக் காக்கும் இமை போல"

(A) உடனிருத்தல் (B) பேணல்

(C) தவித்தல் (D) வாட்டுதல்

(E) விடை தெரியவில்லை

95. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குக.

இளங்கோவடிகள் காப்பியத்தை என்னும் இயற்றியவர் சிலப்பதிகாரம்

(A) சிலப்பதிகாரம் என்னும் காப்பியத்தை இயற்றியவர் இளங்கோவடிகள்

(B) இளங்கோவடிகள் காப்பியத்தை என்னும் இயற்றியவர் சிலப்பதிகாரம்

(C) சிலப்பதிகாரம் இயற்றியவர் என்னும் காப்பியத்தை இளங்கோவடிகள்

(D) காப்பியத்தை சிலப்பதிகாரம் என்னும் இளங்கோவடிகள் இயற்றியவர்

(E) விடை தெரியவில்லை

96. ஒரு தொடரில் இரு வினைகளை அமைத்து எழுதுக. (சரியானதை தேர்ந்தெடு)

விரிந்தது – விரித்தது

(A) மழைக்காற்று வீசியதால் பூவின் இதழ்கள் விரித்தது; மயில் தோகையை விரிந்தன.

(B) மழைக்காற்று வீசியதால் பூவின் இதழ்கள் விரிந்தன; மயில் தோகையை விரித்தது.

(C) மழைக்காற்று வீசியதால் பூவின் இதழ்கள் விரிந்தன; மயில் தோகையை விரிந்தன.

(D) மழைக்காற்று வீசியதால் பூவின் இதழ்கள் விரித்தது; மயில் தோகையை விரித்தது.

(E) விடை தெரியவில்லை

97. அகரவரிசைப்படுத்துக.

நட்பு, அன்பு, மகிழ்ச்சி, பள்ளி, விளையாட்டு, வீடு, தோட்டம்

(A) தோட்டம், நட்பு, மகிழ்ச்சி, வீடு, விளையாட்டு, அன்பு, பள்ளி

(B) அன்பு, தோட்டம், நட்பு, பள்ளி, மகிழ்ச்சி, விளையாட்டு, வீடு

(C) நட்பு, அன்பு, மகிழ்ச்சி, பள்ளி, விளையாட்டு, வீடு, தோட்டம்

(D) நட்பு, வீடு, மகிழ்ச்சி, விளையாட்டு, தோட்டம், பள்ளி, அன்பு

(E) விடை தெரியவில்லை

98. எவ்வளவு உயரமான மரம்! – இது எவ்வகைத் தொடர் என கண்டறிக.

(A) வினாத் தொடர்

(B) கட்டளைத் தொடர்

(C) செய்தித் தொடர்

(D) ✓ உணர்ச்சித் தொடர்

(E) விடை தெரியவில்லை

99. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடு :

கியூரி அம்மையார் போலந்து நாட்டைச் சேர்ந்தவர்.

(A) கியூரி அம்மையார் பிறந்த ஊர் எது?

(B) ✓ கியூரி அம்மையார் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

(C) கியூரி அம்மையார் எங்கு வாழ்ந்தார்?

(D) கியூரி அம்மையார் எந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்?

(E) விடை தெரியவில்லை

100. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடு :

திருக்குறள் உலகப் பொதுமறை என்று போற்றப்படுகிறது.

(A) உலகப் பொதுமறை என்று போற்றப்படுவது திருக்குறளா?

(B) ✓ எந்த நூல் உலகப் பொதுமறை என்று போற்றப்படுகிறது?

(C) போற்றப்படும் உலகப் பொதுமறை நூல் எது?

(D) நூல் போற்றப்படுகிறது உலகப் பொதுமறை என்று?

(E) விடை தெரியவில்லை

# பகுதி-அ (தமிழ் தகுதி & மதிப்பீட்டுத் தேர்வு)

## Part-A (Tamil Eligibility-Cum-Scoring Test)

**வினாக்கள் : 1–100** **மொத்த மதிப்பெண்கள் : 150**

**Questions : 1–100** **Total Marks : 150**

---

1. கீழ்க்கண்டவற்றில் எது கவிஞர் தேனரசன் படைப்பு இல்லை?

(A) மண்வாசல்
(B) வெள்ளை ரோஜா
(C) பெய்து பழகிய மேகம்
(D) மழை பற்றிய பகிர்தல்கள்
(E) விடை தெரியவில்லை

2. பொதுமொழிக்கு எடுத்துக்காட்டு

(A) துட்டு
(B) எட்டு
(C) சாத்தன்
(D) நிலம்
(E) விடை தெரியவில்லை

3. காலம் கடந்த பெயரெச்சம்

(A) பண்புத் தொகை
(B) வினைத் தொகை
(C) உவமைத் தொகை
(D) வேற்றுமைத் தொகை
(E) விடை தெரியவில்லை

4. பாஞ்சாலி சபதத்தில் பாம்புக் கொடியவன் என்றழைக்கப்படுபவன்?

(A) துரியோதனன்
(B) துச்சாதனன்
(C) சகுனி
(D) கர்ணன்
(E) விடை தெரியவில்லை

5. காந்தியடிகள் தமிழகம் வந்த போதெல்லாம் அவரது மேடை பேச்சினை மொழிபெயர்த்த பெருமகனார்

(A) பாரதியார்

(B) கவிமணி

(C) ✓ திரு.வி.க.

(D) வ.உ.சி

(E) விடை தெரியவில்லை

6. 1856ல் "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" என்ற நூலை எழுதியவர்

(A) கமில்சுவலபில்

(B) ஆந்திரனோவ்

(C) ஸ்டென்கனோ

(D) ✓ கால்டுவெல்

(E) விடை தெரியவில்லை

7. "நாடும் மொழியும் நமதிரு கண்கள்" எனப் புகழ்ந்துரைத்த கவிஞர்

(A) தேவநேயப் பாவாணர்

(B) சந்தக் கவிமணி தமிழழகனார்

(C) ✓ பாரதியார்

(D) நாமக்கல் கவிஞர்

(E) விடை தெரியவில்லை

8. உழைக்கும் மக்கள் தம் களைப்பை மறக்க பாடும் பாடல் வகை எது?

(A) ✓ நாட்டுப்புற பாடல்

(B) சங்க இலக்கியப் பாடல்

(C) பக்திப்பாடல்

(D) சமயப்பாடல்

(E) விடை தெரியவில்லை

9. 'பகை' என்னும் பொருள் தரும் ஒரெழுத்து ஒரு மொழியைத் தேர்க

(A) நே (B) சீ

(C) ✔தூ (D) மோ

(E) விடை தெரியவில்லை

10. தவறான ஒலி மரபுச் சொல்லைத் தேர்வு செய்க.

(A) குயில் கூவும் (B) மயில் அகவும்

(C) ✔புறா குழறும் (D) கிளி பேசும்

(E) விடை தெரியவில்லை

11. உழவு பற்றிய பழமொழியைத் தேர்வு செய்க.

(A) ✔அகல உழுவதைவிட ஆழ உழுவதே மேல்

(B) வேலியே பயிரை மேய்வது போல

(C) ஆடிப்பட்டம் தேடி விதை

(D) வரப்பு உயர நீர் உயரும் நீர் உயர நெல் உயரும்

(E) விடை தெரியவில்லை

12. 'கூடா நட்புக் கேடாய் முடியும்' – இப்பழமொழியால் நாம் அறிவனவற்றைத் தேர்க

கூற்று 1 : தீயவரோடு கொண்ட நட்பு துன்பத்தில் முடியும்

கூற்று 2 : நட்பு நமக்குக் கேடயம் போல் பாதுகாப்பு தரும்.

(A) ✔கூற்று 1 சரி (B) கூற்று 2 சரி

(C) கூற்று 1ம், 2ம் சரி (D) கூற்று 1ம், 2ம் தவறு

(E) விடை தெரியவில்லை

13. நும்மனைச் சிலம்பு கழீஇ அயரினும்
எம்மனை வதுவை நல்மணம் கழிக – இவ்வரிகள்
இடம்பெற்ற நூல் எது?

(A) குறுந்தொகை
(B) ஐங்குறுநூறு
(C) நற்றிணை
(D) அகநானூறு
(E) விடை தெரியவில்லை

14. பாவகையால் பெயர் பெற்ற சங்க இலக்கிய எட்டுத் தொகை நூல்கள்

(A) பதிற்றுப்பத்து, பரிபாடல்
(B) கலித்தொகை, மதுரைக்காஞ்சி
(C) மலைபடுகடாம், நெடுநல்வாடை
(D) பரிபாடல், கலித்தொகை
(E) விடை தெரியவில்லை

15. அகநானூறு ———————— எனவும் அழைக்கப்படுகிறது.

(A) பெரியநூல்
(B) நெடுந்தொகை
(C) பழமொழி நானூறு
(D) இனியவை நாற்பது
(E) விடை தெரியவில்லை

16. அகன் அமர் காதல் ஐய?
நின்னொடும் எழுவர் ஆனேம் என்று இராமன் யாரைக் குறிப்பிடுகிறான்?

(A) குகன்
(B) சுக்ரீவன்
(C) அனுமன்
(D) வீடணன்
(E) விடை தெரியவில்லை

17. ஒவ்வொரு சிவனடியார் பெருமையையும் ஓர் அடியில் கூறும் நூலைப் பாடியவர்

(A) சேக்கிழார் (B) சுந்தரர்

(C) நம்பியாண்டார் நம்பி (D) மாணிக்கவாசகர்

(E) விடை தெரியவில்லை

18. திருவிளையாடற் புராணத்தில் உள்ள திருவிளையாடல்களின் எண்ணிக்கை

(A) 60 (B) 63

(C) 64 (D) 18

(E) விடை தெரியவில்லை

19. முனைப்பாடியார் இயற்றிய 'அறநெறிச்சாரம்' எத்தனை பாடல்களைக் கொண்டது?

(A) 215 (B) 225

(C) 235 (D) 205

(E) விடை தெரியவில்லை

20. அகர வரிசையில் அமைத்தெழுது

மீன், மண், முன், மான், மூடி, மெல்ல, மிளகு, மேடு

(A) மான், மூடி, மிளகு, மேடு, மெல்ல, மீன், மண், முன்

(B) மண், மீன், முன், மூடி, மிளகு, மேடு, மெல்ல, மான்

(C) மண், மான், மிளகு, மீன், முன், மூடி, மெல்ல, மேடு

(D) மான், முன், மூடி, மேடு, மெல்ல, மிளகு, மண், மீன்

(E) விடை தெரியவில்லை

21. வேர்ச்சொல் – காண்க.

ஞாலம்

(A) ஞல்
(B) ஞாள்
(C) ✔ஞால்
(D) ஞாலு
(E) விடை தெரியவில்லை

22. பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

"குழந்தை தனது ஒரு விரலைக் காட்டி

இந்த விரல் சின்ன விரலா? பெரிய விரலா?

எனக் கேட்பது"

(A) ✔வினா வழு
(B) மரபு வழு
(C) பால் வழு
(D) திணை வழு
(E) விடை தெரியவில்லை

23. பொருந்தாததைக் கண்டறிக

(A) வெண்டைக்காய்
(B) ✔தண்ணீர்த்தொட்டி
(C) அத்திக்காய்
(D) ஆலங்காய்
(E) விடை தெரியவில்லை

24. ஆதிரையான் என்பது எவ்வகைப் பெயர்ச்சொல்லைக் குறிக்கிறது?

(A) பொருட்பெயர்
(B) காலப்பெயர்
(C) இடப்பெயர்
(D) பண்புப்பெயர்
(E) விடை தெரியவில்லை

25. சொற்களை முறைப்படுத்துக

(A) ஏகலை கலையை அம்பு விடும் தமிழ் என்றது
(B) அம்பு விடும் கலையை ஏகலை என்றது தமிழ்
(C) அம்பு விடும் தமிழ் என்றது ஏகலை கலையை
(D) தமிழ் ஏகலை என்றது அம்பு விடும் கலையை
(E) விடை தெரியவில்லை

26. ஒரெழுத்து ஒருமொழியின் பொருள் தருக :

நா

(A) கொடு
(B) ஆடை
(C) நாக்கு
(D) நான்
(E) விடை தெரியவில்லை

27. ஒலி வேறுபாடு அறிந்து சரியான பொருளைத் தேர்க

தால் – தாள்

(A) தாலாட்டு – பாதம்
(B) சித்திரம் – வண்ணம்
(C) நூல் – எழுத்து மொழி
(D) பார்வை – மெய்
(E) விடை தெரியவில்லை

28. தமிழ் ஆட்சி மொழியாகத் திகழும் நாடுகள் எவை?

(A) ✔இலங்கை, சிங்கப்பூர், மலேசியா (B) சிங்கப்பூர், இங்கிலாந்து, இலங்கை

(C) தாய்லாந்து, பிரிட்டன், பிஜித்தீவு (D) இலங்கை, கனடா, மலேசியா

(E) விடை தெரியவில்லை

29. கிரேக்க அறிஞர் தாலமி தமிழகத்தின் முதன்மையான உள்நாட்டு வணிக மையமாக எந்த ஊரைக் குறிப்பிட்டுள்ளார்?

(A) கோய்ம்புத்தூர் (B) திருச்சிராப்பள்ளி

(C) திருப்பூர் (D)✔கரூர்

(E) விடை தெரியவில்லை

30. தமிழகத்தின் தலைநகராக சென்னையே இருக்க வேண்டும் என்பதற்காக "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" என முழங்கியவர்

(A) தந்தை பெரியார் (B) நேசமணி

(C) சங்கரலிங்கம் (D)✔ம.பொ.சிவஞானம்

(E) விடை தெரியவில்லை

31. அம்பேத்கரின் இயற்பெயர் ———————— ஆகும்.

(A) இராம்ஜி சக்பால் (B) சக்பால்

(C) இராம்ஜி (D)✔பீமாராவ் இராம்ஜி

(E) விடை தெரியவில்லை

32. வாணிதாசனின் நூல்கள்

(A) தமிழச்சி, கொடிமுல்லை, இதயக் கோயில்

(B) தமிழச்சி, கொடிமுல்லை, தொடுவானம்

(C) தமிழச்சி, பிச்சைக்காரன், தொடுவானம்

(D) தமிழச்சி, பிச்சைக்காரன், இதயக் கோயில்

(E) விடை தெரியவில்லை

33. 'ஆண்டிப்பண்டாரம் – உனை வேண்டிக் கொண்டேனே' எனும் நாட்டுப்பாடலை ஒட்டி 'தீண்டாதார் விண்ணப்பம்' பாடியவர்

(A) பாரதியார்

(B) கவிமணி தேசிக விநாயகனார்

(C) பாரதிதாசன்

(D) நாமக்கல் கவிஞர் இராமலிங்கனார்

(E) விடை தெரியவில்லை

34. வேங்கடத்தில் குலசேகராழ்வார் ———— ஆக இருக்க விரும்பினார்.

(A) மீன்

(B) கொக்கு

(C) வில்

(D) படி

(E) விடை தெரியவில்லை

35. 1981 – முதல் உலகத்தமிழ் மாநாட்டில் "மாந்தன் தோற்றமும் தமிழர் மரபும்" என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றியவர்

(A) வையாபுரிப் பிள்ளை

(B) அ. சிதம்பர நாதன்

(C) சாலை. இளந்திரையன்

(D) தேவநேயப் பாவாணர்

(E) விடை தெரியவில்லை

36. "தமிழ் மகள்" என பாரதியாரால் அழைக்கப்பெற்ற பெண்பாற்புலவர்

(A) ✔ ஔவையார்
(B) காக்கைப் பாடினியார்
(C) வெள்ளி வீதியார்
(D) நக்கண்ணையார்
(E) விடை தெரியவில்லை

37. கூற்றும் காரணமும் :

கூற்று : காவடியாட்டம் மரத்தண்டின் இரு முனைகளிலும் சிற்ப வேலைப்பாடுள்ள பலகையைப் பொருத்தி மூங்கில் குச்சிகளால் அரைவட்டமாக இணைக்கின்றனர்.

காரணம் : 'கா' என்பதற்குப் பாரந்தாங்கும் கோல் என்று பெயர்.

(A) கூற்று சரி காரணம் தவறு
(B) ✔ கூற்றும் சரி காரணமும் சரி
(C) கூற்று தவறு காரணம் சரி
(D) கூற்றும் சரி காரணமும் சரி ஆனால் கூற்றிற்கான சரியான காரணம் இல்லை
(E) விடை தெரியவில்லை

38. 'மரக்கால் கூத்து' – என்று அழைக்கப்படுவது

(A) கோலாட்டம்
(B) ✔ பொய்க்கால் குதிரையாட்டம்
(C) பொடிக்கழி ஆட்டம்
(D) கழியல் ஆட்டம்
(E) விடை தெரியவில்லை

39. "உலக சரித்திரம்" என்ற உலகப் புகழ் பெற்ற நூலின் ஆசிரியர்

(A) காந்தியடிகள்
(B) இந்திரா காந்தி
(C) ✔ ஜவஹர்லால் நேரு
(D) சர்தார் வல்லபாய் படேல்
(E) விடை தெரியவில்லை

40. உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடு.:

வளவன் 'கிணற்றுத் தவளை' போல வாழ்ந்தான்.

(A) வளவன் எல்லாம் அறிந்தவன் ஆக வாழ்ந்தான்

(B) வளவன் ஏதும் அறியாதவன் ஆக வாழ்ந்தான்

(C) ✔ வளவன் குறுகிய அறிவுடையவன் ஆக வாழ்ந்தான்

(D) வளவன் மூடனாக வாழ்ந்தான்

(E) விடை தெரியவில்லை

41. உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடு :

பாரியின் பறம்பு மலையின் புகழ் 'குன்றின் மேலிட்ட விளக்கு போல' பரவியது.

(A) விளக்கு குன்றின் மேல் அமைந்துள்ளது

(B) பறம்பு மலையின் புகழ் மங்கியது

(C) ✔ பறம்பு மலையின் புகழ் ஓங்கியது

(D) பறம்பு மலையில் விளக்கு அமையவில்லை

(E) விடை தெரியவில்லை

42. கீழ்வருவனவற்றுள் 'செய்வினை' – வாக்கியம் எது?

(A) விருது வழங்கியது யார்?

(B) "வேலா இலக்கணத்தை நன்றாகப் படி"

(C) ✔ அமைச்சர் விருது வழங்கினார்

(D) நான் இலக்கணம் கற்று வாழ்வில் உயர்ந்தேன்

(E) விடை தெரியவில்லை

43. பின்வருவனவற்றுள் வினாத்தொடர் அல்லாத ஒன்றைக் கண்டறிக

(A) கானலின் நீரோ

(B) வானகமே, இளவெயிலே, மரச்செறிவே

(C) காட்சிப் பிழைதானோ

(D) நானும் ஓர் கனவோ

(E) விடை தெரியவில்லை

44. அடிநிமிர் வில்லாச் செய்யுட் தொகுதி
அறம்பொருள் இன்பம் அடுக்கி அவ்வகைத்
திறம்பட வருவது

(A) கீழ்க்கணக்கு நூல்கள்

(B) மேற்கணக்கு நூல்கள்

(C) தொல்காப்பியம்

(D) நன்னூல்

(E) விடை தெரியவில்லை

45. கணிமேதாவியார் எந்த சமயத்தைச் சார்ந்தவர்

(A) சைவம்

(B) சமணம்

(C) வைணவம்

(D) பௌத்தம்

(E) விடை தெரியவில்லை

46. வாழ்வுக்குரிய அன்பு நெறியைக் கூறும் உயர்ந்த நூல் – திருக்குறள் என்று பாராட்டியவர் யார்?

(A) மல்லார்மே

(B) ஆல்பர்ட் ஸ்வைட்சர்

(C) விட்னே

(D) வால்ட் விட்மன்

(E) விடை தெரியவில்லை

47. தமிழ் மூவாயிரம் என அழைக்கப்படும் நூல் எது?

(A) தேவாரம் (B) பெரியபுராணம்

(C) திருமந்திரம் (D) சிலப்பதிகாரம்

(E) விடை தெரியவில்லை

48. தேவநேயப் பாவாணர்

கூற்று (i) : 'மொழிஞாயிறு' என்றழைக்கப்படுகிறார்.

கூற்று (ii) : செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராகப் பணியாற்றியவர்.

கூற்று (iii) : 'பள்ளிப் பறவைகள்' என்ற நூலை எழுதியவர்

(A) கூற்று (i) மற்றும் (iii) சரி (B) கூற்று (ii) மற்றும் (iii) சரி

(C) கூற்று (i) மட்டும் சரி (D) கூற்று (i) மற்றும் (ii) சரி

(E) விடை தெரியவில்லை

49. தம் மீது எச்சமிட்ட கொக்கை விழித்துப் பார்த்து எரித்தவர்

(A) போகர் (B) புலிப்பாணி

(C) கொங்கணர் (D) சட்டை முனி

(E) விடை தெரியவில்லை

50. அட்டமாசித்திகள் – இதில் அட்டம் எனும் சொல்லின் பொருள்

(A) ஐந்து (B) ஆறு

(C) எட்டு (D) ஒன்பது

(E) விடை தெரியவில்லை

51. 'வள்ளைப்பாட்டு' என்பது

(A) உலக்கைப் பாட்டு (B) வாய்ப்பாட்டு

(C) தெம்மாங்குப் பாட்டு (D) உழவுப்பாட்டு

(E) விடை தெரியவில்லை

52. தப்பேது நான் செயினும் நீ பொறுத்தல் வேண்டும்

எந்தைநின தருட்புகழை இயம்பியிடல் வேண்டும்.

இயைபு சொற்கள் யாது?

(A) தப்பேது, தருட்புகழை

(B) நான் செயினும், நீ பொறுத்தல்

(C) இயம்பிடல், எந்தை

(D) வேண்டும், வேண்டும்

(E) விடை தெரியவில்லை

53. சந்திப்பிழை அற்ற வாக்கியத்தைக் கண்டறிக.

(A) இந்த பூமியின் ஒவ்வொரு துகளும் எம்மக்களுக்குப் புனிதமானதாகும்

(B) இந்தப் பூமியின் ஒவ்வொரு துகளும் எம்மக்களுக்கு புனிதமானதாகும்

(C) இந்த பூமியின் ஒவ்வொருத் துகளும் எம்மக்களுக்குப் புனிதமானதாகும்

(D) இந்தப் பூமியின் ஒவ்வொரு துகளும் எம்மக்களுக்குப் புனிதமானதாகும்

(E) விடை தெரியவில்லை

54. பிள்ளைத் தமிழுக்குரிய பருவங்கள்

(A) 3

(B) 10

(C) 11

(D) 9

(E) விடை தெரியவில்லை

55. பாரதி தன் குயில்பாட்டில் பாடும் பாடல் வரிகளைக் கண்டறிக.

(A) வார்த்தைத் தவறிவிட்டாய் – அடி கண்ணம்மா மார்பு துடிக்கு தடீ

(B) பாயுமொளி நீ எனக்கு பார்க்கும் விழி நான் உனக்கு

(C) ✔பாட்டினைப் போல் ஆச்சரியம் பாரின்மிசை இல்லையடா

(D) உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும்

(E) விடை தெரியவில்லை

56. 'நீராருங் கடலுடுத்த....' எனத் தொடங்கும் தமிழ்த்தாய் வாழ்த்து இடம் பெற்றுள்ள நூல்

(A) சீவக சிந்தாமணி

(B) மணிமேகலை

(C) தேம்பாவணி

(D) ✔மனோன்மணியம்

(E) விடை தெரியவில்லை

57. 'ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப' – என்ற தொல்காப்பிய நூற்பாவுக்கேற்றதொரு இலக்கிய வடிவம்

(A) பரணி

(B) ✔உலா

(C) குறவஞ்சி

(D) பள்ளு

(E) விடை தெரியவில்லை

58. 'குறம்' என கூறப்பெறும் சிற்றிலக்கிய வகை எது?

(A) ✔குறவஞ்சி

(B) கோவை

(C) மணிமாலை

(D) கலம்பகம்

(E) விடை தெரியவில்லை

59. ஒலி வேறுபாடு அறிந்து சரியான பொருள் தரும் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
புலி – புளி

(A) விலங்கு – பழம்
(B) வண்ணம் – பறவை
(C) நூல் – எழுதுகோல்
(D) ஆடு – கன்று
(E) விடை தெரியவில்லை

60. சரியான தமிழ்ச்சொல் தெரிவு செய்க

Folk arts

(A) நாட்டுப்புறக் கலைகள்
(B) நாட்டுப்புறக் கலை
(C) நாட்டுப்புறப் பாடல்
(D) நாட்டுப்புற விழா
(E) விடை தெரியவில்லை

61. 'ரேவதி' என்ற புனைப்பெயரில் படைப்புகளை எழுதியவர் யார்?

(A) வல்லிக்கண்ணன்
(B) ந. பிச்சமூர்த்தி
(C) சு. சமுத்திரம்
(D) தி. ஜானகிராமன்
(E) விடை தெரியவில்லை

62. அணிகளின் இலக்கணத்தைக் கூறும் நூல்களுள் முதன்மையானது?

(A) மாறனலங்காரம்
(B) தண்டியலங்காரம்
(C) தொல்காப்பியம்
(D) வீர சோழியம்
(E) விடை தெரியவில்லை

63. பழமொழிகள் :

ஆங்கிலப் பழமொழிக்கு இணையான தமிழ்ப் பழமொழியில் சரியானதைக் கண்டறிக.

Art is long but life is short

(A) கல்வி கற்பவர் கரையில நாள் சில (B) கல்வி கரையில, கற்பவர் நாள் சில

(C) கற்பவர் நாள் சில கல்வி கரையில (D) கல்வி கரையில நாள் சில கற்பவர்

(E) விடை தெரியவில்லை

64. கன்னியாகுமரியில் உள்ள திருவள்ளுவர் சிலை அமைப்பதற்கு மூன்று டன் முதல் எட்டு டன் வரை எடை உள்ள ———— கருங்கற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

(A) 3581 (B) 3481

(C) 3681 (D) 3781

(E) விடை தெரியவில்லை

65. "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்" என்று பாடியவர்

(A) கவிமணி (B) பாரதிதாசன்

(C) பாரதியார் (D) நாமக்கல் கவிஞர்

(E) விடை தெரியவில்லை

66. திங்கள், ஞாயிறு, மழை என இயற்கையை வாழ்த்துவதாகத் தொடங்கும் காப்பியம் எது?

(A) கம்பராமாயணம் (B) சிலப்பதிகாரம்

(C) சீவக சிந்தாமணி (D) மணிமேகலை

(E) விடை தெரியவில்லை

67. 'முதிரையும் சாமையும் வரகும் மொய்மணிக்
குதிரைவா லியும்களம் குவித்துக் குன்று என' – இவ்வரிகள் குறிக்கும் நிலம்

(A) குறிஞ்சி
(B) முல்லை
(C) மருதம்
(D) நெய்தல்
(E) விடை தெரியவில்லை

68. திரிகடுகம் எனும் நூலின் வெண்பாக்களின் எண்ணிக்கை

(A) 100 – வெண்பாக்கள்
(B) 102 – வெண்பாக்கள்
(C) 200 – வெண்பாக்கள்
(D) 90 – வெண்பாக்கள்
(E) விடை தெரியவில்லை

69. கலிங்கத்துப்பரணியின் பாட்டுடைத் தலைவன்

(A) செயங்கொண்டார்
(B) மூன்றாம் நந்திவர்மன்
(C) முதற் குலோத்துங்க சோழன்
(D) தொண்டைமான்
(E) விடை தெரியவில்லை

70. தமிழின் முதல் அகராதியான சதுரகராதியை இயற்றியவர்

(A) ஜி.யு. போப்
(B) கால்டுவெல்
(C) எட்கார் ஆலன்போ
(D) வீரமாமுனிவர்
(E) விடை தெரியவில்லை

71. சரியான அகர வரிசையில் அமைந்த தொடரைத் தேர்க

(A) மழையில் மண்டூகம் மாய்ந்தது
(B) மண்டூகம் மழையில் மாய்ந்தது
(C) மாய்ந்தது மண்டூகம் மழையில்
(D) மழையில் மாய்ந்தது மண்டூகம்
(E) விடை தெரியவில்லை

72. 'படி' – என்னும் வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயரைத் தேர்ந்தெடு

(A) படித்தவர்
(B) படித்தனர்
(C) படிக்கிறான்
(D) படிப்பான்
(E) விடை தெரியவில்லை

73. 'வா' என்னும் வேர்ச்சொல்லின் வினையெச்சத்தை தேர்ந்தெடுக்க

(A) வருதல்
(B) வந்தான்
(C) வந்து
(D) வந்த
(E) விடை தெரியவில்லை

74. 'அமர்ந்தான்' என்ற சொல்லின் வேர்ச்சொல்லை தேர்க.

(A) அமர்
(B) அமரர்
(C) அமரார்
(D) அமர்ந்த
(E) விடை தெரியவில்லை

75. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | செய்யுளிசை அளபெடை | 1. | எங்ங்கிறைவன் |
| (b) | இன்னிசை அளபெடை | 2. | வரனசைஇ |
| (c) | சொல்லிசை அளபெடை | 3. | கெடுப்பதூஉம் |
| (d) | ஒற்றளபெடை | 4. | நல்ல படாஅ பறை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 1 | 2 | 3 | 4 |
| (D) | 1 | 2 | 4 | 3 |

(E) விடை தெரியவில்லை

76. 'மூடுபனி' என்ற சொல்லின் இலக்கணக் குறிப்பு

(A) பண்புத்தொகை
(B) வினையெச்சம்
(C) பெயரெச்சம்
(D) வினைத்தொகை
(E) விடை தெரியவில்லை

77. முகத்தைக் குறிப்பது ———— பெயர் ஆகும்.

(A) பொருட்பெயர்
(B) இடப்பெயர்
(C) குணப்பெயர்
(D) சினைப்பெயர்
(E) விடை தெரியவில்லை

78. 'தமிழ் மாணவன்' என்று தம்மை அறிவித்துக் கொண்டவர் யார்?

(A) ஜி.யு. போப்

(B) வீரமாமுனிவர்

(C) குணங்குடி

(D) பரிதிமாற்கலைஞர்

(E) விடை தெரியவில்லை

79. சேரநாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களுள் ஒன்று

(A) தந்தம்

(B) தங்கம்

(C) பவளம்

(D) செம்பு

(E) விடை தெரியவில்லை

80. அடையாற்றில் அவ்வை இல்லம் நிறுவப்பட்ட ஆண்டு எது?

(A) 1930

(B) 1952

(C) 1882

(D) 1848

(E) விடை தெரியவில்லை

81. "தீம்பிழி எந்திரம் பந்தல் வருந்த" என் கரும்பைப் பிழியும் எந்திரம் பற்றிக் கூறும் நூல்

(A) நற்றிணை

(B) பதிற்றுப் பத்து

(C) பரிபாடல்

(D) கலித்தொகை

(E) விடை தெரியவில்லை

82. திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் யார்?

(A) கால்டுவெல்
(B) வீரமாமுனிவர்
(C) ✓ஜி.யு.போப்
(D) ஷெல்லி
(E) விடை தெரியவில்லை

83. தத்துவச் சரடு, இருண்மை, அறிவியல் நுட்பம், படிமம், அங்கதம் ஆகியவற்றை உத்திகளாகக் கொண்டு கவிதை படைத்தவர்

(A) ஞானக்கூத்தன்
(B) சி.மணி
(C) அப்துல் ரகுமான்
(D) ✓தருமு சிவராமு
(E) விடை தெரியவில்லை

84. பிகூஷீ, ரேவதி ஆகிய புனை பெயர்களில் படைப்புகளை எழுதியவர்

(A) பசுவைய்யா
(B) கலாப்ரியா
(C) கல்யாண்ஜி
(D) ✓ந. பிச்சமூர்த்தி
(E) விடை தெரியவில்லை

85. "காட்சிக்குப் புலியாகிக் கொடுமை மாளக் கவிதைகளைப் பாய்ச்சுபவன் கவிஞன் ஆவன்" என்று கூறியவர்

(A) கண்ணதாசன்
(B) வாணிதாசன்
(C) ✓முடியரசன்
(D) பாவாணர்
(E) விடை தெரியவில்லை

86. கொடுக்கப்பட்டுள்ள பெயர்களுள் கரிசிலாங்கண்ணியின் பெயர் அல்லாத ஒன்றினைக் கண்டறிக

(A) கையாந்தகரை
(B) ஞானப்பச்சிலை
(C) பிருங்கராசம்
(D) தேகராசம்
(E) விடை தெரியவில்லை

87. 'தமிழ்மொழி தோற்றமும் வளர்ச்சியும்' என்ற ஆங்கிலக் கட்டுரை எழுதியவர்

(A) பரிதிமாற் கலைஞர்
(B) சி. இலக்குவனார்
(C) ஆறுமுக நாவலர்
(D) வையாரி
(E) விடை தெரியவில்லை

88. 'வசன நடை கைவந்த வல்லாளர்' என்று ஆறுமுக நாவலரைப் பாராட்டியவர் யார்?

(A) சங்கரதாஸ் சுவாமிகள்
(B) பரிதிமாற் கலைஞர்
(C) பரிமேலழகர்
(D) தாயுமானவர்
(E) விடை தெரியவில்லை

89. எப்பண்பின் அடிப்படையில் நாடகக் கலை அமைந்துள்ளது?

(A) போலச் செய்தல்
(B) பார்த்து செய்தல்
(C) பாடி செய்தல்
(D) அசைந்து செய்தல்
(E) விடை தெரியவில்லை

90. இரண்டு வாக்கியங்களுக்கிடையே வரும் சரியான இணைப்புச் சொல்லை அறிக

அறிவைவிட மிகவும் முக்கியமானது கற்பனைத்திறன். அறிவு என்பது நாம் தற்போது அறிந்தும் புரிந்தும் வைத்திருப்பவற்றோடு முடிந்து விடுகிறது.

(A) எனவே
(B) ஆகையால்
(C) ஏனெனில்
(D) அதனால்
(E) விடை தெரியவில்லை

91. விடைக்கேற்ற பொருத்தமான வினாவைத் தேர்க.

அன்னம் கூடை முடைந்தாள்.

(A) அன்னம் கூடை முடைந்தாளா?

(B) அன்னம் கூடை முடைந்தாள் என்பது சரியா?

(C) அன்னம் என்ன செய்தாள்?

(D) அன்னம் என்பது பறவையா?

(E) விடை தெரியவில்லை

92. துவ்வா – என்பதன் எதிர்ச்சொல் யாது?

(A) நுகருதல்

(B) கொடுத்தல்

(C) விலக்குதல்

(D) பறித்தல்

(E) விடை தெரியவில்லை

93. பொருத்தமற்ற இணை தேர்க :

இங்கே இருப்பது சிலகாலம்
இதற்குள் ஏனோ அகம்பாவம்
இதனால் உண்டோ ஒருலாபம்
எண்ணிப்பாரு தெளிவாகும்.

இப்பாடலில் இடம்பெற்றுள்ள நயங்களின்படி பொருந்தாத எதுகை, மோனை, இயைபு எது எனக் கண்டறிந்து எழுதுக.

(A) இங்கே, இருப்பது – சீர்மோனை

(B) இதற்குள், இதனால் – அடி எதுகை

(C) பாவம், லாபம் – இயைபு

(D) இருப்பது, இதனால் – இணை மோனை

(E) விடை தெரியவில்லை

94. கீழ்வருவனவற்றுள் 'செயப்பாட்டு வினை வாக்கியம்' எது?

(A) மூவர் தேவாரத்தை இயற்றினர்

(B) பாண்டியன் கதவைத் தட்டினான்

(C) நான் மனம் திற்ந்து பேசுகிறேன்

(D) ✓ பாண்டியன் பரிசு' – பாரதிதாசனால் பாடப்பட்டது

(E) விடை தெரியவில்லை

95. கீழ்க்கண்டவற்றுள் கட்டளைத் தொடர்கள் எவை?

(C) ஓரிரு கடல்

(D) ஒன்று கடல்

(E) விடை தெரியவில்லை

47. பிழையற்ற தொடரை எழுதுக.

(A) வலப் பக்கச் சுவற்றில் எழுதாதே

(B) வலது பக்கம் சுவறில் எழுதாதே

(C) வலப் பக்கச் சுவரில் எழுதாதே

(D) வலப் பக்கச் சுவறில் எழுதாதே

(E) விடை தெரியவில்லை

கீழ்க்கண்ட பத்தியினைப் படித்து வினாவிற்குரிய சரியான விடையைத் தேர்ந்தெடு.

இராமநாதபுரத்தை ஆட்சி செய்த செல்லமுத்து மன்னரின் ஒரே மகள் வேலுநாச்சியார். பன்மொழிப் புலமையும் போர்ப்பயிற்சியும் பெற்றவர். சிவகங்கை மன்னர் முத்துவடுகநாதரை மணந்து மகிழ்ச்சியோடு வாழ்ந்து வந்தார். காளையார் கோவிலில் நடைபெற்ற போரில் முத்துவடுகநாதர் ஆங்கிலேயரால் நயவஞ்சகமாகக் கொல்லப்பட்டார். வேலுநாச்சியார் ஆங்கிலேயரை வென்று சிவகங்கையை மீட்க உறுதி பூண்டார். திண்டுக்கல் கோட்டையில் தங்கி ஒரு படை திரட்டி பயிற்சி அளித்தார். அமைச்சர் தாண்டவராயரும் தளபதிகளாகிய பெரிய மருது சின்ன மருது மற்றும் சிலரும் உடன் இருந்தனர். ஆண்கள் படைப் பிரிவுக்கு மருது சகோரர்களும் பெண்கள் படைப்பிரிவுக்குக் குயிலும் தலைமை ஏற்றனர். வேலுநாச்சியாரைக் காட்டிக்கொடுக்கும் படி உடையாள் என்னும் பெண்ணை ஆங்கிலேயர்கள் வற்புறுத்தினர். மறுத்ததால் அவளைக் கொன்றுவிட்டனர். உடையாளின் பெருமையை அனைவரும் அறிந்து கொள்ள வேண்டுமென்று அவருக்கு ஒரு நடுகல் நடப்பட்டது.

48. இராமநாதபுரத்தை ஆண்ட மன்னர் யார்?

(A) செல்லமுத்து
(B) வேலுநாச்சியார்
(C) முத்துவடுகநாதர்
(D) மருது பாண்டியர்
(E) விடை தெரியவில்லை

49. முத்துவடுகநாதர் எப்பகுதியை ஆட்சி செய்தார்?

(A) இராமநாதபுரம்
(B) சிவகங்கை
(C) திண்டுக்கல்
(D) காளையார் கோவில்
(E) விடை தெரியவில்லை

50. வேலுநாச்சியாரின் அமைச்சர் யார்?

(A) குயிலி
(B) உடையாள்
(C) தாண்டவராயர்
(D) முத்துவடுகநாதர்
(E) விடை தெரியவில்லை

51. வேலுநாச்சியார் யாருடைய நினைவாக நடுகல் நட்டார்?

(A) உடையாள்
(B) குயிலி
(C) மருதுபாண்டியர்
(D) முத்துவடுகநாதர்
(E) விடை தெரியவில்லை

52. ஆண்கள் படைப்பிரிவின் தலைமை பொறுப்பு யாருக்கு வழங்கப்பட்டது?

(A) செல்லமுத்து
(B) தாண்டவராயன்
(C) குயிலி
(D) மருது சகோதரர்கள்
(E) விடை தெரியவில்லை

53. கதிர் + ஈன – சேர்த்தெழுதுக.

(A) கதிரென
(B) கதியீன
(C) கதிரீன
(D) கதிரின்ன
(E) விடை தெரியவில்லை

54. அருந்துணை – பிரித்தெழுதுக.

(A) அருமை + துணை
(B) அரு + துணை
(C) அருமை + இணை
(D) அரு + இணை
(E) விடை தெரியவில்லை

55. எந்தமிழ்நா – பிரித்தெழுதுக.

(A) எந் + தமிழ் + நா
(B) எந்த + தமிழ் + நா
(C) எம் + தமிழ் + நா
(D) எந்தம் + தமிழ் + நா
(E) விடை தெரியவில்லை

56. சரியான நிறுத்தற்குறிகளை தருக.

(A) தமிழ்மொழி இனிமை, வளமை, சீர்மை மிக்கது.
(B) தமிழ்மொழி இனிமை, வளமை, சீர்மை, மிக்கது.
(C) தமிழ்மொழி இனிமை வளமை சீர்மை மிக்கது
(D) தமிழ்மொழி, இனிமை, வளமை, சீர்மை மிக்கது.
(E) விடை தெரியவில்லை

57. எதிர்ச்சொல்லை எடுத்தெழுதுக.

நல்லவர்கள் தூற்றும்படி வளர்ந்து விடாதே

(A) இகழும்படி
(B) போற்றும்படி
(C) துன்புறுத்தும்படி
(D) வணங்கும்படி
(E) விடை தெரியவில்லை

58. தவறான இணை எது?

(A) ஆழி – கடல்
(B) நாவாய் – கப்பல்
(C) பணி – வேலை
(D) பறவை – பரவை
(E) விடை தெரியவில்லை

59. பொருந்தாச் சொல்லைக் கண்டறிதல்.

(A) புள் – பறவை
(B) புள் – புல்
(C) பறவை – பறப்பது
(D) பனி – பணி
(E) விடை தெரியவில்லை

60. இதில் தவறான இணை எது?

(A) போற்றார் – பகைவர்
(B) கிளை – உறவினர்
(C) அலந்தவர் – வறியவர்
(D) பேதையார் – அறிவுடையார்
(E) விடை தெரியவில்லை

61. சந்திப்பிழையற்ற வாக்கியங்களைக் கண்டறிக.

(1) முல்லைக்குத் தேர்தந்து மழைமேகத்தை விடப்புகழ் பெற்றான் வள்ளல் பாரி

(2) முல்லைக்குத் தேர்தந்து மழைமேகத்தை விடபுகழ்ப் பெற்றான் வள்ளல் பாரி

(3) புலவரின் சொல்லுக்காக தன் தலையையே தரத் துணிந்தான் குமண வள்ளல்

(4) புலவரின் சொல்லுக்காகத் தன் தலையையே தர்த் துணிந்தான் குமண வள்ளல்

(A) (1) மற்றும் (3)

(B) (1) மற்றும் (4)

(C) (2) மற்றும் (3)

(D) (2) மற்றும் (4)

(E) விடை தெரியவில்லை

62. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக.

(A) தமிழ் – மூன்று

(B) மலையாளம் – மூணு

(C) துளு – மூஜி

(D) தெலுங்கு – மூரு

(E) விடை தெரியவில்லை

63. மரபு பிழைகள் (தொகைமரபு)

மரபுப் பிழையற்ற சொல்லுடன் இணை

ஆட்டு

(A) நிரை

(B) மந்தை

(C) கூட்டம்

(D) அணி அணியாக

(E) விடை தெரியவில்லை

64. மரபுப் பிழையை நீக்குக.

மயில் கத்த குயில் பாடியது

(A) மயில் அகவ குயில் கூவியது

(B) மயில் அலற குயில் கத்தியது

(C) மயில் ஆட குயில் பாடியது

(D) மயில் கத்த குயில் கரைந்தது

(E) விடை தெரியவில்லை

65. ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல் அறிக.

(A) Thesis – ஆய்வறிக்கை
(B) Intellectual – அறிவாளிகள்
(C) Chamber – அறை
(D) Emblem – அரசு பதிப்பு
(E) விடை தெரியவில்லை

66. ஒலி மரபுப் பிழைகளைத் திருத்துக.

அலறும் மயிலும் கூவும் ஆந்தையும்

அகவும் சேவலும்

(A) அகவும், அலறும், கூவும்
(B) அலறும், அகவும், கூவும்
(C) கூவும், அகவும், அலறும்
(D) அகவும், கூவும், அலறும்
(E) விடை தெரியவில்லை

67. ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து, சரியான இணையைத் தெரிவு செய்க.

பனி – பணி

(A) குளிர்ச்சி – பன்றி
(B) பன்றி – வேலை
(C) குளிர்ச்சி – வேலை
(D) வேலை – குளிர்ச்சி
(E) விடை தெரியவில்லை

68. ஒரு பொருள் தரும் பல சொற்கள்.

தாள், தண்டு, கோல், தூறு, தட்டு ஆகிய சொற்கள் தாவரத்தின் எப்பகுதியைக் குறிக்கும்?

(A) அடிப்பகுதி
(B) கிளை
(C) இலை
(D) இளம் பயிர்
(E) விடை தெரியவில்லை

69. ஒரு பொருள் தரும் பல சொற்கள்.

போது, அரும்பு, வீ, செம்மல் ஆகிய சொற்கள் எதனைக் குறிக்கும்?

(A) இலை வகை
(B) கொழுந்து வகை
(C) கிளைப் பிரிவு
(D) பூவின் நிலை
(E) விடை தெரியவில்லை

70. அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்தல்.

தங்கம், நம்பிக்கை, ஞாயிறு, விடுதலை

(A) தங்கம், ஞாயிறு, நம்பிக்கை, விடுதலை
(B) விடுதலை, நம்பிக்கை, தங்கம், ஞாயிறு
(C) ஞாயிறு, தங்கம், நம்பிக்கை, விடுதலை
(D) நம்பிக்கை, தங்கம், ஞாயிறு, விடுதலை
(E) விடை தெரியவில்லை

71. அகரவரிசைப்படி சொற்களைச் சீர் செய்தல்.

தையல், தம்பி, தீக்குச்சி, தாமரை, தும்பி

(A) தையல், தும்பி, தீக்குச்சி, தாமரை, தம்பி
(B) தும்பி, தையல், தாமரை, தீக்குச்சி, தம்பி
(C) தாமரை, தீக்குச்சி, தம்பி, தையல், தும்பி
(D) தம்பி, தாமரை, தீக்குச்சி, தும்பி, தையல்
(E) விடை தெரியவில்லை

72. பொருந்தாத சொல்லைக் கண்டறிக.

(A) சேலம் – மாங்கனி நகரம்
(B) சிவகாசி – முத்து நகரம்
(C) திருவண்ணாமலை – தீப நகரம்
(D) மதுரை – தூங்கா நகரம்
(E) விடை தெரியவில்லை

73. அகரவரிசைப்படி சொற்களைச் சீர் செய்தல்

கண், சுடர், சிவப்பு, கௌதாரி

(A) சிவப்பு, கௌதாரி, சுடர், கண்
(B) கண், கௌதாரி, சிவப்பு, சுடர்
(C) சுடர், கௌதாரி, கண், சிவப்பு
(D) சிவப்பு, சுடர், கௌதாரி, கண்
(E) விடை தெரியவில்லை

74. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குதல்.

சரியான தொடர் எது? கண்டறிந்து எழுதுக.

(A) கதிரவன் மறையும் காலையில் உதித்து, மாலையில்

(B) காலையில், மாலையில் உதித்து மறையும் கதிரவன்

(C) கதிரவன் காலையில் உதித்து, மாலையில் மறையும்

(D) மறையும் மாலையில் கதிரவன், உதித்து காலையில்

(E) விடை தெரியவில்லை

75. விடை வகையை கண்டறிக.

'கடைக்குப் போவாயா?' என்ற கேள்விக்குப் 'போக மாட்டேன்' என்று கூறுவது.

(A) மறை விடை

(B) எதிர் விடை

(C) நேர் விடை

(D) சுட்டு விடை

(E) விடை தெரியவில்லை

76. விடை வகையை கண்டறிதல்.

'பாடம் படிக்கிறாயா? என்ற வினாவிற்கு 'படிக்காமல் இருப்பேனா'? என்று கூறுவது.

(A) மறை விடை

(B) இனமொழி விடை

(C) நேர் விடை

(D) வினா எதிர் வினாதல் விடை

(E) விடை தெரியவில்லை

77. விடைக் கேற்ற வினா அமைக்க :

மனித முயற்சிகளுக்கு மாற்றாக தானே இயங்கும் இயந்திரம் தானியங்கி.

(A) தானே இயங்குவது தானியங்கியா?

(B) மனித முயற்சிகளுக்கு மாற்றாக தானியங்கி இயங்குகிறதா?

(C) மனித முயற்சிகளுக்கு மாற்றாக இயங்கும் எந்திரம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(D) தானியங்கியின் பணி மனித முயற்சிக்கு மாற்றாக இயங்குவதா?

(E) விடை தெரியவில்லை

78. உவமையால் விளக்கப் பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

'நகமும் சதையும் போல' – உவமை கூறும் பொருளை எழுதுக.

(A) வேற்றுமை
(B) நட்பு
(C) ஏமாற்றம்
(D) ஒற்றுமை
(E) விடை தெரியவில்லை

79. சரியான இணையைத் தேர்ந்தெடுக்க.

(A) Storm – கடற்காற்று
(B) Tempest – புயல்
(C) Tornado – சூறாவளி
(D) Sea Breeze – பெருங்காற்று
(E) விடை தெரியவில்லை

80. அலுவல் சார்ந்த கலைச்சொற்கள்

தவறான இணையைத் தேர்ந்தெடுக்க.

(A) Humanism – மனிதநேயம்
(B) Cultural Boundaries – பாரம்பரிய எல்லை
(C) Cabinet – அமைச்சரவை
(D) Cultural Values – பண்பாட்டு விழுமியங்கள்
(E) விடை தெரியவில்லை

81. விடை வகைகள்.

'உனக்குக் கவிதை எழுதத் தெரியுமா?' என்ற வினாவிற்குக் 'கட்டுரை எழுதத் தெரியும்' என்று கூறுவது.

(A) இனமொழி விடை
(B) உறுவது கூறல் விடை
(C) உற்றது உரைத்தல் விடை
(D) குறிப்பு விடை
(E) விடை தெரியவில்லை

82. நிறுத்தற்குறிகளை அறிதல்.

நிறுத்தற்குறிகள் (எது சரியானது)

(A) "கூரன் இங்கு வந்தாளா? அவள் எங்குச் சென்றாள் என்று தெரியுமா?"

(B) கூரன் இங்கு வந்தாளா! அவள் எங்குச் சென்றாள் என்று தெரியுமா.

(C) கூரன் இங்கு வந்தாளா. அவள் எங்குச் சென்றாள் என்று தெரியுமா?

(D) "கூரன் இங்கு வந்தாளா, அவள் எங்குச் சென்றாள் என்று தெரியுமா".

(E) விடை தெரியவில்லை

83. நிறுத்தற்குறிகளை அறிதல்.

நிறுத்தற்குறிகள் (எது சரியானது)

(A) சீர்மை என்பது ஒழுங்கு முறையைக் குறிக்கும் சொல்?

(B) உயர்திணை, அஃறிணை என இருவகைத் திணைகளை அறிவோம்.

(C) "பாகற்காய் கசப்புச்சுவை உடையது"

(D) தமிழ்மொழி பேசவும், படிக்கவும் எழுதவும் உகந்த மொழி!

(E) விடை தெரியவில்லை

84. அடிக்கோடிட்ட சொல்லின் எழுத்து வழக்கைத் தேர்ந்தெடு.

<u>வயித்துக்குக்</u> கஞ்சி ஊத்தி நாமும் குடிப்போம்

(A) வயிறுக்கு

(B) வயறுக்கு

(C) வவுறுக்கு

(D) வயிற்றுக்கு

(E) விடை தெரியவில்லை

85. பேச்சு வழக்கு எழுத்து வழக்கு

நீங்க சொன்ன எடத்துலதாண்ணே!

(A) நீங்க சொன்ன இடமே தான் அண்ணே!

(B) நீங்க சொன்ன இடத்தில்தான் அண்ணே!

(C) நீங்க சொன்ன இடத்தில் அண்ணே!

(D) நீங்க சொன்ன இடம் தான் அண்ணே!

(E) விடை தெரியவில்லை

86. சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு.

ஆழ்வார்கள் ———— பேர்?

(A) எப்படி
(B) எத்தனை
(C) ஏன்
(D) என்ன
(E) விடை தெரியவில்லை

87. சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு.

(A) நெல்லையப்பர் கோவில் எங்கு உள்ளது?
(B) நெல்லையப்பர் கோவில் எங்கு ஆனது?
(C) நெல்லையப்பர் கோவில் கற்களால் ஆனது?
(D) நெல்லையப்பர் கோவிலில் பெருஞ்சுவர் உள்ளது?
(E) விடை தெரியவில்லை

88. அழைப்பு மணி ————, கயல்விழி கதவைத் திறந்தார்.

(A) ஒலித்தது
(B) ஒலித்து
(C) ஒலித்ததால்
(D) ஒலிக்கும்
(E) விடை தெரியவில்லை

89. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | அடி அகரம் ஐ ஆதல் | 1. | செங்கதிர் |
| (b) | முன்நின்ற மெய் திரிதல் | 2. | பெருங்கொடை |
| (c) | ஆதிநீடல் | 3. | பைங்கூழ் |
| (d) | இனமிகல் | 4. | காரிருள் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 4 | 2 | 1 | 3 |
| (C) | 3 | 1 | 2 | 4 |
| (D) | 2 | 3 | 1 | 4 |

(E) விடை தெரியவில்லை

90. குறில் – நெடில் மாற்றம் பொருள் வேறுபாடு அறிக.

விதி – வீதி

(A) அகலம் – வீடு

(B) வரி விதித்தல் – தெரு

(C) தடைவிதித்தல் – தலைவலி

(D) வீடு பேறு – தலையெழுத்து

(E) விடை தெரியவில்லை

91. கூற்று – காரணம் : சரியா? தவறா?

'மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்

மன்னனின் கற்றோன் சிறப்புடையன்'

கூற்று : (1) இப்பாடலைப் பாடியவர் ஔவையார்

(2) ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், மூதுரை போன்ற நூல்களை இயற்றியுள்ளார்.

(3) இவ்வடிகள் ஆத்திச்சூடியில் இடம்பெற்றுள்ளன.

(A) கூற்று : (1), (2), (3) தவறு

(B) கூற்று : (1) சரி, (2), (3) தவறு

(C) கூற்று : (1), (2), (3) சரி

(D) கூற்று : (1), (2) சரி (3) மட்டும் தவறு

(E) விடை தெரியவில்லை

92. கூற்று – காரணம் : சரியா? தவறா?

கூற்று : (1) ஒரு நாட்டின் வளத்தைப் பாடுவதைப் புலவர்கள் கவிமரபாகக் கொண்டிருந்தனர்

கூற்று : (2) முத்தொள்ளாயிரம் சேரன், சோழன், பாண்டியன் ஆகியோருடைய நாடுகளின் வளங்களை நயமாக வெளிப்படுத்துகிறது.

(A) கூற்று இரண்டும் சரி

(B) கூற்று இரண்டும் தவறு

(C) கூற்று (2) மட்டும் சரி

(D) கூற்று (1) மட்டும் சரி

(E) விடை தெரியவில்லை

93. சொல்லுக்கு இணையான பொருள் தருக.

காமம், வெகுளி, மயக்கம்.

(A) ஈகை, கருணை, கோபம்
(B) கோபம், துன்பம், ஆசை
(C) கருணை, சினம், ஈகை
(D) ஆசை, சினம், அறியாமை
(E) விடை தெரியவில்லை

94. சொல்லுக்கு இணையான பொருள் காண்க.

ஊழி – ?

(A) வானம்
(B) யுகம்
(C) முறை
(D) சிறப்பு
(E) விடை தெரியவில்லை

95. பொருத்தமான விடையறிக.

(A) நீ வந்தேன்
(B) நீ வந்தாய்
(C) நாளை வந்தாய்
(D) நாளை வந்தேன்
(E) விடை தெரியவில்லை

96. சரியான கூட்டுப் பெயரைத் தெரிவு செய்க.

யானை

(A) யானை மந்தை
(B) யானைகள்
(C) யானை நிரை
(D) யானைக் கூட்டம்
(E) விடை தெரியவில்லை

97. முறையான தொடர் அமைப்பினைக் குறிப்பிடுக.

(A) தமிழர்களின் வீர விளையாட்டு தொன்மையான ஏறு தழுவுதல்
(B) தமிழர்களின் வீர விளையாட்டு ஏறு தழுவுதல் தொன்மையான
(C) தொன்மையான வீர விளையாட்டு தமிழர்களின் ஏறு தழுவுதல்
(D) தமிழர்களின் தொன்மையான வீர விளையாட்டு ஏறு தழுவுதல்
(E) விடை தெரியவில்லை

98. சொல்லையும் பொருளையும் பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | சாந்தம் | 1. | சிறப்பு |
| (b) | மகத்துவம் | 2. | உலகம் |
| (c) | தாரணி | 3. | கருணை |
| (d) | இரக்கம் | 4. | அமைதி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

(E) விடை தெரியவில்லை

99. ஒருமை பன்மை பிழை நீக்குக.

(A) சூரியன் உதித்தான்

(B) மாலையில் சூரியன் மறைந்தது

(C) நானும் அவனும் வந்தேன்

(D) மந்தையில் மேய்ப்பர்கள் வந்தார்கள்

(E) விடை தெரியவில்லை

100. ஒருமை பன்மை பிழை நீக்கி எழுதுக.

(A) கபிலன் வேலை செய்ததால் களைப்பாக இருக்கின்றார்கள்

(B) கபிலன் வேலை செய்ததால் களைப்பாக இருக்கிறான்

(C) கபிலன் வேலை செய்ததால் களைப்பாக இருக்கின்றன

(D) கபிலன் வேலை செய்ததால் களைப்பாக இருக்கின்றது

(E) விடை தெரியவில்லை

# பகுதி-அ - கட்டாயத் தமிழ்மொழித் தகுதித் தேர்வு
## (பத்தாம் வகுப்பு தரம்)

# Part-A - Compulsory Tamil Language Eligibility Test
## (SSLC Std)

**வினாக்கள் : 1–100** **மொத்த மதிப்பெண்கள் : 150**

**Questions : 1–100** **Total Marks : 150**

---

1. பலவுயிர் – பிரித்தெழுதுக.
   (A) பல் + உயிர் (B) பல + உயிர்
   (C) பல + வுயிர் (D) பல் + வுயிர்
   (E) விடை தெரியவில்லை

2. இல்லாது + இயங்கும் – சேர்த்து எழுதுக.
   (A) இல்லாதுஇயங்கும் (B) இல்லாஇயங்கும்
   (C) இல்லாதியங்கும் (D) இல்லதியங்கும்
   (E) விடை தெரியவில்லை

3. 'வண்கீரை' – பிரித்தெழுதுக.
   (A) வண் + கீரை (B) வண்ணம் + கீரை
   (C) வளம் + கீரை (D) வண்மை + கீரை
   (E) விடை தெரியவில்லை

4. உதித்த என்ற சொல்லிற்குரிய எதிர்ச்சொல்.
   (A) மறைந்த (B) நிறைந்த
   (C) குறைந்த (D) தோன்றிய
   (E) விடை தெரியவில்லை

5. சோம்பல் என்னும் சொல்லுக்குரிய பொருத்தமான எதிர்ச் சொல்.
   (A) அழிவு (B) துன்பம்
   (C) சுறுசுறுப்பு (D) சோகம்
   (E) விடை தெரியவில்லை

6. பொருந்தாத சொல்லைத் தேர்ந்தெடுக்க.
   (A) ஹைக்கூ (B) சென்ரியு
   (C) மரபுக் கவிதை (D) லிமரைக்கூ
   (E) விடை தெரியவில்லை

7. பொருந்தாத இணை எது?

(A) தோல் கருவிகள் – உடுக்கை, தவண்டை
(B) நரம்புக் கருவிகள் – யாழ், வீணை
(C) காற்றுக் கருவிகள் – குழல், சங்கு
(D) கஞ்சக் கருவிகள் – சாலரா, சேகண்டி
(E) விடை தெரியவில்லை

8. பொருந்தாதவற்றைக் கண்டறிக.

(A) தோசை வைக்கப்பட்டது – செய்வினைத் தொடர்
(B) அப்துல் நேற்று வந்தான் – தன்வினைத் தொடர்
(C) கவிதா உரை படித்தாள் – செய்வினைத் தொடர்
(D) கோவலன் கொலையுண்டான் – செயப்பாட்டு வினைத் தொடர்
(E) விடை தெரியவில்லை

9. மரபுப் பிழையற்றதை எடுத்து எழுதுக.

(A) பாடும் குயில்
(B) கத்தும் குயில்
(C) பேசும் குயில்
(D) கூவும் குயில்
(E) விடை தெரியவில்லை

10. சந்திப்பிழையைச் சரிபார்த்து எழுதுக.

(A) கண்களை கசகிக் கொண்டுபார்த்தான்
(B) கண்களைக் கசக்கி கொண்டுபார்த்தான்
(C) கண்களைக் கசக்கிக் கொண்டுபார்த்தான்
(D) கண்களை கசகி கொண்டுபார்த்தான்
(E) விடை தெரியவில்லை

11. சந்திப்பிழை இல்லாத தொடரைக் காண்க.

(A) ஆசிரியர் வருவதாக கூறிச் சென்றார்
(B) ஆசிரியர் வருவதாகக் கூறிச் சென்றார்
(C) ஆசிரியர் வருவதாகக் கூறி சென்றார்
(D) ஆசிரியர் வருவதாக கூறி சென்றார்
(E) விடை தெரியவில்லை

12. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை அறிக.

(A) Document – ஆவணம்
(B) Patent – பாசனம்
(C) Guild – தூதரகம்
(D) Consulate – வணிகக் குழு
(E) விடை தெரியவில்லை

13. மயங்கொலிப் பிழையற்ற தொடரைக் கண்டறிக.

(A) பேச்சுமொழி சிறப்பாக அமையக் குறல் ஏற்றத்தாள்வு அவசியம்
(B) பேச்சுமொழி சிரப்பாக அமையக் குரல் ஏற்றத்தாள்வு அவசியம்
(C) பேச்சுமொழி சிரப்பாக அமையக் குறல் ஏற்றத்தாழ்வு அவசியம்
(D) பேச்சுமொழி சிறப்பாக அமையக் குரல் ஏற்றத்தாழ்வு அவசியம்
(E) விடை தெரியவில்லை

14. வழுவற்ற சொல்லைக் காண்க

(A) அரிவாமணை
(B) ஒட்டடை
(C) தாவாரம்
(D) அடமழை
(E) விடை தெரியவில்லை

15. 'அடல்' என்பதன் தவறான பொருளைத் தேர்ந்தெடுக்க.

(A) வலிமை
(B) வெற்றி
(C) போர்
(D) ஆடல்
(E) விடை தெரியவில்லை

16. கரி என்பதன் தவறான பொருளைத் தேர்ந்தெடுக்க.

(A) யானை
(B) அடுப்புக்கரி
(C) கருமை
(D) இறைச்சி
(E) விடை தெரியவில்லை

17. அகர வரிசைப்படுத்துக.

(A) ஆரம், அழகுணர்ச்சி, இரண்டல்ல, ஈசன்

(B) அழகுணர்ச்சி, ஆரம், இரண்டல்ல, ஈசன்

(C) அழகுணர்ச்சி, ஆரம், ஈசன், இரண்டல்ல

(D) ஆரம், ஈசன், அழகுணர்ச்சி, இரண்டல்ல

(E) விடை தெரியவில்லை

18. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க.

பாம்பு, பேரியாழ், படகம், பிடில்

(A) பிடில், பாம்பு, படகம், பேரியாழ்

(B) பேரியாழ், பிடில், படகம், பாம்பு

(C) படகம், பாம்பு, பிடில், பேரியாழ்

(D) பேரியாழ், பாம்பு, படகம், பிடில்

(E) விடை தெரியவில்லை

19. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்தல்.

(A) மனத்துயர், மீமிசை, முந்நீர், மேடுபள்ளம், மொழிபெயர்ப்பு

(B) மனத்துயர், முந்நீர், மீமிசை, மேடுபள்ளம், மொழிபெயர்ப்பு

(C) மனத்துயர், மீமிசை, மேடுபள்ளம், முந்நீர், மொழிபெயர்ப்பு

(D) மனத்துயர், முந்நீர், மீமிசை, மொழிபெயர்ப்பு, மேடுபள்ளம்

(E) விடை தெரியவில்லை

20. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்தல்.

கீழ்க்காணும் சொற்களை அகர வரிசையில் எழுதுக.

(A) வாழ்க்கை, வேப்பிலை, வெகுளாமை, வீடுபேறு, வையம்

(B) வாழ்க்கை, வேப்பிலை, வீடுபேறு, வெகுளாமை, வையம்

(C) வாழ்க்கை, வீடுபேறு, வையம், வெகுளாமை, வேப்பிலை

(D) வாழ்க்கை, வீடுபேறு, வெகுளாமை, வேப்பிலை, வையம்

(E) விடை தெரியவில்லை

21. "குறிஞ்சி நகர் எங்கே இருக்கிறது? – இந்த வழியாகச் செல்லுங்கள்" என்று விடையளிப்பது.

(A) நேர்விடை
(B) மறைவிடை
(C) சுட்டுவிடை
(D) ஏவல்விடை
(E) விடை தெரியவில்லை

22. வெளிப்படை விடைகளைக் கண்டறிக.

(A) சுட்டு, ஏவல், இனமொழி
(B) சுட்டு, மறை, நேர்
(C) சுட்டு, நேர், உறுவது கூறல்
(D) சுட்டு, நேர், ஏவல்
(E) விடை தெரியவில்லை

23. விடைக்கேற்ற வினா அமைத்திடுக.

சிலப்பதிகாரம், முத்தமிழ்க் காப்பியம் என்றும் குடிமக்கள் காப்பியம் என்றும் அழைக்கப்படுகிறது.

(A) சிலப்பதிகாரம் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகிறது?
(B) முத்தமிழ்க் காப்பியம் என்றழைக்கப்படும் நூல் எது?
(C) குடிமக்கள் காப்பியம் என்றழைக்கப்படும் நூல் எது?
(D) சிலப்பதிகாரம் குடிமக்கள் காப்பியம் என்று அழைக்கப்பட காரணம் என்ன?
(E) விடை தெரியவில்லை

24. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுக்க.

"கரகாட்டத்தைக் கும்பாட்டம் என்றும் குடக்கூத்து என்றும் கூறுவர்".

(A) கரகாட்டம் என்றால் என்ன?
(B) கரகாட்டம் எக்காலங்களில் நடைபெறும்?
(C) கரகாட்டத்தின் வேறு வடிவங்கள் யாவை?
(D) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?
(E) விடை தெரியவில்லை

25. சரியான கலைச் சொல்லை கண்டறிக :

(A) Objective – அரசியலமைப்பு

(B) Confidence – நம்பிக்கை

(C) Agreement – குறிக்கோள்

(D) Constitution – ஒப்பந்தம்

(E) விடை தெரியவில்லை

26. விடை வகைகள் :

'கடைத்தெரு எங்குள்ளது' என்ற வினாவிற்கு இப்பக்கத்தில் உள்ளது எனக் கூறல் : எவ்வகை விடை?

(A) சுட்டுவிடை

(B) இனமொழிவிடை

(C) உறுவது கூறல்விடை

(D) ஏவல்விடை

(E) விடை தெரியவில்லை

27. பிறமொழிச் சொற்கள் கலவாத – தொடரை எடுத்து எழுது.

(A) என் நண்பன் ஏரோப்பிளேனில் பயணம் செய்தான்

(B) என் நண்பன் வானூர்தியில் பயணம் செய்தான்

(C) முக்கியஸ்தர் வானூர்தியில் பயணம் செய்தார்

(D) என் நண்பன் இரயிலில் பயணம் செய்தான்

(E) விடை தெரியவில்லை

28. பிறமொழிச் சொற்கள் கலவாத தொடரை – எடுத்து எழுதுக.

(A) இராமநாதபுரம் சமஸ்தானம் பெரியது

(B) வானூர்தி ஒரு அறிவியல் ஆக்கம்

(C) திருவிழாவிற்கு முக்கியஸ்தர்கள் வந்துள்ளனர்

(D) ஷாப்பிங்மால் அருகாமையில் உள்ளது

(E) விடை தெரியவில்லை

29. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | கீது | 1. | இலை |
| (b) | எல | 2. | சாப்பிட்டான் |
| (c) | ஓலகம் | 3. | இருக்கிறது |
| (d) | சாப்ட்டான் | 4. | உலகம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 4 | 2 | 3 | 1 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 2 | 3 | 1 | 4 |
| (E) | விடை தெரியவில்லை | | | |

30. எழுத்து வழக்குத் தொடரைத் தேர்ந்தெடு.

(A) அதிக தொலைவிலிருந்து வருகிறேன்
(B) ரெம்ப தொலைவிலிருந்து வருகிறேன்
(C) ரொம்ப தொலைவிலிருந்து வாரென்
(D) ரொம்பத் தொலவட்லயிருந்து வர்ரென்
(E) விடை தெரியவில்லை

31. திருவள்ளுவரின் புகழை ———— உலகமே அறிந்துள்ளது.

(A) குடத்துள் இட்ட விளக்கு போல
(B) உள்ளங்கை நெல்லிக்கனி போல
(C) பசுமரத்தாணி போல
(D) கண்ணை இமை காப்பது போல
(E) விடை தெரியவில்லை

32. கீழ்கண்டவற்றுள் இரண்டு சொற்கள் இணைந்து உருவாக்கப்படாதச் சொல்லைக் கண்டறிக.

(A) தலைவன்
(B) தலைவிதி
(C) தலையெழுத்து
(D) தலைமகன்
(E) விடை தெரியவில்லை

33. சந்திப்பிழையற்ற வாக்கியங்களைக் கண்டறிக.

1. காட்சியைப் பார்
2. என கேட்டார்
3. ஊருக்கு செல்
4. கதவைத் திற

(A) 1 மற்றும் 4 (B) 2 மற்றும் 3
(C) 1 மற்றும் 3 (D) 4 மற்றும் 2
(E) விடை தெரியவில்லை

34. கீழ்க்காணும் சொற்களில் கூட்டப் பெயர்களைக் கண்டுபிடித்து பொருத்துக. (கூட்டமாக)

| | |
|---|---|
| (a) கல் | 1. கட்டு |
| (b) பழம் | 2. குவியல் |
| (c) புல் | 3. மந்தை |
| (d) ஆடு | 4. குலை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 1 | 3 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 1 | 4 | 2 | 3 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

(E) விடை தெரியவில்லை

35. அடைப்புக்குள் உள்ள எழுத்தைத் தகுந்த இடத்தில் சேர்க்க (ஐ)

(A) ஆடை ———— அணிந்தேன்
(B) தோசை ———— மாவு
(C) பள்ளி ———— சென்றேன்
(D) கண்ணன் ———— சட்டை
(E) விடை தெரியவில்லை

36. சிறு – சீறு என்ற சொற்களின் பொருள் தரும் தொடரைத் தேர்ந்தெடுக்க.

(A) சிறிய வீடு கட்டிச் சிறப்பாக வாழ்ந்தான்

(B) ஆற்றங்கரையோரம் கோபத்துடன் அமர்ந்திருந்தான்

(C) சின்னச் சின்ன ஆசைகள் நிறைவேற உழைக்க வேண்டும்

(D) சிறு குட்டியாக இருந்தாலும் சீறுவதில் புலியை மிஞ்ச முடியாது

(E) விடை தெரியவில்லை

37. கூற்று காரணம் – சரியா? தவறா?

வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!

வாழ்க தமிழ் மொழியே!

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து

வளர்மொழி வாழியவே

கூற்று : (1) தமிழை வாழ்த்தி பாடப்பட்ட பாடல்

(2) பாரதியார் கவிதைகள் என்னும் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது

(3) இதனைப் பாடியவர் பாரதிதாசன்

(A) கூற்று (1), (2), (3) சரி

(B) கூற்று (1), (2), (3) தவறு

(C) கூற்று (3) சரி, (1), (2) தவறு

(D) கூற்று (1), (2) சரி (3) தவறு

(E) விடை தெரியவில்லை

38. பொருத்தமான பொருளைத் தெரிவு செய்தல்.

| சொல் | பொருள் |
|---|---|
| (a) விசும்பு | 1. சிறப்பு |
| (b) ஊழி | 2. முறை |
| (c) ஊழ் | 3. வானம் |
| (d) பீடு | 4. யுகம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 1 | 2 | 4 | 3 |

(E) விடை தெரியவில்லை

39. சொல்லுக்கானப் பொருளை தேர்ந்தெடுத்து எழுதுக.

நுணங்கிய கேள்வியர்

(A) கேள்விக்கு விடை அறிந்தவர்
(B) நுட்பமான கேள்வியறிவு உடையவர்
(C) மெத்த படித்த கல்வியாளர்
(D) காது கேட்கும் திறன் இல்லாதோர்
(E) விடை தெரியவில்லை

40. கீழ்காணும் சொல்லுக்கானப் பொருளைத் தேர்ந்தெடு.

பேணாமை

(A) பாதுகாத்தல்
(B) பாதுகாக்காமை
(C) பேணுதல்
(D) பேணிக்காத்தல்
(E) விடை தெரியவில்லை

41. பொருத்தமான பொருளைத் தேர்வு செய்க.

செவிச்செல்வம்

(A) செவித்திறன்
(B) கேட்கும் சக்தி
(C) கேட்பதால் பெறும் அறிவு
(D) அறிவு அற்றங்காக்கும் கருவி
(E) விடை தெரியவில்லை

42. சரியான தொடரைக் கண்டறிக :

(A) கந்தனும் வள்ளியும் வந்தான்

(B) நல்ல மாணவர் காலையில் படிப்பான்

(C) இவன் நேற்று வந்தவனல்லன்

(D) நாளை நான் வருகிறேன்

(E) விடை தெரியவில்லை

43. சரியான தொடரைத் தேர்ந்தெடுக்க.

(A) நான் எழுதுவதோடு இன்று இலக்கிய மேடைகளிலும் இதழ்களில் பேசுகிறேன்

(B) இன்று நான் இதழ்களில் எழுதுவதோடு இலக்கிய மேடைகளிலும் பேசுகிறேன்

(C) இலக்கிய மேடைகளிலும் இன்று எழுதுவதோடு நான் இதழ்களில் பேசுகிறேன்

(D) இதழ்களில் பேசுகிறேன் நான் இன்று இலக்கிய மேடைகளிலும் எழுதுவதோடு

(E) விடை தெரியவில்லை

44. சரியான தொடரைக் கண்டறிக :

(A) ஒரு ஊர் ஓர் கடல்

(B) ஒரு ஊர் ஒரு கடல்

(C) ஓர் ஊர் ஒரு கடல்

(D) ஓர் ஊர் ஓர் கடல்

(E) விடை தெரியவில்லை

45. பிழை திருத்துக – சரியான எண்ணடையைத் தேர்வு செய்க.

இரண்டு + ஆண்டு

(A) இரண்டு ஆண்டு

(B) இரு ஆண்டு

(C) ஈராண்டு

(D) மூன்றும் சரி

(E) விடை தெரியவில்லை

கீழ்க்கண்ட பத்தியினைப் படித்து வினாவிற்கான சரியான விடையைத் தேர்ந்தெடு.

கப்பல் பல்வேறு வகையான உறுப்புகளை உடையது, எரா, பருமல் வங்கு, கூம்பு, பாய்மரம், சுக்கான், நங்கூரம் போன்றவை கப்பல் உறுப்புகளுள் சிலவாகும். கப்பலின் முதன்மையாகிய உறுப்பாகிய அடிமரம் 'எரா' எனப்படும். குறுக்கு மரத்தை பருமல் என்பர். கப்பலை செலுத்துவதற்கும், உரிய திசையில் திருப்பதற்கும் பயன்படும் முதன்மையான கருவி 'சுக்கான்' எனப்படும். கப்பல் கட்டும் கலைஞர்கள் 'கம்மியர்' என்றழைக்கப்படுகின்றனர். பாய்மரக் கப்பலின் பாய், கயிறு ஆகியவற்றில் பழுது ஏற்படும் பொழுது அவற்றை மரப்பிசின் கொண்டு இணைத்தனர் என்று பரிபாடல் கூறுகிறது.

46. கப்பல் கட்டும் கலைஞர்கள் ———— என்றழைக்கப்படுகின்றனர்.

(A) மாலுமி
(B) கம்மியர்
(C) கண்ணடை
(D) தச்சர்
(E) விடை தெரியவில்லை

47. கப்பலின் முதன்மை உறுப்பு எது?

(A) எரா
(B) வங்கு
(C) கூம்பு
(D) பருமல்
(E) விடை தெரியவில்லை

48. பருமல் எனப்படுவது யாது?

(A) அடிமரம்
(B) குறுக்குமரம்
(C) பாய்மரம்
(D) நங்கூரம்
(E) விடை தெரியவில்லை

49. கப்பலை உரிய திசையில் செலுத்த பயன்படும் கருவி யாது?

(A) சக்கரம்
(B) சுக்கான்
(C) கைப்பிடி
(D) ஒலிப்பான்
(E) விடை தெரியவில்லை

50. பாய்மரக்கப்பலில் பாய், கயிற்றில் ஏற்படும் பழுதினை சரிசெய்யும் பொருளை எழுது.

(A) மரப்பட்டை
(B) அடிமரம்
(C) இரும்புப்பட்டை
(D) மரப்பிசின்
(E) விடை தெரியவில்லை

51. 'எற்பாடு' – பிரித்து எழுதுக.

(A) எல் + பாடு
(B) எற் + பாடு
(C) எழு + பாடு
(D) எழுமை + பாடு
(E) விடை தெரியவில்லை

52. நமனில்லை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.

(A) நம் + இல்லை
(B) நமது + இல்லை
(C) நமன் + நில்லை
(D) நமன் + இல்லை
(E) விடை தெரியவில்லை

53. நீலம் + வான் – சேர்த்து எழுதுக.

(A) நீலம்வான்
(B) நீளம்வான்
(C) நீலவ்வான்
(D) நீலவான்
(E) விடை தெரியவில்லை

54. ஓடை + எல்லாம் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்.

(A) ஓடைஎல்லாம்
(B) ஓடையெல்லாம்
(C) ஓட்டையெல்லாம்
(D) ஓடெல்லாம்
(E) விடை தெரியவில்லை

55. பிரித்து எழுதுக :

ஆற்றுணா

(A) ஆற்று + உணா
(B) ஆற்று + உண்ணா
(C) ஆறு + உணா
(D) ஆறு + உண்ணா
(E) விடை தெரியவில்லை

56. பொருந்தா இணையைக் கண்டறிக.

(A) சிலம்பு – காலில் அணிவது

(B) சூழி – நெற்றியில் அணிவது

(C) குழை – காதில் அணிவது

(D) அரைநாண் – இடையில் அணிவது

(E) விடை தெரியவில்லை

57. பொருந்தா இணையைக் கண்டறிக.

(A) அள்ளல் – அள்ளுதல்

(B) வெரீஇ – அஞ்சி

(C) நந்து – சங்கு

(D) முத்தம் – முத்து

(E) விடை தெரியவில்லை

58. இதில் தவறான இணை எது?

(A) பொக்கிஷம் – செல்வம்

(B) சாஸ்தி – மிகுதி

(C) விஸ்தாரம் – பரப்புதல்

(D) சிங்காரம் – அழகு

(E) விடை தெரியவில்லை

59. கீழ்க்கண்டவற்றுள் பொருந்தாதவற்றைக் கண்டறிக.

(A) சப்பாத்திக் கள்ளி, தாழை – இலை

(B) கமுகு (பாக்கு) – கூந்தல்

(C) நெல், வரகு – தாள்

(D) கரும்பு, நாணல் – தோகை

(E) விடை தெரியவில்லை

60. சந்திப் பிழை :

கதையை படித்தேன்

(A) கதை படித்தேன்
(B) கதையைப் படித்தேன்
(C) கதையில் படித்தேன்
(D) கதையால் படித்தேன்
(E) விடை தெரியவில்லை

61. 'புலிக்குட்டி' என்பதில் உள்ள வழுவை நீக்குக.

(A) புலிப்பறழ்
(B) புலிக்கன்று
(C) புலிக்குருளை
(D) புலிப்பிள்ளை
(E) விடை தெரியவில்லை

62. மரபுப் பிழையற்ற தொடரைத் தேர்ந்தெடு.

(A) சிங்கப்பறழ்
(B) சிங்கக்குட்டி
(C) சிங்கக்குருளை
(D) சிங்கக்கன்று
(E) விடை தெரியவில்லை

63. சொல்லை இணைத்துப் புதிய சொல் உருவாக்குக.

நெல் ————————

(A) குருத்து
(B) நாற்று
(C) தளிர்
(D) கொழுந்து
(E) விடை தெரியவில்லை

64. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை அறிக.

(A) Homograph – மெய்யெழுத்து
(B) Consonant – ஒப்பெழுத்து
(C) Monolingual – ஒருமொழி
(D) Discussion – உரையாடல்
(E) விடை தெரியவில்லை

65. 'கற்றான்' – என்பதன் வேர்ச்சொல் அறிக.

(A) கல்
(B) கற்ற
(C) கற்று
(D) கற்றா
(E) விடை தெரியவில்லை

66. வேர்ச்சொல் காண்க – தந்தான்

(A) தந்த
(B) தந்து
(C) தர
(D) தா
(E) விடை தெரியவில்லை

67. வேர்ச்சொல்லில் தொழிற்பெயர் காண்க.

"ஓடு"

(A) ஓடுதல்
(B) ஓடிய
(C) ஓடியவன்
(D) ஓடி
(E) விடை தெரியவில்லை

68. வேர்ச்சொல்லை வினையெச்சமாக மாற்றுக :

"ஓடு"

(A) ஓடியவன்
(B) ஓடிய
(C) ஓடுதல்
(D) ஓடி
(E) விடை தெரியவில்லை

69. அகர வரிசைப்படி சொற்களை சீர்செய்தல்

ஒழுக்கம், உயிர், ஆடு, எளிமை, அன்பு, இரக்கம், ஓசை, ஐந்து, ஈதல், ஊக்கம், ஏது, ஔவை

(A) அன்பு, ஆடு, இரக்கம், ஈதல், உயிர், ஊக்கம், எளிமை, ஏது, ஐந்து, ஒழுக்கம், ஓசை, ஔவை
(B) இரக்கம், உயிர், அன்பு, ஆடு, ஈதல், எளிமை, ஔவை, ஐந்து, ஓசை, ஊக்கம், ஏது, ஒழுக்கம்
(C) உயிர், ஊக்கம், எளிமை, ஏது, அன்பு, ஆடு, இரக்கம், ஈதல், ஔவை, ஐந்து, ஒழுக்கம், ஓசை
(D) எளிமை, ஏது, அன்பு, இரக்கம், ஆடு, ஈதல், ஊக்கம், ஒழுக்கம், ஐந்து, ஓசை, ஔவை, உயிர்
(E) விடை தெரியவில்லை

70. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க.

(A) குருத்து, கொழுந்தாடை, கவை, கைம்பெண்

(B) கவை, குருத்து, கொழுந்தாடை, கைம்பெண்

(C) கைம்பெண், கவை, குருத்து, கொழுந்தாடை

(D) கொழுந்தாடை, கைம்பெண், கவை, குருத்து

(E) விடை தெரியவில்லை

71. அகர வரிசைப்படுத்துக.

எழுத்து, இரண்டல்ல, உரைநடை, ஐயம்

(A) உரைநடை, எழுத்து, ஐயம், இரண்டல்ல

(B) ஐயம், எழுத்து, உரைநடை, இரண்டல்ல

(C) இரண்டல்ல, உரைநடை, எழுத்து, ஐயம்

(D) எழுத்து, உரைநடை, ஐயம், இரண்டல்ல

(E) விடை தெரியவில்லை

72. சொற்களை ஒழுங்குப்படுத்தி சொற்றொடராக்குதல்.

(A) பரணி பாடும் இலக்கியம் பகைவரை – வென்றதை ஆகும்

(B) பகைவரை வென்றதை இலக்கியம் – பாடும் பரணி ஆகும்

(C) பரணி பாடும் பகைவரை வென்ற இலக்கியம் ஆகும்

(D) பகைவரை வென்றதைப் பாடும் இலக்கியம் பரணி ஆகும்

(E) விடை தெரியவில்லை

73. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குதல்.

(A) நாட்டுப்புறப்பாடல்கள் அறிதல் வழி மக்களின் உணர்வு

(B) நாட்டுப்புறப்பாடல்கள் வழி மக்களின் உணர்வுகளை அறிதல்

(C) மக்களின் உணர்வுகளை அறிதல் நாட்டுப்புறப்பாடல்

(D) மக்களின் உணர்வுகளை அறிதல் வழி நாட்டுப்புறப்பாடல்

(E) விடை தெரியவில்லை

74. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுதல்.

அப்துல் நேற்று வந்தான்

(A) தன்வினைத் தொடர்
(B) உடன்பாட்டு வினைத்தொடர்
(C) பிறவினைத் தொடர்
(D) செயப்பாட்டு வினைத்தொடர்
(E) விடை தெரியவில்லை

75. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுதல்.

அப்துல் நேற்று வருவித்தான்

(A) கட்டளைத் தொடர்
(B) எதிர்மறை வினைத்தொடர்
(C) பிறவினைத்தொடர்
(D) தன்வினைத்தொடர்
(E) விடை தெரியவில்லை

76. "மழை காணாப் பயிர் போல" – உவமை கூறும் பொருள் தெளிக.

(A) சோகம்
(B) அழுகை
(C) உவகை
(D) சிரிப்பு
(E) விடை தெரியவில்லை

77. "குன்றேறி யானைப்போர் கண்டற்றால்" – உவமை கூறும் பொருள் தெளிக.

(A) பயம்
(B) பாதுகாப்பு
(C) மலை
(D) சண்டை
(E) விடை தெரியவில்லை

78. சரியான விடையை கண்டறி.

(A) Guild – பாசனம்
(B) Patent – வணிகம்
(C) Irrigation – காப்புரிமை
(D) Document – ஆவணம்
(E) விடை தெரியவில்லை

79. ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுதுக :

சைதாப்பேட்டை என்பதன் மரூஉ.

(A) சைதாப்பூர்
(B) சைதாப்பேட்டை
(C) சைதன்யம்
(D) சைதை
(E) விடை தெரியவில்லை

80. ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுதுக :

மயிலாப்பூர் என்பதன் மரூஉ.

(A) மயிலை
(B) மந்தைவெளி
(C) மயிலாப்பூர்
(D) மயில் பட்டினம்
(E) விடை தெரியவில்லை

81. நிறுத்தற்குறிகள் இரட்டை மேற்கோள் குறி :

திரு.வி.க. மாணவர்களிடம் தமிழ்க் காவியங்களைப் படியுங்கள். இன்பம் நுகருங்கள் என்று கூறினார்

(A) திரு.வி.க மாணவர்களிடம், "தமிழ்க் காவியங்களைப் படியுங்கள். இன்பம் நுகருங்கள்" என்று கூறினார்
(B) "திரு.வி.க" மாணவர்களிடம் தமிழ்க் காவியங்களைப் படியுங்கள். இன்பம் நுகருங்கள் என்று கூறினார்
(C) திரு.வி.க மாணவர்களிடம் தமிழ்க் காவியங்களைப் படியுங்கள் "இன்பம்" நுகருங்கள் என்று கூறினார்
(D) திரு.வி.க மாணவர்களிடம் தமிழ்க் காவியங்களைப் படியுங்கள் இன்பம் "நுகருங்கள்" என்று கூறினார்
(E) விடை தெரியவில்லை

82. சரியான நிறுத்தற்குறியிட்ட தொடரினை தேர்ந்தெடு.

(A) கு. ஆண்டாள், எண் 45, காமராசர் தெரு, திருவள்ளூர்.
(B) கு. ஆண்டாள், எண் 45 காமராசர் தெரு, திருவள்ளூர்.
(C) கு. ஆண்டாள், எண் 45, காமராசர் தெரு, திருவள்ளூர்
(D) கு. ஆண்டாள் எண் 45 காமராசர் தெரு திருவள்ளூர்.
(E) விடை தெரியவில்லை

83. தவறான இணையை தேர்ந்தெடு.

(A) பாம்பு வீட்டிற்குள் புகுந்தது (எதிர்காலம்)

(B) இன்று வீட்டிற்குள் புகுகிறான் (நிகழ்காலம்)

(C) காலையில் பள்ளிக்குப் புகுவான் (எதிர்காலம்)

(D) நேற்று பள்ளிக்குப் புகுந்தான் (இறந்த காலம்)

(E) விடை தெரியவில்லை

84. இலக்கண முறைப்படி இவற்றுள் சரியான காலத்தைக் காட்டுவது எது?

(A) நேற்று வருவான்

(B) நேற்று வருகிறான்

(C) நேற்று வரப்போகிறான்

(D) நேற்று வந்தான்

(E) விடை தெரியவில்லை

85. சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு :

பொய்கையாழ்வார் ———— பாமாலை சூட்டுகிறார்?

(A) எதற்காக

(B) என்ன

(C) எவற்றை

(D) எங்கு

(E) விடை தெரியவில்லை

86. சரியான சொல் எது?

பெண்ணுக்குரிய கடமை ————.

(A) யார்?

(B) யாது?

(C) ஏன்?

(D) எப்படி?

(E) விடை தெரியவில்லை

87. இதில் தவறான இணை எது?

(A) செல்வி + ஆடினாள் – மெய்யீறு + மெய்ம்முதல்

(B) கோல் + ஆட்டம் – மெய்யீறு + உயிர்முதல்

(C) பாலை + திணை – உயிரீறு + மெய்ம்முதல்

(D) மண் + சரிந்தது – மெய்யீறு + மெய்ம்முதல்

(E) விடை தெரியவில்லை

88. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | ஆறு | 1. | விரைவாக நடத்தல், கூரையோடு |
| (b) | திங்கள் | 2. | வழி, நதி |
| (c) | ஓடு | 3. | சிரிப்பு, அணிகலன் |
| (d) | நகை | 4. | மதி, மாதம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 2 | 4 | 1 | 3 |
| (D) | 1 | 4 | 2 | 3 |

(E) விடை தெரியவில்லை

89. இரு பொருள் தருக –

(வரி)

(A) வரிசை, எழுதுதல்

(B) அரசுக்குச் செலுத்துவது, வரிசை

(C) அரசுக்குச் செலுத்துவது, எழுதுதல்

(D) வடிவம், வரிசை

(E) விடை தெரியவில்லை

90. "வெறிகமழ் கழனியுள் உழுநர் வெள்ளமே" – இவ்வடி உணர்த்தும் பொருள் அறிக.

(A) மணம் கமழும் வயலில் உழவர் வெள்ளமாய் உழுதிருந்தனர்

(B) வறண்ட வயலில் உழவர் வெள்ளமாய் அமர்ந்திருந்தனர்

(C) செறிவான வயலில் உழவர் வெள்ளமாய்க் கூடியிருந்தனர்

(D) பசுமையான வயலில் உழவர் வெள்ளமாய் நிறைந்திருந்தனர்

(E) விடை தெரியவில்லை

91. கூற்று காரணம் – சரியா? தவறா?

(1) சுரதாவின் இயற்பெயர் இராசகோபாலன்.

(2) தம் பெயரைச் சுப்புரத்தினதாசன் என்று மாற்றிக் கொண்டார்.

(3) இவரை உவமைக் கவிஞர் என்றும் அழைப்பர்.

(4) இவர் பாடலில் உவமைகளைப் பயன்படுத்தமாட்டார்.

(A) கூற்று நான்கும் சரி

(B) கூற்று நான்கும் தவறு

(C) கூற்று (1), (2), (3) சரி (4) மட்டும் தவறு

(D) கூற்று (1), (2), (4) சரி (3) மட்டும் தவறு

(E) விடை தெரியவில்லை

92. ஆங்கிலச் சொல்லுக்கு இணையான கலைச் சொல்லைத் தெரிவு செய்க.

எப்பிக் லிட்ரேச்சர் (Epic Literature) என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையான கலைச் சொல்லைத் தெரிவு செய்க.

(A) செவ்விலக்கியம்

(B) காப்பிய இலக்கியம்

(C) பக்தி இலக்கியம்

(D) பண்டைய இலக்கியம்

(E) விடை தெரியவில்லை

93. Forestry – என்ற பிறமொழிச் சொல்லுக்கான தமிழ்ச் சொல்.

(A) வன விலங்குகள்

(B) வனப்பாதுகாவலர்

(C) வனவியல்

(D) காடுகள்

(E) விடை தெரியவில்லை

94. கீழ்காணும் சொல்லுக்கானப் பொருளை தெரிவு செய்க.

பசுமண் கலம்

(A) சுடாத மண்கலம்
(B) சுட்டப் பானை
(C) சுடுகின்ற கலங்கள்
(D) மண்பாண்டக் கலை
(E) விடை தெரியவில்லை

95. 'கட்டுரையைப் படித்தான்' இது எவ்வகைத் தொடர்?

(A) பெயரெச்சத் தொடர்
(B) வினையெச்சத் தொடர்
(C) விளித் தொடர்
(D) வேற்றுமைத் தொடர்
(E) விடை தெரியவில்லை

96. 'வாழையிலை விருந்து விழா'வை ஆண்டுதோறும் கொண்டாடும் நாடு எது?

(A) இந்தியா
(B) ரஷ்யா
(C) அமெரிக்கா
(D) இலங்கை
(E) விடை தெரியவில்லை

97. சரியான கூட்டப் பெயர்களைப் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | பழம் | 1. | கட்டு |
| (b) | எறும்பு | 2. | குலை |
| (c) | வாழை | 3. | சாரை |
| (d) | புல் | 4. | தோப்பு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 1 | 4 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 2 | 4 | 3 | 1 |
| (D) | 2 | 4 | 1 | 3 |

(E) விடை தெரியவில்லை

98. சொல் – பொருள் – பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | செறு | 1. | பனையோலைப் பெட்டி |
| (b) | வித்து | 2. | புதுவருவாய் |
| (c) | யாணர் | 3. | விதை |
| (d) | வட்டி | 4. | வயல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 3 | 1 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 1 | 3 | 4 | 2 |

(E) விடை தெரியவில்லை

99. சொல் – பொருள் பொருத்துக.

இயற்கை வங்கூழ் ஆட்ட

(A) நிலம்

(B) நீர்

(C) காற்று

(D) நெருப்பு

(E) விடை தெரியவில்லை

100. ஒருமைச் சொல் – இது பழம்.

(A) அன்று

(B) அல்ல

(C) அவை

(D) அவைகள்

(E) விடை தெரியவில்லை

# பகுதி-அ (தமிழ் தகுதி & மதிப்பீட்டுத் தேர்வு)

## Part-A (Tamil Eligibility-Cum-Scoring Test)

வினாக்கள் : 1–100 மொத்த மதிப்பெண்கள் : 150

**Questions : 1–100** **Total Marks : 150**

---

1. சேர்த்தெழுதுக – ஓடை + ஆட

(A) ஓடை ஆட (B) ஓடையாட

(C) ஓடையோட (D) ஓடைவாட

(E) விடை தெரியவில்லை

2. சேர்த்தெழுதுக – வாசல் + அலங்காரம்

(A) வாசல் அலங்காரம் (B) வாசலங்காரம்

(C) வாசலலங்காரம் (D) வாலங்காரம்

(E) விடை தெரியவில்லை

3. ஈதல் என்பதன் எதிர்ச்சொல்

(A) கொடுத்தல் (B) ஏற்றல்

(C) அளித்தல் (D) வழங்குதல்

(E) விடை தெரியவில்லை

4. எதிர்ச்சொல் எடுத்தெழுதுதல்

"நீக்குதல்" எதிர்ச்சொல் தருக

(A) போக்குதல் (B) தள்ளுதல்

(C) அழித்தல் (D) சேர்த்தல்

(E) விடை தெரியவில்லை

5. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக

(A) வியத்தல் (B) வாழ்க்கை

(C) ஆளல் (D) பாடியவள்

(E) விடை தெரியவில்லை

6. பொருந்தாதச் சொல்லைக் கண்டறிக.

(A) அன்பு
(B) பஞ்சு
(C) அஃது
(D) மண்டு
(E) விடை தெரியவில்லை

7. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக.

பூவின் நிலையைக் குறிக்காத ஒரு சொல்லைத் தேர்ந்தெடு

(A) அரும்பு
(B) வீ
(C) போது
(D) கொழுந்து
(E) விடை தெரியவில்லை

8. சந்திப் பிழையைச் சரிபார்த்து எழுதுக

(A) சிற்பகலை கூடமாக திகழ்கிறது
(B) சிற்பக்கலை கூடமாக திகழ்கிறது
(C) சிற்பக்கலைக் கூடமாகத் திகழ்கிறது
(D) சிற்பக்கலைக் கூடமாக திகழ்கிறது
(E) விடை தெரியவில்லை

9. மரபுப் பிழையற்றதை எடுத்து எழுதுக

(A) தென்னந்தோப்பு
(B) தென்னந்தோட்டம்
(C) தென்னைவயல்
(D) தென்னங்காடு
(E) விடை தெரியவில்லை

10. வழுவற்ற தொடர் எது?

(A) நேற்று வருவான்
(B) நேற்று வந்தான்
(C) நேற்று வருகிறான்
(D) நேற்று வா
(E) விடை தெரியவில்லை

11. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை அறிக.

| | | | |
|---|---|---|---|
| (a) | Excavation | 1. | பொறிப்பு |
| (b) | Epigraphy | 2. | அகழாய்வு |
| (c) | Herostone | 3. | கல்வெட்டியல் |
| (d) | Inscription | 4. | நடுகல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 3 | 2 | 1 | 4 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

(E) விடை தெரியவில்லை

12. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை அறிக

| | | | |
|---|---|---|---|
| (A) | Literacy | – | கல்வியறிவு |
| (B) | Guidance | – | நீதி |
| (C) | Child Labour | – | தொழில் வரி |
| (D) | Discipline | – | வழிகாட்டி |

(E) விடை தெரியவில்லை

13. ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான பொருளை எழுதுக.

(A) என் வீட்டுத் தோட்டத்தில் மளர்கள் மனம் வீசின

(B) என் வீட்டுத் தோட்டத்தில் மலர்கள் மணம் வீசின

(C) என் வீட்டுத் தோட்டத்தில் மலர்கள் மனம் வீசின

(D) என் வீட்டுத் தோட்டத்தில் மலர்கள் மணம் வீசிந

(E) விடை தெரியவில்லை

14. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைக் கண்டறிக

| | பரவை | | பறவை |
|---|---|---|---|
| (A) | பரவுதல் | – | பறத்தல் |
| (B) | ஆழி | – | இறகு |
| (C) | பரப்புதல் | – | பெயர்ச்சொல் |
| (D) | கடல் | – | புள் |

(E) விடை தெரியவில்லை

15. கொடுக்கப்பட்ட வேர்ச் சொல்லின் வினையாலணையும் பெயரைக் கண்டறிக.

கொடு

(A) கொடுத்தான்
(B) கொடு
(C) கொடுத்தோர்
(D) கொடுத்து
(E) விடை தெரியவில்லை

16. சரியான அகர வரிசையை எழுதுக.

(A) சொம்பு, செம்மை, சாட்சி , சரம்
(B) செம்மை, சாட்சி, சரம், சொம்பு
(C) சாட்சி, சரம், செம்மை, சொம்பு
(D) சரம், சாட்சி, செம்மை, சொம்பு
(E) விடை தெரியவில்லை

17. சரியான அகர வரிசையை எழுதுக.

(A) குருவி, கோட்டை, காட்சி, கரம்
(B) கரம், காட்சி, குருவி, கோட்டை
(C) கோட்டை, குருவி, காட்சி, கரம்
(D) காட்சி, கரம், குருவி, கோட்டை
(E) விடை தெரியவில்லை

18. அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்க.

(A) அண்ணன் தம்பி, தாய்சேய், வீசுதென்றல், செங்காந்தள், கொல்களிறு
(B) தாய்சேய், வீசுதென்றல், செங்காந்தள், அண்ணன் தம்பி , கொல்களிறு
(C) அண்ணன் தம்பி, வீசுதென்றல், தாய்சேய், செங்காந்தள், கொல்களிறு
(D) கொல்களிறு, அண்ணன் தம்பி, தாய்சேய், வீசுதென்றல், செங்காந்தள், கொல்களிறு
(E) விடை தெரியவில்லை

19. சொற்களை ஒழுங்குப்படுத்தி சொற்றொடராக்குதல்

(A) ஞாயிறு உதிக்கின்ற திசைக்குப் பெயர் கிழக்கு

(B) கிழக்கு திசைக்குப் பெயர் உதிக்கின்ற ஞாயிறு

(C) உதிக்கின்ற கிழக்குத்திசை பெயர் ஞாயிறு

(D) ஞாயிறு உதிக்கின்ற பெயர் கிழக்குத் திசை

(E) விடை தெரியவில்லை

20. சொற்களை ஒழுங்குப்படுத்தி சொற்றொடராக்குதல்

(A) உலகம் தமிழ் மொழி வாழட்டும் – உள்ள வரையிலும்

(B) உலகம் வாழட்டும் உள்ளவரையிலும் தமிழ் மொழி

(C) உலகம் உள்ள வரையிலும் தமிழ்மொழி வாழட்டும்

(D) உலகம் தமிழ் மொழி உள்ளவரையிலும் வாழட்டும்

(E) விடை தெரியவில்லை

21. 'கடைக்குப் போவாயா?' எனும் வினாவிற்குரிய விடைகளை பொருத்துக :

| விடை வகை | சான்று |
|---|---|
| (a) உற்றது உரைத்தல் விடை | 1. நீ செல் |
| (b) மறை விடை | 2. போவேன் |
| (c) நேர் விடை | 3. கால் வலிக்கிறது |
| (d) ஏவல் விடை | 4. போகமாட்டேன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 2 | 4 | 1 | 3 |

(E) விடை தெரியவில்லை

22. இருவினைகளின் பொருள் வேறுபாடு அறிதல் :

சரியானத் தொடரைத் தேர்ந்தெடு :

விரிந்து – விரித்து

(A) காற்று வீசியது, பூக்கள் விழுந்தன, மயில் விரித்தது

(B) மழைக் காற்று வீசியதால், பூவின் இதழ்கள் விரிந்தன, மயில் தோகையை விரித்தது

(C) மயில் தோகையை விரித்ததால் பூக்கள் விரிந்தன

(D) பூக்கள் விரிந்ததால் மயில்கள் ஆடியது

(E) விடை தெரியவில்லை

23. "அத்தி பூத்தாற்போல" – உவமை கூறும் பொருள் தெளிக.

(A) வெகுமானம்

(B) செயற்கரிய செயல்

(C) அரியநிகழ்வு

(D) துன்பச் செயல்

(E) விடை தெரியவில்லை

24. மலரும் மணமும் போல – உவமை கூறும் பொருள் தெளிக.

(A) நட்பு

(B) பகைமை

(C) வேற்றுமை

(D) ஒற்றுமை

(E) விடை தெரியவில்லை

25. SUPER COMPUTER என்பதன் கலைச்சொல் யாது?

(A) மடிக்கணினி

(B) கணினி அறிவியல்

(C) மீத்திறன் கணினி

(D) கணினி திறன்

(E) விடை தெரியவில்லை

26. Anticlockwise என்பதன் கலைச்சொல் யாது?

(A) வலஞ்சுழி

(B) இடஞ்சுழி

(C) முன்சுழி

(D) பின்சுழி

(E) விடை தெரியவில்லை

27. நிறுத்தற்குறி அறிக (எது சரியானது)?

(A) பாவை அண்ணனைப், பார்த்து "அண்ணா எனக்கு ! ஓர் உதவி செய்வாயா என்று கேட்டாள்.

(B) பாவை அண்ணனைப் பார்த்து அண்ணா? எனக்கு ஓர் உதவி செய்வாயா? என்று கேட்டாள்.

(C) பாவை அண்ணனைப் பார்த்து, "அண்ணா எனக்கு ஓர் உதவி செய்வாயா?" என்று கேட்டாள்.

(D) பாவை அண்ணனைப் "பார்த்து அண்ணா ! எனக்கு ஓர் உதவி செய்வாயா என்று கேட்டாள்.

(E) விடை தெரியவில்லை

28. நிறுத்தற் குறிகள் அறிக.

சரியாக நிறுத்தற்குறியிட்டத் தொடரைத் தேர்ந்தெடு.

(A) "உங்கள் தந்தையும் அரசரா !" என்றாள் கயல்

(B) "உங்கள் தந்தையும் அரசரா"? என்றாள் கயல்.

(C) உங்கள் தந்தையும் அரசரா? என்றாள் கயல்.

(D) உங்கள் தந்தையும், அரசரா ! என்றாள் கயல்.

(E) விடை தெரியவில்லை

29. பேச்சு வழக்கு-எழுத்து வழக்கு.

சரியான எழுத்து வழக்கைத் தேர்ந்தெடு.

(A) வரிசையாக நில்

(B) வரிசையாக நில்லு

(C) வரிசையாக நின்னுக்கோ

(D) வரிசையாக நின்னிட்டியா

(E) விடை தெரியவில்லை

30. பேச்சு வழக்குத் தொடருக்கு இணையான எழுத்து வழக்குத் தொடரினை எழுது.

காலை உணவை சாப்ட்டியா?

(A) காலை உணவை சாப்டியா?

(B) காலை உணவைச் சாப்பிட்டாயா?

(C) காலை உணவை சாப்டாச்சா?

(D) காலை உணவு ஆச்சுதா?

(E) விடை தெரியவில்லை

31. சரியான வினாச்சொல்லைத் தேர்ந்தெடுக்க.

திருக்குறளில் உள்ள குறட்பாக்கள் ————————?

(A) எவ்வளவு
(B) எத்தனை
(C) யாவை
(D) எவை
(E) விடை தெரியவில்லை

32. சரியான இணைப்புச் சொல் அமைந்த வாக்கியத்தைக் கண்டறிக.

(A) நேற்று கனமழை பொழிந்தது. ஏனெனில் ஏரி, குளங்கள் நிரம்பின.
(B) நேற்று கனமழை பொழிந்தது. அதனால் ஏரி குளங்கள் நிரம்பின.
(C) நேற்று கனமழை பொழிந்தது. அதுபோல ஏரி குளங்கள் நிரம்பின.
(D) நேற்று கனமழை பொழிந்தது. இருந்தபோதிலும் ஏரி குளங்கள் நிரம்பின.
(E) விடை தெரியவில்லை

33. சரியான மரபுத் தொடரைத் தேர்க.

(A) கோழிக்குஞ்சுகளைப் பிடிக்கப் பூனைக் குருளைகள் ஓடின
(B) கோழிக்குஞ்சுகளைப் பிடிக்கப் பூனைக் குட்டிகள் ஓடின
(C) கோழிப்பேத்தைகளைப் பிடிக்கப் பூனைக்குட்டிகள் ஓடின
(D) கோழிப்பேத்தைகளைப் பிடிக்கப் பூனைக் குருளைகள் ஓடின
(E) விடை தெரியவில்லை

34. தென்னிந்தியாவின் அடையாளச் சின்னமாகக் காங்கேயம் மாடுகள் போற்றப்படுகின்றன. எவ்வகைத் தொடர்?

(A) வினாத் தொடர்
(B) கட்டளைத் தொடர்
(C) செய்தித் தொடர்
(D) உணர்ச்சித் தொடர்
(E) விடை தெரியவில்லை

35. கூற்று– சரியா? தவறா?

(1) தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர் டாக்டர் முத்துலட்சுமி அம்மையார்.

(2) 1952 இல் அடையாறு புற்றுநோய் மருத்துவமனையை நிறுவினார்.

(3) சென்னை மாநகராட்சியின் மேயராக இருந்தார்.

(A) கூற்று 1, 2, 3 தவறு

(B) கூற்று 1, 2 சரி 3 மட்டும் தவறு

(C) கூற்று 1, 2, 3 சரி

(D) கூற்று 1 சரி, 2, 3 தவறு

(E) விடை தெரியவில்லை

36. சரியான கலைச் சொல்லைத் தெரிவு செய்க.

Nanotechnology என்ற ஆங்கிலச் சொல்லுக்குச் சரியான கலைச் சொல்லைத் தெரிவு செய்க.

(A) நுண் உயிரித் தொழில் நுட்பம்

(B) உயிரித் தொழில் நுட்பம்

(C) விண்வெளித் தொழில் நுட்பம்

(D) மீநுண் தொழில் நுட்பம்

(E) விடை தெரியவில்லை

37. சரியான கலைச்சொல்லைத் தெரிவு செய்க.

Intellectual என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையான கலைச் சொல்லைத் தெரிவு செய்க.

(A) ஆய்வாளர்

(B) ஆய்வேடு

(C) அறிவாளர்

(D) துப்பறிவாளர்

(E) விடை தெரியவில்லை

38. பொருத்தமான பொருளைத்தெரிவு செய்தல் :

| | | | |
|---|---|---|---|
| (a) | சிறுபஞ்சமூலம் | 1. | காப்பிய இலக்கியம் |
| (b) | குடும்ப விளக்கு | 2. | சங்க இலக்கியம் |
| (c) | சீவக சிந்தாமணி | 3. | அற இலக்கியம் |
| (d) | குறுந்தொகை | 4. | தற்கால இலக்கியம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 2 | 3 | 1 | 4 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

(E) விடை தெரியவில்லை

39. பொருத்தமான பொருளைத் தெரிவு செய்தல் :

| | சொல் | | பொருள் |
|---|---|---|---|
| (a) | மேதி | 1. | குளக்கரை |
| (b) | தரளம் | 2. | எருமைக்கடா |
| (c) | பகடு | 3. | எருமை |
| (d) | கோடு | 4. | முத்து |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 2 | 4 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 4 | 1 | 3 | 2 |
| (D) | 2 | 4 | 1 | 3 |

(E) விடை தெரியவில்லை

40. பிழை திருத்துக - சரியான எண்ணடையைத் தெரிவு செய்க.

ஒன்று + உலகம்

(A) ஓர் உலகம்
(B) ஒரு உலகம்
(C) ஒன்று உலகம்
(D) மூன்றும் சரி
(E) விடை தெரியவில்லை

41. பிழை திருத்துக - சரியான எண்ணடையைத் தெரிவு செய்க

ஒன்று + மரம்

(A) ஒரு மரம்
(B) ஓர் மரம்
(C) ஒன்று மரம்
(D) மூன்றும் சரி
(E) விடை தெரியவில்லை

42. சொல் - பொருள் - பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | கொண்டல் | 1. | மேற்கு |
| (b) | கோடை | 2. | தெற்கு |
| (c) | வாடை | 3. | கிழக்கு |
| (d) | தென்றல் | 4. | வடக்கு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

(E) விடை தெரியவில்லை

கீழ்கண்ட பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி

தமிழர் வளர்த்த நுண்கலைகளில் ஓவியக்கலை முன்னணியில் நிற்கிறது. தமிழ்நாட்டில் சங்ககாலத்திற்கு முன்னரே வரையப்பட்ட ஓவியங்களை கண்ணெழுத்து என்று வழங்கியுள்ளனர். தமிழ் இலக்கியங்களில் எழுத்து என்பதற்கு ஓவியம் எனப்பொருள். இதனைப் பரிபாடல், குறுந்தொகை அடிகள் தெளிவுபடுத்துகின்றன. பழங்கால மக்கள் சித்திர எழுத்துகளால் கருத்துகளைப் புலப்படுத்தினர். அவை மொழிக்குறியீடுகளாக வளர்ந்துள்ளன. நேர்கோடு, கோணக்கோடு, வளைகோடு முதலியவற்றைக் கொண்டு வரையப்பட்டவை கோட்டோவியங்கள் எனப்படும்.

43. எழுத்து என்பதன் பொருள் யாது?

(A) சொல்
(B) ஓவியம்
(C) பதம்
(D) மொழி
(E) விடை தெரியவில்லை

44. கீழ்க்கண்டவற்றுள் நுண்கலை அல்லாதது எது?

(A) ஓவியம்
(B) இசை
(C) அறிவியல்
(D) சிற்பக்கலை
(E) விடை தெரியவில்லை

45. மொழிக்குறியீடுகள் எதிலிருந்து தோன்றின?

(A) ஒலிகள்
(B) ஒளிகள்
(C) எழுத்து
(D) ஓவியம்
(E) விடை தெரியவில்லை

46. கோட்டோவியங்கள் இவற்றுள் எதைக் கொண்டு வரையப்பட்டன?

(A) நேர்கோடு
(B) கோணக்கோடு
(C) வளைகோடு
(D) இவையனைத்தும்
(E) விடை தெரியவில்லை

47. சங்க காலத்தில் ஓவியத்தை எவ்வாறு அழைத்தனர்?

(A) கண்ணெழுத்து
(B) வட்டெழுத்து
(C) ஓவிய எழுத்து
(D) சித்திர எழுத்து
(E) விடை தெரியவில்லை

48. 'இன்மொழி' – பிரித்து எழுதுக.

(A) இன் + மொழி
(B) இ + மொழி
(C) இன்ன + மொழி
(D) இனிமை + மொழி
(E) விடை தெரியவில்லை

49. பிரித்தெழுதுக – 'அன்மொழித்தொகை'

(A) அண்மை + மொழி + தொகை
(B) அல் + மொழி + தொகை
(C) அல் + மொழித்தொகை
(D) அயன்மொழி + தொகை
(E) விடை தெரியவில்லை

50. பிரித்தெழுது – "நன்செய்"

(A) நன் + செய்
(B) நன்று + செய்
(C) நன்மை + செய்
(D) நல் + செய்
(E) விடை தெரியவில்லை

51. பிரித்தெழுது – "அருந்துணை"

(A) அரு + துணை
(B) அருந் + துணை
(C) அருமை + துணை
(D) அருந்து + இணை
(E) விடை தெரியவில்லை

52. பிரித்தெழுதுக – "தேர்ந்தெடுத்து"

(A) தேர்ந் + தெடுத்து
(B) தேர் + எடுத்து
(C) தேர்ந்து + அடுத்து
(D) தேர்ந்து + எடுத்து
(E) விடை தெரியவில்லை

53. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக

(A) பெயரெச்சம்
(B) வினையெச்சம்
(C) வினைமுற்று
(D) முற்றெச்சம்
(E) விடை தெரியவில்லை

54. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக

(A) வெட்சி
(B) நொச்சி
(C) குறிஞ்சி
(D) வஞ்சி
(E) விடை தெரியவில்லை

55. பொருந்தாத இணை எது?

I. விளை – உண்டாக்குதல்
II. விழை – விரும்பு
III. இளை – செடி
IV. இழை – நூல் இழை

(A) I
(B) II
(C) III
(D) IV
(E) விடை தெரியவில்லை

56. பொருந்தாதச் சொல்லைக் கண்டறிக.

(A) பாக்கு
(B) பஞ்சு
(C) பாட்டு
(D) பத்து
(E) விடை தெரியவில்லை

57. சந்திப்பிழையற்ற வாக்கியத்தைக் கண்டறிக

(A) பண்டை தமிழ் நாகரிகம் தனிபெரும் நாகரிகம்

(B) பண்டைத் தமிழ் நாகரிகம் தனிப்பெரும் நாகரிகம்

(C) பண்டைத் தமிழ் நாகரிகம் தனிபெரும் நாகரிகம்

(D) பண்டை தமிழ் நாகரிகம் தனிப்பெரும் நாகரிகம்

(E) விடை தெரியவில்லை

58. பிழை திருத்தம் – வழுவுச் சொற்களை நீக்குதல்

வழூஉச் சொல்லற்ற தொடர் எது?

(A) நீ வந்தேன்

(B) நீ வந்தான்

(C) நீ வந்தாய்

(D) நீ வந்தாள்

(E) விடை தெரியவில்லை

59. பிழை திருத்தம் – பிறமொழிச் சொற்களை நீக்குதல்

பிறமொழிச் சொல் கலவாத தொடரைக் கண்டுபிடி

(A) நாளை பிரதம மந்திரி தமிழகம் வருகிறார்

(B) நல்ல பாம்பிற்கு விடம் அதிகம்

(C) வானத்தில் பறவை பறந்தது

(D) மாலா அலமாரியில் புத்தகத்தை அடுக்கினாள்

(E) விடை தெரியவில்லை

60. சந்திப்பிழை அற்ற வாக்கியங்களைக் கண்டறிக

(A) முதியவருக்குக் கொடுக்கச் சொன்னார்

(B) முதியவருகு கொடுகச் சொன்னார்

(C) முதியவருக்கு கொடுக சொன்னார்

(D) முதியவருக்குக் கொடுகச் சொன்னார்

(E) விடை தெரியவில்லை

61. 'வெய்யோன்' என்பதன் தவறான பொருளைத் தேர்ந்தெடுக்க

(A) பகலவன்
(B) ஆதவன்
(C) ஞாயிறு
(D) நிலவு
(E) விடை தெரியவில்லை

62. ஒரு பொருள் தரும் பல சொற்கள் – அணி

(A) அணிகலன், அழகு
(B) இலக்கணம், அணில்
(C) ஆடை, அணிதல்
(D) நகைகள், அணிதல்
(E) விடை தெரியவில்லை

63. வேர்ச் சொல்லைத் தேர்வு செய்க

"வந்தான்"

(A) வந்த
(B) வ
(C) வந்து
(D) வா
(E) விடை தெரியவில்லை

64. "கண்டார்" – என்பதன் வேர்ச்சொல் கண்டறிக

(A) கண்
(B) கண்ட
(C) காண்
(D) கண்டு
(E) விடை தெரியவில்லை

65. பின்வருவனவற்றுள் ஏவல் வினைமுற்றுச் சொல் எது?

(A) செல்க
(B) ஓடு
(C) வாழிய
(D) வாழ்க
(E) விடை தெரியவில்லை

66. அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்க :

(A) அளபெடுத்தல், ஈதல், இசைநிறை, உரனசைஇ, ஓஒதல் வேண்டும்

(B) அளபெடுத்தல், இசைநிறை, உரனசைஇ, ஈதல், ஓஒதல் வேண்டும்

(C) அளபெடுத்தல், இசைநிறை, ஈதல், உரனசைஇ, ஓஒதல் வேண்டும்

(D) இசைநிறை, அளபெடுத்தல், ஈதல், உரனசைஇ, ஓஒதல் வேண்டும்

(E) விடை தெரியவில்லை

67. அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்க.

(A) உயிரளபெடை, ஒற்றளபெடை, தனிமொழி, தொடர்மொழி, பொதுமொழி

(B) உயிரளபெடை, தனிமொழி, ஒற்றளபெடை, தொடர்மொழி, பொதுமொழி

(C) உயிரளபெடை, ஒற்றளபெடை, தனிமொழி, பொதுமொழி, தொடர்மொழி

(D) ஒற்றளபெடை, தனிமொழி, தொடர்மொழி, உயிரளபெடை, பொதுமொழி

(E) விடை தெரியவில்லை

68. அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்க :

அறிவு, அருள், ஆசை, அச்சம், அன்பு

(A) அச்சம், அன்பு, ஆசை, அருள், அறிவு (B) அச்சம், ஆசை, அன்பு, அருள், அறிவு

(C) அச்சம், அருள், அறிவு, அன்பு, ஆசை (D) அச்சம், அன்பு, அருள், அறிவு, ஆசை

(E) விடை தெரியவில்லை

69. அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்க.

(A) வாழ்த்துதல் விதித்தல் வேண்டல் வைதல்

(B) வைதல் வேண்டல் விதித்தல் வாழ்த்துதல்

(C) வேண்டல் வைதல் விதித்தல் வாழ்த்துதல்

(D) விதித்தல் வாழ்த்துதல் வேண்டல் வைதல்

(E) விடை தெரியவில்லை

70. விடை எத்தனை வகைப்படும்?

(A) ஆறு
(B) எட்டு
(C) நான்கு
(D) ஏழு
(E) விடை தெரியவில்லை

71. விடைக்கேற்ற வினாவை தேர்ந்தெடுக்க :

"ஸ்டீபன் ஹாக்கிங் தற்காலத்தின் ஐன்ஸ்டைன் எனப் புகழப்படுகிறார்".

(A) ஸ்டீபன் ஹாக்கிங் என்பவர் யார்?
(B) ஸ்டீபன் ஹாக்கிங் ஏன் அவ்வாறு அழைக்கப்படுகிறார்?
(C) ஸ்டீபன் ஹாக்கிங் எவ்வாறு புகழப்படுகிறார்?
(D) ஸ்டீபன் ஹாக்கிங் யாரோடு ஒப்பிடப்படுகிறார்?
(E) விடை தெரியவில்லை

72. கீழ்க்காணும் தொடருக்கான வினாவில் தவறானதைத் தேர்ந்தெடு :

தொல்காப்பியத்தைப் படித்துப் படித்து என் தொல்லையெல்லாம் மறந்தேன்.

(A) எதைப் படித்தால் உன் தொல்லை மறக்கும்?
(B) உன் தொல்லை மறக்க எதைப் படிக்க வேண்டும்?
(C) தொல்காப்பியத்தைப் படித்தால் எந்தெந்த தொல்லை மறையும்?
(D) தொல்காப்பியம் படிப்பதன் பயன் என்ன?
(E) விடை தெரியவில்லை

73. இருவினைகளின் பொருள் வேறுபாடு அறிதல் :

சரியான தொடரைத் தேர்ந்தெடு :

சேர்ந்து, சேர்த்து

(A) மாணவர்கள் சேர்ந்து சண்டையிட்டனர்; ஆசிரியர் சேர்த்து வைத்தார்
(B) ஆசிரியர்கள் சேர்த்து மாணவர்கள் சேர்ந்தனர்
(C) மாணவர்கள் சேர்த்து விளையாடி ஆசிரியர்கள் சேர்ந்தனர்
(D) மாணவர்கள் சேராமல் ஆசிரியர் சேர்ந்தார்
(E) விடை தெரியவில்லை

74. விடை வகை.

நீ எழுத வில்லையா? என்ற வினாவிற்குக் கை வலிக்கிறது, என்று உரைப்பது

(A) வெளிப்படை விடை
(B) குறிப்பு விடை
(C) உறுவது கூறல் விடை
(D) உற்றது உரைத்தல் விடை
(E) விடை தெரியவில்லை

75. ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல் கண்டறிக.

அக்ரானமி (Agronomy)

(A) நாட்டுப்புறவியல்
(B) நெற்பயிர்
(C) வேளாண்மை
(D) உழவியல்
(E) விடை தெரியவில்லை

76. பிறமொழிச் சொற்கள் கலவாத தொடரை எடுத்து எழுது.

(A) திருவிழாவிற்கு முக்கியஸ்தர் வருகை புரிந்தார்.
(B) திருவிழாவிற்கு பிரதானமானவர் வருகை புரிந்தார்.
(C) திருவிழாவிற்கு உத்தியோகஸ்தர் வருகை புரிந்தார்.
(D) திருவிழாவிற்கு முதன்மையானவர் வருகை புரிந்தார்.
(E) விடை தெரியவில்லை

77. செங்கற்பட்டு – மரூஉ பெயரை எழுதுக.

(A) செல்கல் பட்டு
(B) செங்கை
(C) செங்கம்
(D) செங்கற்பட்டு தாலுக்கா
(E) விடை தெரியவில்லை

78. ஊர்ப்பெயர்களின் மரூஉ

உதக மண்டலம்

(A) மண்டலம்
(B) உதகை
(C) ஊட்டி
(D) குன்னூர்
(E) விடை தெரியவில்லை

79. பொருந்தாத இணை எது?

(A) ஒரே பொருளைத் தரும் இணை நேரிணை – சீரும் சிறப்பும்
(B) எதிரெதிர்ப் பொருளைத் தரும் இணை எதிரிணை – உயர்வு தாழ்வு
(C) பொருளின் செறிவைக் குறித்து வருவன செறியிணை – பச்சைப்பசேல்
(D) ஒரே பொருளைத் தரும் இணை நேரிணை – இரவு பகல்
(E) விடை தெரியவில்லை

80. மேகலை – இச்சொல்லுக்கு சரியான சொல்லை இணைத்துப் புதிய சொல்லை உருவாக்குக.

(A) தேன்
(B) மழை
(C) செய்
(D) மணி
(E) விடை தெரியவில்லை

81. பொருத்தமான காலம் அமைத்தல் காலம் சரியாக அமைந்த சொற்றொடரைக் கண்டறிக.

(A) சுந்தர் நேற்று பள்ளிக்குச் சென்றான்.
(B) சுந்தர் நாளை பள்ளிக்குச் சென்றான்.
(C) சுந்தர் நாளை பள்ளிக்குச் செல்கிறான்.
(D) சுந்தர் நேற்று பள்ளிக்குச் செல்வான்.
(E) விடை தெரியவில்லை

82. பொருத்தமான காலம் அமைத்தல்

சரியான இணையைத் தேர்ந்தெடு.

(A) படித்தான் – நிகழ்காலம்
(B) பார்த்தேன் – இறந்தகாலம்
(C) படிப்பேன் – இறந்தகாலம்
(D) பார்க்கிறேன் – எதிர்காலம்
(E) விடை தெரியவில்லை

83. சரியான வினாச்சொல்லைத் தேர்ந்தெடுக்க.

குற்றாலக் குறவஞ்சியைப் பாடியவர் ————?

(A) எவர்
(B) எது
(C) யார்
(D) ஏன்
(E) விடை தெரியவில்லை

84. நாங்கள் என்றும் தூய்மையைக் ———————— சரியான சொல்லைத் தேர்வு செய்க.

(A) கடைபிடிப்போம்
(B) கடைப்பிடிப்போம்
(C) கடையைபிடிப்போம்
(D) கடையைப்பிடிப்போம்
(E) விடை தெரியவில்லை

(D) சுடர்க்கொடியால் பாடப்பட்டது
(E) விடை தெரியவில்லை

25. மல்லிகைப் பந்தலின் கீழே தங்கினான்.
தங்கினான் என்பது எக்காலத்தைக் குறிக்கும்.

(A) நிகழ்காலம்
(B) இறந்தகாலம்
(C) எதிர்காலம்
(D) சங்ககாலம்
(E) விடை தெரியவில்லை

26. சரியான வினாச்சொல்லைத் தேர்ந்தெடு.

(A) ஆழ்வார்கள் எத்தனை பேர்?
(B) ஆழ்வார்கள் பத்து பேர்?
(C) ஆழ்வார்கள் தங்கும் இடம்?
(D) ஆழ்வார்கள் பாடிய பாடல்?
(E) விடை தெரியவில்லை

27. சரியான வினாச்சொல்லைத் தேர்ந்தெடு :

(A) அறநெறிச்சாரம் என்பதன் பொருள் என்ன?

(B) அறநெறிச்சாரம் அறிவுடையது?

(C) அறநெறிச்சாரம் விளக்கம் தருவது?

(D) அறநெறிச்சாரம் பொருள் அறிவது?

(E) விடை தெரியவில்லை

28. ஒரு சொல்லால் தொடரின் இரு இடங்களை நிரப்புக.

எனக்கு ———— பங்கு பிரித்துக் கொடுக்க வா!

கீழே ஈரம் பார்த்து உன் ———— ஐ வை.

(A) கை

(B) கால்

(C) அகல்

(D) அலை

(E) விடை தெரியவில்லை

29. வல்லினம் மிகும் மிகாத் தொடர்களின் பொருளறிந்து பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | பாலை பாடினான் | 1. | தேரை என்னும் உயிரினத்தைப் பார்த்தான் |
| (b) | பாலைப் பாடினான் | 2. | தேரினைப் பார்த்தான் |
| (c) | தேரை பார்த்தான் | 3. | பாலினைப் பாடினான் |
| (d) | தேரைப் பார்த்தான் | 4. | பாலைத் திணை பாடினான் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 3 | 2 |
| (B) | 2 | 3 | 1 | 4 |
| (C) | 4 | 3 | 1 | 2 |
| (D) | 2 | 4 | 1 | 3 |

(E) விடை தெரியவில்லை

30. பின்வரும் தொடரில் உள்ள நால்வகை சொற்களில் உரிச்சொல்லை தேர்ந்தெடு :
வளவனும் தங்கையும் மாநகரப் பேருந்தில் ஏறினர்

(A) ஏறினர்
(B) வளவனும் தங்கையும்
(C) பேருந்து
(D) மாநகரம்
(E) விடை தெரியவில்லை

31. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க. (முழை)

(A) சிங்கம் ————————யில் வாழும்
(B) பறவை ————————யில் வாழும்
(C) யானை ————————யில் வாழும்
(D) எலி ————————யில் வாழும்
(E) விடை தெரியவில்லை

32. இரு பொருள் தருக. (துய்ப்பது)

(A) உண்பது, தூய்மை
(B) கற்பது, தருதல்
(C) நுகர்வது, தூய்மை
(D) தூய்மை, தருதல்
(E) விடை தெரியவில்லை

33. இரு பொருள் தருக. (நூல்)

(A) ஆடை நெய்வது, மூதுரை அறநூல்
(B) பூணூல், செய்தி
(C) அறநூல், மாலை
(D) ஆடை தைப்பது, நேரம்
(E) விடை தெரியவில்லை

34. அடைப்புக் குறிக்குள் உள்ள சொற்கள் பொருந்தக் கூடிய தொடரைக் கண்டறிக.
(பட்டு – பாட்டு)

(A) கவலைப்பட்ட வாழ்விற்குப் பாட்டு அவசியம்

(B) தூண்டிலில் பட்ட மீனைப் பாட்டுப் பாடி இழுத்தான்

(C) பட்டு மெத்தையில் பாட்டுக் கேட்டபடி தூங்கினாள்

(D) துன்பப்பட்டு வாழும் வாழ்வில் பாட்டுக்கு என்ன வேலை?

(E) விடை தெரியவில்லை

35. குறில் – நெடில் மாற்றம், பொருள் வேறுபாடு தருக.
சிறு – சீறு

(A) வறுமை – புலி

(B) கருமை – வலிமை

(C) சிறுமை – பாய்தல்

(D) கருவி – சிறியது

(E) விடை தெரியவில்லை

36. கூற்று : பிறரிடம் வெளிப்படையாகச் சொல்லத்தகாத சொற்களைத் தகுதியுடைய வேறு சொற்களால் கூறுவது மங்கலம் ஆகும்.

காரணம் : பொற்கொல்லர் பொன்னைப் 'பறி' என்று உரைப்பர்

(A) கூற்று, காரணம் இரண்டும் சரி

(B) கூற்று சரி, காரணம் தவறு

(C) கூற்று தவறு; காரணம் சரி

(D) கூற்று, காரணம் இரண்டும் தவறு

(E) விடை தெரியவில்லை

37. கூற்று : வாய்ப்பூட்டுச் சட்டத்திற்கு ஆட்பட்ட தலைவர்கள் வட இந்தியாவில் பாலகங்காதர திலகரும், தென்னாட்டில் முத்துராமலிங்கரும் ஆவர்.

காரணம் : ஆங்கில ஆட்சிக்கு ஆதரவாகச் செயல்பட்டதால் அச்சட்டம் கொண்டு வரப்பட்டது.

(A) கூற்று, காரணம் இரண்டும் சரி

(B) கூற்று, காரணம் இரண்டும் தவறு

(C) கூற்று சரி; காரணம் தவறு

(D) கூற்று தவறு; காரணம் சரி

(E) விடை தெரியவில்லை

38. கலைச் சொல் அறிதல். Paddy

(A) சோளப்பயிர்

(B) நெற்பயிர்

(C) வாழை

(D) கரும்பு

(E) விடை தெரியவில்லை

39. கலைச் சொல் அறிதல். Poet

(A) ஓவியர்

(B) எழுத்தாளர்

(C) கவிஞர்

(D) பாடகர்

(E) விடை தெரியவில்லை

40. அடிவகைகளில் தவறான இணை எது?

(A) தாள் – கேழ்வரகு

(B) தண்டு – வாழை

(C) தூறு – புதர்

(D) கோல் – குத்துச்செடி

(E) விடை தெரியவில்லை

41. பூக்கையைக் குவித்து
பூவே புரிவோடு காக்க என்று வேண்டியது

(A) கருணையன் பூக்களுக்காக
(B) கருணையன் எலிசபெத்துக்காக
(C) எலிசபெத் தமக்காக
(D) எலிசபெத் பூமிக்காக
(E) விடை தெரியவில்லை

42. சொல்லும் பொருளும் சரியானது எது?

(A) பாசவர் – வெற்றிலை விற்பவர்
(B) ஓசுநர் – நெய்பவர்
(C) மண்ணுள் வினைஞர் – சிற்பி
(D) வாசவர் – எண்ணெய் விற்பவர்
(E) விடை தெரியவில்லை

43. தொகையின் வகை எது?
'பெரிய மீசை சிரித்தார்'

(A) வேற்றுமைத் தொகை
(B) உம்மைத் தொகை
(C) அன்மொழித் தொகை
(D) பண்புத் தொகை
(E) விடை தெரியவில்லை

44. அருந்துணை என்பதை பிரித்தால்

(A) அருமை + துணை
(B) அரு + துணை
(C) அருமை + இணை
(D) அரு + இணை
(E) விடை தெரியவில்லை

45. சரியான அகர வரிசை எது?

(A) உழவு, மண், ஏர், மாடு
(B) மண், மாடு, ஏர், உழவு
(C) உழவு, ஏர், மண், மாடு
(D) ஏர், உழவு, மாடு, மண்
(E) விடை தெரியவில்லை

46. வீரனைப் புகழ்ந்து பாடுவது எந்த திணை?

(A) வெட்சித் திணை
(B) வஞ்சித் திணை
(C) நொச்சித் திணை
(D) பாடாண் திணை
(E) விடை தெரியவில்லை

47. சரியான கூட்டுப் பெயரைத் தேர்ந்தெடு.

வேலமரம்

(A) வேலந்தோப்பு
(B) வேல மரங்கள்
(C) வேலங்காடு
(D) வேலக்கொல்லை
(E) விடை தெரியவில்லை

48. சரியான தொடரைத் தேர்ந்தெடுக்க.

(A) உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் கழுத்தை இடமாகக் கொண்டு பிறக்கின்றன
(B) கழுத்தை இடமாகக் கொண்டு உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் பிறக்கின்றன
(C) பன்னிரண்டு உயிர் எழுத்துக்கள் கழுத்தை இடமாகக் கொண்டு பிறக்கின்றன
(D) பிறக்கின்ற உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் கழுத்தை இடமாகக் கொண்டு
(E) விடை தெரியவில்லை

49. பின்வருவனவற்றுள் முறையான தொடரைத் தேர்ந்தெடுக்க.

(A) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு
(B) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு
(C) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு
(D) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு
(E) விடை தெரியவில்லை

50. பிழை திருத்துக :

கோவலன் சிலம்பு விற்கப் போனாள்

(A) கோவலன் சிலம்பு விற்கப் போனான்

(B) கோவலன் சிலம்பு விற்கப் போணாள்

(C) கோவலன் சிலம்பு விற்கப் போனார்

(D) கோவலன் சிலம்பு விற்கப் போகின்றார்

(E) விடை தெரியவில்லை

51. பிழை திருத்துக :

கண்ணகி சிலம்பு அணிந்தான்

(A) கண்ணகி சிலம்பு அணிவித்தாள்

(B) கண்ணகி சிலம்பு அணிந்துள்ளாள்

(C) கண்ணகி சிலம்பு அணிந்தது

(D) கண்ணகி சிலம்பு அணிந்தாள்

(E) விடை தெரியவில்லை

52. சொல் – பொருள் பொருத்துக. (எதிர்ச்சொல் பொருத்துக)

| | |
|---|---|
| (a) எளிது | 1. புரவலர் |
| (b) ஈதல் | 2. அரிது |
| (c) அந்நியர் | 3. ஏற்றல் |
| (d) இரவலர் | 4. உறவினர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 2 | 4 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 1 | 4 | 3 | 2 |
| (D) | 4 | 2 | 1 | 3 |

(E) விடை தெரியவில்லை

53. சொல் – பொருள் பொருத்துதல்.

| | | | |
|---|---|---|---|
| (a) | நாற்று | 1. | பறித்தல் |
| (b) | நீர் | 2. | அறுத்தல் |
| (c) | கதிர் | 3. | நடுதல் |
| (d) | களை | 4. | பாய்ச்சுதல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 4 | 2 | 1 | 3 |
| (D) | 2 | 3 | 1 | 4 |

(E) விடை தெரியவில்லை

54. ஒருமை பன்மை பிழை :

குழந்தைகள் ———— இயன்ற உதவிகளைப் பிறருக்குச் செய்கின்றனர்

(A) தாம் (B) தம்மால்

(C) தமக்கு (D) தன்னால்

(E) விடை தெரியவில்லை

55. ஒருமை பன்மை பிழை நீக்குக :

சிறுமி ———— கையில் மலர்களை வைத்திருந்தாள்.

(A) தன் (B) தாம்

(C) தனது (D) தமது

(E) விடை தெரியவில்லை

கீழ்கண்ட பத்தியினைப் படித்து வினாவிற்கான சரியான விடையை தேர்ந்தெடு :

ஆசியாவிலேயே மிகப்பழமையான நூலகம் என்ற புகழுக்குரியது தஞ்சை சரசுவதி மகால் நூலகம். இந்திய மொழிகள் அனைத்திலும் உள்ள ஓலைச்சுவடிகள் இங்கு பாதுகாக்கப்படுகின்றன. உலகளவில் தமிழ் நூல்கள் அதிகமுள்ள நூலகம் கன்னிமாரா நூலகமே. இது சென்னை எழும்பூரில் அமைந்துள்ளது. இந்தியாவில் தொடங்கப்பட்ட முதல் பொது நூலகம் என்ற பெருமைக்கு உரியது. திருவனந்தபுரம் நடுவண் நூலகம். கொல்கத்தாவில் 1836-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு 1953இல் பொதுமக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்ட தேசிய நூலகமே இந்தியாவின் மிகப் பெரிய நூலகமாகும். இது ஆவணக் காப்பக நூலகமாகவும் திகழ்கிறது. உலகில் மிகப் பெரிய நூலகம் என்ற பெருமையைத் தாங்கி நிற்பது அமெரிக்காவில் உள்ள லைப்ரரி ஆப் காங்கிரஸ்.

56. உலகளவில் தமிழ் நூல்கள் அதிகமுள்ள நூலகம் எது?

(A) சரசுவதி மகால் நூலகம்
(B) கன்னிமாரா நூலகம்
(C) திருவனந்தபுரம் நடுவண் நூலகம்
(D) தேசிய நூலகம்
(E) விடை தெரியவில்லை

57. சரசுவதி மகால் நூலகம் அமைந்துள்ள இடம் யாது?

(A) தஞ்சாவூர்
(B) திருச்சி
(C) கோவை
(D) சென்னை
(E) விடை தெரியவில்லை

58. தேசிய நூலகம் பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்த ஆண்டு

(A) 1836
(B) 1953
(C) 1957
(D) 1837
(E) விடை தெரியவில்லை

59. உலகில் மிகப் பெரிய நூலகம் எது?

(A) தஞ்சை சரஸ்வதி மஹால்
(B) கன்னிமாரா நூலகம்
(C) லைப்ரரி ஆப் காங்கிரஸ்
(D) லைப்ரரி ஆப் அமெரிக்கா
(E) விடை தெரியவில்லை

60. தேசிய நூலகத்தின் சிறப்பம்சம்

(A) ஓலைச்சுவடிகள்
(B) புத்தக நகல்கள்
(C) ஆவணக் காப்பகம்
(D) படிமங்கள்
(E) விடை தெரியவில்லை

61. பயன் + இலா என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

(A) பயன்னில்லா
(B) பயன்இலா
(C) பயனிலா
(D) பயன்இல்லா
(E) விடை தெரியவில்லை

62. 'சீரிளமை' – பிரித்தெழுதுக.

(A) சீர் + இளமை
(B) சீர்மை + இளமை
(C) சீரி + இளமை
(D) சீற் + இளமை
(E) விடை தெரியவில்லை

63. வெங்கரி – பிரித்தெழுதுக.

(A) வெம் + கரி
(B) வெங் + கரி
(C) வெண் + கரி
(D) வெம்மை + கரி
(E) விடை தெரியவில்லை

64. சேர்த்து எழுதுக.

முத்து + சுடர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

(A) முத்துசுடர்
(B) முச்சுடர்
(C) முத்துடர்
(D) முத்துச்சுடர்
(E) விடை தெரியவில்லை

65. முதுமை + மொழி : சேர்த்து எழுதும் போது கிடைக்கும் சொல் அறிக.

(A) முதுமொழி
(B) முதியமொழி
(C) முதல்மொழி
(D) முதுமைமொழி
(E) விடை தெரியவில்லை

66. பிரித்து எழுதுக :

உயர்வடைவோம்

(A) உயர் + வடைவோம்
(B) உயர் + வடை + ஓம்
(C) உயர்வு + அடைவோம்
(D) உயர் + அடைவோம்
(E) விடை தெரியவில்லை

67. பிரித்து எழுதுக :

'செம்பயிர்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

(A) செம்மை + பயிர்
(B) செம் + பயிர்
(C) செமை + பயிர்
(D) செம்பு + பயிர்
(E) விடை தெரியவில்லை

68. எல் – எதிர்ச்சொல் தருக.

(A) பகல்
(B) எல்லை
(C) தானியம்
(D) இரவு
(E) விடை தெரியவில்லை

69. வெற்பு – எதிர்ச்சொல் தருக.

(A) மலை
(B) பள்ளம்
(C) மழை
(D) பட்டம்
(E) விடை தெரியவில்லை

70. பொருந்தாத இணை எது?

(A) க்ராப் – செதுக்கி
(B) கர்சர் – ஏவி
(C) சர்வர் – உலவி
(D) ஃபோல்டர் – உறை
(E) விடை தெரியவில்லை

71. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக.
"குழல்கள் செய்ய இயலாத மரங்கள்"

(A) கருங்காலி
(B) செங்காலி
(C) சந்தனம்
(D) அகில்
(E) விடை தெரியவில்லை

72. பொருந்தாத இணையைக் கண்டறிக.

(A) துவரை – பவளம்
(B) மல்லல் – வளம்
(C) கோடு – கொம்பு
(D) செறு – செருக்கு
(E) விடை தெரியவில்லை

73. பொருந்தாத இணையைக் கண்டறிக.

(A) ஏறுகோள் – எருதுகட்டி
(B) திருவாரூர் – கரிக்கையூர்
(C) ஆதிச்சநல்லூர் – அரிக்கமேடு
(D) பட்டிமன்றம் – பட்டிமண்டபம்
(E) விடை தெரியவில்லை

74. பொருந்தா இணையைக் கண்டறிக.

(A) நாற்று – நடுதல்
(B) நீர் – பாய்ச்சுதல்
(C) கதிர் – அறுத்தல்
(D) களை – அடித்தல்
(E) விடை தெரியவில்லை

75. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக.

(A) அப்துல்கலாம் பிறந்த நாள் – ஆசிரியர் நாள்
(B) விவேகானந்தர் பிறந்த நாள் – தேசிய இளைஞர் நாள்
(C) காமராசர் பிறந்த நாள் – கல்வி வளர்ச்சி நாள்
(D) ஜவஹர்லால் நேரு பிறந்த நாள் – குழந்தைகள் நாள்
(E) விடை தெரியவில்லை

76. பொருந்தாச் சொல்லைக் கண்டறிதல் :

(A) திங்கள் – மாதம்
(B) பகலவன் – கதிரவன்
(C) மெய் – உண்மை
(D) பொய்மை – மெய்ம்மை
(E) விடை தெரியவில்லை

77. சந்திப்பிழை அற்ற வாக்கியங்களை அறிக.

(1) பதிகம் என்பது பத்துப் பாடல்களைக் கொண்டது.

(2) பதிகம் என்பது பத்து பாடல்களைக் கொண்டது.

(3) விழாக்களின் போது இசை கருவிகளை இசைப்பது வழக்கம்.

(4) விழாக்களின் போது இசைக் கருவிகளை இசைப்பது வழக்கம்.

(A) (1) மற்றும் (3) சரி

(B) (2) மற்றும் (3) சரி

(C) (1) மற்றும் (4) சரி

(D) (2) மற்றும் (4) சரி

(E) விடை தெரியவில்லை

78. இளமைப் பெயர்கள் கண்டு பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | புலி | 1. | குட்டி |
| (b) | சிங்கம் | 2. | கன்று |
| (c) | ஆடு | 3. | குருளை |
| (d) | யானை | 4. | பறழ் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 1 | 2 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

(E) விடை தெரியவில்லை

79. வழுவற்ற தொடரைக் காண்க.

(A) கைகள் இரண்டும் பிறர்க்கு உதவவே எனச் சான்றோர் கருதின

(B) கைகள் இரண்டும் உதவவே என சான்றோர்கள் கருதின

(C) கை இரண்டும் உதவவே எனச் சான்றோர் கருதினர்

(D) கைகள் இரண்டும் உதவவே எனச் சான்றோர்கள் கருதினர்

(E) விடை தெரியவில்லை

80. வழுவுச் சொல்லற்ற தொடரை அறிக.

(A) சிற்பி சிலையைச் செய்தான்
(B) சிற்பி சிலையைச் செதுக்கினான்
(C) சிற்பி சிலையை வனைந்தான்
(D) சிற்பி சிலையை வார்த்தான்
(E) விடை தெரியவில்லை

81. வல்லினம் மிகா இடத்தைக் காண்க.

(A) குடி தண்ணீர்
(B) கனா கண்டேன்
(C) தனி சிறப்பு
(D) பூ பந்தல்
(E) விடை தெரியவில்லை

82. Crying Child will get milk. இணையான தமிழ்ப் பழமொழியை எழுதுக.

(A) பாலைப் பார்த்தால் குழந்தை அழும்
(B) அழுத பிள்ளை பால் குடிக்கும்
(C) அழுதால் குழந்தைக்குப் பால் கிடைக்கும்
(D) அழுத பிள்ளை பால் குடிக்காது
(E) விடை தெரியவில்லை

83. சந்திப்பிழையற்ற வாக்கியங்களைக் கண்டறிக.

(A) கால வெள்ளத்தில் கரைந்துப்போன மொழிகளுகிடையில் நீந்தி தன்னை நிலை நிறுத்தி கொண்டுள்ளது தமிழ்

(B) கால வெள்ளத்தில் கரைந்துப்போன மொழிகளுக்கிடையில் நீந்தித் தன்னை தானே நிலை நிறுத்திக்கொண்டுள்ளதுத் தமிழ்

(C) கால வெள்ளத்தில் கரைந்து போன மொழிகளுக்கிடையில் நீந்தி தன்னை நிலை நிறுத்திக் கொண்டுள்ளதுத் தமிழ்

(D) கால வெள்ளத்தில் கரைந்து போன மொழிகளுக்கிடையில் நீந்தித் தன்னை நிலை நிறுத்திக் கொண்டுள்ளது தமிழ்

(E) விடை தெரியவில்லை

84. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை அறிக.

(A) Wealth – கடமை
(B) Courtesy – நற்பண்பு
(C) Poverty –பொதுவுடைமை
(D) Ambition –அயலவர்
(E) விடை தெரியவில்லை

85. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை அறிக.

(A) Herostone – புடைப்பியல்
(B) Epigraphy – பண்பாட்டியல்
(C) Excavation – அகழாய்வு
(D) Inscription – கல்வெட்டு
(E) விடை தெரியவில்லை

86. ஒலி வேறுபாடு அறிந்து சரியான பொருளை எழுதுக.

திணை – தினை

(A) உயர்திணை – ஊர்
(B) ஒழுக்கம் – தானியம்
(C) திண்ணுதல் – வாக்கியம்
(D) திண்ணை – துணிவு
(E) விடை தெரியவில்லை

87. ஒலி வேறுபாடு அறிந்து சரியான பொருளை எழுதுக.

அலை – அழை

(A) வரவழைத்தல், கடலலை
(B) கடலலை, வரவழைத்தல்
(C) அலைதல், வரவழைத்தல்
(D) அலைத்தல், வரவழைத்தல்
(E) விடை தெரியவில்லை

88. ஒரு பொருள் தரும் பல சொற்கள்
சரியான இணையைத் தேர்ந்தெடு :

(A) நாவாய், வங்கம்
(B) ஆழி, சுழி
(C) அழி, ஆழி
(D) கப்பல், பேருந்து
(E) விடை தெரியவில்லை

89. ஆழி, முந்நீர், பௌவம் ஆகிய சொற்கள் கீழ்கண்டவற்றில் எதைக் குறிக்கிறது?

(A) சக்கரம்
(B) மூன்று
(C) கடல்
(D) வெந்நீர்
(E) விடை தெரியவில்லை

90. 'படி' என்னும் வேர்ச்சொல்லின் பதம் அறிக.

(A) படித்தான்
(B) பாடினான்
(C) கற்றான்
(D) கற்பனை
(E) விடை தெரியவில்லை

91. 'பாடினாள்' – வேர்ச்சொல்லைத் தருக.

(A) பா
(B) வா
(C) பாடு
(D) ஆடு
(E) விடை தெரியவில்லை

92. 'ஆடு' என்னும் வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயர் வடிவம் தருக.

(A) ஆடுதல்
(B) ஆடி
(C) ஆடியவன்
(D) ஆடினான்
(E) விடை தெரியவில்லை

93. 'ஆடு' என்ற வேர்ச்சொல்லில் இருந்து வினைஎச்சத்தை உருவாக்குக.

(A) ஆடி
(B) ஆடுதல்
(C) ஆடிய
(D) ஆடினான்
(E) விடை தெரியவில்லை

94. அகரவரிசைப்படி சொற்களை சீர் செய்க.

(A) கிண்ணம், காட்சி, கீரி, கல்வி, கேள்வி

(B) கீரி, கிண்ணம், காட்சி, கல்வி, கேள்வி

(C) கல்வி, காட்சி, கிண்ணம், கீரி, கேள்வி

(D) காட்சி, கிண்ணம், கீரி, கல்வி, கேள்வி

(E) விடை தெரியவில்லை

95. அகரவரிசைப்படி சொற்களை சீர் செய்து எழுது.

(A) சூடு, செடி, சுடு, சோழன், சேரன்

(B) சுடு, சூடு, செடி, சேரன், சோழன்

(C) செடி, சுடு, சேரன், சோழன், சூடு

(D) சோழன், சேரன், சுடு, சூடு, செடி

(E) விடை தெரியவில்லை

96. அகரவரிசையில் எழுதுக.

(A) முதல், மீமிசை, மிசை, மலை, மாலை

(B) மிசை, மீமிசை, மலை, மாலை, முதல்

(C) மலை, மாலை, மிசை, மீமிசை, முதல்

(D) மலை, மாலை, முதல், மிசை, மீமிசை

(E) விடை தெரியவில்லை

97. கீழ்க்காணும் சொற்களை அகரவரிசைப்படுத்து.

(A) பாட்டி, பணம், பேட்டை, போ, பெட்டி

(B) பணம், பாட்டி, பெட்டி, பேட்டை, போ

(C) பெட்டி, பணம், பேட்டை, போ, பாட்டி

(D) போ, பாட்டி, பெட்டி, பணம், பேட்டை

(E) விடை தெரியவில்லை

98. கீழ்க்காணும் சொற்களை அகரவரிசைப்படுத்து.

(A) வேற்றுமை, வீடு, வாரம், விசிறி, வலிமை

(B) வீடு, வாரம், வேற்றுமை, விசிறி, வலிமை

(C) வாரம், வேற்றுமை, விசிறி, வீடு, வலிமை

(D) வலிமை, வாரம், விசிறி, வீடு, வேற்றுமை

(E) விடை தெரியவில்லை

99. கீழ்க்காணும் சொற்களை அகரவரிசைப்படுத்து.

(A) நான்கு, நன்மை, நெருப்பு, நீட்சி, நிலம்

(B) நிலம், நெருப்பு, நான்கு, நீட்சி, நன்மை

(C) நன்மை, நான்கு, நிலம், நீட்சி, நெருப்பு

(D) நெருப்பு, நிலம், நன்மை, நீட்சி, நான்கு

(E) விடை தெரியவில்லை

100. அகரவரிசையில் எழுதுக.

(A) பள்ளம், பாலை, பிணி, பீடு, புணை

(B) பாலை, பள்ளம், பீடு, புணை, பிணி

(C) பிணி, பள்ளம், பீடு, புணை, பாலை

(D) பீடு, பாலை, பள்ளம், புணை, பிணி

(E) விடை தெரியவில்லை

## பகுதி-ஆ — பொது அறிவு (பட்டப்படிப்பு தரம்)

## Part-B — General Studies (Degree Standard)

**வினாக்கள் : 101–200** **மொத்த மதிப்பெண்கள் : 150**

**Questions : 101–200** **Total Marks : 150**

# பகுதி-அ — கட்டாயத் தமிழ்மொழித் தகுதித்தேர்வு
## (பத்தாம் வகுப்பு தரம்)

# Part-A — Compulsory Tamil Language Eligibility Test
## (SSLC Std)

**வினாக்கள் : 1–100** **மொத்த மதிப்பெண்கள் : 150**

**Questions : 1–100** **Total Marks : 150**

---

1. வண்டாயெழுந்து என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்.

   (A) வண்டு + எழுந்து
   (B) வண்டாய் + எழுந்து
   (C) வண்டா + எழுந்து
   (D) வண்டு + எழு + உந்து
   (E) விடை தெரியவில்லை

2. கண்டெடுக்கப்பட்டுள்ளன – பிரித்தெழுதுக.

   (A) கண்டு + எடுக்கப்பட்டு + உள்ளன
   (B) கண்டு + எடுக்கப் + பட்டுள்ளன
   (C) கண்டெடுக்க + பட்டு + உள்ளன
   (D) கண் + டெடுக்க + பட்டு + உள்ளன
   (E) விடை தெரியவில்லை

3. பெருங்கடல் – பிரித்தெழுதுக.

   (A) பெரு + கடல்
   (B) பெருமை + கடல்
   (C) பெரிய + கடல்
   (D) பெருங் + கடல்
   (E) விடை தெரியவில்லை

4. 'மிசை' என்பதன் எதிர்ச்சொல்லை காண்க.

   (A) கீழே
   (B) மேலே
   (C) இசை
   (D) வசை
   (E) விடை தெரியவில்லை

5. பொருந்தா இணையைக் கண்டறிக.

(A) உயிர்முன் உயிர் – மணியடி

(B) உயிர்முன் மெய் – பனிக்காற்று

(C) மெய்ம்முன் உயிர் – ஆலிலை

(D) மெய்ம்முன் மெய் – கோலாட்டம்

(E) விடை தெரியவில்லை

6. பொருந்தா இணையைக் கண்டறிக.

(A) தகளி – அகல் விளக்கு

(B) இடர் ஆழி – துன்பக்கடல்

(C) சுடர் ஆழியான் – சிவபெருமான்

(D) வெய்ய கதிரோன் – வெப்பக்கதிர் வீசும் சூரியன்

(E) விடை தெரியவில்லை

7. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக.

(A) செங்காந்தள் – உம்மைத்தொகை

(B) வீசு தென்றல் – வினைத்தொகை

(C) மலர்க்கை – உவமைத்தொகை

(D) சாரைப்பாம்பு – இருபெயரொட்டுப் பண்புத்தொகை

(E) விடை தெரியவில்லை

8. பொருந்தாத சொல்லை கண்டறிக.

(A) வடக்கு – வாடைக்காற்று

(B) தெற்கு – தென்றல்காற்று

(C) மேற்கு – கோடைக்காற்று

(D) கிழக்கு – கோடைக்காற்று

(E) விடை தெரியவில்லை

9. மரபு பிழைகளை நீக்கி எழுதுக.

இல்லத்தின் அருகே புதிதாகக் கூரை போட்டனர்.

(A) இல்லத்தின் அருகே புதிதாகக் கூரை பின்னினர்

(B) இல்லத்தின் அருகே புதிதாகக் கூரை வேய்ந்தனர்

(C) இல்லத்தின் அருகே புதிதாகக் கூரை முடைந்தனர்

(D) இல்லத்தின் அருகே புதிதாகக் கூரை செய்தனர்

(E) விடை தெரியவில்லை

10. வழுவுச் சொற்களை நீக்கி எழுதுக.

எண் வீட்டுத் தோட்டத்தில் மலர்கள் மனம் வீசின.

(A) எண் வீட்டுத் தோட்டத்தில் மலர்கள் மரம் வீசின.

(B) என் வீட்டுத் தோட்டத்தில் மலர்கள் மணம் வீசின.

(C) எண் வீட்டுத் தோட்டத்தில் மலர்கள் மறம் வீசின.

(D) என் வீட்டுத் தோட்டத்தில் மலர்கள் மனம் வீசின.

(E) விடை தெரியவில்லை

11. மரபுப் பிழையற்ற தொடரைக் காண்க.

(A) கோழி கத்த நரி அலறியது

(B) கோழி கூவ நரி உறுமியது

(C) கோழி கொக்கரிக்க நரி ஊளையிட்டது

(D) கோழி உறும நரி பிளிறியது

(E) விடை தெரியவில்லை

12. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை அறிக.

(A) Aesthetics – கலைச்சொல்

(B) Artifacts – முருகியல்

(C) Terminology – அழுகியல்

(D) Myth – தொன்மம்

(E) விடை தெரியவில்லை

13. வேர்ச்சொல்லைத் தேர்வு செய்தல்.

கீழ்க்கண்டவற்றுள் சரியான வேர்ச்சொல் இணையைக் கண்டறிக.

(A) செல் – செல்றான்

(B) வந்து – வந்தான்

(C) கொல் – கொன்றான்

(D) வென்று – வென்றரன்

(E) விடை தெரியவில்லை

14. 'மகிழ்ந்தனன்' – இச்சொல்லின் வேர்ச்சொல்லை கண்டறிக.

(A) மகிழ்ச்சி

(B) மகிழ்ந்தான்

(C) மகி

(D) மகிழ்

(E) விடை தெரியவில்லை

15. வேர்ச்சொல்லின் வினைமுற்றை காண்க.

உறங்கு

(A) உறங்கினாள்

(B) உறங்கியவள்

(C) உறங்குகிறார்

(D) உறங்கிய

(E) விடை தெரியவில்லை

16. 'படித்து வந்தான்' எவ்வகை எச்சம்?

(A) குறிப்புப் பெயரெச்சம்

(B) தெரிநிலைப் பெயரெச்சம்

(C) பெயரெச்சம்

(D) வினையெச்சம்

(E) விடை தெரியவில்லை

17. கீழ்க்காணும் சொற்களை அகரவரிசைப்படுத்துக.

(A) தோட்டம், தவம், தேடி, தாலாட்டு, தொட்டி

(B) தேடி, தாலாட்டு, தொட்டி, தவம், தோட்டம்

(C) தவம், தாலாட்டு, தேடி, தொட்டி, தோட்டம்

(D) தாலாட்டு, தொட்டி, தோட்டம், தவம், தேடி

(E) விடை தெரியவில்லை

18. கீழ்க்காணும் சொற்களை அகர வரிசைப்படுத்து.

(A) சூடு, சேவடி, செழிப்பு, சீற்றம், சினம்

(B) சினம், சீற்றம், சூடு, செழிப்பு, சேவடி

(C) சேவடி, சூடு, செழிப்பு, சீற்றம், சினம்

(D) செழிப்பு, சீற்றம், சூடு, சேவடி, சினம்

(E) விடை தெரியவில்லை

19. கீழ்க்காணும் சொற்களை அகர வரிசைப்படுத்து.

(A) மீள்பார்வை, மாண்பு, மரம், மேடை, மௌனம்

(B) மாண்பு, மீள்பார்வை, மரம், மௌனம், மேடை

(C) மரம், மாண்பு, மீள்பார்வை, மேடை, மௌனம்

(D) மேடை, மௌனம், மீள்பார்வை, மாண்பு, மரம்

(E) விடை தெரியவில்லை

20. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குதல்.

(A) பல வகையான மங்கலப் பொருள்களை முறையாக வைத்தனர்

(B) முறையாக பல வகையான மங்கலப் வைத்தனர் பொருள்களை

(C) பொருள்களை மங்கல முறையாக பல வகையான வைத்தனர்

(D) மங்கலப் பொருள்களை புல வகையான முறையாக வைத்தனர்

(E) விடை தெரியவில்லை

21. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுக :

'மணிமேகலை சிறைச்சாலைக்குச் சென்று உணவிட்டாள்'

(A) மணிமேகலை எத்னால் உணவிட்டாள்?

(B) மணிமேகலை எங்கு சென்று உணவிட்டாள்?

(C) மணிமேகலை யார்?

(D) மணிமேகலை எதற்கு உணவிட்டாள்?

(E) விடை தெரியவில்லை .

22. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுக.

தன் வினைத் தொடரைக் கண்டறிக.

(A) அவனை திருந்தச் செய்தான்.

(B) அப்துல் நேற்று வருவித்தான்.

(C) பெரிய ஓவியம் வரைந்து வா.

(D) அவர்கள் நன்றாகப் படித்தனர்.

(E) விடை தெரியவில்லை

23. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுக.

செய்வினைத் தொடரைக் கண்டறிக.

(A) உரை கவிதாவால் படிக்கப்பட்டது.

(B) அவனை திருந்தச் செய்தான்.

(C) அப்பா சொன்னார்.

(D) பணம் காணாமல் போனது.

(E) விடை தெரியவில்லை

24. உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெழுதுதல்.

'கீரியும் பாம்பும் போல' – உவமை கூறும் பொருள் தெளிக.

(A) பகைமை

(B) நட்பு

(C) ஒற்றுமை

(D) வேற்றுமை

(E) விடை தெரியவில்லை

25. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொல்.

கரன்சி நோட்

(A) கடன் அட்டை
(B) காசோலை
(C) வங்கி
(D) பணத்தாள்
(E) விடை தெரியவில்லை

26. பிறமொழிச் சொற்கள் கலவாத தொடரைக் கண்டறிக.

(A) சென்னையில் இவ்வருடம் மழைப்பொழிவு அதிகம்
(B) லஷ்மி பள்ளிக்கு விரைந்து சென்றாள்
(C) மன்னிக்கும் மனம் உள்ளவனே மனிதன்
(D) காற்றின் உதவியால் செலுத்தப்படுபவை பாய்மரக் கப்பல்கள்
(E) விடை தெரியவில்லை

27. திருச்சிராப்பள்ளி என்பதன் மரூஉ

(A) திருச்சிராப்பள்ளி
(B) திருச்சூர்
(C) திரிச்சூர்
(D) திருச்சி
(E) விடை தெரியவில்லை

28. ஊர்ப்பெயரின் மரூஉவை எழுதுக.

- திருநெல்வேலி

(A) திருநல்வேலி
(B) நெல்லைபுரம்
(C) நெல்லை
(D) திருவேலி
(E) விடை தெரியவில்லை

29. சொற்களை இணைத்து புதிய சொல் உருவாக்கல்

தேன், மழை, வான், செய், பூ எனும் சொற்களைக் கொண்டு உருவாக்கினால் வரும் தவறான சொல்லைக் கண்டறிக.

(A) வான் மழை
(B) பூ மழை
(C) வான் செய்
(D) தேன் மழை
(E) விடை தெரியவில்லை

30. சரியான சொல் எது?

வழிபாட்டுக் கூட்டத்தில் மாணவர்கள் ———— நின்றனர்.

(A) எழுதுகோல்
(B) சீருடையுடன்
(C) புத்தகம்
(D) உயர்நிலை
(E) விடை தெரியவில்லை

31. பொருத்தமான காலத்தை எடுத்து எழுதுக.

(A) மலர் வீட்டுக்குச் செல்வாள் (நிகழ்காலம்)
(B) கண்ணன் வந்தான் (எதிர்காலம்)
(C) கண்ணன் வருவான் (இறந்தகாலம்)
(D) மலர் வீட்டுக்குச் சென்றாள் (இறந்தகாலம்)
(E) விடை தெரியவில்லை

32. கபிலன் பேசினான்.

பேசினான் என்பது எக்காலத்தைக் குறிக்கும்?

(A) எதிர்காலம்
(B) இறந்தகாலம்
(C) காலவழு
(D) நிகழ்காலம்
(E) விடை தெரியவில்லை

33. திருக்குறள் கருத்தின் அடிப்படையில் அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க. (உலகு)

(A) கடலின்றி அமையாது ———— (B) பகை இன்றி அமையாது ————
(C) மலையின்றி அமையாது ———— (D) நீரின்றி அமையாது ————
(E) விடை தெரியவில்லை

34. அடைப்புக்குள் உள்ள பூவின் நிலை குறித்த சொல்லைத் தகுந்த வாக்கியத்துடன் பொருத்துக : (செம்மல்)

(A) பூவின் தோற்றநிலை (B) பூ வாடின நிலை
(C) பூ விரியத் தொடங்கும் நிலை (D) பூவின் மலர்ந்த நிலை
(E) விடை தெரியவில்லை

35. இரு பொருள் தருக.

மாலை – இரு பொருள் தருக.

(A) மலை – மழை (B) காலை – மாலை
(C) பூ மாலை – மாலைப்பொழுது (D) பகல் – இரவு
(E) விடை தெரியவில்லை

36. இரு பொருள் தருக.

நூல் – இரு பொருள் தருக.

(A) சிலப்பதிகாரம் – மணிமேகலை
(B) ஆடைதைக்க உதவுவது நூல் – மூதுரை அற நூல்
(C) பத்துப்பாட்டு – எட்டுத்தொகை
(D) இராமாயணம் – மகாபாரதம்
(E) விடை தெரியவில்லை

37. குறில் – நெடில் மாற்றம் – பொருள் வேறுபாடு அறிக.

'கொடு – கோடு'

(A) செய்தல் – வட்டம் (B) தருதல் – நேராக வரைதல்
(C) விருப்பம் – வளைவு (D) உயரம் – குழந்தை
(E) விடை தெரியவில்லை

38. எர்த் வார்ம் தமிழ்ப்படுத்துக.

(A) நாங்கூழ்ப்புழு
(B) புவி வெப்பம்
(C) உலகமயம்
(D) நிலநடுக்கம்
(E) விடை தெரியவில்லை

39. கலைச்சொல் அறிதல் :

Responsibility

(A) உரிமை
(B) பணிவு
(C) முயற்சி
(D) கடமை
(E) விடை தெரியவில்லை

40. மெய்க்கீர்த்தி என்ற பெயர் யாருடைய காலத்தில் வந்தது?

(A) சேரன்
(B) சோழன்
(C) பாண்டியன்
(D) பல்லவன்
(E) விடை தெரியவில்லை

41. கம்பர் தாம் இயற்றிய நூலுக்குத் தாமே இட்டப் பெயர் எது?

(A) இராம சரிதம்
(B) இராமாவதாரம்
(C) இராம வரலாறு
(D) இராமாயணம்
(E) விடை தெரியவில்லை

42. கீழ்க்கண்டவற்றுள் அடுக்குத்தொடரைக் கண்டறிக.

(A) விறுவிறு
(B) கலகல
(C) மளமள
(D) பிடிபிடி
(E) விடை தெரியவில்லை

43. 'வருக்கை' என்ற சொல்லின் பொருள் யாது?

(A) வாழைப்பழம்
(B) மாம்பழம்
(C) பலாப்பழம்
(D) தேங்காய்
(E) விடை தெரியவில்லை

44. சரியான தொடரைத் தேர்ந்தெடுக்க.

(A) மதுரை தமிழ்த்தாயின் ஆணிவேர் துளிர்த்த இடம்

(B) தமிழ்த்தாயின் ஆணிவேர் துளிர்த்த இடம் மதுரை

(C) ஆணிவேர் துளிர்த்த தமிழ்த்தாயின் இடம் மதுரை

(D) மதுரை இடம் துளிர்த்த ஆணிவேர் தமிழ்த்தாய்

(E) விடை தெரியவில்லை

45. பிழை திருத்துதல்.

சரியான பதிலை தேர்ந்தெடு.

(A) ஓர் ஏரி

(B) ஒரு ஏரி

(C) ஓரேரி

(D) ஓராரி

(E) விடை தெரியவில்லை

46. பிழைதிருத்துதல்.

சரியான பதிலை தேர்ந்தெடு.

(A) ஓர் கடல்

(B) ஒரு கடல்

(C) ஓரிரு கடல்

(D) ஒன்று கடல்

(E) விடை தெரியவில்லை

47. பிழையற்ற தொடரை எழுதுக.

(A) வலப் பக்கச் சுவற்றில் எழுதாதே

(B) வலது பக்கம் சுவறில் எழுதாதே

(C) வலப் பக்கச் சுவரில் எழுதாதே

(D) வலப் பக்கச் சுவறில் எழுதாதே

(E) விடை தெரியவில்லை

கீழ்க்கண்ட பத்தியினைப் படித்து வினாவிற்குரிய சரியான விடையைத் தேர்ந்தெடு.

இராமநாதபுரத்தை ஆட்சி செய்த செல்லமுத்து மன்னரின் ஒரே மகள் வேலுநாச்சியார். பன்மொழிப் புலமையும் போர்ப்பயிற்சியும் பெற்றவர். சிவகங்கை மன்னர் முத்துவடுகநாதரை மணந்து மகிழ்ச்சியோடு வாழ்ந்து வந்தார். காளையார் கோவிலில் நடைபெற்ற போரில் முத்துவடுகநாதர் ஆங்கிலேயரால் நயவஞ்சகமாகக் கொல்லப்பட்டார். வேலுநாச்சியார் ஆங்கிலேயரை வென்று சிவகங்கையை மீட்க உறுதி பூண்டார். திண்டுக்கல் கோட்டையில் தங்கி ஒரு படை திரட்டி பயிற்சி அளித்தார். அமைச்சர் தாண்டவராயரும் தளபதிகளாகிய பெரிய மருது சின்ன மருது மற்றும் சிலரும் உடன் இருந்தனர். ஆண்கள் படைப் பிரிவுக்கு மருது சகோரர்களும் பெண்கள் படைப்பிரிவுக்குக் குயிலும் தலைமை ஏற்றனர். வேலுநாச்சியாரைக் காட்டிக்கொடுக்கும் படி உடையாள் என்னும் பெண்ணை ஆங்கிலேயர்கள் வற்புறுத்தினர். மறுத்ததால் அவளைக் கொன்றுவிட்டனர். உடையாளின் பெருமையை அனைவரும் அறிந்து கொள்ள வேண்டுமென்று அவருக்கு ஒரு நடுகல் நடப்பட்டது.

48. இராமநாதபுரத்தை ஆண்ட மன்னர் யார்?

(A) செல்லமுத்து
(B) வேலுநாச்சியார்
(C) முத்துவடுகநாதர்
(D) மருது பாண்டியர்
(E) விடை தெரியவில்லை

49. முத்துவடுகநாதர் எப்பகுதியை ஆட்சி செய்தார்?

(A) இராமநாதபுரம்
(B) சிவகங்கை
(C) திண்டுக்கல்
(D) காளையார் கோவில்
(E) விடை தெரியவில்லை

50. வேலுநாச்சியாரின் அமைச்சர் யார்?

(A) குயிலி
(B) உடையாள்
(C) தாண்டவராயர்
(D) முத்துவடுகநாதர்
(E) விடை தெரியவில்லை

51. வேலுநாச்சியார் யாருடைய நினைவாக நடுகல் நட்டார்?

(A) உடையாள்
(B) குயிலி
(C) மருதுபாண்டியர்
(D) முத்துவடுகநாதர்
(E) விடை தெரியவில்லை

52. ஆண்கள் படைப்பிரிவின் தலைமை பொறுப்பு யாருக்கு வழங்கப்பட்டது?

(A) செல்லமுத்து
(B) தாண்டவராயன்
(C) குயிலி
(D) மருது சகோதரர்கள்
(E) விடை தெரியவில்லை

53. கதிர் + ஈன – சேர்த்தெழுதுக.

(A) கதிரென
(B) கதியீன
(C) கதிரீன
(D) கதிரின்ன
(E) விடை தெரியவில்லை

54. அருந்துணை – பிரித்தெழுதுக.

(A) அருமை + துணை
(B) அரு + துணை
(C) அருமை + இணை
(D) அரு + இணை
(E) விடை தெரியவில்லை

55. எந்தமிழ்நா – பிரித்தெழுதுக.

(A) எந் + தமிழ் + நா
(B) எந்த + தமிழ் + நா
(C) எம் + தமிழ் + நா
(D) எந்தம் + தமிழ் + நா
(E) விடை தெரியவில்லை

56. சரியான நிறுத்தற்குறிகளை தருக.

(A) தமிழ்மொழி இனிமை, வளமை, சீர்மை மிக்கது.
(B) தமிழ்மொழி இனிமை, வளமை, சீர்மை, மிக்கது.
(C) தமிழ்மொழி இனிமை வளமை சீர்மை மிக்கது
(D) தமிழ்மொழி, இனிமை, வளமை, சீர்மை மிக்கது.
(E) விடை தெரியவில்லை

57. எதிர்ச்சொல்லை எடுத்தெழுதுக.

நல்லவர்கள் தூற்றும்படி வளர்ந்து விடாதே

(A) இகழும்படி
(B) போற்றும்படி
(C) துன்புறுத்தும்படி
(D) வணங்கும்படி
(E) விடை தெரியவில்லை

58. தவறான இணை எது?

(A) ஆழி – கடல்
(B) நாவாய் – கப்பல்
(C) பணி – வேலை
(D) பறவை – பரவை
(E) விடை தெரியவில்லை

59. பொருந்தாச் சொல்லைக் கண்டறிதல்.

(A) புள் – பறவை
(B) புள் – புல்
(C) பறவை – பறப்பது
(D) பனி – பணி
(E) விடை தெரியவில்லை

60. இதில் தவறான இணை எது?

(A) போற்றார் – பகைவர்
(B) கிளை – உறவினர்
(C) அலந்தவர் – வறியவர்
(D) பேதையார் – அறிவுடையார்
(E) விடை தெரியவில்லை

61. சந்திப்பிழையற்ற வாக்கியங்களைக் கண்டறிக.

(1) முல்லைக்குத் தேர்தந்து மழைமேகத்தை விடப்புகழ் பெற்றான் வள்ளல் பாரி

(2) முல்லைக்குத் தேர்தந்து மழைமேகத்தை விடபுகழ்ப் பெற்றான் வள்ளல் பாரி

(3) புலவரின் சொல்லுக்காக தன் தலையையே தரத் துணிந்தான் குமண வள்ளல்

(4) புலவரின் சொல்லுக்காகத் தன் தலையையே தர்த் துணிந்தான் குமண வள்ளல்

(A) (1) மற்றும் (3)

(B) (1) மற்றும் (4)

(C) (2) மற்றும் (3)

(D) (2) மற்றும் (4)

(E) விடை தெரியவில்லை

62. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக.

(A) தமிழ் – மூன்று

(B) மலையாளம் – மூணு

(C) துளு – மூஜி

(D) தெலுங்கு – மூரு

(E) விடை தெரியவில்லை

63. மரபு பிழைகள் (தொகைமரபு)

மரபுப் பிழையற்ற சொல்லுடன் இணை

ஆட்டு

(A) நிரை

(B) மந்தை

(C) கூட்டம்

(D) அணி அணியாக

(E) விடை தெரியவில்லை

64. மரபுப் பிழையை நீக்குக.

மயில் கத்த குயில் பாடியது

(A) மயில் அகவ குயில் கூவியது

(B) மயில் அலற குயில் கத்தியது

(C) மயில் ஆட குயில் பாடியது

(D) மயில் கத்த குயில் கரைந்தது

(E) விடை தெரியவில்லை

65. ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல் அறிக.

(A) Thesis – ஆய்வறிக்கை
(B) Intellectual – அறிவாளிகள்
(C) Chamber – அறை
(D) Emblem – அரசு பதிப்பு
(E) விடை தெரியவில்லை

66. ஒலி மரபுப் பிழைகளைத் திருத்துக.

அலறும் மயிலும் கூவும் ஆந்தையும்

அகவும் சேவலும்

(A) அகவும், அலறும், கூவும்
(B) அலறும், அகவும், கூவும்
(C) கூவும், அகவும், அலறும்
(D) அகவும், கூவும், அலறும்
(E) விடை தெரியவில்லை

67. ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து, சரியான இணையைத் தெரிவு செய்க.

பனி – பணி

(A) குளிர்ச்சி – பன்றி
(B) பன்றி – வேலை
(C) குளிர்ச்சி – வேலை
(D) வேலை – குளிர்ச்சி
(E) விடை தெரியவில்லை

68. ஒரு பொருள் தரும் பல சொற்கள்.

தாள், தண்டு, கோல், தூறு, தட்டு ஆகிய சொற்கள் தாவரத்தின் எப்பகுதியைக் குறிக்கும்?

(A) அடிப்பகுதி
(B) கிளை
(C) இலை
(D) இளம் பயிர்
(E) விடை தெரியவில்லை

69. ஒரு பொருள் தரும் பல சொற்கள்.

போது, அரும்பு, வீ, செம்மல் ஆகிய சொற்கள் எதனைக் குறிக்கும்?

(A) இலை வகை
(B) கொழுந்து வகை
(C) கிளைப் பிரிவு
(D) பூவின் நிலை
(E) விடை தெரியவில்லை

70. அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்தல்.

தங்கம், நம்பிக்கை, ஞாயிறு, விடுதலை

(A) தங்கம், ஞாயிறு, நம்பிக்கை, விடுதலை
(B) விடுதலை, நம்பிக்கை, தங்கம், ஞாயிறு
(C) ஞாயிறு, தங்கம், நம்பிக்கை, விடுதலை
(D) நம்பிக்கை, தங்கம், ஞாயிறு, விடுதலை
(E) விடை தெரியவில்லை

71. அகரவரிசைப்படி சொற்களைச் சீர் செய்தல்.

தையல், தம்பி, தீக்குச்சி, தாமரை, தும்பி

(A) தையல், தும்பி, தீக்குச்சி, தாமரை, தம்பி
(B) தும்பி, தையல், தாமரை, தீக்குச்சி, தம்பி
(C) தாமரை, தீக்குச்சி, தம்பி, தையல், தும்பி
(D) தம்பி, தாமரை, தீக்குச்சி, தும்பி, தையல்
(E) விடை தெரியவில்லை

72. பொருந்தாத சொல்லைக் கண்டறிக.

(A) சேலம் – மாங்கனி நகரம்
(B) சிவகாசி – முத்து நகரம்
(C) திருவண்ணாமலை – தீப நகரம்
(D) மதுரை – தூங்கா நகரம்
(E) விடை தெரியவில்லை

73. அகரவரிசைப்படி சொற்களைச் சீர் செய்தல்

கண், சுடர், சிவப்பு, கௌதாரி

(A) சிவப்பு, கௌதாரி, சுடர், கண்
(B) கண், கௌதாரி, சிவப்பு, சுடர்
(C) சுடர், கௌதாரி, கண், சிவப்பு
(D) சிவப்பு, சுடர், கௌதாரி, கண்
(E) விடை தெரியவில்லை

74. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குதல்.

சரியான தொடர் எது? கண்டறிந்து எழுதுக.

(A) கதிரவன் மறையும் காலையில் உதித்து, மாலையில்

(B) காலையில், மாலையில் உதித்து மறையும் கதிரவன்

(C) கதிரவன் காலையில் உதித்து, மாலையில் மறையும்

(D) மறையும் மாலையில் கதிரவன், உதித்து காலையில்

(E) விடை தெரியவில்லை

75. விடை வகையை கண்டறிக.

'கடைக்குப் போவாயா?' என்ற கேள்விக்குப் 'போக மாட்டேன்' என்று கூறுவது.

(A) மறை விடை

(B) எதிர் விடை

(C) நேர் விடை

(D) சுட்டு விடை

(E) விடை தெரியவில்லை

76. விடை வகையை கண்டறிதல்.

'பாடம் படிக்கிறாயா? என்ற வினாவிற்கு 'படிக்காமல் இருப்பேனா'? என்று கூறுவது.

(A) மறை விடை

(B) இனமொழி விடை

(C) நேர் விடை

(D) வினா எதிர் வினாதல் விடை

(E) விடை தெரியவில்லை

77. விடைக் கேற்ற வினா அமைக்க :

மனித முயற்சிகளுக்கு மாற்றாக தானே இயங்கும் இயந்திரம் தானியங்கி.

(A) தானே இயங்குவது தானியங்கியா?

(B) மனித முயற்சிகளுக்கு மாற்றாக தானியங்கி இயங்குகிறதா?

(C) மனித முயற்சிகளுக்கு மாற்றாக இயங்கும் எந்திரம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(D) தானியங்கியின் பணி மனித முயற்சிக்கு மாற்றாக இயங்குவதா?

(E) விடை தெரியவில்லை

78. உவமையால் விளக்கப் பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

'நகமும் சதையும் போல' – உவமை கூறும் பொருளை எழுதுக.

(A) வேற்றுமை
(B) நட்பு
(C) ஏமாற்றம்
(D) ஒற்றுமை
(E) விடை தெரியவில்லை

79. சரியான இணையைத் தேர்ந்தெடுக்க.

(A) Storm – கடற்காற்று
(B) Tempest – புயல்
(C) Tornado – சூறாவளி
(D) Sea Breeze – பெருங்காற்று
(E) விடை தெரியவில்லை

80. அலுவல் சார்ந்த கலைச்சொற்கள்

தவறான இணையைத் தேர்ந்தெடுக்க.

(A) Humanism – மனிதநேயம்
(B) Cultural Boundaries – பாரம்பரிய எல்லை
(C) Cabinet – அமைச்சரவை
(D) Cultural Values – பண்பாட்டு விழுமியங்கள்
(E) விடை தெரியவில்லை

81. விடை வகைகள்.

'உனக்குக் கவிதை எழுதத் தெரியுமா?' என்ற வினாவிற்குக் 'கட்டுரை எழுதத் தெரியும்' என்று கூறுவது.

(A) இனமொழி விடை
(B) உறுவது கூறல் விடை
(C) உற்றது உரைத்தல் விடை
(D) குறிப்பு விடை
(E) விடை தெரியவில்லை

82. நிறுத்தற்குறிகளை அறிதல்.

நிறுத்தற்குறிகள் (எது சரியானது)

(A) "கூரன் இங்கு வந்தாளா? அவள் எங்குச் சென்றாள் என்று தெரியுமா?"

(B) கூரன் இங்கு வந்தாளா! அவள் எங்குச் சென்றாள் என்று தெரியுமா.

(C) கூரன் இங்கு வந்தாளா. அவள் எங்குச் சென்றாள் என்று தெரியுமா?

(D) "கூரன் இங்கு வந்தாளா, அவள் எங்குச் சென்றாள் என்று தெரியுமா".

(E) விடை தெரியவில்லை

83. நிறுத்தற்குறிகளை அறிதல்.

நிறுத்தற்குறிகள் (எது சரியானது)

(A) சீர்மை என்பது ஒழுங்கு முறையைக் குறிக்கும் சொல்?

(B) உயர்திணை, அஃறிணை என இருவகைத் திணைகளை அறிவோம்.

(C) "பாகற்காய் கசப்புச்சுவை உடையது"

(D) தமிழ்மொழி பேசவும், படிக்கவும் எழுதவும் உகந்த மொழி!

(E) விடை தெரியவில்லை

84. அடிக்கோடிட்ட சொல்லின் எழுத்து வழக்கைத் தேர்ந்தெடு.

<u>வயித்துக்குக்</u> கஞ்சி ஊத்தி நாமும் குடிப்போம்

(A) வயிறுக்கு

(B) வயறுக்கு

(C) வவுறுக்கு

(D) வயிற்றுக்கு

(E) விடை தெரியவில்லை

85. பேச்சு வழக்கு எழுத்து வழக்கு

நீங்க சொன்ன எடத்துலதாண்ணே!

(A) நீங்க சொன்ன இடமே தான் அண்ணே!

(B) நீங்க சொன்ன இடத்தில்தான் அண்ணே!

(C) நீங்க சொன்ன இடத்தில் அண்ணே!

(D) நீங்க சொன்ன இடம் தான் அண்ணே!

(E) விடை தெரியவில்லை

86. சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு.

ஆழ்வார்கள் ———— பேர்?

(A) எப்படி
(B) எத்தனை
(C) ஏன்
(D) என்ன
(E) விடை தெரியவில்லை

87. சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு.

(A) நெல்லையப்பர் கோவில் எங்கு உள்ளது?
(B) நெல்லையப்பர் கோவில் எங்கு ஆனது?
(C) நெல்லையப்பர் கோவில் கற்களால் ஆனது?
(D) நெல்லையப்பர் கோவிலில் பெருஞ்சுவர் உள்ளது?
(E) விடை தெரியவில்லை

88. அழைப்பு மணி ————, கயல்விழி கதவைத் திறந்தார்.

(A) ஒலித்தது
(B) ஒலித்து
(C) ஒலித்ததால்
(D) ஒலிக்கும்
(E) விடை தெரியவில்லை

89. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | அடி அகரம் ஐ ஆதல் | 1. | செங்கதிர் |
| (b) | முன்நின்ற மெய் திரிதல் | 2. | பெருங்கொடை |
| (c) | ஆதிநீடல் | 3. | பைங்கூழ் |
| (d) | இனமிகல் | 4. | காரிருள் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 4 | 2 | 1 | 3 |
| (C) | 3 | 1 | 2 | 4 |
| (D) | 2 | 3 | 1 | 4 |

(E) விடை தெரியவில்லை

90. குறில் – நெடில் மாற்றம் பொருள் வேறுபாடு அறிக.

விதி – வீதி

(A) அகலம் – வீடு

(B) வரி விதித்தல் – தெரு

(C) தடைவிதித்தல் – தலைவலி

(D) வீடு பேறு – தலையெழுத்து

(E) விடை தெரியவில்லை

91. கூற்று – காரணம் : சரியா? தவறா?

'மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்

மன்னனின் கற்றோன் சிறப்புடையன்'

கூற்று : (1) இப்பாடலைப் பாடியவர் ஔவையார்

(2) ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், மூதுரை போன்ற நூல்களை இயற்றியுள்ளார்.

(3) இவ்வடிகள் ஆத்திச்சூடியில் இடம்பெற்றுள்ளன.

(A) கூற்று : (1), (2), (3) தவறு

(B) கூற்று : (1) சரி, (2), (3) தவறு

(C) கூற்று : (1), (2), (3) சரி

(D) கூற்று : (1), (2) சரி (3) மட்டும் தவறு

(E) விடை தெரியவில்லை

92. கூற்று – காரணம் : சரியா? தவறா?

கூற்று : (1) ஒரு நாட்டின் வளத்தைப் பாடுவதைப் புலவர்கள் கவிமரபாகக் கொண்டிருந்தனர்

கூற்று : (2) முத்தொள்ளாயிரம் சேரன், சோழன், பாண்டியன் ஆகியோருடைய நாடுகளின் வளங்களை நயமாக வெளிப்படுத்துகிறது.

(A) கூற்று இரண்டும் சரி

(B) கூற்று இரண்டும் தவறு

(C) கூற்று (2) மட்டும் சரி

(D) கூற்று (1) மட்டும் சரி

(E) விடை தெரியவில்லை

93. சொல்லுக்கு இணையான பொருள் தருக.

காமம், வெகுளி, மயக்கம்.

(A) ஈகை, கருணை, கோபம்
(B) கோபம், துன்பம், ஆசை
(C) கருணை, சினம், ஈகை
(D) ஆசை, சினம், அறியாமை
(E) விடை தெரியவில்லை

94. சொல்லுக்கு இணையான பொருள் காண்க.

ஊழி – ?

(A) வானம்
(B) யுகம்
(C) முறை
(D) சிறப்பு
(E) விடை தெரியவில்லை

95. பொருத்தமான விடையறிக.

(A) நீ வந்தேன்
(B) நீ வந்தாய்
(C) நாளை வந்தாய்
(D) நாளை வந்தேன்
(E) விடை தெரியவில்லை

96. சரியான கூட்டுப் பெயரைத் தெரிவு செய்க.

யானை

(A) யானை மந்தை
(B) யானைகள்
(C) யானை நிரை
(D) யானைக் கூட்டம்
(E) விடை தெரியவில்லை

97. முறையான தொடர் அமைப்பினைக் குறிப்பிடுக.

(A) தமிழர்களின் வீர விளையாட்டு தொன்மையான ஏறு தழுவுதல்
(B) தமிழர்களின் வீர விளையாட்டு ஏறு தழுவுதல் தொன்மையான
(C) தொன்மையான வீர விளையாட்டு தமிழர்களின் ஏறு தழுவுதல்
(D) தமிழர்களின் தொன்மையான வீர விளையாட்டு ஏறு தழுவுதல்
(E) விடை தெரியவில்லை

98. சொல்லையும் பொருளையும் பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | சாந்தம் | 1. | சிறப்பு |
| (b) | மகத்துவம் | 2. | உலகம் |
| (c) | தாரணி | 3. | கருணை |
| (d) | இரக்கம் | 4. | அமைதி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

(E) விடை தெரியவில்லை

99. ஒருமை பன்மை பிழை நீக்குக.

(A) சூரியன் உதித்தான்

(B) மாலையில் சூரியன் மறைந்தது

(C) நானும் அவனும் வந்தேன்

(D) மந்தையில் மேய்ப்பர்கள் வந்தார்கள்

(E) விடை தெரியவில்லை

100. ஒருமை பன்மை பிழை நீக்கி எழுதுக.

(A) கபிலன் வேலை செய்ததால் களைப்பாக இருக்கின்றார்கள்

(B) கபிலன் வேலை செய்ததால் களைப்பாக இருக்கிறான்

(C) கபிலன் வேலை செய்ததால் களைப்பாக இருக்கின்றன

(D) கபிலன் வேலை செய்ததால் களைப்பாக இருக்கின்றது

(E) விடை தெரியவில்லை

# பகுதி-அ - கட்டாயத் தமிழ்மொழித் தகுதித் தேர்வு
## (பத்தாம் வகுப்பு தரம்)

# Part-A - Compulsory Tamil Language Eligibility Test
## (SSLC Std)

| | |
|---|---|
| வினாக்கள் : 1–100 | மொத்த மதிப்பெண்கள் : 150 |
| Questions : 1–100 | Total Marks : 150 |

1. 'ஐ', 'ஔ' என்ற எழுத்துக்களின் இன எழுத்துகளைக் கண்டறிக

(A) அ, இ
(B) இ, உ
(C) ஈ, ஓ
(D) அய், அவ்
(E) விடை தெரியவில்லை

2. ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான பொருளை கண்டறிக.

| | கரை | | கறை |
|---|---|---|---|
| (A) | கரைதல் | – | அறை |
| (B) | ஓரம் | – | அழுக்கு |
| (C) | புரை | – | பறை |
| (D) | முதலை | – | முதல் |

(E) விடை தெரியவில்லை

3. சரியான நிறுத்தற் குறிகளைக் கண்டறிக.

(A) 'பாரத ஸ்டேட் வங்கி' 'இலா' என்னும் மென்பொருளை உருவாக்கியிருக்கிறது.

(B) பாரத ஸ்டேட் வங்கி, 'இலா' என்னும் மென்பொருளை உருவாக்கியிருக்கிறது.

(C) பாரத, ஸ்டேட் வங்கி "இலா" என்னும் மென்பொருளை உருவாக்கியிருக்கிறது.

(D) "பாரத ஸ்டேட் வங்கி" இலா என்னும் மென்பொருளை உருவாக்கியிருக்கிறது.

(E) விடை தெரியவில்லை

4. ஊர்ப் பெயர்களின் மரூஉவைக் கண்டுபிடிக்க.

தஞ்சாவூரின் மரூஉவைக் கண்டுபிடிக்க.

(A) சோணாடு

(B) பழையாறை

(C) தென்னாடு

(D) தஞ்சை

(E) விடை தெரியவில்லை

5. மரபுப் பிழையற்றதை எடுத்து எழுதுக.

(A) ஆடு அலப்பும்

(B) மயில் கூவும்

(C) நரி ஊளையிடும்

(D) நாய் கத்தும்

(E) விடை தெரியவில்லை

6. சொல்லைப் பிரித்துப் பொருந்தாத தொடரை அறிக.

கானடை

(A) கான் + அடை – காட்டைச்சேர்

(B) கான் + நடை – காட்டுக்கு நடத்தல்

(C) கால் + நடை – விலங்குகள்

(D) கால் + நடை – காலால் நடத்தல்

(E) விடை தெரியவில்லை

7. வேர்ச்சொல்லைத் தேர்வு செய்க.

கேட்டார்

(A) கேட்

(B) கேட்ட

(C) கேட்டு

(D) கேள்

(E) விடை தெரியவில்லை

8. வேர்ச்சொல்லை தேர்வு செய்தல்

எழுதுகிறாள்

(A) எழுதுகின்றார்

(B) எழுதுவாள்

(C) எழுது

(D) எழுதுகின்றாள்

(E) விடை தெரியவில்லை

9. தாமரை தன் தோழியுடன் ஞாயிற்றுக்கிழமை மாலையில் கடை வீதிக்குச் சென்றாள் - இவ்வாக்கியத்துக்கு பொருத்தமற்ற வினாச்சொல் இடம்பெற்றுள்ள தொடரைச் சுட்டுக.

(A) தாமரை எங்குச் சென்றாள்?

(B) தாமரை எப்படிச் சென்றாள்?

(C) தாமரையுடன் சென்றது யார்?

(D) தாமரை எப்பொழுதுச் சென்றாள்?

(E) விடை தெரியவில்லை

10. அகரவரிசைப்படி சொற்களை சீர் செய்க.

(A) பைந்தமிழ், பெருவெடிப்பு, பீடு, பேரண்டம்

(B) பீடு, பெருவெடிப்பு, பேரண்டம், பைந்தமிழ்

(C) பேரண்டம், பைந்தமிழ், பெருவெடிப்பு, பீடு

(D) பெருவெடிப்பு, பீடு, பேரண்டம், பைந்தமிழ்

(E) விடை தெரியவில்லை

11. சொற்களை இணைத்து புதியசொல் உருவாக்கல்.

'பூ' என்ற சொல்லோடு இணையாத சொல்லைக் கண்டறிக.

(A) மாலை

(B) மணி

(C) விலங்கு

(D) குண்டுமணி

(E) விடை தெரியவில்லை

12. கீழ்கண்ட வாக்கியங்களில் பேச்சு வழக்கில் அமைந்துள்ள வாக்கியத்தைக் கண்டறிக.

(A) தமிழ் இயல் இசை நாடகம் என முத்தமிழாய் வளர்ந்தது

(B) தமிழ் முதல் இடை கடை ஆகிய முச்சங்கங்களால் வளர்க்கப்பட்டது

(C) தமிழ் ஐம்பெருங்காப்பியங்களை அணிகலன்களாகப் பெற்றது

(D) தமிழ் படிச்சவங்களால் வளர்க்கப்பட்டது

(E) விடை தெரியவில்லை

13. சரியான வினாச் சொல் எது?

மனப்பாடச் செய்யுளைப் படித்தாயா?

(A) அறியாவினா (B) கொடைவினா

(C) அறிவினா (D) ஏவல்வினா

(E) விடை தெரியவில்லை

14. காண்பான்-கீழ்க்கண்டவற்றுள் எது சரி?

(A) நடந்து முடிந்தசெயலைக் குறிப்பது (B) நடந்த செயலைக் குறிப்பது

(C) நடக்கவிருக்கும் செயலைக் குறிப்பது (D) நடக்கும் செயலைக் குறிப்பது

(E) விடை தெரியவில்லை

15. கிறு, கின்று, ஆநின்று - எக்காலத்திற்கு உரிய இடைநிலைகள்?

(A) எதிர்கால இடைநிலைகள் (B) நிகழ்கால இடைநிலைகள்

(C) இறந்தகால இடைநிலைகள் (D) எதிர்மறை இடைநிலைகள்

(E) விடை தெரியவில்லை

16. விடைக்கேற்ற வினாவைக் கண்டறி.

'தென்னாட்டுப் பெர்னாட்ஷா' என்று அறிஞர் அண்ணா புகழப்படுகிறார்.

(A) அறிஞர் அண்ணா எவ்வாறு புகழப்படுகிறார்?

(B) அறிஞர் அண்ணா தென்னாட்டுப் பெர்னாட்ஷா என ஏன் புகழப்படுகிறார்

(C) பெர்னாட்ஷா யார்?

(D) பெர்னாட்ஷா எவ்வாறு புகழப்படுகிறார்?

(E) விடை தெரியவில்லை

17. சரியான இணையைத் தேர்ந்தெடு.

(A) அலை – கடலலை

(B) அளை – வரவழை

(C) அழை – நண்டு

(D) அனை – கூப்பிடு

(E) விடை தெரியவில்லை

18. சொற்களை ஒழுங்குபடுத்தி சரியான சொற்றொடரைத் தேர்க.

(A) சிறுபஞ்சமூலத்தின் ஒவ்வொரு ஐந்து பாடலிலும் கருத்துகள் இடம் பெற்றுள்ளன

(B) சிறுபஞ்சமூலத்தின் ஒவ்வொரு பாடலிலும் ஐந்து கருத்துகள் இடம்பெற்றுள்ளன

(C) ஒவ்வொரு பாடலிலும் ஐந்து கருத்துகள் சிறுபஞ்சமூலத்தின் இடம்பெற்றுள்ளன

(D) ஒவ்வொரு ஐந்து பாடலிலும் சிறுபஞ்சமூலம் இடம்பெற்றுள்ளன

(E) விடை தெரியவில்லை

19. ஊர்ப் பெயர்களின் மரூஉ

சரியான இணையைத் தெரிவு செய்க.

(A) கோயம்புத்தூர் – கோவைபுதூர்

(B) புதுச்சேரி – புதுவை

(C) கும்பகோணம் – கும்பை

(D) திருநெல்வேலி – நெய்வேலி

(E) விடை தெரியவில்லை

20. ஊர்ப்பெயரின் மரூஉவை எழுதுக.

(A) மாமல்லபுரம் – மயிலை

(B) செங்கல்பட்டு – செஞ்சி

(C) உதகமண்டலம் – உதகை

(D) புதுச்சேரி – புதுகை

(E) விடை தெரியவில்லை

21. இணையான தமிழ்ச் சொல்லைக் கண்டறிக.

'வெயிட்'

(A) எடை

(B) நிறை

(C) பருமன்

(D) தராசு

(E) விடை தெரியவில்லை

22. பிறமொழிச் (ஆங்கிலச்) சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொல்.

பேங்க் (BANK)

(A) பெட்டகம்

(B) இணையதள வணிகம்

(C) வணிக வளாகம்

(D) வங்கி

(E) விடை தெரியவில்லை

23. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைப் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | Aesthetis | 1. | தொன்மம் |
| (b) | Artifacts | 2. | கலைச்சொல் |
| (c) | Terminology | 3. | கலைப்படைப்புகள் |
| (d) | Myth | 4. | அழகியல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 4 | 2 | 3 | 1 |
| (C) | 1 | 3 | 4 | 2 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

(E) விடை தெரியவில்லை

24. விடை வகைகள் :

'விளையாட்டு மைதானம் எங்குள்ளது?' என்ற வினாவிற்கு 'இப்பக்கத்தில் உள்ளது' என உரைப்பது

(A) ஏவல் விடை

(B) மறை விடை

(C) நேர் விடை

(D) சுட்டு விடை

(E) விடை தெரியவில்லை

25. பொருத்தமான காலம் அமைத்தல்.

சரியான தொடரைத் தேர்ந்தேடு.

(A) கண்ணனைப் பார்த்தேன் (நிகழ்காலம்)

(B) கண்ணனைப் பார்க்கப் போகிறேன் (எதிர்காலம்)

(C) கண்ணனைப் பார்க்கிறேன் (இறந்தகாலம்)

(D) கண்ணனைப் பார்ப்பேன் (எதிர்காலம்)

(E) விடை தெரியவில்லை

26. சொற்களை இணைத்துப் புதிய சொற்கள் அமைக்க.

குருவி, கொய்யா, சோறு, பழம், போட்டி

(A) குருவி போட்டி

(B) கொய்யா சோறு

(C) சோறு போட்டி

(D) கொய்யாப் பழம்

(E) விடை தெரியவில்லை

27. பேச்சு வழக்கில் இருந்து எழுத்து வழக்காக மாற்றுக.

இப்ப எனக்குப் புரிஞ்சு போச்சு. நீயும் புரிஞ்சுக்கோ.

(A) இப்பொழுது எனக்கு புரிஞ்சுது. நீயும் புரிஞ்சுக்க.

(B) இப்பொழுது எனக்கு புரிந்துவிட்டது. நீயும் புரிந்துகொள்.

(C) இப்போ எனக்கு புரிஞ்சுருச்சு. நீயும் புரிந்துகொள்.

(D) இப்ப எனக்கு புரிந்துவிட்டது. நீயும் புரிஞ்சுக்க.

(E) விடை தெரியவில்லை

28. சரியான 'அகர' வரிசையைத் தேர்ந்தெடு

(A) தூசும், துகிரும், ஆரமும், அகிலும், முத்தும், மணியும்

(B) தூசும், துகிரும், முத்தும், மணியும், அகிலும், ஆரமும்

(C) அகிலும், ஆரமும், துகிரும், முத்தும், தூசும், மணியும்

(D) அகிலும், ஆரமும், துகிரும், தூசும், மணியும், முத்தும்

(E) விடை தெரியவில்லை

29. தொடரின் வகையைக் கண்டறிக.

- அவன் திரும்பினான்.

(A) பிறவினைத் தொடர்

(B) கட்டளைத் தொடர்

(C) தன்வினைத் தொடர்

(D) செய்தித் தொடர்

(E) விடை தெரியவில்லை

30. பிறருக்குக் கொடுத்தலே செல்வத்தின் பயன் ———— பிறருக்குக் கொடுத்து மகிழ்வோம்.

(A) மேலும்

(B) ஆகையால்

(C) ஏனெனில்

(D) அதனால்

(E) விடை தெரியவில்லை

31. தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது - இத்தொடருக்கு ஏற்ற வினா அமைத்திடுக.

(A) மழை ஏன் வெள்ளத்தில் மூழ்கியது?

(B) வெள்ளம் ஏன் மழையில் மூழ்கியது?

(C) மழையும் வெள்ளமும் ஏன் புவியில் மூழ்கியது?

(D) புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது?

(E) விடை தெரியவில்லை

32. பிரித்தெழுதுதல்.

'வெண்குடை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

(A) வெண் + குடை

(B) வெண்மை + குடை

(C) வெம் + குடை

(D) வெம்மை + குடை

(E) விடை தெரியவில்லை

33. சேர்த்தெழுதுதல்.

நிலவு + என்று என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

(A) நிலயென்று

(B) நிலவென்று

(C) நிலவன்று

(D) நிலவுஎன்று

(E) விடை தெரியவில்லை

34. உவமைக்கேற்ற பொருளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

நெல்லிக்காய் மூட்டையைக் கொட்டினாற்போல

(A) ஒற்றுமை

(B) நட்பு

(C) ஒற்றுமையின்மை

(D) பகைமை

(E) விடை தெரியவில்லை

35. வினைமுற்றுக்குரிய வேர்ச்சொல்லை எழுதுக - பயின்றாள்

(A) படி

(B) பயின்று

(C) பயின்ற

(D) பய்யில்

(E) விடை தெரியவில்லை

36. ஒரு பொருள் தரும் பல சொற்கள்

சூரியன்

(A) ஞாயிறு, பரிதி

(B) பரிதி, திங்கள்

(C) திங்கள், நிலவு

(D) நிலவு, கதிரவன்

(E) விடை தெரியவில்லை

37. ஒழுங்குபடுத்தப்பட்ட முறையான தொடரைத் தேர்க.

1. உலகம் தமிழ்மொழி வாழட்டும் உள்ள வரையிலும்.
2. உயிரெழுத்துகள் பிறக்கும் இடம் கழுத்து ஆகும்.
3. வென்றதை பகைவரை பாடும் இலக்கியம் ஆகும் பரணி.
4. அம்புவிடும் கலையை ஏகலை என்றது தமிழ்.

(A) 1 மற்றும் 3
(B) 2 மற்றும் 4
(C) 2 மற்றும் 3
(D) 3 மற்றும் 4
(E) விடை தெரியவில்லை

38. பிழையற்ற சரியான தொடரைக் கண்டறிக.

(A) எண் வீட்டுத் தோட்டத்தில் மலர்கள் மனம் வீசின.
(B) தேர்த்திருவிலாவிற்குச் சென்றனர்.
(C) வாழைப்பழம் உடலுக்கு மிகவும் நல்லது.
(D) இளைக்கு வேறு பெயர் தளை.
(E) விடை தெரியவில்லை

39. நிறுத்தற்குறியிட்ட சரியான தொடரைத் தேர்ந்தெடு.

(A) 11வது வயதிலேயே, அரசவையில் கவிதை எழுதி பாரதி என்னும் பட்டம் பெற்றார் பாரதியார்

(B) 11வது வயதிலேயே அரசவையில் கவிதை எழுதி "பாரதி" என்னும் பட்டம் பெற்றார் பாரதியார்

(C) 11வது வயதிலேயே, அரசவையில் கவிதை எழுதி 'பாரதி' என்னும் பட்டம் பெற்றார், பாரதியார்

(D) 11வது வயதிலேயே அரசவையில் கவிதை எழுதி 'பாரதி' என்னும் பட்டம் பெற்றார் பாரதியார்

(E) விடை தெரியவில்லை

40. சரியான நிறுத்தற்குறியிட்ட வாக்கியத்தைக் கண்டறிக.

(A) திருமணம்; வளைகாப்பு; பிறந்தநாள் போன்றவற்றை இல்லவிழாக்களாக கொண்டாடினர்.

(B) திருமணம்; வளைகாப்பு, பிறந்தநாள், போன்றவற்றை இல்லவிழாக்களாக கொண்டாடினர்.

(C) திருமணம் : வளைகாப்பு : பிறந்தநாள், போன்றவற்றை இல்ல விழாக்களாக கொண்டாடினர்.

(D) திருமணம், வளைகாப்பு, பிறந்தநாள் போன்றவற்றை இல்ல விழாக்களாக கொண்டாடினர்.

(E) விடை தெரியவில்லை

41. ஒரு பொருள் தரும் பல சொற்கள்

கிளி

(A) தத்தை, கிள்ளை

(B) உயிர், உண்மை

(C) வாய்மை, பொய்மை

(D) கண், உண்மை

(E) விடை தெரியவில்லை

42. ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிக.

| | | | |
|---|---|---|---|
| (a) | மூவேந்தர் | 1. | இறந்த, நிகழ், எதிர் |
| (b) | முக்கனி | 2. | சேரர், சோழர், பாண்டியர் |
| (c) | முத்தமிழ் | 3. | மா, பலா, வாழை |
| (d) | முக்காலம் | 4. | இயல், இசை, நாடகம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 2 | 1 | 4 | 3 |
| (D) | 3 | 2 | 4 | 1 |

(E) விடை தெரியவில்லை

43. தமிழ்ச் சொல் அறிக.

ப்ரௌசர் (Browser) என்ற ஆங்கிலச் சொல்லுக்கான தமிழ்ச் சொல் எது?

(A) சுட்டி
(B) உலவி
(C) செதுக்கி
(D) கணினி
(E) விடை தெரியவில்லை

44. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லைத் தெரிக.

Cultural Values

(A) கலை விழா
(B) கலாச்சாரப் பெருமை
(C) பண்பாட்டு எல்லை
(D) பண்பாட்டு விழுமியங்கள்
(E) விடை தெரியவில்லை

45. மரபுப் பிழையற்றதை எடுத்து எழுதுக.

புலி

(A) குட்டி
(B) குருளை
(C) பறழ்
(D) கன்று
(E) விடை தெரியவில்லை

46. சொல்லத்தகாத சொற்களை மறைத்துக் கூறுவது

(A) மரபு
(B) குழூஉக்குறி
(C) மரூஉ
(D) இடக்கர் அடக்கல்
(E) விடை தெரியவில்லை

47. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க.

(A) தொன்மை, தேங்காய், தெளவை, தோழன்
(B) தொன்மை, தெளவை, தோழன், தேங்காய்
(C) தேங்காய், தொன்மை, தோழன், தெளவை
(D) தேங்காய், தெளவை, தோழன், தொன்மை
(E) விடை தெரியவில்லை

48. 'கேள்'- என்ற வேர்ச் சொல்லின் வினைமுற்று கண்டறிக.

(A) கேட்ட
(B) கேட்டான்
(C) கேட்டு
(D) கேட்டல்
(E) விடை தெரியவில்லை

49. வேர்ச்சொல்லின் எதிர்மறை தொழிற்பெயரைக் காண்க - 'நட'

(A) நடத்தல்
(B) நடந்த
(C) நடவாமை
(D) நடந்தவன்
(E) விடை தெரியவில்லை

50. சொற்களை ஒழுங்குபடுத்துக.

"காவிய இன்பமும் ஒன்று வாழ்விற்குரிய இன்பத்துறைகளுள்"

(A) இன்பத்துறைகளுள் காவிய இன்பமும் ஒன்று வாழ்விற்குரிய
(B) காவிய் இன்பத்துறைகளுள் இன்பமும் வாழ்விற்குரிய ஒன்று
(C) ஒன்று காவிய இன்பமும் வாழ்விற்குரிய இன்பத்துறைகளுள்
(D) வாழ்விற்குரிய இன்பத்துறைகளுள் காவிய இன்பமும் ஒன்று
(E) விடை தெரியவில்லை

51. சந்திப் பிழை அற்ற வாக்கியங்களைக் கண்டறிக :

1. மாட்டைத் தழுவும் வீரருக்கு அந்தப் பணமுடிப்புச் சொந்தமாகும்.
2. மாட்டை தழுவும் வீரருக்கு அந்த பணமுடிப்பு சொந்தமாகும்.
3. தமிழ் மக்களின் வீரத்தை சொல்லும் கலையாகத் திகழ்வது புலி ஆட்டமாகும்.
4. தமிழ் மக்களின் வீரத்தைச் சொல்லும் கலையாகத் திகழ்வது புலி ஆட்டமாகும்.

(A) 1 மற்றும் 2
(B) 1 மற்றும் 4
(C) 2 மற்றும் 3
(D) 3 மற்றும் 4
(E) விடை தெரியவில்லை

52. வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றுக.

ஊட்டமிகு உணவு உண்டார் – அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.

(A) ஊட்டமிகு உணவு உண்டவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்

(B) ஊட்டமிகு உணவு உண்டதால் அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்

(C) ஊட்டமிகு உணவு உண்டு அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்

(D) ஊட்டமிகு உணவால் அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்

(E) விடை தெரியவில்லை

53. பொருந்தாத சொல்லைக் கண்டறிக

(A) கர்நாடகம்

(B) கேரளா

(C) இலங்கை

(D) ஆந்திரா

(E) விடை தெரியவில்லை

54. எதிர்ச்சொற்களைப் பொருத்துக :

1. எளிது – புரவலர்
2. ஈதல் – அரிது
3. அந்நியர் – ஏற்றல்
4. இரவலர் – உறவினர்

(A) 2 1 4 3

(B) 3 4 1 2

(C) 2 3 4 1

(D) 3 4 2 1

(E) விடை தெரியவில்லை

55. "புதுமணல்" – என்பதன் எதிர்ச்சொல் எழுதுக

(A) புதுமை மணல்
(B) புதிய மணல்
(C) பழமணல்
(D) பூமணல்
(E) விடை தெரியவில்லை

56. எதிர்சொல்லை எடுத்தெழுதுதல் :

இயற்கை

(A) வன்மை
(B) செயற்கை
(C) செழுமை
(D) வலிமை
(E) விடை தெரியவில்லை

57. பிரித்து எழுதுக :

"துயின்றிருந்தார்" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது.

(A) துயின்று + இருந்தார்
(B) துயில் + இருந்தார்
(C) துயின்றி + இருந்தார்
(D) துயின் + இருந்தார்
(E) விடை தெரியவில்லை

58. விடை வகைகள் :

'நீ சாப்பிட வில்லையா?' என்ற வினாவிற்கு "சாப்பிட்டால் தூக்கம் வரும்" என்று உரைப்பது.

(A) இன மொழி விடை
(B) உறுவது கூறல் விடை
(C) உற்றது உரைத்தல் விடை
(D) நேர் விடை
(E) விடை தெரியவில்லை

59. அலுவல் சார்ந்த கலைச் சொற்களை கண்டறிந்து எழுதுக :

ஃபோல்டர் (Folder)

(A) கோப்பு

(B) இழுவை முத்திரை

(C) மை பொதி

(D) மடிப்புத்தாள்

(E) விடை தெரியவில்லை

60. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுதல்.

தன்வினை, பிறவினை, செய்வினை, செயப்பாட்டு வினை வாக்கியங்களைக் கண்டெழுதுதல்:

வாக்கிய அமைப்பினைக் கண்டறிக.

தோசை வைக்கப்பட்டது.

(A) செயப்பாட்டு வினை

(B) தன்வினை

(C) பிறவினை

(D) செய்வினை

(E) விடை தெரியவில்லை

பின்வரும் பத்தியைப் படித்து வினாவிற்கேற்ற விடையளிக்கவும் (61 – 65) :

காமராசரின் வீட்டுக்குள் ஒரு சிறுவனும் அவனுடைய தங்கையும் நுழைய முயன்றனர். ஊழியர் அவர்களைத் தடுப்பதைக் காமராசர் கவனித்தார் உடனே அவர்களை உள்ளே அழைத்தார். யாரைப் பார்க்க வந்தீங்க? என்று அன்புடன் வினவினார். "எங்க அண்ணனுக்குத் தேர்வுக்குப் பணம் கட்ட அம்மாவிடம் வசதியில்லே. உங்களைப் பார்த்தால், என்று சிறுமி கூறி முடிப்பதற்குள் அம்மா அனுப்பி விட்டாரா?" என்று காமராசர் கேட்டார். இல்லை நாங்களாகத்தான் வந்தோம். அம்மா அப்பளம் போட்டு வீடு வீடாகக் கொண்டு போய் வித்திட்டு வருவாங்க அதில் வரும் வருமானத்தை வச்சுத்தான் எங்களைப் படிக்க வைக்கிறாங்க" என்று குழந்தைகள் கூறினர். அதனைக் கேட்டதும் மாடியேறிச் சென்று பணத்தைக் கொண்டு வந்து கொடுத்தார்.

மறுநாள் குழந்தைகள் இருவரும் காமராசரைத் தேடி வந்தனர். ஐயா தேர்வுக்குப் பணம் கட்டியாச்சு இந்த இரசீதை (பற்றுச் சீட்டை) அம்மா உங்களிடம் காட்டிட்டு வரச் சொன்னாங்க என்றனர். அதனைக் கேட்டு காமராசர் மனம் நெகிழ்ந்தார்.

61. காமராசரின் வீட்டிற்குள் நுழைய முயன்றவர்கள் யார்?

(A) பெற்றோர்
(B) மக்கள்
(C) சிறுவன் – சிறுமி
(D) ஆசிரியர்கள்
(E) விடை தெரியவில்லை

62. இந்நிகழ்வு சிறுவனது குடும்பத்தின் எப்பண்பை விளக்குகிறது?

(A) ஏழ்மை
(B) நேர்மை
(C) உழைப்பு
(D) கல்லாமை
(E) விடை தெரியவில்லை

63. மறுநாள் குழந்தைகள் வந்ததும் காமராசர் மனம் எப்படியிருந்தது?

(A) மகிழ்ந்தார்
(B) நெகிழ்ந்தார்
(C) துன்பப்பட்டார்
(D) கோபப்பட்டார்
(E) விடை தெரியவில்லை

64. சிறுவனும் சிறுமியும் எதற்காக காமராசரின் வீட்டிற்கு வந்தனர்?

(A) தேர்வுக்கு பணம் கட்ட
(B) புத்தகம் வாங்க
(C) பொருள் வாங்க
(D) பேனா வாங்க
(E) விடை தெரியவில்லை

65. மறுநாள் குழந்தைகள் எதைக் கொண்டு வந்தனர்?

(A) இரும்புப்பெட்டி
(B) இரசீதை (பற்றுச்சீட்டு)
(C) கடிதம்
(D) உணவு
(E) விடை தெரியவில்லை

66. ஒருமை பன்மை பிழையற்றதைக் கண்டறிக

(A) மேகங்கள் சூழ்ந்து கொண்டது
(B) மேகம் சூழ்ந்து கொண்டன
(C) மேகம் சூழ்ந்து கொண்டது
(D) மேகம் சூழ்ந்து கொள்கின்றன
(E) விடை தெரியவில்லை

67. கீழ்க்காணும் தொடர்களில் தன்மை ஒருமை தொடரைத் தேர்க

(A) நான் அல்லோம்
(B) நாம் அல்லோம்
(C) அவன் அல்லன்
(D) நான் அல்லேன்
(E) விடை தெரியவில்லை

68. ஒருமை, பன்மை பிழையற்ற வாக்கியத்தைக் கண்டறிக

(A) மல்லிகை குளத்தில் பூக்கும் மலர் அல்லை

(B) மல்லிகை குளத்தில் பூக்கும் மலர் அன்று

(C) மல்லிகை குளத்தில் பூக்கும் மலர் அல்ல

(D) மல்லிகை குளத்தில் பூக்கும் மலர் அல்லேன்

(E) விடை தெரியவில்லை

69. தவறான பொருத்தம் எது?

(A) திங்கள் – மாதம்

(B) ஓடு – மேற்கூரை

(C) நகை – மெய்ப்பாடு

(D) அரம் – ஆயுதம்

(E) விடை தெரியவில்லை

70. சரியான பொருத்தம் :

| | சொல் | | பொருள் |
|---|---|---|---|
| (A) | யாக்கை | – | காக்கை |
| (B) | சேக்கை | – | படுக்கை |
| (C) | பிணித்து | – | பிணி |
| (D) | வாய்ந்த | – | வாய்ச்சொல் |

(E) விடை தெரியவில்லை

71. சொல்லை ஏற்புடைய பொருளுடன் பொருத்துக :

(A) மயலுறுத்து – சீராக

(B) அருகுற – அருகில்

(C) லயத்துடன் – தீராத

(D) மாளாத – மயங்கச்செய்

(E) விடை தெரியவில்லை

72. பிழையற்ற தொடரை அறிக :

(A) செழியன் விளையாட வந்தது

(B) கண்ணகி மதுரையை எரித்தான்

(C) மாடலன் நேற்று வந்தான்

(D) செல்வன் பாடங்களைப் படித்து வந்தாள்

(E) விடை தெரியவில்லை

73. மரபுச் சொற்களைப் பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | கிளி | 1. | கூவும் |
| (b) | மயில் | 2. | பேசும் |
| (c) | ஆந்தை | 3. | அகவும் |
| (d) | சேவல் | 4. | அலறும் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 3 | 1 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 3 | 2 | 1 | 4 |
| (D) | 3 | 1 | 4 | 2 |

(E) விடை தெரியவில்லை

74. பண்டைத் தமிழர்களின் அரிய வரலாற்றுச் செய்திகள் அடங்கி பண்பாட்டுக் கருவூலமாகத் திகழும் நூல் எது?

(A) புறநானூறு
(B) பழமொழி நானூறு
(C) அகநானூறு
(D) பாஞ்சாலி சபதம்
(E) விடை தெரியவில்லை

75. 'தூது இலக்கியம்' வேறு எந்த பெயரால் அழைக்கப்படுகிறது?

(A) சிந்து இலக்கியம்
(B) சந்து இலக்கியம்
(C) சங்க இலக்கியம்
(D) காதல் இலக்கியம்
(E) விடை தெரியவில்லை

76. மக்கள் – கூட்டுப்பெயர் :

சரியான எண்ணடையைக் கண்டறிக

(A) மக்கள் மந்தை
(B) மக்கள் கூட்டம்
(C) மக்கள் திரள்
(D) மக்கள் குவியல்
(E) விடை தெரியவில்லை

77. பொருத்தமற்ற தொடரை அறிக

(A) அவரை கொத்துக் கொத்தாய்க் காய்க்கும்
(B) முந்திரி குலை குலையாய்க் காய்க்கும்
(C) வைக்கோலைக் கற்றை கற்றையாய்க் கட்டி வைத்தனர்
(D) மக்கள் குவியல் குவியலாய்த் திரண்டனர்
(E) விடை தெரியவில்லை

78. தகுந்த சொல்லைத் தேர்ந்தெடு :

பிறர் நமக்குச் செய்யும் தீங்கைப் பொறுத்துக் கொள்வது _____

(A) வம்பு
(B) அமைதி
(C) அடக்கம்
(D) பொறை
(E) விடை தெரியவில்லை

79. பொருத்தமான பொருளைத் தெரிவு செய்தல் :

_____ விலங்கிடம் பழகாதே.

(A) நல்ல
(B) பெரிய
(C) இனிய
(D) கொடிய
(E) விடை தெரியவில்லை

80. சரியான கலைச் சொல்லைத் தேர்ந்தெடுக்க.

Passenger Name Record

(A) பயணியர் வருகைப் பதிவு
(B) பயணியர் முன்பதிவு
(C) பயணியர் பெயர்ப்பதிவு
(D) பயணியர் அவசரப்பதிவு
(E) விடை தெரியவில்லை

81. Irrigation – ஏற்ற தமிழ்ச்சொல் கண்டறிக

(A) நிலப்பகுதி
(B) காப்புரிமை
(C) பாசனம்
(D) வயல்
(E) விடை தெரியவில்லை

82. 'Puppetry' – என்ற ஆங்கிலச் சொல்லுக்கு கீழ்க்காணும் விடைகளில் எது சரியானது?

(A) சிலம்பாட்டம்
(B) கோலாட்டம்
(C) பொம்மலாட்டம்
(D) கரகாட்டம்
(E) விடை தெரியவில்லை

83. கூற்று, காரணம் – சரியா? தவறா?

கூற்று : நடுவண் அரசு தமிழை செம்மொழியாக அறிவித்த ஆண்டு 2004.

காரணம் : உலக மொழிகளில் மூத்தமொழி தமிழ்.

(A) கூற்று தவறு, காரணம் சரி
(B) கூற்று சரி, காரணம் தவறு
(C) கூற்று சரி, காரணம் சரி
(D) கூற்று தவறு, காரணம் தவறு
(E) விடை தெரியவில்லை

84. கூற்று, காரணம் – சரியா? தவறா?

கூற்று : நல்லொழுக்கமே நல்ல மனிதர்களை உருவாக்கும்.

காரணம் : நாம் பின்பற்ற வேண்டிய நற்பண்புகளை அற நூல்கள் விளக்குகின்றன.

(A) கூற்று தவறு, காரணம் சரி

(B) கூற்று சரி, காரணம் தவறு

(C) கூற்று சரி, காரணம் சரி

(D) கூற்று தவறு, காரணம் தவறு

(E) விடை தெரியவில்லை

85. குறில் நெடில் மாற்றம் அறிந்து, பொருள் வேறுபாடு சரியானதைக் கண்டறிக :

| | வனம் | | வானம் |
|---|---|---|---|
| (A) | விசும்பு | – | அரண் |
| (B) | கான் | – | விசும்பு |
| (C) | முளி | – | ஆரம்பம் |
| (D) | சோலை | – | பொழில் |

(E) விடை தெரியவில்லை

86. குறில் நெடில் மாற்றம் அறிந்து பொருள் வேறுபாடு சரியானதைக் கண்டறிக :

| | மலை | | மாலை |
|---|---|---|---|
| (A) | மழை | – | வெள்ளம் |
| (B) | தொடுதல் | – | விடுதல் |
| (C) | சிகரம் | – | சிறு பொழுது |
| (D) | விலங்கு | – | ஓவியம் |

(E) விடை தெரியவில்லை

87. கீழ்கண்ட சொற்களில் வேகமாக நடத்தல், கூரையாக பயன்படுத்தும் பொருள் என்பதைக் குறிக்கும் சொல்லைக் கண்டறிக

(A) வீடு
(B) தேடு
(C) நாடு
(D) ஓடு
(E) விடை தெரியவில்லை

88. இரு பொருள் தருக. ஒரு சொல்லால் நிரப்பு :

மழலை பேசும் _____ அழகு.

இனிமைத் தமிழ் _____ எமது.

(A) பேச்சு
(B) மொழி
(C) சொல்
(D) செப்புதல்
(E) விடை தெரியவில்லை

89. இரு பொருள் கொண்ட ஒரு சொல் :

நீ அறிந்ததைப் பிறருக்கு _____

எழுத்துகள் தொடர்ந்து நின்று பொருள் தருவது _____

(A) சொல்
(B) பதம்
(C) வார்த்தை
(D) கிளவி
(E) விடை தெரியவில்லை

90. அடைப்புக்குள் உள்ள சொல்லை தகுந்த இடத்தில் சேர்க்க (அழகாக)

(A) ஊர்தி _____ சென்றது.

(B) காலம் _____ ஓடுகிறது.

(C) சங்க இலக்கியம் வாழ்க்கையை _____ காட்டுகிறது.

(D) இணையத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டதை அனைவருக்கும் _____ காட்டு.

(E) விடை தெரியவில்லை

91. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க (பெண்ணும்)

(A) ஆணும் _____ சமம்.

(B) சேவலும் _____ பறவைகள்

(C) _____ ஆய்ச்சியும் முல்லை நில மக்கள்.

(D) தந்தை தாயை _____ ஐயை என்பர்.

(E) விடை தெரியவில்லை

92. சரியான இணைப்புச் சொல் எது?

காயிதே மில்லத் அவர்கள் மகிழுந்தில் பயணம் செய்வதை விரும்பாதவர் _____ அவர் எளிமையை விரும்பியவர்.

(A) மேலும்

(B) ஆகையால்

(C) ஏனெனில்

(D) எனவே

(E) விடை தெரியவில்லை

93. சரியான இணைப்புச் சொல் எது?

அறிவைவிட மிகவும் முக்கியமானது கற்பனைத் திறன் ———— அறிவு என்பது நாம் தற்போது அறிந்தும் புரிந்தும் வைத்திருப்பவற்றோடு முடிந்து விடுகிறது.

(A) அதனால்
(B) அதுபோல
(C) ஏனெனில்
(D) எனவே
(E) விடை தெரியவில்லை

94. உவமைக்கு ஏற்ற பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடுத்து எழுதுக :

'மழைமுகம் காணாப்பயிர் போல'

(A) ஏக்கம்
(B) இரக்கம்
(C) நட்பு
(D) பகைமை
(E) விடை தெரியவில்லை

95. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுதல்.

தன்வினை, பிறவினை, செய்வினை, செயப்பாட்டு வினை வாக்கியங்களை கண்டெழுதுதல்:

தன்வினை வாக்கியத்தை தேர்ந்தெடுக்க

(A) கயல்விழி காலையில் படித்தாளா?
(B) கயல்விழி காலையில் படித்தாள்
(C) கயல்விழி காலையில் படிக்கவில்லை
(D) கயல்விழி காலையில் படிப்பித்தாள்
(E) விடை தெரியவில்லை

96. கவிதா பாடம் படித்தாள் – இத்தொடரை பிறவினையாக்குக.

(A) பாடம் கவிதாவால் படிக்கப்பட்டது

(B) கவிதா பாடம் படிப்பித்தாள்

(C) பாடத்தைப் படித்தவள் கவிதா

(D) கவிதா பாடத்தைப் படிக்கவில்லை

(E) விடை தெரியவில்லை

97. வாக்கிய அமைப்பினைக் கண்டறிக :

பந்து உருண்டது

(A) தன்வினைத் தொடர்

(B) பிறவினைத் தொடர்

(C) செயப்பாட்டு வினைத்தொடர்

(D) எதிர்மறை வினைத்தொடர்

(E) விடை தெரியவில்லை

98. விடைக்கேற்ற வினா அமைக்க :

தமிழ் நாட்டில் வனக்கல்லூரி அமைந்துள்ள இடம் மேட்டுப்பாளையம் ஆகும்.

(A) கால்நடை வளங்கள் என்றால் என்ன?

(B) தமிழ் நாட்டில் உள்ள வனக்கல்லூரிகளின் எண்ணிக்கை எவ்வளவு?

(C) தமிழ் நாட்டில் வனக்கல்லூரி அமைந்துள்ள இடம் எது?

(D) காடு என்பதன் மற்றொரு பொருள் என்ன?

(E) விடை தெரியவில்லை

99. விடைக்கேற்ற வினா அமைத்தல் :

எனக்கு கதை எழுதத் தெரியும்

(A) உனக்கு கதை எழுதத் தெரியுமா?

(B) உனக்கு எழுதத் தெரிந்த கதை எது?

(C) உனக்குத் தெரிந்த கதைகள் என்னென்ன?

(D) உனக்குத் தெரிந்த கதைகளைக் கூறு?

(E) விடை தெரியவில்லை

100. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ் சொல் அறிக :

| | | | |
|---|---|---|---|
| (a) Satellite | | 1. | மீத்திறன் கணினி |
| (b) Intelligence | | 2. | செயற்கைக் கோள் |
| (c) Super Computer | | 3. | செயற்கை நுண்ணறிவு |
| (d) Artificial Intelligence | | 4. | நுண்ணறிவு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 1 | 3 |
| (B) | 3 | 2 | 1 | 4 |
| (C) | 2 | 3 | 1 | 4 |
| (D) | 1 | 4 | 2 | 3 |

(E) விடை தெரியவில்லை

# பகுதி-அ (தமிழ்)

## Part-A (Tamil)

**வினாக்கள் : 1–100** **மொத்த மதிப்பெண்கள் : 150**

**Questions : 1–100** **Total Marks : 150**

---

1. வேர்ச்சொல்லுக்குரிய வினையெச்சம் இடம்பெறாத இணையைத் தேர்ந்தெடுக்க.

(A) வா - வந்து
(B) காண் - கண்ட
(C) கொள் - கொண்டு
(D) நில் - நின்று
(E) விடை தெரியவில்லை

2. வேர்ச்சொல்லைத் தேர்வு செய்க.

வாழியர்

(A) வாழ்
(B) வாழி
(C) வா
(D) வாழிய
(E) விடை தெரியவில்லை

3. ஒரு பொருள் தரும் பல சொற்கள் "நெருப்பு"

(A) அனல், கனல்
(B) தணல், வெயில்
(C) தண்ணீர், தீ
(D) வெயில், குளிர்
(E) விடை தெரியவில்லை

4. ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான பொருளை கண்டறிக.

| | அலை | அளை |
|---|---|---|
| (A) | கூப்பிடு | தயிர் |
| (B) | நத்தை | சேறு |
| (C) | துன்பம் | சோறு |
| (D) | கடல் | பாம்புப்புற்று |
| (E) | விடை தெரியவில்லை | |

5. விலை, விளை, விழை போன்ற சொற்களுக்குச் சரியான பொருள் வேறுபாட்டைத் தேர்வு செய்க

(A) உண்டாக்குதல், விரும்பு, பொருளின் மதிப்பு

(B) விரும்பு, பொருளின் மதிப்பு, உண்டாக்குதல்

(C) விரும்பு, உண்டாக்குதல், பொருளின் மதிப்பு

(D) பொருளின் மதிப்பு, உண்டாக்குதல், விரும்பு

(E) விடை தெரியவில்லை

6. கீழ்க்கண்டவற்றுள் திசைச்சொற்களைக் கண்டறிக :

(A) மண், பொன்

(B) சாவி, சன்னல்

(C) அழுவம், வங்கம்

(D) விடம், மடம்

(E) விடை தெரியவில்லை

7. 'சமுதாயம்' என்ற வடசொல்லின் நேரான தமிழ்ச்சொல்

(A) மன்பதை (B) குழாம்

(C) நெறி (D) உண்மை

(E) விடை தெரியவில்லை

8. பிழை திருத்தம்

சந்திப் பிழை அற்ற வாக்கியங்களைக் கண்டறிக.

1. பிறநாட்டுச் சிற்பங்களைக் காட்டிலும் தமிழகச் சிற்பங்கள் தனித்தன்மையுடன் திகழ்கின்றன.

2. பிறநாட்டுச் சிற்பங்களை காட்டிலும் தமிழக சிற்பங்கள் தனிதன்மையுடன் திகழ்கின்றன.

3. முன்பகுதி மட்டும் தெரியும்படி அமைக்கப்பட்ட சிற்பங்களைப் புடைப்புச் சிற்பங்கள் எனலாம்.

4. முன்பகுதி மட்டும் தெரியும்படி அமைக்கப்பட்ட சிற்பங்களை புடைப்புச் சிற்பங்கள் எனலாம்.

(A) 1 மற்றும் 3 (B) 3 மற்றும் 4

(C) 2 மற்றும் 3 (D) 1 மற்றும் 4

(E) விடை தெரியவில்லை

9. உவமைக்கு ஏற்ற பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
'தாமரை இலை நீர்போல'

(A) ஏமாற்றம் (B) பற்றுதல் இன்றி

(C) ஏற்றம் (D) இரக்கம்

(E) விடை தெரியவில்லை

10. பொருந்தா இணையைக் கண்டறிக.

(A) தாய்தந்தை – உம்மைத்தொகை

(B) பொற்றொடி வந்தாள் – உவமைத்தொகை

(C) பனைமரம் – இருபெயரொட்டுப் பண்புத்தொகை

(D) வளர்தமிழ் – வினைத்தொகை

(E) விடை தெரியவில்லை

11. சொல்லுக்குரிய பொருளை அறிக.

பொம்மல்

(A) பொம்மை
(B) சோறு
(C) பொம்மலாட்டம்
(D) பொதும்பல்
(E) விடை தெரியவில்லை

12. பொருந்தாச் சொல்லைக் கண்டறிதல்.

குளிர் காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள்

(A) குறிஞ்சி, மருதம் நிலங்கள்
(B) மருதம், நெய்தல் நிலங்கள்
(C) குறிஞ்சி, நெய்தல் நிலங்கள்
(D) முல்லை, பாலை நிலங்கள்
(E) விடை தெரியவில்லை

13. வினைகளின் பொருள் வேறுபாடு அறிந்து பொருள் கூறு.

விலை - விளை

(A) உண்டாக்குதல் - பொருளின் மதிப்பு
(B) பொருளின் மதிப்பு - விரும்பு
(C) உண்டாக்குதல் - விரும்பு
(D) பொருளின் மதிப்பு - உண்டாக்குதல்
(E) விடை தெரியவில்லை

14. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுதல்.

கரிகாலன் கல்லணையைக் கட்டினான்

(A) செய்வினை வாக்கியம்
(B) செயப்பாட்டு வினை வாக்கியம்
(C) தன்வினை வாக்கியம்
(D) பிறவினை வாக்கியம்
(E) விடை தெரியவில்லை

15. கீழ்க்கண்டவற்றுள் செயப்பாட்டு வினைத்தொடர் எது எனக் கண்டறிக.

(A) ஓட்டுநரா பேருந்தை இயக்கினார்?

(B) ஓட்டுநர் பேருந்தை இயக்கினார்.

(C) ஓட்டுநரால் பேருந்து இயக்கப்பட்டது.

(D) ஓட்டுநர் பேருந்தை இயக்கவில்லை

(E) விடை தெரியவில்லை

16. பிறவினைச் சொற்றொடரைக் கண்டறிக.

(A) பூங்குழலி திருக்குறள் கற்றள்

(B) பூங்குழலி திருக்குறள் கற்கவில்லை

(C) பூங்குழலி திருக்குறள் கற்றாளா?

(D) பூங்குழலி திருக்குறள் கற்பித்தாள்

(E) விடை தெரியவில்லை

17. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுத்தல்.
தூது இலக்கியம் சிற்றிலக்கிய வகையைச் சார்ந்தது.

(A) தூது இலக்கியம் எவ்வகையைச் சார்ந்தது?

(B) சங்க இலக்கியத்தை சார்ந்ததா?

(C) தூது இலக்கியம் எக்காலத்தைக் குறிக்கிறது?

(D) சங்க மருவிய கால நூல்கள் என்னென்ன?

(E) விடை தெரியவில்லை

18. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுத்தல்.
எங்கள் வீட்டில் தக்காளி இல்லை

(A) உங்கள் வீட்டில் இருக்கிற தக்காளி எவ்வளவு?

(B) உங்கள் வீட்டில் தக்காளி இருக்கிறதா?

(C) தக்காளி வீட்டில் இருக்கிறதா?

(D) தக்காளி உங்கள் வீட்டில் எவ்வளவு இருக்கிறது?

(E) விடை தெரியவில்லை

19. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுத்தல்.

திருக்குறள் 1330 குறள்பாக்களைக் கொண்டுள்ளது.

(A) திருக்குறள் எத்தனை குறள்பாக்களைக் கொண்டுள்ளது?

(B) திருக்குறள் அதிகாரங்கள் எத்தனை?

(C) திருக்குறள் எதற்கான குறள்களைக் கொண்டுள்ளது?

(D) திருக்குறளை இயற்றியவர் யார்?

(E) விடை தெரியவில்லை

20. அகரவரிசைப்படி சொற்களை சீர் செய்க.

(A) கிளி, தையல், மனிதன், தேனீ

(B) கிளி, மனிதன், தையல், தேனீ

(C) கிளி, தேனீ, தையல், மனிதன்

(D) தையல், தேனீ, கிளி, மனிதன்

(E) விடை தெரியவில்லை

21. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | உழைப்புக்கு கொடுப்பது | 1. | குரல் |
| (b) | உரிமைக்கு கொடுப்பது | 2. | உணவு |
| (c) | கவலைக்கு கொடுப்பது | 3. | கூலி |
| (d) | பசித்தவனுக்கு கொடுப்பது | 4. | விடை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 1 | 4 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 1 | 4 | 3 | 2 |
| (D) | 3 | 1 | 4 | 2 |

(E) விடை தெரியவில்லை

22. சொற்களை ஒழுங்குபடுத்துக

'முறையாகப் பண்டமாற்று வணிகம் தொடங்கியது'

(A) வணிகம் பண்டமாற்று முறையாகத் தொடங்கியது

(B) பண்டமாற்று வணிகம் தொடங்கியது முறையாக

(C) முறையாகத் தொடங்கியது பண்டமாற்று வணிகம்

(D) வணிகம் தொடங்கியது பண்டமாற்று முறையாக

(E) விடை தெரியவில்லை

23. சொற்களை ஒழுங்குபடுத்துக.

"செயற்கை நுண்ணறிவுக் காலத்தில் இருக்கிறோம் இப்போது நாம்"

(A) இப்போது இருக்கிறோம் செயற்கை நுண்ணறிவுக் காலத்தில் நாம்

(B) இருக்கிறோம் செயற்கை நுண்ணறிவுக் காலத்தில் நாம் இப்போது

(C) இருக்கிறோம் நாம் இப்போது செயற்கை நுண்ணறிவுக் காலத்தில்

(D) நாம் இப்போது செயற்கை நுண்ணறிவுக் காலத்தில் இருக்கிறோம்

(E) விடை தெரியவில்லை

24. பொருத்தமான காலம் அமைத்தல்

சரியானத் தொடரைத் தேர்ந்தெடு

(A) மாலனை கந்தன் வீழ்த்தினான் (இறந்த காலம்)

(B) மாலனை கந்தன் வீழ்த்துவான் (நிகழ்காலம்)

(C) மாலனை கந்தன் வீழ்த்துகிறான் (எதிர்காலம்)

(D) மாலனை கந்தன் வீழ்த்திச் சென்றான் (நிகழ்காலம்)

(E) விடை தெரியவில்லை

25. சொற்களை இணைத்து புதிய சொல் உருவாக்கு.

ஆடு - சரியான சொல்

(A) கன்று
(B) குட்டி
(C) குழவி
(D) குருளை
(E) விடை தெரியவில்லை

26. சொற்களை இணைத்துப் புதிய சொற்கள் அமைக்க.

விளையாட்டு, பறவை, பாட்டு, திடல்

(A) பறவை பாட்டு
(B) பாட்டு விளையாட்டு
(C) விளையாட்டுத் திடல்
(D) பறவை விளையாட்டு
(E) விடை தெரியவில்லை

27. சரியான எழுத்து வழக்கினைக் கண்டறிக:

தேங்கா விழுந்து மண்ட உடைஞ்சது

(A) தேங்கா உழுந்து மண்டை உடைந்தது
(B) தேங்காய் விழுந்து மண்ட உடைந்தது
(C) தேங்காய் விழுந்து மண்டை உடைந்தது
(D) தேங்காய் விழுந்து மண்டை உடைஞ்சது
(E) விடை தெரியவில்லை

28. பேச்சுத் தமிழில் அமைந்த தொடரைத் தேர்ந்தெடு.

(A) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்
(B) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது
(C) வறட்சி அனைத்து இடங்களையும் பாதித்துள்ளது
(D) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன
(E) விடை தெரியவில்லை

29. பின்வரும் தொடர்களில் எழுத்து வழக்குத் தொடரைக் கண்டறிக.

(A) முயற்சி செஞ்சா அதுக்கேத்த பலன் வராமல் போவாது

(B) தேர்வெழுத வேகமாகப் போங்க் நேரமானால் பதட்டமாயிரும்

(C) காலையில் எழுந்து படித்தால் ஒரு தெளிவு கிடைக்கும்

(D) காலத்துக்கேத்த மாதிரி புதுசு புதுசா மொழி வடிவத்த மாத்தனும்

(E) விடை தெரியவில்லை

30. தனிச் சொல்லையோ தனி எழுத்தையோ விளக்கிக் காட்டும் போது

(A) அரைப்புள்ளி (B) முக்காற்புள்ளி

(C) ஒற்றை மேற்கோள் குறி (D) இரட்டை மேற்கோள் குறி

(E) விடை தெரியவில்லை

31. குடந்தை என வழங்கப்படும் ஊர்ப் பெயரைக் கண்டறிக

(A) குடுமியான் மலை (B) கும்பகோணம்

(C) குற்றாலம் (D) குடவாசல்

(E) விடை தெரியவில்லை

32. ஊர்ப் பெயர்களின் மரூஉவை எழுதுக.

சரியான இணையைத் தேர்ந்தெடுக்க.

(A) திருச்சிராப்பள்ளி - திருச்சி

(B) புதுக்கோட்டை - புதுவை

(C) மயிலாப்பூர் - மயிலம்

(D) நாகர்கோவில் - நாகை

(E) விடை தெரியவில்லை

33. இணையான தமிழ்ச் சொல்லைக் கண்டறிக.

'எக்ஸ்பெரிமென்ட்'

(A) செய்முறை
(B) சோதனை
(C) பரிசோதனை
(D) உற்றுநோக்கல்
(E) விடை தெரியவில்லை

34. ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல்

செக்

(A) காசோலை
(B) வரைவோலை
(C) பணத்தாள்
(D) பற்று அட்டை
(E) விடை தெரியவில்லை

35. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைக் கண்டு பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | Cabinet | 1. | எல்லை |
| (b) | Cultural | 2. | மனிதநேயம் |
| (c) | Humanism | 3. | பண்பாடு |
| (d) | Boundaries | 4. | அமைச்சரவை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 3 | 2 | 4 | 1 |
| (D) | 1 | 2 | 3 | 4 |

(E) விடை தெரியவில்லை

36. உடன்பட்டுக் கூறும் விடை என்பதை கீழ்வருவனவற்றுள் எந்த விடையைக் கூறலாம்?

(A) உற்றது உரைத்தல் விடை
(B) நேர்விடை
(C) இனமொழி விடை
(D) உறுவது கூறல் விடை
(E) விடை தெரியவில்லை

37. விடை எத்தனை வகைப்படும்? விடை வகைகள்

(A) இரண்டு
(B) ஆறு
(C) எட்டு
(D) ஐந்து
(E) விடை தெரியவில்லை

38. அலுவல் சார்ந்த கலைச் சொல்லை கண்டறிந்து எழுதுக.

ஸ்டேப்ளர் (Stapler)

(A) மை பொதி
(B) மடிப்புத் தாள்
(C) கம்பி தைப்புக் கருவி
(D) கோப்பு
(E) விடை தெரியவில்லை

39. அலுவல் சார்ந்த கலைச் சொற்களைக் கண்டறிந்து எழுதுக.

ரப்பர் ஸ்டேம்ப் (Rubber Stamp)

(A) கோப்பு
(B) இழுவை முத்திரை
(C) மடிப்புத்தாள்
(D) கம்பி தைப்புக் கருவி
(E) விடை தெரியவில்லை

40. அலுவல் சார்ந்த சொற்கள் (கலைச்சொல்)

சரியான இணையைத் தேர்ந்தெடுக்க.

(A) உருபன் - உரேபன்
(B) ஒலியன் - ஒலியன்
(C) பேரகராதி - பேராகராதி
(D) ஒப்பிலக்கணம் - ஒப்பில் இலக்கணம்
(E) விடை தெரியவில்லை

கீழ்க்கண்ட பத்தியினைப் படித்து வினாவிற்கான சரியான விடையைத் தேர்ந்தெடு.

நெல்லை மாநகரில் உள்ள தெருக்கள் பல அதன் பழமைக்குச் சான்றாக உள்ளன. காவற்புரைத் தெரு என்று ஒரு தெரு உள்ளது. காவற்புரை என்றால் சிறைச்சாலை. அரசரால் தண்டிக்கப்பட்டவர்கள் இங்குச் சிறை வைக்கப்பட்டதால் இப்பெயர் பெற்றது. மேலவீதியை அடுத்துக் கூழைக்கடைத் தெரு உள்ளது. கூலம் என்பது தானியத்தைக் குறிக்கும். கூலக்கடைத் தெரு என்பதே மருவிக் கூழைக்கடைத் தெரு என வழங்கப்படுகிறது. அக்கசாலை என்பது அணிகலன்களும் பொற்காசுகளும் உருவாக்கும் இடம். முற்காலத்தில் பொன் நாணயங்கள் உருவாக்கும் பணியாளர்கள் வாழ்ந்த பகுதி அக்கசாலைத் தெரு என்னும் பெயரில் அமைந்துள்ளது.

நெல்லை நகரின் மேற்கே பேட்டை என்னும் ஊர் உள்ளன. வணிகம் நடைபெறும் பகுதியைப் பேட்டை என வழங்குதல் பண்டைய மரபு. இப்பகுதி முன்பு பெருவணிகம் நடைபெற்ற இடமாக இருந்திருக்க வேண்டும். பாண்டிய மன்னன் நின்றசீர் நெடுமாறனை நெல்லை நகர மக்கள் எதிர்கொண்டு வரவேற்ற இடம் பாண்டியபுரம் எனவும் அவன் தேவியாகிய மங்கையர்க்கரசியை மகளிர் எதிர் கொண்டு வரவேற்ற இடம் திருமங்கை நகர் என்றும் வழங்கப்படுகின்றன.

41. காவற்புரை என்றால் என்ன?

(A) சிறைச்சாலை
(B) காவற்சாலை
(C) காவலர்
(D) அரசர்
(E) விடை தெரியவில்லை

42. கூலம் என்பது எதைக் குறிக்கும்?

(A) பயிறு
(B) அரிசி
(C) தானியம்
(D) பயறு
(E) விடை தெரியவில்லை

43. அணிகலன்களும், பொற்காசுகளும் உருவாக்கும் இடம் எது?

(A) அணிகலன்

(B) பொன்

(C) தட்டச்சன்

(D) அக்கசாலை

(E) விடை தெரியவில்லை

44. பாண்டிய மன்னரை வரவேற்ற இடம் எது?

(A) அயனபுரம்

(B) அரண்மனை

(C) பாண்டியபுரம்

(D) பாண்டியர்

(E) விடை தெரியவில்லை

45. நெல்லை நகரின் மேற்கே உள்ள ஊர் எது?

(A) நெல்லையப்பர்

(B) பேட்டை

(C) காவலர்

(D) நின்றசீர்

(E) விடை தெரியவில்லை

46. ஒருமை பன்மை பிழையற்ற தொடர் எது?

(A) நான் வாங்கிய நூல் இது அல்ல
(B) நான் வாங்கிய நூல் இது அன்று
(C) நான் வாங்கிய நூல்கள் இது அல்ல
(D) நான் வாங்கிய நூல்கள் இவை அன்று
(E) விடை தெரியவில்லை

47. ஒருமை – பன்மை பிழையற்ற வாக்கியத்தைக் கண்டறிக.

(A) பகைவர் நீவீர் அல்லர்
(B) பகைவர் நீவீர் அல்லீர்
(C) பகைவர் நீவீர் அல்லோம்
(D) பகைவர் நீவீர் அல்ல
(E) விடை தெரியவில்லை

48. அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்க.

(A) மதலை, நெகிழி, அழுவம், சென்னி, உரவு நீர், கரையும்
(B) அழுவம், உரவு நீர், மதலை, நெகிழி, சென்னி, கரையும்
(C) நெகிழி, அழுவம், உரவு நீர், கரையும், மதலை, சென்னி
(D) அழுவம், உரவு நீர், கரையும், நெகிழி, சென்னி, மதலை
(E) விடை தெரியவில்லை

49. 'கெடுதல்' என்ற தொழிற்பெயர் எவ்வாறு திரியும்?

(A) கெடு, கேடு
(B) கொடு, கோடு
(C) கேடு, கோடு
(D) கெடு, கொடு
(E) விடை தெரியவில்லை

50. விகுதி பெறாத தொழிற்பெயர்

(A) கூத்து
(B) வேக்காடு
(C) கடவுள்
(D) ஏற்றுமதி
(E) விடை தெரியவில்லை

51. பகுதி I உடன் பகுதி II ஐப் பொருத்துக.

| பகுதி I | | பகுதி II |
|---|---|---|
| (a) | குறிஞ்சி | 1. வருணன் |
| (b) | முல்லை | 2. முருகன் |
| (c) | மருதம் | 3. திருமால் |
| (d) | நெய்தல் | 4. இந்திரன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 1 | 2 | 3 | 4 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

(E) விடை தெரியவில்லை

52. எடுத்துக்காட்டினை பொருத்துக.
மரம், காடு – மா, கருவேலங்காடு

(A) இடுகுறிப் பெயர் – காரணப்பெயர்

(B) இடுகுறிப் பெயர் – இடுகுறி சிறப்புப்பெயர்

(C) பண்புப் பெயர் – இடுகுறிப்பெயர்

(D) இடுகுறிப்பெயர் – சினைப்பெயர்

(E) விடை தெரியவில்லை

53. சொல் – பொருள் பொருத்துக.

(A) காலை – பணி

(B) தால் – நாக்கு

(C) தழை – கட்டு

(D) வேலை – வேளை

(E) விடை தெரியவில்லை

54. பிழையற்ற தொடரைக் கண்டறிக.

(A) வலதுபக்கச் சுவரில் எழுதாதே
(B) இடப் பக்கச் சுவரில் எழுதாதே
(C) வலப் பக்கச் சுவற்றில் எழுதாதே
(D) இடது பக்கச் சுவற்றில் எழுதாதே
(E) விடை தெரியவில்லை

55. சந்திப் பிழையற்ற தொடரைக் குறிப்பிடுக.

(A) கயிறு கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்.
(B) கயிற்றுக் கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்.
(C) கயிற்று கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்.
(D) கயிறுக் கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்.
(E) விடை தெரியவில்லை

56. சரியான நிறுத்தற் குறிகளைக் கண்டறிக.

(A) தில்லான், "இந்திய தேசிய இராணுவத்தின் இதயமும் ஆத்மாவும் தமிழர்கள்தான்" என்றார்.
(B) "தில்லான்" இந்திய தேசிய இராணுவத்தின், இதயமும் ஆத்மாவும் தமிழர்கள்தான் என்றார்.
(C) தில்லான், இந்திய தேசிய இராணுவத்தின் இதயமும், ஆத்மாவும் தமிழர்கள்தான் என்றார்.
(D) தில்லான், 'இந்திய தேசிய இராணுவத்தின், இதயமும், ஆத்மாவும் தமிழர்கள்தான் என்றார்'.
(E) விடை தெரியவில்லை

57. சரியான நிறுத்தற்குறியிட்ட வாக்கியத்தைத் தெரிவு செய்க.

(A) மனிதா, மனிதா ! அழைப்பது கேட்கிறதா?
எங்கு பார்க்கிறாய் ; யாரைத் தேடுகிறாய்?
(B) மனிதா மனிதா அழைப்பது கேட்கிறதா ;
எங்கு பார்க்கிறாய் ; யாரைத் தேடுகிறாய்?
(C) மனிதா ! மனிதா ! அழைப்பது கேட்கிறதா?
எங்கு பார்க்கிறாய்? யாரைத் தேடுகிறாய்?
(D) மனிதா, மனிதா, அழைப்பது கேட்கிறதா?
எங்கு பார்க்கிறாய்? யாரைத் தேடுகிறாய்?
(E) விடை தெரியவில்லை

58. ஊர்ப் பெயர்களின் மரூஉவை எழுதுக.
தவறான ஊர்ப் பெயரின் மரூஉவை எழுதுக.

(A) கோவை – கோயம்புத்தூர்
(B) திருச்சி – திருச்சிராப்பள்ளி
(C) நெல்லை – நெய்வேலி
(D) புதுவை – புதுச்சேரி
(E) விடை தெரியவில்லை

59. 'சனி நீராடு'
எப்புலவரின் வாக்கு?

(A) பாரதியின் வாக்கு
(B) பாரதிதாசனின் வாக்கு
(C) ஔவையின் வாக்கு
(D) கம்பரின் வாக்கு
(E) விடை தெரியவில்லை

60. சரியான எண்ணடையைக் கண்டறிக.

(A) ஒரு இரவு
(B) ஒன்று இரவு
(C) ஒன் இரவு
(D) ஓர் இரவு
(E) விடை தெரியவில்லை

61. 'நன்மொழி' - என்பதன் எதிர்ச்சொல் எழுதுக.

(A) நல்ல மொழி
(B) தீமொழி
(C) நற்சொல்
(D) நன்மை
(E) விடை தெரியவில்லை

62. குறில் நெடில் மாற்றம் அறிந்து பொருள் வேறுபாடு சரியானதைக் கண்டறிக.
அழி – ஆழி

(A) அழித்தல் – வீரம்
(B) வயல் – கடல்
(C) நெருப்பு – பறவை
(D) அழித்தல் – கடல்
(E) விடை தெரியவில்லை

63. மதி – இரு பொருள் கண்டறிக.

(A) நிம்மதி, மதித்தல்
(B) நிலா, அறிவு
(C) சந்திரன், அழகு
(D) இடை, கடை
(E) விடை தெரியவில்லை

64. இரு பொருள் தருக.

கால்

(A) கால் பங்கு பிரித்துக்கொடு, ஈரம் பார்த்து கால் வை
(B) கால் வலிக்கிறது, காலில் செருப்பு அணி
(C) கால் முறிந்தது, காலில் புண் உள்ளது
(D) கடல் அலை, கால் பாகம் உண்டு
(E) விடை தெரியவில்லை

65. இச்செயலைச் செய்தது மங்கையா? மடந்தையா? என்று வினவுவது

(A) கொடை வினா
(B) ஏவல் வினா
(C) ஐய வினா
(D) அறியா வினா
(E) விடை தெரியவில்லை

66. பல தொழில்களால் இயங்கினாலும் உலகம்
ஏருக்குப் பின்னாலேயே போகும்! வருந்தி
உழைத்தாலும் உழவுத் தொழிலே சிறந்தது.
– சரியான இணைப்புச்சொல்லை எழுது.

(A) எனவே
(B) அதனால்
(C) ஆகையால்
(D) அதுபோல
(E) விடை தெரியவில்லை

67. கீழ்க்கண்டவற்றில் சரியான இணைப்புச் சொல்லை எழுதுக.
நாம் இனிய சொற்களைப் பேச வேண்டும் ———————
துன்பப்பட நேரிடும்.

(A) ஏனெனில்
(B) இல்லையென்றால்
(C) அதனால்
(D) ஆகையால்
(E) விடை தெரியவில்லை

68. பிரித்தெழுதுதல்

'இரண்டல்ல' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ————————.

(A) இரண்டு + டல்ல
(B) இரண் + அல்ல
(C) இரண்டு + இல்ல
(D) இரண்டு + அல்ல
(E) விடை தெரியவில்லை

69. பிரித்து எழுதுக:

'பெருங்கடல்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.

(A) பெரு + கடல்
(B) பெருமை + கடல்
(C) பெரிய + கடல்
(D) பெருங் + கடல்
(E) விடை தெரியவில்லை

70. இரு பொருள் கொண்ட ஒரு சொல்.

அன்னை தந்தையின் கைப்பிடித்துக் குழந்தை ———————— பழகும்.
அறிஞர் அண்ணாவின் சிறப்பு அவரது அடுக்கு மொழி ————————.

(A) வழக்கு
(B) அழகு
(C) நடை
(D) நயம்
(E) விடை தெரியவில்லை

71. அடைப்புக்குறிக்குள் உள்ள சொல்லை பொருத்தமான இடத்தில் எழுது (அவர்)

(A) என் வீடு ———————— உள்ளது.
(B) தம்பி ———————— வா.
(C) நீர் ———————— தேங்கி இருக்கிறது.
(D) யார் ———————— தெரியுமா?
(E) விடை தெரியவில்லை

72. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க (வேற்றுமை)

(A) ———————— இறக்கமும் மலைக்கு அழகு

(B) அழுகையும் ———————— வாழ்வில் இயல்பு

(C) ———————— முதுமையும் யாவர்க்கும் உண்டு

(D) ஒற்றுமை கண்டால் ———————— நீங்கும்

(E) விடை தெரியவில்லை

73. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க. (உணவு)

(A) உறவுக்கு ———————— கொடு

(B) பசித்தவனுக்கு ———————— கொடு

(C) உழைப்புக்கு ———————— கொடு

(D) உரிமைக்கு ———————— கொடு

(E) விடை தெரியவில்லை

74. குயிலுக்குக் கூடு கட்டத்தெரியாது
காக்கையின் கூட்டில் முட்டையிடும்.
சரியான இணைப்புச் சொல் எது?

(A) அதனால்
(B) ஆகையால்
(C) எனவே
(D) ஏனெனில்
(E) விடை தெரியவில்லை

75. கல் – கூட்டுப் பெயர்.
சரியான எண்ணடையைத் தேர்வு செய்க.

(A) கல்லுக்கூட்டம்
(B) கற்குலை
(C) கற்கட்டு
(D) கற்குவியல்
(E) விடை தெரியவில்லை

76. தகுந்த சொல்லைத் தேர்ந்தெடு.

ஆராயும் அறிவு உடையவர்கள் ———————— சொற்களைப் பேசமாட்டார்.

(A) உயர்வான

(B) விலையற்ற

(C) பயன்தராத

(D) பயன் உடைய

(E) விடை தெரியவில்லை

77. பொருத்தமான பொருளைத் தெரிவு செய்தல்.

சரியான இணையைத் தேர்ந்தெடு

(A) தாள் – முடி

(B) பனி – குளிர்

(C) அரம் – வீரம்

(D) கரம் – கால்

(E) விடை தெரியவில்லை

78. தவறான இணையைத் தேர்க.

(A) தொண்டு – Charity

(B) தத்துவம் – Philosophy

(C) பகுத்தறிவு – Integrity

(D) சீர்திருத்தம் – Reform

(E) விடை தெரியவில்லை

79. கலைச் சொற்களை அறிதல்.

சரியான இணையைத் தேர்க.

(A) ஆன்லைன் ஷாப்பிங் – மின்னணு வணிகம்

(B) கிரெடிட் கார்டு – காசோலை

(C) ஈ காமர்ஸ் – மின்னணு மயம்

(D) டிமாண்ட் டிராப்ட் – வரைவோலை

(E) விடை தெரியவில்லை

80. 'Epigraph' – என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லைத் தேர்ந்தெடுக்க.

(A) சித்திர எழுத்து
(B) கல்வெட்டு
(C) செப்பேடு
(D) ஒப்பெழுத்து
(E) விடை தெரியவில்லை

81. கூற்று, காரணம் – சரியா? தவறா?

கூற்று : எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று புறநானூறு.

காரணம் : பண்டைத்தமிழ் மன்னர்களின் ஆட்சி, வீரம், கொடை, கல்வி முதலியவற்றை அறியலாம்.

(A) கூற்று சரி : காரணம் சரி
(B) கூற்று தவறு : காரணம் தவறு
(C) கூற்று சரி : காரணம் தவறு
(D) கூற்று தவறு : காரணம் சரி
(E) விடை தெரியவில்லை

82. கூற்று – காரணம் – சரியா? தவறா?

கூற்று : திருமூலர் திருமந்திரம் எழுதினார்

காரணம் : பதினெண் சித்தர்களுள் ஒருவர் திருமூலர்

(A) கூற்று தவறு : காரணம் தவறு
(B) கூற்று சரி : காரணம் தவறு
(C) கூற்று தவறு : காரணம் சரி
(D) கூற்று சரி : காரணம் சரி
(E) விடை தெரியவில்லை

83. குறில் நெடில் மாற்றம்

தவறான இணையைக் கண்டறிக

(A) கலம் காலம்
(B) சுழல் சூழல்
(C) புகழ் திகழ்
(D) வளம் வாழ்வு
(E) விடை தெரியவில்லை

84. உவமையால் விளக்கப் பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெழுதுதல்
கல்லில் நார் உரித்தல்

(A) நீண்டகாலமாக இருப்பது
(B) ஆராய்ந்து பாராமல்
(C) இயலாத செயல்
(D) விரைந்து வெளியேறுதல்
(E) விடை தெரியவில்லை

85. சொற்களை ஒழுங்குபடுத்துக.

"வரின் ஆயினும் அல்லில் விருந்து உவக்கும்"

(A) ஆயினும் உவக்கும் விருந்துவரின் அல்லில்
(B) விருந்துவரின் உவக்கும் அல்லில் ஆயினும்
(C) அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்
(D) உவக்கும் விருந்துவரின் ஆயினும் அல்லில்
(E) விடை தெரியவில்லை

86. ஆங்கிலச் சொல்லுக்கான நேரான தமிழ்ச்சொல் அறிக.

| | | | |
|---|---|---|---|
| (a) | Vowel | 1. | ஒரு மொழி |
| (b) | Consonant | 2. | ஒப்பெழுத்து |
| (c) | Homograph | 3. | உயிரெழுத்து |
| (d) | Monolingual | 4. | மெய்யெழுத்து |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 1 | 4 |
| (B) | 4 | 2 | 3 | 1 |
| (C) | 3 | 1 | 2 | 4 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

(E) விடை தெரியவில்லை

87. Space Technology என்ற ஆங்கிலச் சொல்லுக்கான தமிழ்ச்சொல் தருக.

(A) விண்வெளி நுட்பம்
(B) உயிரித் தொழில்நுட்பம்
(C) விண்வெளித் தொழில் நுட்பம்
(D) மீநுண் தொழில் நுட்பம்
(E) விடை தெரியவில்லை

88. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல் அறிக

| | | | |
|---|---|---|---|
| (a) | Crop | 1. | உறை |
| (b) | Folder | 2. | உலாவி |
| (c) | Cursor | 3. | செதுக்கி |
| (d) | Browser | 4. | சுட்டி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 2 | 3 | 1 | 4 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 4 | 2 | 3 | 1 |

(E) விடை தெரியவில்லை

89. மரபுப் பிழையற்றதை எடுத்து எழுதுக

(A) பனை வடலி
(B) தென்னங்கன்று
(C) வாழை நாற்று
(D) விளாங்கூழ்
(E) விடை தெரியவில்லை

90. வினைமுற்றுக்குரிய வேர்ச்சொல்லை எழுதுக

சென்றனர்

(A) சென்று
(B) செல்
(C) சென்ற
(D) செல்ல
(E) விடை தெரியவில்லை

91. வேர்ச்சொல்லைத் தேர்வு செய்தல்

நடந்தாள்

(A) நட
(B) நடக்கிறாள்
(C) நடப்பாள்
(D) நடக்குவாள்
(E) விடை தெரியவில்லை

92. ஒருபொருள் தரும் பல சொற்கள்

"வயல்"

(A) பகல், பழனம்
(B) கழனி, பழனம்
(C) செய், நெல்
(D) நீர்நிலை, கேணி
(E) விடை தெரியவில்லை

93. சேர்த்து எழுதுக :

எழுத்து + ஆணி என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

(A) எழுத்து ஆணி
(B) எழுத்தாணி
(C) எழுத்து தாணி
(D) எழுதாணி
(E) விடை தெரியவில்லை

94. சரியான வினாவைத் தேர்ந்தெடு

"இங்கு நகரப் பேருந்து நிற்குமா"? என்று வழிப்போக்கர் கேட்டது

(A) ஐயவினா
(B) அறியா வினா
(C) அறிவினா
(D) கொளல் வினா
(E) விடை தெரியவில்லை

95. சரியான வினாச்சொல் எது?

நெல்லையப்பர் கோவில் ———————— உள்ளது?

(A) எப்படி
(B) எத்தனை
(C) எங்கு
(D) என்ன
(E) விடை தெரியவில்லை

96. மூன்று காலங்களையும் குறிக்கும் சொல் எது?

(A) நடந்தாள், நடக்கிறாள், நடப்பாள்
(B) காண், காண்பாள், கண்டாள்
(C) ஆடினாள், ஆடு, ஆடுவாள்
(D) பார்த்தல், பார்ப்பாள், பார்த்தாள்
(E) விடை தெரியவில்லை

97. தவறான உவமை இணையைத் தேர்ந்தெடுக்க

(A) பசுமரத்தாணிபோல – எளிதில் மனத்தில் பதிதல்

(B) மடைதிறந்த வெள்ளம்போல – தடையின்று

(C) கீரியும் பாம்பும் போல – ஒற்றுமை

(D) விழலுக்கு இறைத்த நீர்போல – பயனற்றசெயல்

(E) விடை தெரியவில்லை

98. எதிர்சொல்லை எடுத்தெழுது

எத்தனிக்கும்

(A) முயலாமை (B) அறியாமை

(C) நீங்காமை (D) தளராமை

(E) விடை தெரியவில்லை

99. "இளமை" – என்பதன் எதிர்ச்சொல் எழுதுக.

(A) புதுமை (B) முதுமை

(C) தனிமை (D) இனிமை

(E) விடை தெரியவில்லை

100. கூட்டப் பெயர் :

'புள்'

சரியான எண்ணடையைத் தேர்வு செய்க.

(A) புள் கூட்டம் (B) புள் திரள்

(C) புட் குழாம் (D) புள் குவியல்

(E) விடை தெரியவில்லை

# பகுதி-அ — கட்டாயத் தமிழ்மொழித் தகுதித்தேர்வு
## (பத்தாம் வகுப்பு தரம்)

# Part-A — Compulsory Tamil Language Eligibility Test
## (SSLC Std)

**வினாக்கள் : 1–100** **மொத்த மதிப்பெண்கள் : 150**

**Questions : 1–100** **Total Marks : 150**

---

1. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க : (கண்ணெழுத்து)

   (A) சங்க காலத்தில் ஓவியங்களை _____ என்று அழைத்தனர்.

   (B) நேர்கோடு, வளைகோடு கொண்டு வரையப்பட்ட ஓவியங்களை _____ என்று அழைத்தனர்.

   (C) வண்ணங்கள் குழப்பும் பலகையை _____ என்று அழைத்தனர்.

   (D) கரித்துண்டுகளால் வரையப்படும் ஓவியங்களை _____ என்று அழைத்தனர்.

   (E) விடை தெரியவில்லை

2. அடைப்புக்குள் உள்ள ஒலி மரபுச் சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க : (பேசும்)

   (A) குயில் _____ (B) மயில் _____

   (C) கிளி _____ (D) கூகை _____

   (E) விடை தெரியவில்லை

3. சரியான இணைப்புச் சொல்லைத் தேர்ந்தெடு.

   இது கோவிலா தேரா என்று தெரியவில்லை. _____ தான் குழப்பத்துடன் பார்த்தேன்.

   (A) உடனே (B) அதனால்

   (C) மேலும் (D) ஏனெனில்

   (E) விடை தெரியவில்லை

4. சரியான வினாச்சொல்லைத் தேர்ந்தெடு :

நெல்லையப்பர் கோவில் _____ உள்ளது?

(A) எவ்விடம்
(B) எங்கு
(C) ஏன்
(D) எதற்கு
(E) விடை தெரியவில்லை

5. பொருத்தமான காலம் கண்டறிக :

(A) போட்டியில் வென்றார் (நிகழ்காலம்)
(B) மேடையில் பேசுகிறான் (எதிர்காலம்)
(C) தடுப்பூசி செலுத்தினேன் (இறந்த காலம்)
(D) பள்ளிக்குச் செல்வேன் (இறந்த காலம்)
(E) விடை தெரியவில்லை

6. பொருத்தமான காலம் கண்டறிக :

(A) மிதிவண்டி ஓட்டுவேன் (எதிர்காலம்)
(B) திடலில் ஓடினேன் (எதிர்காலம்)
(C) பெயர் சூட்டினார் (நிக்ழ்காலம்)
(D) வீட்டிற்குச் செல்வேன் (நிகழ்காலம்)
(E) விடை தெரியவில்லை

7. பொருத்தமான காலம் கண்டறிக :

(A) நாங்கள் வருவோம் (நிகழ்காலம்)
(B) அவன் வருகிறான் (இறந்த காலம்)
(C) அவை வருகின்றன (நிகழ்காலம்)
(D) அது வந்தது (எதிர்காலம்)
(E) விடை தெரியவில்லை

8. பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு
பின்வருவனவற்றுள் பேச்சு வழக்கு அல்லாத தொடரைக் கண்டறிக

(A) முருகா, வந்தியா?
(B) முருகா, வண்ட்டியா?
(C) முருகா, வந்துவிட்டாயா?
(D) முருகா, வந்துட்டியா?
(E) விடை தெரியவில்லை

9. சரியான நிறுத்தற்குறிகளை உடைய சொல்லைக் கண்டறிக

(A) காகத்திற்கு காது உண்டா! அதற்கு காது கேட்குமா?
(B) காகத்திற்கு காது உண்டா? அதற்கு காது கேட்குமா!
(C) காகத்திற்கு காது உண்டா? அதற்கு காது கேட்குமா?
(D) காகத்திற்கு காது உண்டா! அதற்கு காது கேட்குமா!
(E) விடை தெரியவில்லை

10. ஒரே எழுவாயில் பல வாக்கியங்கள் தொடரும் இடத்தில் _____ வரும்.

(A) அரைப்புள்ளி (;)
(B) முக்காற் புள்ளி (:)
(C) முற்றுப்புள்ளி (.)
(D) வினாக்குறி (?)
(E) விடை தெரியவில்லை

11. வியப்புக்குறி இட வேண்டிய சரியான தொடரைக் கண்டறிக.

(A) இயல் இசை நாடகம்
(B) நல்லவன் வாழ்வான்
(C) தமிழின் இனிமைதான் என்னே
(D) சேக்கிழார் எழுதிய நூல் எது
(E) விடை தெரியவில்லை

12. ஒருமைப் பன்மைப் பிழையற்ற தொடர் எது?

(A) கல்வி நலம் பெற்ற பெண்பாற் புலவர்க்கு மன்னரும் பணிந்தனர்.

(B) கல்வி நலம் பெற்ற பெண்பாற் புலவர்க்கு மன்னரும் பணிந்தான்.

(C) கல்வி நலம் பெற்ற பெண்பாற் புலவர்க்கு மன்னரும் பணிந்தன.

(D) கல்வி நலம் பெற்ற பெண்பாற் புலவர்க்கு மன்னரும் பணிந்தது.

(E) விடை தெரியவில்லை

13. ஒருமைப் பன்மைப் பிழையற்ற தொடர் எது?

(A) தமிழர்களின் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் பெற்றிருந்தன.

(B) தமிழர்களின் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் பெற்றிருந்தனர்.

(C) தமிழர்களின் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் பெற்றிருந்தது.

(D) தமிழர்களின் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் பெற்றிருப்பவை.

(E) விடை தெரியவில்லை

14. ஒருமைப் பன்மைப் பிழையற்ற தொடர் எது?

(A) இலக்கியக் கூறுகள் என்பவை மருந்தின் மேலிட்ட இனிப்பு போன்றது

(B) இலக்கியக் கூறுகள் என்பவை மருந்தின் மேலிட்ட இனிப்பு போன்றவை

(C) இலக்கிய கூறுகள் என்பவை மருந்தின் மேலிட்ட இனிப்பு போன்றன

(D) இலக்கிய கூறுகள் என்பவை மருந்தின் மேலிட்ட இனிப்பு போன்றனர்

(E) விடை தெரியவில்லை

15. பிழை திருத்துதல் : (ஒரு – ஓர்)

(ஒரு – ஓர் சரியாக அமைந்த தொடரைத் தேர்ந்தெடுக்க)

(A) ஒரு அணில் மரத்தில் ஏறின.

(B) ஓர் அணில் மரத்தில் ஏறின.

(C) ஓர் அணில் மரத்தில் ஏறியது.

(D) ஒரு அணில் மரத்தில் ஏறியது.

(E) விடை தெரியவில்லை

16. சரியான தொடரைத் தேர்ந்தெடு :

தென்னிந்தியாவின் அடையாளச் சின்னமாகக் காங்கேயம் மாடுகள் போற்றப்படுகின்றன இது – எவ்வகைத் தொடர்?

(A) வினாத்தொடர்

(B) கட்டளைத் தொடர்

(C) செய்தித்தொடர்

(D) உணர்ச்சித் தொடர்

(E) விடை தெரியவில்லை

17. சரியான தொடரைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

(A) நீலாம்பிகை அம்மையார் மறைமலை அடிகளின் மகள் ஆவார்.

(B) நீலாம்பிகை அம்மையார் மகள் மறைமலை அடிகள் ஆவார்.

(C) மறைமலை அடிகளாரின் நீலாம்பிகை அம்மையார் மகள் ஆவார்.

(D) மறைமலை அடிகளாரின் மகள் ஆவார் நீலாம்பிகை அம்மையார்.

(E) விடை தெரியவில்லை

18. சரியான தொடரைத் தேர்ந்தெடுக்க.

(A) பழங்குடியினர் இயற்கையைப் போற்றும் உணர்வினைக் கொண்டிருந்தனர்.

(B) இயற்கையைப் போற்றும் உணர்வினை பழங்குடியினர் இருந்தனர் கொண்டு.

(C) பழங்குடியினர் உணர்வினைக் கொண்டு இருந்தனர் இயற்கையைப் போற்றும்.

(D) உணர்வினை பழங்குடியினர் கொண்டிருந்தனர் இயற்கையைப் போற்றும்.

(E) விடை தெரியவில்லை

19. கலைச்சொல் அறிதல் :

ESCALATOR

(A) மின்தூக்கி
(B) மின்படிக்கட்டு
(C) மின்னஞ்சல்
(D) மின்நூல்
(E) விடை தெரியவில்லை

20. கூற்று : த், ந் – ஆகிய எழுத்துகள் இன எழுத்துகள் ஆகும். இவற்றை 'நட்பெழுத்துகள்' எனவும் கூறுவர்.

காரணம் : த், ந் – இவ்விரண்டெழுத்தும் நாவின் நுனி மேல்வாய்ப் பல்லின் அடிப்பகுதியைத் தொடுவதால் பிறக்கின்றன.

(A) கூற்று, காரணம் – இரண்டும் சரி
(B) கூற்று சரி, காரணம் தவறு
(C) கூற்று தவறு, காரணம் சரி
(D) கூற்று, காரணம் – இரண்டும் தவறு
(E) விடை தெரியவில்லை

21. குறில் நெடில் மாற்றம் அறிந்து பொருள் வேறுபாடு சரியானதைக் கண்டறிக.

சிலை – சீலை

(A) ஓவியம் – வண்ணம்
(B) இறைவன் திருவுருவம் – துணி
(C) மணல் – குன்று
(D) மறை – வேதம்
(E) விடை தெரியவில்லை

22. இருபொருள் தருக :

திங்கள்

(A) அறிவு, சந்திரன்
(B) அணி, மாதம்
(C) நிலவு, மாதம்
(D) உடல், நிலவு
(E) விடை தெரியவில்லை

23. சரியான இணையைத் தேர்க :

I. முகநூல் – App

II. மின்னஞ்சல் – Search Engine

III. செயலி – Touch Screen

IV. புலனம் – Whatsapp

(A) III (B) II

(C) I (D) IV

(E) விடை தெரியவில்லை

24. எதிர்ச் சொல்லை எடுத்தெழுது :

ஊக்கம்

(A) உற்சாகம் (B) சோர்வு

(C) உடைமை (D) மயக்கம்

(E) விடை தெரியவில்லை

25. சேர்த்தெழுதுதல் :

பொங்கல் + அன்று என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்.

(A) பொங்கலன்று (B) பொங்கல் அன்று

(C) பொங்கலென்று (D) பொங்கஅன்று

(E) விடை தெரியவில்லை

26. 'படிப்பறிவு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.

(A) படி + அறிவு (B) படிப்பு + அறிவு

(C) படி + வறிவு (D) படிப்பு + வறிவு

(E) விடை தெரியவில்லை

27. 'தற்பவம்' சொல்லைக் கண்டறிக :

(A) லக்ஷ்மி
(B) கமலம்
(C) இலக்குமி
(D) அலங்காரம்
(E) விடை தெரியவில்லை

28. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லைத் தேர்க :

Agency

(A) முகவாண்மை
(B) முகவர்
(C) தானியங்கி
(D) அஞ்சலகம்
(E) விடை தெரியவில்லை

29. ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல்லை எழுது.

ஆன்லைன் ஷாப்பிங் (Online Shopping)

(A) மின்னணு வணிகம்
(B) இணையத்தள வணிகம்
(C) மின்னணுமயம்
(D) இணையம்
(E) விடை தெரியவில்லை

30. விடை வகைகள் :

"கடைக்குப் போவாயா" என்ற கேள்விக்குப் "போவேன்" என்று உடன்பட்டுக் கூறல்

(A) நேர் விடை
(B) ஏவல் விடை
(C) உற்றது உரைத்தல் விடை
(D) சுட்டுவிடை
(E) விடை தெரியவில்லை

31. 'காஸ்மிக் ரேய்ஸ்' என்பது

(A) புற ஊதாக் கதிர்கள்
(B) அகச் சிவப்புக் கதிர்கள்
(C) விண்வெளிக் கதிர்கள்
(D) சூரியக் கதிர்கள்
(E) விடை தெரியவில்லை

32. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுதல் :

"கமலா சிலப்பதிகாரம் கற்றாள்"

(A) முற்றுவினை வாக்கியம்

(B) பிறவினை வாக்கியம்

(C) செய்வினை வாக்கியம்

(D) செயப்பாட்டுவினை வாக்கியம்

(E) விடை தெரியவில்லை

33. பிறவினைச் சொற்றொடரைக் கண்டறிக :

(A) ஆசிரியர் பாடம் படிப்பித்தார்.

(B) ஆசிரியர் பாடம் படித்தார்.

(C) ஆசிரியர் பாடம் படித்தாரா?

(D) ஆசிரியர் பாடம் படிக்கிறார்.

(E) விடை தெரியவில்லை

34. சாலைகளின் இடப்பக்கம் வண்டிகள் செல்வதே சாலை விதிகளில் முதன்மையான விதி - விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுக்க :

(A) சாலை விதிகளில் முதன்மையான விதி எது?

(B) சாலை விதிகள் யாவை?

(C) சாலை விதி என்றால் என்ன?

(D) சாலைகளின் இடப்பக்க விதி யாது?

(E) விடை தெரியவில்லை

35. 'திருநின்றவூர்' எனும் ஊர்ப்பெயரின் மரூஉ எதுவெனக் கண்டறிக :

(A) திருவூர்
(B) தேரூர்
(C) நின்றவூர்
(D) தின்னனூர்
(E) விடை தெரியவில்லை

36. சரியான தொடரைத் தேர்ந்தெடு

விரிந்தது – விரித்தது

(A) மழை பெய்ததால், பூவின் இதழ் விரிந்தது, மயில் தோகையை விரித்தது.
(B) மழை பெய்ததால், பூவின் இதழ் விரித்தது, மயில் தோகையை விரித்தது.
(C) மழை பெய்ததால், பூவின் இதழ் விரிந்தது, மயில் தோகையை விரிந்தது.
(D) மழை பெய்ததால், பூவின் இதழ் விரித்தது, மயில் தோகையை விரிந்தது.
(E) விடை தெரியவில்லை

37. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைக் கண்டு பொருத்துக :

(a) Guild – 1. நிலப்பகுதி
(b) Patent – 2. துணைத்தூதரகம்
(c) Consulate – 3. காப்புரிமை
(d) Territory – 4. வணிகக்குழு

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

(E) விடை தெரியவில்லை

38. சொற்களை ஒழுங்குப்படுத்தி சொற்றொடராக்குதல் :
சொற்களை ஒழுங்குபடுத்துக.

(A) அறக்கோட்டமாக சிறைக் கோட்டத்தை மன்னன் வேண்டினான் மாற்ற.

(B) சிறைக் கோட்டத்தை அறக் கோட்டமாக மாற்றுமாறு மன்னனிடம் வேண்டினான்.

(C) மன்னன் அறக்கோட்டமாக மாற்ற சிறைக்கோட்டத்தை வேண்டினான்.

(D) மன்னன் வேண்டினான் அறக்கோட்டத்தை சிறைக்கோட்டமாக மாற்றினான்.

(E) விடை தெரியவில்லை

39. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்தல்.

(A) வெய்யோ பொய்யோ மையோ ஐயோ

(B) ஐயோ பொய்யோ மையோ வெய்யோ

(C) பொய்யோ ஐயோ மையோ வெய்யோ

(D) வெய்யோ மையோ ஐயோ பொய்யோ

(E) விடை தெரியவில்லை

40. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க.

(A) அவிழ் அலரி அசைத்த அரும்பு

(B) அரும்பு அவிழ் அசைத்த அலரி

(C) அலரி அசைத்த அவிழ் அரும்பு

(D) அசைத்த அரும்பு அலரி அவிழ்

(E) விடை தெரியவில்லை

41. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க.

(A) கிளை கழை குச்சி கொழுந்தாடை

(B) கழை கிளை குச்சி கொழுந்தாடை

(C) கொழுந்தாடை குச்சி கிளை கழை

(D) குச்சி கழை கிளை கொழுந்தாடை

(E) விடை தெரியவில்லை

42. 'பௌவம்' என்பதன் தவறான பொருளைத் தேர்ந்தெடுக்க.

(A) முந்நீர் (B) கடல்

(C) ஆழி (D) ஊழி

(E) விடை தெரியவில்லை

43. தாவரத்தின் இளம் பயிர் வகையை சுட்டாத சொல் எது?

(A) நாற்று (B) இளநீர்

(C) குருத்து (D) பிள்ளை

(E) விடை தெரியவில்லை

44. நிலவகை அல்லாத சொல்லைக் கண்டறிக.

(A) தரிசு (B) பரிசு

(C) சுவல் (D) அவல்

(E) விடை தெரியவில்லை

45. வலி, வளி, வழி – ஒலி வேறுபாடறிந்து பொருள் தருக.

(A) துன்பம், காற்று, நெறி (B) காற்று, நெறி, துன்பம்

(C) நெறி, காற்று, துன்பம் (D) துன்பம், நெறி, காற்று

(E) விடை தெரியவில்லை

46. CIVILIZATION என்பதன் தமிழாக்கம்

(A) வேளாண்மை
(B) நாகரிகம்
(C) பயிரிடுதல்
(D) உழவியல்
(E) விடை தெரியவில்லை

47. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல்லை எழுது:

SUBMARINE

(A) கப்பல்
(B) கலங்கரை விளக்கம்
(C) நீர்மூழ்கிக் கப்பல்
(D) துறைமுகம்
(E) விடை தெரியவில்லை

48. இவ்வாக்கியத்தில் உள்ள பிழையை நீக்குக.

(A) என் மணம் இகல்ந்தால் இறந்து விடாது!
(B) இகழ்ந்தால் என் மனம் இறந்து விடாது!
(C) இரந்து விடாது என் மனம் இகழ்ந்தால்!
(D) என் மனம் இரந்தும் இகழ்ந்து விடாது!
(E) விடை தெரியவில்லை

49. சந்திப் பிழையற்ற தொடர் எது?

(A) கைவினைக் கலைகளுள் ஒன்றைக் கற்றுக் கொள்வேன்.
(B) கைவினைக் கலைகளுள் ஒன்றை கற்று கொள்வேன்.
(C) கைவினைக் கலைகளுள் ஒன்றைக் கற்று கொள்வேன்.
(D) கைவினைக் கலைகளுள் ஒன்றை கற்றுக் கொள்வேன்.
(E) விடை தெரியவில்லை

50. கீழ்க்கண்டவற்றுள் எது சரி?

விளக்கு – இருபொருள்.

(A) (i) இலக்கணப்பாடத்தை விளக்கிக் கூறு

(ii) இளமையில் கல்

(B) (i) விளக்கை அணைத்து விடு

(ii) கற்களால் ஆனது கோபுரம்

(C) (i) நல்ல நூல்களைப் படி

(ii) ஆறு கால்களை உடையது ஈ

(D) (i) இலக்கணப்பாடத்தை விளக்கிக் கூறு

(ii) விளக்கை அணைத்து விடு

(E) விடை தெரியவில்லை

51. ஆறு – இச்சொல்லுக்கு இருபொருள் தருக.

(A) ஆறுதல் – நதி

(B) நதி – எண்

(C) பொறுத்தல் – மனம்

(D) நதி – கடல்

(E) விடை தெரியவில்லை

52. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க : (மணிமேகலை)

(A) எட்டுத்தொகை நூல்களில் ஒன்று ————

(B) பத்துப்பாட்டு நூல்களில் ஒன்று ————

(C) ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்று ————

(D) பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று ————

(E) விடை தெரியவில்லை

53. பொருத்தமான இணைப்புச் சொல்லுடன் தொடரை அமைக்க :

மழை நன்கு பெய்தது; _____ எங்களால் விளையாட முடியவில்லை.

(A) மழை நன்கு பெய்தது. ஏனென்றால் எங்களால் விளையாட முடியவில்லை.

(B) மழை நன்கு பெய்தது. எனவே, எங்களால் விளையாட முடியவில்லை.

(C) மழை நன்கு பெய்தது. மேலும் எங்களால் விளையாட முடியவில்லை.

(D) மழை நன்கு பெய்தது. ஏனெனில் எங்களால் விளையாட முடியவில்லை.

(E) விடை தெரியவில்லை

54. பொருத்தமான இணைப்புச் சொல்லைக் கண்டறிக :

அறிவைவிட மிகவும் முக்கியமானது கற்பனைத் திறன். _____ அறிவு என்பது நாம் தற்போது அறிந்தும் புரிந்தும் வைத்திருப்பவற்றோடு முடிந்துவிடுகிறது.

(A) எனவே (B) ஆகையால்

(C) அதுபோல (D) ஏனெனில்

(E) விடை தெரியவில்லை

55. சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு :

அறநெறிச்சாரம் பாடலை எழுதியவர்

(A) எவர் (B) யாவர்

(C) யாரால் (D) யார்

(E) விடை தெரியவில்லை

56. சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு :

ஐம்பெருங்காப்பியங்கள் ————

(A) என்ன (B) எது

(C) யாவை (D) யாது

(E) விடை தெரியவில்லை

57. சொற்களை இணைத்து புதிய சொல்லை உருவாக்கல் :

சிங்கம் _____ சரியான சொல்.

(A) உறுமும்
(B) முழங்கும்
(C) பிளிறும்
(D) கத்தும்
(E) விடை தெரியவில்லை

58. பொருத்தமான மரபுச் சொல்லைத் தேர்ந்தெழுதுக :

ஆட்டு _____ வருகிறது.

(A) கூட்டம்
(B) மந்தை
(C) இனம்
(D) நிரை
(E) விடை தெரியவில்லை

59. சொற்களை இணைத்து புதிய சொல் உருவாக்கல் :

புலியின் இளமைப் பெயர்

(A) பறழ்
(B) குருளை
(C) கன்று
(D) குஞ்சு
(E) விடை தெரியவில்லை

60. கீழ்வருவனவற்றுள் பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு சொற்களை கண்டுபிடி.

(A) வருவியா? – வந்ததா?
(B) வந்தாய் – வருவாய்
(C) வந்தியா – வந்தாயா?
(D) வருகிறாய் – வருவாய்
(E) விடை தெரியவில்லை

61. வாயில் என்னும் சொல்லைப் பேச்சு வழக்கில் _____ என வழங்குகிறோம்.

(A) கதவு
(B) நிலைப்படி
(C) நுழையும் வழி
(D) வாசல்
(E) விடை தெரியவில்லை

பத்தியைப் படித்து வினாக்களுக்கு உரிய சரியான விடையைத் தேர்ந்தெடு : (62-66)

முகிலன் பொங்கல் விழா கொண்டாடத் தாத்தா வீட்டிற்குச் சென்றான். அங்கு செவலை என்ற காளை இருந்தது. அக்காளையை முகிலனுக்கு மிகவும் பிடிக்கும். அதற்குத் தீவனம் வைப்பது அவனது வழக்கம். வீட்டிற்குப் பின்புறம் உள்ள தோட்டத்தில் இருந்து காய்கறிகள் பறித்துக் கொடுத்துத் தாத்தாவுக்கு உதவுவான். அவன், தாத்தா பாட்டியோடு மகிழ்வாகப் பொங்கல் விழாவைக் கொண்டாடுவான்.

62. முகிலன் யார் வீட்டிற்குச் சென்றான்?

(A) மாமா
(B) தாத்தா
(C) அக்கா
(D) சித்தி
(E) விடை தெரியவில்லை

63. தாத்தா வீட்டிலுள்ள காளையின் பெயர் என்ன?

(A) கொற்றன்
(B) முகிலன்
(C) லட்சுமி
(D) செவலை
(E) விடை தெரியவில்லை

64. முகிலன் எவ்விழாவைக் கொண்டாட தாத்தா வீட்டிற்குச் சென்றான்?

(A) பொங்கல்
(B) தீபாவளி
(C) கிறிஸ்துமஸ்
(D) பக்ரீத்
(E) விடை தெரியவில்லை

65. முகிலன் தோட்டத்தில் இருந்து எதை பறித்துக் கொடுத்து தாத்தாவுக்கு உதவுவான்?

(A) பழங்கள்
(B) கீரைகள்
(C) காய்கறிகள்
(D) பூக்கள்
(E) விடை தெரியவில்லை

66. 'செவலை' என்பது எதைக் குறிக்கிறது?

(A) காளை
(B) பசு
(C) நாய்
(D) பூனை
(E) விடை தெரியவில்லை

67. சொல் – பொருள் – பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | குருளை | 1. | மலை |
| (b) | கல் | 2. | குட்டி |
| (c) | மல்லல் | 3. | வயல் |
| (d) | செறு | 4. | வளம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 1 | 3 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 2 | 1 | 4 | 3 |
| (D) | 2 | 1 | 3 | 4 |
| (E) | விடை தெரியவில்லை | | | |

68. சொல் – பொருள் – பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | மட்டு | 1. | நாள்தோறும் |
| (b) | வையம் | 2. | பாதுகாத்தல் |
| (c) | பேணி | 3. | அளவு |
| (d) | நித்தம் நித்தம் | 4. | உலகம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 4 | 3 | 1 | 2 |
| (E) | விடை தெரியவில்லை | | | |

69. சொல் – பொருள் – பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | கருணை | 1. | மழை |
| (b) | மாரி | 2. | உலகம் |
| (c) | பூதலம் | 3. | வயிறு |
| (d) | கும்பி | 4. | இரக்கம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 4 | 2 |
| (B) | 4 | 1 | 3 | 2 |
| (C) | 4 | 1 | 2 | 3 |
| (D) | 4 | 3 | 2 | 1 |
| (E) | விடை தெரியவில்லை | | | |

70. பின்வருவனவற்றுள் சரியான இணைகளைக் குறிப்பிடுக.

(அ) புல் – புற்கள்

(ஆ) சொல் – சொல்கள்

(இ) பூ – பூக்கள்

(ஈ) மாதம் – மாதக்கள்

(A) (அ), (ஆ) (B) (இ), (ஈ)

(C) (அ), (இ) (D) (ஆ), (ஈ)

(E) விடை தெரியவில்லை

71. காரணப் பெயருக்கு எடுத்துக்காட்டினைத் தேர்ந்தெடுக்க :

(A) மரம் (B) மண்

(C) நாற்காலி (D) காற்று

(E) விடை தெரியவில்லை

72. கலைச்சொல் அறிதல் :

HERO STONE

(A) நடுகல் (B) பொறிப்பு

(C) அகழாய்வு (D) கல்வெட்டியல்

(E) விடை தெரியவில்லை

73. கலைச்சொல் அறிதல் :

MEDIA

(A) ஊடகம் (B) இதழியல்

(C) மொழியியல் (D) பருவ இதழ்

(E) விடை தெரியவில்லை

74. வழூஉச் சொல்லற்ற தொடர் எது?

(A) ஊசியில் நூலைக் கோர்த்தான்.

(B) ஊசியில் நூலைக் கோர்ப்பான்.

(C) ஊசியில் நூலைக் கோத்தான்.

(D) ஊசியில் நூலைக் கோர்க்கலாம்.

(E) விடை தெரியவில்லை

75. வழுவற்ற தொடர் எது?

(A) அதைச் செய்தது நான் அன்று.

(B) அதைச் செய்தது நான் அல்ல.

(C) அதைச் செய்தது நான் அல்லேன்.

(D) அதைச் செய்தது நான் அல்லை.

(E) விடை தெரியவில்லை

76. பொருந்தும் இணையைக் காண்க :

(A) கரி – குதிரை

(B) அருவர் – காலன்

(C) பிலம் – மலைக்குகை

(D) மறலி – புதர்

(E) விடை தெரியவில்லை

77. பொருந்தாச் சொல்லைக் காண்க :

(A) உம்

(B) ஐ

(C) மற்று

(D) மா

(E) விடை தெரியவில்லை

78. 'பாட்டு + இருக்கும்' - என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்.

(A) பாட்டிருக்கும்
(B) பாட்டுருக்கும்
(C) படியிருக்கும்
(D) பாடியிருக்கும்
(E) விடை தெரியவில்லை

79. குடந்தை ———— என்பதன் மரூஉ.

(A) குடகு
(B) கும்பை
(C) கும்பகோணம்
(D) குளித்தலை
(E) விடை தெரியவில்லை

80. தவறான ஊர்ப் பெயரின் மரூஉவை எழுதுக :

(A) உதகமண்டலம் – உதகை
(B) புதுச்சேரி – புதுகை
(C) மன்னார்குடி – மன்னை
(D) திருநெல்வேலி – நெல்லை
(E) விடை தெரியவில்லை

81. சரியான ஊர்ப்பெயரின் மரூஉச்சொல்லைத் தேர்ந்தெடு :

(A) புதுவை – புதுக்கோட்டை
(B) புதுகை – புதுச்சேரி
(C) நாகை – நாகப்பட்டினம்
(D) மயிலம் – மயிலாடுதுறை
(E) விடை தெரியவில்லை

82. 'கான்வர்சேஷன்' என்பது

(A) உரையாடல் (B) கலந்துரையாடல்

(C) பேசுதல் (D) கூடிப்பேசுதல்

(E) விடை தெரியவில்லை

83. பிலாஸஃபர் (Philosopher) என்பவர்

(A) பத்திரிக்கையாளர் (B) மெய்யியலாளர்

(C) எழுத்தாளர் (D) நெறியாளர்

(E) விடை தெரியவில்லை

84. 'நிலவும் வானும் போல' - இவ்வுவமை கூறும் பொருள் விளக்கம் :

(A) பண்புடைமை (B) பணிவுடைமை

(C) வேற்றுமை (D) ஒற்றுமை

(E) விடை தெரியவில்லை

85. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுதல்

"பாட்டு கபிலனால் பாடப்பட்டது"

(A) உடன்பாட்டு வாக்கியம் (B) தன்வினை வாக்கியம்

(C) எதிர்மறை வாக்கியம் (D) செயப்பாட்டுவினை வாக்கியம்

(E) விடை தெரியவில்லை

86. தன்வினை வாக்கியத்தை தேர்ந்தெடுக்க :

(A) மாணவன் மனம் திருத்தினான்.

(B) மாணவன் மனம் திருந்தினான்.

(C) மாணவன் மனம் திருந்தினானா?

(D) மாணவன் மனம் திருந்தச் செய்தான்.

(E) விடை தெரியவில்லை

87. ஒயிலாட்டத்தில் தோலால் கட்டப்பட்ட குடம், தவில், சிங்கி, போலக், தப்பு போன்ற இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன?

விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுக்க :

(A) ஒயிலாட்டத்தில் எந்த இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகிறது?

(B) ஒயிலாட்டத்தில் எந்தெந்த இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகிறது?

(C) ஒயிலாட்டத்தில் எவ்வாறான இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகிறது?

(D) ஒயிலாட்டத்தில் எதற்கான இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகிறது?

(E) விடை தெரியவில்லை

88. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுக்க.

பாரதியார் மகாகவி என அழைக்கப்படுகிறார்.

(A) பாரதியார் இயற்பெயர் யாது?

(B) மகாகவி பாரதியா?

(C) பாரதியார் எவ்வாறு அழைக்கப்படுகிறார்?

(D) மகாகவி யார்?

(E) விடை தெரியவில்லை

89. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுக்க :

பெருஞ்சித்திரனார் பாவலரேறு என்று அழைக்கப்படுகிறார்.

(A) பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் யாது?

(B) பாவலரேறு யார்?

(C) ஏன் பாவலரேறு என அழைக்கப்படுகிறார்?

(D) பெருஞ்சித்திரனார் எவ்வாறு அழைக்கப்படுகிறார்?

(E) விடை தெரியவில்லை

90. சொற்களை ஒழுங்குப்படுத்தி சொற்றொடராக்குதல் :
சொற்களை ஒழுங்குபடுத்துக.

(A) மணிமேகலை மணிபல்லவத்தீவிற்குச் சென்றாள்.

(B) மணிபல்லவத்தீவிற்குச் சென்றாள் மணிமேகலை.

(C) மணிமேகலை சென்றாள் மணிபல்லவத்தீவிற்கு.

(D) பல்லவத்தீவிற்கு மணி மணிமேகலை சென்றாள்.

(E) விடை தெரியவில்லை

91. சொற்களை ஒழுங்குப்படுத்தி சொற்றொடராக்குதல் :
சொற்களை ஒழுங்குபடுத்துக.

(A) முளையிலே விளையும் தெரியும் பயிர்.

(B) விளையும் பயிர் முளையிலே தெரியும்.

(C) பயிர் விளையும் முளையிலே தெரியும்.

(D) முளையிலே தெரியும் விளையும் பயிர்.

(E) விடை தெரியவில்லை

92. சொற்களை ஒழுங்குப்படுத்தி சொற்றொடராக்குதல் :
சொற்களை ஒழுங்குபடுத்துக.

(A) ஆக்குவோம் இல்லாமை கல்லாமையை.

(B) கல்லாமையை இல்லாமை ஆக்குவோம்.

(C) இல்லாமை ஆக்குவோம் கல்லாமையை.

(D) இல்லாமை கல்லாமையை ஆக்குவோம்.

(E) விடை தெரியவில்லை

93. வா-என்ற வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயரை எழுதுக :

(A) வந்தவர்
(B) வந்தான்
(C) வருதல்
(D) வந்த
(E) விடை தெரியவில்லை

94. அழை-என்ற வேர்ச் சொல்லின் தொழிற் பெயரைக் கண்டறி.

(A) அழைத்த
(B) அழைத்து
(C) அழைத்தல்
(D) அழைத்தான்
(E) விடை தெரியவில்லை

95. வேர்ச்சொல்லை வினையெச்சமாக மாற்றுக.

"பெறு"

(A) பெற்று
(B) பெற்றவன்
(C) பெறுதல்
(D) பெற்றான்
(E) விடை தெரியவில்லை

96. வருக-வேர்ச்சொல்லைத் தருக.

(A) வரு
(B) வருதல்
(C) வா
(D) வந்த
(E) விடை தெரியவில்லை

97. ஒலி வேறுபாடு அறிந்து சரியான பொருளை எழுதுக.

(A) ஒலி – நீங்கு
(B) ஒளி – வெளிச்சம்
(C) ஒழி – சீற்றம்
(D) கழி – சத்தம்
(E) விடை தெரியவில்லை

98. சரியான இணையைத் தேர்ந்தெடுக்க :

I. நேர் விடை – ஆடுவேன்
II. உற்றது உரைத்தல் விடை – கால் வலிக்கும்
III. ஏவல் விடை – நீயே செய்
IV. சுட்டு விடை – தலை வலிக்கிறது

(A) I, III
(B) I, IV
(C) II, III
(D) II, IV
(E) விடை தெரியவில்லை

99. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை அறிதல் :

கம்ப்யூட்டர் (Computer) என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல்.

(A) மின்னணி
(B) கணினி
(C) கனினி
(D) மின்னஞ்சல்
(E) விடை தெரியவில்லை

100. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல்லைப் பொருத்துக.

(a) Volunteer
(b) Social Reformer
(c) Entrepreneur
(d) Foreigner

1. சமூக சீர்திருத்தவாதி
2. வெளிநாட்டவர்
3. தன்னார்வலர்
4. தொழில்முனைவோர்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 4 | 2 | 1 | 3 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 1 | 4 | 2 | 3 |

(E) விடை தெரியவில்லை

# COMPUTER BASED TEST - 2022

## PAPER – II - தாள்- II

COMPULSORY TAMIL LANGUAGE ELIGIBILITY TEST (SSLC standard) and GENERAL STUDIES (Degree standard)
கட்டாய தமிழ்மொழித் தகுதித் தேர்வு (பத்தாம் வகுப்பு தரம்) மற்றும் பொது அறிவு (பட்டப்படிப்புத் தரம்)

பகுதி-அ (பொது தமிழ்)

## Part-A (General Tamil)

**வினாக்கள் : 1–100** **மொத்த மதிப்பெண்கள் : 150**

**Questions : 1–100** **Total Marks : 150**

---

1. பிரித்தெழுதுக :

பொய்யகற்றும் –பிரித்தெழுதுக

(A) பொய் + அகற்றும் (B) பொய் + கற்றும்

(C) பொய்ய + கற்றும் (D) பொய் + யகற்றும்

(E) விடை தெரியவில்லை

2. பிரித்தெழுதுதல் :

செந்தமிழ் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது

(A) செந் + தமிழ் (B) செம் + தமிழ்

(C) சென்மை + தமிழ் (D) செம்மை + தமிழ்

(E) விடை தெரியவில்லை

3. சேர்த்தெழுதுதல் :

எட்டு + திசை – சேர்த்து எழுதுக

(A) எட்டி இசை (B) எட்டு திசை

(C) எட்டிசை (D) எட்டுத்திசை

(E) விடை தெரியவில்லை

4. அருகுற – எதிர்ச்சொல்லைக் கண்டறி

(A) அருகில் (B) தொலைவில்

(C) அண்மையில் (D) பக்கத்தில்

(E) விடை தெரியவில்லை

5. "அணுகு" – என்பதன் எதிர்ச்சொல் எழுதுக.

(A) அருகில் (B) விலகு

(C) தொலைவு (D) பருகு

(E) விடை தெரியவில்லை

6. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக :

உயர்திணைக்குரியதல்லாத பால்வகைக் கண்டறிக.

(A) ஆண்பால் (B) பெண்பால்

(C) பலவின்பால் (D) பலர்பால்

(E) விடை தெரியவில்லை

7. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக :

கொழுந்து வகை அல்லாததைக் கண்டறிக.

(A) கீரைத்தண்டு (B) வேப்பங்கொழுந்து

(C) பனங்குருத்து (D) நெல் துளிர்

(E) விடை தெரியவில்லை

8. பின்வருவனவற்றுள் தவறான செய்தியைத் தரும் தொடர்

(A) அரிக்கமேடு அகழாய்வில் ரோமானிய நாணயங்கள் கிடைத்தன

(B) புறப்பொருள் வெண்பாமாலை என்னும் இலக்கண நூலிலும் ஏறுகோள் குறித்துக் கூறப்பட்டுள்ளது

(C) எட்டு, பத்து ஆகிய எண்ணுப் பெயர்களின் பின் வல்லினம் மிகாது

(D) பட்டிமண்டபம் பற்றிய குறிப்பு மணிமேகலையில் காணப்படுகிறது

(E) விடை தெரியவில்லை

9. மரபு பிழையற்றதை எடுத்து எழுதுக :

(A) சோறு சாப்பிட்டான்

(B) பால் குடித்தான்

(C) அம்பு விட்டான்

(D) கூடை முடைந்தான்

(E) விடை தெரியவில்லை

10. மரபு பிழையற்றதை எடுத்து எழுதுக :

(A) எருது எக்காளமிடும்

(B) கோழி கூவும்

(C) மயில் அலறும்

(D) காகம் கத்தும்

(E) விடை தெரியவில்லை

11. மரபுத் தொடரின் பொருளைக் கண்டறிக.

கொடி கட்டிப் பறத்தல்

(A) கொடியைக் கட்டுதல்

(B) புகழ்பெற்று விளங்குதல்

(C) பறக்க நினைத்தல்

(D) ஆசைப்படுதல்

(E) விடை தெரியவில்லை

12. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை அறிதல்

Continent – என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல்

(A) கண்டம்
(B) வலசை
(C) வானிலை
(D) புகலிடம்
(E) விடை தெரியவில்லை

13. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை எழுதுக.

'Conversation'

(A) உரையாடல்
(B) கலந்துரையாடல்
(C) சொற்பொழிவு
(D) பட்டிமன்றம்
(E) விடை தெரியவில்லை

14. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை எழுதுக.

'Orthography'

(A) சொல்லிலக்கணம்
(B) எழுத்திலக்கணம்
(C) பொருளிலக்கணம்
(D) யாப்பிலக்கணம்
(E) விடை தெரியவில்லை

15. பிறமொழிச் சொற்கள் கலவாத தொடரைக் கண்டறி.

(A) கம்ப்யூட்டர் துறையில் உங்கள் அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள்
(B) கல்யாணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர்
(C) அனுபவமே சிறந்த ஆசான்
(D) எவ்வகையான செயற்கைக்கோளையும் ஏவும் திறன் நம்மிடம் உள்ளது
(E) விடை தெரியவில்லை

16. ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான பொருளையறிதல்.

உடலின் உறுப்பு

(A) தளை (B) தலை

(C) தழை (D) கழை

(E) விடை தெரியவில்லை

17. ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான பொருளையறிதல்.

அறிவுப்பகுதி

(A) கலை (B) களை

(C) கழை (D) தழை

(E) விடை தெரியவில்லை

18. ஒரு பொருள் தரும் பல சொற்கள் "ஈ" என்பதன் தவறான பொருளைத் தேர்ந்தெடுக்க.

(A) உயிரெழுத்து (B) ஒரு வகை பறவை

(C) அணிகலன் (D) பகிர்ந்து கொடு

(E) விடை தெரியவில்லை

19. ஒரு பொருள் தரும் பல சொற்கள்.

வடு, மூசு, குரும்பை, கச்சல் ஆகிய சொற்கள் எதனைக் குறிக்கும்?

(A) பிஞ்சு வகை (B) காய் வகை

(C) கனி வகை (D) குலை வகை

(E) விடை தெரியவில்லை

20. ஒரு பொருள் தரும் பல சொற்கள்.

"வயல்"

(A) பழனம், செய்
(B) காணி, கனல்
(C) தரிசு, தீ
(D) சுடர், கழனி
(E) விடை தெரியவில்லை

21. 'கேட்டான்' என்ற சொல்லின் வேர்ச்சொல்லைக் கண்டறி.

(A) கேல்
(B) கேள்
(C) கேட்
(D) கேட்டு
(E) விடை தெரியவில்லை

22. வேர்ச்சொல்லின் தொழிற்பெயர் காண்க.

"பாடு"

(A) பாடினான்
(B) பாடுவான்
(C) பாடுகிறான்
(D) பாடுதல்
(E) விடை தெரியவில்லை

23. பார் – என்னும் வேர்ச்சொல்லின் பெயரெச்ச வடிவம் தருக.

(A) பார்த்து
(B) பார்த்த
(C) பார்த்தான்
(D) பார்த்தது
(E) விடை தெரியவில்லை

24. வேர்ச்சொல்லின் தொழிற்பெயர் காண்க.

"படி"

(A) படித்தான்
(B) படித்தல்
(C) படிப்பாள்
(D) படிக்கிறான்
(E) விடை தெரியவில்லை

25. 'MIGRATION' என்ற ஆங்கிலச் சொல்லுக்குச் சரியான தமிழ்ச் சொல்லைத் தேர்க

(A) வலசை
(B) வானிலை
(C) நகர்தல்
(D) புகலிடம்
(E) விடை தெரியவில்லை

26. அகரவரிசைப்படி சொற்களை சீர் செய்க.

(A) நாக்கு; நைடதம்; நொய்யல்; நோன்பு
(B) நைடதம்; நாக்கு; நொய்யல்; நோன்பு
(C) நோன்பு; நைடதம்; நாக்கு; நொய்யல்
(D) நொய்யல்; நோன்பு; நைடதம்; நாக்கு
(E) விடை தெரியவில்லை

27. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க.

(A) சோலை, சுறும்பு, சாந்தம், சைலம்
(B) சுறும்பு, சாந்தம், சைலம், சோலை
(C) சாந்தம், சுறும்பு, சைலம், சோலை
(D) சைலம், சோலை, சுறும்பு, சாந்தம்
(E) விடை தெரியவில்லை

28. சொற்களை ஒழுங்குபடுத்துக :

ஆடுபவரின் கரகச் செம்பின் தலையில் நன்கு படியும்படி உட்புறமாகத் தட்டி அடிப்பாகத்தை செய்கின்றனர்.

(A) நன்கு படியும்படி ஆடுபவரின் தலையில் உட்புறமாகத் தட்டி கரகச் செம்பின் அடிப்பாகத்தைச் செய்கின்றனர்

(B) கரகச் செம்பின் உட்புறமாகத் தட்டி அடிப்பாகத்தை ஆடுபவரின் தலையில் நன்கு படியும்படிச் செய்கின்றனர்

(C) ஆடுபவரின் தலையில் நன்கு படியும்படி உட்புறமாகத் தட்டி கரகச் செம்பின் அடிப்பாகத்தை செய்கின்றனர்

✔ (D) கரகச் செம்பின் அடிப்பாகத்தை உட்புறமாகத் தட்டி ஆடுபவரின் தலையில் நன்கு படியும்படிச் செய்கின்றனர்

(E) விடை தெரியவில்லை

29. சொற்களை ஒழுங்குபடுத்துக :

ஆட்சிக்கு அரசனின் அறம்கூறும் துணை புரிந்தன அறநெறி மன்றங்கள்

✔ (A) அறம்கூறும் மன்றங்கள் அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணை புரிந்தன

(B) அறம்கூறும் அரசனின் ஆட்சிக்கு அறநெறி மன்றங்கள் துணை புரிந்தன

(C) அரசனின் ஆட்சிக்கு அறம்கூறும் அறநெறி மன்றங்கள் துணை புரிந்தன

(D) அரசனின் ஆட்சிக்கு துணை புரிந்தன அறம்கூறும் அறநெறி மன்றங்கள்

(E) விடை தெரியவில்லை

30. சொற்களை ஒழுங்குபடுத்துக :

பறிக்கப்பட்ட பரந்து நின்ற என் மனம் மலரைப்போல மரக்கிளையிலிருந்து வாடுகிறது.

(A) என் மனம் பரந்து நின்ற மரக்கிளையிலிருந்து பறிக்கப்பட்ட மலரைப்போல வாடுகிறது

(B) பரந்து நின்ற என் மனம் பறிக்கப்பட்ட மரக்கிளையிலிருந்து மலரைப்போல வாடுகிறது

(C) பரந்து நின்ற என் மனம் பறிக்கப்பட்ட மலரைப்போல மரக்கிளையிலிருந்து வாடுகிறது

(D) என் மனம் பறிக்கப்பட்ட மலரைப் போல பரந்து நின்ற மரக்கிளையிலிருந்து வாடுகிறது

(E) விடை தெரியவில்லை

31. விடை வகைகள்.

பள்ளிக்கூடம் எங்குள்ளது? என்ற வினாவிற்கு வலப்பக்கத்தில் உள்ளது எனக் கூறல் எவ்வகை விடை?

(A) சுட்டு விடை

(B) நேர் விடை

(C) மறை விடை

(D) ஏவல் விடை

(E) விடை தெரியவில்லை

32. "உனக்குக் கதை எழுதத் தெரியுமா?" என்ற வினாவிற்கு "கட்டுரை எழுதத் தெரியும்" என்று விடை கூறுவது.

(A) இனமொழி விடை

(B) ஏவல் விடை

(C) உறுவது கூறல் விடை

(D) உற்றது உரைத்தல் விடை

(E) விடை தெரியவில்லை

33. காமராசர் நகர் எங்கே இருக்கிறது? என்ற வினாவிற்கு, "இந்த வழியாகச் செல்லுங்கள்" என்று விடையளிப்பது

(A) நேர் விடை
(B) சுட்டு விடை
(C) மறை விடை
(D) உற்றது உரைத்தல் விடை
(E) விடை தெரியவில்லை

34. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் "இலா"

(A) பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?
(B) யாது பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள்
(C) உரையாடு மென்பொருள் இலா பாரத ஸ்டேட் வங்கியில் எதற்காக பயன்படுகிறது?
(D) பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் என்ன?
(E) விடை தெரியவில்லை

35. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுக்க.

பூங்கொடி தன் தோழியுடன் திங்கட்கிழமை காலையில் பேருந்தில் ஏறிப் பள்ளிக்குச் சென்றாள்.

(A) பூங்கொடி பள்ளிக்கு யாருடன் சென்றாள்?
(B) பூங்கொடி பள்ளிக்கு எப்படிச் சென்றாள்?
(C) பூங்கொடி பள்ளிக்கு எத்தனை பேருடன் சென்றாள்?
(D) பூங்கொடி எப்பொழுது பள்ளிக்குச் சென்றாள்?
(E) விடை தெரியவில்லை

36. சுட்டுவிடை, மறைவிடை, நேர்விடை ஆகிய மூன்று விடைகளை எவ்வாறு அழைப்பர்?

(A) மறைமுக விடைகள்
(B) வெளிப்படை விடைகள்
(C) குறிப்பு விடைகள்
(D) நேரெதிர் விடைகள்
(E) விடை தெரியவில்லை

37. செய்வினை, செயப்பாட்டு வினை வாக்கியங்களைக் – கண்டெழுதுதல்.

குமரன் ஓவியம் வரைந்தான்.

(A) செய்வினை வாக்கியம்
(B) செயப்பாட்டு வினை வாக்கியம்
(C) வினை முற்று வாக்கியம்
(D) பிறவினை வாக்கியம்
(E) விடை தெரியவில்லை

38. பிறவினை சொற்றொடரைக் கண்டறிக.

(A) கபிலனைத் திருந்தச் செய்தான்
(B) கபிலன் திருந்தினான்
(C) கபிலன் திருந்துவான்
(D) கபிலன் திருந்துவானா?
(E) விடை தெரியவில்லை

39. வாக்கிய அமைப்பினைக் கண்டறிக.

தமிழ்ப்பற்று தமிழறிஞர்களால் வளர்க்கப்பட்டது.

(A) செய்வினை
(B) செயப்பாட்டுவினை
(C) தன்வினை
(D) பிறவினை
(E) விடை தெரியவில்லை

40. 'இடி விழுந்த மரம் போல' – இவ்வுவமை கூறும் பொருள் விளக்கம்.

(A) துன்பம்
(B) முறிதல்
(C) அழிதல்
(D) கருகுதல்
(E) விடை தெரியவில்லை

41. "எம்பளம்" என்பது

(A) அடையாளம்
(B) குறியீடு
(C) சின்னம்
(D) வரைபடம்
(E) விடை தெரியவில்லை

42. "Territory" – இணையான தமிழ் சொல் அறிக.

(A) நீர்ப்பகுதி
(B) கண்டப்பகுதி
(C) நிலப்பகுதி
(D) பனிப்பிரதேசம்
(E) விடை தெரியவில்லை

43. அலுவல் சார்ந்த கலைச் சொற்களை கண்டறிக.

(A) Conical Stone – குமிழிக்கல்
(B) Irrigation Technology – பாசனத் தொழில் நுட்பம்
(C) Video Conference – காணொலிக் கூட்டம்
(D) Tropical Zone – வெப்ப மண்டலம்
(E) விடை தெரியவில்லை

44. விடை வகைகள்.

"கடைக்குப் போவாயா" என்ற கேள்விக்குப் "போக மாட்டேன்" என மறுத்துக் கூறல்

(A) ஏவல் விடை
(B) வினா எதிர் வினாதல் விடை
(C) நேர் விடை
(D) மறை விடை
(E) விடை தெரியவில்லை

45. பிறமொழிச் சொல்லுக்கு நிகரான தமிழ்ச்சொல்லை எழுது.

ப்ளாக்போர்டு

(A) கரும்பலகை
(B) வெண்பலகை
(C) பலகை
(D) கருந்தரை
(E) விடை தெரியவில்லை

46. இதில் தவறான இணை எது?

(A) கோல்டு பிஸ்கட் – தங்கக்கட்டி
(B) ரிப்பீட் – மிகுதியாக
(C) ஈக்வலாக – சமமாக
(D) யூஸ் – பயன்படுத்தல்
(E) விடை தெரியவில்லை

47. ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல் அறிக.

Adulteration

(A) கடற்பயணம்
(B) பயணப் படகுகள்
(C) தொழில் முனைவோர்
(D) கலப்படம்
(E) விடை தெரியவில்லை

48. தவறான ஊர்ப்பெயரின் மரூஉவை எழுதுக.

(A) தஞ்சை – தஞ்சாவூர்
(B) நெல்லை – திருநெல்வேலி
(C) மயிலை – மயிலாடுதுறை
(D) புதுகை – புதுக்கோட்டை
(E) விடை தெரியவில்லை

49. மரூஉச் சொல் சரியான இணை(களைக்) கண்டறிக.

I. சைதை – சைதாப்பேட்டை

II. கும்பை – கும்பகோணம்

III. மயிலை – மயிலாப்பூர்

IV. நெல்லை – திருநெல்வேலி

(A) I, II சரி

(B) III மட்டும் சரி

(C) I, III, IV சரி

(D) II, IV சரி

(E) விடை தெரியவில்லை

50. மரூஉச்சொல் – சரியாகப் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | சைதை | 1. | நாகப்பட்டிணம் |
| (b) | புதுகை | 2. | புதுக்கோட்டை |
| (c) | புதுவை | 3. | புதுச்சேரி |
| (d) | நாகை | 4. | சைதாப்பேட்டை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 3 | 1 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 1 | 2 | 3 | 4 |
| (D) | 2 | 4 | 3 | 1 |

(E) விடை தெரியவில்லை

51. நிறுத்தற்குறி அறிக. (எது சரியானது)

(A) கூட்டத்தின் தலைவர் "சக்தி அவர்கள் இப்போது தலைப்பில்லை என்னும் தலைப்பில் பேசுவார்" என்று அறிவித்தார்.

(B) கூட்டத்தின் தலைவர் சக்தி அவர்கள் இப்போது "தலைப்பில்லை" என்னும் தலைப்பில் பேசுவார் என்று அறிவித்தார்.

(C) கூட்டத்தின் தலைவர், "சக்தி அவர்கள் இப்போது 'தலைப்பில்லை' என்னும் தலைப்பில் பேசுவார்" என்று அறிவித்தார்

(D) கூட்டத்தின் தலைவர் 'சக்தி' அவர்கள் இப்போது, "தலைப்பில்லை என்னும் தலைப்பில் பேசுவார்" என்று அறிவித்தார்

(E) விடை தெரியவில்லை

52. சரியான நிறுத்தற்குறிகளுடன் அமைந்த வாக்கியத்தைக் கண்டறிக.

(A) வெண்பாவால் எழுதப்பட்ட நூல் முத்தொள்ளாயிரம் : மன்னர்களின் பெயர்களைக் குறிப்பிடாமல் சேர, சோழ, பாண்டியர் பொதுவாகப் பாடுகிறது.

(B) வெண்பாவால் எழுதப்பட்ட நூல் முத்தொள்ளாயிரம்; மன்னர்களின் பெயர்களைக் குறிப்பிடாமல் சேர, சோழ, பாண்டியர் என்று பொதுவாகப் பாடுகிறது.

(C) "வெண்பாவால் எழுதப்பட்ட நூல் 'முத்தொள்ளாயிரம்'. மன்னர்களின் பெயர்களைக் குறிப்பிடாமல் சேர, சோழ, பாண்டியர் என்று பொதுவாகப் பாடுகிறது.

(D) 'வெண்பா'வால் எழுதப்பட்ட நூல் முத்தொள்ளாயிரம். சேர, சோழ பாண்டியர் என்று பொதுவாகப் பாடுகிறது.

(E) விடை தெரியவில்லை

53. சரியான நிறுத்தற்குறிகளையுடைய வாக்கியத்தைக் கண்டறிக.

(A) நல்லவை வெல்லும், தீயவைத் தோற்கும்.

(B) நல்லவை வெல்லும்! தீயவைத் தோற்கும்!!

(C) நல்லவை வெல்லும். தீயவைத் தோற்கும்.

(D) நல்லவை வெல்லும்; தீயவைத் தோற்கும்.

(E) விடை தெரியவில்லை

54. பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு.
பின்வருவனவற்றுள் எழுத்து வழக்கில் அமைந்த சொல் எது?

(A) சொல்லு
(B) சொல்
(C) சொல்லிக்கினு
(D) சொல்றா
(E) விடை தெரியவில்லை

55. பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு.
பின்வருவனவற்றுள் எழுத்து வழக்கில் அமையாத சொல்லைக் கண்டறிக.

(A) செல்க
(B) வருக
(C) குந்திக்க
(D) படித்தான்
(E) விடை தெரியவில்லை

56. சரியான எழுத்து வழக்குத் தொடரினை தெரிந்தெடு.

(A) நேற்று நீ வந்தியா?
(B) நேற்று நீ வருவாயா?
(C) நேற்று அவன் வருவானா?
(D) நேற்று நீ வந்தாயா?
(E) விடை தெரியவில்லை

57. சொற்களை இணைத்து புதிய சொல் உருவாக்கு.
சிங்கம் – சரியான சொல்

(A) பறழ்
(B) குருளை
(C) குட்டி
(D) கன்று
(E) விடை தெரியவில்லை

58. சொற்களை இணைத்து புதிய சொல் உருவாக்கு.
பசு – சரியான சொல்

(A) கன்று
(B) குட்டி
(C) பறழ்
(D) குருளை
(E) விடை தெரியவில்லை

59. சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.
சுவர் – சரியான சொல்

(A) கட்டினான்
(B) அமைத்தான்
(C) உண்டாக்கினான்
(D) எழுப்பினான்
(E) விடை தெரியவில்லை

60. பொருத்தமான காலம் கண்டறிக.

(A) நான் வந்தேன் (எதிர்காலம்)
(B) கவிதை இயற்றினாள் (இறந்தகாலம்)
(C) மேடையில் பேசுவேன் (நிகழ்காலம்)
(D) மழை பெய்தது (எதிர்காலம்)
(E) விடை தெரியவில்லை

61. நிகழ்காலத்தைக் குறிப்பது.

(A) நடந்தாள்
(B) நடந்திருந்தாள்
(C) நடக்கிறது
(D) நடந்தது
(E) விடை தெரியவில்லை

62. பொருத்தமான காலம் அமைத்தல்.

சிரி என்ற வேர்ச்சொல்லின் எதிர்காலத்தைக் கண்டுபிடி

(A) சிரித்தாள் (B) சிரிக்கிறாள்

(C) சிரிப்பாள் (D) சிரிக்கவில்லை

(E) விடை தெரியவில்லை

63. சரியான வினாச் சொல்லை இட்டு எழுது.

நெல்லையப்பர் கோவில் ———— உள்ளது?

(A) எது (B) யாவை

(C) எங்கு. (D) என்ன

(E) விடை தெரியவில்லை

64. சரியான வினாச் சொல்லைத்தேர்ந்தெடு

அறநெறிச் சாரம் பாடலை எழுதியவர் ————?

(A) எவ்வாறு (B) எப்படி

(C) ஏன் (D) யார்

(E) விடை தெரியவில்லை

65. சரியான வினாச் சொல்லை இட்டு நிரப்புக.

தீ விபத்து ஏற்பட்டால் செய்யக் கூடாதவை ————?

(A) எவை (B) ஏன்

(C) எப்படி (D) யாவை

(E) விடை தெரியவில்லை

66. மீனாட்சி சுந்தரனார் நல்ல தமிழில் பேசி விளக்கும் திறமைப் பெற்றிருந்தார் ———— அவருடைய மாணாக்கர்கள் அவரிடம் கற்பதனை மிகவும் விரும்பினார்கள்.

(A) மற்றும்
(B) ஆகையால்
(C) அவை போல
(D) அது போல
(E) விடை தெரியவில்லை

67. சரியான இணைப்புச் சொல்லினைத் தேர்ந்தெடு.

மாபெரும் புத்தகக் கண்காட்சி காமராசர் அரங்கத்தில் நடைபெறுகிறது.

புத்தகக் கண்காட்சி ———— நடைபெறுகிறது.

(A) எங்கு
(B) ஏன்
(C) எதற்காக
(D) எவ்வாறு
(E) விடை தெரியவில்லை

68. கீழ்கண்டவற்றில் சரியான இணைப்புச் சொல்லினை தேர்ந்தெடு.

பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்

கலம்தீமை யால் திரிந்து அற்று.

தூய்மையற்ற பாத்திரத்தில் வைக்கப்படும் பால் திரிந்துவிடும். நற்பண்பு இல்லாதவன் பெற்ற பெருஞ்செல்வமும் யாருக்கும் பயனின்றி அழியும்.

(A) ஏனெனில்
(B) அது போல
(C) ஆகையால்
(D) அதனால்
(E) விடை தெரியவில்லை

69. இவற்றுள் எது சரியானது?

இரு பொருள் : <u>ஆக்குதல்</u>

(A) யாக்கை, உடம்பு
(B) செய்தல், சமைத்தல்
(C) சோறு, உண்டாக்குதல்
(D) உணவு, பருகுதல்
(E) விடை தெரியவில்லை

70. அடைப்புக்குள் உள்ள சொல்லை தகுந்த இடத்தில் சேர்க்க (மதலை)

(A) ஏணி சாத்திய ———————— (B) வானம் ஊன்றிய ————————

(C) இரவில் மாட்டிய ———————— (D) கானம் பாடிய ————————

(E) விடை தெரியவில்லை

71. அடைப்புக்குள் உள்ள சொல்லை தகுந்த இடத்தில் சேர்க்க (தனது)

(A) தலைவர் ———————— கையால் பரிசு வழங்கினார்.

(B) மாணவன் ———————— கையால் பெற்றுக்கொண்டான்.

(C) மாடுகள் ———————— தலையை ஆட்டின.

(D) தலைவர் ———————— வீட்டை வழங்கினார்.

(E) விடை தெரியவில்லை

72. சால, உறு, தவ, நனி, கூர், கழி – என்ற ஆறு சொற்களும் ஒரே பொருளைத் தரும் அவற்றைக் கண்டறிக.

(A) விரைவு (B) புதுமை

(C) மிகுதி (D) சிறப்பு

(E) விடை தெரியவில்லை

73. உயர்ந்தோங்குமலை – இத்தொடரில் ஒரு பொருளுக்கு இரு சொற்கள் உள்ளன. அவற்றைத் தேர்ந்தெடு.

(A) ஓங்கு, மலை (B) உயர், ஓங்கு

(C) உயர், மலை (D) மலை, உயர்

(E) விடை தெரியவில்லை

74. நகை என்னும் சொல் தரும் இருபொருள் குறிப்பிடுக.

(A) ஊர், துறைமுகம்
(B) புன்னகை, கரை
(C) சிரிப்பு, அணிகலன்
(D) கேலி, உறக்கம்
(E) விடை தெரியவில்லை

75. குறில் நெடில் பொருள் வேறுபாடறிந்து சரியான விடையைத் தெரிவு செய்க.

பாரி – பரி

(A) தலைவன் – கழுதை
(B) வீரன் – பரித்துக்கொள்
(C) வள்ளல் – குதிரை
(D) மாரி – குதிரை
(E) விடை தெரியவில்லை

76. கூற்று : மாலுமிகள் கோள்களின் நிலையை வைத்துப் புயல், மழை போன்றவை தோன்றும் காலங்களையும், கடல் நீர் பொங்கும் காலத்தையும் அறிந்து, தகுந்த காலத்தில் கப்பல்களைச் செலுத்தினர்.

காரணம் : மாலுமிகளின் அனுபவ அறிவு கப்பல்களைச் செலுத்த உதவுகிறது.

(A) கூற்று, காரணம் இரண்டும் சரி
(B) கூற்று சரி; காரணம் தவறு
(C) கூற்று, காரணம் இரண்டும் தவறு
(D) கூற்று தவறு; காரணம் சரி
(E) விடை தெரியவில்லை

77. கலைச்சொல் தருக.

Homograph

(A) [illegible]பிரெழுத்து
(B) ஒப்பெழு, ஒ
(C) ஒரு மொழி
(D) மெய்யெழுத்து
(E) விடை தெரியவில்லை

78. கலைச்சொல் அறிக.

Cosmic Rays

(A) விண்வெளிக் கதிர்கள்
(B) பால்வீதி மண்டலம்
(C) புறஊதாக் கதிர்கள்
(D) விண் எறிக்கல்
(E) விடை தெரியவில்லை

79. கலைச்சொற்களை அறிதல்.

நூல்

(A) Thread
(B) Loom
(C) Tanning
(D) Factory
(E) விடை தெரியவில்லை

80. 'யாண்டு' என்னும் சொல்லின் பொருளினை எழுதுக.

(A) எனது
(B) எங்கே
(C) எவ்வளவு
(D) எது
(E) விடை தெரியவில்லை

81. பொருத்தமான பொருளைத் தெரிவு செய்தல்.

| | | | |
|---|---|---|---|
| (a) | ஈன்று | 1. | கிளை |
| (b) | கொம்பு | 2. | மிகுந்த சுவை |
| (c) | அதிமதுரம் | 3. | கவி |
| (d) | குரங்கு | 4. | பெற்று |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 4 | 1 | 2 | 3 |
| (D) | 1 | 2 | 4 | 3 |

(E) விடை தெரியவில்லை

82. தகுந்த சொல்லைத் தேர்ந்து எழுதுக.

வீட்டுப் பயன்பாட்டிற்காகப் பொருள் வாங்குபவர்

(A) நுகர்வோர்
(B) முதலீட்டாளர்
(C) தொழிலாளி
(D) நெசவாளி
(E) விடை தெரியவில்லை

83. பின்வருவனவற்றைப் பொருத்தி விடை அறிக.

| | |
|---|---|
| (a) ஆ | 1. குவியல் |
| (b) ஆடு | 2. கற்றை |
| (c) ஒளி | 3. மந்தை |
| (d) கல் | 4. நிரை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 1 | 2 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 3 | 2 | 1 | 4 |

(E) விடை தெரியவில்லை

84. கட்டளைத் தொடரைக் கண்டறிக.

(A) அப்துல் நேற்று வந்தான்
(B) அப்துல் நேற்று வருவித்தான்
(C) இது நாற்காலி
(D) பூக்களைப் பறிக்காதீர்
(E) விடை தெரியவில்லை

85. இவ்வரிகளில் உள்ள பொருள்கோளை கண்டறிக.

"ஆலத்துமேல குவளை குளத்துள
வாலின் நெடிய குரங்கு"

(A) நிரல்நிறைப் பொருள்கோள்
(B) தாப்பிசைப் பொருள்கோள்
(C) கொண்டு கூட்டுப் பொருள்கோள்
(D) ஆற்றுநீர் பொருள்கோள்
(E) விடை தெரியவில்லை

86. "விருந்தினரும் வறியவரும்
நெருங்கி யுண்ண
மேன்மேலும் முகமலரும் மேலோர்
போல" – என்று விருந்தைப் பற்றி கூறும் நூலைக் கண்டிடுக.

(A) பொருநராற்றுப்படை
(B) கலிங்கத்துப்பரணி
(C) தக்கயாகப்பரணி
(D) சிறுபாணாற்றுப்படை
(E) விடை தெரியவில்லை

87. பிழை திருத்துதல் (ஒரு – ஓர்)
(ஒரு – ஓர் சரியாக அமைந்த தொடரைத் தேர்ந்தெடுக்க)

(A) ஒரு அழகிய சிற்றூரில் ஓர் குளம் இருந்தது
(B) ஓர் அழகிய சிற்றூரில் ஓர் குளம் இருந்தது
(C) ஓர் அழகிய சிற்றூரில் ஒரு குளம் இருந்தது
(D) ஒரு அழகிய சிற்றூரில் ஒரு குளம் இருந்தது
(E) விடை தெரியவில்லை

88. சரியான தொடரைத் தேர்ந்தெடு

(A) அருந்தும் அருமருந்தென உணவே நம் தமிழ்மக்கள் அறிந்தவர்
(B) நம் தமிழ்மக்கள் அருமருந்தென அருந்தும் உணவே அறிந்தவர்
(C) அருந்தும் உணவே அருமருந்தென அறிந்தவர் நம் தமிழ்மக்கள்
(D) நம் உணவே அருமருந்தென அறிந்தவர் அருந்தும் தமிழ்மக்கள்
(E) விடை தெரியவில்லை

89. பிழையை திருத்தி எழுது.

(A) ஓர் புத்தகம்
(B) ஒரு புத்தகம்
(C) ஒன்று புத்தகம்
(D) ஒன்றின் புத்தகம்
(E) விடை தெரியவில்லை

90. சொல் – பொருள் – பொருத்துக.

| | |
|---|---|
| (a) வாரணம் | 1. பாக்கு |
| (b) சூரன் | 2. குதிரை |
| (c) பரி | 3. வீரன் |
| (d) கமுகு | 4. யானை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 1 | 2 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 3 | 1 | 2 | 4 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

(E) விடை தெரியவில்லை

91. சொல்-பொருள் பொருத்துக

சரியான சொல்லையும், பொருளையும் தேர்ந்தெடு.

(A) வருக்கை – இருக்கை
(B) புள் – தாவரம்
(C) அள்ளல் – சேறு
(D) மடிவு – தொடக்கம்
(E) விடை தெரியவில்லை

92. பொருத்துக.

| சொல் | பொருள் |
|---|---|
| (a) கழனி | 1. கப்பல் |
| (b) சமர் | 2. கடல் |
| (c) கலம் | 3. போர் |
| (d) ஆழி | 4. வயல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 2 | 4 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 2 | 4 | 1 | 3 |
| (D) | 1 | 3 | 4 | 2 |

(E) விடை தெரியவில்லை

93. ஒருமை பன்மை பிழையற்ற தொடர் எது?

(A) ஈஸ்ட்மன் என்பார் படச்சுருள் தயாரிக்கும் முறையைக் கண்டுபிடித்தனர்

(B) ஈஸ்ட்மன் என்பார் படச்சுருள் தயாரிக்கும் முறையைக் கண்டுபிடித்தன

(C) ஈஸ்ட்மன் என்பார் படச்சுருள் தயாரிக்கும் முறையைக் கண்டுபிடித்தார்

(D) ஈஸ்ட்மன் என்பார் படச்சுருள் தயாரிக்கும் முறையைக் கண்டுபிடித்தது

(E) விடை தெரியவில்லை

94. ஒருமை பன்மை பிழையை நீக்குக.

(A) மரங்கள் அனைத்தும் வளர்ந்தன

(B) மரங்கள் அனைத்தும் வளர்ந்தது

(C) மரம் அனைத்தும் வளர்ந்தன

(D) வளர்ந்து செழித்தது மரங்கள்

(E) விடை தெரியவில்லை

95. ஒருமை பன்மை பிழை நீக்கி எழுதுக.

(A) காட்டு விலங்குகள் பலவும் வரத் தொடங்கியது

(B) காட்டு விலங்குகள் பலவும் வரத் தொடங்கின

(C) காட்டு விலங்குகள் பலவும் வரத் தொடங்கினர்

(D) காட்டு விலங்குகள் பலவும் வரத் தொடங்கினார்கள்

(E) விடை தெரியவில்லை

கீழ்க்கண்ட பத்தியைப் படித்து வினாவிற்கான சரியான விடையைத் தேர்ந்தெடு.

முத்துராமலிங்கர் இந்திய விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாகப் பங்கேற்றார். தமது பேச்சாற்றலால் ஆங்கில ஆட்சிக்கு எதிராக மக்களிடம் பெரும் எழுச்சியை ஏற்படுத்தினார். மேடைகளில் அவர் ஆற்றிய வீர உரையைக் கேட்ட மக்கள் ஆங்கில ஆட்சிக்கு எதிராக வீறு கொண்டு எழுந்தனர். அதனால் அச்சமடைந்த ஆங்கில அரசு பலமுறை அவரைக் கைது செய்து சிறையில் அடைத்தது. மேலும் வாய்ப்பூட்டுச் சட்டம் மூலம் மேடைகளில் அரசியல் பேசக்கூடாது என்று அவருக்குத் தடை விதித்தது. வட இந்தியாவில் வாய்ப்பூட்டுச் சட்டத்தின்படி பேசத் தடை விதிக்கப்பட்ட தலைவர் பாலகங்காதர திலகர். அவரைப் போலவே தென்னாட்டில் அச்சட்டத்திற்கு ஆட்பட்ட தலைவர் முத்துராமலிங்கர் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது விடுதலை வேட்கையை அறிந்த திரு.வி. கலியாணசுந்தரனார் தேசியம் காத்த செம்மல் என்று பாராட்டியுள்ளார். வங்கச் சிங்கம் என்று போற்றப்பட்ட நேதாஜி சுபாஷ் சந்திர போசுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்.

96. விடுதலைப் போரில் பங்கேற்றவர்

(A) கந்தன்
(B) முத்து இராமலிங்கர்
(C) நாதன்
(D) பாலன்
(E) விடை தெரியவில்லை

97. அவர் உரையைக் கேட்ட ஆங்கில அரசு செய்த செயல்

(A) சிறையில் அடைத்தது
(B) பரிசு அளித்தது
(C) பதக்கம் அளித்தது
(D) பாராட்டியது
(E) விடை தெரியவில்லை

98. மேடைகளில் அரசியல் பேசக் கூடாது என்று தடை விதிக்கப்பட்ட சட்டம்

(A) 144 சட்டம்
(B) இல்லப்பூட்டுச் சட்டம்
(C) வாய்ப்பூட்டுச் சட்டம்
(D) சொத்துரிமை மறுப்புச் சட்டம்
(E) விடை தெரியவில்லை

99. தேசியம் காத்த செம்மல் என்று பாராட்டியவர்?

(A) திரு.வி. கலியாணசுந்தரனார்
(B) பாரதியார்
(C) சர்.சி.வி. இராமன்
(D) பாரதிதாசன்
(E) விடை தெரியவில்லை

100. வங்கச் சிங்கம் என்று பாராட்டப்படுபவர்?

(A) திருப்பூர் குமரன்
(B) சுப்ரமணிய சிவா
(C) திலகர்
(D) நேதாஜி சுபாஷ் சந்திரபோசு
(E) விடை தெரியவில்லை

**COMPUTER BASED TEST- 2022**

**PAPER – II - தாள்- II**

**COMPULSORY TAMIL LANGUAGE ELIGIBILITY TEST (SSLC standard) and GENERAL STUDIES (Degree standard)**

**கட்டாய தமிழ்மொழித் தகுதித் தேர்வு (பத்தாம் வகுப்பு தரம்) மற்றும் பொது அறிவு (பட்டப்படிப்புத் தரம்)**

# பகுதி - அ (பொது தமிழ்)
# Part-A (General Tamil)

**வினாக்கள் : 1–100** **மொத்த மதிப்பெண்கள் : 150**

**Questions : 1–100** **Total Marks : 150**

---

1. பால் + ஊறும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்

(A) பால் ஊறும் (B) பாலூறும்

(C) பால்லூறும் (D) பாஊறும்

(E) விடை தெரியவில்லை

2. சேர்த்தெழுதுதல்

வான் + ஒலி

(A) வான் ஒலி (B) வானொலி

(C) வாவொலி (D) வானெலி

(E) விடை தெரியவில்லை

3. கல் + தீது என்பது ———— எனவும் சேரும்.

(A) கல்தீது (B) கல்லீது

(C) கஃறீது (D) கற்றீது

(E) விடை தெரியவில்லை

4. கலம் + ஏறி – சேர்த்து எழுதுக.

(A) கலம்ஏறி (B) கலமறி

(C) கலன்ஏறி (D) கலமேறி

(E) விடை தெரியவில்லை

5. பெயரறியா – பிரித்து எழுதுக.

(A) பெயர + றியா
(B) பெயர் + ரறியா
(C) பெயர் + அறியா
(D) பெயர + அறியா
(E) விடை தெரியவில்லை

6. நீளுழைப்பு – பிரித்து எழுதுக.

(A) நீளு + உழைப்பு
(B) நீண் + உழைப்பு
(C) நீள் + அழைப்பு
(D) நீள் + உழைப்பு
(E) விடை தெரியவில்லை

7. பிரித்தெழுதுக : பாடாண்திணை

(A) பாடாண் + திணை
(B) பாட்டு + ஆண் + திணை
(C) பாடு + ஆண் + திணை
(D) பாடா + ஆண் + திணை
(E) விடை தெரியவில்லை

8. எதிர்ச்சொல்லை எடுத்து எழுதுக – "அல்"

(A) இரவு
(B) பகல்
(C) காலை
(D) மாலை
(E) விடை தெரியவில்லை

9. எதிர்ச்சொல் தருக.

ஐயம்

(A) சோர்வு
(B) தெளிவு
(C) பொய்மை
(D) விலகு
(E) விடை தெரியவில்லை

10. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக.
அகத்திணை அல்லாததைக் கண்டறிக.

(A) குறிஞ்சி
(B) காஞ்சி
(C) முல்லை
(D) மருதம்
(E) விடை தெரியவில்லை

11. தவறான இணையைக் கண்டறிக.

(A) சிலை – வில்
(B) புள் – பறவை
(C) தெவ் – பகைமை
(D) சேந்தன – சேர்ந்தன
(E) விடை தெரியவில்லை

12. பொருந்தா இணையைக் கண்டறிக.

(A) கொற்றவை – கிணறு
(B) முருகன் – சுனைநீர்
(C) திருமால் – காட்டாறு
(D) இந்திரன் – செங்கழுநீர்
(E) விடை தெரியவில்லை

13. பொருந்தாதச் சொல்லை கண்டறிக.

(A) விளம்புதல்
(B) செப்புதல்
(C) கேட்டல்
(D) மொழிதல்
(E) விடை தெரியவில்லை

14. பொருந்தா இணை எது?

(A) தூறு – புதரின் அடிப்பகுதி
(B) வெங்கழி – காய்ந்த கழி
(C) செம்மல் – வாடிய பூ
(D) கொழுந்தாடை – காய்ந்த கட்டை
(E) விடை தெரியவில்லை

15. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக.

(A) ஏரி
(B) குளம்
(C) குணம்
(D) ஆறு
(E) விடை தெரியவில்லை

16. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக.
சூம்பல், சொத்தை, அழுகல், கடலை

(A) சூம்பல்
(B) சொத்தை
(C) கடலை
(D) அழுகல்
(E) விடை தெரியவில்லை

17. வழுவற்ற தொடரைக் கண்டறி.

(A) செழியன் வந்தான்
(B) செழியன் வந்தது
(C) செழியன் வந்தாள்
(D) செழியன் வந்துட்டான்
(E) விடை தெரியவில்லை

18. மரபுச்சொல்லைப் பொருத்தி எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| (a) | சோறு | 1. | தின் |
| (b) | முறுக்கு | 2. | குடி |
| (c) | தண்ணீர் | 3. | பருகு |
| (d) | பால் | 4. | உண் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 1 | 4 |
| (B) | 1 | 4 | 3 | 2 |
| (C) | 4 | 1 | 2 | 3 |
| (D) | 3 | 2 | 4 | 1 |

(E) விடை தெரியவில்லை

19. மரபுப்பிழை இல்லாத தொடர் எது?

(A) கோழி கூவும்
(B) சேவல் கொக்கரிக்கும்
(C) நாய் கத்தும்
(D) காகம் கரையும்
(E) விடை தெரியவில்லை

20. சந்திப்பிழையற்ற தொடர் எது?

(A) எங்கள் ஊர் கோயிலில் குதிரை சிற்பங்கள் உள்ளன
(B) அழகிய கலைகளை பற்றி அறிந்தோம்
(C) மூங்கிலைக் கொண்டு பல வகையான கைவினைப் பொருட்கள் செய்யப்படுகின்றன
(D) பாய் என்பது படுக்க பயன்படுவது
(E) விடை தெரியவில்லை

21. பிறமொழிச் சொல்லற்ற தொடர் எது?

(A) கொடுங்கோல் அரசன் அக்ரமம் செய்தான்
(B) குழந்தைக்குக் கண் திருஷ்டி சுற்றிப்போடு
(C) ஆகாசத்தில் பட்சி பறந்தது
(D) ஆலயத்திற்குச் சென்று இறைவனை வணங்கினேன்
(E) விடை தெரியவில்லை

22. சந்திப்பிழை அற்ற வாக்கியங்களைக் கூறுக.

(A) அந்தக் காட்சியைப் பார்
(B) அந்த காட்சியை பார்
(C) அந்தக் காட்சியை பார்
(D) அந்த காட்சியைப் பார்
(E) விடை தெரியவில்லை

23. சந்திப்பிழை இல்லாத தொடரைக் காண்க

(A) மெட்டுக்கு பாட்டு பாடு
(B) மெட்டுக்குப் பாட்டுப் பாடு
(C) மெட்டுக்குப் பாட்டு பாடு
(D) மெட்டுக்கு பாட்டுப் பாடு
(E) விடை தெரியவில்லை

24. பிறமொழி சொற்கள் கலவாத தொடரை எடுத்து எழுதுக.

(A) காலிங்பெல்லை அழுத்தினான் கணியன்

(B) மாதவன் ஷாப்பிங் சென்றான்

(C) கமலா மில்க் குடித்தாள்

(D) மாலையில் விளையாடு

(E) விடை தெரியவில்லை

25. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல்லை அறிக.

| | | | |
|---|---|---|---|
| (a) | பயணப்படகுகள் | 1. | Commodity |
| (b) | கடற்பயணம் | 2. | Adulteration |
| (c) | கலப்படம் | 3. | Ferries |
| (d) | பண்டம் | 4. | Voyage |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 2 | 1 | 4 | 3 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

(E) விடை தெரியவில்லை

26. ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான பொருளையறிதல்

வெறிகமழ் கழனியுள் உழுநர் வெள்ளமே –

இவ்வடி உணர்த்தும் பொருள்

(A) மணம் கமழும் வயலில் உழவர் வெள்ளமாய் நிறைந்திருந்தனர்

(B) வறண்ட வயிலில் உழவர் வெள்ளமாய் அமர்ந்திருந்தனர்

(C) செறிவான வயலில் உழவர் வெள்ளமாய்க் கூடியிருந்தனர்

(D) பசுமையான வயலில் உழவர் வெள்ளமாய் உழுதிருந்தனர்

(E) விடை தெரியவில்லை

27. ஒலி வேறுபாடு அறிந்து சரியான பொருளை எழுதுக.

கூரை, கூறை

(A) சட்டை, புடவை
(B) வீட்டின் கூரை, புடவை
(C) புடவை, வீட்டின் கூரை
(D) புடவை, வீட்டின் சுவர்
(E) விடை தெரியவில்லை

28. "மதி" என்பதன் தவறான பொருளைத் தேர்ந்தெடுக்க.

(A) அறிவு
(B) நிலவு
(C) ஞானம்
(D) பகலவன்
(E) விடை தெரியவில்லை

29. "வேழம்" என்பதன் தவறான பொருளைத் தேர்ந்தெடுக்க.

(A) பிடி
(B) களிறு
(C) சிங்கம்
(D) பெண் யானை
(E) விடை தெரியவில்லை

30. வேர்ச்சொல்லை தேர்வு செய்க.

"ஓடினான்"

(A) ஓடி
(B) ஓடு
(C) ஓடின
(D) ஓடிய
(E) விடை தெரியவில்லை

31. வேர்ச்சொல்லை தேர்வு செய்க.

"சொன்னார்"

(A) சொல்
(B) சொன்
(C) சொன்ன
(D) சொல்ல
(E) விடை தெரியவில்லை

32. வேர்ச்சொல்லின் தொழிற்பெயர் காண்க – கொடு.

(A) கொடுத்தல்
(B) கொடுத்த
(C) கொடுத்து
(D) கொடுத்தவன்
(E) விடை தெரியவில்லை

33. வினைமுற்றுக்குரிய வேர்ச்சொல்லை எழுதுக – தருகின்றனர்

(A) தருவி
(B) தந்த
(C) தந்து
(D) தா
(E) விடை தெரியவில்லை

34. அகரவரிசையில் எழுதுக :

(A) அன்பு, இரக்கம், ஓசை, ஐந்து, ஒழுக்கம்
(B) அன்பு, இரக்கம், ஐந்து, ஒழுக்கம், ஓசை
(C) ஒழுக்கம், ஓசை, இரக்கம், அன்பு, ஐந்து
(D) இரக்கம், ஒழுக்கம், ஐந்து, ஓசை, அன்பு
(E) விடை தெரியவில்லை

35. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க.

(A) ஊக்கம், ஈதல், இரக்கம், எளிமை, ஆடு
(B) ஈதல், இரக்கம், ஊக்கம், ஆடு, எளிமை
(C) ஆடு, இரக்கம், ஈதல், எளிமை, ஊக்கம்
(D) ஆடு, இரக்கம், ஈதல் ஊக்கம், எளிமை
(E) விடை தெரியவில்லை

36. அகர வரிசையில் எழுதுக.

(A) கற்றல், காணுதல், கிளி, கீசு, கொம்பு

(B) கிளி, கீசு, கொம்பு, காணுதல், கற்றல்

(C) கற்றல், கீசு, கொம்பு, காணுதல், கிளி

(D) கொம்பு, கீசு, கிளி, காணுதல், கற்றல்

(E) விடை தெரியவில்லை

37. அகர வரிசையில் எழுதுக.

(A) மக்கள், அலுவலர், மாந்தர், மொழி

(B) அலுவலர், மக்கள், மாந்தர், மொழி

(C) மொழி, மக்கள், மாந்தர், அலுவலர்

(D) மக்கள், மாந்தர், மொழி, அலுவலர்

(E) விடை தெரியவில்லை

38. அகர வரிசையில் எழுதுக.

(A) அன்பு, ஊக்கம், ஏது, ஒளவை, ஆடு

(B) ஊக்கம், ஏது, ஒளவை, ஆடு, அன்பு

(C) அன்பு, ஆடு, ஊக்கம், ஏது, ஒளவை

(D) ஒளவை, ஏது, ஊக்கம், ஆடு, அன்பு

(E) விடை தெரியவில்லை

39. அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்க.

(A) வாக்கு, வம்பு, விசை, வீழ்ச்சி

(B) வம்பு, வாக்கு, விசை, வீழ்ச்சி

(C) வீழ்ச்சி, விசை, வாக்கு, வம்பு

(D) விசை, வாக்கு, வம்பு, வீழ்ச்சி

(E) விடை தெரியவில்லை

40. அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்க.

(A) துன்பம், தூண், தேன், தாண்டுதல்

(B) தூண், தேன், துன்பம், தாண்டுதல்

(C) தாண்டுதல், துன்பம், தூண், தேன்

(D) தேன், தூண், துன்பம், தாண்டுதல்

(E) விடை தெரியவில்லை

41. சொற்களை முறைப்படுத்தி சொற்றொடராக்குக.

மிகப் பெரிய சாண்டியாகோ மீனைப் பிடித்தார்.

(A) சாண்டியாகோ மிகப்பெரிய மீனைப் பிடித்தார்

(B) மீனைப் பிடித்தார் மிகப்பெரிய சாண்டியாகோ

(C) சாண்டியாகோ பிடித்தார் மீனை மிகப் பெரிய

(D) மிகப்பெரிய சாண்டியாகோ மீனைப் பிடித்தார்

(E) விடை தெரியவில்லை

42. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குதல்.

(A) புகழ் பெற்ற சான்றோர்கள் உழைத்து உள்ளனர் பிறருக்காக

(B) பிறருக்காக உழைத்துப் புகழ் பெற்ற சான்றோர்கள் உள்ளனர்.

(C) சான்றோர்கள் தனக்காக புகழ் பெற்று உழைத்து உள்ளனர்

(D) உழைத்துப் புகழ் பெற்று உள்ளனர் சான்றோர்களே

(E) விடை தெரியவில்லை

43. "கடைக்குப் போவாயா? என்ற கேள்விக்குப் "போக மாட்டேன்" என மறுத்துக் கூறல்

(A) நேர் விடை

(B) மறை விடை

(C) ஏவல் விடை

(D) இனமொழி விடை

(E) விடை தெரியவில்லை

44. விடை வகையை கண்டறிக.

"என்னுடன் ஊருக்கு வருவாயா?" என்ற வினாவிற்கு "வராமல் இருப்பேனா?" என்று கூறுவது

(A) ஏவல் விடை
(B) சுட்டு விடை
(C) வினா எதிர் வினாதல் விடை
(D) உறுவது கூறல் விடை
(E) விடை தெரியவில்லை

45. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுக்க.

தேவநேயப் பாவாணர் மொழி ஞாயிறு என்றழைக்கப்படுகிறார்.

(A) தேவநேயப் பாவாணர் எவ்வாறு அழைக்கப்படுகிறார்?
(B) மொழி ஞாயிறு என்றால் என்ன?
(C) தேவநேயப் பாவாணர் ஏன் அவ்வாறு அழைக்கப்படுகிறார்?
(D) தேவநேயப் பாவாணர் யார்?
(E) விடை தெரியவில்லை

46. விடைக்கேற்ற வினா அமைக்க.

"தொடக்க காலத்தில் மனிதர்கள் தனித்தனிக் குழுக்களாக வாழ்ந்து வந்தனர்"

(A) தொடக்க காலத்தில் மனிதர்கள் எங்கு வாழ்ந்தனர்?
(B) தொடக்க காலத்தில் மனிதர்கள் எப்படி வாழ்ந்தனர்?
(C) தொடக்க காலத்தில் மனிதர்கள் தனியாக வாழ்ந்தார்களா?
(D) தொடக்க காலத்தில் குழுவாக மனிதர்கள் வாழ்ந்தார்களா?
(E) விடை தெரியவில்லை

47. இருவினைகளின் பொருள் வேறுபாடு அறிதல்.

சரியானத் தொடரைத் தேர்ந்தெடு

பணிந்து – பணித்து

(A) இறைவனைப் பணித்தால் பெற்றோர் பணிந்தனர்

(B) இறைவனைப் பணிந்து செல்ல வேண்டும் என பெற்றோர் பணித்தனர்

(C) பெற்றோரை பணிந்து இறைவனை பணித்தனர்

(D) பணிந்து சென்றால் இறைவனை பணியலாம்

(E) விடை தெரியவில்லை

48. இருவினைகளின் பொருள் வேறுபாடு அறிதல்

சரியான தொடரைத் தேர்ந்தெடு.

மாறு, மாற்றி

(A) மாறு வேடத்தில் பரிசு பெற்றவுடன் வேடத்தை மாற்றிக் கொண்டார்

(B) மாறி வந்தவர் பரிசு பெற்று மாற்றிக் கொண்டார்

(C) வேடம் மாறிக் கொண்டு பரிசை மாற்றினார்

(D) மாறிமாறி வந்தவர் பரிசை மாற்றினார்

(E) விடை தெரியவில்லை

49. "உள்ளங்கை நெல்லிக்கனி போல" – உவமை கூறும் பொருள் தெளிக.

(A) தெளிவாக

(B) சிறப்பாக

(C) நன்றாக

(D) வெளிப்படைத் தன்மையாக

(E) விடை தெரியவில்லை

50. கிணறு வெட்டப் பூதம் கிளம்பியது போல – உவமை கூறும் பொருள் தெளிக.

(A) எதிர்பாரா நிகழ்வு

(B) தற்செயல் நிகழ்வு

(C) பயனற்ற செயல்

(D) எதிர்பார்த்த நிகழ்வு

(E) விடை தெரியவில்லை

51. சரியான விடையை பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | ஏவு ஊர்தி | 1. | Missile |
| (b) | ஏவுகணை | 2. | Download |
| (c) | பதிவிறக்கம் | 3. | Nautical Mile |
| (d) | கடல்மைல் | 4. | Launch Vehicle |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 3 | 1 |
| (B) | 2 | 3 | 1 | 4 |
| (C) | 4 | 1 | 2 | 3 |
| (D) | 3 | 2 | 4 | 1 |

(E) விடை தெரியவில்லை

52. சரியான கலைச்சொற்களைக் கண்டறிக.

Consumer – Entrepreneur

(A) தொழில் முனைவோர் – உணர்பவர்

(B) நுகர்வோர் – தொழில்முனைவோர்

(C) நுகர்வோர் – தொழிலாளி

(D) தொழில்முனைவோர் – நுகர்வோர்

(E) விடை தெரியவில்லை

53. விடை வகைகள் :

"நீ படிக்கவில்லையா?" என்ற வினாவிற்குத் "தலை வலிக்கும்" என்று உரைப்பது

(A) இனமொழி விடை

(B) வெறுப்பு விடை

(C) உறுவது கூறல் விடை

(D) நேர் விடை

(E) விடை தெரியவில்லை

54. ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல்லைக் கண்டறிக.

சைபர்ஸ்பேஸ் (Cyberspace)

(A) பூஜ்யவெளி

(B) இணையவெளி

(C) சமவெளி

(D) வையக விரிவு வலை வழங்கி

(E) விடை தெரியவில்லை

55. ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல்லைக் கண்டறிக.

சாப்ட்வேர் (Software)

(A) மென்பொருள்
(B) மென்னீர்
(C) வலை தளம்
(D) இணையவெளி
(E) விடை தெரியவில்லை

56. சரியான ஊர்ப்பெயரின் மரூஉவை எழுதுக.

(A) உதகை – உதகமண்டலம்
(B) நெல்லை – மன்னார்குடி
(C) கும்பை – கும்பகோணம்
(D) புதுச்சேரி – புதுகை
(E) விடை தெரியவில்லை

57. 'வானவன் மாதேவி' எனும் ஊர்ப்பெயரின் மரூஉ எதுவெனக் கண்டறிக :

(A) மாதேவி
(B) வாதாபி
(C) மானாம் பதி
(D) வானகரம்
(E) விடை தெரியவில்லை

58. நிறுத்தற்குறிகள் (எது சரியானது) :

(A) படிக்கிற பையன்கள் இதை கட்டிகிட்டா பரீட்சையக் கூட சுலபமா எழுதி பாஸ் பண்ணிடலாம்! என்றான் தாயத்து விற்கிறவன்.

(B) படிக்கிற பையன்கள் இதைக் கட்டிகிட்டா, பரீட்சையக் கூட சுலபமா எழுதி பாஸ் பண்ணிடலாம்!" என்றான், தாயத்து விற்கிறவன்.

(C) படிக்கிற பையன்கள் இதைக் கட்டிகிட்டா பரீட்சையைக் கூட சுலபமா எழுதி பாஸ் பண்ணிடலாம்! என்றான் தாயத்து விற்பவன்

(D) படிக்கிற பையன்கள் இதைக் கட்டிகிட்டா பரீட்சையைக் கூட சுலபமா! எழுதி பாஸ் பண்ணிடலாம் என்றான் தாயத்து விற்பவன்.

(E) விடை தெரியவில்லை

59. பின்வருவனவற்றில் எது சரியான நிறுத்தற்குறிகளை பெற்றுள்ளது?

(A) வீட்டிற்கு வருபவர்களை, 'வாங்க வாங்க, உட்காருங்க; அம்மா வந்திடுவாங்க' என்று வரவேற்பாள்.

(B) வீட்டிற்கு வருபவர்களை, வாங்க வாங்க உட்காருங்க, அம்மா வந்திடுவாங்க என்று வரவேற்பாள்

(C) வீட்டிற்கு வருபவர்களை 'வாங்க வாங்க' உட்காருங்க அம்மா வந்திடுவாங்க' என்று வரவேற்பாள்

(D) வீட்டிற்கு வருபவர்களை, 'வாங்க வாங்க', உட்காருங்க அம்மா வந்திடுவாங்க! என்று வரவேற்பாள்.

(E) விடை தெரியவில்லை

60. சரியான எழுத்து வழக்குச் சொல்லினைத் தேர்ந்தெடு :

(A) பதில் சொல்லுச்சு

(B) பதில் சொன்னியா

(C) பதில் சொல்லிக்கினியா

(D) பதில் சொல்

(E) விடை தெரியவில்லை

61. பேச்சு வழக்கு – எழுத்து வழக்கு
சரியானதைத் தேர்ந்தெடு :

(A) மணி நேற்று பள்ளிக்கு வந்தியா?

(B) மணி நேற்று பள்ளிக்கு வந்திட்டியா?

(C) மணி நேற்று பள்ளிக்கு வந்தாயா?

(D) மணி நேற்று பள்ளிக்கு வந்துக்கின?

(E) விடை தெரியவில்லை

62. சரியான ஆண்பால் பெயருடன் பெண்பால் பெயரைப் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | எருது | 1. | பிடி |
| (b) | களிறு | 2. | மந்தி |
| (c) | கலை | 3. | பசு |
| (d) | கடுவன் | 4. | பிணை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 2 | 4 | 1 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 2 | 3 | 1 | 4 |

(E) விடை தெரியவில்லை

63. ஒரு தொடரில் இரு வினைகளை அமைத்து எழுதுக.

மழைக்காற்று வீசியதால், பூவின் இதழ்கள் ———— ; மயில் தோகையை ————.

(A) சேர்ந்து – சேர்த்து

(B) குவிந்து – குவித்து

(C) விரிந்தன – விரித்தது

(D) பொருந்து – பொருத்து

(E) விடை தெரியவில்லை

64. பொருத்தமான காலம் கண்டறிக.

(A) வீட்டிலேயே இருந்தேன் (எதிர்காலம்)

(B) நாளை வருவேன் (இறந்தகாலம்)

(C) வெற்றி பெற்றேன் (எதிர்காலம்)

(D) விளையாடுகின்றேன் (நிகழ்காலம்)

(E) விடை தெரியவில்லை

65. பொருத்தமான காலம் அமைத்தல்
தவறான இணையைத் தேர்ந்தெடுக்க.

(A) வாழ்வான் – எதிர்காலம்

(B) வீழ்கிறான் – நிகழ்காலம்

(C) வருவாள் – நிகழ்காலம்

(D) வெல்வாள் – எதிர்காலம்

(E) விடை தெரியவில்லை

66. வினா எழுத்துகளைத் தேர்ந்தெடு :

(A) எ, யா, ஆ
(B) ஓ, ஆ, உ
(C) அ, இ, உ
(D) அ, யா, இ
(E) விடை தெரியவில்லை

67. கீழ்க்காணும் விடைக்குப் பொருந்தாத வினாச் சொல்லைத் தேர்ந்தெடு :

'பாட்டுக்கொரு புலவன்' என பாராட்டப்பட்டவர் பாரதியார்.

(A) யார்?
(B) எப்படி?
(C) ஏன்?
(D) எவ்வாறு?
(E) விடை தெரியவில்லை

68. தவறான இணைப்புச்சொல் இடம்பெற்றுள்ள வாக்கியத்தைக் கண்டறிக.

(A) அதிக அளவில் மரங்களை வளர்ப்போம். ஆகையால் மரங்கள்தான் மழைக்கு அடிப்படை.
(B) நோய்த்தொற்று அதிகரித்து வருகிறது. அதனால் பள்ளிகளுக்கு விடுமுறை விடப்படுகிறது.
(C) எழிலன் மகிழ்ந்தில் பயணம் செய்வதை விரும்பாதவர். ஏனெனில் அவர் எளிமையை விரும்பியவர்
(D) கடலோர மாவட்டங்களில் மழை பெய்து வருகிறது. மேலும் இரண்டு நாள் மழை நீடிக்கும் என வானிலை ஆய்வுமையம் அறிவிப்பு.
(E) விடை தெரியவில்லை

69. சரியான இணைப்புச் சொல்லால் நிரப்புக :

முருகன் படித்து முடித்துவிட்டான். ———— முகிலன் படிக்கவில்லை.

(A) ஆனால்
(B) அதனால்
(C) ஏனெனில்
(D) ஆகையால்
(E) விடை தெரியவில்லை

70. ஆட்சியாளர் – இச்சொல்லின் தொழிற்பெயர் விகுதியை கண்டறிக.

(A) ஆட்சி (B) ஆளர்

(C) யா (D) சி

(E) விடை தெரியவில்லை

71. அடைப்புக்குள் உள்ள சொல்லை தொடருக்கு ஏற்றவாறு மாற்றுக.
கபிலர் திறமையானவர் என்று ———— (குமரன்) தெரியும்.

(A) குமரனால் (B) குமரனை

(C) குமரனது (D) குமரனுக்கு

(E) விடை தெரியவில்லை

72. கடை என்பதன் சரியான இருபொருள் காண்க.

(A) காண்க – கருவி (B) கொடுமை – கடினம்

(C) முடிவு – அங்காடி (D) உடுக்கை – உடை

(E) விடை தெரியவில்லை

73. இரு பொருள் தருக :
ஆறு

(A) பதினாறு – பதிநான்கு (B) பாலாறு – தேனாறு

(C) கண்ணாறு – கடையாறு (D) எண்களில் ஆறு, காவேரி ஆறு

(E) விடை தெரியவில்லை

74. குறில் நெடில் மாற்றம்

சரியான பொருள் வேறுபாடறிந்து தெரிவு செய்க.

| | சிலை | | சீலை |
|---|---|---|---|
| 1. | சிற்பி | – | துணி |
| 2. | சிற்பம் | – | துணி |
| 3. | வில் | – | அம்பு |
| 4. | அம்பு | – | வில் |

(A) 1
(B) 2
(C) 3
(D) 4
(E) விடை தெரியவில்லை

75. பின்வருவனவற்றுள் முறையான தொடர் எது?

(A) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு
(B) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு
(C) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு
(D) தமிழர் வாழை இலைப் பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு
(E) விடை தெரியவில்லை

76. கூற்று 1 : நாட்டைக்கைப்பற்றல் – மஞ்சள் நிறம் கொண்ட மலர் – கொடி வகை

கூற்று 2 : நிரை மீட்டல் – நீலம் கலந்த சிவப்பு மலர் – செடி வகை

கூற்று 3 : எதிர்த்து போரிடுவது – நீல நிறமலர் – குறுமர வகை

கூற்று 4 : கோட்டையை கைப்பற்றல் – வெண்ணிறம் – செடி வகை

(A) கூற்று 1, 4 மட்டும் சரி
(B) கூற்று 2, 4 மட்டும் சரி
(C) கூற்று 1, 2 மட்டும் சரி
(D) கூற்று 3 மட்டும் சரி
(E) விடை தெரியவில்லை

77. மூதுரை குறித்த கூற்றுகளில் தவறான கூற்றைக் கண்டறிக.

(A) மூதுரை என்னும் சொல்லுக்கு மூத்தோர் கூறும் அறிவுரை என்பது பொருள்

(B) இந்நூலின் முப்பத்தொரு பாடல்கள் உள்ளன

(C) கற்றவரை விட மன்னரே சிறந்தவர் ஆவார்

(D) மன்னனை விட கற்றவரே சிறந்தவர் ஆவார்

(E) விடை தெரியவில்லை

78. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ் சொல்லை அறிக – 'Tempest'

(A) நிலக்காற்று

(B) பெருங்காற்று

(C) கடற்காற்று

(D) சுழல்காற்று

(E) விடை தெரியவில்லை

79. சரியான இணையைத் தெரிவு செய்க.

(A) புதர் – Thicker

(B) பள்ளத்தாக்கு – Ridge

(C) சமவெளி – Locust

(D) மலைமுகடு – Tribe

(E) விடை தெரியவில்லை

80. மலரைக் குறிக்கும் ஓரெழுத்து ஒருமொழி

(A) வீ

(B) சீ

(C) மீ

(D) தீ

(E) விடை தெரியவில்லை

81. "வள்ளுவர் பெரும்புகழை உடையவர்" – என்ற தொடர் எவ்வகை பொருளில் வரும்

(A) உடைமை

(B) ஆக்கல்

(C) அடைதல்

(D) அழித்தல்

(E) விடை தெரியவில்லை

82. பொருத்தமான பொருளைத் தெரிவு செய்க :
வெறிகமழ் கழனியுள் உழுநர் வெள்ளமே – இவ்வடி உணர்த்தும் பொருள் யாது?

(A) மணம் கமழும் வயலில் உழவர் வெள்ளமாய் உழுதிருந்தனர்

(B) வறண்ட வயலில் உழவர் வெள்ளமாய் அமர்ந்திருந்தனர்

(C) செறிவான வயலில் உழவர் வெள்ளமாய்க் கூடியிருந்தனர்

(D) பசுமையான வயலில் உழவர் வெள்ளமாய் நிறைந்திருந்தனர்

(E) விடை தெரியவில்லை

83. பொருத்தமான பொருளைத் தெரிவு செய்க.
அரிச்சுவடி

(A) அரிசி (B) மண் அரிப்பு

(C) ஓலைச் சுவடிகள் (D) அகர வரிசை எழுத்துகள்

(E) விடை தெரியவில்லை

84. பொருத்தமான பொருளைத் தெரிவு செய்க :
ஆமா என்னும் கலைச் சொல்லின் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடுக்க.

(A) மாநாடு (B) மாநிலம்

(C) மாநிறம் (D) காட்டுப்பசு

(E) விடை தெரியவில்லை

85. பொருத்தமான பொருளைத் தெரிவு செய்க :
வாரணம்

(A) வருவாய் (B) தோரணம்

(C) குதிரை (D) யானை

(E) விடை தெரியவில்லை

86. பொருத்தமான பொருளைத் தெரிவு செய்தல் :

ஆழி

(A) உலகம்
(B) கடல்
(C) பள்ளம்
(D) அழித்தல்
(E) விடை தெரியவில்லை

87. சொற்களின் கூட்டுப் பொயர்கள் :

ஆடு – கூட்டுப்பெயர்

(A) ஆட்டுக்கூட்டம்
(B) ஆட்டுத்தொழுவம்
(C) ஆட்டுமந்தை
(D) ஆட்டுசந்தை
(E) விடை தெரியவில்லை

88. வன்தொடர்க் குற்றியலுகரம் எது?

(A) முதுகு, வரலாறு
(B) நாக்கு, வகுப்பு
(C) நெஞ்சு, இரும்பு
(D) எஃது, அஃது
(E) விடை தெரியவில்லை

89. யாப்பிலக்கணத்தின்படி மூவகை எழுத்துக்கள் யாவை?

(A) குறில், உயிர்க்குறில், ஒற்று
(B) உயிர், மெய், உயிர்மெய்
(C) குறில், நெடில், ஒற்று
(D) மெய், உயிர்மெய், ஆய்தம்
(E) விடை தெரியவில்லை

90. பிழை திருத்துக – சரியான எண்ணடையைத் தெரிவு செய்க :

ஒன்று + உயிர்

(A) ஒரு உயிர்
(B) ஓர் உயிர்
(C) ஒன்று உயிர்
(D) மூன்றும் சரி
(E) விடை தெரியவில்லை

91. பிழை திருத்துக – சரியான எண்ணடையைத் தெரிவு செய்க :

இரண்டு + எழுத்து

(A) இரண்டு எழுத்து
(B) இரு எழுத்து
(C) ஈரெழுத்து
(D) மூன்றும் சரி
(E) விடை தெரியவில்லை

92. சொல் – பொருள் – பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | அணங்கு | 1. | கடல் |
| (b) | மாகால் | 2. | நீர்நிலை |
| (c) | மந்நீர் | 3. | தெய்வம் |
| (d) | கயம் | 4. | பெருங்காற்று |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 2 | 4 | 3 | 1 |
| (C) | 4 | 3 | 1 | 2 |
| (D) | 3 | 2 | 4 | 1 |

(E) விடை தெரியவில்லை

93. சொல் – பொருள் – பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | கொடியனார் | 1. | பெரியமலை |
| (b) | இசை | 2. | கொம்பு |
| (c) | மருப்பு | 3. | மகளிர் |
| (d) | மால்வரை | 4. | புகழ் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 1 | 3 |
| (B) | 1 | 2 | 4 | 3 |
| (C) | 4 | 3 | 1 | 2 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

(E) விடை தெரியவில்லை

94. ஒருமை பன்மை பிழையற்ற தொடரைத் தேர்ந்தெடு :

(A) மனிதன் பொருள் தேடுவதற்காக பல ஊர்களுக்குச் செல்கிறார்கள்

(B) மனிதர்கள் பொருள் தேடுவதற்காக பல ஊர்களுக்கு செல்கிறார்

(C) மனிதர்கள் பொருள் தேடுவதற்காக பல ஊர்களுக்குச் செல்கிறார்கள்

(D) மனிதர்கள் பொருள் தேடுவதற்காக ஒரு ஊர்களுக்குச் செல்கிறார்கள்

(E) விடை தெரியவில்லை

95. ஒருமை – பன்மை பிழையற்ற தொடரைத் தெரிவு செய்க.

(A) பிரம்பினால் செய்யப்பட்ட பலவகையான பொருள்கள் இங்கே உள்ளன

(B) பிரம்பினால் செய்யப்பட்ட பலவகையான பொருள் இங்கே உள்ளன

(C) பிரம்பினால் செய்யப்பட்ட பலவகையான பொருள்கள் இங்கே உள்ளது

(D) பிரம்புகளால் செய்யப்பட்ட பலவகையான பொருள்கள் இங்கே உள்ளது

(E) விடை தெரியவில்லை

கீழ்க்கண்ட பத்தியினைப் படித்து வினாவிற்கான சரியான விடையைத் தேர்ந்தெடு.

மழை என்றதும் குழந்தைகளின் நினைவுக்கு வருவது காகிதக் கப்பல். மழை நீரில் காகிதக் கப்பல் விட்டு விளையாடாத குழந்தைகளே இல்லை எனலாம். அந்த அளவிற்கு நம் ஆழ்மனத்தில் கப்பல் இடம் பெற்றுள்ளது. பழங்காலம் முதல் தமிழர்கள் கப்பல் கட்டும் கலையில் சிறந்திருந்ததன் மரபுத் தொடர்ச்சி என்று இதனைக் கூறலாம். தமிழர்கள் கப்பல்களைக் கட்டினர் என்பதற்கும் கப்பல் மூலம் வெளிநாடுகளுக்குச் சென்றனர் என்பதற்கும் நம் இலக்கியங்களில் ஏராளமான சான்றுகள் உள்ளன. நமக்குக் கிடைத்துள்ள நூல்களிலேயே மிகவும் பழமையானது தொல்காப்பியம். அந்நூல் முந்நீர் வழக்கம் என்று கடற்பயணத்தைக் குறிப்பிடுகிறது. எனவே, தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே தமிழர்கள் கடல் பயணம் செய்துள்ளனர் என்பதை அறியலாம்.

96. மழை என்றதும் குழந்தைகளின் நினைவுக்கு வருவது எது?

(A) காகிதம்

(B) காகிதக்கப்பல்

(C) படகு

(D) தோணி

(E) விடை தெரியவில்லை

97. பழங்காலம் முதல் தமிழர்கள் எந்த கலையில் சிறந்திருந்தனர்?

(A) ஓவியக்கலை
(B) இசைக்கலை
(C) கப்பல் கட்டும்கலை
(D) நாட்டியக்கலை
(E) விடை தெரியவில்லை

98. தமிழர்கள் கப்பல் மூலம் வெளிநாடுகளுக்குச் சென்றனர் என்பதற்கு சான்று எது?

(A) திருக்குறள்
(B) இலக்கியங்கள்
(C) காவியம்
(D) புறநானூறு
(E) விடை தெரியவில்லை

99. நமக்குக் கிடைத்துள்ள மிக பழமையான நூல் எது?

(A) நன்னூல்
(B) நாலடியார்
(C) பரிபாடல்
(D) தொல்காப்பியம்
(E) விடை தெரியவில்லை

100. தொல்காப்பியம் கடற்பயணத்தை எதுவாகக் குறிப்பிடுகிறது?

(A) முந்நீர் வழக்கம்
(B) நாவாய்
(C) முத்தமிழ்
(D) படகு
(E) விடை தெரியவில்லை

# பகுதி-அ (தமிழ் தகுதி & மதிப்பீட்டுத் தேர்வு)

## Part-A (Tamil Eligibility-Cum-Scoring Test)

**வினாக்கள் : 1–100** **மொத்த மதிப்பெண்கள் : 150**

**Questions : 1–100** **Total Marks : 150**

---

1. சரியான நிறுத்தற்குறி இட்ட சொற்றொடரினை தேர்ந்தெடு

(A) "என் அம்மை வந்தாள்" என்று மாட்டைப் பார்த்துக்கூறுவது திணை வழுவமைதி ஆகும்.

(B) 'என் அம்மை' வந்தாள் - என்று மாட்டைப் பார்த்துக் கூறுவது 'திணை வழுவமைதி' ஆகும்.

(C) என் அம்மை வந்தாள் - என்று மாட்டைப் பார்த்துக்கூறுவது திணைவழுவமைதி ஆகும்.

(D) (என் அம்மை வந்தாள் - என்று மாட்டைப்பார்த்துக் கூறுவது திணை வழுவமைதி ஆகும்

(E) விடை தெரியவில்லை

2. நிறுத்தற் குறியிடுக பூனையின் காலில் அடிபட்டு விட்டதே
ஆ பூனையின் காலில் அடிபட்டுவிட்டதே

(A) ஆ, பூனையின் காலில் அடிபட்டுவிட்டதே

(B) ஆ! பூனையின் காலில் அடிபட்டுவிட்டதே!

(C) ஆ பூனையின் காலில் அடிபட்டுவிட்டதே.

(D) ஆ! பூனையின் காலில் அடிபட்டுவிட்டதே

(E) விடை தெரியவில்லை

3. வாக்கிய அமைப்பினைக் கண்டறிக :
"நான் திடலில் ஓடினேன்"

(A) தன்வினை
(B) செய்வினை
(C) பிறவினை
(D) செயப்பாட்டு வினை
(E) விடை தெரியவில்லை

4. சரியான ஊர்ப் பெயரின் மரூஉ எது?

(A) புதுச்சேரி – புதுகை
(B) புதுக்கோட்டை - புதுவை
(C) உதகமண்டலம் - உதகை
(D) கும்பகோணம் - கும்பை
(E) விடை தெரியவில்லை

5. தில்லை என அழைக்கப்படும் ஊர்

(A) திருநெல்வேலி
(B) சிதம்பரம்
(C) சீர்காழி
(D) கன்னியாகுமரி
(E) விடை தெரியவில்லை

6. ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுதுக
ஊர்ப்பெயரையும் அதன் மரூஉவையும் பொருத்துக

(a) தஞ்சாவூர்
(b) திருநெல்வேலி
(c) கோயமுத்தூர்
(d) கும்பகோணம்

1. குடந்தை
2. தஞ்சை
3. நெல்லை
4. கோவை

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 1 | 2 | 4 | 3 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

(E) விடை தெரியவில்லை

7. சரியான தமிழ்ச்சொல்லைத் தேர்க
விவாஹம்

(A) விழா
(B) திருமணம்
(C) பண்டிகை
(D) காதுகுத்து
(E) விடை தெரியவில்லை

8. பிறமொழிச் சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல்லைக் கண்டறிக
சர்க்கார்

(A) அரசாங்கம்
(B) ஜனநாயகம்
(C) அரவை
(D) ஆஸ்பத்திரி
(E) விடை தெரியவில்லை

9. பிறமொழிச் சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல் தருக.
'லைட் ஹவுஸ்' என்பதன் தமிழ்ச் சொல்

(A) கலங்கரை விளக்கம்
(B) படகு வீடு
(C) மரவீடு
(D) கப்பல் விளக்கு
(E) விடை தெரியவில்லை

10. நீ விளையாடவில்லையா? என்ற வினாவிற்கு 'கால் வலிக்கும்' என்று விடை கூறுவது

(A) மறை விடை
(B) நேர் விடை
(C) உற்றது உரைத்தல் விடை
(D) உறுவது கூறல் விடை
(E) விடை தெரியவில்லை

11. சரியான வினை மரபை எடுத்தெழுதுக

(A) தண்ணீர் பருகினான்
(B) தண்ணீர் அருந்தினான்
(C) தண்ணீர் பறுகினான்
(D) தண்ணீர் குடித்தான்
(E) விடை தெரியவில்லை

12. விடை வகையைத் தேர்ந்தெழுதுதல்
"இது செய்வாயா? " என்று வினவிய போது, "நீயே செய்" என்று கூறுவது

(A) ஏவல் விடை
(B) சுட்டு விடை
(C) மறை விடை
(D) நேர் விடை
(E) விடை தெரியவில்லை

13. அலுவல் சார்ந்த சொற்கள் (கலைச் சொல்)
Download

(A) காணொலிக் கூட்டம்
(B) கீழிறக்கம்
(C) பதிவிறக்கம்
(D) மின்னனுக் கருவிகள்
(E) விடை தெரியவில்லை

14. அலுவல் சார்ந்த கலைச்சொல் தேர்ந்தெழுதுதல்
Personality

(A) நடவடிக்கை எடுத்தல்
(B) மனிதம்
(C) ஆளுமை
(D) கழகம்
(E) விடை தெரியவில்லை

15. Thesis என்பதற்கான சரியான கலைச்சொல்லைக் கண்டறிக

(A) குறியீட்டியல்
(B) ஆய்வேடு
(C) அறிவாளர்
(D) சின்னம்
(E) விடை தெரியவில்லை

16. கலைச் சொல்லுக்கானப் பொருளைத் தேர்ந்தெடு
'Social Reformer'

(A) சமூக சீர்த்திருத்தவாதி
(B) சமூகப் போராளி
(C) சமூக உழைப்பாளி
(D) சமுதாய ஒருங்கிணைப்பாளர்
(E) விடை தெரியவில்லை

17. உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெழுதுதல்
விழலுக்கு இறைத்த நீர் போல

(A) பயனுள்ள செயல்
(B) பயனற்ற செயல்
(C) மிகுதியான செயல்
(D) தகுதியான செயல்
(E) விடை தெரியவில்லை

18. "நகமும் சதையும் போல" - உவமை கூறும் பொருள் தெளிக

(A) வேற்றுமை
(B) ஒற்றுமை
(C) பகைமை
(D) நட்பு
(E) விடை தெரியவில்லை

19. மாணவர்கள் நன்றாகப் படித்தனர் - எவ்வகை வாக்கியம்

(A) பிறவினை
(B) தன்வினை
(C) செயப்பாட்டு வினை
(D) உணர்ச்சி தொடர்
(E) விடை தெரியவில்லை

20. தந்தை மகனை நன்றாகப் படிக்க வைத்தார்.
- எவ்வகை வினை என கண்டறிக.

(A) தன்வினை
(B) பிறவினை
(C) செய்வினை
(D) செயப்பாட்டு வினை
(E) விடை தெரியவில்லை

21. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுதல்
அப்துல் நேற்று வந்தான்.

(A) பிற வினைத்தொடர்
(B) உணர்ச்சித் தொடர்
(C) தன்வினைத் தொடர்
(D) செய்வினைத் தொடர்
(E) விடை தெரியவில்லை

22. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுத்து எழுதுதல்
"கல்வியில் பெரியவர் கம்பர்"

(A) கல்வியில் புகழ் பெற்றவர் யார்?
(B) கல்வியில் சிறந்தவர் யார்?
(C) கவிதையில் பெரியவர் யார்?
(D) கல்வியில் பெரியவர் யார்?
(E) விடை தெரியவில்லை

23. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுத்தல்
விருதுநகரின் முந்தைய பெயர் விருதுப்பட்டி

(A) விருதுநகரின் முந்தைய பெயர் என்ன?
(B) விருதுநகரின் முந்தைய பெயர் விருதுப்பட்டியா?
(C) விருதுநகர் தற்போது எவ்வாறு அழைக்கப்படுகிறது?
(D) விருதுநகரும் விருதுப்பட்டியும் ஒன்றா?
(E) விடை தெரியவில்லை

24. இரு வினைகளின் வேறுபாடு அறிந்து தவறான தொடரைத் தெரிவு செய்க
நீங்கு – நீக்கு

(A) பெயரை நீக்கியவுடன் பள்ளியை விட்டு நீங்கு
(B) இக்குழுவை விட்டு நான் நீங்க வேண்டுமானால் என் பெயரை நீக்கு
(C) என் பெயரை நீக்க நினைத்தால் நீங்கு
(D) தவறான பதிவுகள் நீங்க வேண்டுமென்று நினைத்து நீக்கி விட்டேன்
(E) விடை தெரியவில்லை

25. கீழ்கண்ட வினைகளின் பொருள் வேறுபாடு அறிக
சேர்ந்து, சேர்த்து

(A) ஒன்று சேர்ந்து வீட்டினைக் கட்டினர்

(B) அனைவரையும் சேர்த்து கல்வியை புகட்டினர்

(C) அனைவரும் ஒன்று சேர்ந்து சிதறியுள்ள விறகினை சேர்த்து பல கட்டுகளாக கட்டினர்

(D) சேர்த்து வைத்த சொத்து வீண் போகாது

(E) விடை தெரியவில்லை

26. இருவினைகளின் பொருள் வேறுபாடு அறிக.
புதைந்து, புதைத்து

(A) ரவி மண்ணில் புதைந்தப் பொருளை புதைத்து வைத்தான்

(B) புதைந்தப் பொருளை மறைத்து வைத்தல்

(C) புதையலைக் கண்டு மகிழ்ந்தான்

(D) ரவி புதைத்தப் புதையலை மறந்தான்

(E) விடை தெரியவில்லை

27. சொற்களை ஒழுங்குப்படுத்தி சொற்றொடராக்குக

(A) பெண்கள் கல்வியும் ஈகையும் செய்வதாகக் குறிப்பிட்டுள்ளார் கம்பர் விருந்தும், ஈகையும்,

(B) கம்பர் குறிப்பிட்டுள்ளார் கல்வியும், செல்வமும் பெண்கள் பெற்ற ஈகையும், விருந்தும் செய்வதாக

(C) செல்வமும், விருந்தும் பெற்ற பெண்கள் கல்வியும் ஈகையும் பெண்கள் செய்வதாக குறிப்பிட்டுள்ளார் கம்பர்

(D) கல்வியும், செல்வமும் பெற்ற பெண்கள் விருந்தும், ஈகையும் செய்வதாகக் கம்பர் குறிப்பிட்டுள்ளார்

(E) விடை தெரியவில்லை

28. பொருத்தமான காலம் அமைத்தல்
சரியான தொடரைத் தேர்ந்தெடு

(A) பாடல் பாடினான் (இறந்த காலம்)

(B) பாடல் பாடுகிறான் (எதிர் காலம்)

(C) பாடல் பாடுவான் (நிகழ் காலம்)

(D) பாடல் பாடுகிறார்கள் (இறந்த காலம்)

(E) விடை தெரியவில்லை

29. அகர வரிசைப்படி கீழ்கண்ட சொற்களை சீர் செய்க
காண், கொல், கிளி, கீரி, குடுவை, கேள்வி

(A) காண், கிளி, கீரி, குடுவை, கேள்வி, கொல்

(B) கொல், கேள்வி, குடுவை, கீரி, கிளி, காண்

(C) கீரி, குடுவை, கேள்வி, கிளி, காண், கொல்

(D) கிளி, குடுவை, கீரி, கேள்வி, கொல், காண்

(E) விடை தெரியவில்லை

30. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க
(தலை)

(A) உழந்தும் உரலே ————————

(B) உழந்தும் உலவே ————————

(C) உழந்தும் உறவே ————————

(D) உழந்தும் உழவே ————————

(E) விடை தெரியவில்லை

31. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க (தொடுதல்)

(A) காற்றின் மெல்லிய ———— பூக்களைத் தலையாட்ட வைக்கிறது

(B) கைகளின் நேர்த்தியான ———— பூக்களை மாலையாக்குகிறது.

(C) சூடான பொருளை கையால் ———— இருக்க வேண்டும்

(D) '———— சுருங்கி' என்பது ஒருவகைத் தாவரம்

(E) விடை தெரியவில்லை

32. சரியான இணைப்புச் சொல் தேர்க :
நாம் இனிய சொற்களைப் பேச வேண்டும், துன்பப்பட நேரிடும்.

(A) ஏனெனில்

(B) அதனால்

(C) இல்லையென்றால்

(D) மேலும்

(E) விடை தெரியவில்லை

33. சரியான இணைப்புச் சொல் தருக
அலுவலகப் பணிகாரணமாக வெளியூர் சென்ற என் தந்தை ஊர் திரும்ப ———— இரண்டு நாட்கள் ஆகும் என்றார்.

(A) மேலும்

(B) அதனால்

(C) இல்லையெனில்

(D) ஏனெனில்

(E) விடை தெரியவில்லை

34. இணைப்புச் சொல் தருக.
செல்வத்தின் பயன் ஈதல் ———— பிறருக்குக் கொடுத்து மகிழ்வோம்
(E) விடை தெரியவில்லை

28. ஒரு பொருள் தரும் பலசொற்கள் – 'ஆறு'

(A) நதி, எண்
(B) வாழி, பேறு
(C) அருமை, அன்பு
(D) ஓடு, ஆடு
(E) விடை தெரியவில்லை

29. மாலை – இரு பொருள் தருக.

(A) விடியற்காலை, காலை மடக்குதல்
(B) பார், உலகம்
(C) மலர்மாலை, அந்திப்பொழுது
(D) மலர், பூ
(E) விடை தெரியவில்லை

30. மது – இரு பொருள் தருக.

(A) மதி, நிலவு
(B) மாது, பெண்
(C) தேன், கள்
(D) மதார், செருக்கு
(E) விடை தெரியவில்லை

31. சரியான சொல்லைத் தேர்ந்தெடு.

———— வந்து கொண்டு இருக்கிறார்கள்

(A) அவைகள் (B) நாம்

(C) அவர்கள் (D) அது

(E) விடை தெரியவில்லை

32. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க (வாழ்வியல் அறிவைக்)

(A) தமிழ் ———— கொண்டுள்ளது

(B) நாம் ———— வாங்க வேண்டும்

(C) புத்தகங்கள் ———— கொடுக்கின்றன

(D) நல்ல நூல்கள் ———— நல்வழிப்படுத்துகின்றன

(E) விடை தெரியவில்லை

33. கீழ்க்கண்டவற்றில் சரியான இணைப்புச் சொல்லை எழுதுக.

காயிதே மில்லத் அவர்கள் மகிழுந்தில் பயணம் செய்வதை விரும்பாதவர் ———— அவர் எளிமையை விரும்பியவர்.

(A) ஏனெனில் (B) எனவே

(C) ஆகையால் (D) அதனால்

(E) விடை தெரியவில்லை

34. சரியான இணைப்புச் சொல்லால் நிரப்புக.

தீயினால் சுட்ட புண் ஆறிவிடும். ———— கடுஞ்சொல்லால் ஏற்படும் காயம் ஆறாது.

(A) அதனால் (B) ஆனால்

(C) எனவே (D) ஆகையால்

(E) விடை தெரியவில்லை

35. சரியான இணைப்புச் சொல்லால் நிரப்புக.

"தமிழ்மொழி தான் மிகப்பழமையான மொழி ————————, தமிழ்மொழியை நாட்டின் ஆட்சிமொழியாக அறிவிக்க வேண்டும்" என்றார் காயிதே மில்லத்.

(A) ஆனால்
(B) எனவே
(C) ஏனெனில்
(D) அதுபோல
(E) விடை தெரியவில்லை

36. சரியான வினாச்சொல் அமைந்த வாக்கியங்களைக் கண்டறிக.

I. தமிழ்ப்பாவை பள்ளிக்கு எப்படிச் சென்றாள்?
II. தமிழ்ப்பாவை பள்ளிக்கு எதற்குச் சென்றாள்?
III. தமிழ்ப்பாவை பள்ளிக்கு ஏன் சென்றாள்?
IV. தமிழ்ப்பாவை பள்ளிக்கு எப்பொழுது சென்றாள்?

(A) I, II, IV சரி
(B) I, IV சரி
(C) I, II, III, IV சரி
(D) II, III, IV சரி
(E) விடை தெரியவில்லை

37. வினாச்சொல்லை சரியாகப் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| I. | நூலகம் | A. | ஏன்? |
| II. | பாண்டவர்கள் | B. | யார்? |
| III. | பள்ளிக்கு சென்றது | C. | எங்குள்ளது? |
| IV. | செடிகள் வாடுவது | D. | எத்தனைப்பேர் |

(A) I-B II-C III-D IV-A
(B) I-C II-D III-A IV-B
(C) I-D II-A III-B IV-C
(D) I-C II-D III-B IV-A
(E) விடை தெரியவில்லை

38. பின்வரும் வினாத்தொடர்களில் ஏவல் வினாத் தொடரைக் கண்டறிக.

(A) ஆகுபெயர் என்றால் என்ன?

(B) நீ வரிசையில் நிற்க மாட்டாயா?

(C) இந்நூற்பாவிற்கு பொருள் யாது?

(D) தமிழ்ப்புத்தகம் உன்னிடம் தானே இருக்கிறது?

(E) விடை தெரியவில்லை

39. பொருத்தமான வினையடிச்சொல்லைக் கண்டறிக.
புத்தகம் மேசையில் இருக்கிறது.

(A) இரு

(B) இருக்கிறது

(C) இருந்தது

(D) இருக்கும்

(E) விடை தெரியவில்லை

40. அதைச் செய்தது _____.

I. நான் அன்று

II. நான் அல்லேன்

III. நான் அல்ல

IV. நான் இல்லை

(A) III

(B) II

(C) IV

(D) I

(E) விடை தெரியவில்லை

41. தேன், வான் – இவ்விரு சொற்களுக்கும் பொருந்தி வரும் சொல் எதுவெனக் கண்டறிக.

(A) வளி

(B) துளி

(C) அடை

(D) படை

(E) விடை தெரியவில்லை

42. சரியான இணையைக் கண்டறிக.

(A) தண்ணீர் – பருகினான்
(B) தண்ணீர் – குடித்தான்
(C) பால் – அருந்தினான்
(D) பால் – குடித்தான்
(E) விடை தெரியவில்லை

43. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குதல்
கீழ்க்கண்டவற்றில் எது சரியானது?

(A) பேச்சு மொழியை உலக வழக்கு என்றும், எழுத்து மொழியை இலக்கிய வழக்கு என்றும் கூறுவர்.
(B) பேச்சு மொழியை இலக்கிய வழக்கு என்றும், எழுத்து மொழியை உலக வழக்கு என்றும் கூறுவர்.
(C) பேச்சு மொழியை பேச்சு வழக்கு என்றும், எழுத்து மொழியை இலக்கண வழக்கு என்றும் கூறுவர்.
(D) பேச்சு மொழியை இலக்கண வழக்கு என்றும், எழுத்து மொழியை பேச்சு வழக்கு என்றும் கூறுவர்.
(E) விடை தெரியவில்லை

44. எழுத்து வழக்கில் அமைந்துள்ள வாக்கியங்களைக் கண்டறிக

I "பசிக்குது அண்ணா" என்கிறான் தம்பி.
II "அம்மா ஏன் நமக்குச் சாப்பாடு கொடுத்தனுப்புறதில்ல?" என்றான் தம்பி.
III "மதிய உணவுத் திட்டத்தை விரிவுபடுத்தப் போகிறேன்" என்றார் முதல்வர்.
IV "தமிழ்நாட்டுக் குழந்தைகள் பசியறியாமல் படிக்க வேண்டும்" என்றார் தலைவர்.

(A) I, II, III
(B) III, IV
(C) I, IV
(D) II, III
(E) விடை தெரியவில்லை

45. எந்தமிழ்நா – பிரித்து எழுதுக.

(A) எந் + தமிழ் + நா

(B) எந்த + தமிழ் + நா

(C) எம் + தமிழ் + நா

(D) எந்தம் + தமிழ் + நா

(E) விடை தெரியவில்லை

46. நிறுத்தற்குறிகளை அறிதல்
எது சரியானது?

(A) 'வளர் பிறையும் தேய் பிறையும்' என்னும் தலைப்பில் பேசுக.

(B) மழையைப் போற்றுவோம்?

(C) ஆகா, தூண்டிலில் மாட்டியது நீதானா.

(D) என்னே உயரமான மலை

(E) விடை தெரியவில்லை

47. கீழ்க்கண்டவற்றில் எங்கு முற்றுப்புள்ளி பயன்படுத்துவதில்லை?

(A) சொற்றொடரின் இறுதியில்

(B) மேற்கோள் குறிகளுக்கு அடுத்து

(C) சொற்குறுக்கங்களை அடுத்து

(D) பெயரின் தலைப்பு எழுத்தை அடுத்து

(E) விடை தெரியவில்லை

48. புதுகை – என்பதன் மரூஉ எது?

(A) புதுச்சேரி

(B) நாகப்பட்டினம்

(C) புதுக்கோட்டை

(D) கும்பகோணம்

(E) விடை தெரியவில்லை

49. ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுது

மயிலாப்பூர்

(A) மயிலை (B) மைலம்

(C) மைலாப்பூர் (D) மயிலாடுதுறை

(E) விடை தெரியவில்லை

50. ஊர்ப்பெயர்களின் மரூஉவைக் கண்டுபிடிக்க
தவறான ஊர்ப்பெயரின் மரூஉவை எழுதுக

(A) திருச்சி – திருச்சிராப்பள்ளி

(B) கோவை – கொடைக்கானல்

(C) நெல்லை – திருநெல்வேலி

(D) உதகை – உதகமண்டலம்

(E) விடை தெரியவில்லை

51. 'வெயிட் குறைந்த கோல்டு பிஸ்கட்' - இணையான தமிழ்ச்சொல் தருக

(A) தங்கக்கட்டி (B) எடைகுறைந்த தங்கக்கட்டி

(C) வெள்ளிக்கட்டி (D) நிறை குறைந்த தங்கக்கட்டி

(E) விடை தெரியவில்லை

52. பிறமொழிச் சொற்கள் கலவாத தொடரை எடுத்து எழுதுக

(A) கணியன் பள்ளி முடிந்து வீடு திரும்பினான்

(B) மணி காலிங்பெல்லை அழுத்தினான்

(C) மாணவர்கள் கிரவுண்டில் விளையாடினர்

(D) இன்று பல்வேறு துறைகளிலும் ரோபோ பயன்பாட்டிற்கு வந்துள்ளது

(E) விடை தெரியவில்லை

53. இணையான தமிழ்ச் சொல்லைக் கண்டறிக

'டெம்பெஸ்ட்'

(A) நிலக்காற்று (B) கடற்காற்று

(C) பெருங்காற்று (D) சுழல்காற்று

(E) விடை தெரியவில்லை

54. விடை வகைகள்

'எனக்குக் கற்றுத் தருகிறாயா' என்ற வினாவிற்கு 'கற்றுத் தருவேன்' என உரைப்பது

(A) மறை விடை (B) ஏவல் விடை

(C) நேர் விடை (D) சுட்டு விடை

(E) விடை தெரியவில்லை

55. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை அறிக

(A) Guild – மீட்டுருவாக்கம்

(B) Patent – வணிகக் குழு

(C) Nanotechnology – மீநுண் தொழில் நுட்பம்

(D) Myth – கலைப்படைப்பு

(E) விடை தெரியவில்லை

56. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ் சொல்லை அறிக

(A) Worksheet – முகப்புத்தாள்

(B) Spread sheet – விரிவுத்தாள்

(C) Wall paper – ஒப்பனைத்தாள்

(D) Ledger – பதிவேடு

(E) விடை தெரியவில்லை

57. அலுவல் சார்ந்த கலைச் சொல்லைக் கண்டறிக.

'ஃபாண்ட்'

(A) எழுத்து வடிவம்
(B) எழுத்து அளவு
(C) எழுத்துரு
(D) எழுத்து திருத்தம்
(E) விடை தெரியவில்லை

58. 'கிணற்றுத் தவளை போல' – உவமை கூறும் பொருள் தெளிக.

(A) தெளிவு
(B) அறிவுடைமை
(C) உலக அறிவின்மை
(D) தெளிவின்மை
(E) விடை தெரியவில்லை

59. 'விழலுக்கு இறைத்த நீர் போல' – உவமை கூறும் பொருத்தமான பொருளைத் தேர்க.

I. பயனின்மை
II. இல்லாதிருத்தல்
III. பயனடைதல்
IV. மறைந்துபோதல்

(A) I
(B) IV
(C) II
(D) III
(E) விடை தெரியவில்லை

60. வாக்கிய அமைப்பினைக் கண்டறிக :

அவனைத் திருந்தச் செய்தான்.

(A) செய்வினைத் தொடர்
(B) செயப்பாட்டு வினைத் தொடர்
(C) தன்வினைத் தொடர்
(D) பிறவினைத் தொடர்
(E) விடை தெரியவில்லை

61. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுதல்

"குமரன் பாடம் படித்தான்"

(A) செயப்பாட்டு வினை வாக்கியம்
(B) செய்வினை வாக்கியம்
(C) பிறவினை வாக்கியம்
(D) தன்வினை வாக்கியம்
(E) விடை தெரியவில்லை

62. செயப்பாட்டு வாக்கியங்களை கண்டு எழுதுக.

(A) கவிதா கவிதை எழுதவில்லை
(B) கவிதா கவிதை எழுதினாளா?
(C) கவிதா கவிதை எழுதப்பட்டது
(D) கவிதை கவிதாவால் எழுதப்பட்டது
(E) விடை தெரியவில்லை

63. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுத்தல்

மாணவர்களே 'இச்செயலைச் செய்தது மங்கையா? மணிமேகலையா?' என வினவுதல் என்ன வினா?

(A) அறிவினா
(B) ஐயவினா
(C) அறியாவினா
(D) கொளல் வினா
(E) விடை தெரியவில்லை

64. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுக்க.

காட்டில் புலி நடமாட்டம் உள்ளது.

(A) புலி நடமாட்டம் காட்டில் உள்ளது.
(B) காட்டில் புலி நடமாட்டம் உள்ளதா?
(C) ஆ! புலி நடமாட்டம் காட்டில் உள்ளதே.
(D) புலி காட்டில் நடமாடுகின்றது.
(E) விடை தெரியவில்லை

65. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுக்க.

குடியரசுத் தலைவர் நாளை தமிழகம் வருகிறார்.

(A) குடியரசுத் தலைவர் என்று தமிழகம் வருகிறார்?

(B) குடியரசுத் தலைவர் ஏன் தமிழகம் வருகிறார்?

(C) குடியரசுத் தலைவர் நாளை எவ்வாறு வருகிறார்?

(D) குடியரசுத் தலைவர் எதற்காக நாளை தமிழகம் வருகிறார்?

(E) விடை தெரியவில்லை

66. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குக. (சரியான தொடர் தேர்க)

(A) எளிமையை நான் எப்போதும் கடைபிடிப்பேன்

(B) கடைபிடிப்பேன் நான் எப்போதும் எளிமையை

(C) நான் எப்போதும் எளிமையைக் கடைபிடிப்பேன்

(D) எளிமையைக் கடைபிடிப்பேன் எப்போதும் நான்

(E) விடை தெரியவில்லை

67. சொற்களை ஒழுங்குபடுத்தி சரியான தொடரினை உருவாக்குக

(A) ஒரு சிறு பெண்ணுடன் வாழ்க்கை புத்தகம் ஒன்று நெடுகப் பேசிக்கொண்டே வருகிறது

(B) புத்தகம் ஒன்று ஒருசிறு பெண்ணுடன் வாழ்க்கை நெடுகப் பேசிக்கொண்டே வருகிறது

(C) வாழ்க்கை நெடுகப் பேசிக்கொண்டே வருகிறது புத்தகம் ஒன்று ஒரு சிறு பெண்ணுடன்

(D) புத்தகம் ஒன்று பேசிக்கொண்டே வருகிறது வாழ்க்கை நெடுக ஒரு சிறு பெண்ணுடன்

(E) விடை தெரியவில்லை

68. சொற்களை ஒழுங்குபடுத்தி முறையான தொடராக்குக

கழுத்து பிறக்கும் இடம் உயிரெழுத்து ஆகும்.

(A) பிறக்கும் இடம் உயிரெழுத்து கழுத்து ஆகும்

(B) உயிரெழுத்து பிறக்கும் இடம் கழுத்து ஆகும்

(C) கழுத்து உயிரெழுத்து ஆகும் பிறக்கும் இடம்

(D) பிறக்கும் உயிரெழுத்து கழுத்து இடம் ஆகும்

(E) விடை தெரியவில்லை

69. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குக

புன்பமொப்லமைழி

(A) மென் மொழிப்புலமை

(B) புன் மொழிப்புலமை

(C) பன் மொழிப்புலமை

(D) புலமைப் பொன் மொழி

(E) விடை தெரியவில்லை

70. அகர வரிசைப்படுத்துக

(A) பூட்டு, உழக்கோல், கலப்பை, கொழு

(B) கொழு, பூட்டு, உழக்கோல், கலப்பை

(C) உழக்கோல், கலப்பை, கொழு, பூட்டு

(D) கலப்பை, கொழு, பூட்டு, உழக்கோல்

(E) விடை தெரியவில்லை

71. அகரவரிசைப்படி சொற்களைச் சீர் செய்க

வெளவால், ஆசிரியர், மனிதன், தையல், ஓணான்

(A) ஓணான், ஆசிரியர், மனிதன், தையல், வெளவால்

(B) ஆசிரியர், ஓணான், தையல், மனிதன், வெளவால்

(C) ஆசிரியர், ஓணான், வெளவால், தையல், மனிதன்

(D) ஆசிரியர், ஓணான், தையல், வெளவால், மனிதன்

(E) விடை தெரியவில்லை

72. அகர வரிசைப்படுத்திய சரியான விடையைத் தேர்க

(A) கல்ல, கலாம், கண், கட்ட, கழுத்து

(B) கடை, கண், கலை, கழுத்து, கலாம்

(C) கடை, கண், கலாம், கலை, கழுத்து

(D) கடை, கலாம், கண், கழுத்து, கலை

(E) விடை தெரியவில்லை

73. வேர்ச்சொல்லில் இருந்து வினை முற்றை உருவாக்குக

'பெறு'

(A) பெற்று (B) பேறு

(C) பெற்றாள் (D) பெறுக

(E) விடை தெரியவில்லை

74. "சிரி" என்ற வேர்ச்சொல்லில் இருந்து வினை எச்சத்தை உருவாக்குக

(A) சிரித்து (B) சிரிப்பு

(C) சிரித்த (D) சிரித்தல்

(E) விடை தெரியவில்லை

75. உண் - என்ற வேர்ச்சொல்லின் வினையெச்ச வடிவம் தருக.

(A) உண்டான்
(B) உண்ட
(C) உண்ணுதல்
(D) உண்டு
(E) விடை தெரியவில்லை

76. வேர்ச்சொல்லைக் கண்டறிக

'வாழ்க்கை'

(A) வாழ்
(B) வாழ்க
(C) வாழு
(D) வாழி
(E) விடை தெரியவில்லை

77. வேர்ச்சொல்லைத் தேர்வு செய்க

'துய்ப்பது'

(A) துய்
(B) துய்த்து
(C) துய்த்த
(D) துய்ப்பதால்
(E) விடை தெரியவில்லை

78. வேர்ச்சொல்லைத் தேர்வு செய்க

'பயின்றாள்'

(A) பயின்
(B) பயின்ற
(C) பயில்
(D) பயின்று
(E) விடை தெரியவில்லை

79. கப்பல் செலுத்துபவரை இப் பெயர்களாலும் அழைப்பர்

(A) நாவாய் ஓட்டுனர், கடல்வழிகாட்டி (B) மீகாமன், நீகான்

(C) நங்கூரர், கலஞ்செய்யர் (D) பாய்மரர், பரிமுக அம்பி

(E) விடை தெரியவில்லை

80. ஒழி என்பதன் பொருள் கண்டறிக

(A) அழித்து விடு, தொலைத்து விடு (B) அறிவு, அழகு

(C) வெளிச்சம், பதுங்கிக் கொள் (D) ஓசை, புகழ்

(E) விடை தெரியவில்லை

81. சரியான வாக்கிய அமைப்பினைக் கண்டறிக

(A) நம் மானிலம் இந்த ஆண்டு வரட்சியால் பாதிக்கப்பட்டது.

(B) நம் மாநிலம் இந்த ஆண்டு வறட்சியால் பாதிக்கப்பட்டது.

(C) நம் மாநிளம் இந்த ஆன்டு வறட்சியாள் பாதிக்கப்பட்டது.

(D) நம் மாநிலம் இந்த ஆண்டு வறச்சியால் பாதிக்கப்பட்டது.

(E) விடை தெரியவில்லை

82. ஒலி வேறுபாடறிந்து சரியான தொடரைக் கண்டறிக :

(A) தோட்டத்தில் மலர்கள் மனம் வீசியதால் மணம் மகிழ்ந்தது

(B) தோட்டத்தில் மலர்கள் மனம் வீசியதால் மனம் மகிழ்ந்தது

(C) தோட்டத்தில் மலர்கள் மணம் வீசியதால் மனம் மகிழ்ந்தது

(D) தோட்டத்தில் மலர்கள் மணம் வீசியதால் மணம் மகிழ்ந்தது

(E) விடை தெரியவில்லை

83. பொருள் வேறுபாடறிந்து பொருத்தமுடைய சொற்களைக் கண்டறிக :

பறவை – பரவை

(A) புள் – கடல்

(B) பறத்தல் – பரவுதல்

(C) கிளி – நாவாய்

(D) இறகு – கரையோரம்

(E) விடை தெரியவில்லை

84. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல்லை எழுதுக :

(A) Epigraph – சித்திர எழுத்து

(B) Lexicography – கல்வெட்டு

(C) Pictograph – அகராதியியல்

(D) Phoneme – ஒலியன்

(E) விடை தெரியவில்லை

85. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ் சொல்லை அறிக :

| | | | |
|---|---|---|---|
| (a) | Commodity | 1. | பாரம்பரியம் |
| (b) | Voyage | 2. | கலப்படம் |
| (c) | Adulteration | 3. | கடற் பயணம் |
| (d) | Heritage | 4. | பண்டம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 2 | 4 | 3 | 1 |
| (D) | 1 | 4 | 3 | 2 |

(E) விடை தெரியவில்லை

86. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ் சொல்லை அறிக :

| | | | |
|---|---|---|---|
| (a) | கரன்சி நோட் | 1. | பற்று அட்டை |
| (b) | டெபிட் கார்டு | 2. | இணையத்தள வணிகம் |
| (c) | கிரெடிட் கார்டு | 3. | பணத்தாள் |
| (d) | ஆன்லைன் ஷாப்பிங் | 4. | கடன் அட்டை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 1 | 3 | 4 | 2 |
| (C) | 2 | 4 | 1 | 3 |
| (D) | 4 | 1 | 3 | 2 |

(E) விடை தெரியவில்லை

87. மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக :

இல்லத்தின் அருகே புதிதாகக் கூரை போட்டனர்.

(A) வேய்ந்தனர் (B) போட்டனர்

(C) மேய்ந்தனர் (D) கட்டினர்

(E) விடை தெரியவில்லை

88. சந்திப் பிழையை நீக்குக :

மனிதக் கண்டுப்பிடிப்புகள் அனைத்திலும் நன்மை, தீமை என்று இரண்டுப் பக்கங்கள் இருந்தே வந்திருக்கின்றன.

(A) கண்டுப்பிடிப்புகள், இரண்டு பக்கங்கள்

(B) கண்டுபிடிப்புகள், இரண்டு பக்கங்கள்

(C) கண்டுபிடிப்புகள், இரண்டுப் பக்கங்கள்

(D) கண்டுப்பிடிப்புகள், இரண்டுப் பக்கங்கள்

(E) விடை தெரியவில்லை

89. வழுவற்ற தொடர் எது?

(A) நாளை பேசுகிறான்
(B) நாளை பேசுவான்
(C) நாளை பேசினான்
(D) நாளை பேசிச் சென்றான்
(E) விடை தெரியவில்லை

90. மரபுப் பிழையற்றதை எடுத்து எழுதுக

(A) சிங்கம் – உறுமும்
(B) பசு – கதறும்
(C) நாய் – கத்தும்
(D) குர்ங்கு – குனுகும்
(E) விடை தெரியவில்லை

91. மரபுப் பிழையற்ற சொல்லைத் தெரிவு செய்க.

கப்பல் கட்டும் கலைஞர்கள் ———— என்று அழைக்கப்பட்டனர்.

(A) தச்சர்
(B) கொல்லர்
(C) கலைஞர்
(D) கம்மியர்
(E) விடை தெரியவில்லை

92. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக.

(A) வன் தொடர்
(B) மென் தொடர்
(C) இடைத் தொடர்
(D) கடைத்தொடர்
(E) விடை தெரியவில்லை

93. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக :

'மதி' என்பதன் பொருளைக் குறிக்காத சொல்

(A) சந்திரன் (B) சூரியன்

(C) அறிவு (D) நிலவு

(E) விடை தெரியவில்லை

94. மதுரைக்குச் செல்வாயா? என்ற வினாவிற்குச் செல்லாமல் இருப்பேனா? என்று கூறுவது எவ்வகை விடை?

(A) இன மொழி விடை (B) சுட்டு விடை

(C) வினா எதிர் வினாதல் விடை (D) மறை விடை

(E) விடை தெரியவில்லை

95. எதிர்ச்சொல்லைக் கண்டறிக.

'இனிய'

(A) இனிமை (B) இன்பம்

(C) இன்னாத (D) எளிய

(E) விடை தெரியவில்லை

96. எதிர்ச்சொல்லை எடுத்தெழுது.

சோம்பல்

(A) விழிப்பு (B) மகிழ்ச்சி

(C) களிப்பு (D) சுறுசுறுப்பு

(E) விடை தெரியவில்லை

97. 'மருள்' - எதிர்ச்சொல் தருக.

(A) தெருள்
(B) அருள்
(C) உருள்
(D) பொருள்
(E) விடை தெரியவில்லை

98. வாழை + இலை – சேர்த்தெழுதுக.

(A) வாழைலை
(B) வாழிலை
(C) வாழைஇலை
(D) வாழையிலை
(E) விடை தெரியவில்லை

99. அருந்துணை – பிரித்தெழுதுக.

(A) அருமை + துணை
(B) அரு + இணை
(C) அரு + துணை
(D) அருமை + இணை
(E) விடை தெரியவில்லை

100. அறிவு + உடைமை – சேர்த்தெழுதுக.

(A) அறிவு உடைமை
(B) அறியுடைமை
(C) அறிவுடைமை
(D) அறிஉடைமை
(E) விடை தெரியவில்லை

**COMPUTER BASED TEST - 2023**

**PAPER – II / தாள்- II**

**COMPULSORY TAMIL LANGUAGE ELIGIBILITY TEST (SSLC standard) and GENERAL STUDIES (Degree standard)**

**கட்டாய தமிழ்மொழித் தகுதித் தேர்வு (பத்தாம் வகுப்பு தரம்) மற்றும் பொது அறிவு (பட்டப்படிப்புத் தரம்)**

# பகுதி-அ (தமிழ் தகுதி தேர்வு)
# Part-A (Tamil Eligibility Test)

**வினாக்கள் : 1–100** **மொத்த மதிப்பெண்கள் : 150**

**Questions : 1–100** **Total Marks : 150**

---

1. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க.

ஓரிடத்தில் அமர்வேன்; மனம் அமைதி எய்தும்

(A) அமர்வேன், அமைதி, எய்தும், மனம், ஓரிடத்தில்

(B) அமைதி, அமர்வேன், எய்தும், ஓரிடத்தில், மனம்

(C) அமர்வேன், அமைதி, எய்தும், ஓரிடத்தில், மனம்

(D) அமர்வேன், அமைதி, ஓரிடத்தில், எய்தும், மனம்

(E) விடை தெரியவில்லை

2. வேர்ச்சொல்லை வினையாலணையும் பெயராக்குக

பார்

(A) பார்த்தவன்

(B) பார்த்த

(C) பார்த்து

(D) பார்த்தல்

(E) விடை தெரியவில்லை

3. வேர்ச்சொல்லைக் கொண்டு வினையெச்சத்தை உருவாக்கல்

தா

(A) தந்து

(B) தந்த

(C) தந்தான்

(D) தருதல்

(E) விடை தெரியவில்லை

4. தொழிற்பெயரைத் தேர்ந்தெடு

வாழ்

(A) வாழ்வு (B) வாழ்தல்

(C) வாழ்க்கை (D) வாழ்வான்

(E) விடை தெரியவில்லை

5. வந்தான் – என்பதன் வேர்ச்சொல்லை எழுதுக.

(A) வந்த (B) வரு

(C) வா (D) வந்து

(E) விடை தெரியவில்லை

6. வேர்ச்சொல்லைத் தேர்வு செய்க.

வந்தனன்

(A) வந்து (B) வந்த

(C) வா (D) வ

(E) விடை தெரியவில்லை

7. கொல்லாமை-என்ற எதிர்மறை தொழிற் பெயரிலிருந்து வேர்ச்சொல்லை எழுதுக.

(A) கொல் (B) கொல்லு

(C) கொல்லுதல் (D) கொல்லா

(E) விடை தெரியவில்லை

8. வேர்ச்சொல்லைத் தேர்வு செய்தல்

கொடுத்தான்

(A) கொடு (B) கொடுத்த

(C) கொடுத்து (D) கொடுக்கின்றான்

(E) விடை தெரியவில்லை

9. வெய்யோன் எனும் பொருள் தரும் சொற்களைத் தேர்க.

(A) பகலவன், பரிதி, ஆதவன், ஞாயிறு (B) சந்திரன், திங்கள், பரிதி, ஞாயிறு

(C) ஆதவன், நிலவு, பரிதி, ஞாயிறு (D) திங்கள், சூரியன், பகலவன், பரிதி

(E) விடை தெரியவில்லை

10. பேசுதல், விளம்புதல், செப்புதல், உரைத்தல் எனப் பொருள்படும் ஒரு சொல்லைக் கண்டறிக.

(A) சொல்லுதல் (B) காணுதல்

(C) செல்லுதல் (D) எழுதுதல்

(E) விடை தெரியவில்லை

11. ஒலி வேறுபாடறிந்து சரியான தொடரை எழுது

(A) வானில் வாணம் வெடித்தது (B) வாணில் வானம் வெடித்தது

(C) வாணில் வாணம் வெடித்தது (D) வானில் வானம் வெடித்தது

(E) விடை தெரியவில்லை

12. ஏரி, ஏறி - பொருள் வேறுபாடு உணர்க.

(A) குலம், குளம் (B) ஏறுதல், இறங்குதல்

(C) மேலே, கீழே (D) குளம், மேலே ஏறி

(E) விடை தெரியவில்லை

13. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லைத் தருக.

Merchant

(A) வணிகர் (B) பண்டம்

(C) கடற்பயணம் (D) நுகர்வோர்

(E) விடை தெரியவில்லை

14. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை அறிதல்

Missile

(A) மின்னணு (B) ஏவு உற்பத்தி

(C) கடல் மைல் (D) ஏவுகணை

(E) விடை தெரியவில்லை

15. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லைத் தேர்ந்தெடு

PATENT

(A) நோயாளி (B) காப்புரிமை

(C) பெற்றோர் (D) ஆவணம்

(E) விடை தெரியவில்லை

16. மரபுப் பிழையை நீக்குக

நேற்று தென்றல் காற்று அடித்தது

(A) ஓய்ந்தது (B) அடித்தது

(C) வீசியது (D) பறந்தது

(E) விடை தெரியவில்லை

17. சரியான வினைமரபைத் தேர்க

கயல் பானை ———————— கற்றுக் கொண்டாள்.

(A) உருவாக்க (B) வனைய

(C) படைக்க (D) செய்ய

(E) விடை தெரியவில்லை

18. சந்திப்பிழையை நீக்குக:-

வானை தொடும் அளவுக்கு அறிவை

வளர்த்து கொள்ள வேண்டும்.

(A) வானைத் தொடும் அளவுக்கு அறிவை வளர்த்து கொள்ள வேண்டும்

(B) வானை தொடும் அளவுகு அறிவை வளர்து கொள்ள வேண்டும்

(C) வானை தொடும் அளவுக்கு அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும்

(D) வானைத் தொடும் அளவுக்கு அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும்

(E) விடை தெரியவில்லை

19. முருகு என்னும் சொல்லோடு பொருந்தாததைக் கண்டறிக.

(A) தேன் (B) மணம்

(C) மலை (D) அழகு

(E) விடை தெரியவில்லை

20. குற்றியலுகரத்தோடு பொருந்தாத சொல்லைத் தேர்க.

(A) ஆறு (B) மாசு

(C) பாகு (D) அது

(E) விடை தெரியவில்லை

21. அரசு, எய்து, மூழ்கு, மார்பு

பொருந்தாச் சொல்லைக் கண்டறிக.

(A) அரசு (B) எய்து

(C) மூழ்கு (D) மார்பு

(E) விடை தெரியவில்லை

22. நல்கும் என்பதன் எதிர்ச்சொல்லைக் கண்டறிக.

(A) தரும் (B) தராது

(C) வரும் (D) வராது

(E) விடை தெரியவில்லை

23. எதிர்ச்சொல்லை எடுத்தெழுதுக.

ஊக்கம்

(A) தெளிவு (B) சோர்வு

(C) பொய்மை (D) விலகு

(E) விடை தெரியவில்லை

24. 'நீக்குதல்' என்பதன் எதிர்ச்சொல்லைக் கண்டறிக.

(A) போக்குதல் (B) தள்ளுதல்

(C) அழித்தல் (D) சேர்த்தல்

(E) விடை தெரியவில்லை

25. சேர்த்தெழுதுக

இன்புற்று + இருக்க

(A) இன்புற்றிருக்க (B) இன்புறுறிருக்க

(C) இன்புற்று இருக்க (D) இன்புறுஇருக்க

(E) விடை தெரியவில்லை

26. பிரித்தெழுதுதல்

படிப்பறிவு என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைக்கும் சொல்

(A) படி + அறிவு (B) படிப்பு + அறிவு

(C) படி + வறிவு (D) படிப்பு + வறிவு

(E) விடை தெரியவில்லை

27. 'அமுதென்று' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

(A) அமுது + தென்று
(B) அமுது + என்று
(C) அமுது + ஒன்று
(D) அமு + தென்று
(E) விடை தெரியவில்லை

28. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க.
(இயற்கையோடு)

(A) வாகனங்கள் ———— தொடர்புடையது
(B) விலங்குகள்———— தொடர்புடையது
(C) நெகிழிகள் ———— வாழ்வது
(D) வீட்டு உபயோகப் பொருட்கள் ———— தொடர்புடையது
(E) விடை தெரியவில்லை

29. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க.
(நடித்தல்)

(A) ———— அவரை மிஞ்ச ஆள் கிடையாது
(B) பொது வாழ்வில் ———— கூடாது
(C) உழவர்கள் நாற்று ———— வயலுக்குச் செல்வர்
(D) ஒரு ———— நாடகம் பார்க்கிறாள்
(E) விடை தெரியவில்லை

30. 'படி' – என்னும் வேர்ச்சொல்லில் இருந்து தொழிற்பெயரை உருவாக்குக.

(A) படித்து
(B) படித்த
(C) படித்தல்
(D) படிக்க
(E) விடை தெரியவில்லை

31. சரியான இணைப்புச் சொல்லால் நிரப்புக.

காயிதே மில்லத் அவர்கள் மகிழுந்தில் பயணம் செய்வதை விரும்பாதவர். ———— அவர் எளிமையை விரும்பியவர்

(A) ஏனெனில்
(B) எனவே
(C) அதனால்
(D) ஆகையால்
(E) விடை தெரியவில்லை

32. பொருத்தமான இணைப்புச் சொல்லைத் தேர்ந்தெடு.

நான் என் உயிரைக் கொடுப்பதற்குக் கொஞ்சமும் கவலைப்படவில்லை. ———— நான் கடவுளுக்கு எதிராக ஒன்றும் செய்யவில்லை.

(A) எனவே
(B) ஆகவே
(C) அதனால்
(D) ஏனெனில்
(E) விடை தெரியவில்லை

33. சரியான வினாச்சொல்லைத் தேர்ந்தெடு

திருக்குறளை இயற்றியவர் ————

(A) எவ்வாறு?
(B) ஏன்?
(C) யார்?
(D) எப்படி?
(E) விடை தெரியவில்லை

34. சரியான வினாச்சொல்லைத் தேர்ந்தெடு.

மெய் என்பதன் பொருள் ————?

(A) யார்
(B) எத்தனை
(C) எங்கு
(D) யாது
(E) விடை தெரியவில்லை

35. காலமறிந்து சரியான தொடரைக் கண்டறி.

(A) நான் நேற்று மதுரைக்கு வந்தேன்

(B) நான் நாளை மதுரைக்கு வந்தேன்

(C) நான் இன்று மதுரைக்கு வருவேன்

(D) நான் நேற்று மதுரைக்கு வருவேன்

(E) விடை தெரியவில்லை

36. பொருத்தமான காலம் அமையுமாறு எழுது.

நாங்கள் நாளை கடற்கரைக்குச்

(A) செல்கிறோம்

(B) செல்கின்றோம்

(C) சென்றோம்

(D) செல்வோம்

(E) விடை தெரியவில்லை

37. சொற்களை இணைத்து புதிய சொல் உருவாக்கல் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | மணி | (1) | வெளி |
| (b) | எழுது | (2) | நூல் |
| (c) | தமிழ் | (3) | கோல் |
| (d) | விண் | (4) | மாலை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 4 | 2 | 1 | 3 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 1 | 3 | 2 | 4 |

(E) விடை தெரியவில்லை

38. பேச்சு வழக்கினை எழுத்து வழக்காக மாற்றுக.

உங்கூருக்கே அவனெக் கூட்டிக்கிட்டு வர்றேன்

(A) உங்கள் ஊருக்கே அவனெக் கூட்டிட்டு வர்றேன்

(B) உங்கள் ஊருக்கே அவனைக் கூட்டிக்கொண்டு வருகிறேன்

(C) உங்கூருக்கே அவனை கூட்டிக்கிட்டு வருகிறேன்

(D) உங்கூருக்கே அவன கூட்டிக்கொண்டு வர்றேன்

(E) விடை தெரியவில்லை

39. பேச்சுவழக்கினை எழுத்து வழக்காக மாற்றுக.

அப்ப அவனுக்கு மூணு வயசு இருக்கும்

(A) அப்போது அவனுக்கு மூணு வயது இருக்கும்

(B) அப்பொழுது அவனக்கு மூன்று வயசு இருக்கும்

(C) அப்பொழுது அவனுக்கு மூன்று வயது இருக்கும்

(D) அப்போ அவனுக்கு மூணு வயது இருக்கும்

(E) விடை தெரியவில்லை

40. 'பணி' எனும் சொல் உணர்த்தும் இரு பொருள் தேர்க

(A) முனிவு, வேளை

(B) வேலை, பணிவு

(C) வேளை, பண்பு

(D) வேற்றுமை, தாழ்வு

(E) விடை தெரியவில்லை

41. இரு பொருள் தருக.

'கப்பல்'

(A) படகு, விமானம்

(B) தோணி, பேருந்து

(C) வங்கம், நாவாய்

(D) படகு, சிற்றுந்து

(E) விடை தெரியவில்லை

42. குறில் - நெடில் மாற்றம் பொருள் வேறுபாடு அறிக.

தரம் - தாரம்

(A) தகுதி - மிகுதி
(B) மனைவி - தகுதி
(C) மதிப்பு - துணி
(D) தகுதி - மனைவி
(E) விடை தெரியவில்லை

43. தவறான இணையைத் தேர்ந்தெடு.

(A) கொள் - கோள்
(B) பெறு - பேறு
(C) விடு - வீடு
(D) பனி - பாணி
(E) விடை தெரியவில்லை

44. குறில் நெடில் மாற்றம் - பொருள் வேறுபாடு

கோடிட்ட இடத்துக்கு பொருத்தமான சொல்லைத் தேர்க.

———— யைத் திரை ———— மறைத்திருக்கிறார்கள்.

(A) வலை, வளை
(B) மலை, மழை
(C) அலை, அழை
(D) சிலை, சீலை
(E) விடை தெரியவில்லை

45. கூற்று, காரணம் - சரியா? தவறா?

கூற்று : "கல்விக் கண் திறந்தவர்" என்று காமராசரைப் பாராட்டினார் பெரியார்

காரணம் : கல்வித்துறை விதிகளை மாணவர்களின் நலனுக்காக மாற்றி, அவர்கள் வாழும் இடங்களிலேயே பள்ளிக்கூடங்களைத் திறந்தவர் காமராசர்.

(A) கூற்று சரி; காரணம் தவறு
(B) கூற்று சரி; காரணம் சரி
(C) கூற்று தவறு; காரணம் சரி
(D) கூற்று தவறு; காரணம் தவறு
(E) விடை தெரியவில்லை

46. கலைச்சொல் அறிக.

Phonology

(A) ஒலியியல்
(B) இதழியல்
(C) மொழியியல்
(D) ஊடகம்
(E) விடை தெரியவில்லை

47. கலைச்சொற்களை அறிதல்

Plain

(A) சமவெளி
(B) புதர்
(C) மலைமுகடு
(D) பள்ளத்தாக்கு
(E) விடை தெரியவில்லை

48. கலைச்சொற்கள்

Missile

(A) ஏவு ஊர்தி
(B) ஏவுகணை
(C) செயற்கை கோள்
(D) ஏவுதல்
(E) விடை தெரியவில்லை

49. Homograph என்பதன் கலைச்சொல் யாது?

(A) மெய்யெழுத்து
(B) உயிரெழுத்து
(C) ஒப்பெழுத்து
(D) உயிர்மெய்யெழுத்து
(E) விடை தெரியவில்லை

பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி:– (50 – 54)

ஆசியாவிலேயே மிகப் பழமையான நூலகம் என்ற புகழுக்குரியது தஞ்சை சரசுவதி மகால் நூலகம். இந்திய மொழிகள் அனைத்திலும் உள்ள ஓலைச்சுவடிகள் இங்கு பாதுகாக்கப்படுகின்றன. உலகளவில் தமிழ்நூல்கள் அதிகமுள்ள நூலகம் கன்னிமரா நூலகமே. இது சென்னை எழும்பூரில் அமைந்துள்ளது. இந்தியாவில் தொடங்கப்பட்ட முதல் பொது நூலகம் என்ற பெருமைக்கு உரியது திருவனந்தபுரம் நடுவண் நூலகம். கொல்கத்தாவில் 1836-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு 1953-இல் பொதுமக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட தேசிய நூலகமே இந்தியாவின் மிகப்பெரிய நூலகமாகும். இது ஆவணக்காப்பக நூலகமாகவும் திகழ்கிறது. உலகின் மிகப்பெரிய நூலகம் என்ற பெருமையைத் தாங்கி நிற்பது அமெரிக்காவிலுள்ள லைப்ரரி ஆப் காங்கிரஸ்.

50. இந்தியாவில் தொடங்கப்பட்ட முதல் பொது நூலகம் எது?

(A) கன்னிமரா நூலகம்
(B) சரசுவதி மகால் நூலகம்
(C) திருவனந்தபுரம் நடுவண் நூலகம்
(D) அண்ணா நூற்றாண்டு நூலகம்
(E) விடை தெரியவில்லை

51. உலகின் மிகப்பெரிய நூலகம் எது?

(A) அமெரிக்கா - லைப்ரரி ஆப் காங்கிரஸ்
(B) சரசுவதி மகால் நூலகம்
(C) கன்னிமரா நூலகம்
(D) இங்கிலாந்து - ஆக்ஸ்போர்டு நூலகம்
(E) விடை தெரியவில்லை

52. ஆசியாவின் மிகப்பழமையான நூலகம்

(A) கன்னிமரா நூலகம்
(B) தில்லி தேசிய நூலகம்
(C) சரசுவதி மகால் நூலகம்
(D) பம்பாய் அம்பேத்கர் நூலகம்
(E) விடை தெரியவில்லை

53. கன்னிமரா நூலகம் சென்னை ———————— அமைந்துள்ளது.

(A) எழும்பூரில்
(B) அம்பத்தூரில்
(C) கோட்டூர்புரத்தில்
(D) அண்ணா சாலையில்
(E) விடை தெரியவில்லை

54. உலகளவில் தமிழ்நூல்கள் அதிகமுள்ள நூலகம் எது?

(A) தஞ்சை சரஸ்வதி மகால் நூலகம்
(B) கன்னிமரா நூலகம்
(C) மதுரை ஓலைச்சுவடி நூலகம்
(D) ஜி.யு. போப் நூலகம்
(E) விடை தெரியவில்லை

55. கீழ்காணும் தொடர்களில் (ஒரு - ஓர்) சரியாக அமைந்த தொடர் எது?

(A) ஒரு அலை அவனை தாக்கிற்று
(B) ஓர் அலை அவனை தாக்கிற்று
(C) ஓர் பெரிய அலை அவனை தாக்கிற்று
(D) ஓர் கடல் அலை அவனை தாக்கிற்று
(E) விடை தெரியவில்லை

56. பின்வருவனவற்றுள் சரியான தொடரைத் தேர்ந்தெடுக்க.

(A) ஒரு இரவும் ஓர் பகலும் சேர்ந்தது ஒரு நாள்
(B) ஓர் இரவும் ஒரு பகலும் சேர்ந்தது ஒரு நாள்
(C) ஒரு இரவும் ஒரு பகலும் சேர்ந்தது ஒரு நாள்
(D) ஓர் இரவும் ஓர் பகலும் சேர்ந்தது ஒரு நாள்
(E) விடை தெரியவில்லை

57. கீழ்காணும் தொடர்களில் (ஒரு - ஓர்) சரியாக அமைந்த தொடர் யாது?

(A) ஓர் வளமான காடு கண்ணில் தெரிகிறது

(B) ஒரு இனிய பசுமையான காடு தெரிகிறது

(C) ஒரு பசுமையான காடு கண்ணில் தெரிகிறது

(D) ஓர் பசுமையான காடு கண்ணில் தெரிகிறது

(E) விடை தெரியவில்லை

58. சொல், பொருள் - பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | சமர் | 1. | கடல் |
| (b) | கழனி | 2. | வீரம் |
| (c) | மறம் | 3. | வயல் |
| (d) | ஆழி | 4. | போர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 4 | 3 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

(E) விடை தெரியவில்லை

59. சொல் - பொருள்

| | | | |
|---|---|---|---|
| (a) | உரு | 1. | பிளக்க |
| (b) | போழ | 2. | அழகு |
| (c) | வங்கூழ் | 3. | நாவாய் ஓட்டுபவன் |
| (d) | நீகான் | 4. | காற்று |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 2 | 4 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 2 | 1 | 4 | 3 |
| (D) | 1 | 4 | 3 | 2 |

(E) விடை தெரியவில்லை

60. சொல் - பொருள் பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| (a) | பந்தர் | 1. | முதற்போலி |
| (b) | மைஞ்சு | 2. | முற்றுப்போலி |
| (c) | அஞ்சு | 3. | இடைப்போலி |
| (d) | அரையர் | 4. | கடைப்போலி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 2 | 3 | 1 | 4 |
| (D) | 1 | 2 | 4 | 3 |

(E) விடை தெரியவில்லை

61. ஒருமை - பன்மை பிழையை நீக்குக.

கோடிட்ட இடத்தை பொருத்தமானச் சொல்லால் நிரப்புக.

அரசர்கள் நல்லாட்சி ————————

(A) செய்தார்கள் (B) செய்தார்

(C) செய்வார் (D) செய்யும்

(E) விடை தெரியவில்லை

62. ஒருமை பன்மை பிழையற்ற தொடரைச் சுட்டுக.

I. அவன் கவிஞர் அன்று

II. அவன் கவிஞன் அன்று

III. அவன் கவிஞன் அல்ல

IV. அவன் கவிஞன் அல்லன்

(A) II (B) I

(C) IV (D) III

(E) விடை தெரியவில்லை

63. ஒருமை-பன்மை பிழையற்றத் தொடர் எது?

(A) அமைச்சரோடு அலுவலர்கள் சென்றனர்.

(B) அமைச்சரோடு அலுவலர்கள் சென்றது

(C) அமைச்சரோடு அலுவலர்கள் சென்றன

(D) அமைச்சரோடு அலுவலர்கள் சென்றாள்

(E) விடை தெரியவில்லை

64. எவ்வளவு அழகான மலர்! – இது எவ்வகைத் தொடர்

(A) உணர்ச்சித் தொடர் (B) கட்டளைத் தொடர்

(C) வினாத் தொடர் (D) செய்தித் தொடர்

(E) விடை தெரியவில்லை

65. கூட்டப் பெயரைக் குறிப்பிடு

'ஆ'

(A) ஆ மந்தை (B) ஆ திரள்

(C) ஆ நிரை (D) ஆ நிரல்

(E) விடை தெரியவில்லை

66. கூட்டப் பெயரை எழுதுக.

வீரர்

(A) கூட்டம் (B) அணி

(C) திரள் (D) படை

(E) விடை தெரியவில்லை

67. சொற்களின் கூட்டுப்பெயர்கள்.

தென்னை – கூட்டுப்பெயர்

(A) மாந்தோப்பு (B) தென்னந்தோப்பு

(C) தென்னங்காடு (D) தென்னங்கொல்லை

(E) விடை தெரியவில்லை

68. பொருந்தா இணையைக் கண்டறிக.

(A) செய் - வயல் (B) தாள் - முயற்சி

(C) வரை - மலை (D) மஞ்சு - மழை

(E) விடை தெரியவில்லை

69. பொருத்தமான பொருளைத் தெரிவு செய்க.

'முழவு'

(A) தோற்பாவை (B) இசைக்கருவி

(C) நெற்கட்டு (D) வளையோசை

(E) விடை தெரியவில்லை

70. பொருத்தமான பொருளைத் தெரிவு செய்தல்.

விரட்டாதீர்கள் – பறவைக்கு ————————

வெட்டாதீர்கள் – மனிதருக்கு அவை தரும் ————————

(A) கூரை வீடு - ஓட்டு வீடு (B) ஓலை வீடு - சணல் வீடு

(C) கல் வீடு - புல் வீடு (D) மரம் வீடு - மர வீடு

(E) விடை தெரியவில்லை

71. "தினை-திணை" – இச்சொற்களின் பொருளைத் தரும் பொருத்தமான இணையைத் தேர்ந்தெடுக்க.

(A) உணவுப் பொருள் - ஒழுக்கம்
(B) குறிஞ்சி - அகப்பொருள்
(C) வயல் - மருதம்
(D) ஒழுக்கம் - புறப்பொருள்
(E) விடை தெரியவில்லை

72. சரியான நிறுத்தற்குரியுடைய சொற்றொடரைத் தேர்ந்தெடு.

(A) தேன் போன்ற தமிழ் - என்று கூறுவது உவமை ஆகும்.
(B) 'தேன் போன்ற தமிழ்' என்று கூறுவது உவமை ஆகும்.
(C) தேன் போன்ற தமிழ் என்று கூறுவது உவமை ஆகும்.
(D) 'தேன்' போன்ற 'தமிழ்' என்று கூறுவது உவமை ஆகும்.
(E) விடை தெரியவில்லை

73. சரியான நிறுத்தற்குறிகள் அமைந்த தொடரைத் தேர்க.

(A) "இல்ல சார், அவனை விடக்கூடாது சார்!" என்று சொன்னார்கள்.
(B) "இல்ல சார்" அவனை விடக்கூடாது சார்! என்று சொன்னார்கள்.
(C) இல்ல சார் அவனை, விடக்கூடாது சார். என்று சொன்னார்கள்.
(D) இல்ல சார் 'அவனை' விடக்கூடாது சார். என்று சொன்னார்கள்.
(E) விடை தெரியவில்லை

74. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுதல் –

தன்வினை, பிறவினை, செய்வினை, செயப்பாட்டுவினை வாக்கியங்களை கண்டெழுதுதல்

பிறவினை வாக்கியத்தை தேர்ந்தெடுக்க

(A) தந்தை மகனை நன்றாகப் படிக்கப்பட்டது.
(B) தந்தை மகனை நன்றாகப் படிக்க வைத்தார்.
(C) தந்தை மகனை நன்றாக படிக்க வைக்கப்பட்டது
(D) தந்தை மகனை நன்றாகப் படிக்க வைத்தான்.
(E) விடை தெரியவில்லை

75. ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுதுக:-

திருநெல்வேலி

(A) நெல்லை
(B) நெல்லையூர்
(C) நெய்வேலி
(D) நெய்யாறு
(E) விடை தெரியவில்லை

76. 'வாழ்' எனும் வேர்ச்சொல்லின் தொழிற்பெயரைக் கண்டறிக

(A) வாழ்தல்
(B) வாழல்
(C) வாழ்க்கை
(D) வாழ்க
(E) விடை தெரியவில்லை

77. ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுதுக.

கும்பகோணம் - என்பதன் மரூஉவை கண்டறிக.

(A) கோவை
(B) கோடை
(C) குடந்தை
(D) கும்பை
(E) விடை தெரியவில்லை

78. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்களை கண்டறிதல்

பஸ் ஸ்டாண்ட்

(A) பேருந்துவண்டி
(B) மிதிவண்டி நிலையம்
(C) பேருந்து நிறுத்தம்
(D) மகிழுந்து நிலையம்
(E) விடை தெரியவில்லை

79. பிறமொழி சொற்களுக்கான தமிழ்ச் சொல்லினைக் கண்டறி.

கோல்டு பிஸ்கட்

(A) தங்க பிஸ்கட்
(B) தங்கக் கட்டி
(C) தங்கக் கிளி
(D) தங்க இனிப்பு வெதுப்பி
(E) விடை தெரியவில்லை

80. பிறமொழிச் சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல்.

"ஆடிட்டர்" என்பதன் தமிழ்ச் சொல்.

(A) தலைமை கணக்கர்
(B) காசாளர்
(C) பட்டயக் கணக்கர்
(D) மேலாளர்
(E) விடை தெரியவில்லை

81. "இது செய்வாயா?" என்ற வினாவிற்கு "நீயே செய்" என விடை கூறுவது

(A) மறை விடை
(B) ஏவல் விடை
(C) நேர் விடை
(D) இனமொழி விடை
(E) விடை தெரியவில்லை

82. கோட்டோவியம் – பிரித்தெழுதுக.

(A) கோட் + ஓவியம்
(B) கோடு + ஓவியம்
(C) கோடி + ஓவியம்
(D) கோடிய + ஓவியம்
(E) விடை தெரியவில்லை

83. 'கடைக்குப் போவாயா?' என்ற கேள்விக்குப் 'போக மாட்டேன்' என மறுத்துக் கூறல் எவ்வகை விடையைச் சார்ந்தது?

(A) மறை விடை
(B) நேர் விடை
(C) ஏவல் விடை
(D) உறுவது கூறல் விடை
(E) விடை தெரியவில்லை

84. அலுவல் சார்ந்த கலைச்சொல் அறிக

Irrigation-என்பதன் தமிழ்ச்சொல்லைத் தேர்ந்தெடுக்க.

(A) பாசனம்
(B) விவசாயம்
(C) பூச்சிக்கொல்லி
(D) அணைக்கட்டு
(E) விடை தெரியவில்லை

85. கலைச்சொல் தேர்ந்தெழுதுதல்

Sentence

(A) பத்தியமைத்தல்
(B) சொற்றொடர்
(C) தன்னார்வலர்
(D) சீர்திருத்தவாதி
(E) விடை தெரியவில்லை

86. அலுவல் சார்ந்த சொற்கள் (கலைச்சொல்)

Library- சரியான கலைச் சொல்லைத் தேர்க

(A) மின்தூக்கி
(B) மின்நூல்
(C) குறுந்தகடு
(D) நூலகம்
(E) விடை தெரியவில்லை

87. உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெழுதுதல்

காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்தது போல

(A) எதிர்பாரா நிகழ்வு
(B) தற்செயல் நிகழ்வு
(C) ஒற்றுமையின்மை
(D) பயனற்ற செயல்
(E) விடை தெரியவில்லை

88. உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

'விழலுக்கு இறைத்த நீர் போல'-உவமை கூறும் பொருள் தெளிக.

(A) பயனற்ற செயல்
(B) எதிர்பாராத செயல்
(C) தற்செயல் நிகழ்வு
(D) வெளிப்படைத் தன்மை
(E) விடை தெரியவில்லை

89. உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெழுதுதல்

பாரதியின் பாடல்கள் உள்ளங்கை நெல்லிக்கனி போல அனைவருக்கும் விளங்கும்.

(A) வெளிப்படைத் தன்மை
(B) தடையின்றி மிகுதியாக
(C) ஒற்றுமையின்மை
(D) பயனற்ற செயல்
(E) விடை தெரியவில்லை

90. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுதல்-தன்வினை, பிறவினை, செய்வினை, செயப்பாட்டு வினை.

"சரியான பிறவினையைத் தேர்ந்தெடு"

(A) பந்து உருண்டது
(B) அவர்கள் நன்றாகப் படித்தனர்
(C) தந்தை மகனை நன்றாகப் படிக்க வைத்தார்
(D) மணிமேகலை யார்?
(E) விடை தெரியவில்லை

91. எவ்வகை வாக்கியமென கண்டெழுதுதல்

வேலன் நேற்று படித்தான்

(A) செய்வினைத் தொடர்
(B) செயப்பாட்டு வினைத்தொடர்
(C) தன்வினைத்தொடர்
(D) பிறவினைத்தொடர்
(E) விடை தெரியவில்லை

92. பூக்களை பறிக்காதீர் - எவ்வகைத் தொடர்

(A) உணர்ச்சி தொடர்
(B) வினாத் தொடர்
(C) கட்டளைத் தொடர்
(D) செய்தித் தொடர்
(E) விடை தெரியவில்லை

93. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுத்து எழுதுக

"சிலப்பதிகாரத்தின் ஆசிரியர் இளங்கோவடிகள் ஆவார்".

(A) இளங்கோவடிகள் யார்?
(B) சிலப்பதிகாரத்தை இயற்றியவர் எங்கு உள்ளார்?
(C) சிலப்பதிகாரத்தின் ஆசிரியர் யாராக இருக்கலாம்?
(D) சிலப்பதிகாரத்தின் ஆசிரியர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
(E) விடை தெரியவில்லை

94. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுக்க

பிளாஸ்டிக் என்பதற்கு இணையான தமிழ்ச்சொல் நெகிழி.

(A) பிளாஸ்டிக் என்பதன் வேறுபெயர் என்ன?
(B) பிளாஸ்டிக் என்றால் என்ன?
(C) பிளாஸ்டிக் என்பதற்கு இணையான தமிழ்ச்சொல் எது?
(D) பிளாஸ்டிக் என்பதன் பொருள் யாது?
(E) விடை தெரியவில்லை

95. குவிந்து – குவித்து - இருவினைகளின் பொருள் வேறுபாடு உணர்த்தும் தொடரைத் தேர்க.

(A) குவிந்து கிடந்த பூக்களை எடுத்து ஒன்றாகக் குவித்து வைத்தனர்.

(B) பூக்களைப் பிரித்தும் சேர்த்தும் வைத்தனர்

(C) குவியாத பூக்களை குவிக்க முயற்சி செய்தனர்

(D) பூக்கள் குவிந்தும் சிதறியும் கிடந்தன

(E) விடை தெரியவில்லை

96. இரு வினைகளின் பொருள் வேறுபாடு அறிக.

திருந்து - திருத்து

(A) மனம் திருந்திய கைதியின் விடைத்தாளைத் திருத்தினேன்

(B) மனம் திருத்திய கைதியின் விடைத்தாளைத் திருந்தினேன்

(C) மனம் திருந்திய கைதியின் விடைத்தாளைத் திருந்தினேன்

(D) மனம் திருத்திய கைதியின் விடைத்தாளைத் திருத்தினேன்

(E) விடை தெரியவில்லை

97. இருவினைகளின் பொருள் வேறுபாடு

மாறு. மாற்று

(A) மாற்று வேடத்தால் பரிசு பெறவில்லை மன மகிழ்வு கொண்டாள்

(B) மாறுவேடமிட்டதால் மனமாறி பரிசு பெறவில்லை

(C) மனம் மாறுபட்டதால் பரிசை மாற்றிக்கொண்டாள்

(D) மாறுவேடம் அணிந்து பரிசு பெற்றவுடன் வேடத்தை மாற்றிக் கொண்டாள்.

(E) விடை தெரியவில்லை

98. சொற்களை ஒழுங்குப்படுத்தி சொற்றொடராக்குக

(A) பலர்பால் உயர்திணை, ஆண்பால், பெண்பால் என்று மூன்று பிரிவுகளைக் கொண்டது

(B) மூன்று பிரிவுகளைக் கொண்டது உயர்திணை, ஆண்பால், பெண்பால், பலர்பால்

(C) உயர்திணை ஆண்பால், பெண்பால், பலர்பால் என்று மூன்று பிரிவுகளைக் கொண்டது

(D) ஆண்பால், பெண்பால் உயர்திணை என்று மூன்று பிரிவுகளை கொண்டது பலர்பால்

(E) விடை தெரியவில்லை

99. பொருள் வேறுபாடறிக

பணித்து – பணிந்து

(A) முதலாளி பணித்ததும் வேலையாள் பணிந்து அவ்வேலையை முடித்தார்

(B) முதலாளி பணிந்ததும் வேலையாள் பணிந்து அவ்வேலையை முடித்தார்

(C) முதலாளி பணித்ததும் வேலையாள் பணித்து அவ்வேலையை முடித்தார்

(D) முதலாளி பணிந்ததும் வேலையாள் பணித்து அவ்வேலையை முடித்தார்

(E) விடை தெரியவில்லை

100. அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்தல்

உயிர், ஐந்து, இரக்கம், ஒளவை, எளிமை, ஆடு

(A) ஆடு, இரக்கம், உயிர், எளிமை, ஐந்து, ஒளவை

(B) இரக்கம், ஒளவை, ஆடு, ஐந்து, எளிமை, உயிர்

(C) உயிர், இரக்கம், எளிமை, ஒளவை, ஐந்து, ஆடு

(D) உயிர், ஆடு, ஐந்து, ஒளவை, எளிமை, இரக்கம்

(E) விடை தெரியவில்லை

# பகுதி-அ - கட்டாயத் தமிழ்மொழித் தகுதித் தேர்வு – (பத்தாம் வகுப்பு தரம்)

# Part-A - Compulsory Tamil Language Eligibility Test – (SSLC Std)

**வினாக்கள் : 1–100** **மொத்த மதிப்பெண்கள் : 150**

**Questions : 1–100** **Total Marks : 150**

1. இணையான தமிழ்ச்சொல் தேர்க.
Conference

(A) பெருங்கூட்டம் (B) பெருந்திரள்
(C) மாநாடு (D) பேரவை
(E) விடை தெரியவில்லை

2. கலைச்சொல்லின் பொருளறிந்து சரியான விடையைத் தெரிவு செய்க.
Consulate

(A) தூதரகம் (B) இணைத்தூதரகம்
(C) துணைத்தூதரகம் (D) காப்பகம்
(E) விடை தெரியவில்லை

3. உவமையின் பொருளறிந்து சரியான விடையைத் தேர்க.
கிணற்றுத் தவளை போல

(A) ஒற்றுமையின்மை (B) தற்செயல் நிகழ்வு
(C) அறியாமை நிகழ்வு (D) எதிர்பாராத நிகழ்வு
(E) விடை தெரியவில்லை

4. 'விழலுக்கு இறைத்த நீர்போல' என்ற உவமைக்கு ஏற்றப் பொருள் தருக.

(A) ஒற்றுமையின்மை (B) வெளிப்படைத்தன்மை
(C) பயனற்ற செயல் (D) எதிர்பாரா செயல்
(E) விடை தெரியவில்லை

5. பசுமரத்து ஆணி போல – உவமையின் பொருளைத் தேர்க.

(A) தடையின்றி மிகுதியாக (B) அவசர குடுக்கை
(C) தற்செயல் நிகழ்வு (D) எளிதில் மனத்தில் பதிதல்
(E) விடை தெரியவில்லை

6. விடைக்கேற்ற வினாவை தெரிவு செய்க.

விடை : யானைகள் மனிதர்களைத் தாக்குவது இல்லை. அவற்றின் வழித்தடங்களில் குறுக்கிடும் போது தான் மனிதர்களைத் தாக்குகின்றன.

(A) யானைகள் மனிதர்களை எப்படி தாக்குகின்றன?

(B) யானைகள் மனிதர்களை ஏன் தாக்குகின்றன?

(C) யானைகள் மனிதர்களை எவ்வாறு தாக்குகின்றன?

(D) யானைகள் மனிதர்களை யாரால் தாக்குகின்றன?

(E) விடை தெரியவில்லை

7. கொடுக்கப்பட்டுள்ள வினைகளின் பொருள் வேறுபாடு அறிந்து சரியான சொற்றொடரை தெரிவு செய்க.

விரிந்தது – விரித்தது

(A) மழைக்காற்று வீசியதால் பூவின் இதழ்கள் விரிந்தன; மயில்தோகை விரித்தது.

(B) மழைக்காற்று மயில்தோகை விரித்தது; பூவின் இதழ்கள் வீசியதால் விரிந்தன.

(C) மழைக்காற்று வீசியதால் பூவின் இதழ்கள் விரித்தது; மயில்தோகை விரிந்தன.

(D) மயில்தோகை விரிந்தது பூவின் இதழ்கள் காற்று மழை வீசியதால் விரிந்தன.

(E) விடை தெரியவில்லை

8. இரு வினைகளின் பொருள் வேறுபாடறிந்து பிழையான தொடரைத் தேர்க.

அடங்கு – அடக்கு

(A) காவலர் அடக்க, திருடர்கள் அடங்கினர்

(B) மனத்தை அடக்கினால், ஆசை அடங்கும்

(C) ஆசிரியர் அடங்கியதால் மாணவர் அடங்கினர்

(D) ஆசிரியர் அடக்க, மாணவர் அடங்கினர்

(E) விடை தெரியவில்லை

9. அகரவரிசைப்படுத்துக :

பூனை, தையல், தேனி, ஓணான், மான், வெளவால், கிளி, மாணவன், மனிதன், ஆசிரியர், பழம்.

(A) ஆசிரியர், மனிதன், பழம், கிளி, மாணவன், மான், வெளவால், ஓணான், பூனை, தையல், தேனி

(B) ஆசிரியர், ஓணான், கிளி, தேனி, தையல், பழம், பூனை, மனிதன், மாணவன், மான், வெளவால்

(C) ஆசிரியர், ஓணான், கிளி, தேனி, தையல், பழம், பூனை, மனிதன், மான், மாணவன், வெளவால்

(D) ஆசிரியர், ஓணான், கிளி, தையல், தேனி, பழம், பூனை, மான், மாணவன், மனிதன், வெளவால்

(E) விடை தெரியவில்லை

10. அகர வரிசைப்படி சொற்களை அமைக்க.
கோடை, கடல், கொண்டல், குளிர்ச்சி

(A) கடல், கோடை, கொண்டல், குளிர்ச்சி

(B) கடல், குளிர்ச்சி, கொண்டல், கோடை

(C) குளிர்ச்சி, கடல், கோடை, கொண்டல்

(D) கடல், கொண்டல், குளிர்ச்சி, கோடை

(E) விடை தெரியவில்லை

11. "தணி" என்னும் வேர்ச்சொல்லின் வினைமுற்று கண்டறி.

(A) தணிதல் (B) தணிந்தது

(C) தணிந்து (D) பணிந்தது

(E) விடை தெரியவில்லை

12. வேர்ச்சொல்லில் இருந்து தொழிற்பெயரை அஃறிதல்
கட்டு –

(A) கட்டி (B) கட்டுதல்

(C) கட்டினான் (D) கட்டிய

(E) விடை தெரியவில்லை

13. வாழ் – என்ற சொல்லின் தொழிற்பெயரைக் கண்டறிக.

(A) வாழ்ந்தான் (B) வாழ்க்கை

(C) வாழ்ந்து (D) வாழ்ந்த

(E) விடை தெரியவில்லை

14. மரம், மறம் – இவ்விரண்டு சொற்களுக்கும் பொருள் வேறுபாடு அறிக.

(A) தாவரம், வீரம்
(B) வீரம், தாவரம்
(C) வீடு, தோள்
(D) பகைவர், நட்பு
(E) விடை தெரியவில்லை

15. ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான இணையைத் தெரிவு செய்க.

இளை – இழை

(A) செடியின் இலை – நூல் இழை
(B) நூல் இழை – மெலிதல்
(C) செடியில் இருப்பது – மெலிதல்
(D) மெலிந்து போதல் – நூல் இழை
(E) விடை தெரியவில்லை

16. ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிதல்.

பிழைகளற்ற தொடரைக் கண்டறிக.

(A) எண் வீட்டுத் தோட்டத்தில் மளர்கள் மணம் வீசின.
(B) என் வீட்டுத் தோட்டத்தில் மலர்கள் மணம் வீசின
(C) என் வீட்டுத் தோட்டத்தில் மளர்கள் மனம் வீசின.
(D) என் வீட்டுத் தோட்டத்தில் மலர்கள் மனம் வீசின.
(E) விடை தெரியவில்லை

17. 'Vowel' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல் தருக.

(A) ஒலியன்
(B) மெய்யொலி
(C) மூக்கொலி
(D) உயிரொலி
(E) விடை தெரியவில்லை

18. மரபுப் பிழை நீக்குதல்.

கொடியில் உள்ள மலரை எடுத்து வா!

(A) கொடியில் உள்ள பூவைக் கொண்டு வா!

(B) கொடியில் உள்ள மலரைக் கொண்டு வா!

(C) கொடியில் உள்ள மலரைப் பறித்து வா!

(D) கொடியில் உள்ள மலரைக் கொய்து வா!

(E) விடை தெரியவில்லை

19. சந்திப்பிழையற்ற வாக்கியத்தைத் தேர்ந்தெடு.

(A) கைவினைக்கலைகளுள் ஒன்றைக் கற்றுக் கொள்வேன்

(B) கைவினை கலைகளுள் ஒன்றை கற்றுக் கொள்வேன்

(C) கைவினைக் கலைகளுள் ஒன்றை கற்று கொள்வேன்

(D) கைவினைக் கலைக்களுள் ஒன்றைக் கற்று கொள்வேன்

(E) விடை தெரியவில்லை

20. பொருந்தாச் சொல்லைக் கண்டறிதல்.

திருவள்ளுவர்

(A) காலம் கி.மு. 31

(B) 1330 திருக்குறள்

(C) குறள் வெண்பா

(D) மேற்கணக்கு நூல்

(E) விடை தெரியவில்லை

21. மங்கலவழக்குச் சொல் அல்லாதது தேர்க.

(A) திருமுகம்

(B) வெள்ளாடு

(C) நன்காடு

(D) சோணாடு

(E) விடை தெரியவில்லை

22. அணுகு – என்ற சொல்லின் எதிர்ச்சொல்லை எழுதுக.

(A) அண்மை (B) அருகில்

(C) விலகு (D) சேர்ந்திரு

(E) விடை தெரியவில்லை

23. கலம் + ஏறி – என்றச் சொல்லை சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்.

(A) கலம்ஏறி (B) கலமறி

(C) கலன்ஏறி (D) கலமேறி

(E) விடை தெரியவில்லை

24. பிரித்தெழுதுக :

செந்நெற்கட்டு

(A) செந்நெற் + கட்டு (B) செல் + நெல் + கட்டு

(C) செம்மை + நெல் + கட்டு (D) செந் + நெற் + கட்டு

(E) விடை தெரியவில்லை

25. சேர்த்தெழுதுக : கண் + இல்லது

(A) கணிஇல்லது (B) கணில்லது

(C) கண்ணில்லது (D) கண்ணில்லாது

(E) விடை தெரியவில்லை

26. ஒருமைப் பன்மைப் பிழையற்ற தொடர் எது?

(A) மனிதர் மருத்துவத்தைப் பற்றி எப்போது அறிந்து கொண்டார்கள்

(B) மனிதர்கள் மருத்துவத்தைப் பற்றி எப்போது அறிந்து கொண்டார்

(C) மனிதர்கள் மருத்துவத்தைப் பற்றி எப்போது அறிந்து கொண்டன

(D) மனிதர்கள் மருத்துவத்தைப் பற்றி எப்போது அறிந்து கொண்டார்கள்

(E) விடை தெரியவில்லை

27. சொல் – பொருள் – பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | சேகரம் | 1. | சேதம் |
| (b) | கெடிகலங்கி | 2. | கூட்டம் |
| (c) | வின்னம் | 3. | சரியாக |
| (d) | வாகு | 4. | மிகவருந்தி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 2 | 4 | 1 | 3 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

(E) விடை தெரியவில்லை

28. சொல் – பொருள் – பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | கடும்பு | 1. | ஒலிக்கும் |
| (b) | நரலும் | 2. | பள்ளம் |
| (c) | பொம்மல் | 3. | சுற்றம் |
| (d) | படுகர் | 4. | சோறு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 3 | 2 | 1 | 4 |
| (C) | 2 | 1 | 4 | 3 |
| (D) | 3 | 1 | 4 | 2 |

(E) விடை தெரியவில்லை

29. சரியான தொடரைக் கண்டுபிடி.

(A) அது ஒரு அழகான ஊர்.
(B) அது ஓர் அழகான ஊர்.
(C) அஃது ஒரு அழகான ஊர்.
(D) அஃது ஓர் அழகான ஊர்.
(E) விடை தெரியவில்லை

30. 'சாலவும் நன்று' – இது எவ்வகைத் தொடர்?

(A) அடுக்குத் தொடர்
(B) கட்டளைத் தொடர்
(C) உரிச்சொல் தொடர்
(D) உணர்ச்சித் தொடர்
(E) விடை தெரியவில்லை

31. சரியான கூட்டப் பெயர்களைத் தேர்க.

(A) ஆட்டு மந்தை
(B) மாட்டு மந்தை
(C) குதிரை மந்தை
(D) கழுதை மந்தை
(E) விடை தெரியவில்லை

32. சரியான கூட்டுப் பெயரை தெரிவு செய்க :
புல்

(A) புல் கூட்டம்
(B) புல் கத்தை
(C) புற்கட்டு
(D) புற்குவியல்
(E) விடை தெரியவில்லை

33. பொருத்தமான பொருளைத் தெரிவு செய்தல்.
அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. – இக் குறட்பாவில் பயின்று வரும் அணி.

(A) தீவக அணி
(B) தற்குறிப்பேற்ற அணி
(C) தன்மையணி
(D) நிரல் நிறை அணி
(E) விடை தெரியவில்லை

34. கூற்று, காரணம் : சரியா? தவறா?

கூற்று : இலக்கண நெறி மாறாமல் முறையாக அமைந்த சொல் இலக்கணமுடையது ஆகும்.

காரணம் : இவை தமக்குரிய பொருளை மாறுபடும் இயல்பை உடையது.

(A) கூற்று : சரி, காரணம் : சரி

(B) கூற்று : சரி, காரணம் : தவறு

(C) கூற்று : தவறு, காரணம் : தவறு

(D) கூற்று : தவறு, காரணம் : சரி

(E) விடை தெரியவில்லை

35. கூற்று, காரணம் : சரியா? தவறா?

கூற்று : ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று மணிமேகலை. இந்நூலுக்கு மணிமேகலைத் துறவு என்னும் வேறு பெயரும் உண்டு.

காரணம் : இந்நூலில் மணிமேகலையின் துறவு வாழ்க்கை கூறப்படுகிறது.

(A) கூற்று : சரி, காரணம் : தவறு

(B) கூற்று : தவறு, காரணம் : தவறு

(C) கூற்று : தவறு, காரணம் : சரி

(D) கூற்று : சரி, காரணம் : சரி

(E) விடை தெரியவில்லை

36. கூற்று : 'ஜெயகாந்தன் சிறுகதைகள் இருக்கிறதா'? என்று வினவுதல் கொளல் வினா.

காரணம் : தான் ஒரு பொருளை வாங்கிக் கொள்ளும் பொருட்டு வினவுவது

(A) கூற்றும் காரணமும் சரி

(B) கூற்று சரி, காரணம் தவறு

(C) கூற்று தவறு, காரணம் சரி

(D) கூற்றும் காரணமும் தவறு

(E) விடை தெரியவில்லை

37. அடைப்புக்குள் கொடுக்கப்பட்ட சொல்லின் பொருளரிந்து கோடிட்ட இடத்தை நிரப்புக. (புள்)

(A) ஆடு மாடுகளின் உணவு ————————

(B) வயிறு நிறைந்து விட்டது என்பதன் பொருள் ————————

(C) பறவை என்பதன் வேறுபெயர் ————————

(D) அழகான தாவரம் ————————

(E) விடை தெரியவில்லை

38. சரியான இணைப்புச்சொல்லால் நிரப்புக.

தனக்கான ஆற்றலைச் சேகரித்து வைக்க மூளைக்குள் இடம் இல்லை. ———— அதற்குக் குருதியோட்டம் எப்போதும் இருந்து கொண்டே இருக்க வேண்டும்.

(A) அதனால்

(B) ஏனெனில்

(C) அதுபோல

(D) அதைவிட

(E) விடை தெரியவில்லை

39. சரியான இணைப்புச் சொல்லைத் தெரிவு செய்க.

பெரிய கப்பல்கள் துறைமுகத்தில் கரைக்கு அருகில் வர இயலாது. ———— கப்பலில் வரும் பொருள்களைத் தோணிகள் மூலம் கரைக்குக் கொண்டு வந்தனர்.

(A) எனவே

(B) அதுபோல

(C) அப்படியானால்

(D) ஆனால்

(E) விடை தெரியவில்லை

40. சரியான வினாச்சொல்லைத் தேர்ந்தெடு.

முதல் ஆழ்வார்கள் ———— பேர்?

(A) யார்

(B) எத்தனை

(C) ஏன்

(D) எதற்கு

(E) விடை தெரியவில்லை

41. சரியான இணையைத் தேர்ந்தெடு.

(A) ரவி வந்தான் – எதிர்காலம்

(B) ரவி வருவான் – எதிர்காலம்

(C) ரவி வருகிறான் – இறந்தகாலம்

(D) ரவி சென்றான் – நிகழ்காலம்

(E) விடை தெரியவில்லை

42. சொற்களை இணைத்துப் புதிய சொற்கள் அமைந்த சரியான விடையைத் தேர்க.

திடல், சோறு, தயிர், விளையாட்டு, பறவை, கூட்டம், வாழை, கூடு

(A) விளையாட்டுத்திடல், தயிர்ச்சோறு, பறவைக்கூட்டம்

(B) வாழைச்சோறு, பறவைத்திடல், பறவைக்கூடு

(C) பறவைக்கூட்டம், வாழைத்திடல், தயிர்ச்சோறு

(D) விளையாட்டுத்திடல், வாழைக்கூட்டம், பறவைக்கூடு

(E) விடை தெரியவில்லை

43. 'பயிற்சி' என்ற சொல்லோடு இணைக்க இயலாத சொல்

(A) நடை

(B) மொழி

(C) மூச்சு

(D) மலை

(E) விடை தெரியவில்லை

44. சரியான எழுத்து வழக்குத் தொடரை கண்டறிக.

(A) உசுரே போனாலும் பொய் சொல்ல மாட்டேன்

(B) உய்ர் போனாலும் பொய் சொல் மாட்டேன்

(C) உசுர் போனாலும் பொய் சொல்ல மாட்டேன்

(D) உயிரே போனாலும் பொய் சொல்ல மாட்டேன்

(E) விடை தெரியவில்லை

45. பின்வரும் தொடருக்கு சரியான நிறுத்தற் குறியீட்டு எழுதப்பட்ட தொடரை தெரிவு செய்க.

மழைநீர் ஆற்றுநீர் ஊற்றுநீர் ஆகியவற்றைச் சிறிய பெரிய நீர்நிலைகளில் சேகரிக்க வேண்டும்.

(A) "மழைநீர், ஆற்றுநீர், ஊற்றுநீர், ஆகியவற்றைச் சிறிய பெரிய நீர்நிலைகளில் சேகரிக்க" வேண்டும்.

(B) 'மழைநீர், ஆற்றுநீர், ஊற்றுநீர் ஆகியவற்றைச் சிறிய பெரிய நீர்நிலைகளில் சேகரிக்க' வேண்டும்.

(C) மழைநீர், ஆற்றுநீர், ஊற்றுநீர் ஆகியவற்றைச் சிறிய, பெரிய நீர்நிலைகளில் சேகரிக்க வேண்டும்.

(D) மழைநீர்; ஆற்றுநீர்; ஊற்றுநீர் ஆகியவற்றைச் சிறிய, பெரிய நீர்நிலைகளில் சேகரிக்க வேண்டும்.

(E) விடை தெரியவில்லை

46. ஊர்ப்பெயரின் சரியான மரூஉவைத் தெரிவு செய்க.

திருநெல்வேலி

(A) நெல்லை

(B) நல்லை

(C) திருநல்வேலி

(D) நெல்வேலி

(E) விடை தெரியவில்லை

47. ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுதுக.

மயிலாப்பூர்

(A) கோவை

(B) திருச்சி

(C) மயிலை

(D) குடந்தை

(E) விடை தெரியவில்லை

48. பிரித்தெழுதுக – செய்ந்நன்றி

(A) செய் + நன்றி

(B) செய்ம் + நன்றி

(C) செய்ய் + நன்றி

(D) செய்ந் + நன்றி

(E) விடை தெரியவில்லை

49. அவன் வந்தது ————————

(A) திணை வழு

(B) பால் வழு

(C) கால வழு

(D) மரபு வழு

(E) விடை தெரியவில்லை

50. ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான பொருளைத் தெரிவு செய்க :

உழை – உளை

(A) சேறு – புற்று

(B) பாடுபடு – பறவையினம்

(C) விதி – சேறு

(D) வேலை – வலி

(E) விடை தெரியவில்லை

51. 'கடைக்குப் போவாயா'? என்ற தாயின் கேள்விக்குப் 'போகமாட்டேன்' என விடையளிப்பது

(A) சுட்டு விடை
(B) மறை விடை
(C) நேர் விடை
(D) ஏவல் விடை
(E) விடை தெரியவில்லை

52. 'இச்செயலைச் செய்தது மங்கையா? மணிமேகலையா?' என்று வினவுதல் எவ்வகை வினா?

(A) அறி வினா
(B) அறியா வினா
(C) கொளல் வினா
(D) ஐய வினா
(E) விடை தெரியவில்லை

53. எவ்வகை வினா என்பதை எழுதுக. 'ஜெயகாந்தன் சிறுகதைகள் இருக்கிறதா?' என்று நூலகரிடம் வினவுதல்.

(A) ஐய வினா
(B) கொளல் வினா
(C) கொடை வினா
(D) ஏவல் வினா
(E) விடை தெரியவில்லை

54. அலுவல் சார்ந்த கலைச் சொற்களுக்குத் தமிழாக்கம் அறிக.

புரோட்டோகால்

(A) முறை
(B) மரபுத்தகவு
(C) ஆவணம்
(D) கோப்பு
(E) விடை தெரியவில்லை

55. சக்தி கவிதை இயற்றினாள். இது எவ்வகை வாக்கியம்?

(A) பிறவினை
(B) செயப்பாட்டு வினை
(C) செய் வினை
(D) எதிர்மறை வினை
(E) விடை தெரியவில்லை

56. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுக.

"தந்தை மகனை நன்றாகப் படிக்க வைத்தார்".

(A) பிற வினை
(B) தன் வினை
(C) செயப்பாட்டு வினை
(D) செய் வினை
(E) விடை தெரியவில்லை

57. சரியான இணையை தேர்ந்தெடு :

வல்லொற்று இரட்டித்த பிறவினை வாக்கியத்தைத் தேர்ந்தெடு.

(A) ஆடினான் — ஆட்டினான்
(B) வருந்துவான் — வருத்துவான்
(C) சேர்வான் — சேர்ப்பான்
(D) வந்தான் — வருவித்தான்
(E) விடை தெரியவில்லை

58. வள்ளலார் வடலூரில் சத்திய தருமச் சாலையைத் தொடங்கி எல்லாருக்கும் உணவளித்தார் – இவ்விடைக்கேற்ற மிகச் சரியான வினாவைத் தேர்க.

(A) வள்ளலார் எல்லாருக்கும் உணவளித்தாரா?
(B) வள்ளலார் எங்குச் சத்திய தருமச் சாலையைத் தொடங்கி எல்லாருக்கும் உணவளித்தார்?
(C) வடலூரில் சத்திய தருமச் சாலையை தொடங்கியவர் யார்?
(D) சத்திய தருமச் சாலை எங்குத் தொடங்கப்பட்டது?
(E) விடை தெரியவில்லை

59. சொற்களை ஒழுங்குபடுத்திச் சரியான தொடரைத் தேர்க.

(A) சிறுபஞ்சமூலத்தின் ஐந்து கருத்துகள் ஒவ்வொரு பாடலிலும் இடம் பெற்றுள்ளன

(B) சிறுபஞ்சமூலத்தின் ஒவ்வொரு பாடலிலும் ஐந்து கருத்துகள் இடம் பெற்றுள்ளன

(C) ஐந்து கருத்துகள் சிறுபஞ்சமூலத்தின் இடம் பெற்றுள்ளன ஒவ்வொரு பாடலிலும்

(D) ஒவ்வொரு பாடலிலும் ஐந்து கருத்துகள் இடம் பெற்றுள்ளன சிறுபஞ்சமூலத்தின்

(E) விடை தெரியவில்லை

60. சொற்களை ஒழுங்குபடுத்திச் சரியான தொடரைத் தேர்க.

(A) ஒரு சொல்லின் பொருளை அறியப் பயன்படுவது அகராதி

(B) பொருளை அறியப் பயன்படுவது அகராதி ஒரு சொல்லின்

(C) அகராதி ஒரு சொல்லின் பொருளைப் பயன்படுவது அறிய

(D) ஒரு சொல்லின் பொருளை அகராதி அறியப் பயன்படுவது

(E) விடை தெரியவில்லை

61. வாக்கிய அமைப்பினைக் கண்டறிக :

பொற்கொடி பொம்மை செய்வித்தாள்

(A) தன்வினை

(B) செய்வினை

(C) செயப்பாட்டு வினை

(D) பிறவினை

(E) விடை தெரியவில்லை

62. வேர்ச்சொல்லைக் கண்டறிக.

வாழிய –

(A) வாழ்
(B) வால்
(C) வாள்
(D) வாழி
(E) விடை தெரியவில்லை

63. ஈகலான் – இவ்வினைமுற்றின் வேர்ச்சொல்லைத் தேர்க.

(A) ஈக
(B) ஈகை
(C) ஈகல்
(D) ஈ
(E) விடை தெரியவில்லை

64. 'உறங்கினாள்' – இதன் வேர்ச்சொல்லைக் கண்டறிக.

(A) உறங்கி
(B) உறங்கிய
(C) உறங்கு
(D) உறங்கியது
(E) விடை தெரியவில்லை

65. மரம், விலங்கு, வயல், வண்டு போன்ற பல பொருள் குறிக்கும் ஒரு சொல் யாது?

(A) கா
(B) மா
(C) பை
(D) பூ
(E) விடை தெரியவில்லை

66. காற்றினைக் குறிக்காத சொல்லினைத் தேர்க.

(A) வளி
(B) தென்றல்
(C) கால்
(D) பொருப்பு
(E) விடை தெரியவில்லை

67. 'Dyeing' – இச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல்லை எழுதுக.

(A) தோல் பதனிடுதல்

(B) சாயம் ஏற்றுதல்

(C) பால் பண்ணை

(D) ஆயத்த ஆடை தயாரித்தல்

(E) விடை தெரியவில்லை

68. தமிழ்ச் சொல்லைக் கண்டறிக – 'Manuscript'

(A) நூல் நிரல்

(B) புனைவு

(C) வாழ்க்கை வரலாறு

(D) கையெழுத்துப்பிரதி

(E) விடை தெரியவில்லை

69. மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.

கோழிக்குட்டிகளைப் பிடிக்கப் பூனைக் குஞ்சுகள் ஓடின.

(A) கோழிக் குஞ்சுகளைப் பிடிக்கப் பூனைக்குட்டிகள் ஓடின

(B) கோழிக் குஞ்சுப் பிடிக்கப் பூனைக் குட்டிகள் ஓடின

(C) கோழியைப் பிடிக்கப் பூனைக்குட்டிகள் ஓடின

(D) கோழிக் குஞ்சுகளைப் பிடிக்கப் பூனைக் குட்டிகள் ஓடியது

(E) விடை தெரியவில்லை

70. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக.

5. சந்தி பிழையற்ற தொடர்

வள்ளை பாட்டின் சிறப்பு கேற்ப முழவை முழங்குகின்றன

(A) வள்ளைப் பாட்டின் சிறப்புக் கேற்ப முழவை முழங்குகின்றது

(B) வள்ளை பாட்டின் சிறப்பு கேற்ப முழவை முழங்குகின்றது

(C) வள்ளைப் பாட்டின் சிறப்பு கேற்ப முழவை முழங்குகின்றன

(D) வள்ளைப் பாட்டின் சிறப்புக் கேற்ப முழவை முழங்குகின்றன

(E) விடை தெரியவில்லை

6. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடு.

'நாடும் மொழியும் நமதிரு கண்கள்' என்கிறார் மகாகவி பாரதியார்

(A) நாடும் மொழியும் நமதிரு கண்களா?

(B) நாடும் மொழியும் நமதிரு கண்கள் என்று கூறியவர் யார்?

(C) நமதிரு கண்கள் நாடும் மொழியும் ஆகுமா?

(D) 'நாடும் மொழியும் நமதிரு கண்கள்' என்று பாரதியார் ஏன் பாடவில்லை?

(E) விடை தெரியவில்லை

7. 'செங்கோல்' – இதன் எதிர்ச்சொல்லை எடுத்தெழுதுக

(A) கொடுங்கோல்

(B) நெடுங்கோல்

(C) நல்ல கோல்

(D) வளையாத கோல்

(E) விடை தெரியவில்லை

8. 'ஒறுத்தார்' – எதிர்ச்சொல் தருக

(A) பகைவர்
(B) தண்டித்தவர்
(C) நட்புக் கொண்டவர்
(D) பொறுத்தவர்
(E) விடை தெரியவில்லை

9. பொருந்தாச் சொல்லைக் கண்டறிதல்
சொல்லும் – பொருளும்

(A) புரிசை – மதில்
(B) மாகால் – கடல்
(C) புழை – சாளரம்
(D) நியமம் – அங்காடி
(E) விடை தெரிய்வில்லை

10. பொருந்தாச் சொல்லைத் தேர்ந்தெடு

(A) செந்தாமரை
(B) கடுங்கதிர்
(C) இன்சொல்
(D) அலைகடல்
(E) விடை தெரியவில்லை

11. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல் தருக
Revivalism

(A) மெட்டுருவாக்கம்
(B) நெட்டுருவாக்கம்
(C) மீட்டுருவாக்கம்
(D) நீட்டுருவாக்கம்
(E) விடை தெரியவில்லை

12. தமிழ்ச்சொல் அறிவோம்
க்ராப் (Crop)

(A) செதுக்கி
(B) வெட்டி
(C) நீக்கி
(D) ஏதுமில்லை
(E) விடை தெரியவில்லை

13. 'கான் – காண்' – இச்சொற்களின் ஒலி வேறுபாடறிந்து எழுதுக.

(A) காட்டிற்குச் சென்று வந்தான்

(B) காட்டிற்குச் சென்று பூந்தோட்டத்தைப் பார்த்தான்

(C) காட்டிற்குப் புறப்பட்டான்

(D) காட்டிற்குச் சென்று தங்கினான்

(E) விடை தெரியவில்லை

14. அரி, அறி என்னும் சொல் குறிக்கும் பொருள் இணை யாது?

| | அரி | | அறி |
|---|---|---|---|
| (A) | திருமால் | – | அறிந்துகொள் |
| (B) | ஒருவகை மலர் | – | சிவன் |
| (C) | ஒலி | – | வெளிச்சம் |
| (D) | பாம்பு | – | புலி |

(E) விடை தெரியவில்லை

15. 'கை' என்ற ஓரெழுத்து ஒருமொழியின் பொருளைக் கண்டறிக.

(A) கையூட்டு

(B) புழுக்கம்

(C) இழுக்கம்

(D) ஒழுக்கம்

(E) விடை தெரியவில்லை

16. 'பே' என்னும் ஓரெழுத்து ஒரு மொழியின் பொருளைத் தேர்ந்தெடுக்க

(A) மேகம்

(B) பேகன்

(C) பேரண்டம்

(D) பூமி

(E) விடை தெரியவில்லை

17. சொற்களை ஒழுங்குபடுத்தி சரியான சொற்றொடரை உருவாக்குக –

'பாடுகின்றனர் மக்கள் மழைபொய்த்ததால் வருந்தி'

(A) வருந்தி மக்கள் பாடுகின்றனர் மழை பொய்த்ததால்

(B) பாடுகின்றனர் வருந்தி மழைபொய்த்ததால் மக்கள்

(C) மழைபொய்த்ததால் பாடுகின்றனர் மக்கள் வருந்தி

(D) மழைபொய்த்ததால் மக்கள் வருந்திப் பாடுகின்றனர்

(E) விடை தெரியவில்லை

18. சொற்களை ஒழுங்குபடுத்துக

(A) பரணி வென்றதைப் பாடும் இலக்கியம் பகைவரை ஆகும்

(B) பகைவரை வென்றதைப் பாடும் இலக்கியம் பரணி ஆகும்

(C) பரணி பாடும் இலக்கியம் பகைவரை வென்றதை ஆகும்

(D) பகைவரை வென்றதை இலக்கியம் பரணி பாடும் ஆகும்

(E) விடை தெரியவில்லை

19. அகரவரிசைப்படுத்தி சரியான விடையைத் தேர்ந்தெடு

(a) கிழக்கு, கௌதாரி, கீற்று, கோலம், குருவி

(b) குருவி, கோலம், கீற்று, கௌதாரி, கிழக்கு

(c) கௌதாரி, கோலம், கிழக்கு, கீற்று, குருவி

(d) கிழக்கு, கீற்று, குருவி, கோலம், கௌதாரி

(A) (a) மட்டும் சரி

(B) (b) மட்டும் சரி

(C) (c) மட்டும் சரி

(D) (d) மட்டும் சரி

(E) விடை தெரியவில்லை

20. சரியான அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்க.

1. திறன்பேசி, துறைமுகம், தெருக்கூத்து
2. மூதூர், மென்பொருள், முந்நீர்
3. பண்பாடு, பூங்காற்று, பைந்தமிழ்

(A) 2, 3 (B) 1,2
(C) 1, 3 (D) 2
(E) விடை தெரியவில்லை

21. "நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்" எனப் பாடியவர்

(A) இளங்கோவடிகள் (B) சீத்தலைச் சாத்தனார்
(C) பாரதியார் (D) பாரதிதாசன்
(E) விடை தெரியவில்லை

22. 'கல்வியில் பெரியவர்', 'கவிச்சக்ரவர்த்தி' என்றெல்லாம் புகழப்படுபவர்

(A) ஒட்டக்கூத்தர் (B) கம்பர்
(C) இளங்கோவடிகள் (D) புகழேந்தி
(E) விடை தெரியவில்லை

23. போக்குக

கூற்று : இது வியங்கோள் வினைமுற்று

காரணம் : 'போ' என்ற கட்டளைத் தொனியுடன் கூடிய பகுதியைக் கொண்டுள்ளதால் இது வியங்கோள் வினைமுற்று

(A) கூற்று சரி, காரணம் தவறு
(B) கூற்று சரி, காரணமும் சரி
(C) கூற்று தவறு, காரணம் சரி
(D) கூற்று தவறு, காரணமும் தவறு
(E) விடை தெரியவில்லை

24. இலக்கணக் குறிப்பு – சரியான விடையைப் பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| 1. | தொழில்பெயர் | – | செப்பல் |
| 2. | வினைத்தொகை | – | காய்மணி |
| 3. | உவமைத்தொகை | – | மூதூர் |
| 4. | வேற்றுமைத் தொகை | – | மலர்க்கை |

(A) 1, 2 (B) 1,3

(C) 1, 4 (D) 3, 4

(E) விடை தெரியவில்லை

25: விடைக்கேற்ற வினா

இயல்பு வழக்கு, தகுதி வழக்கு என வழக்கு இருவகைப்படும்

(A) இருவகை வழக்கு யாது? (B) வழக்கின் வகைகள் யாவை?

(C) இயல்பு வழக்கு என்றால் என்ன? (D) தகுதி வழக்கு என்றால் என்ன?

(E) விடை தெரியவில்லை

26. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுத்தல்

உலகளவில் தமிழ் நூல்கள் அதிகமுள்ள

நூலகம் கன்னிமாரா நூலகமே

(A) உலகளவில் தமிழ் நூல்கள் அதிகமுள்ள நூலகம் எது?

(B) முதல் பொது நூலகம் கன்னிமாரா நூலகமா?

(C) தமிழ் நூல்கள் அதிகமுள்ள நூலகம் எது?

(D) கன்னிமாரா நூலகம் உலகளவில் பெரியதா?

(E) விடை தெரியவில்லை

27. எவ்வகை வாக்கியங்கள் எனக் கண்டுபிடி:

(a) சமைப்பது தாழ்வா?

(b) சமைப்பது தாழ்வில்லை – எவ்வகை வாக்கியங்கள் எனக் கண்டுபிடி

(A) கட்டளை வாக்கியம் மற்றும் வேண்டுதல் வாக்கியங்கள்

(B) வினா மற்றும் செய்தி வாக்கியங்கள்

(C) வினா மற்றும் உணர்ச்சி வாக்கியங்கள்

(D) செய்தி மற்றும் கட்டளை வாக்கியங்கள்

(E) விடை தெரியவில்லை

28. கீழ்வருவனவற்றுள் 'பிறவினை' – வாக்கியம் எது?

(A) நான் இலக்கணம் படித்தேன்.

(B) செங்குட்டுவன் தங்கம் வாங்குவித்தான்.

(C) என்னே தமிழின் இனிமை?

(D) தமிழியக்கம் நூலை இயற்றியவர் யார்?

(E) விடை தெரியவில்லை

29. "முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால் மெத்த வணிகலமும் மேவலால்"? இவ்வடிகளில் அமைந்த அடியெதுகைச் சொற்கள்

(A) முத்தமிழ் – துய்ப்பதால்

(B) முத்தமிழ் – முச்சங்கம்

(C) முத்தமிழ் – மேவலால்

(D) முத்தமிழ் – மெத்த

(E) விடை தெரியவில்லை

30. சரியான இணை தேர்க.

தேனிலே ஊறிய செந்தமிழின் – சுவை

தேறும் சிலப்பதி காரமதை

ஊனிலே எம்உயிர் உள்ளளவும் – நிதம்

ஓதி யுணர்ந்தின் புறுவோமே

இப்பாடலில் இடம் பெற்றுள்ள நயங்களின்படி சரியாகப் பொருந்தும் எதுகை, உள்ள இணையை எடுத்தெழுதுக.

(A) தேனிலே, ஊனிலே – அடி எதுகை

(B) தேறும், புறுவோமே – அடி எதுகை

(C) ஊறிய, ஊனிலே – அடிமோனை

(D) தேனிலே, தேறும் – அடிமோனை

(E) விடை தெரியவில்லை

31. உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

'பசு மரத்து ஆணி போல'

(A) தெளிவாகத் தெரியும்

(B) எளிதில் மரத்தில் பதியும்

(C) எளிதில் மனதில் பதியாது

(D) எளிதில் மனதில் பதியும்

(E) விடை தெரியவில்லை

32. "மழைமுகம் காணாப் பயிர்போல" – உவமைத் தொடர் விளக்கும் பொருளைத் தேர்ந்தெழுது.

(A) வருந்துதல்

(B) அழுதல்

(C) அச்சப்படுதல்

(D) சிரித்தல்

(E) விடை தெரியவில்லை

33. சரியான சொல்லை இட்டு நிரப்பி பழமொழியை நிறைவு செய்க !

கந்தை ———— கசக்கிக்கட்டு; கூழ் ———— குளித்துக் குடி.

(A) கந்தையானாலும் கசக்கிக் கட்டு; கூழானாலும் குளித்துக் குடி

(B) கந்தையைக் கசக்கிக் கட்டு; கூழைக் குளித்துக் குடி

(C) கந்தை என்றாலும் கசக்கிக் கட்டு; கூழ் ஆனாலும் குளித்துக் குடி

(D) கூழ் ஆனாலும் குளித்துக் குடி; கந்தையைக் கசக்கிக் கட்டு

(E) விடை தெரியவில்லை

34. பழமொழிகள்

ஏழை – பணக்காரன்

வேறுபாடு அறிய உதவும் பழமொழி

(A) இருப்பவனுக்கு புளியேப்பம் இல்லாதவனுக்கு பசியேப்பம்

(B) பாடிப்பாடிக் குத்தினாலும் பதரு அரிசி ஆகுமா

(C) புலி பசித்தாலும் புல்லைத் திண்ணாது

(D) அகழியில் விழுந்த முதலைக்கு அதுவே சொர்க்கம்

(E) விடை தெரியவில்லை

35. உண் – என்ற வேர்ச்சொல்லின் வினையெச்சம்

(A) உண்ட (B) உண்டு

(C) உண்டது (D) உண்டல்

(E) விடை தெரியவில்லை

36. 'படி' என்ற வேர்ச்சொல்லுக்கு மிகச் சரியான வினையாலணையும் பெயரைத் தேர்க.

(A) படித்தார் (B) படித்து முடித்தான்

(C) படிக்கின்றாள் (D) படித்தவனை

(E) விடை தெரியவில்லை

37. கீழ்க்கண்ட சொல்லின் வேர்ச்சொல்லை எழுதுக.

'பயின்றான்'

(A) பயின்ற (B) பயின்றனன்

(C) பயில்கிறான் (D) பயில்

(E) விடை தெரியவில்லை

38. கிறித்துவக் கம்பர் என அழைக்கப்படுபவர் யார்?

(A) எச்.ஏ. கிருட்டிணப்பிள்ளை (B) வீரமா முனிவர்

(C) பரிதிமாற் கலைஞர் (D) தாயுமானவர்

(E) விடை தெரியவில்லை

39. கீழ்க்காணும் தொடரில் இடம் பெறாத பெயர்ச்சொல் வகை

மகழினி காலை ஒன்பது மணிக்குப் பேருந்தில் ஏறி பள்ளிக்குச் சென்றாள். அவள் அம்மா மதிய உணவுக்கு வற்றல் குழம்பு கொடுத்து அனுப்பினாள்.

(A) காலப்பெயர் (B) தொழிற்பெயர்

(C) பண்புப்பெயர் (D) பொருட் பெயர்

(E) விடை தெரியவில்லை

40. வட்டம் – பெயர்ச்சொல் வகைகளில் ————————

(A) பொருள் பெயர் (B) சினைப் பெயர்

(C) தொழிற் பெயர் (D) பண்புப் பெயர்

(E) விடை தெரியவில்லை

41. கண்ணகி சினம் தணிந்து துயரமே வடிவாய் சேர நாட்டில் ஒரு குன்றின் மீது எத்தனை நாட்களிலிருந்து தேவருலகம் சென்றாள்?

(A) 13 (B) 12

(C) 14 (D) 16

(E) விடை தெரியவில்லை

42. சீவக சிந்தாமணியின் உட்பிரிவு எந்தச் சொல்லால் அழைக்கப்படுகிறது?

(A) காதை (B) படலம்

(C) காண்டம் (D) இலம்பகம்

(E) விடை தெரியவில்லை

43. ஸ்ரீபுராணம் என்னும் வடமொழிச் சைன நூலில் உள்ள திவிட்டன், விசயன் கதையை விளக்கும் தமிழ்க் காப்பியம்

(A) யசோதர காவியம் (B) வளையாபதி

(C) சூளாமணி (D) நீலகேசி

(E) விடை தெரியவில்லை

44. 'நாட்டுதும் யாம் ஓர் பாட்டுடைச் செய்யுள்' – என்று காப்பியம் படைத்தவர்

(A) சாத்தனார் (B) இளங்கோவடிகள்

(C) புகழேந்தி (D) கம்பர்

(E) விடை தெரியவில்லை

45. புறநானூற்றுப் பாடல்கள் சிலவற்றை "Extracts from Purananooru and Purapporul Venbamalai" எனும் தலைப்பில் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர்

(A) ஜார்ஜ் எல். ஆர்ட் (B) எல்லீஸ்

(C) வீரமாமுனிவர் (D) ஜி.யு. போப்

(E) விடை தெரியவில்லை

46. தொண்டைமான் இளந்திரையனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட பத்துப்பாட்டு நூலை இயற்றியவர்

(A) கபிலர்
(B) நக்கீரர்
(C) கடியலூர் உருத்திரங் கண்ணனார்
(D) நப்பூதனார்
(E) விடை தெரியவில்லை

47. மலைபடுகடாம் என்ற நூலுக்கு வழங்கப்படும் வேறு பெயர்

(A) கூத்தராற்றுப்படை
(B) பொருநராற்றுப்படை
(C) பெரும்பாணாற்றுப்படை
(D) திருமுருகாற்றுப்படை
(E) விடை தெரியவில்லை

48. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | வெய்யோன் | 1. | காற்றாடி |
| (b) | கறங்கு | 2. | யானை |
| (c) | கொண்டல் | 3. | பகலவன் (சூரியன்) |
| (d) | வேழம் | 4. | மழைமேகம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 2 | 4 | 1 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 1 | 4 | 2 | 3 |
| (D) | 1 | 3 | 2 | 4 |

(E) விடை தெரியவில்லை

49. இராமாயணத்தில் கம்பர் எழுதாத காண்டம்

(A) உத்தரகாண்டம்
(B) சுந்தர காண்டம்
(C) பால காண்டம்
(D) அயோத்தியா காண்டம்
(E) விடை தெரியவில்லை

50. "காலத்தின் விளைவு. ஆராய்ச்சியின் அறிகுறி, புரட்சிப் பொறி. உண்மையை உணரவைக்கும் உன்னத நூல்" என்று பேரறிஞர் அண்ணாவால் குறிப்பிடப்படும் நூல்

(A) புரட்சி கவி
(B) இராவண காவியம்
(C) ஊரும் பேரும்
(D) பாஞ்சாலி சபதம்
(E) விடை தெரியவில்லை

51. 'ஏழமை வேடனிறந்தில னென்றெனை யேசாரோ' - என்று இயம்பியவன்

(A) குகன்
(B) பரதன்
(C) சுக்ரீவன்
(D) அனுமன்
(E) விடை தெரியவில்லை

52. திருக்குறளுக்கு அடுத்தப்படியாக போற்றப்படும் நீதி நூல்

(A) நாலடி நானூறு
(B) நான்மணிக்கடிகை
(C) இன்னாநாற்பது
(D) திரிகடுகம்
(E) விடை தெரியவில்லை

53. ஐந்து சிறிய வேர்கள் என்ற பொருள் கொண்ட நூல் எது?

(A) ஏலாதி
(B) திரிகடுகம்
(C) சிறுபஞ்சமூலம்
(D) நாலடியார்
(E) விடை தெரியவில்லை

54. மன்பதைக்குப் பொதுவான நூல் எது?

(A) திருவாசகம்
(B) திருக்குறள்
(C) தேவாரம்
(D) மகாபாரதம்
(E) விடை தெரியவில்லை

55. எத்தகைய கேடு வரினும் தன்னை விற்றாவது செய்ய வேண்டிய கடமை

(A) ஒப்புரவு
(B) பயனில சொல்லாமை
(C) தவம்
(D) கல்வி
(E) விடை தெரியவில்லை

56. தீதின்றி வந்த பொருள் எவற்றை ஈனும்?

(A) அறமும் இன்பமும்
(B) கல்வியும் செல்வமும்
(C) தானமும் தருமமும்
(D) ஒழுக்கமும் புகழும்
(E) விடை தெரியவில்லை

57. தமிழக அரசால் சிறந்த நூலகர்களுக்கு வழங்கப்படும் விருது எது?

(A) அறிஞர் அண்ணா விருது
(B) டாக்டர்.எஸ். இராதாகிருஷ்ணன் விருது
(C) தேவநேய பாவாணர் விருது
(D) டாக்டர். ச.இரா. அரங்கநாதன் விருது
(E) விடை தெரியவில்லை

58. திரு.வி. கல்யாண சுந்தரனார் என்ற பெயரில் 'திரு' என்பது எதைக் குறிக்கும்?

(A) திருவாளர்
(B) திருவாரூர்
(C) திருஞானம்
(D) திருச்சி
(E) விடை தெரியவில்லை

59. "கல்வி என்பது வருவாய் தேடும் வழிமுறை அன்று, அதுமெய்ம்மையைத் தேடவும் அறநெறியைப் பயிலவும் மனித ஆன்மாவுக்குப் பயிற்சியளிக்கும் ஒரு நெறிமுறையாகும்". இக் கூற்று யாருடையது?

(A) திரு.வி.க
(B) விஜயலட்சுமி பண்டிட்
(C) வள்ளலார்
(D) தாயுமானவர்
(E) விடை தெரியவில்லை

60. பொருந்தாததைக் கண்டறிக

(A) கரிசலாங்கண்ணி
(B) பிருங்கராசம்
(C) கையாந்தகரை
(D) சிங்கவல்லி
(E) விடை தெரியவில்லை

61. 'கவிமணி' என்னும் பட்டம் தேசிக விநாயகனாருக்கு வழங்கிய அமைப்பு

(A) மதுரை தமிழ்ச்சங்கம்
(B) உலகத் தமிழ்ப் பேரவை
(C) நான்காம் தமிழ்ச்சங்கம்
(D) சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம்
(E) விடை தெரியவில்லை

62. "நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளிதொழில் ஆண்ட உரவோன் மருக"
-இவ்வடிகள் இடம்பெற்றுள்ள நூல்

(A) அகநானூறு
(B) பதிற்றுப் பத்து
(C) புறநானூறு
(D) பரிபாடல்
(E) விடை தெரியவில்லை

63. சென்னை அடையாற்றில் 'அவ்வை இல்லம்' நிறுவியவர்

(A) ஐடாஸ் சோபியா ஸ்கட்டர் (B) மூவலூர் இராமாமிர்தம்

(C) விஜயலட்சுமி பண்டிட் (D) டாக்டர். முத்துலெட்சுமி

(E) விடை தெரியவில்லை

64. 'தென்னாட்டின் ஜான்சிராணி' என்று காந்தியடிகளால் அழைக்கப்பட்டவர்

(A) அஞ்சலையம்மாள் (B) அம்புஜத்தம்மாள்

(C) வேலு நாச்சியார் (D) தில்லையாடி வள்ளியம்மை

(E) விடை தெரியவில்லை

65. தமிழர் காற்றின் திசையறிந்து கப்பல்களைச் செலுத்தும் முறையை 'நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி வளிதொழில் ஆண்ட உரவோன் மருக' என்று பாடியவர்

(A) வெள்ளிவீதியார் (B) வெண்ணிக்குயத்தியார்

(C) ஒக்கூர்மாசாத்தியார் (D) ஓரம்போகியார்

(E) விடை தெரியவில்லை

66. திருக்குறளையும் திருவாசகத்தையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த ஜி.யு.போப் பிறந்த நாடு

(A) இத்தாலி (B) கனடா

(C) இங்கிலாந்து (D) இலங்கை

(E) விடை தெரியவில்லை

67. கிழக்குத் தொடர்ச்சி மலையும்
மேற்குத் தொடர்ச்சி மலையும்
சந்திக்கும் இடத்தில் இருக்கும்
நிலப்பகுதி

(A) மேட்டுப்பாளையம்
(B) கொடைக்கானல்
(C) நீலகிரி
(D) கொல்லிமலை
(E) விடை தெரியவில்லை

68. "பூவில் இதழகத் தனைய தெருவம்" கொண்ட ஊர் என்று மதுரையைச் சிறப்பித்துக் கூறும் நூல்

(A) மதுரைக்காஞ்சி
(B) பரிபாடல்
(C) பட்டினப்பாலை
(D) சிலப்பதிகாரம்
(E) விடை தெரியவில்லை

69. தந்தை பெரியாருக்கு 'தெற்கு ஆசியாவின் சாக்ரடீஸ்' எனப் பாராட்டி பட்டம் வழங்கிய அமைப்பு

(A) யுனெஸ்கோ
(B) யுனிசெப்
(C) உலகத் தமிழ்ப் பேரவை
(D) சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரவை
(E) விடை தெரியவில்லை

70. 'இஸ்மத் சன்னியாசி' என்னும் பட்டம் யாரால் யாருக்கு வழங்கப்பட்டது.

(A) சந்தாசாகிப்பால் குணங்குடி மஸ்தானுக்கு

(B) சரபோஜியால் வேதநாயகருக்கு

(C) சரபோஜியால் சீகன் பால்குக்கு

(D) சந்தாசாகிப்பால் வீரமாமுனிவருக்கு

(E) விடை தெரியவில்லை

71. "வீரமாமுனிவர் தமிழ்முனிவர்களுள் ஒருவராக விளங்குகிறார்" - யார் கூற்று?

(A) ரா.பி. சேதுப்பிள்ளை (B) ம.பொ.சிவஞானம்

(C) திரு.வி. கல்யாண சுந்தரனார் (D) உ.வே. சுவாமிநாதர்

(E) விடை தெரியவில்லை

72. "ஆழிப் பெருக்கிற்கும் காலத்திற்கும் முற்றும்
அழியாமலே நிலை நின்றதுவாம்"
-என்று தமிழின் பெருமையைப் பாடி மகிழும் பாவலர் யார்?

(A) பெருஞ்சித்திரனார் (B) கவிராச பண்டிதர்

(C) கணேச பண்டிதர் (D) சபாபதி நாவலர்

(E) விடை தெரியவில்லை

73. 'தமிழ்த் தாத்தா' என்றழைக்கப்படுபவர் யார்?

(A) பரிதிமாற்கலைஞர் (B) உ.வே.சா

(C) நாவலர் சோம சுந்தர பாரதியார் (D) தேவநேயப் பாவாணர்

(E) விடை தெரியவில்லை

74. சரியான விடையை தேர்வு செய்க.

தனித்தமிழுக்கு வித்திட்டவர்

(A) உ.வே. சாமிநாத ஐயர்
(B) பண்டிதமணி கதிரேசன் செட்டியார்
(C) பரிதிமாற்கலைஞர்
(D) வேங்கடசாமி நாட்டார்
(E) விடை தெரியவில்லை

75. முதல் உலகத் தமிழ் மாநாடு நடைபெற அனைத்து ஏற்பாடுகளையும் செய்தவர் யார்?

(A) தனிநாயகம் அடிகள்
(B) சங்கர நாராயணன்
(C) திரு.வி. கலியாண சுந்தரனார்
(D) செய்கு தம்பி பாவலர்
(E) விடை தெரியவில்லை

76. கடைச்சங்க காலத்தில் தமிழகத்தில் எழுதப்பட்ட எழுத்துகள் இவ்வாறு அழைக்கப்பட்டன

(A) ஓவிய எழுத்துகள்
(B) கண்ணெழுத்துகள்
(C) படி எழுத்துகள்
(D) ஒலி எழுத்துகள்
(E) விடை தெரியவில்லை

77. 'செப்புத் திருமேனிகளின் பொற்காலம்' என அழைக்கப்படுவது

(A) விஜயநகர காலம்
(B) பல்லவர் காலம்
(C) நாயக்கர் காலம்
(D) சோழர் காலம்
(E) விடை தெரியவில்லை

78. 'கண்ணுள் வினைஞர்' எனப் புகழப்படுபவர்கள்

(A) அம்பு எய்துபவர்கள்
(B) காளையை அடக்குபவர்கள்
(C) நடனக் கலைஞர்கள்
(D) ஓவியம் வரைபவர்கள்
(E) விடை தெரியவில்லை

79. 'கால் முளைத்த கதைகள்' என்ற நூலின் ஆசிரியர்?

(A) எஸ். ராமகிருஷ்ணன்
(B) புவியரசு
(C) தாராபாரதி
(D) இராதா கிருஷ்ணன்
(E) விடை தெரியவில்லை

80. பொருத்துக :

| | |
|---|---|
| (a) புதுமைப்பித்தன் | 1. அழியாச் சுடர் |
| (b) கு.ப. ராஜகோபாலன் | 2. முள்முடி |
| (c) மௌனி | 3. காஞ்சனை |
| (d) தி. ஜானகிராமன் | 4. மூன்று உள்ளங்கள் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 4 | 3 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 2 | 1 | 3 | 4 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

(E) விடை தெரியவில்லை

81. தவறானத் தொடர்களைத் தேர்ந்தெடு

1. தமிழ் மக்களின் வீரத்தைச் சொல்லும் கலை தப்பாட்டம்
2. தப்பாட்டம் ஆண்கள் மற்றும் பெண்களாலும் ஆடப்படுகிறது
3. தேவராட்டம் ஆண்கள் மற்றும் பெண்களாலும் ஆடப்படும்
4. நாட்டுப்புற மக்களால் நிகழ்த்தப்படும் கலையே தெருக்கூத்து

(A) (1) மற்றும் (3) மட்டும்
(B) (1) மற்றும் (2) மட்டும்
(C) (2) மற்றும் (3) மட்டும்
(D) (3) மற்றும் (4) மட்டும்
(E) விடை தெரியவில்லை

82. பொங்கற் புதுநாளில் நமக்கு ஒரு மகிழ்வு, நாட்டுக்கு ஒரு பொலிவு வந்து சேர்ந்துவிடத்தான் செய்கிறது – என எழுதியவர்

(A) அறிஞர் அண்ணா
(B) கருணாநிதி
(C) மு.வ.
(D) கவிமணி
(E) விடை தெரியவில்லை

83. பொருத்துக

| | |
|---|---|
| (a) யாக்கை | 1. உடம்பு |
| (b) புன்புலம் | 2. உரிக்கும் |
| (c) வேழம் | 3. புல்லியநிலம் |
| (d) பொளிக்கும் | 4. ஆண்யானை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 1 | 4 | 3 | 2 |
| (C) | 1 | 3 | 4 | 2 |
| (D) | 1 | 2 | 4 | 3 |

(E) விடை தெரியவில்லை

84. முழுக்க முழுக்க கவிதைகளையே கொண்ட சுரதாவின் இதழ் எது?

(A) காவியம்
(B) இலக்கியம்
(C) விண்மீன்
(D) ஊர்வலம்
(E) விடை தெரியவில்லை

85. பாரதிதாசனின் 'அழகின் சிரிப்பு' நூலைப் பின்பற்றி வாணிதாசன் இயற்றிய நூல் எது?

(A) தொடுவானம்
(B) தேன்மழை
(C) ஒளிப்பறவை
(D) எழிலோவியம்
(E) விடை தெரியவில்லை

86. "பாட்டினைப்போல் ஆச்சரியம் பாரின் மிசை இல்லையடா!" எனக் கூறியவர்

(A) பாரதியார்
(B) சுரதா
(C) வண்ணதாசன்
(D) பாரதிதாசன்
(E) விடை தெரியவில்லை

87. பன்னிரு திருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகளாகத் தொகுக்கப்பட்ட பாடல்களைப் பாடியவர்

(A) அப்பர்
(B) சுந்தரர்
(C) திருஞானசம்பந்தர்
(D) மாணிக்கவாசகர்
(E) விடை தெரியவில்லை

88. நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்
படமாடக் கோயில் பகவதற்கு-அது ஆமே-என்று பாடியவர் யார்?

(A) திருநாவுக்கரசர்
(B) திருஞானசம்பந்தர்
(C) திருமங்கையாழ்வார்
(D) திருமூலர்
(E) விடை தெரியவில்லை

89. பதினெண் சித்தர்களில் ஒருவர்

(A) போகர்
(B) நாகர்
(C) கண்ணப்பர்
(D) கண்ணகனார்
(E) விடை தெரியவில்லை

90. 'ஆராய்ச்சி' என்ற இதழைத் தொடங்கி அதன் வழியாக நாட்டுப்புறவியலுக்கு தனித்தன்மை அளித்தவர்

(A) தே. லூர்து
(B) நா. வானமாமலை
(C) ஆறு. அழகப்பன்
(D) சு. சக்திவேல்
(E) விடை தெரியவில்லை

91. 'வாடா' என அழைத்து வாழ்வித்தால் அம்ம உனைக்
கூடாதென் றார்தடுப்பார் கோமதித்தாய் ஈஸ்வரியே!
-என்று பாடியவர்

(A) அண்ணாமலையார் (B) அதிவீரராம பாண்டியர்
(C) அழகிய சொக்கநாதர் (D) அருணகிரிநாதர்
(E) விடை தெரியவில்லை

92. 'நாட்டினிலும் காட்டினிலும் நாளெல்லாம் நன்றொலிக்கும்
பாட்டினிலும், நெஞ்சைப் பறிகொடுத்தேன் பாவியேன்'
என்ற பாரதியின் வரிகள் இடம்பெற்ற நூல்

(A) கண்ணன் பாட்டு (B) குயில் பாட்டு
(C) பாஞ்சாலி சபதம் (D) பாப்பாப் பாட்டு
(E) விடை தெரியவில்லை

93. 'ஆழிக்கு இணைகிடந்ததே தமிழ் ஈண்டு'
என்பதில் தமிழோடு ஒப்பிடப்பட்டு பாடிய சொல் எது?

(A) நிலம் (B) நீர்
(C) கடல் (D) காற்று
(E) விடை தெரியவில்லை

94. 'உலா' என்னும் சிற்றிலக்கியத்திற்கு வழங்கப்படும் மற்றொரு பெயர்

(A) உலா மடம் (B) உலா மடல்
(C) உலாப்புறம் (D) உலாக்குறம்
(E) விடை தெரியவில்லை

95. 'தேனருவித் திரையெழும்பி வானின் வழி ஒழுகும்
செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்'
-இப் பாடலடிகளில் வானின் வழி ஒழுகுவதாய் சிறப்பிக்கப்பட்டுள்ள அருவி எது?

(A) கும்பக்கரை அருவி
(B) திருக்குற்றால அருவி
(C) சுருளி அருவி
(D) திற்பரப்பு அருவி
(E) விடை தெரியவில்லை

96. மஞ்சள் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும்
மிஞ்சப் புகட்ட மிகவளர்ந்தாய்-இவ்வரிகளால் சுட்டப்படுபவர்

(A) ஆடல் மகளிர்
(B) தமிழ்த் தாய்
(C) விறலியர்
(D) பொருநர்
(E) விடை தெரியவில்லை

97. சேக்கிழாருக்கு "உத்தமசோழ பல்லவராயன்" என்ற பட்டத்தை வழங்கியவர்

(A) குலோத்துங்க சோழன்
(B) அநபாயச் சோழன்
(C) இராசேந்திர சோழன்
(D) இராசராச சோழன்
(E) விடை தெரியவில்லை

98. பெரியபுராணத்தில் உள்ள சருக்கங்களின் எண்ணிக்கை

(A) 10
(B) 11
(C) 12
(D) 13
(E) விடை தெரியவில்லை

99. திருவிளையாடற் புராணத்தில் 'இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலம்' அமைந்துள்ள காண்டம்

(A) மதுரைக் காண்டம்
(B) சுந்தரக் காண்டம்
(C) திரு ஆலவாய்க் காண்டம்
(D) கூடற் காண்டம்
(E) விடை தெரியவில்லை

100. பெருமாள் திருமொழி நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் பெற்றுள்ள இடம்

(A) முதலாம் திருமொழி
(B) மூன்றாம் திருமொழி
(C) நான்காம் திருமொழி
(D) ஐந்தாம் திருமொழி
(E) விடை தெரியவில்லை

**POST OF JUNIOR SCIENTIFIC OFFICER IN TAMIL NADU FORENSIC SCIENCES SUBORDINATE SERVICE -2023**

**COMPUTER BASED TEST**

**PAPER –II (PART –A & PART – B)**

**COMPULSORY TAMIL ELIGIBILITY TEST AND GENERAL STUDIES WITH APTITUDE AND MENTAL ABILITY TEST**

**வினாக்கள் : 1–100** **மொத்த மதிப்பெண்கள் : 150**

**Questions : 1–100** **Total Marks : 150**

---

1. "உனக்குக் கதை எழுதத் தெரியுமா"? என்ற வினாவிற்கு "கட்டுரை எழுதத் தெரியும்" என விடையளிப்பது

(A) சுட்டு விடை (B) நேர் விடை

(C) மறை விடை (D) இனமொழி விடை

(E) விடை தெரியவில்லை

2. சரியான விடை வகையை தெரிவு செய்க.

"இது செய்வாயா?" என்ற வினாவிற்கு "நீயே செய்" என்று விடை கூறுவது

(A) சுட்டு விடை (B) நேர் விடை

(C) இனமொழி விடை (D) ஏவல் விடை

(E) விடை தெரியவில்லை

3. எவ்வகை வினா என்பதை எழுதுக.

தான் அறியாத ஒன்றை அறிந்து கொள்வதற்காக வினவுவது

(A) அறியா வினா (B) அறி வினா

(C) ஐய வினா (D) கொளல் வினா

(E) விடை தெரியவில்லை

4. அலுவல் சார்ந்த கலைச் சொற்களுக்குத் தமிழாக்கம் அறிக.

புரபோசல்

(A) ஆவணம்
(B) கருத்துரு
(C) கோப்பு
(D) ஒப்புச்சீட்டு
(E) விடை தெரியவில்லை

5. இணையான தமிழ்ச்சொல் அறிக.

Member of Legislative Assembly

(A) நாடாளுமன்ற உறுப்பினர்
(B) பாராளுமன்ற உறுப்பினர்
(C) மக்களவை உறுப்பினர்
(D) சட்டமன்ற உறுப்பினர்
(E) விடை தெரியவில்லை

6. 'JOURNALISM' - என்ற ஆங்கில வார்த்தைக்கு நிகரான தமிழ்ச் சொல் தருக.

(A) ஊடகம்
(B) பருவ இதழ்
(C) மொழியியல்
(D) இதழியல்
(E) விடை தெரியவில்லை

7. 'உள்ளங்கை நெல்லிக்கனி போல' என்ற சொற்றொடரில் உவமை விளக்கும் பொருள்?

(A) வெளிப்படைத் தன்மை
(B) எளிதில் மனதில் பதிதல்
(C) தற்செயல் நிகழ்வு
(D) பயனற்ற செயல்
(E) விடை தெரியவில்லை

8. 'காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்தது போல' என்ற உவமைக்குப் பொருத்தமான பொருள் யாது?

(A) ஒற்றுமையின்மை
(B) பயனற்ற செயல்
(C) தற்செயல் நிகழ்வு
(D) எதிர்பாரா நிகழ்வு
(E) விடை தெரியவில்லை

9. நெல்லிக்காய் மூட்டையைக் கொட்டினார் போல - உவமையின் பொருளைத் தேர்க.

(A) தடையின்றி மிகுதியாக
(B) எண்ணி செயல்படாமை
(C) ஒற்றுமையின்மை
(D) தற்செயல் நிகழ்வு
(E) விடை தெரியவில்லை

10. அப்துல் நேற்று வருவித்தான் - இது எவ்வகை வாக்கியம்

(A) பிற வினை
(B) தன் வினை
(C) செய் வினை
(D) செயப்பாட்டு வினை
(E) விடை தெரியவில்லை

11. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுக.

"சட்டி உடைந்து போயிற்று"

(A) தன் வினை
(B) பிற வினை
(C) செய் வினை
(D) செயப்பாட்டு வினை
(E) விடை தெரியவில்லை

12. தொடர்வகை அறிந்து சரியான விடையை எழுதுக.

பழந்தமிழ் இலக்கியங்கள் பல அழிந்து விட்டனவே!

(A) வினாத் தொடர்
(B) கட்டளைத் தொடர்
(C) உணர்ச்சித் தொடர்
(D) செய்தித் தொடர்
(E) விடை தெரியவில்லை

13. மனித நேயத்துடன் வாழ்பவர்களால்தான் இவ்வுலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது.
- இவ்விடைக்கேற்ற வினாவைத் தேர்க.

(A) மனித நேயத்துடன் வாழ்பவர்கள் யார்?

(B) மனித நேயத்துடன் வாழ்பவர்களால் பயன் என்ன?

(C) யாரால் இவ்வுலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது?

(D) இவ்வுலகம் இயங்க என்ன செய்ய வேண்டும்?

(E) விடை தெரியவில்லை

14. விடைக்கேற்ற வினாவை தெரிவு செய்க.
விடை : ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.

(A) ஒரு தாற்றில் எவ்வளவு வாழைப்பழங்கள் உள்ளன?

(B) ஒரு தாற்றில் எத்தனை வாழைப்பழங்கள் உள்ளன?

(C) ஒரு தாற்றில் எத்தனை சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன?

(D) ஒரு தாற்றில் எவ்வாறு பழங்கள் உள்ளன?

(E) விடை தெரியவில்லை

15. இரு வினைகளின் பொருள் வேறுபாடு அறிதல்
சரியான இணையைக் கண்டுபிடி.
தொடுத்தல் – தொடுதல்

(A) பார்த்தல் – பகிர்தல்

(B) தேடுதல் – கிடைத்தல்

(C) அணிதல் – தீண்டுதல்

(D) கிடைத்தல் – படைத்தல்

(E) விடை தெரியவில்லை

16. சரியான தொடர்களைத் தேர்ந்தெடு.

- மறைந்து, மறைத்து

(I) பசி கண்ணை மறைத்தது

(II) உணவு உண்டதால் பசி மறைந்தது

(III) பசி கண்ணை மறைந்தது

(IV) உணவு உண்டதால் பசி மறைத்தது

(A) (I) மற்றும் (IV) சரியானவை

(B) (II) மற்றும் (III) சரியானவை

(C) (I) மற்றும் (II) சரியானவை

(D) (III) மற்றும் (IV) சரியர்னவை

(E) விடை தெரியவில்லை

17. சொற்களை ஒழுங்குபடுத்திச் சரியான தொடரைத் தேர்க.

(A) இயற்கையின் அழகிய நாட்டியங்கள் அசைவுகள் அனைத்தும்

(B) இயற்கையின் அசைவுகள் அனைத்தும் அழகிய நாட்டியங்கள்

(C) அழகிய நாட்டியங்கள் அனைத்தும் இயற்கையின் அசைவுகள்

(D) அழகிய அசைவுகள் அனைத்தும் இயற்கையின் நாட்டியங்கள்

(E) விடை தெரியவில்லை

18. சொற்கள் ஒழுங்குபட அமைந்த சரியான தொடரைக் தேர்க.

(A) அலைபேசியைச் சாலையைக் கடப்பதே நல்லது அணைத்து விட்டு

(B) சாலைகளின் இருபுறங்களிலும் உள்ள பயன்படுத்துங்கள் நடைமேடையை

(C) விதிக்கப்பட்ட இடங்களில் மட்டும் சாலையைக் கடக்கவும்

(D) ஓட்டுநர் உரிமம் இன்றிச் சட்டப்படி குற்றம் வண்டிகளை ஓட்டுவது

(E) விடை தெரியவில்லை

19. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குக.

இரண்டாயிரம் தொன்மையுடையது ஆண்டுகாலத் ஏறு தழுவுதல்

(A) ஏறு தழுவுதல் தொன்மையுடையது ஆண்டுகாலத் இரண்டாயிரம்

(B) ஏறு தழுவுதல் இரண்டாயிரம் ஆண்டுகாலத் தொன்மையுடையது

(C) இரண்டாயிரம் ஆண்டுகாலத் ஏறுதழுவுதல் தொன்மையுடையது

(D) இரண்டாயிரம் தொன்மையுடையது ஏறு தழுவுதல் ஆண்டுகாலத்

(E) விடை தெரியவில்லை

20. பின்வரும் இசைக்கருவிகளின் பெயர்களை அகர வரிசைப்படுத்துக.

படகம், தவில், கணப்பறை, பேரியாழ், உறுமி, உடுக்கை, தவண்டை, பிடில், நாகசுரம், மகுடி

(A) உடுக்கை, தவண்டை, பிடில், நாகசுரம், மகுடி, உறுமி, படகம், தவில், கணப்பறை, பேரியாழ்

(B) உறுமி, உடுக்கை, தவண்டை, நாகசுரம், மகுடி, பிடில், படகம், தவில், கணப்பறை, பேரியாழ்

(C) உடுக்கை, உறுமி, கணப்பறை, தவண்டை, தவில், நாகசுரம், படகம், பிடில், பேரியாழ், மகுடி

(D) உறுமி, உடுக்கை, தவில், நாகசுரம், கணப்பறை, படகம், பிடில், பேரியாழ், மகுடி, தவண்டை

(E) விடை தெரியவில்லை

21. அகரவரிசைப்படி சொற்களைச் சீர் செய்க.

வனப்பு, அழகு, பூரிப்பு, மகிழ்ச்சி

(A) அழகு, வனப்பு, மகிழ்ச்சி, பூரிப்பு

(B) அழகு, பூரிப்பு, மகிழ்ச்சி, வனப்பு

(C) அழகு, மகிழ்ச்சி, பூரிப்பு, வனப்பு

(D) பூரிப்பு, அழகு, மகிழ்ச்சி, வனப்பு

(E) விடை தெரியவில்லை

22. 'படி' என்ற வேர்ச்சொல்லின் வினைமுற்றைக் கண்டறிக.

(A) படித்த (B) படித்து

(C) படிக்கின்ற (D) படித்தான்

(E) விடை தெரியவில்லை

23. வினையாலணையும் பெயரைக் கண்டறிக.

கேள் ————————

(A) கேட்டு (B) கேட்ட

(C) கேட்டான் (D) கேட்டவர்

(E) விடை தெரியவில்லை

24. சுடு - என்ற சொல்லின் தொழிற்பெயரைக் கண்டறிக.

(A) சுட்டான் (B) சுட்ட

(C) சுடுதல் (D) சுட்டு

(E) விடை தெரியவில்லை

25. "மயங்கிய" - வேர்ச்சொல்லைத் தருக.

(A) மய (B) மயக்கி

(C) மயங்கு (D) மயக்கு

(E) விடை தெரியவில்லை

26. சரியான வேர்ச்சொல் - பொருந்தாத இணையைத் தேர்க.

(A) வேறல் – வெல்

(B) கோடல் – கோடு

(C) கோறல் – கொல்

(D) சேறல் – செல்

(E) விடை தெரியவில்லை

27. 'உண்கிறேன்' - இதன் வேர்ச்சொல்லைக் கண்டறிக.

(A) உண்டு
(B) உண்
(C) ஊண்
(D) உண்ணல்
(E) விடை தெரியவில்லை

28. "என்னுடன் ஊருக்கு வருவாயா?" என்ற வினாவிற்கு 'வராமல் இருப்பேனா?' என்று கூறுவது, ———————— விடை ஆகும்.

(A) வினா எதிர் வினாதல் விடை
(B) உறுவது கூறல் விடை
(C) இனமொழி விடை
(D) உற்றது உரைத்தல் விடை
(E) விடை தெரியவில்லை

29. குணக்கு, குடக்கு எனும் பெயர்கள் குறிப்பது

(A) மலை
(B) கடல்
(C) திசை
(D) ஆறு
(E) விடை தெரியவில்லை

30. ஏரி, ஏறி - ஒலி வேறுபாடு அறிந்து சரியாக அமைந்துள்ள விடையைத் தேர்க.

(A) மரத்தில் ஏரினான். ஏறியில் குளித்தான்.
(B) மரத்தில் ஏறினான். ஏரியில் குளித்தான்.
(C) ஏறியில் மீன் பிடித்தான். மலையில் ஏரினான்
(D) ஏணியில் ஏரினாள். ஏறியில் மீன் பிடித்தாள்
(E) விடை தெரியவில்லை

31. ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க.

சூல் - சூழ் - சூள்

| | சூல் | சூழ் | சூள் |
|---|---|---|---|
| (A) | கருப்பம் - | முட்டை - | ஆணை |
| (B) | சுற்றியிரு - | கருப்பம் - | சபதம் |
| (C) | கருப்பம் - | ஆராய்ச்சி - | சபதம் |
| (D) | ஆணை - | ஆராய்ச்சி - | கருப்பம் |

(E) விடை தெரியவில்லை

32. ஒலி மற்றும் பொருள் வேறுபாடு அறிதல். சரியானத் தொடரைத் தேர்க.

(A) கார் பருவத்தில் நன்றாக விளைந்தும், தானியங்களின் விலை குறையாமல் இருந்தது

(B) கார் பறுவத்தில் நண்றாக விளைந்தும், தாணியங்களின் விலை குறையாமல் இருந்தது

(C) கார் பருவத்தில் நன்றாக விளைந்தும், தானியங்களின் விலை குரையாமல் இருந்தது

(D) காற் பருவத்தில் நன்றாக விலைந்தும், தாணியங்களின் விலை குரையாமல் இறுந்தது

(E) விடை தெரியவில்லை

33. 'Elocution' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நிகரான தமிழ்ச்சொல் தருக.

(A) எழுத்தாற்றல்
(B) பேச்சாற்றல்
(C) கதைப்பாடல்
(D) தியாகம்
(E) விடை தெரியவில்லை

34. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லறிதல்.

LEVEL CROSSING

(A) கூட்டுச் சாலையை கடக்குமிடம்

(B) வளைவுப் பாதையைக் கடக்குமிடம்

(C) இருப்புப்பாதையைக் கடக்குமிடம்

(D) பள்ளிப் பகுதியைக் கடக்குமிடம்

(E) விடை தெரியவில்லை

35. தமிழ்ச் சொல்லைக் கண்டறிக.

REVOLUTION

(A) வறட்சி

(B) புரட்சி

(C) காட்சி

(D) மாட்சி

(E) விடை தெரியவில்லை

36. வட்டார வழக்குச் சொல்லில் 'பதனம்' என்பதன் பொருளை சுட்டுக.

(A) பாத்தி

(B) சலிப்பு

(C) தொலைவில்

(D) கவனமாக

(E) விடை தெரியவில்லை

37. மரபுப் பிழைகள் நீக்குக. - மரபுப் பிழையுள்ள தொடரைத் தெரிவு செய்க.

பறவைகளின் ஒலி மரபு.

(A) காகம் கரையும்
(B) கோழி கூவும்
(C) ஆந்தை அலறும்
(D) மயில் அகவும்
(E) விடை தெரியவில்லை

38. மரபுப் பிழை நீக்கி சரியான சொல்லால் எழுதுக.

இல்லத்தின் அருகே புதிதாக கூரை ————

(A) போட்டனர்
(B) மேய்ந்தனர்
(C) வேய்ந்தனர்
(D) முடைந்தனர்
(E) விடை தெரியவில்லை

39. பொருந்தாச் சொல்லைக் கண்டறிதல்.

பாரதியார்

(A) பாரதிதாசன்
(B) வாணிதாசன்
(C) கண்ணதாசன்
(D) ஔவையார்
(E) விடை தெரியவில்லை

40. மகரக் குறுக்கம் அல்லாதது எது?

(A) போன்ம்
(B) கொண்ம்
(C) வரும் வளவன்
(D) நறும் மலர்
(E) விடை தெரியவில்லை

41. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக.

பாடுதல், பாடியவள், கெடுதல், படித்தல்

(A) பாடுதல் (B) பாடியவள்

(C) கெடுதல் (D) படித்தல்

(E) விடை தெரியவில்லை

42. 'எளிது' என்னும் சொல்லின் எதிர்ச்சொல் ————

(A) அரிது (B) சிறிது

(C) பெரிது (D) வறிது

(E) விடை தெரியவில்லை

43. எதிர்ச்சொல்லை எடுத்தெழுதுக.

ஐம்பெருங்காப்பியம்

(A) ஐந்திணை (B) ஐங்குறுகாப்பியம்

(C) ஐஞ்சிறுகாப்பியம் (D) ஐந்நெடுங்காப்பியம்

(E) விடை தெரியவில்லை

44. எதிர்ச்சொல்லை எடுத்து எழுதுதல்

நகுதல் - எதிர்ச்சொல் தருக.

(A) சிரித்தல் (B) உவத்தல்

(C) மலர்தல் (D) அழுதல்

(E) விடை தெரியவில்லை

45. 'இடர் ஆழி நீங்குகவே' - இத்தொடரில் இடர் என்பதன் எதிர்ச்சொல்லை எழுதுக.

(A) இன்பம் (B) துன்பம்

(C) துயரம் (D) தூய்மை

(E) விடை தெரியவில்லை

46. தானொரு - என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

(A) தா+ஒரு
(B) தான்+னொரு
(C) தான்+ஒரு
(D) தானே+ஒரு
(E) விடை தெரியவில்லை

47. சேர்த்து எழுதுக. இனிமை + உயிர்

(A) இன்உயிர்
(B) இனிய உயிர்
(C) இன்னுயிர்
(D) இனிமை உயிர்
(E) விடை தெரியவில்லை

48. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்

(A) எந்+தமிழ்+நா
(B) எந்த+தமிழ்+நா
(C) எம்+தமிழ்+நா
(D) எந்தம்+தமிழ்+நா
(E) விடை தெரியவில்லை

பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையை தேர்ந்தெடு :

அது 1921 ஆம் ஆண்டு மத்திய தரைக்கடலில் ஒரு கப்பல் இங்கிலாந்தை நோக்கி சென்று கொண்டிருந்தது. தமிழர் ஒருவர் கப்பலின் மேல் தளத்தில் நின்று கடல் அலைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். திடீரென அவரது உள்ளத்தில் கடல் நீர் ஏன் நீல நிறமாகக் காட்சியளிக்கிறது என்ற வினா எழுந்தது. அவ்வினா அவரை உறங்கவிடவில்லை. இங்கிலாந்து பயணம் முடிந்து இந்தியா திரும்பினார். பிறகு பாதரச ஆவி விளக்கு, பென்சீன் மற்றும் நிறமாலைக் காட்டி ஆகியவற்றின் உதவியுடன் தமது ஆய்வைத் தொடங்கினார்.

ஆய்வின் முடிவில் 1928 பிப்ரவரி 28 ஆம் நாள் "இராமன் விளைவு" என்னும் தமது கண்டுபிடிப்பை வெளியிட்டார். இக்கண்டுபிடிப்பு இந்தியாவிற்கு அறிவியலுக்கான முதல் நோபல் பரிசைப் பெற்றுத் தந்தது. அவர் தமது கண்டுபிடிப்பை வெளியிட்ட பிப்ரவரி 28 ஆம் நாளை நாம் ஆண்டுதோறும் "தேசிய அறிவியல் நாள்" எனக் கொண்டாடி மகிழ்கிறோம். யார் அவர் தெரியுமா? அவர்தான் சர்.சி.வி. இராமன்.

49. இராமன் விளைவைக் கண்டறிந்தவர் யார்?

(A) சர்ஐசக் நியூட்டன்
(B) சர்.சி.வி. இராமன்
(C) தாமஸ் ஆல்வா எடிசன்
(D) ஐன்ஸ்டீன்
(E) விடை தெரியவில்லை

50. இராமன் அவர்களுக்கு நோபல் பரிசைப் பெற்றுத்தந்த கேள்வி எது?

(A) கடல் நீர் ஏன் கறுப்பாகக் காட்சியளிக்கிறது?
(B) கடல் நீர் ஏன் நீல நிறமாக இல்லை?
(C) கடல் நீர் ஏன் நீல நிறமாகக் காட்சியளிக்கிறது?
(D) கடல் நீர் ஏன் உப்பாக இருக்கிறது?
(E) விடை தெரியவில்லை

51. தேசிய அறிவியல் நாள் என்றைக்குக் கொண்டாடப்படுகிறது?

(A) பிப்ரவரி 28
(B) ஜனவரி 26
(C) ஜூன் 30
(D) டிசம்பர் 10
(E) விடை தெரியவில்லை

52. சர்.சி.வி இராமன் தன் ஆய்வின் முடிவை எந்த ஆண்டு வெளியிட்டார்?

(A) 1920 (B) 1928

(C) 1982 (D) 1298

(E) விடை தெரியவில்லை

53. இந்தியாவிற்கு அறிவியலுக்கான முதல் நோபல் பரிசைப் பெற்றவர் யார்?

(A) மேரி கியூரி (B) இரவீந்திரநாத் தாகூர்

(C) இராமானுஜர் (D) சர்.சி.வி. இராமன்

(E) விடை தெரியவில்லை

54. ஒருமைப் பன்மைப் பிழையற்ற தொடர் எது?

(A) மாணவர்கள் கால்பந்து விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்.

(B) மாணவர் கால்பந்து விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்.

(C) மாணவர்கள் கால்பந்து விளையாடிக் கொண்டிருக்கிறார்.

(D) மாணவர்கள் கால்பந்து விளையாடுகிறான்.

(E) விடை தெரியவில்லை

55. ஒருமைப் பன்மைப் பிழையற்ற தொடர் எது?

(A) என் பள்ளிப்பருவத்தின் பசுமை மாறா நினைவுகள் நெஞ்சில் எழுகின்றது

(B) என் பள்ளிப்பருவத்தின் பசுமை மாறா நினைவு நெஞ்சில் எழுகின்றன

(C) என் பள்ளிப்பருவத்தின் பசுமை மாறா நினைவுகள் நெஞ்சில் எழுகின்றன

(D) எங்கள் பள்ளிப்பருவத்தின் பசுமை மாறா நினைவுகள் நெஞ்சில் எழுகிறது

(E) விடை தெரியவில்லை

56. ஒருமைப் பன்மைப் பிழையற்ற தொடரைத் தேர்ந்தெடுக்க.

(A) அன்னங்கள் விளையாடும் அகலமான துறைகளைக் கொண்ட நீர்நிலைகள் உள்ளது

(B) அன்னங்கள் விளையாடும் அகலமான துறைகளைக் கொண்ட நீர்நிலைகள் உள்ளன

(C) அன்னங்கள் விளையாடும் அகலமான துறைகளைக் கொண்ட நீர்நிலை உள்ளன

(D) அன்னம் விளையாடும் அகலமான துறை கொண்ட நீர்நிலைகள் உள்ளது

(E) விடை தெரியவில்லை

57. சொல்-பொருள்-பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | நாளிகேரம் | 1. | அரசமரம் |
| (b) | கோளி | 2. | தென்னை |
| (c) | சாலம் | 3. | பச்சிலை மரம் |
| (d) | தமாலம் | 4. | ஆச்சா மரம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 3 | 1 |
| (B) | 1 | 3 | 4 | 2 |
| (C) | 2 | 1 | 4 | 3 |
| (D) | 4 | 2 | 3 | 1 |

(E) விடை தெரியவில்லை

58. சொல்லும் - பொருளும்

தவறான இணையைக் கண்டறிக.

(A) கிளை - உறவினர்

(B) பேதையார் - அறிவற்றவர்

(C) போற்றார் - பகைவர்

(D) அலந்தவர் - கொடையாளர்

(E) விடை தெரியவில்லை

59. சொல்-பொருள்-பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | மைவனம் | 1. | தேன் |
| (b) | முருகு | 2. | மலைநெல் |
| (c) | மதியம் | 3. | பவளம் |
| (d) | துவரை | 4. | நிலவு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 4 | 3 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 4 | 2 | 3 | 1 |
| (D) | 1 | 3 | 2 | 4 |

(E) விடை தெரியவில்லை

60. ஒரு இரவும் ஓர் பகலும் சேர்ந்தது ஒருநாள்

(A) ஒரு இரவும் அஃது பகலும் சேர்ந்தது ஒரு நாள்

(B) ஓர் இரவும் ஒரு பகலும் சேர்ந்தது ஒரு நாள்

(C) அந்த இரவும் ஓர் பகலும் சேர்ந்தது ஒரு நாள்

(D) இரவும் மற்றும் பகலும் சேர்ந்தது ஒரு நாள்

(E) விடை தெரியவில்லை

61. சரியான தொடரைத் தேர்ந்தெடு

சாலவும் நன்று. எவ்வகைத் தொடர்?

(A) விளித்தொடர்

(B) இடைச்சொல் தொடர்

(C) அடுக்குத்தொடர்

(D) உரிச்சொல் தொடர்

(E) விடை தெரியவில்லை

62. சரியான தொடரைக் கண்டுபிடி

(A) பள்ளிக்குச் சுற்றுச்சுவர் எழுப்பப்பட்டது

(B) முருகன் சோறு தின்றான்

(C) குயவர் பானை செய்தார்

(D) அணில் பழம் சாப்பிட்டது.

(E) விடை தெரியவில்லை

63. சரியான தொடரைத் தேர்க.

(A) மையோ மறிகடலோ மழைமுகிலோ மரகதமோ

(B) மையோ மழைமுகிலோ மரகதமோ மறிகடலோ

(C) மையோ மரகதமோ மறிகடலோ மழைமுகிலோ

(D) மையோ மழைமுகிலோ மறிகடலோ மரகதமோ

(E) விடை தெரியவில்லை

64. பழம் என்பதன் கூட்டப் பெயர்

(A) குவியல்

(B) குலை

(C) மந்தை

(D) கட்டு

(E) விடை தெரியவில்லை

65. பின்வரும் சொல்லின் சரியான கூட்டுப் பெயரை தெரிக.

கல்

(A) கல் கூட்டம்

(B) கல் மந்தை

(C) கற்குவியல்

(D) கல் கட்டு

(E) விடை தெரியவில்லை

66. பொருத்தமான பொருளைத் தெரிவு செய்தல்

"இஸ்மத் சன்னாசி" என்ற சொல் எந்த மொழிக்கு உரியது?

(A) கிரேக்கம்
(B) சமஸ்கிருதம்
(C) அரபு
(D) பாரசீகம்
(E) விடை தெரியவில்லை

67. பொருத்தமான பொருளைத் தெரிவு செய்க.

கம்பர் எழுதிய நூல்களுள் ஒன்று

(A) நீதிநெறி விளக்கம்
(B) மதுரை கலம்பகம்
(C) கந்தர் கலிவெண்பா
(D) சடகோபர் அந்தாதி
(E) விடை தெரியவில்லை

68. 'குண்டம்' - எதைக் குறிக்கிறது?

(A) குளிக்கும் நீர் நிலை
(B) இடத்தின் பெயர்
(C) உவர் நீர் நிலை
(D) கமலைக் கிணறு
(E) விடை தெரியவில்லை

69. பொருந்தாத இணையைத் தேர்க.

(A) மல்லெடுத்த – வலிமையற்ற
(B) சமர் – போர்
(C) எக்களிப்பு – பெருமகிழ்ச்சி
(D) நல்கும் – தரும்
(E) விடை தெரியவில்லை

70. கலைச்சொல் அறிதல்

RECIPROCITY

(A) வறுமை
(B) வளமை
(C) நற்பண்பு
(D) ஒப்புரவு நெறி
(E) விடை தெரியவில்லை

71. கொடுக்கப்பட்டுள்ள கலைச்சொல்லின் பொருளறிந்து சரியான விடையை தெரிவு செய்க.

Equestrain

(A) யானையேற்றம்
(B) கப்பல் பயணம்
(C) குதிரையேற்றம்
(D) இரயில் பயணம்
(E) விடை தெரியவில்லை

72. கூற்று, காரணம் - சரியா? தவறா?

கூற்று : ஒரே நேரத்தில் நிகழ்த்தப்படும் நூறு செயல்களை நினைவில் கொண்டு விடையளித்தல் சதாவதானம் எனப்படும்.

காரணம் : சதம் என்றால் நூறு என்று பொருள்.

(A) கூற்று : தவறு, காரணம் : தவறு
(B) கூற்று : தவறு, காரணம் : சரி
(C) கூற்று : சரி, காரணம் : சரி
(D) கூற்று : சரி, காரணம் : தவறு
(E) விடை தெரியவில்லை

73. கூற்று : கட்டுரையைப் படித்தான் – வேற்றுமைத் தொடர்

காரணம் : 'ஐ' என்னும் வேற்றுமை உருபு வெளிப்படையாக வந்து பொருளை உணர்த்துகிறது

(A) கூற்றும், காரணமும் தவறு
(B) கூற்று சரி, காரணம் தவறு
(C) கூற்று தவறு, காரணம் சரி
(D) கூற்றும், காரணமும் சரி
(E) விடை தெரியவில்லை

74. கூற்று, காரணம் சரியா என ஆய்க.

கூற்று : இப்புவியின் படைப்பில் கடவுள் போன்ற ஒருவர் பின்னணியில் இருந்தார் என்பதை ஸ்டீபன் ஹாக்கிங் மறுத்தார்.

காரணம் : ஸ்டீபன் ஹாக்கிங் இப்பேரண்டம் பெரு வெடிப்பினால் உருவானதே என்பதை கணிதவியல் அடிப்படையில் விளக்கினார்.

(A) கூற்று, காரணம் இரண்டும் சரி
(B) கூற்று சரி, காரணம் தவறு
(C) கூற்று தவறு, காரணம் சரி
(D) கூற்று, காரணம் இரண்டும் தவறு
(E) விடை தெரியவில்லை

75. இருபொருள் தருக.

ஓடு

(A) ஓடுதல், மேற்கூரை
(B) நதி, எண்
(C) நிலவு, மாதம்
(D) புன்னகை, ஆபரணம்
(E) விடை தெரியவில்லை

76. இருபொருள் தருக.

நகை

(A) பெருமை, உவகை
(B) அழகு, விருப்பம்
(C) சிரிப்பு, அணிகலன்
(D) ஆசை, மகிழ்ச்சி
(E) விடை தெரியவில்லை

77. இருபொருள் தரும் இணையைத் தேர்ந்தெடு.

வண்மை

(A) ஈகை, வலிமை
(B) வலிமை, கட்டளை
(C) வழங்குதல், கட்டளை
(D) கயிறு, நிலம்
(E) விடை தெரியவில்லை

78. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க (மழை)

(A) மரம் வளர்ப்போம் – பெறுவோம்

(B) உரம் வளர்ப்போம் – பெறுவோம்

(C) வீடு வளர்ப்போம் – பெறுவோம்

(D) மடம் வளர்ப்போம் – பெறுவோம்

(E) விடை தெரியவில்லை

79. அடைப்புக்குள் கொடுக்கப்பட்டுள்ள சொல்லை சரியான தொடரோடு சேர்க்க (ஆசிய ஜோதி)

(A) புத்தரின் வரலாற்றைக் கூறும் நூல்

(B) நாயன்மார்களின் வரலாற்றைக் கூறும் நூல்

(C) பெரியாரின் வரலாற்றைக் கூறும் நூல்

(D) பாரதியாரின் வரலாற்றைக் கூறும் நூல்

(E) விடை தெரியவில்லை

80. கீழ்க்காணும் தொடர்களை இணைக்கும் சரியான இணைப்புச் சொல்லைத் தேர்க.

1. தினமும் உடற்பயிற்சி செய்யவேண்டும்

2. உடல் ஆரோக்கியத்திற்கு உடற்பயிற்சி அவசியமாகும்.

(A) ஆனால் (B) ஆகையால்

(C) அதேபோல (D) ஏனெனில்

(E) விடை தெரியவில்லை

81. சரியான இணைப்புச் சொல்லைத் தெரிவு செய்க.

நிலம், நீர், காற்று ஆகியவற்றை மாசுபடுத்தி வருகிறோம். ———— இயற்கைச் சமநிலை மாறி புவி வெப்பமயமாகிறது.

(A) ஆனால்
(B) ஏனெனில்
(C) அதுபோல
(D) அதனால்
(E) விடை தெரியவில்லை

82. சரியான வினாச்சொல்லைத் தேர்ந்தெடு.

திருவள்ளுவர் திருக்குறளை ———— இயற்றினார்?

(A) எதை?
(B) எது?
(C) எவ்வாறு?
(D) யார்?
(E) விடை தெரியவில்லை

83. சரியான வினாச்சொல்லைத் தேர்ந்தெடு.

பழம், வேர் ஆகியவற்றின் இயல்புகள் ————?

(A) எது?
(B) யாது?
(C) என்ன?
(D) யாவை?
(E) விடை தெரியவில்லை

84. சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு.

நெல்லையப்பர் கோவில் ———— உள்ளது?

(A) என்ன?
(B) எங்கு?
(C) எது?
(D) எப்பொழுது?
(E) விடை தெரியவில்லை

85. பொருத்தமான காலத்தை இட்டு நிரப்புக.

முதலமைச்சர் நேற்று கோவை ————.

(A) வந்தார்
(B) வருகிறார்
(C) வருவார்
(D) வருகின்றார்
(E) விடை தெரியவில்லை

86. பொருத்தமான காலம் அமைத்தல்.

சரியான தொடரைத் தேர்ந்தெடு

(A) மொழிபெயர்த்தல் என்ற தொடரைத் தொல்காப்பியர் மரபியலில் குறிப்பிட்டுள்ளார் (இறந்த காலம்)
(B) மொழிபெயர்த்தல் என்ற தொடரைத் தொல்காப்பியர் மரபியலில் குறிப்பிடுவார் (நிகழ்காலம்)
(C) மொழிபெயர்த்தல் என்ற தொடரைத் தொல்காப்பியர் மரபியலில் குறிப்பிடுகின்றார் (எதிர்காலம்)
(D) மொழிபெயர்த்தல் என்ற தொடரைத் தொல்காப்பியர் மரபியலில் குறிப்பிடுகிறார் (எதிர்காலம்)
(E) விடை தெரியவில்லை

87. தலைமையாசிரியர் தேசியக் கொடியை ஏற்றினார்.

காலத்தைக் கண்டுபிடி.

(A) எதிர்காலம்
(B) நிகழ்காலம்
(C) வருங்காலம்
(D) இறந்தகாலம்
(E) விடை தெரியவில்லை

88. பின்வரும் சொற்களை இணைத்து கொடுக்கப்பட்டுள்ள சரியான விடையை தெரிவு செய்க.

நீதி, கோல், விண், நூல், கண், மீன், எழுது

(A) நீதிநூல், விண்மீன், எழுதுகோல்

(B) கண்கோல், நீதிகோல், எழுதுகோல்

(C) விண்மீன், கண்மீன், கோல்மீன்

(D) நீதிநூல், எழுதுநூல், கண்மீன்

(E) விடை தெரியவில்லை

89. சொற்களை இணைத்துப் புதிய சொல்லை உருவாக்குக

குருவி

(A) இலை

(B) கூடு

(C) மரம்

(D) கனி

(E) விடை தெரியவில்லை

90. கீழ்க்கண்டவற்றுள் எழுத்து வழக்கு சொல்லை தேர்ந்தெடு

(A) காகம் கத்தும்

(B) காகம் கரையும்

(C) காகம் அழும்

(D) காகம் பேசும்

(E) விடை தெரியவில்லை

91. பேச்சு வழக்கு, எழுத்து வழக்குச் சொற்களைப் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | வெளச்சல் | 1. | விலை |
| (b) | புடிவாதம் | 2. | விளைச்சல் |
| (c) | வெல | 3. | அமாவாசை |
| (d) | அம்மாசி | 4. | பிடிவாதம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 3 | 1 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 4 | 1 | 3 | 2 |

(E) விடை தெரியவில்லை

92. பின்வருவனவற்றுள் பேச்சு வழக்கு அல்லாத தொடரைக் கண்டறிக.

(A) அவன் இப்ப ஒசரமா வளந்துட்டான்

(B) அவன் இப்பொழுது உயரமா வளந்துட்டான்

(C) அவன் இப்பொழுது உயரமாக வளந்துட்டான்

(D) அவன் இப்பொழுது உயரமாக வளர்ந்துவிட்டான்

(E) விடை தெரியவில்லை

93. சொற்களின் கூட்டுப் பெயர்களை எழுதுக :

சோளம்

(A) தோப்பு

(B) தோட்டம்

(C) கொல்லை

(D) வயல்

(E) விடை தெரியவில்லை

94. நிறுத்தற்குறி அறிக.

(எது சரியானது)

(A) முத்தமிழ், "இயல் இசை நாடகம்".

(B) "முத்தமிழ்" – 'இயல், இசை, நாடகம்'.

(C) முத்தமிழ் : இயல், இசை, நாடகம்.

(D) முத்தமிழ் ! இயல் இசை நாடகம்.

(E) விடை தெரியவில்லை

95. கீழ்கண்டவற்றுள் எது மருஉப் பெயர்?

(A) மதுரை

(B) தஞ்சாவூர்

(C) மயிலாப்பூர்

(D) கோவை

(E) விடை தெரியவில்லை

96. ஊர்ப்பெயர்களின் மருஉவை எழுதுக

திருச்சிராப்பள்ளி

(A) புதுகை

(B) திருச்சி

(C) மயிலை

(D) தஞ்சை

(E) விடை தெரியவில்லை

97. தமிழக முதல்வர் மயிலைக்குச் சுற்றுப் பயணம் சென்றார்.

– இத்தொடரில் 'மயிலை' என்று குறிப்பிடப்படுவது

(A) மயிலாப்பூர்

(B) மயில்

(C) மயிலாடுதுறை

(D) இமயமலை

(E) விடை தெரியவில்லை

98. மெய்நிகர் உதவியாளர் நாம் கேட்பதை ப்ரௌசரில் தேடும்.

– இத்தொடரில் 'ப்ரௌசர்' என்ற சொல்லுக்கு இணையானத் தமிழ்ச்சொல்லைக் கண்டறிக.

(A) சுட்டி

(B) இணையம்

(C) உலாவி

(D) வலையொளி

(E) விடை தெரியவில்லை

99. நாக்கிற்கு நான்கு ஆதார ருசிகள் தாம் தெரியும்.

– இத்தொடரில் 'ருசி' என்ற சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல்

(A) சுவை

(B) இனிமை

(C) பதம்

(D) உணர்வு

(E) விடை தெரியவில்லை

100. டெரகோட்டா - இச்சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல்லைக் கண்டறிக.

(A) ஓவியக்கலை

(B) சிற்பக்கலை

(C) சுடுமண் சிற்பக்கலை

(D) செப்புப் படிமக் கலை

(E) விடை தெரியவில்லை

**COMBINED GEOLOGY SUBORDINATE SERVICE EXAMINATION – 2023**

**COMPUTER BASED TEST**

**PAPER – II [PART A + PART B]**

**PART A – COMPULSORY TAMIL ELIGIBILITY TEST**

**PART B – GENERAL STUDIES AND MENTAL ABILITY TEST**

| | |
|---|---|
| வினாக்கள் : 1–100 | மொத்த மதிப்பெண்கள் : 150 |
| **Questions : 1–100** | **Total Marks : 150** |

1. சரியான இணையைக் கண்டறிக :

(A) கதி – துணை

(B) பேறு – மிகுதி

(C) தரம் – செல்வம்

(D) நனி – தகுதி

(E) விடை தெரியவில்லை

2. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக :

திராவிட மொழிகளில் பொருந்தாததை எடுத்து எழுதுக.

(A) தமிழ்

(B) மலையாளம்

(C) ஹிந்தி

(D) தெலுங்கு

(E) விடை தெரியவில்லை

3. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக :

(A) போது

(B) கம்மல்

(C) செம்மல்

(D) அரும்பு

(E) விடை தெரியவில்லை

4. பிறமொழிச் சொல்லற்ற தொடர் எது?

(A) அவர்கள் இருவர்க்கும் இடையே விவாதம் நடந்தது

(B) அவர்கள் இருவர்க்கும் இடையே உரையாடல் நடந்தது

(C) அவர்கள் இருவர்க்கும் இடையே கான்வர்சேசன் நடந்தது

(D) அவர்கள் இருவர்க்கும் டிஸ்கசன் நடந்தது

(E) விடை தெரியவில்லை

5. மரபுப் பிழைகள் ஒலி மரபு :

கூகை

(A) குழறும்

(B) அகவும்

(C) கூவும்

(D) அலறும்

(E) விடை தெரியவில்லை

6. குட்டி, பிள்ளை, மடலி, வடலி ஆகிய சொற்கள் எதனைக் குறிக்கும்?

(A) தாவரங்களின் இளநிலை

(B) ஆண்களின் இளநிலை

(C) விலங்குகளின் இளநிலை

(D) பெண்களின் இளநிலை

(E) விடை தெரியவில்லை

7. இலஞ்சி, கூவல், புனற்குளம், குண்டம், ஊருணி ஆகிய சொற்கள் உணர்த்தும் பொருளைக் கண்டறிக.

(A) மலைகள்

(B) நீர்நிலைகள்

(C) ஊர்கள்

(D) விலங்குகள்

(E) விடை தெரியவில்லை

8. தில்லம், அழுவம், பதுக்கை, கணையம், அடவி எனும் சொற்கள் எதனைக் குறிக்கும் வேறு பெயர்கள்?

(A) காடு (B) மலை

(C) கடல் (D) ஆறு

(E) விடை தெரியவில்லை

9. அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்க :

(A) மட்டைக்கூடை, தட்டுக்கூடை, பூக்கூடை, பழக்கூடை

(B) பூக்கூடை, பழக்கூடை, மட்டைக்கூடை, தட்டுக்கூடை

(C) பழக்கூடை, தட்டுக்கூடை, மட்டைக்கூடை, பூக்கூடை

(D) தட்டுக்கூடை, பழக்கூடை, பூக்கூடை, மட்டைக்கூடை

(E) விடை தெரியவில்லை

10. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ் சொற்களைத் தெரிவு செய்க
மூன்று கோல்டு பிஸ்கட்டுகளில் ஒன்று எடை குறைவு.

(A) மூன்று கோல்டு பிஸ்கட்டுகளில் ஒன்று எடை குறைவு

(B) மூன்று தங்க பிஸ்கட்டுகளில் ஒன்று எடை குறைவு

(C) மூன்று தங்கக் கட்டிகளில் ஒன்று வெயிட் குறைவு

(D) மூன்று தங்கக் கட்டிகளில் ஒன்று எடை குறைவு

(E) விடை தெரியவில்லை

11. ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான பொருளைத் தெரிவு செய் :
அரி – அறி

(A) திருமால் – சிவன்

(B) சிவன் – திருமால்

(C) தெரிந்து – அறிந்து

(D) திருமால் – தெரிந்து கொள்

(E) விடை தெரியவில்லை

12. ஒலி மற்றும் பொருள் வேறுபாடு அறிந்து சரியான இணையைத் தேர்வு செய்க :

'கூரை – கூறை'

(A) கூரிய முனை – வீட்டின் கூரை

(B) கூட்டுப் பண்ணை – வீட்டின் கூரை

(C) வீட்டின் கூரை – புடவை

(D) புடவை – கூர்மையான ஆயுதம்

(E) விடை தெரியவில்லை

13. சரியான வாக்கிய அமைப்பினைக் கண்டறிக :

(A) போர்க் களத்தில் புண்பட்ட வீரர்களுக்கு கல்த்தில் நீர் தரப்பட்டது

(B) போர்க்கலத்தில் புன்பட்ட வீறர்களுக்கு களத்தில் நீர் தறப்பட்டது

(C) போர்க்களத்தில் புண்பட்ட வீறர்களுக்கு களத்தின் நீர் தரப்பட்டது

(D) போர்க்கலத்தில் புண்பட்ட வீறற்களுக்கு களத்தில் நீர் தரப்பட்டது

(E) விடை தெரியவில்லை

14. வேர்ச்சொல்லைக் கண்டறிக :

'விரித்த'

(A) விரித்து (B) விரி

(C) விர் (D) வீர்

(E) விடை தெரியவில்லை

15. வேர்ச்சொல்லைக் கண்டறிக – 'உரைத்தல்'

(A) உரைக்க (B) உரைத்து

(C) உரைத்த (D) உரை

(E) விடை தெரியவில்லை

16. கண்டான் – வேர்ச்சொல்லைக் கண்டறிக

(A) கண்
(B) காண்
(C) கண்ட
(D) கண்டு
(E) விடை தெரியவில்லை

17. வேர்ச் சொல்லைத் தேர்வு செய்தல் :

தேடுகிறான்

(A) தேடிய
(B) தேடு
(C) தேடினான்
(D) தேடி
(E) விடை தெரியவில்லை

18. 'அஞ்சி' என்ற வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயரைக் கண்டறிக

(A) அஞ்சினார்
(B) அஞ்சினர்
(C) பயந்தனர்
(D) அஞ்சா
(E) விடை தெரியவில்லை

19. 'வா' எனும் வேர்ச்சொல் கொண்டமையும் வினையாலணையும் பெயரைக் கண்டறிக.

(A) வந்தவர்
(B) வந்தான்
(C) வந்து
(D) வந்த
(E) விடை தெரியவில்லை

20. 'வாழ்' என்பதன் தொழிற்பெயரினைக் கண்டறிக

(A) வாழ்ந்தேன்
(B) வாழ்க்கை
(C) வாழ்ந்தவர்
(D) வாழ்ந்த
(E) விடை தெரியவில்லை

21. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல்லை எழுதுக :

'Courage'

(A) துணிவு
(B) தியாகம்
(C) நேர்மை
(D) சமத்துவம்
(E) விடை தெரியவில்லை

22. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல்லில் சரியான தொடரைக் காண்க :

(A) Paddy – நெற்பயிர்
(B) Cultivation – அறுவடை
(C) Harvest – களையெடுத்தல்
(D) Agronomy – வேளாண்மை
(E) விடை தெரியவில்லை

23. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல் கண்டறிக :

(A) Epic Literature – செவ்விலக்கியம்
(B) Folk Literature – வட்டார இலக்கியம்
(C) Devotional Literature – நவீன இலக்கியம்
(D) Ancient Literature – பண்டைய இலக்கியம்
(E) விடை தெரியவில்லை

24. பிரித்தெழுதுக :

கலனல்லால்

(A) கலன் + லல்லால்
(B) கலன் + அல்லால்
(C) கலம் + அல்லால்
(D) கலன் + னல்லால்
(E) விடை தெரியவில்லை

25. உவமைகளால் விளக்கப் பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெழுதுதல் :
விழலுக்கு இறைத்த நீர் போல

(A) ஒற்றுமையின்மை
(B) பயனற்ற செயல்
(C) தற்செயல் நிகழ்வு
(D) எதிர்பாரா நிகழ்வு
(E) விடை தெரியவில்லை

26. உவமையால் விளக்கப்பெறும் பொருளைத் தேர்ந்தெழுதுதல் :
திருவிழாவைக்காண மடை திறந்த வெள்ளம் போல மக்கள் வந்தனர்.

(A) தடையின்றி மிகுதியாக
(B) வெளிப்படைத்தன்மை
(C) பயனற்ற செயல்
(D) எதிர்பாரா நிகழ்வு
(E) விடை தெரியவில்லை

27. விடை வகைகள் :
"கடைக்குப் போவாயா" என்ற கேள்விக்குப் "போவேன்" என்று உடன்பட்டுக் கூறல்

(A) நேர்விடை
(B) இனமொழி விடை
(C) ஏவல் விடை
(D) சுட்டு விடை
(E) விடை தெரியவில்லை

28. விடை வகைகள் :
'உனக்கு ஆடத் தெரியுமா?' என்ற வினாவிற்கு 'எனக்குப் பாடத் தெரியும்' என உரைப்பது

(A) ஏவல் விடை
(B) உறுவது கூறல் விடை
(C) இனமொழி விடை
(D) மறை விடை
(E) விடை தெரியவில்லை

29. "நீ நடனமாடவில்லையா?" என்ற வினாவிற்குக் 'கால் வலிக்கும்' என்று உறுவதை உரைப்பது எவ்வகை விடை?

(A) உற்றது உரைத்தல் விடை
(B) இனமொழி விடை
(C) நேர் விடை
(D) உறுவது கூறல் விடை
(E) விடை தெரியவில்லை

30. ஒருமை, பன்மை பிழையற்ற தொடரைத் தெரிவு செய்க :

(A) அஃது அல்லவை
(B) அஃது அல்லன
(C) அஃது அல்ல
(D) அஃது அன்று
(E) விடை தெரியவில்லை

31. ஒருமை, பன்மை பிழையற்ற தொடரைத் தெரிவு செய்க :

(A) நான் நட்ட மரங்கள் அனைத்தும் வளர்ந்தது.
(B) நான் நட்ட மரங்கள் அனைத்தும் வளர்ந்தான்.
(C) நான் நட்ட மரங்கள் அனைத்தும் வளர்ந்தன.
(D) நான் நட்ட மரங்கள் அனைத்தும் வளர்கின்றது.
(E) விடை தெரியவில்லை

32. ஒருமை, பன்மை பிழை நீக்கி எழுதுக :

(A) கல்வி நிலையங்கள் காலந்தோறும் மாறி வருகின்றது.
(B) கல்வி நிலையங்கள் காலந்தோறும் மாறி வருகின்றன.
(C) கல்வி நிலையங்கள் காலந்தோறும் மாறி வருகிறது.
(D) கல்வி நிலையங்கள் காலந்தோறும் மாறி வந்துகொண்டிருக்கிறது.
(E) விடை தெரியவில்லை

33. சரியான தொடரைத் தேர்ந்தெடு :

(A) துன்பத்தின் பொறுத்துக் கொள்பவனே வெற்றி பெறுவான்.
(B) துன்பத்தை பொறுத்துக் கொள்பவனே வெற்றி பெறுவான்.
(C) துன்பத்தினால் பொறுத்துக் கொள்பவனே வெற்றி பெறுவான்.
(D) துன்பமே பொறுத்துக் கொள்பவனே வெற்றி பெறுவான்.
(E) விடை தெரியவில்லை

34. சொல் – பொருள் பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | கெடிகலங்கி | 1. | கூட்டம் |
| (b) | சேகரம் | 2. | மிகவருந்தி |
| (c) | வாகு | 3. | மிகவும் |
| (d) | மெத்த | 4. | சரியாக |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 2 | 4 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 4 | 1 | 3 | 2 |
| (D) | 2 | 4 | 1 | 3 |

(E) விடை தெரியவில்லை

35. சொல் – பொருள் பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | பொலம் | 1. | காடு |
| (b) | கடறு | 2. | குட்டி |
| (c) | கோடு | 3. | அழகு |
| (d) | குருளை | 4. | கொம்பு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 4 | 2 | 3 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 2 | 3 | 1 | 4 |
| (D) | 4 | 2 | 3 | 1 |

(E) விடை தெரியவில்லை

36. பொருத்தமான பொருளைத் தெரிவு செய்க :

'மூன்றினம்'

(A) துறை, தாழிசை, விருத்தம்
(B) அறம், பொருள், இன்பம்
(C) மா, பலா, வாழை
(D) ஆணவம், கன்மம், மாயை
(E) விடை தெரியவில்லை

37. 'பாசவர்' என்பதன் பொருள் என்ன?

(A) ஓவியர்
(B) எண்ணெய் விற்போர்
(C) வெற்றிலை விற்போர்
(D) நெய்பவர்
(E) விடை தெரியவில்லை

38. குறில் நெடில் மாற்றம். பொருள் வேறுபாடு அறிந்து சரியான விடையைத் தெரிவு செய் :

மடு, மாடு

(A) சுனை, குழி
(B) விலங்கு, பொய்கை
(C) பொய்கை, செல்வம்
(D) அணை, விலங்கு
(E) விடை தெரியவில்லை

39. கொடு, கோடு என்னும் சொற்களின் அடிப்படையில் தவறான பொருள்தரும் வாக்கியத்தினைக் கண்டறிக

(A) தரையில் கோடு
(B) சஞ்சனாவுக்கு பழம் கொடு
(C) தாமரைக்கு புத்தகம் கோடு
(D) பென்சிலைக் கொண்டு கோடிடு
(E) விடை தெரியவில்லை

40. 'மடி' எனும் சொல்லிற்கு இருபொருள் தரும் இணைகளில் சரியான இணையைக் கண்டறிக

(A) கூம்பல் – பசும்பல்

(B) சோம்பல் – மடித்தல்

(C) ஆம்பல் – புலம்பல்

(D) ஏசல் – வீசல்

(E) விடை தெரியவில்லை

41. 'இசை' என்பதன் இரு பொருள்களைக் கண்டறிக

(A) பாடல், புகழ்

(B) பாடல், பழி

(C) பழி, புகழ்

(D) தாளம், வசை

(E) விடை தெரியவில்லை

42. கீழ்க்காணும் சொல்லுக்கு இருபொருள் தருக

செப்புதல்

(A) பேசுதல், விளம்புதல்

(B) இயம்பல், நடித்தல்

(C) மொழி, உரைத்தல்

(D) கூறல், சிரித்தல்

(E) விடை தெரியவில்லை

43. ஒருத்தன் ஒண்டியாய்ப் போனால் அது ஊர்கோலமா?

சரியான எழுத்து வழக்கைக் கண்டறிக.

(A) ஒருவன் தனியாகப் போனால் அது ஊர்வலமா?

(B) ஒருத்தன் தனியாகப் போனால் அது ஊர்வலமா?

(C) ஒருவன் ஒண்டியாய்ப் போனால் அது ஊர்வலமா?

(D) ஒருத்தன் தனியாகப் போனால் அது ஊர்கோலமா?

(E) விடை தெரியவில்லை

44. ஒசரமா வளந்துட்டான் - என்பதற்கான சரியான எழுத்து வழக்கைக் கண்டறிக.

(A) உயரமாக வளர்ந்துவிட்டான் (B) உயரமாகி விட்டான்

(C) நெட்டையாக வளர்ந்துவிட்டான் (D) உசரமாகி விட்டான்

(E) விடை தெரியவில்லை

45. கீழ்க்கண்ட தொடர்களில் சரியான எழுத்து வழக்கைக் கண்டறிக.

(A) இப்ப எனக்குப் புரிஞ்சு போச்சு, நீயும் புரிஞ்சிக்கோ.

(B) இப்பொழுது எனக்குப் புரிந்துவிட்டது. நீயும் புரிந்து கொள்.

(C) இப்பொழுது எனக்குப் புரிந்தாயிற்று. நீயும் புரிஞ்சுக்கோ.

(D) இப்போது எனக்குப் புரிந்து விட்டது. நீயும் புரிந்து கொள்.

(E) விடை தெரியவில்லை

46. சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு.

சிலப்பதிகாரம் கூறும் மூன்று உண்மைகள்

(A) எது? (B) யாது?

(C) யாவை? (D) என்ன?

(E) விடை தெரியவில்லை

47. பொருத்தமான வினாச் சொல்லை தேர்ந்தெடு.

பாரதியார் படைத்த முப்பெருங்காப்பியங்கள் ———?

(A) யாவை (B) ஏன்

(C) எது (D) என்ன

(E) விடை தெரியவில்லை

48. சரியான வினாச் சொல்லை தேர்ந்தெடு.

நால்வகைப் படைகள் ———?

(A) யாவை?
(B) என்ன?
(C) ஏன்?
(D) எப்படி?
(E) விடை தெரியவில்லை

49. சரியான நிறுத்தற்குறியிடப்பட்டத் தொடரைக் கண்டறிக.

(A) 'சொல் கேட்கிறேன்' என்றான் கணியன்.
(B) 'சொல், கேட்கிறேன்' என்றான் கணியன்.
(C) "சொல் கேட்கிறேன்" என்றான் கணியன்.
(D) "சொல், கேட்கிறேன்" என்றான் கணியன்.
(E) விடை தெரியவில்லை

50. 'முத்தமிழ் இயல் இசை நாடகம்' என்பதற்கு பொருத்தமான நிறுத்தற்குறிகளை இட்டத் தொடரைக் கண்டறிக.

(A) முத்தமிழ் : இயல், இசை, நாடகம்.
(B) முத்தமிழ், இயல், இசை, நாடகம்.
(C) முத்தமிழ் – இயல், இசை, நாடகம்
(D) முத்தமிழ் : இயல் – இசை – நாடகம்.
(E) விடை தெரியவில்லை

51. இரு வினைகளின் பொருள் வேறுபாடு அறிக.

பழக்கலவை நிறைந்த ஜாடியில்

தண்ணீரை நிறைத்தனர்

(A) நிறைத்த, நிறைந்த
(B) நிரைத்த, நிரைந்த
(C) நிறைந்த, நிறைத்த
(D) நிரைந்த, நிரைத்த
(E) விடை தெரியவில்லை

52. சொற்களை ஒழுங்குப்படுத்தி சொற்றொடராக்குதல் :

(A) நாளை வருவார் தலைவர் குடியரசுத்.

(B) குடியரசுத் தலைவர் நாளை வருவார்.

(C) குடியரசுத் நாளை வருவார் தலைவர்.

(D) தலைவர் குடியரசு வருவார் நாளை.

(E) விடை தெரியவில்லை

53. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குதல்

ஆக்குவோம் இல்லாமை கல்லாமையை

(A) கல்லாமைய்யை இல்லாமை ஆக்குவோம்

(B) இல்லாமை ஆக்குவோம் கல்லாமையை

(C) கல்லாமையை ஆக்குவோம் இல்லாமை

(D) ஆக்குவோம் கல்லாமையை இல்லாமை

(E) விடை தெரியவில்லை

54. வாக்கிய அமைப்பினைக் கண்டறிக.

'கோவலன் கொலையுண்டான்'

(A) தன்வினை வாக்கியம்

(B) எதிர்மறை வாக்கியம்

(C) செயப்பாட்டுவினை வாக்கியம்

(D) செய்வினை வாக்கியம்

(E) விடை தெரியவில்லை

55. சரியான இணையைத் தேர்ந்தெடுக்க.

(I) அவன் திருந்தினான் – பிறவினைத் தொடர்

(II) பாட்டுப் பாடப்பட்டது – செய்வினைத் தொடர்

(III) பணம் காணாமல் போனது – செயப்பாட்டு வினைத் தொடர்

(IV) அப்துல் நேற்று வருவித்தான் – தன்வினைத் தொடர்

(A) (III) (B) (IV)

(C) (I) (D) (II)

(E) விடை தெரியவில்லை

56. அழைப்பு மணி ஒலித்ததால், கயல்விழி கதவைத் திறந்தார்

(A) கலவைத் தொடர் (B) தனித்தொடர்

(C) தொடர் சொற்றொடர் (D) செயப்பாட்டுவினைத் தொடர்

(E) விடை தெரியவில்லை

57. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுதல் – தன்வினை, பிறவினை, செய்வினை, செயப்பாட்டுவினை வாக்கியங்களைக் கண்டெழுதுதல்.

தன்வினை வாக்கியத்தை தேர்ந்தெடுக்க :

(A) பந்து உருண்டது (B) பந்து உருட்டப்பட்டது

(C) பந்து உருட்டினார் (D) பந்தால் உருட்டினார்

(E) விடை தெரியவில்லை

58. 'சிங்கம்' என்பதன் இளமைப் பெயர் எதுவெனக் கண்டறிக.

(A) குட்டி (B) குருளை

(C) கன்று (D) பறழ்

(E) விடை தெரியவில்லை

59. 'பால்' என்னும் சொல்லுக்கு பொருந்தி வரும் வினைமரபு எதுவெனக் கண்டறிக.

(A) குடித்தான் (B) பருகினான்

(C) விழுங்கினான் (D) சாப்பிட்டான்

(E) விடை தெரியவில்லை

60. பொருத்தமான இணைப்புச் சொல்லை தெரிவு செய்க.

முகில் பள்ளிக்குச் செல்லவில்லை. _____ அவனுக்கு உடல் நலமில்லை.

(A) அதனால் (B) இதனால்

(C) ஆகவே (D) ஏனெனில்

(E) விடை தெரியவில்லை

61. சரியான இணைப்புச்சொல் எழுதுக.

குயிலுக்குக் கூடு கட்டத் தெரியாது ———— காக்கையின் கூட்டில் முட்டையிடும்.

(A) அதனால் (B) ஏனெனில்

(C) மேலும் (D) அதுபோல

(E) விடை தெரியவில்லை

62. கலைச்சொல் அறிக :

Tropical zone

(A) குமிழிக்கல் (B) வெப்பமண்டலம்

(C) பாசனத்தொழில் நுட்பம் (D) நீர்மண்டலம்

(E) விடை தெரியவில்லை

63. சரியான கலைச்சொல்லால் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | Earthworm | 1. | உலகமயமாக்கல் |
| (b) | Materialism | 2. | கடவுச்சீட்டு |
| (c) | Passport | 3. | பொருள் முதல் வாதம் |
| (d) | Globalisation | 4. | நாங் கூழ்ப்புழு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 2 | 4 | 3 | 1 |
| (D) | 1 | 3 | 2 | 4 |

(E) விடை தெரியவில்லை

64. கலைச்சொல் தேர்க :

Lexicon

(A) உருபன்
(B) ஒலியன்
(C) ஒப்பிலக்கணம்
(D) பேரகராதி
(E) விடை தெரியவில்லை

65. சரியான கலைச்சொல்லைத் தேர்க :

Literacy

(A) பட்டம்
(B) நீதி
(C) கல்வியறிவு
(D) ஒழுக்கம்
(E) விடை தெரியவில்லை

66. பிழைத் திருத்துக.

சரியான எண்ணடையைத் தேர்வு செய்க:

(A) ஒரு அழகிய சிற்றூர்
(B) ஒன்று அழகிய சிற்றூர்
(C) ஓர் அழகிய சிற்றூர்
(D) ஒருமை அழகிய சிற்றூர்
(E) விடை தெரியவில்லை

67. பிழை திருத்துதல்.

சரியான எண்ணடையைத் தேர்ந்தெடு

(A) ஒரு ஏரி
(B) ஒன்று ஏரி
(C) ஒன்னு ஏரி
(D) ஓர் ஏரி
(E) விடை தெரியவில்லை

68. கீழ்காணும் தொடர்களில் [ஒரு - ஓர்] சரியாக அமைந்த தொடர் எது?

(A) ஓர் மண்தொட்டியில் பூக்கள் மலர்ந்திருக்கின்றன.
(B) ஒரு அழகிய மண்தொட்டியில் பூக்கள் மலர்ந்திருந்தன.
(C) ஓர் பசுமையான மண்தொட்டியில் பூக்கள் வாடியுள்ளன.
(D) ஒரு மண்தொட்டியில் பூக்கள் மலர்ந்திருக்கின்றன.
(E) விடை தெரியவில்லை

கீழ்க்கண்ட பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி (69 – 73) :

தென்றல் அசைந்து வரும் தென் தமிழ்நாட்டில் அமைந்த திருக்குற்றாலம், மலைவளம் படைத்த பழம் பதியாகும். அம்மலையிலே, கோங்கும் வேங்கையும் ஓங்கி வளரும். குரவமும் முல்லையும் நறுமணங் கமழும். கோலமாமயில் தோகை விரித்தாடும். தேனுண்ட வண்டுகள் தமிழ்ப் பாட்டிசைக்கும். அத்தகைய மலையின்று விரைந்து வழிந்து இறங்கும் வெள்ளருவி வட்டச் சுனையிலே வீழ்ந்து பொங்கும் பொழுது சிதறும் நீர்த்திவலைகள் பாலாவிபோற் பரந்து எழுந்து மஞ்சினோடு சேர்ந்து கொஞ்சிக் குலாவும். வேனிற் காலத்தில் திருக்குற்றால மலையில் வீசும் மெல்லிய பூங்காற்று மருந்துச் செடிகொடிகளின் நலங்களைக் கவர்ந்து வருதலால் நலிந்த உடலைத் தேற்றும் நன்மருந்தாகும்

69. தென் தமிழ் நாட்டில் மலைவளம் படைத்த பழம்பதி எது?

(A) திருக்கைலாயம் (B) திருக்குற்றாலம்

(C) திருத்தணி (D) திருநின்றவூர்

(E) விடை தெரியவில்லை

70. பத்தியில் இடம் பெற்றுள்ள மரங்களின் பெயர்களைக் கூறுக

(A) கோங்கு, வேங்கை (B) மா, பலா

(C) வேம்பு, சந்தனம் (D) தேக்கு, வாகை

(E) விடை தெரியவில்லை

71. தமிழ்ப் பாட்டிசைக்கும் உயிரினம் எது?

(A) குயில் (B) மயில்

(C) வண்டு (D) கிளி

(E) விடை தெரியவில்லை

72. அருவியினின்று சிதறும் நீர்த்திவலைகளுக்குக் கூறப்பட்ட உவமை யாது?

(A) நீராவி (B) பாலாவி

(C) வெள்ளாவி (D) மஞ்சாவி

(E) விடை தெரியவில்லை

73. பத்தியில் இடம்பெற்றுள்ள மலர்களின் பெயர்களைக் கூறுக

(A) சண்பகமும் ஐவ்வாதும்
(B) கமலமும் அல்லியும்
(C) மல்லிகையும் ரோஜாவும்
(D) குரவமும் முல்லையும்
(E) விடை தெரியவில்லை

74. சேர்த்தெழுதுக :

தமிழ் + எங்கள்

(A) தமிழங்கள்
(B) தமிழெங்கள்
(C) தமிழுங்கள்
(D) தமிழ் எங்கள்
(E) விடை தெரியவில்லை

75. பிரித்து எழுதுக :

விளங்காய்

(A) விளம் + காய்
(B) விள+ காய்
(C) விளங் + காய்
(D) விளங்ங் + காய்
(E) விடை தெரியவில்லை

76. சேர்த்து எழுதுக :

பனி + காற்று

(A) பனிகாற்று
(B) பனிக்காற்று
(C) பனிம்காற்று
(D) பனிங்காற்று
(E) விடை தெரியவில்லை

77. சொற்களின் கூட்டுப் பெயர்கள் - சரியானதைத் தேர்ந்தெடு - கரும்பு

(A) கரும்புக் கொல்லை
(B) கரும்புத் தோட்டம்
(C) கரும்புத் தோப்பு
(D) கரும்புக் கூட்டம்
(E) விடை தெரியவில்லை

78. கூற்று - சரியா? தவறா?

கூற்று 1 : கலிப்பா தூங்கல் ஓசை உடையது.

கூற்று 2 : கலித்தொகை கலிப்பாவால் ஆனது.

(A) கூற்று 1 - தவறு, 2 - மட்டும் சரி (B) கூற்று இரண்டும் தவறு

(C) கூற்று இரண்டும் சரி (D) கூற்று 1 மட்டும் சரி, 2 - தவறு

(E) விடை தெரியவில்லை

79. கூற்று - சரியா? தவறா?

1. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று மதுரைக் காஞ்சி
2. காஞ்சி என்றால் நிலைத்திருத்தல் என்பது பொருள்
3. இதைப் பெருகுவள மதுரைக்காஞ்சி என்பர்

(A) கூற்று 1,2 தவறு 3 மட்டும் சரி (B) கூற்று 1,3 சரி 2 மட்டும் தவறு

(C) கூற்று 1,2,3 சரி (D) கூற்று 1,2 சரி 3 மட்டும் தவறு

(E) விடை தெரியவில்லை

80. கூற்று [A] : கத்தியை தீட்டாதே உன்றன் புத்தியைத் தீட்டு. வன்முறை இருபக்கமும் கூர் உள்ள கத்தி ஆகும், என்பது அண்ணாவின் பொன்மொழி.

காரணம் [R] : 2010 ஆம் ஆண்டு அண்ணா நூற்றாண்டு நிறைவடைந்ததை நினைவுபடுத்தும் வண்ணம் தமிழ்நாடு அரசு அண்ணா நூற்றாண்டு நூலகத்தை உருவாக்கியது.

(A) கூற்று தவறு காரணம் தவறு (B) கூற்று சரி காரணம் சரி

(C) கூற்று தவறு காரணம் சரி (D) கூற்று சரி காரணம் தவறு

(E) விடை தெரியவில்லை

81. அடைப்புக்குள் உள்ள சொல்லை, ஔவையார் கூற்றுப்படி தகுந்த இடத்தில் சேர்க்க :
(இடம்)

(A) கற்றோர்க்கு சென்ற ———— எல்லாம் சிறப்பு

(B) உற்றோர்க்கு சென்ற ———— எல்லாம் சிறப்பு

(C) மற்றோர்க்கு சென்ற ———— எல்லாம் சிறப்பு

(D) ஏற்றோர்க்கு சென்ற ———— எல்லாம் சிறப்பு

(E) விடை தெரியவில்லை

82. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க :
(ஒரெழுத்து)

(A) தமிழில் நாற்பது ———— ஒரு மொழிகள் உள்ளன

(B) தமிழில் நாற்பத்து இரண்டு ———— ஒரு மொழிகள் உள்ளன

(C) தமிழில் நாற்பத்து மூன்று ———— ஒரு மொழிகள் உள்ளன

(D) தமிழில் நாற்பத்து ஒன்று ———— ஒரு மொழிகள் உள்ளன

(E) விடை தெரியவில்லை

83. பொருத்தமான நிகழ்காலச் சொல்லைத் தேர்ந்தெடுக்கவும் :
உலகில் மூவாயிரம் மொழிகள் ————

(A) பேசப்படும்

(B) பேசப்படுகின்றன

(C) பேசினர்

(D) பேசுவர்

(E) விடை தெரியவில்லை

84. பின்வருவனவற்றுள் நிகழ்கால இடைநிலைகள்

(A) த், ட், ற், இன்

(B) ப், வ்

(C) கிறு, கின்று, ஆநின்று

(D) ஆ, அல், இல்

(E) விடை தெரியவில்லை

85. இறந்த காலத்தைக் காட்டும் வாக்கியத்தைச் சுட்டுக

(A) நேற்று எங்கள் ஊரில் மழை பெய்யும்

(B) நாளை எங்கள் ஊரில் மழை பெய்தது

(C) நேற்று எங்கள் ஊரில் மழை பெய்தது

(D) நேற்று எங்கள் ஊரில் மழை பெய்கின்றது

(E) விடை தெரியவில்லை

86. ஏற்றம் - என்பதன் எதிர்ச்சொல்லை எழுதுக

(A) உயர்வு (B) ஏற்றுதல்

(C) மாற்றம் (D) இறக்கம்

(E) விடை தெரியவில்லை

87. பரிதி – என்பதன் எதிர்ச்சொல் எழுதுக

(A) சந்திரன் (B) கதிரவன்

(C) சூரியன் (D) வெய்யோன்

(E) விடை தெரியவில்லை

88. எதிர்ச்சொல் தருக :

இம்மை என்பதன் எதிர்ச்சொல்

(A) இருமை (B) மறுமை

(C) வறுமை (D) இல்லாமை

(E) விடை தெரியவில்லை

89. சரியான இணையை தேர்ந்தெடுக்க :

(A) சைதாப்பேட்டை - சைதா

(B) நாகப்பட்டினம் - நாகை

(C) மன்னார்குடி - மயிலை

(D) திருநெல்வேலி - திருநை

(E) விடை தெரியவில்லை

90. 'நாகப்பட்டினம்' என்னும் ஊரின் மரூஉ எதுவெனக் கண்டறிக

(A) நாகப்பட்டி (B) நாகை

(C) பட்டினம் (D) நாவை

(E) விடை தெரியவில்லை

91. "புரோட்டோகால்" – கலைச்சொல் அறிக

(A) செயல்திட்டம் (B) நிகழ்ச்சிநிரல்

(C) செயல்பாடுகள் (D) மரபுத்தகவு

(E) விடை தெரியவில்லை

92. Subsidy – நேரான தமிழ்ச்சொல் தருக

(A) நிழுவைத் தொகை (B) நல்கை

(C) கூட்டுத் தொகை (D) நல்ல தொகை

(E) விடை தெரியவில்லை

93. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடு :

"பயவாக் களரனையர் கல்லாதவர்"

(A) கல்லாதவர் யார்?
(B) கல்லாதவர் எதைப் போன்றவர்?
(C) களர்நிலம் என்றால் என்ன?
(D) கல்லாதவரின் நிலை யாது?
(E) விடை தெரியவில்லை

94. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடு :

"பெருஞ்சித்திரனார் 'பாவலரேறு' என அழைக்கப்படுகிறார்"

(A) பெருஞ்சித்திரனார் ஏன் பாவலரேறு என அழைக்கப்படுகிறார்?
(B) பாவலரேறு எவ்வாறு அழைக்கப்படுகிறார்?
(C) பெருஞ்சித்திரனார் பாவலரேறு என அழைக்கப்படுகிறாரா?
(D) பெருஞ்சித்திரனார் எவ்வாறு அழைக்கப்படுகிறார்?
(E) விடை தெரியவில்லை

95. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுத்து எழுதுக :

தூங்கல் ஓசை வஞ்சிப்பாவுக்கு உரியது

(A) வஞ்சிப்பாவுக்கு உரிய ஓசை எது?
(B) வஞ்சிப்பாவுக்கு உரிய ஓசை என்ன?
(C) தூங்கல் ஓசை எப்படி வஞ்சிப்பாவுக்கு உரியது?
(D) ஏன் வஞ்சிப்பாவுக்கு உரிய ஓசை தூங்கல் ஓசை?
(E) விடை தெரியவில்லை

96. தவறான இணையைத் தேர்க :

I. உத்தியோகம் – அலுவல்

II. காரியதரிசி – தலைவர்

III. நிபுணர் – வல்லுநர்

IV. அங்கத்தினர் – உறுப்பினர்

(A) III (B) II

(C) IV (D) I

(E) விடை தெரியவில்லை

97. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | கரன்சி நோட் | 1. | மின்னணு வணிகம் |
| (b) | செக் | 2. | வரைவோலை |
| (c) | ஈ காமர்ஸ் | 3. | பணத்தாள் |
| (d) | டிமாண்ட் டிராஃப்ட் | 4. | காசோலை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 2 | 1 | 4 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 2 | 4 | 3 | 1 |

(E) விடை தெரியவில்லை

98. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைக் கண்டறிதல் :
சரியான இணையைத் தேர்ந்தெடு

(A) டென்ஷன் - மனவருத்தம்

(B) டென்ஷன் - மனமாற்றம்

(C) டென்ஷன் - மனமகிழ்ச்சி

(D) டென்ஷன் - மன அழுத்தம்

(E) விடை தெரியவில்லை

99. பிழையான வாக்கியத்தைக் கண்டறிக :

I. வெள்ளம் அடித்துவந்த மணல் குவிந்தது

II. கையில் காசு சேர்ந்தது

III. ஆசிரியர் சொல்லுக்கு மாணவர்கள் பணிந்தனர்

IV. பூவின் இதழ்கள் விரித்தன

(A) I (B) IV

(C) III (D) II

(E) விடை தெரியவில்லை

100. சேர்ந்து - சேர்த்து - பொருள் வேறுபாடறிந்து, தவறான வாக்கியத்தைச் சுட்டுக

(A) ஊருக்கு போய்ச் சேர்ந்தேன் (B) அவன் பணம் சேர்த்தான்

(C) சங்கவை கல்லூரியில் சேர்ந்தாள் (D) இராமுவைப் பள்ளியில் சேர்ந்தனர்

(E) விடை தெரியவில்லை

COMBINED RESEARCH ASSISTANT IN VARIOUS SUBORDINATE SERVICES EXAMINATION-2023

COMPUTER BASED TEST

# PAPER – II

## COMPUSLORY TAMIL ELIGIBILITY TEST WITH GENERAL STUDIES

## பகுதி-அ (தமிழ் தகுதி தேர்வு)

## Part-A (Tamil Eligibility Test)

**வினாக்கள் : 1–100** **மொத்த மதிப்பெண்கள் : 150**

**Questions : 1–100** **Total Marks : 150**

---

1. "இங்கு நகரப் பேருந்து நிற்குமா?" என்ற வழிப்போக்கனின் வினாவுக்கு "அதோ, அங்கு நிற்கும்" என்று விடையளிப்பது

(A) நேர் விடை (B) ஏவல் விடை

(C) சுட்டு விடை (D) மறை விடை

(E) விடை தெரியவில்லை

2. சரியான விடை வகையை தெரிவு செய்க.

"உனக்குக் கதை எழுதத் தெரியுமா?" என்ற வினாவிற்குக் "கட்டுரை எழுதத் தெரியும்" என்று கூறுவது

(A) நேர்விடை (B) ஏவல் விடை

(C) இனமொழி விடை (D) மறைவிடை

(E) விடை தெரியவில்லை

3. எவ்வகை வினா என்பதை எழுதுக.

ஆசிரியரிடம், 'இந்தக் கவிதையின் பொருள் யாது?' என்று மாணவர் கேட்டல்.

(A) அறி வினா (B) ஐய வினா

(C) அறியா வினா (D) கொளல் வினா

(E) விடை தெரியவில்லை

4. அலுவல் சார்ந்த கலைச்சொற்களுக்குத் தமிழாக்கம் அறிக.

டெலிகேட் :

(A) செயலர்
(B) மேலாளர்
(C) பேராளர்
(D) வடிவமைப்பு
(E) விடை தெரியவில்லை

5. சரியான கலைச்சொல்லால் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | அகழாய்வு | (1) | Epigraphy |
| (b) | கல்வெட்டியல் | (2) | Inscription |
| (c) | .பொறிப்பு | (3) | Embrossed sculpture |
| (d) | புடைப்புச் சிற்பம் | (4) | Excavation |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 2 | 1 | 4 | 3 |
| (D) | 4 | 2 | 1 | 3 |

(E) விடை தெரியவில்லை

6. 'MEDIA' - என்பதற்கு இணையான கலைச்சொல் தருக.

(A) இதழியல்
(B) ஊடகம்
(C) உரையாடல்
(D) பொம்மலாட்டம்
(E) விடை தெரியவில்லை

7. உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெழுதுதல்.

"நெல்லிக்காய் மூட்டையைக் கொட்டினாற் போல"

(A) பயனற்ற செயல்
(B) தற்செயல் நிகழ்வு
(C) ஒற்றுமையின்மை
(D) வெளிப்படைத் தன்மை
(E) விடை தெரியவில்லை

8. பின்வரும் மரபுத் தொடரைப் பொருளோடு பொருத்துக.

'கல்லில் நார் உரித்தல்'

(A) ஆராய்ந்து பார்த்துச் செய்தல்
(B) இயலாத செயல்
(C) நீண்டகாலமாக இருப்பது
(D) விரைந்து வெளியேறுதல்
(E) விடை தெரியவில்லை

9. கிணறு வெட்டப் பூதம் கிளம்பியது போல - இந்த உவமையின் பொருளைத் தேர்க.

(A) தற்செயல் நிகழ்வு
(B) தடையின்றி மிகுதியாக
(C) அவசரகுடுக்கை
(D) எதிர்பாரா நிகழ்வு
(E) விடை தெரியவில்லை

10. தந்தை மகனை நன்றாகப் படிக்க வைத்தார் - எவ்வகை வாக்கியம் எனக் கண்டறிக.

(A) தன்வினை
(B) பிறவினை
(C) செய்வினை
(D) செயப்பாட்டு வினை
(E) விடை தெரியவில்லை

11. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுக.

"அவர்கள் நன்றாகப் படித்தனர்."

(A) பிறவினை (B) தன்வினை

(C) எதிர்மறைவினை (D) செயப்பாட்டு வினை

(E) விடை தெரியவில்லை

12. தொடர்வகை அறிந்து சரியான விடையைத் தேர்க.

நேற்று நம் ஊரில் மழைபெய்ததா?

(A) விழைவுத் தொடர் (B) விளித் தொடர்

(C) வினாத் தொடர் (D) செய்தித் தொடர்

(E) விடை தெரியவில்லை

13. விடைக்கேற்ற வினாவைத் தேர்க.

எல்லா உயிர்கள் மீதும் இரக்கம் கொள்பவரே நேர்மையான வாழ்வு வாழ்பவர் ஆவார்.

(A) எல்லா உயிர்கள் மீதும் இரக்கம் கொள்ள வேண்டுமா?

(B) எது எல்லா உயிர்கள் மீதும் இரக்கம் கொள்ளும்?

(C) நேர்மையான வாழ்வு வாழ்பவர் யார்?

(D) நேர்மையான வாழ்வு வாழாதவர் யார்?

(E) விடை தெரியவில்லை

14. விடைக்கேற்ற வினாவை தெரிவு செய்க.

விடை : எறும்பு உயிர்பிழைக்கப் பாடுபடுகிறது.

(A) எறும்பு எப்படி பாடுபடுகிறது? (B) எறும்பு எதனால் பாடுபடுகிறது?

(C) எறும்பு யாருக்குப் பாடுபடுகிறது? (D) எறும்பு எதற்காகப் பாடுபடுகிறது?

(E) விடை தெரியவில்லை

15. 'இன்னோசை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

(A) இன் + ஓசை

(B) இனி + ஓசை

(C) இனிமை + ஓசை

(D) இன் + னோசை

(E) விடை தெரியவில்லை

16. பொருந்திய இணைகளைத் தேர்க.

(பொருந்து – பொருத்து)

I. மின்விசையைப் – பொருந்து

II. நல்லாரோடு – பொருந்து

III. பொருளோடு – பொருத்து

IV. தீயவரைப் – பொருத்து

(A) I மற்றும் II சரி

(B) II மற்றும் III சரி

(C) III மற்றும் IV சரி

(D) I மற்றும் IV சரி

(E) விடை தெரியவில்லை

17. சரியான தொடரைத் தேர்ந்தெடுக்க.

(A) வண்மை யின்மையால் வறுமையில்லையோர்.

(B) வறுமை இல்லையோர் வண்மையின்மையால்.

(C) வண்மை யில்லையோர் வறுமையின்மையால்.

(D) வறுமை இன்மையால் வண்மை இல்லையோர்.

(E) விடை தெரியவில்லை

18. சொற்களை ஒழுங்குப்படுத்திச் சரியான தொடரைத் தேர்க.

(A) தமிழரின் விளையாட்டு நாகரிகத்தை உணர்த்தும் ஏறுதழுவுதல்.

(B) ஏறுதழுவுதல் உணர்த்தும் தமிழரின் நாகரிகத்தை விளையாட்டு.

(C) ஏறுதழுவுதல் தமிழரின் நாகரிகத்தை உணர்த்தும் விளையாட்டு

(D) தமிழரின் நாகரிகத்தை விளையாட்டு ஏறுதழுவுதல் உணர்த்தும்

(E) விடை தெரியவில்லை

19. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குக.

உலகிலுள்ள மனிதப்பிறவி தனித்தன்மை உயிரினங்களுள் உடையது.

(A) தனித்தன்மை மனிதப்பிறவி உடையது உலகிலுள்ள உயிரினங்களுள்.

(B) உலகிலுள்ள உயிரினங்களுள் உடையது தனித்தன்மை மனிதப் பிறவி.

(C) மனிதப் பிறவி தனித்தன்மை உயிரினங்களுள் உலகிலுள்ள உடையது.

(D) உலகிலுள்ள உயிரினங்களுள் மனிதப்பிறவி தனித்தன்மை உடையது.

(E) விடை தெரியவில்லை

20. பின்வரும் சொற்களை அகர வரிசைப்படுத்துக.

சங்கு, நுங்கு, பிஞ்சு, வஞ்சம், பட்டணம், சுண்டல், வண்டி

(A) சங்கு, சுண்டல், நுங்கு, பட்டணம், பிஞ்சு, வஞ்சம், வண்டி

(B) சங்கு, சுண்டல், நுங்கு, பட்டணம், பிஞ்சு, வண்டி, வஞ்சம்

(C) சங்கு, சுண்டல், நுங்கு, பிஞ்சு, பட்டணம், வண்டி, வஞ்சம்

(D) சங்கு, சுண்டல், பிஞ்சு, நுங்கு, பட்டணம், வஞ்சம், வண்டி

(E) விடை தெரியவில்லை

21. கீழ்க்கண்ட சொற்களை அகரவரிசைப்படி சீர் செய்க.

வா, தேன், மலர், பை, நூல்.

(A) நூல், தேன், மலர், பை, வா

(B) தேன், நூல், மலர், வா, பை

(C) நூல், மலர், பை, வா, தேன்

(D) தேன், நூல், பை, மலர், வா

(E) விடை தெரியவில்லை

22. 'பிடி' - என்ற சொல்லின் வினையெச்சம் கண்டறிக.

(A) பிடித்தாள்

(B) பிடித்து

(C) பிடித்த

(D) பிடித்தல்

(E) விடை தெரியவில்லை

23. "நட" என்னும் வேர்ச் சொல்லின் வினைமுற்று அறிக.

(A) நடந்த

(B) நடந்து

(C) நடத்தல்

(D) நடக்கிறது

(E) விடை தெரியவில்லை

24. 'வா' - என்ற சொல்லுக்குரிய பெயரெச்சத்தை கண்டறிக.

(A) வருதல்
(B) வந்தான்
(C) வந்த
(D) வந்து
(E) விடை தெரியவில்லை

25. "அறைந்தனன்" வேர்ச்சொல்லைத் தருக.

(A) அறை
(B) அறைந்து
(C) அறைந்த
(D) அறைதல்
(E) விடை தெரியவில்லை

26. வேர்ச்சொல்லைக் கண்டறிதல்.

கேட்டார்

(A) கேல்
(B) கேழ்
(C) கேட்டு
(D) கேள்
(E) விடை தெரியவில்லை

27. 'பேசினாள்' - இதன் வேர்ச்சொல்லை அறிக.

(A) பேசி
(B) பேசிய
(C) பேசு
(D) பேசியது
(E) விடை தெரியவில்லை

28. 'இது செய்வாயா?' என்று வினவியபோது, "நீயே செய்" என்று கூறுவது, _____ விடை ஆகும்.

(A) நேர் விடை
(B) ஏவல் விடை
(C) உறுவது கூறல் விடை
(D) சுட்டு விடை
(E) விடை தெரியவில்லை

29. தானியங்களைக் குறிக்கும் சொல் அல்லாதது

(A) கூலம் (B) பயறு

(C) முதிரை (D) சிவியல்

(E) விடை தெரியவில்லை

30. ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான இணையைத் தெரிவு செய்க.

புல் – புள்

(A) புல் தரை – ஓரறிவு தாவரம் (B) ஓரறிவு தாவரம் – பறவை

(C) பறவை – புண் (D) அசை – பறவை

(E) விடை தெரியவில்லை

31. ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க.

குழை - குலை

(A) குண்டலம் – காது

(B) குண்டலம் – கொத்து

(C) காது – குண்டலம்

(D) கொத்து – குண்டலம்

(E) விடை தெரியவில்லை

32. ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான தொடரைத் தெரிவு செய்க.

(A) தேற்த் திருவிளாவிற்குச் சென்றணர்.

(B) தேர்த் திருவிழாவிற்குச் செண்றனர்.

(C) தேர்த் திறுவிழாவிற்குச் சென்றனர்.

(D) தேர்த் திருவிழாவிற்குச் சென்றனர்

(E) விடை தெரியவில்லை

33. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல் அமைந்த இணை எது?

(A) டெபிட்கார்டு – பற்று அட்டை

(B) கிரெடிட் கார்டு – வரைவோலை

(C) செக் – பணத்தாள்

(D) டிமாண்ட் டிராஃப்ட் – கடன் அட்டை

(E) விடை தெரியவில்லை

34. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல் அறிதல்.

RATIONAL

(A) சீர்திருத்தம்

(B) பகுத்தறிவு

(C) தத்துவம்

(D) ஞானி

(E) விடை தெரியவில்லை

35. Consonant – சரியான தமிழ்ச் சொல்லை எடுத்தெழுதுக.

(A) உயிரொலி

(B) மூக்கொலி

(C) மெய்யொலி

(D) சித்திர எழுத்து

(E) விடை தெரியவில்லை

36. பிறமொழி கலவாத தொடரை எடுத்து எழுதுக.

(A) இன்று ரோபோ பல்வேறு துறைகளிலும் பயன்பாட்டிற்கு வந்துள்ளது.

(B) அதிகாலை விழித்தெழுதல் நல்லது.

(C) கம்பியூட்டர் காலம் இது.

(D) காலிங்பெல்லை அழுத்துங்கள்.

(E) விடை தெரியவில்லை

37. வழுவுச் சொற்களை நீக்கி எழுதுதல்.

கோளிமுட்டை தாவாரத்தில் உருண்டது.

(A) கோலிமுட்டை தாவாரத்தில் உருண்டது.

(B) கோளிமுட்டை தாவாரத்தில் உருண்டது.

(C) கோழிமுட்டை தாவாரத்தில் உருண்டது.

(D) கோழிமுட்டை தாழ்வாரத்தில் உருண்டது.

(E) விடை தெரியவில்லை

38. மரபுப் பிழைகள் (வினை மரபு)

சோறு . . . .

(A) தின்

(B) பருகு

(C) குடி

(D) உண்

(E) விடை தெரியவில்லை

39. பொருந்தாச் சொல்லைக் கண்டறிதல்.

கண்ணதாசன்

(A) ஏசுகாவியம்

(B) மாங்கனி

(C) ஆட்டனத்தி ஆதிமந்தி

(D) வீரத்தாய்

(E) விடை தெரியவில்லை

40. பண்புத் தொகை அல்லாத சொல் தேர்க.

(A) நன்னுதல்

(B) மூதூர்

(C) கொடுஞ்செலவு

(D) கண்ணுதல்

(E) விடை தெரியவில்லை

41. கீழ்க்கண்டவற்றுள் வேற்றுமை உருபுகள் அடிப்படையில் பொருந்தாதவற்றைக் கண்டறிக.

ஐ, ஆல், உறு, கு

(A) கு
(B) ஐ
(C) உறு
(D) ஆல்
(E) விடை தெரியவில்லை

42. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக.

(A) பாயிரவியல்
(B) இல்லறவியல்
(C) குடிமையியல்
(D) துறவறவியல்
(E) விடை தெரியவில்லை

43. எதிர்ச்சொல்லைத் தேர்ந்தெடுத்தெழுதுதல்.

கல்லுண்டு

(A) கள்ளுண்டு
(B) கள்ளில்லை
(C) கல்லில்லை
(D) கல்லிலை
(E) விடை தெரியவில்லை

44. எதிர்ச் சொல்லை எடுத்தெழுதுதல்

இருநிலம் - எதிர்ச்சொல் தருக.

(A) பெரிய நிலம்
(B) அகன்ற நிலம்
(C) பரந்த நிலம்
(D) சிறிய நிலம்
(E) விடை தெரியவில்லை

45. சோம்பல் – என்ற சொல்லுக்குரிய பொருத்தமான எதிர்ச்சொல்லை எழுதுக.

(A) அழிவு (B) துன்பம்

(C) சோகம் (D) சுறுசுறுப்பு

(E) விடை தெரியவில்லை

46. இன்பு + உருகு – என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்

(A) இன்புஉருகு (B) இன்பும்உருகு

(C) இன்புருகு (D) இன்பருகு

(E) விடை தெரியவில்லை

47. சேர்த்து எழுதுக : ஓடை + எல்லாம்

(A) ஓடை எல்லாம் (B) ஓடையெல்லாம்

(C) ஓட்டையெல்லாம் (D) ஓடெல்லாம்

(E) விடை தெரியவில்லை

48. சேர்த்தெழுதுக :

கால் + இறங்கி

(A) கால்லிறங்கி (B) காலிறங்கி

(C) கால்இறங்கி (D) கால்றங்கி

(E) விடை தெரியவில்லை

கீழ்க்கண்ட பத்தியினைப் படித்து வினாவிற்கான சரியான விடையை தேர்ந்தெடு :

விக்ரம் சாராபாய் 'இந்திய விண்வெளித்திட்டத்தின் தந்தை' என்று அழைக்கப்படுகிறார். ஆரியபட்டா என்ற முதல் செயற்கைக்கோள் ஏவுதலுக்குக் காரணமானவர். செயற்கைகோள் உதவியுடன் தொலைக்காட்சி வழியாக 24000 இந்திய கிராமங்களில் உள்ள ஐம்பது இலட்சம் மக்களுக்குக் கல்வியை எடுத்துச் செல்ல உதவினார். இவரின் பெயரால் 'விக்ரம் சாராபாய் விண்வெளி மையம்' திருவனந்தபுரத்தில் செயல்பட்டு வருகிறது. இவருடைய முயற்சியால் தான் 'இஸ்ரோ' தொடங்கப்பட்டது. டாக்டர். அப்துல்கலாம் 11-வது குடியரசுத் தலைவராகப் பணியாற்றிய இந்திய அறிவியலாளர்; தமிழ்நாட்டின் இராமேசுவரத்தைச் சேர்ந்தவர். ஏவுகணை, ஏவுகணை ஏவு ஊர்தித் தொழில்நுட்ப வளர்ச்சியில் கலாம் காட்டிய ஈடுபாட்டினால் இவர் 'இந்திய ஏவுகணை நாயகன்' என்று போற்றப்படுகின்றார். இந்தியாவின் உயரிய விருதான பாரதரத்னா விருது பெற்றவர். இவர் தம் பள்ளிக் கல்வியை தமிழ்வழியில் கற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

49. 'விக்ரம் சாராபாய் விண்வெளி மையம்' எங்கு செயல்பட்டு வருகிறது?

(A) பெங்களூரு
(B) ஐதராபாத்
(C) திருவனந்தபுரம்
(D) ஸ்ரீஹரிக்கோட்டா
(E) விடை தெரியவில்லை

50. 'இந்திய விண்வெளித்திட்டத்தின் தந்தை' என்று அழைக்கப்படுபவர் யார்?

(A) அப்துல் கலாம்
(B) விக்ரம் சாராபாய்
(C) மயில்சாமி அண்ணாதுரை
(D) சிவன்
(E) விடை தெரியவில்லை

51. இந்தியாவின் 11-வது குடியரசு தலைவராக பணியாற்றிய இந்திய அறிவியலாளர் யார்?

(A) விக்ரம் சாராபாய்
(B) அப்துல்கலாம்
(C) டாக்டர் முத்துலட்சுமி
(D) கல்பனா சாவ்லா
(E) விடை தெரியவில்லை

52. இந்திய ஏவுகணை நாயகன் தம் பள்ளிக்கல்வியை எவ்வழியில் படித்தார்?

(A) ஆங்கிலம்
(B) தமிழ்
(C) ஜெர்மன்
(D) இந்தி
(E) விடை தெரியவில்லை

53. விக்ரம் சாராபாய் ஏவிய செயற்கைகோள் எதற்கு பயன்பட்டது?

(A) கல்வி
(B) வானவியல்
(C) தட்பவெப்பம்
(D) புவியியல் வரைபடம்
(E) விடை தெரியவில்லை

54. ஒருமை, பன்மை பிழை அறிந்து சரியான தொடரைத் தேர்ந்தெடுக்க.

(A) உயர்ந்தோர் தன்னைத்தானே புகழ்ந்து கொள்ளமாட்டார்கள்.
(B) சிறுவன் தமது கையில் புத்தகம் வைத்திருந்தான்
(C) நாய் தனது தலையை ஆட்டியது.
(D) குழந்தைகள் தன்னால் இயன்ற உதவிகளைப் பிறருக்கு செய்கின்றனர்.
(E) விடை தெரியவில்லை

55. ஒருமைப் பன்மைப் பிழையற்ற தொடர் எது?

(A) மாங்காய்கள் மட்டுமே வடுப்படுகிறது
(B) மாங்காய்கள் மட்டுமே வடுப்படுகின்றன
(C) மாங்காய் மட்டுமே வடுப்படுகின்றன
(D) மாங்காய்கள் மட்டுமே வடுவாகிறது
(E) விடை தெரியவில்லை

56. ஒருமைப் பன்மைப் பிழையற்ற தொடரைத் தேர்ந்தெடுக்க.

(A) நான் பாடத்தைப் படித்தேன்
(B) நாம் பாடத்தைப் படித்தேன்
(C) நாங்கள் பாடத்தைப் படித்தான்
(D) நான் பாடத்தைப் படித்தான்
(E) விடை தெரியவில்லை

57. சொல்-பொருள்-பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| (a) | மருப்பு | (1) | தேங்காய் |
| (b) | மடுத்து | (2) | பலாப்பழம் |
| (c) | வருக்கை | (3) | பாய்ந்து |
| (d) | தெங்கு | (4) | கொம்பு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 4 | 1 | 2 | 3 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 1 | 4 | 3 | 2 |

(E) விடை தெரியவில்லை

58. சரியான பொருள்தரும் இணையைத் தேர்க

| | | | |
|---|---|---|---|
| (A) | பொக்கிஷம் | — | செல்வம் |
| (B) | சாஸ்தி | — | பெரும் பரப்பு |
| (C) | விஸ்தாரம் | — | அழகு |
| (D) | சிங்காரம் | — | மிகுதி |

(E) விடை தெரியவில்லை

59. சொல்-பொருள்-பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| (a) | நவிலல் | (1) | உலகம் |
| (b) | வையகம் | (2) | நெருப்பு |
| (c) | இயற்றுக | (3) | சொல்லல் |
| (d) | தணல் | (4) | செய்க |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 1 | 3 | 4 | 2 |
| (C) | 4 | 1 | 2 | 3 |
| (D) | 3 | 1 | 4 | 2 |

(E) விடை தெரியவில்லை

60. கீழ்காணும் தொடரில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக

ஒரு அழகிய சிற்றூரில் ஓர் குளம் இருந்தது.

(A) அது அழகிய சிற்றூரில் ஓர் குளம் இருந்தது

(B) ஓர் அழகிய சிற்றூரில் ஒரு குளம் இருந்தது

(C) அழகிய சிற்றூரில் ஓர் குளம் இருந்தது

(D) அது அழகிய சிற்றூரில் ஒரு குளம் இருந்தது

(E) விடை தெரியவில்லை

61. பிழை திருத்துதல் (ஒரு - ஓர்)

கீழ்க்காணும் தொடர்களில் ஒரு-ஓர் சரியாக அமைந்த தொடர் எது?

(A) குறுந்தொகை ஒரு அக இலக்கிய நூலாகும்; ஒரு பாடல் மனிதத்தை உணர்த்துகிறது

(B) குறுந்தொகை ஓர் அக இலக்கிய நூலாகும்; ஓர் பாடல் மனிதத்தை உணர்த்துகிறது

(C) குறுந்தொகை ஒரு அக இலக்கிய நூலாகும்; ஓர் பாடல் மனிதத்தை உணர்த்துகிறது

(D) குறுந்தொகை ஓர் அக இலக்கிய நூலாகும்; ஒரு பாடல் மனிதத்தை உணர்த்துகிறது

(E) விடை தெரியவில்லை

62. சரியான தொடரைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

(A) ஒரு ஊரில் ஒரு அரசன் இருந்தான்

(B) ஓர் ஊரில் ஒரு அரசன் இருந்தான்

(C) ஓர் ஊரில் ஓர் அரசன் இருந்தான்

(D) ஒரு ஊரில் ஓர் அரசன் இருந்தான்

(E) விடை தெரியவில்லை

63. பின்வருவனவற்றுள் சரியான தொடரைத் தேர்ந்தெடு

(A) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு

(B) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு

(C) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு

(D) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு

(E) விடை தெரியவில்லை

64. உள்ளே பேசிக்கொண்டிருப்பவர் யார்? – இது எவ்வகைத் தொடர்

(A) உணர்ச்சித் தொடர்

(B) கட்டளைத் தொடர்

(C) செய்தித் தொடர்

(D) வினாத் தொடர்

(E) விடை தெரியவில்லை

65. கொடுக்கப்பட்டுள்ள சொல்லின் சரியான கூட்டுப் பெயரை தெரிவு செய்க.

கரும்பு

(A) கரும்புக் காடு

(B) கரும்புத் தோட்டம்

(C) கரும்புத் தோப்பு

(D) கரும்பு குவியல்

(E) விடை தெரியவில்லை

66. பொருத்தமானத் தொடரை எழுதுக

ஜெயகாந்தனின் "இமயத்துக்கு அப்பால்" என்ற நூல் பெற்ற விருது

(A) ஞானபீட விருது
(B) தாமரைத்திரு விருது
(C) சோவியத் நாட்டு விருது
(D) சாகித்யா அகாதமி விருது
(E) விடை தெரியவில்லை

67. பொருத்தமான பொருளைத் தெரிவுசெய்க.

"தேவதுந்துபி" என்றழைக்கப்படும் இசைக் கருவியின் வேறு பெயர்?

(A) நாகசுரம்
(B) உறுமி
(C) சலங்கை
(D) வீணை
(E) விடை தெரியவில்லை

68. சொற்பொழிவாற்றுவது போன்ற ஓசை

(A) அகவலோசை
(B) செப்பலோசை
(C) துள்ளலோசை
(D) தூங்கலோசை
(E) விடை தெரியவில்லை

69. பராபரமே என்பதன் பொருள்

(A) மேலான பொருளே
(B) முத்தி
(C) எங்கும் நிறைந்த
(D) இறைநிலை
(E) விடை தெரியவில்லை

70. கலைச்சொல் அறிதல்

MISSILE

(A) வானூர்தி
(B) ஏவு ஊர்தி
(C) ஏவுகணை
(D) எழுத்தாணி
(E) விடை தெரியவில்லை

71. பின்வரும் கலைச்சொல்லின் பொருளறிந்து சரியான விடையைத் தேர்க.

Infrared rays

(A) அகச்சிவப்புக் கதிர்கள் (B) புறஊதாக் கதிர்கள்

(C) விண்வெளிக் கதிர்கள் (D) ஊடுகதிர்கள்

(E) விடை தெரியவில்லை

72. கூற்றும், காரணமும் - சரியா? தவறா?

கூற்று : குயில் கத்தும் என்பது மரபு வழு ஆகும்.

காரணம் : குயில் கூவும் என்பதே மரபு

(A) கூற்று : தவறு ; காரணம் : சரி (B) கூற்று : சரி ; காரணம் : சரி

(C) கூற்று : சரி ; காரணம் : தவறு (D) கூற்று : தவறு ; காரணம் : தவறு

(E) விடை தெரியவில்லை

73. கூற்றும், காரணமும் - சரியா? தவறா?

கூற்று : மதுரை சென்றார் – வேற்றுமைத் தொகை

காரணம் : 'கு' என்னும் வேற்றுமை உருபு இல்லை

(A) கூற்றும் காரணமும் சரி (B) கூற்று சரி காரணம் தவறு

(C) கூற்று தவறு காரணம் சரி (D) கூற்றும் காரணமும் தவறு

(E) விடை தெரியவில்லை

74. கூற்றும், காரணமும் - சரியா? தவறா?

கூற்று : இறைவன் கடம்பவனக் கோவிலை விட்டு நீங்கினார்

காரணம் : மன்னன் இடைக்காடனாரை அவமதித்தான்

(A) கூற்று, காரணம் இரண்டும் தவறு (B) காரணம் மட்டும் சரி; கூற்று தவறு

(C) கூற்று, காரணம் இரண்டும் சரி (D) கூற்று மட்டும் சரி; காரணம் தவறு

(E) விடை தெரியவில்லை

75. இரு பொருள் தருக:

நகை

(A) நதி, எண்

(B) புன்னகை, ஆபரணம்

(C) ஓடுதல், மேற்கூரை

(D) நிலவு, மாதம்

(E) விடை தெரியவில்லை

76. இருபொருள் தருக:

திங்கள்

(A) நாள், ஆண்டு

(B) மாதம், நிலவு

(C) வறுமை,.நோய்

(D) கிழமை,. துன்பம்

(E) விடை தெரியவில்லை

77. இருபொருள் தரும் தவறான இணையைத் தேர்ந்தெடு.

(A) இடர், துன்பம்

(B) நெறி, வழி

(C) பொன்னகை, அணிகலன்

(D) வாயு, நெருப்பு

(E) விடை தெரியவில்லை

78. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க (கல்வி வளர்ச்சி நாள்)

(A) அண்ணாவின் பிறந்த நாள்

(B) அப்துல்கலாம் பிறந்த நாள்

(C) விவேகானந்தர் பிறந்த நாள்

(D) காமராசர் பிறந்த நாள்

(E) விடை தெரியவில்லை

79. அடைப்புக்குள் கொடுக்கப்பட்டுள்ள சொல்லை பொருத்தமான தொடரில் சேர்க்க (பந்தர்)

(A) ———— என்பது முற்றுப்போலி

(B) ———— என்பது இடைப்போலி

(C) ———— என்பது கடைப்போலி

(D) ———— என்பது முதற்போலி

(E) விடை தெரியவில்லை

80. இணைப்புச்சொல் அடிப்படையில் பொருந்தாததைத் தேர்ந்தெடுக்க.

(A) அதனால்

(B) அவனால்

(C) அதுபோல

(D) எனவே

(E) விடை தெரியவில்லை

81. சரியான இணைப்புச் சொல்லைப் பயன்படுத்தி வாக்கியம் அமை.

நாளை புயல் கரையைக் கடக்கிறது. மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம்.

(A) நாளை புயல் கரையைக் கடப்பதால் மீனவர் கடலுக்குச் செல்ல வேண்டாம்

(B) நாளை புயல் கரையைக் கடக்கிறது. எனவே மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம்

(C) நாளை புயல் கரையைக் கடக்கிறது ஏனெனில் மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம்

(D) நாளை புயல் கரையைக் கடக்கப் போவதால் மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம்

(E) விடை தெரியவில்லை

82. சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு.

(A) அங்கு

(B) இங்கு

(C) எங்கு

(D) உண்டு

(E) விடை தெரியவில்லை

83. சரியான வினாச்சொல்லைத் தேர்ந்தெடு

வட்டாரமொழி எனப்படுவது ————————?

(A) யாவை?
(B) எவை?
(C) யாது?
(D) எவை? எவை?
(E) விடை தெரியவில்லை

84. சரியான வினாச்சொல்லால் நிரப்புக.

தமிழரின் வீர விளையாட்டு ————————

(A) யார்?
(B) ஏன்?
(C) எங்கு?
(D) எது?
(E) விடை தெரியவில்லை

85. சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தேடு.

———————— சொற்களைப் பேச வேண்டும்?

(A) எத்தகைய
(B) யாரால்
(C) எவை
(D) எதனால்
(E) விடை தெரியவில்லை

86. பொருத்தமான காலம் அமைத்தல்

சரியான தொடரைத் தேர்ந்தெடு

(A) ஆங்கிலேயப் படைகள் மலேயாவில் ஜப்பானியரிடம் சரணடைகிறது (எதிர்காலம்)

(B) ஆங்கிலேயப் படைகள் மலேயாவில் ஜப்பானியரிடம் சரணடைந்து கொண்டிருக்கின்றன (இறந்த காலம்)

(C) ஆங்கிலேயப் படைகள் மலேயாவில் ஜப்பானியரிடம் சரணடையும் (நிகழ்காலம்)

(D) ஆங்கிலேயப் படைகள் மலேயாவில் ஜப்பானியரிடம் சரணடைந்தன (இறந்த காலம்)

(E) விடை தெரியவில்லை

87. கீழ்க் கண்டச் சொல் எந்தக் காலத்தை குறிக்கும்

நடந்தான்

(A) நிகழ்காலம்

(B) எதிர் காலம்

(C) இறந்த காலம்

(D) கார் காலம்

(E) விடை தெரியவில்லை

88. இரு சொற்களின் சரியான புதிய சொற்களைத் தெரிவு செய்க.

மா, சிட்டு, கனி, இலை, தேன், மரம், கூடு, குருவி

(A) சிட்டுக்குருவி, மாவிலை, தேன் கூடு

(B) இலைமரம், மரஇலை, மாசிட்டு

(C) தேன்மரம், மாவிலை, கனிமரம்

(D) குருவிக்கூடு, தேன்குருவி, மாவிலை

(E) விடை தெரியவில்லை

89. சொற்களை இணைத்துப் புதிய சொல் உருவாக்குக

மா

(A) மலர்
(B) மரம்
(C) சிட்டு
(D) முட்டை
(E) விடை தெரியவில்லை

90. சரியான எழுத்து வழக்குச் சொல்லைக் கண்டுபிடி.

(A) நாய் ஊளையிடும்
(B) நாய் குரைக்கும்
(C) நாய் கத்தும்
(D) நாய் அழும்
(E) விடை தெரியவில்லை

91. பேச்சு வழக்குச் சொற்களற்ற பழமொழியைத் தேர்க.

(A) அத விட்டாலும் கெதி இல்ல, அப்பால போனாலும் விதி இல்ல
(B) அள்ளுறவன் பக்கத்தில் இருந்தாலும் கிள்ளுறவன் பக்கத்தில் இருக்கக் கூடாது
(C) அம்மாசி இருட்டில பெருச்சாளிக்குப் போன இடமெல்லாம் வழிதான்
(D) அகழியில் விழுந்த முதலைக்கு அதுவே சொர்க்கம்
(E) விடை தெரியவில்லை

92. பேச்சு வழக்கிற்கு இணையான எழுத்து வழக்குச் சொல் பொருத்தமானதைத் தேர்க.

(A) உங்கூருக்கே – உங்க ஊருக்கே
(B) வெரசா – விரைவா
(C) மூணு வயசு – மூன்று வயது
(D) இருக்குது – இருக்கு
(E) விடை தெரியவில்லை

93. சரியான நிறுத்தற்குறியிடப்பட்ட தொடரைத் தேர்க.

(A) கூட்டத்தின் தலைவர், "அறிஞர் அண்ணா அவர்கள் இப்போது 'தலைப்பில்லை' என்னும் தலைப்பில் பேசுவார்" என்று அறிவித்தார்.

(B) அந்தோ? இயற்கை அழிகிறதே?

(C) தமிழின் இனிமைதான் என்னே?

(D) குழந்தை நிலாவைப் பார்த்து, 'நிலா நிலா ஓடிவா' என்று பாடியது.

(E) விடை தெரியவில்லை

94. நிறுத்தற்குறி அறிக. (எது சரியானது)

(A) . தமிழின் இனிமைதான் என்னே!

(B) கல்வியே மனிதனின் வாழ்வை உயர்த்தும்?

(C) சேக்கிழார் எழுதிய நூல் எது!

(D) அந்தோ, 'இயற்கை அழிகிறதே'.

(E) விடை தெரியவில்லை

95. சோழ நாடு என்பதன் மரூஉப் பெயர்

(A) சோணாடு (B) சோநாடு

(C) சோழாடு (D) சேணாடு

(E) விடை தெரியவில்லை

96. ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுதுக.

உதகமண்டலம்

(A) கோவை (B) மன்னை

(C) ஊட்டி (D) சைதை

(E) விடை தெரியவில்லை

97. மரூஉப் பெயர்

பொருத்தமான இணையைத் தேர்க.

(A) புதுச்சேரி – புதுவை

(B) திருநெல்வேலி – வேலி

(C) நாகூர் – நாகை

(D) கோயம்புத்தூர் – புத்தூர்

(E) விடை தெரியவில்லை

98. கையில் மிச்சம் உள்ள தங்கக்கட்டி வெயிட் குறைவானது

–இத்தொடரில் 'வெயிட்' என்ற சொல்லின் இணையான தமிழ்ச்சொல்

(A) சுமை

(B) கிராம்

(C) அளவு

(D) எடை

(E) விடை தெரியவில்லை

99. 'COMPACT DISK'– என்ற வார்த்தைக்கு இணையான தமிழ்ச் சொல் தருக.

(A) மின்நூல்

(B) மின் இதழ்கள்

(C) குறுந்தகடு

(D) சில்லுகள்

(E) விடை தெரியவில்லை

100. ரெடிமேட் டிரஸ் - என்பதற்கு இணையான தமிழ்ச் சொல் தேர்க.

(A) தயார் ஆடை

(B) தையல் ஆடை

(C) ஆயத்த ஆடை

(D) கைத்தறி ஆடை

(E) விடை தெரியவில்லை

POST OF ASSISTANT TRAINING OFFICER (STENOGRAPHY-ENGLISH) IN TAMIL NADU EMPLOYMENT TRAINING SUBORDINATE SERVICE AND JUNIOR TECHNICAL ASSISTANT IN TEXTILE DEPARTMENT IN TAMIL NADU GENERAL SUBORDINATE SERVICE.

COMPUTER BASED TEST

PAPER - II - COMPULSORY TAMIL ELIGIBILITY TEST AND GENERAL STUDIES

(SSLC STANDARD)

## பகுதி-அ (தமிழ் தகுதி தேர்வு)

## Part-A (Tamil Eligibility Test)

வினாக்கள் : 1–100 மொத்த மதிப்பெண்கள் : 150

**Questions : 1–100** **Total Marks : 150**

1. இரு வினைகளின் பொருள் வேறுபாடு

சீரிய – சீறிய

(A) கோபம் கொண்ட – பெருமை பெற்ற

(B) சிறுமை கொண்ட – பெருமை பெற்ற

(C) அளவில் குறைந்த – வடிவில் குறைந்த

(D) பெருமை பெற்ற – கோபம் கொண்ட

(E) விடை தெரியவில்லை

2. இரு வினைகளின் பொருள் வேறுபாடு

ஈந்தாள் – ஈன்றாள்

(A) கொடுத்தாள் – பெற்றெடுத்தாள்

(B) பெற்றெடுத்தாள் – கொடுத்தாள்

(C) கேட்டாள் – கொடுத்தாள்

(D) கண்டாள் – கேட்டாள்

(E) விடை தெரியவில்லை

3. பொருள் வேறுபாடு அறிக.

பொழிகின்ற – பொலிகின்ற

(A) தருகின்ற – சிறந்து விளங்குகின்ற

(B) செல்கின்ற – வருகின்ற

(C) வாங்குகின்ற – விற்கின்ற

(D) தாக்குகின்ற – தாங்குகின்ற

(E) விடை தெரியவில்லை

4. சொற்களை ஒழுங்குப்படுத்தி சொற்றொடராக்குதல் :

'வென்றதைப் பரணி பகைவரை ஆகும் பாடும் இலக்கியம்'

(A) பரணி பகைவரை ஆகும் இலக்கியம் வென்றதைப்பாடும்

(B) பகைவரை வென்றதைப் பாடும் இலக்கியம் பரணி ஆகும்

(C) இலக்கியம் ஆகும் வென்றதைப் பரணி பாடும்

(D) பாடும் இலக்கியம் வென்றதைப் பரணி ஆகும்

(E) விடை தெரியவில்லை

5. சொற்களை ஒழுங்குப்படுத்தி சொற்றொடராக்குதல் :

சொற்களை ஒழுங்குபடுத்துக

(A) கழுத்து பிறக்கும் இடம் உயிரெழுத்து ஆகும்

(B) கழுத்து உயிரெழுத்து இடம் பிறக்கும் ஆகும்

(C) உயிரெழுத்து கழுத்து ஆகும் பிறக்கும் இடம்

(D) உயிரெழுத்து பிறக்கும் இடம் கழுத்து ஆகும்

(E) விடை தெரியவில்லை

6. அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்தல் :
அள்ளல் பழனத்து அரக்காம்பல் வாயவிழ

(A) அள்ளல் அரக்காம்பல் வாயவிழ பழனத்து

(B) பழனத்து அரக்காம்பல் வாயவிழ அள்ளல்

(C) அரக்காம்பல் அள்ளல் பழனத்து வாயவிழ

(D) வாயவிழ பழனத்து அரக்காம்பல் அள்ளல்

(E) விடை தெரியவில்லை

7. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க :
காருகர், ஓவியர், பாசவர், ஓசுநர், சிற்பி

(A) ஓவியர், ஓசுநர், காருகர், பாசவர், சிற்பி

(B) காருகர், பாசவர், சிற்பி, ஓசுநர், ஓவியர்

(C) ஓசுநர், ஓவியர், காருகர், பாசவர், சிற்பி

(D) ஓசுநர், ஓவியர், காருகர், சிற்பி, பாசவர்

(E) விடை தெரியவில்லை

8. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க :

(A) ஈதல், ஊக்கம், ஏது, ஔவை

(B) ஊக்கம், ஔவை, ஏது, ஈதல்

(C) ஈதல், ஊக்கம், ஔவை, ஏது

(D) ஏது, ஈதல், ஔவை, ஊக்கம்

(E) விடை தெரியவில்லை

9. வேர்ச்சொல்லைக் கொடுத்து வினையாலணையும் பெயர் உருவாக்கல் :

'ஒறுத்தல்' – வினையாலணையும் பெயர் காண்க.

(A) ஒறுத்தினேன்
(B) பொறுத்தல்
(C) ஒன்றுதல்
(D) ஒறுத்தார்
(E) விடை தெரியவில்லை

10. 'மலை' என்ற வேர்ச்சொல்லின் வினையெச்சத்தைத் தேர்க :

(A) மலைந்து
(B) மலைந்த
(C) மலையா
(D) மலையும்
(E) விடை தெரியவில்லை

11. வேர்ச்சொல்லுக்குரிய தொழிற்பெயரை எழுதுக :

'கொடு'

(A) கொடுத்தான்
(B) கொடுத்த
(C) கொடுத்தல்
(D) கொடுத்தவன்
(E) விடை தெரியவில்லை

12. வந்தனன் – வேர்ச்சொல்லை எழுதுக :

(A) வருக
(B) வந்து
(C) வா
(D) வருவாய்
(E) விடை தெரியவில்லை

13. வினைமுற்றுக்கு உரிய வேர்ச்சொல்லை எழுதுக :

'வருக'

(A) வா
(B) வரு
(C) வந்து
(D) வருகிறார்
(E) விடை தெரியவில்லை

14. ஒரு பொருள் தரும் பல சொற்கள் :

'நிலவு'

(A) மதி, அறிவு
(B) மாதம், பிறை
(C) திங்கள், சந்திரன்
(D) நிலா, அறிவு
(E) விடை தெரியவில்லை

15. ஒரு பொருள் தரும் பல சொற்கள் :

'அடி வகை'

(A) தாள், தண்டு, கோல்
(B) சுவை, கொம்பு, கொப்பு
(C) இலை, தோகை, ஓலை
(D) துளிர், முறி, குருத்து
(E) விடை தெரியவில்லை

16. ஒரு பொருள் தரும் பலச் சொற்கள் :

உறைக்கிணறு, ஊருணி, அகழி, அணை

(A) நீர் நிலை
(B) ஊர் வகை
(C) கொடி வகை
(D) கடல் வகை
(E) விடை தெரியவில்லை

17. ஒலி மற்றும் பொருள் வேறுபாடு அறிதல் :
அமைதியான ———— தேவை.

(A) உரக்கம் (B) துரக்கம்
(C) உறக்கம் (D) துறக்கம்
(E) விடை தெரியவில்லை

18. இலை, இளை, இழை – ஒலி வேறுபாடறிந்து பொருள் தருக.

(A) செடியின் இலை, மெலிந்து போதல், நூல் இழை
(B) மெலிந்து போதல், செடியின் காம்பு, செடியின் இலை
(C) நூல் இழை, செடியின் இலை, மெலிந்து போதல்
(D) மெலிந்து போதல், நூல் இழை, செடியின் இலை
(E) விடை தெரியவில்லை

19. பரவை, பறவை – ஒலி வேறுபாடு அறிந்து பொருள் தருக :

(A) வானில் பரப்பது, எருது (B) சிங்கம், கடல்
(C) கடல், புள் (D) ஆண்மயில், கடல்
(E) விடை தெரியவில்லை

20. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை எழுதுக :
'டிமாண்ட் டிராப்ட்'

(A) காசோலை (B) பணவோலை
(C) வரைவோலை (D) கடன் அட்டை
(E) விடை தெரியவில்லை

21. 'வீடு எங்குள்ளது' என்ற வினாவிற்கு 'இப்பக்கத்தில் உள்ளது' என்று கூறுவது.

(A) சுட்டு விடை
(B) மறை விடை
(C) நேர் விடை
(D) ஏவல் விடை
(E) விடை தெரியவில்லை

22. சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக :

சோறு ————

(A) உண்
(B) தின்
(C) பருகு
(D) சாப்பிடு
(E) விடை தெரியவில்லை

23. சந்திப்பிழை அற்ற வாக்கியங்களைக் கண்டறிக :

(1) குதிரைத் தாண்டியது
(2) குதிரை தாண்டியது
(3) வரும்படி சொன்னான்
(4) வரும்படிச் சொன்னான்

(A) (1) மற்றும் (3)
(B) (2) மற்றும் (4)
(C) (2) மற்றும் (3)
(D) (1) மற்றும் (4)
(E) விடை தெரியவில்லை

24. மரபுப்பிழைகள் ஏற்புடைய ஒலி மரபினைத் தேர்க :

'ஆடு'

(A) முழங்கும்
(B) பிளிறும்
(C) கதறும்
(D) கத்தும்
(E) விடை தெரியவில்லை

25. குலைவகை : பொருந்தாச் சொல்லைக் கண்டறிதல் :

(A) கொத்து (B) அளியல்

(C) தாறு (D) அலகு

(E) விடை தெரியவில்லை

26. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக :

நீர்நிலைப் பெயர் அல்லாதது.

(A) இலஞ்சி (B) கேணி

(C) கூவல் (D) கோட்டி

(E) விடை தெரியவில்லை

27. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக :

(A) பால் – பசு (B) எருது – உழவு

(C) காளை – வண்டி (D) ஆடு – வண்டி

(E) விடை தெரியவில்லை

28. எதிர்ச்சொல்லை எடுத்தெழுதுதல் :

'இடும்பை' – எதிர்ச்சொல் தருக.

(A) வறுமை (B) இன்பம்

(C) துன்பம் (D) சோம்பல்

(E) விடை தெரியவில்லை

29. எதிர்ச்சொல்லை எடுத்தெழுதுதல் :

'அணுகு'

(A) பழகு
(B) தெளிவு
(C) விலகு
(D) துணிவு
(E) விடை தெரியவில்லை

30. பிரித்தெழுதுதல் :

'நீருலையில்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.

(A) நீரு + உலையில்
(B) நீர் + இலையில்
(C) நீர் + உலையில்
(D) நீரு + இலையில்
(E) விடை தெரியவில்லை

31. செயல் + இழக்க என்பதனை சேர்த்து – எழுதக் கிடைக்கும் சொல்.

(A) செயலிழக்க
(B) செயல்இழக்க
(C) செயஇழக்க
(D) செயலிலக்க
(E) விடை தெரியவில்லை

32. சரியான விடையைத் தேர்க.

(A) விண் + உண்டு - விண்ணூண்டு
(B) பண் + அழகு – பண்ணழகு
(C) நூல் + அகம் – நூற்பகம்
(D) விண் + அழகு – விற்பழகு
(E) விடை தெரியவில்லை

33. பிரித்து எழுதுதல் :

"பெருங்கடல்" – என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.

(A) பெரு + கடல்
(B) பெருமை + கடல்
(C) பெரிய + கடல்
(D) பெருங் + கடல்
(E) விடை தெரியவில்லை

34. முத்தமிழ் – பொருந்தாச் சொல்லைக் கண்டறிதல்.

(A) இயற்றமிழ்
(B) இசைத்தமிழ்
(C) நாடகத்தமிழ்
(D) வளர்தமிழ்
(E) விடை தெரியவில்லை

35. சரியான வினாச்சொல்லைத் தேர்ந்தெடு :

நெல்லையப்பர் கோவில் ———— உள்ளது?

(A) எவை?
(B) எது?
(C) யாது?
(D) எங்கு?
(E) விடை தெரியவில்லை

36. பொருத்தமான காலம் அமையுமாறு எழுதுக :

மாடுகள் இப்பொழுது புல் ————

(A) மேய்ந்தன
(B) மேய்கிறது
(C) மேய்கின்றன
(D) மேய்கின்றோம்
(E) விடை தெரியவில்லை

37. பொருத்தமான காலம் கண்டறிக.

(A) கண்மணி நேற்று பாடம் படித்தாள் (நிகழ்காலம்)

(B) கண்மணி பாடம் படிக்கிறாள் (நிகழ்காலம்)

(C) கண்மணி நாளை பாடம் படிப்பாள் (இறந்த காலம்)

(D) கண்மணி இன்று படிக்கிறாள் (எதிர்காலம்)

(E) விடை தெரியவில்லை

38. சொற்களை இணைத்து புதிய சொல் உருவாக்கல் :
சரியான இணையைக் கண்டறிக.

(A) விண் + மீன் – விண்மான்

(B) தமிழ் + மொழி – தாய்மொழி

(C) நீதி + நூல் – நீதிநூல்

(D) மணி + மாலை –மணிமேகலை

(E) விடை தெரியவில்லை

39. சொற்களை இணைத்து புதிய சொல் உருவாக்குக :

'பரம்' ————

(A) பரை

(B) பறை

(C) குறை

(D) முறை

(E) விடை தெரியவில்லை

40. பேச்சுவழக்கு – எழுத்துவழக்கு கண்டறிதல் :
என்னுடைய பல் உழுந்திடுச்சு.

(A) விள்ந்து விட்டது

(B) வில்ந்து விட்டது

(C) விழுந்து விட்டது

(D) விலைந்து விட்டது

(E) விடை தெரியவில்லை

41. பேச்சுவழக்கு – எழுத்து வழக்கு :

'ஒடம்பு'

(A) ஒடம்பு – உடும்பு
(B) ஒடம்பு – உடம்பு
(C) ஒடம்பு – ஊடம்பு
(D) ஒடம்பு – உயிர்
(E) விடை தெரியவில்லை

42. பேச்சுவழக்கு – எழுத்துவழக்கு :
மாம்பழம் சாப்ட்டியா?

(A) மாம்பழம் சாப்பிட்டாயா?
(B) மாம்பழம் சாப்பிடு
(C) மாம்பழம் சாப்பிடாயா?
(D) மாம்பழம் தின்கிறேன்
(E) விடை தெரியவில்லை

43. பொருள்களை எண்ணும் இடங்களில் ———— வரும்.

(A) காற்புள்ளி (,)
(B) அரைப்புள்ளி (;)
(C) முக்காற் புள்ளி (:)
(D) முற்றுப்புள்ளி (.)
(E) விடை தெரியவில்லை

44. நிறுத்தற்குறிகளை அறிதல் :

சரியான நிறுத்தற்குறிகள் இடப்பட்டத் தொடரைக் கண்டறிக.

(A) முத்தமிழ் இயல் இசை நாடகம்.
(B) முத்தமிழ் : இயல், இசை, நாடகம்.
(C) முத்தமிழ், இயல், இசை, நாடகம்.
(D) முத்தமிழ், இயல் இசை நாடகம்
(E) விடை தெரியவில்லை

45. சரியான நிறுத்தற்குறியிடப்பட்ட தொடரைக் கண்டறிக.

(A) "நூல் பல கல்", என்பர் பெரியோர்.

(B) திருக்குறள் அறம்; பொருள்; இன்பம் என்னும் முப்பால் பகுப்பு கொண்டது.

(C) திரு.வி.க எழுதிய பெண்ணின் பெருமை என்னும் நூல் புகழ்பெற்றது.

(D) நூலகத்தின் பயன் அறிவோம்: அறிவு வளம் பெறுவோம்.

(E) விடை தெரியவில்லை

46. "பைம்பொழில்" என்ற ஊர்ப் பெயரின் மரூஉவைக் கண்டறிக.

(A) பொழிச்சலூர்

(B) பம்புளி

(C) பையனூர்

(D) பொழிலூர்

(E) விடை தெரியவில்லை

47. ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுதுக.

'பூவிருந்தவல்லி'

(A) பூந்தர் தோட்டம்

(B) பூவிருந்தம்

(C) பூந்தமல்லி

(D) பூ வல்லி

(E) விடை தெரியவில்லை

48. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைக் கண்டறிதல்.

| | | | |
|---|---|---|---|
| (a) | செக் | (1) | பற்று அட்டை |
| (b) | டிமாண்ட் டிராஃப்ட் | (2) | காசோலை |
| (c) | டிஜிட்டல் | (3) | மின்னணு மயம் |
| (d) | டெபிட் கார்டு | (4) | வரைவோலை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 2 | 4 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 2 | 4 | 3 | 1 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

(E) விடை தெரியவில்லை

49. பிறமொழிச் சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல்லை எழுது :

'எஸ்கலேட்டர்'

(A) மின்தூக்கி
(B) மின் ஏணி
(C) மின்படி கட்டு
(D) இயங்கு படிகட்டு
(E) விடை தெரியவில்லை

50. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்கள் :

வான்வெளியில் ஏற்பட்ட நிகழ்வை கண்டு ஆச்சரியம் அடைந்தனர்.

(A) பூரிப்பு
(B) எக்களிப்பு
(C) வியப்பு
(D) மகிழ்ச்சி
(E) விடை தெரியவில்லை

51. விடை வகைகள் :

"நீ விளையாடவில்லையா?" என்ற வினாவிற்குக் 'கால் வலிக்கும்' என்று கூறுவதை உரைப்பது?

(A) சுட்டு விடை
(B) மறை விடை
(C) உறுவது கூறல் விடை
(D) ஏவல் விடை
(E) விடை தெரியவில்லை

52. கீழ்க்கண்ட பேச்சு வழக்குச் சொல்லை எழுத்து வழக்கு சொல்லாக மாற்றுக.

'நான் நேத்து வந்த'

(A) நான் நேற்று வந்த
(B) நான் நேற்று போனேன்
(C) நான் நேற்று வந்தேன்
(D) நான் நேத்து வந்து
(E) விடை தெரியவில்லை

53. 'நீ பாடவில்லையா? ' என்ற வினாவிற்கு 'வாய் வலிக்கிறது' என்று உரைப்பது

(A) இனமொழி விடை
(B) உறுவது கூறல் விடை
(C) உற்றது உரைத்தல் விடை
(D) வினா எதிர் வினாதல் விடை
(E) விடை தெரியவில்லை

54. கலைச்சொல் அறிக :

WRITS

(A) சட்டம்
(B) சட்ட ஆவணங்கள்
(C) சட்ட முறைகள்
(D) சட்ட திருத்தங்கள்
(E) விடை தெரியவில்லை

55. கலைச்சொல் அறிக :

'AGRO INDUSTRY'

(A) வேளாண்மைத் தொழில்
(B) வேளாண் கைக் கருவிகள்
(C) வேளாண் புள்ளி விவரங்கள்
(D) வேளாண் தொழிற்கூடங்கள்
(E) விடை தெரியவில்லை

56. "விழலுக்கு இறைத்த நீர் போல" என்ற சொற்றொடரில் உவமை விளக்கும் பொருள்?

(A) ஒற்றுமையின்மை
(B) தற்செயல் நிகழ்வு
(C) எதிர்பாரா நிகழ்வு
(D) பயனற்ற செயல்
(E) விடை தெரியவில்லை

57. உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெழுதுக:

நெல்லிக்காய் மூட்டையைக் கொட்டினாற் போல

(A) ஒற்றுமையின்மை
(B) பயனற்ற செயல்
(C) தற்செயல் நிகழ்வு
(D) எதிர்பாரா நிகழ்வு
(E) விடை தெரியவில்லை

58. உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெழுதுக :

'வேலியே பயிரை மேய்ந்தது போல' -

உவமை கூறும் பொருள் தெளிக.

(A) கடமை தவறுதல்
(B) கடமை
(C) பொறுப்புணர்வு
(D) வெறுப்பு
(E) விடை தெரியவில்லை

59. சத்யா வீணை வாசித்தாள் - இது எவ்வகை வாக்கியம் எனக் கண்டறிக.

(A) பிறவினைத் தொடர்
(B) செய்வினைத் தொடர்
(C) செயப்பாட்டு வினைத் தொடர்
(D) உணர்ச்சித் தொடர்
(E) விடை தெரியவில்லை

60. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுது :
பந்தை என்னிடம் உருட்டினான்.

(A) தன்வினை வாக்கியம்
(B) செய்வினை வாக்கியம்
(C) பிறவினை வாக்கியம்
(D) செயப்பாட்டு வினை வாக்கியம்
(E) விடை தெரியவில்லை

61. பொருத்தமான செயப்பாட்டு வினைத் தொடரைத் தேர்க.

(A) பணம் காணாமல் போனது
(B) பணத்தைக் காணவில்லை
(C) பணத்தை யார் எடுத்தார்கள்?
(D) பணத்தை எங்கே தேடுவது?
(E) விடை தெரியவில்லை

62. காமராசரைக் 'கல்விக்கண் திறந்தவர்' எனப் பாராட்டியவர் தந்தை பெரியார் ஆவார்.
விடைக்கேற்ற மிகச் சரியான வினாவைத் தேர்ந்தெடுக்க.

(A) 'கல்விக் கண் திறந்தவர்' என்று பாராட்டப்பட்டவர் யார்?
(B) தந்தை பெரியார் யாரைப் பாராட்டினார்?
(C) தந்தை பெரியாரால் பாராட்டப்பட்டவர் யார்?
(D) காமராசரைக் 'கல்விக்கண் திறந்தவர்" எனப் பாராட்டியவர் யார்?
(E) விடை தெரியவில்லை

63. விடைக் கேற்ற வினாவைத் தெரிவு செய்க :

'தமிழில் திருக்குறள் எனக்கு மிகவும் பிடித்த நூலாகும்'.

(A) உங்களுக்கு மிகவும் பிடித்த நூல் எங்குள்ளது?

(B) உங்களுக்கு மிகவும் பிடித்த நூல் எத்தனை?

(C) உங்களுக்கு மிகவும் பிடித்த புத்தகம் எது?

(D) புத்தகம் படிக்கும் பழக்கம் உண்டா?

(E) விடை தெரியவில்லை

பத்தியிலிருந்து வினாவிற்கான சரியான விடையைத் தேர்ந்தெடு : (64–68)

இசைக்கருவிகள் தோல் கருவி, நரம்புக் கருவி, காற்றுக் கருவி, கஞ்சக் கருவி என நான்கு வகைப்படும். விலங்குகளின் தோலால் மூடப்பட்டுச் செய்யப்படும் கருவிகள் தோல் கருவிகள் எனப்படும். நரம்பு அல்லது தந்திகளை உடையவை நரம்புக் கருவிகள் எனப்படும். காற்றைப் பயன்படுத்தி இசைக்கப்படுபவை காற்றுக் கருவிகள் எனப்படும். ஒன்றோடு ஒன்று மோதி இசைக்கப்படுபவை கஞ்சக் கருவிகள் எனப்படும்.

64. இசைக் கருவிகள் எத்தனை வகைப்படும்?

(A) நான்கு

(B) இரண்டு

(C) மூன்று

(D) ஒன்று

(E) விடை தெரியவில்லை

65. நரம்புக் கருவிகள் எவை?

(A) தோலால் மூடப்பட்ட கருவி

(B) தந்திகளை உடையவை

(C) காற்றைப் பயன்படுத்தி இசைக்கப்படுபவை

(D) ஒன்றோடு ஒன்று மோதி கொள்பவை

(E) விடை தெரியவில்லை

66. ஒன்றோடு ஒன்றி மோதி இசைக்கப்படுபவை

(A) நரம்புக் கருவிகள்
(B) தோல் கருவிகள்
(C) கஞ்சக் கருவிகள்
(D) காற்றுக் கருவிகள்
(E) விடை தெரியவில்லை

67. காற்றைப் பயன்படுத்தி இசைக்கப்படுபவை

(A) தோல் கருவிகள்
(B) காற்றுக் கருவிகள்
(C) கஞ்சக் கருவிகள்
(D) நரம்புக் கருவிகள்
(E) விடை தெரியவில்லை

68. விலங்குகளின் _____ ஆல் மூடப்பட்டுச் செய்யப்படும் கருவிகள் தோற்கருவிகள்.

(A) தோல்
(B) முடி
(C) நகம்
(D) எலும்பு
(E) விடை தெரியவில்லை

69. ஒருமை - பன்மை பிழை நீக்குக :

அம்பேத்கர் ஒடுக்கப்பட்ட மக்களின் உயர்வுக்காகத் _____ உழைப்பை நல்கினார்.

(A) தனது
(B) தமது
(C) தங்கள்
(D) தாங்கள்
(E) விடை தெரியவில்லை

70. ஒருமை பன்மை பிழையற்ற தொடர் எது?

(A) இளங்கன்று பசியால் வாடிக் கொண்டிருந்தது

(B) இளங்கன்று பசியால் வாடிக் கொண்டிருந்தன

(C) இளங்கன்று பசியால் வாடிக் கொண்டிருந்தான்

(D) இளங்கன்று பசியால் வாடிக் கொண்டிருந்தார்கள்

(E) விடை தெரியவில்லை

71. ஒருமைப் பன்மைப் பிழையற்ற தொடர் எது?

(A) ஆய்த எழுத்து தலையை இடமாகக் கொண்டு பிறக்கிறது

(B) ஆய்த எழுத்து தலையை இடமாகக் கொண்டு பிறக்கின்றன

(C) ஆய்த எழுத்து தலையை இடமாகக் கொண்டு பிறப்பாள்

(D) ஆய்த எழுத்து தலையை இடமாகக் கொண்டு பிறப்பார்கள்

(E) விடை தெரியவில்லை

72. சொல்-பொருள் பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | சாந்தம் | (1) | சிறப்பு |
| (b) | மகத்துவம் | (2) | உலகம் |
| (c) | தாரணி | (3) | கருணை |
| (d) | இரக்கம் | (4) | அமைதி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 3 | 2 | 1 | 4 |
| (C) | 4 | 1 | 2 | 3 |
| (D) | 1 | 4 | 3 | 2 |

(E) விடை தெரியவில்லை

73. சொல் - பொருள் பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | தமர் | (1) | தலை |
| (b) | முனிவு | (2) | உறவினர் |
| (c) | தார் | (3) | சினம் |
| (d) | முடி | (4) | மாலை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 2 | 4 | 3 | 1 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 1 | 2 | 3 | 4 |

(E) விடை தெரியவில்லை

74. பிழை திருத்தம் (ஒரு-ஓர்)

பிழை திருத்தம் (அது-அஃது; ஒரு-ஓர்)

அது ஒரு இனிய பாடல்.

(A) அது ஓர் இனிய பாடல்

(B) அஃது ஓர் இனிய பாடல்

(C) அஃது ஒரு இனிய பாடல்

(D) அது ஒரு இனிய பாடல்

(E) விடை தெரியவில்லை

75. பிழை திருத்துக :

ஓர் அணில் மரத்தில் ஏறின.

(A) ஓர் அணில் மரத்தில் ஏறியது

(B) ஓர் அணில் மரத்தில் ஏறின

(C) ஓர் அணில் மரத்தில் ஏறா

(D) ஓர் அணில் மரத்தில் ஓடா

(E) விடை தெரியவில்லை

76. சரியான தொடரைத் தேர்ந்தெடு :

ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுகின்றனர்.

இத்தொடரின் செயப்பாட்டு வினைத்தொடர் எது?

(A) ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுவர்

(B) ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது

(C) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது

(D) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகின்றனர்

(E) விடை தெரியவில்லை

77. 'அப்துல் நேற்று வந்தான்' - இது எவ்வகைத் தொடர்?

(A) தன்வினைத் தொடர்

(B) பிறவினைத் தொடர்

(C) செய்தித் தொடர்

(B) பூக்களைப் பறிக்காதீர் – கட்டளைத் தொடர்
(C) எவ்வளவு உயரமான மரம் – வினாத் தொடர்
(D) இது நாற்காலி, அவன் மாணவன் – உணர்ச்சித் தொடர்
(E) விடை தெரியவில்லை

18. விடைக்கேற்ற வினா அமைக்க :

பானையின் வெற்றிடமே நமக்கும் பயன்படுகிறது

(A) பானையின் எப்பகுதி நமக்குப் பயன்படுகிறது
(B) பானை எப்படி நமக்குப் பயன்படுகிறது
(C) பானை எதனால் நமக்குப் பயன்படுகிறது
(D) பானை எங்கு நமக்குப் பயன்படுகிறது ?
(E) விடை தெரியவில்லை

19. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுத்தல்

"தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு"

(A) தமிழர் பண்பாட்டில் எதற்கு தனித்த இடமுண்டு?

(B) வாழையிலை அதிகம் கிடைக்கும் மாநிலம் எது?

(C) வாழை இலை எதற்குப் பயன்படுகிறது?

(D) தமிழர் பண்பாடு என்றால் என்ன?

(E) விடை தெரியவில்லை

20. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடு

பகுத்தறிவுக் கவிராயர் என போற்றப்படுபவர் உடுமலை நாராயணகவி

(A) யார் பகுத்தறிவுக் கவிராயர் என போற்றப்படுபவர்?

(B) எதனால் பகுத்தறிவுக் கவிராயர் என போற்றப்படுபவர்?

(C) எங்கு பகுத்தறிவுக் கவிராயர் என போற்றப்படுகிறார்?

(D) ஏன் பகுத்தறிவுக் கவிராயர் எனப் போற்றப்படுகிறார்?

(E) விடை தெரியவில்லை

21. இரு வினைகளின் பொருள் வேறுபாடு அறிதல்

பணிந்து – பணித்து

(A) பணிவுடன் நடத்தல் – கட்டளை இடுதல்

(B) பணியாமை – ஏவுதல்

(C) அருளிச் செய்தல் – செய்யாமை

(D) கொடுத்தல் – செய்து

(E) விடை தெரியவில்லை

22. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குக.
(பகைவரை, பரணி, வென்றதைப், இலக்கியம், பாடுவது)

(A) பகைவரை இலக்கியம் வென்றதைப் பாடுவது பரணி

(B) இலக்கியம் பாடுவது வென்றதைப் பரணி பகைவரை

(C) பகைவரை வென்றதைப் பாடுவது பரணி இலக்கியம்

(D) பரணி இலக்கியம் வென்றதைப் பாடுவது பகைவரை

(E) விடை தெரியவில்லை

23. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குதல்

(A) நல்லவர் பெயர் பெற என்ன செய்யலாம் நாம் என்னும்

(B) நல்லவர் என்னும் பெயர் பெற என்ன செய்யலாம் நாம்

(C) நல்லவர் என்னும் பெயர் பெற நாம் என்ன செய்யலாம்

(D) நாம் பெயர் பெற நல்லவர் என்னும் என்ன செய்யலாம்

(E) விடை தெரியவில்லை

24. சொற்களை ஒழுங்குபடுத்துக.

(A) தலைவர் நாளை தமிழகம் குடியரசு வருகிறார்

(B) நாளை வருகிறார் தமிழகம் தலைவர் குடியரசு

(C) குடியரசுத் தலைவர் நாளை தமிழகம் வருகிறார்

(D) தலைவர் தமிழகம் குடியரசு நாளை வருகிறார்

(E) விடை தெரியவில்லை

25. அகரவரிசைப்படுத்துக

(A) தவில், படகம், பிடில், பேரியாழ்

(B) படகம், பிடில், பேரியாழ், தவில்

(C) பேரியாழ், பிடில், படகம், தவில்

(D) தவில், பிடில், படகம், பேரியாழ்

(E) விடை தெரியவில்லை

26. பின்வரும் சொற்களை அகர வரிசைப்படுத்துக.

தேவை, ஐயம், சிறப்பு, தமிழ்நாடு, கண்ணன்

(A) ஐயம், கண்ணன், சிறப்பு, தமிழ்நாடு, தேவை

(B) கண்ணன், ஐயம், தமிழ்நாடு, சிறப்பு, ஐயம்

(C) ஐயம், சிறப்பு, கண்ணன், தமிழ்நாடு, தேவை

(D) தேவை, தமிழ்நாடு, சிறப்பு, ஐயம், கண்ணன்

(E) விடை தெரியவில்லை

27. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க.

(A) படகம், தவில், மகுடி, நாகசுரம், கணப்பறை

(B) படகம், மகுடி, கணப்பறை, நாகசுரம், தவில்

(C) கணப்பறை, நாகசுரம், தவில், படகம், மகுடி

(D) கணப்பறை, தவில், நாகசுரம், படகம், மகுடி

(E) விடை தெரியவில்லை

28. வேர்ச் சொல்லின் வினைமுற்றைக் காண்க.

பாடி

(A) பாடு

(B) பாடின

(C) பாடிய

(D) பாடினாள்

(E) விடை தெரியவில்லை

29. வினைமுற்று

கீழ்வருவனவற்றுள் ஏவல் வினைமுற்றுச் சொல்

(A) செல்க

(B) வாழ்க

(C) ஓடு

(D) வாழிய

(E) விடை தெரியவில்லை

30. விளைவது – வேர்ச் சொல்லைத் தருக.

(A) விளை
(B) விலை
(C) விழை
(D) விளைந்து
(E) விடை தெரியவில்லை

31. "வருக" – வேர்ச்சொல்லைத் தருக.

(A) வரு
(B) வா
(C) வாரு
(D) வந்த
(E) விடை தெரியவில்லை

32. அறியேன் – வேர்ச் சொல்லைத் தருக.

(A) அரி
(B) அறி
(C) அறிந்த
(D) அரிந்த
(E) விடை தெரியவில்லை

33. ஒரு பொருள் தரும் பல சொற்கள்
கொத்து, தாறு, கதிர், சீப்பு

(A) அடி வகை
(B) குலை வகை
(C) மணி வகை
(D) இளம் பயிர் வகை
(E) விடை தெரியவில்லை

34. ஒரு பொருள் பல சொற்கள் அறிதல்.
மலைக்குகை

(A) முழை, முழவு
(B) பிலம், முழை
(C) பிலம், முழவு
(D) முழை, பிளவு
(E) விடை தெரியவில்லை

35. ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து, சரியான இணையைத் தெரிவு செய்க.
வாளை – வாழை

(A) அரம் - கன்று
(B) மீன் – மரம்
(C) கருவி – மீன்
(D) தோட்டம் – தோப்பு
(E) விடை தெரியவில்லை

36. ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான பொருளை அறிதல்.
'சிரம்' என்பதன் பொருள்

(A) தலை
(B) தளை
(C) கடினம்
(D) கலை
(E) விடை தெரியவில்லை

37. ஒலி மற்றும் பொருள் வேறுபாடு அறிந்து சரியான சொல்லைத் தேர்ந்தெடு
கிண்ணம் – கின்னம்

(A) சிறு பாத்திரம் – துன்பம்
(B) குவளை – கீழ்மை
(C) குவளை – துன்பம்
(D) சிறுபாத்திரம் – மகிழ்ச்சி
(E) விடை தெரியவில்லை

38. "கிரெடிட் கார்டு" இணையான தமிழ்ச்சொல்

(A) பற்று அட்டை
(B) பணத்தாள்
(C) காசோலை
(D) கடன் அட்டை
(E) விடை தெரியவில்லை

39. "டிஜிட்டல்" இணையான தமிழ்ச் சொல்

(A) கணினிமயம்
(B) மின்னணுமயம்
(C) இணையத்தளம்
(D) வணிகமயம்
(E) விடை தெரியவில்லை

40. வழுவுச் சொற்களை நீக்குதல்.
பிழையற்ற தொடரைத் தேர்க.

(A) செழியன் வரும்
(B) செழியன் வந்தான்
(C) செழியன் வந்தார்கள்
(D) செழியன் வந்தது
(E) விடை தெரியவில்லை

41. சந்திப்பிழை நீக்கி எழுதுக.

(A) தமிழுக்கு முத்தமிழ் எண்ணுச் சிரப்புப் பெயரும் உண்டு
(B) தமிழுக்கு முத்தமிழ் என்னும் சிறப்புப் பெயரும் உண்டு
(C) தமிழுக்கும் முத்தமிழ் என்னும் சிறப்புப் பெயறும் உண்டு
(D) தமிழுக்குக் முத்தமிழ் என்னும் சிரப்புப் பெயரும் உன்டு
(E) விடை தெரியவில்லை

42. சரியான மரபுச் சொல்லை இணைக்க.
கமுகு (பாக்கு) ————————.

(A) ஓலை
(B) கூந்தல்
(C) தோகை
(D) மடல்
(E) விடை தெரியவில்லை

43. இலக்கண வகைகள் : பொருந்தாச் சொல்லைக் கண்டறிதல்

(A) எழுத்து
(B) சொல்
(C) தொடை
(D) அணி
(E) விடை தெரியவில்லை

44. பொருந்தாச் சொல்லைக் கண்டறிதல்
பாக்கு, பஞ்சு, பாட்டு, பத்து

(A) பத்து
(B) பாட்டு
(C) பாக்கு
(D) பஞ்சு
(E) விடை தெரியவில்லை

45. பொருந்தாச் சொல்லைக் கண்டறிதல்
புணை, மிதவை, நீகான், தெப்பம்

(A) தெப்பம்
(B) நீகான்
(C) புணை
(D) மிதவை
(E) விடை தெரியவில்லை

46. ஐயம் – என்னும் சொல்லுக்குரிய எதிர்ச்சொல்

(A) சோர்வு
(B) தெளிவு
(C) விலகு
(D) அறிவு
(E) விடை தெரியவில்லை

47. எதிர்ச்சொல்லை எடுத்தெழுதுதல்
'ஊக்கம்' என்ற சொல்லின் எதிர்ச்சொல் _____

(A) தெளிவு
(B) சோர்வு
(C) விலகு
(D) பொய்மை
(E) விடை தெரியவில்லை

48. எதிர்ச்சொல் எழுதுக

எளிது

(A) அரிது

(B) பெரிது

(C) கொடிது

(D) பழையது

(E) விடை தெரியவில்லை

49. 'பூட்டுங்கதவுகள்' – என்னும் சொல்லைப் பிரித்தெழுதக் கிடைப்பது.

(A) பூட்டு + கதவுகள்

(B) பூட்டும் + கதவுகள்

(C) பூட்டின் + கதவுகள்

(D) பூட்டிய + கதவுகள்

(E) விடை தெரியவில்லை

50. 'வானம் + அறிந்த' – என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்

(A) வானம் அறிந்த

(B) வான் அறிந்த

(C) வானமறித்த

(D) வான் மறிந்த

(E) விடை தெரியவில்லை

51. 'மானம் + இல்லா' – என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

(A) மானம் இல்லா

(B) மானமில்லா

(C) மானமல்லா

(D) மானம் மில்லா

(E) விடை தெரியவில்லை

கீழ்க்கண்ட பத்தியைப் படித்து வினாவிற்குரிய சரியான விடையைத் தேர்ந்தெடு (52–56)

சூரிய குடும்பத்தில் சூரியனே முதன்மையாகப் போற்றப்படுகிறது. சூரியனைச் சுற்றிக் கோள்கள் சூழ்ந்துள்ளன. பண்டைத் தமிழர் சூரியன் முதலான ஒன்பது கோள்களைக் கோள்மீன் எனவும், அசுவினி முதலான இருபத்தேழு விண்மீன்களை நான்மீன் எனவும் பகுத்துக் கூறியதுடன் ஒவ்வொரு கோளுக்கும் காரணப்பெயரிட்டு அழைத்தனர். செந்நிறமுடைய கோளை செவ்வாய் என்றனர். புதிதாக அறிந்ததனால் புதன் என்றனர். இக்கோளுக்கு 'அறிவன்' எனவும் பெயருண்டு. வியா என்றால் பெரிய எனப் பொருள்படும். எனவே வானில் பெரிய கோளாக வலம் வருவதனை வியாழன் என அழைத்தனர். வெண்மை நிறமுடைய கோள் வெள்ளி எனப்பட்டது. இவையனைத்தும் சங்கப் புலவர்களின் வானியல் அறிவையும் சிந்தனையையும் புலப்படுத்துவதாக உள்ளன.

52. சூரிய குடும்பத்தில் முதன்மையான கோள் எது?

(A) கோள்மீன்
(B) சூரியன்
(C) புதன்
(D) வியாழன்
(E) விடை தெரியவில்லை

53. பண்டையத் தமிழர் சூரியன் முதலான ஒன்பது கோள்களை எவ்வாறு அழைத்தனர்?

(A) வியாழன்
(B) புதன்
(C) வெள்ளி
(D) கோள்மீன்
(E) விடை தெரியவில்லை

54. புதன் கோளுக்கு வழங்கப்படும் வேறு பெயர் யாது?

(A) அறிவன்
(B) வியாழன்
(C) வெள்ளி
(D) கோள்மீன்
(E) விடை தெரியவில்லை

55. வானில் பெரிய கோளாக வலம் வரும் கோள் எது?

(A) புதன்
(B) அறிவன்
(C) வியாழன்
(D) வெள்ளி
(E) விடை தெரியவில்லை

56. சங்கப் புலவர்கள் ———— அறிவையும் சிந்தனையையும் பெற்றிருந்தனர்.

(A) வானியல்
(B) சோதிடம்
(C) சூரியன்
(D) புதன்
(E) விடை தெரியவில்லை

57. கலைச் சொற்களை அறிதல்
Classical literature

(A) வட்டார இலக்கியம்
(B) நவீன இலக்கியம்
(C) செவ்விலக்கியம்
(D) பக்தி இலக்கியம்
(E) விடை தெரியவில்லை

58. பிழை திருத்துக.
பிழையற்ற தொடரைத் தெரிவு செய்க.

(A) அவை அன்று
(B) அவை அல்ல
(C) அவை இல்லை
(D) அவை அல்லர்
(E) விடை தெரியவில்லை

59. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | ஆண்பால் | (1) | அல்ல |
| (b) | பெண்பால் | (2) | அன்று |
| (c) | ஒன்றன்பால் | (3) | அல்லேன் |
| (d) | பலவின்பால் | (4) | அல்லள் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 1 | 4 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 1 | 2 | 3 | 4 |

(E) விடை தெரியவில்லை

60. கீழ்க்கண்டவற்றுள் சரியான தொடரைக் கண்டறிக.

(A) நான் அல்ல
(B) நான் அன்று
(C) நான் அல்லன்
(D) நான் அல்லேன்
(E) விடை தெரியவில்லை

61. சொல் – பொருள் – பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | ஆலாலம் | (1) | பிரமன் |
| (b) | அந்தம் | (2) | விஷ்ணு |
| (c) | அயன் | (3) | நஞ்சு |
| (d) | மால் | (4) | முடிவு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 3 | 2 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 1 | 3 | 4 | 2 |
| (D) | 2 | 1 | 3 | 4 |

(E) விடை தெரியவில்லை

62. சொல் – பொருள் – பொருந்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | கதலி | (1) | கமுகு |
| (b) | பூகம் | (2) | மாளிகை |
| (c) | கவரி | (3) | வாழை |
| (d) | மன்றல் | (4) | சாமரை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 4 | 3 | 1 | 2 |
| (D) | 4 | 2 | 1 | 3 |

(E) விடை தெரியவில்லை

63. பிழை திருத்துதல் (ஒரு–ஓர்)
சரியான விடையைத் தேர்க.

(A) ஒரு நண்பர்
(B) ஓர் தோழி
(C) ஒரு அறை
(D) ஓர் நூல்
(E) விடை தெரியவில்லை

64. பிழை திருத்துதல் (ஒரு – ஓர்).
புத்தகம்

(A) ஓர் புத்தகம்
(B) ஒரு புத்தகம்
(C) ஒன்று புத்தகம்
(D) ஓரிரு புத்தகம்
(E) விடை தெரியவில்லை

65. பிழை திருத்துதல். சரியான பதிலைத் தேர்ந்தெடு.
மாடு

(A) ஓர் மாடு
(B) ஒரு மாடு
(C) ஒன்று மாடு
(D) ஓரோர் மாடு
(E) விடை தெரியவில்லை

66. பிழையற்ற தொடரை எழுதுக.

(A) இவை நல்ல பழங்கள் அன்று
(B) இவை நல்ல பழங்கள் இல்லை
(C) இவை நல்ல பழங்கள் அல்ல
(D) இவை நல்ல பழங்கள் அல்லை
(E) விடை தெரியவில்லை

67. சரியான தொடரைத் தேர்ந்தெடுக்க.

(A) பண்டைக்கால அரங்கேற்றுதல் வழக்கம் சிறந்த நூல்
(B) நூல்களை அரங்கேற்றுதல் சிறந்த வழக்கம் பண்டைக்காலம்
(C) சிறந்த நூல்களை அரங்கேற்றுதல் பண்டைக்கால வழக்கம்
(D) பண்டைக்காலம் சிறந்த நூல்களை அரங்கேற்றுதல் வழக்கம்
(E) விடை தெரியவில்லை

68. எவ்வகைத் தொடர்
என் அண்ணன் நாளை வருவான்

(A) செய்தித் தொடர்
(B) உணர்ச்சித் தொடர்
(C) கட்டளைத் தொடர்
(D) தொகைநிலைத் தொடர்
(E) விடை தெரியவில்லை

69. சரியான கூட்டுப் பெயரைத் தெரிவு செய்க.

கல்

(A) கல் குவித்தல்
(B) கற் குவியல்
(C) கற்கள்
(D) கல் கூட்டம்
(E) விடை தெரியவில்லை

70. சரியான கூட்டுப் பெயரைத் தெரிவு செய்க.

புல்

(A) குவியல்
(B) குலை
(C) போர்
(D) கட்டு
(E) விடை தெரியவில்லை

71. ஆசிரியப்பாவின் ஓசை எது?

(A) துள்ளல் ஓசை
(B) செப்பல் ஓசை
(C) அகவல் ஓசை
(D) தூங்கல் ஓசை
(E) விடை தெரியவில்லை

72. மலர் உண்டு; பெயரும் உண்டு.

இரு தொடர்களையும் ஒரு தொடராக்கும் பொழுது எவ்வாறு அமையும்?

(A) மலர் பெயர் உண்டு
(B) மலர் உண்டு பெயர் உண்டு
(C) மலரும் பெயர் உண்டு
(D) மலரும் பெயரும் உண்டு
(E) விடை தெரியவில்லை

73. ஓடு என்ற வேர்ச்சொல்லின் வினையெச்சத் தொடர் எது?

(A) அருணா ஓடினாள்
(B) ஓடிய அருணா
(C) ஓடி வந்தாள்
(D) அருணாவிற்காக ஓடினாள்
(E) விடை தெரியவில்லை

74. கலைச் சொற்களை அறிதல்.
சரியான இணையைத் தேர்க.

(A) Space Technology – விண்வெளித் தொழில்நுட்பம்
(B) Nano Technology – விண்வெளிக் கதிர்கள்
(C) Ultraviolet rays – மீநுண் தொழில்நுட்பம்
(D) Cosmic rays – புறஊதாக் கதிர்கள்
(E) விடை தெரியவில்லை

75. "Cosmic Rays"

கலைச்சொல் அறிதல்

(A) விண்வெளிக் கதிர்கள்
(B) அகச்சிவப்புக் கதிர்கள்
(C) புறஊதாக் கதிர்கள்
(D) அணுக்கதிர்கள்
(E) விடை தெரியவில்லை

76. "Whirlwind" – கலைச்சொற்களை அறிதல்.

(A) நிலக்காற்று
(B) சுழல் காற்று
(C) கடற்காற்று
(D) பெருங்காற்று
(E) விடை தெரியவில்லை

77. கூற்று காரணம் – சரியா? தவறா?

"பகர்வனர் திரிதரு நகரவீதியும்
பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்
தூசும் துகிரும் ஆரமும் அகிலும்

கூற்று:

1. இவ்வடிகள் இடம்பெற்றுள்ள நூல் சிலப்பதிகாரம்
2. காருகர் என்பதன் பொருள் – சிற்பி
3. நகரம் என்பதன் எதிர்ச்சொல் – கிராமம்
4. இப்பாடலில் குறிப்பிடப்படும் நறுமணப் பொருள் சந்தனமும், அகிலும்

(A) கூற்று (1), (4) சரி
(B) கூற்று (1), (3) சரி
(C) கூற்று (1), (2), (3) சரி
(D) கூற்று (1), (3) சரி (4) மட்டும் தவறு
(E) விடை தெரியவில்லை

78. கூற்று – காரணம் சரியா? தவறா?

கூற்று 1 – ஒவ்வோர் ஆண்டும் ஜூன்–15–ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.

கூற்று 2 – காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் இரண்டாமிடம் என்பது எனக்குப் பெருமையே.

கூற்று 3 – காற்றின் ஆற்றலைப் பயன்படுத்திக் கடல் கடந்து வணிகம் செய்து அதில் வெற்றி கண்டவர்கள் தமிழர்.

(A) கூற்று 1 மட்டும் சரி
(B) கூற்று 1, 2 ஆகியன சரி
(C) கூற்று 3 மட்டும் சரி
(D) கூற்று 1, 3 ஆகியன சரி
(E) விடை தெரியவில்லை

79. குறில் நெடில் பொருள் வேறுபாடு அறிக.
கொடை – கோடை

(A) பணம் – மலை
(B) ஈகை – வெயில் காலம்
(C) குடை – ஈகை
(D) ஈகை – குளிர் காலம்
(E) விடை தெரியவில்லை

80. குறில் - நெடில் மாற்றம் பொருள் வேறுபாடு
மறி – மாறி

(A) எடுத்தல் - முடிவுறுதல்
(B) முடித்தல் - வேறுபடுதல்
(C) தடுத்தல் - வேறுபடுதல்
(D) வழங்கல் - வேறுபடுதல்
(E) விடை தெரியவில்லை

81. குறில் நெடில் மாற்றம் - பொருள் வேறுபாடு
வரம் - வாரம்

(A) இரக்கம் - கிழமை
(B) அருள் - கிழமை
(C) பூஜை - கிழமை
(D) கிழமை – அருள்
(E) விடை தெரியவில்லை

82. இரு பொருள் தருக.
திங்கள்

(A) நாள் - சூரியன்
(B) மாதம் - நிலவு
(C) கிழமை - விண்மீன்
(D) மதி - சந்திரன்
(E) விடை தெரியவில்லை

83. 'மதி' – என்பதன் இருபொருள்

(A) அறிவு, நிலவு
(B) அறிவு, சூரியன்
(C) இரவு, பகல்
(D) காகம், கரும்பு
(E) விடை தெரியவில்லை

84. தகுந்த சொல்லால் நிரப்புக.

சிறுமி - கையில் மலர்களை வைத்திருந்தாள்.

(A) தான்
(B) தனது
(C) தாம்
(D) தன்னால்
(E) விடை தெரியவில்லை

85. அடைப்புக்குள் உள்ள சரியான சொற்களை தகுந்த இடத்தில் சேர்க்க.

இடி ———— மழை வந்ததால் அருவி மலையில் ———— வீழ்ந்தது.

(A) உடன், இருந்து
(B) கொண்டு, விட்டு
(C) இருந்து, உடன்
(D) உடன், மேல்
(E) விடை தெரியவில்லை

86. சரியான சொல்லால் நிரப்புக.

மரங்களை வளர்த்து ———— (ஐ)க் காப்போம் ———— உரங்களைத் தவிர்த்து நிலவளம் காப்போம்.

(A) (மண்/வளம்)
(B) (செயற்கை/இயற்கை)
(C) (இயற்கை/செயற்கை)
(D) (வளம்/மண்)
(E) விடை தெரியவில்லை

87. சரியான இணைப்புச் சொல்

மக்களுக்குச் செய்யும் பணியே இறைவனுக்குச் செய்யும் பணி என்று வாழ்ந்தார். ———— அமைதிக்கான நோபல் பரிசு அவரைத் தேடி வந்தது.

சரியான இணைப்புச் சொல்லை தேர்வு செய்க.

(A) அதுபோல
(B) ஏனெனில்
(C) அதனால்
(D) ஆகையால்
(E) விடை தெரியவில்லை

88. சரியான இணைப்புச் சொல்.

தமிழகத்தில் மழை பெய்து வருகிறது. ———— இரண்டு நாள் மழை நீடிக்கும் என வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு.

(A) ஏனெனில்
(B) ஆகையால்
(C) மேலும்
(D) அதனால்
(E) விடை தெரியவில்லை

89. சரியான இணைப்புச் சொல்லால் நிரப்புக.

நாம் இனிய சொற்களைப் பேச வேண்டும் ———— துன்பப்பட நேரிடும்.

(A) இல்லையென்றால்
(B) அதனால்
(C) மேலும்
(D) எனவே
(E) விடை தெரியவில்லை

90. சரியான வினாச்சொல்லை தேர்ந்தெடு.

திருக்குறளை இயற்றியவர் ————

(A) யார்?
(B) எவ்வது?
(C) யாவர்?
(D) எப்படி?
(E) விடை தெரியவில்லை

91. சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு.

எறும்பு பாடுபடுவது ————

(A) எதற்காக?
(B) ஏன்?
(C) எப்படி?
(D) என்ன?
(E) விடை தெரியவில்லை

92. பொருத்தமான காலத்தைச் சுட்டுக.

கண்மணி நாளை பாடம் படிப்பாள்.

(A) இறந்தகாலம்
(B) எதிர்காலம்
(C) நிகழ்காலம்
(D) சங்ககாலம்
(E) விடை தெரியவில்லை

93. பொருத்தமான காலம் அமைத்தல்

அண்ணல் காந்தி அன்றே சொன்னார்.

(A) எதிர்காலம்
(B) நிகழ்காலம்
(C) முக்காலம்
(D) இறந்தகாலம்
(E) விடை தெரியவில்லை

94. பொருத்தமான காலம் அமைத்தல்.

பூரணர் இல்லம் நோக்கி நடக்கின்றனர்.

(A) நிகழ்காலம்
(B) எதிர்காலம்
(C) இறந்தகாலம்
(D) முக்காலம்
(E) விடை தெரியவில்லை

95. விடை வகைகள்

"இது செய்வாயா"? என்று வினவிய போது, "நீயே செய்" என்று ஏவிக் கூறுவது

(A) நேர் விடை
(B) ஏவல் விடை
(C) மறை விடை
(D) சுட்டு விடை
(E) விடை தெரியவில்லை

96. பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு

அவன் திருமணத்திற்குப் போயி வாரான்

(A) அவன் திருமணத்திற்குப் போய் வருகிறான்
(B) அவன் திருமணத்திற்குப் போயி வாரான்
(C) அவன் திருமணத்திற்குப் போயி வாரேன்
(D) அவன் திருமணத்திற்குப் போய் வாரான்
(E) விடை தெரியவில்லை

97. பேச்சு வழக்கிற்கு ஏற்ற எழுத்து வழக்குச் சொற்களை எழுதுக.

அவனெ கூட்டிக்கிட்டு வர்றேன்.

(A) அவனைக் கூட்டிக்கொண்டு வருகிறேன்
(B) அவனைக் கூட்டித்தான் வருவேன்
(C) அவனெ கூட்டிக்கினு வாரேன்
(D) அவனைக் கூப்பிட்டு வருகிறேன்
(E) விடை தெரியவில்லை

98. பேச்சு வழக்கு – எழுத்துவழக்கு – கண்டறிக.

சிறிது ஒக்காந்து போ

(A) படுத்து

(B) உட்கார்ந்து

(C) குதித்து

(D) நடந்து

(E) விடை தெரியவில்லை

99. நிறுத்தற்குறிகளை அறிதல்.

சரியான நிறுத்தற்குறிகளைக் கொண்ட தொடரைத் தேர்வு செய்க.

(A) திருக்குறள் பற்றிப் பேசாத புலவர், இலர், எழுதாத அறிஞர், இலர், பள்ளிப் பருவத்திலும் திருக்குறள் படிக்கப்படுகின்றது.

(B) திருக்குறள் பற்றிப் பேசாத புலவர் இலர்; எழுதாத அறிஞர், எழுத்தாளர் இலர். பள்ளிப் பருவத்திலும் திருக்குறள் படிக்கப்படுகின்றது.

(C) திருக்குறள், பற்றிப் பேசாத புலவர், இலர், எழுதாத அறிஞர் எழுத்தாளர் இலர், பள்ளிப் பருவத்திலும் திருக்குறள் படிக்கப்படுகின்றது.

(D) திருக்குறள் பற்றிப் பேசாத புலவர் இலர். எழுதாத அறிஞர் எழுத்தாளர் இலர்; பள்ளிப் பருவத்திலும் திருக்குறள் படிக்கப்படுகின்றது.

(E) விடை தெரியவில்லை

100. நிறுத்தற்குறிகளை அறிதல்

சரியான நிறுத்தற்குறிகளைக் கொண்ட தொடரைத் தேர்வு செய்க.

(A) "இது என்னோடு பேசியதே!", எனக் கேட்டான் கணியன். ஆம் இது பேசும், பாடும், வீட்டு வேலைகள் செய்யும்.

(B) இது என்னோடு, பேசியதே, எனக் கேட்டான் கணியன். ஆம் இது பேசும் பாடும், வீட்டு வேலைகள் செய்யும்,

(C) இது என்னோடு பேசியதே எனக் கேட்டான் கணியன், ஆம்! இது பேசும்! பாடும் வீட்டு வேலைகள் செய்யும்.

(D) "இது என்னோடு பேசியதே" எனக் கேட்டான் கணியன் ஆம் இது பேசும், பாடும், வீட்டு வேலைகள் செய்யும்.

(E) விடை தெரியவில்லை

# பகுதி-அ - கட்டாயத் தமிழ்மொழித் தகுதித் தேர்வு
## (பத்தாம் வகுப்பு தரம்)

# Part-A - Compulsory Tamil Language
## Eligibility Test – (SSLC Standard)

வினாக்கள் : 1–100 மொத்த மதிப்பெண்கள் : 150

**Questions : 1–100** **Total Marks : 150**

---

1. Forest Conservator-இச்சொல்லுக்கு இணையான தமிழ்க் கலைச்சொல் தேர்க :
   (A) வனவியல் ஆராய்ச்சியாளர் (B) வனவியல் நிபுணர்
   (C) வனத்துறை அலுவலர் (D) வனப் பாதுகாவலர்
   (E) விடை தெரியவில்லை

2. 'TRANSLATION' - என்பதற்கு இணையான கலைச்சொல் தருக.
   (A) மொழிபெயர்ப்பு (B) சீர்திருத்தம்
   (C) விழிப்புணர்வு (D) கதைப்பாடல்
   (E) விடை தெரியவில்லை

3. பாரதியின் பாடல்கள் உள்ளங்கை நெல்லிக் கனிப் போல அனைவருக்கும் விளங்கும் – உவமையின் பொருளை எழுதுக.
   (A) ஒற்றுமையின்மை (B) வெளிப்படைத் தன்மை
   (C) தடையின்றி மிகுதியாக (D) எளிதில் மனத்தில் பதிதல்
   (E) விடை தெரியவில்லை

4. உவமையின் பொருளறிந்து சரியான தொடரை எழுதுக.
   உடலும் உயிரும் போல ————
   (A) எளிதில் மனதில் பதிதல் (B) இணைபிரியாமை
   (C) பயனற்ற நிகழ்வு (D) எதிர்பாராத நிகழ்வு
   (E) விடை தெரியவில்லை

5. 'நெல்லிக்காய் மூட்டையைக் கொட்டினாற் போல' என்ற உவமைக்கு ஏற்ற பொருள் தருக.
   (A) வேற்றுமையில் ஒற்றுமை (B) வெளிப்படைத் தன்மை
   (C) ஒற்றுமையின்மை (D) எதிர்பாரா நிகழ்வு
   (E) விடை தெரியவில்லை

6. மடைதிறந்த வெள்ளம் போல் – உவமையின் பொருளை எழுதுக.
   (A) தற்செயல் நிகழ்வு (B) தடையின்றி மிகுதியாக
   (C) எதிர்பாரா நிகழ்வு (D) பயனற்ற செயல்
   (E) விடை தெரியவில்லை

7. இருவினைகளின் பொருள் வேறுபாடு அறிந்து சரியான தொடரை தெரிவு செய்க :
பணிந்து, பணித்து ————

(A) கயல்விழி பணித்ததால், பணிந்து படித்தாள்

(B) ஆசிரியர் பணிந்து கூறினார். கயல்விழி பணித்து படித்தாள்

(C) கயல்விழி பணித்து படித்ததால் ஆசிரியர் பணிந்தார்

(D) ஆசிரியர் பணித்ததால் கயல்விழி பணிந்து படித்தாள்

(E) விடை தெரியவில்லை

8. சரியான தொடர்களைத் தேர்க.
பணிந்து - பணித்து

I. தலைவர் பணித்த வேலையைத் தொண்டன் பணிந்து செய்தான்

II. தலைவர் பணிந்த வேலையைத் தொண்டன் பணித்து செய்தான்

III. தலைவர் பணித்ததால் தொண்டன் பணிந்தான்

IV. தலைவர் பணிந்ததால் தொண்டன் பணித்தான்

(A) I மற்றும் III சரி

(B) II மற்றும் IV சரி

(C) I மற்றும் II சரி

(D) II மற்றும் III சரி

(E) விடை தெரியவில்லை

9. சொற்கள் ஒழுங்கான வரிசையில் அமைந்த தொடரினைக் கண்டறிக.

(A) ஒத்த அனைவரும் இயல்புடையவர்களே பிறப்பால் மக்கள்

(B) பிறப்பால் மக்கள் அனைவரும் ஒத்த இயல்புடையவர்களே

(C) மக்கள் அனைவரும் இயல்புடையவர்களே பிறப்பால் ஒத்த

(D) அனைவரும் பிறப்பால் ஒத்த இயல்புடையவர்களே மக்கள்

(E) விடை தெரியவில்லை

10. அகர வரிசைப்படுத்தி எழுதப்பட்ட தொடரை தெரிவு செய்க :

பெண்கள், பாரதம், புதுமை, பீலி, பேருந்து, பூமி, பழங்கள், பையன்

(A) பழங்கள், பாரதம், பீலி, புதுமை, பூமி, பெண்கள், பேருந்து, பையன்

(B) பழங்கள், பாரதம், புதுமை, பூமி, பீலி, பெண்கள், பேருந்து, பையன்

(C) பழங்கள், பாரதம், பீலி, புதுமை, பூமி, பையன், பெண்கள், பேருந்து

(D) பழங்கள், பாரதம், புதுமை, பூமி, பெண்கள், பீலி, பேருந்து, பையன்

(E) விடை தெரியவில்லை

11. சொற்களை அகர வரிசைப்படி சீர் செய்க :

கோலம், குருவி, கேணி, கடல்

(A) குருவி, கடல், கோலம், கேணி

(B) கடல், கோலம், குருவி, கேணி

(C) கடல், குருவி, கேணி, கோலம்

(D) கோலம், கடல், குருவி, கேணி

(E) விடை தெரியவில்லை

12. "கொடு" என்னும் வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயர் அறிக.

(A) கொடுத்து (B) கொடுத்தது

(C) கொடுத்தோர் (D) கொடுத்தல்

(E) விடை தெரியவில்லை

13. வேர்ச்சொல்லைக் கொடுத்து வினைமுற்றை அறிதல் :

பேசு ————

(A) பேசிய (B) பேசினான்

(C) பேசுதல் (D) பேசி

(E) விடை தெரியவில்லை

14. "காண்" என்னும் வேர்ச்சொல்லின் பதம் அறிக.

(A) உண்டேன் (B) கண்டேன்

(C) பார்ப்பேன் (D) கற்பேன்

(E) விடை தெரியவில்லை

15. ஒலி வேறுபாடறிந்து பொருள் தருக.

விரை - விறை

(A) விதை - வினை
(B) விதை - மரத்தல்
(C) மறத்தல் - மரத்தல்
(D) வித்து - மறத்தல்
(E) விடை தெரியவில்லை

16. ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான இணையைத் தெரிவு செய்க.

விளை - விழை

(A) மதிப்பு - உண்டாக்குதல்
(B) விரும்பு - மதிப்பு
(C) உண்டாக்குதல் - விரும்பு
(D) விருப்பு - இருப்பு
(E) விடை தெரியவில்லை

17. ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான சொற்றொடரைத் தெரிவு செய்க.

(A) மணிமேகலை மணி பள்ளவத் தீவிற்குச் சென்றால்
(B) மணிமேகலை மணி பல்லவத் தீவிற்குச் சென்றாள்
(C) மணி மேகளை மணி பள்ளவத் தீவிற்குச் சென்றாள்
(D) மணிமேகலை மனிபல்லவத் தீவிற்குச் சென்றாள்
(E) விடை தெரியவில்லை

18. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லறிதல்.

Nautical Mile.

(A) கடல்மைல்
(B) தரைமைல்
(C) ஏவுகணை
(D) வானத்துக் கோள்கள்
(E) விடை தெரியவில்லை

19. ஆங்கிலச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல்லை எழுதுக :

க்ராப் (crop)

(A) உலவி
(B) ஏவி
(C) உறை
(D) செதுக்கி
(E) விடை தெரியவில்லை

20. எதிர்ச்சொல்லை எடுத்து எழுதுக :

உதித்த என்ற சொல்லின் எதிர்ச்சொல் ————

(A) நிறைந்த
(B) தோன்றிய
(C) மறைந்த
(D) குறைந்த
(E) விடை தெரியவில்லை

21. உருவகத் தொடருக்குப் பொருந்தாத சொல்லைத் தேர்க.

(A) முகமதி
(B) முகமலர்
(C) முகமன்
(D) முகத்தாமரை
(E) விடை தெரியவில்லை

22. பொருந்திய இணைகளைத் தேர்க :

I. பரீஉம் - இன்னிசை அளபெடை

II. தழீஇ - சொல்லிசை அளபெடை

III. வாழ்ழ்க்கை - ஒற்றளபெடை

IV. தருஉம் - செய்யுளிசையளபெடை

(A) I, IV
(B) II, III
(C) II, IV
(D) I, III
(E) விடை தெரியவில்லை

23. சரியான எதிர்ச் சொல் அமைந்த விடையைக் கண்டறிக.

(A) இரவலர் - புரவலர்
(B) எளிது - ஏற்றல்
(C) ஈதல் - உறவினர்
(D) அந்நியர் - அரிது
(E) விடை தெரியவில்லை

24. சேர்த்து எழுதுக :
ஆத்தி + சூடி

(A) ஆத்திச்சூடி
(B) ஆத்திசூடி
(C) ஆத்திசுவடி
(D) ஆத்துசூடி
(E) விடை தெரியவில்லை

25. கொடுக்கப்பட்டுள்ள சொல்லின் சரியான கூட்டுப் பெயரை தெரிவு செய்க.

ஆடு

(A) ஆடு கூட்டம்
(B) ஆட்டு மந்தை
(C) ஆடு குவியல்
(D) ஆடு சாரை
(E) விடை தெரியவில்லை

26. எதிர் + ஒலிக்க என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

(A) எதிரலிக்க
(B) எதிர்ஒலிக்க
(C) எதிரொலிக்க
(D) எதிர்ரொலிக்க
(E) விடை தெரியவில்லை

27. பொருத்தமான பொருளைத் தெரிவு செய்க.

மக்கள் கரந்தைப் பூவை சூடிச் செல்வது

(A) பகைவர் நாட்டை கைப்பற்றுதல்
(B) ஆநிரைகளை மீட்டல்
(C) ஆநிரைகளை கவர்தல்
(D) பகைவரை எதிர்த்து போரிடல்
(E) விடை தெரியவில்லை

28. கூற்று, காரணம் - சரியா? தவறா?

கூற்று : பந்து உருண்டது இது தன்வினை

காரணம் : எழுவாய் ஒரு வினையைச் செய்தால் அது தன்வினை எனப்படும்

(A) கூற்று : சரி, காரணம் : சரி

(B) கூற்று : தவறு, காரணம் : தவறு

(C) கூற்று : சரி, காரணம் : தவறு

(D) கூற்று : தவறு, காரணம் : சரி

(E) விடை தெரியவில்லை

29. கூற்று : 'என் அம்மை வந்தாள்' என்று மாட்டைப் பார்த்து கூறுவது திணைவழுவமைதி

காரணம் : உவப்பின் காரணமாக அஃறிணை, உயர்திணையாகக் கொள்ளப்பட்டது

(A) கூற்றும் காரணமும் தவறு

(B) கூற்று சரி காரணம் தவறு

(C) கூற்றும் காரணமும் சரி

(D) கூற்று தவறு காரணம் சரி

(E) விடை தெரியவில்லை

30. கூற்றும் காரணமும் பொருந்தி வருகிறதா எனக் கண்டறிக.

கூற்று : தமிழ் மருத்துவத்தில் பக்க விளைவுகள் இல்லை

காரணம் : மருந்து என்பதே உணவின் நீட்சியாக இருக்கிறது

(A) கூற்று சரி; காரணம் பொருந்தவில்லை

(B) காரணம் சரி; காரணத்திற்கேற்ற கூற்று இல்லை

(C) கூற்றும் காரணமும் பொருந்துகிறது

(D) கூற்றும் காரணமும் பொருந்தவில்லை

(E) விடை தெரியவில்லை

கீழ்க்கண்ட பத்தியைப் படித்து வினாவிற்குரிய சரியான விடையைத் தேர்ந்தெடு :

ஆயிரம் யானைகளைப் போரில் வென்ற அரசனுக்காகப் பாடப்படும் இலக்கியவகை பரணி. 'ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மாணவனுக்கு வகுப்பது பரணி' என்பது பரணியின் இலக்கணம். இவ்விலக்கியம் தொண்ணூற்றாறு சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று. அரசர்கள் இருவருக்கிடையேயான போரில் தோற்ற அரசனது நாட்டின் பெயரால் பரணி பாடப்படும். போருக்குரிய தெய்வமாகக் காளியைக் கருதுவர். பரணி இலக்கியங்களுள் மிகச் சிறந்தது கலிங்கத்துப்பரணி. போரில் குலோத்துங்க மன்னனிடம் கலிங்க நாட்டு மன்னன் தோற்றுப் போனான். அதனால் கலிங்கத்துப்பரணி எனப் பெயர் சூட்டப்பட்டது. இந்நூல் சயங்கொண்டாரால் பாடப்பட்டது.

31. ஆயிரம் யானைகளைப் போரில் வென்ற அரசனுக்காகப் பாடப்படும் இலக்கிய வகை எது?

(A) பள்ளு
(B) பரணி
(C) பரிபாடல்
(D) பத்துப்பாட்டு
(E) விடை தெரியவில்லை

32. போருக்குரிய தெய்வமாகக் ———— கருதுவர்.

(A) முருகன்
(B) திருமால்
(C) கண்ணன்
(D) காளி
(E) விடை தெரியவில்லை

33. 'அமர்' என்பதன் பொருள் என்ன?

(A) யானை
(B) போர்
(C) வெற்றி
(D) பரணி
(E) விடை தெரியவில்லை

34. தொண்ணூற்றாறு - பிரிக்கும் முறை ————

(A) தொண்ணூறு + ஆறு
(B) தொண் + ஆறு
(C) தொள்ளாயிரம் + ஆறு
(D) தொள் + ஆறு
(E) விடை தெரியவில்லை

35. பரணி இலக்கியம் யாரால் இயற்றப்பட்டது?

(A) திருவள்ளுவர்
(B) இளங்கோவடிகள்
(C) பாரதியார்
(D) சயங்கொண்டார்
(E) விடை தெரியவில்லை

36. சொல் – பொருள் – பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | தூசு | 1. | பவளம் |
| (b) | துகிர் | 2. | பட்டு |
| (c) | வெறுக்கை | 3. | விலை |
| (d) | நொடை | 4. | செல்வம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 3 | 2 | 4 | 1 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 2 | 1 | 4 | 3 |
| (E) | விடை தெரியவில்லை | | | |

37. சொல் – பொருள் – பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | நேமி | 1. | நற்சொல் |
| (b) | தூஉய் | 2. | தோள் |
| (c) | விரிச்சி | 3. | சக்கரம் |
| (d) | சுவல் | 4. | தூவி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 3 | 1 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 4 | 2 | 1 | 3 |
| (D) | 3 | 1 | 2 | 4 |
| (E) | விடை தெரியவில்லை | | | |

38. பின்வரும் தொடரில் உள்ள பிழையைத் திருத்தி எழுதுக.

அது ஒரு இனிய பாடல்

(A) ஒரு இனிய பாடல்
(B) ஒரு இனிய பாடல் பாடப்படுகிறது
(C) அஃது ஓர் இனிய பாடல்
(D) ஓர் இனிய பாடல்
(E) விடை தெரியவில்லை

39. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க (குடி)

(A) தோசை ————————

(B) தண்ணீர் ————————

(C) கடலை மிட்டாய் ————————

(D) சோறு ————————

(E) விடை தெரியவில்லை

40. அடைப்புக்குள் கொடுக்கப்பட்டுள்ள சொல்லை ஏற்ற இடத்தில் நிரப்புக. (மண்டா)

(A) ———— என்பது நடுத்திராவிட மொழி

(B) ———— என்பது வட திராவிட மொழி

(C) ———— என்பது தென் திராவிட மொழி

(D) ———— என்பது சீன-திபெத்திய மொழி

(E) விடை தெரியவில்லை

41. பொருத்தமான இணைப்புச் சொல்லைத் தேர்ந்தெடு :

தீயினால் சுடப்பட்டவர்கூட பிழைத்துக்கொள்ள முடியும். ———— பெரியவர்களுக்குத் தீங்கு செய்தவர் தப்ப முடியாது.

(A) எனவே (B) அதுபோல

(C) அதனால் (D) ஆனால்

(E) விடை தெரியவில்லை

42. சரியான இணைப்புச் சொல்லைத் தெரிவு செய்க :

'மலேயாவில் உள்ள தமிழர்களின் இரத்தம் நேதாஜியின் மூளையில் கட்டியாக உள்ளது' என்று சர்ச்சில் கூறினார். ———— நேதாஜி இந்தத் தமிழினம் தான் ஆங்கிலேயர்களை அழிக்கும் என்று பதில் கூறினார்.

(A) ஆகவே (B) அதனால்

(C) அவ்வாறு (D) அதற்கு

(E) விடை தெரியவில்லை

43. பொருத்தமான இணையைத் தேர்க.

(A) அவன் வந்தான் – இறந்தகாலம்

(B) அவள் வருகிறாள் – எதிர்காலம்

(C) அது வந்தது – நிகழ்காலம்

(D) நீ வந்தாய் – எதிர்காலம்

(E) விடை தெரியவில்லை

44. அடைப்புக்குள் உள்ள சொல்லை நிகழ்காலமாக மாற்றுக (நடத்து)

(A) ஆசிரியர் இப்போது பாடம் நடத்துகிறார்

(B) ஆசிரியர் நேற்று பாடம் நடத்துகிறார்

(C) ஆசிரியர் நாளை பாடம் நடத்துகிறார்

(D) ஆசிரியர் நாளை பாடம் நடத்தினார்

(E) விடை தெரியவில்லை

45. பொருத்தமான சொல்லைச் சேர்த்து புதிய சொல் உருவாக்குக :

தேன்

(A) மழை

(B) விளக்கு

(C) மணி

(D) விலங்கு

(E) விடை தெரியவில்லை

46. பிழையான இணையைத் தேர்க :

(A) நாகை - பட்டினம்

(B) செங்கல் - புரம்

(C) உதகை - மண்டலம்

(D) பட்டு - கோட்டை

(E) விடை தெரியவில்லை

47. பேச்சு வழக்கிற்கு இணையான எழுத்து வழக்கைத் தேர்க :

எங்கருந்து வர்ரீங்க

(A) எங்க இருந்து வருகிறீர்கள்

(B) எங்கேயிருந்து வர்ரீங்கள்

(C) எங்க இருந்து வாரீர்

(D) எங்கிருந்து வருகிறீர்கள்

(E) விடை தெரியவில்லை

48. பொருத்தமான நூலினைத் தெரிவு செய் :

"மருந்தே ஆயினும் விருந்தொடு உண்" என்ற வரி இடம்பெற்ற நூல் எது ?

(A) குறுந்தொகை
(B) கொன்றை வேந்தன்
(C) புறநானூறு
(D) தொல்காப்பியம்
(E) விடை தெரியவில்லை

49. மன்னார்குடியின் மரூஉ – கண்டறிக.

(A) மந்தை
(B) மஞ்சை
(C) மன்னார்
(D) மன்னை
(E) விடை தெரியவில்லை

50. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்களில் பொருந்தியது தேர்க.

(A) பொக்கிஷம் – செல்வம்
(B) சாஸ்தி – குறைவு
(C) விஸ்தாரம் – குறுகிய பரப்பு
(D) சிங்காரம் – கோரம்
(E) விடை தெரியவில்லை

51. 'RATIONAL' – என்ற சொல்லுக்கு இணையான கலைச்சொல் தருக :

(A) சீர்திருத்தம்
(B) பகுத்தறிவு
(C) நேர்மை
(D) தத்துவம்
(E) விடை தெரியவில்லை

52. 'Transform' – என்ற சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல்லைத் தேர்க :

(A) உருமாற்றுதல்
(B) தேர்தல்
(C) செயல்படுத்துதல்
(D) படியெடுத்தல்
(E) விடை தெரியவில்லை

53. அலுவல் சார்ந்த கலைச் சொற்கள்
தவறான இணையைத் தேர்ந்தெடுக்க :

(A) Morpheme – உருபன்

(B) Treasury – கருவூலம்

(C) Combination – புணர்ச்சி

(D) Cave Temple – கற்கோவில்

(E) விடை தெரியவில்லை

54. சரியான விடை வகையைத் தேர்ந்தெடுத்தெழுதுக.

'நீ விளையாட வரவில்லையா?' என்ற வினாவிற்குக் 'கால் வலிக்கும்' என்று விடை கூறுவது ———— விடை ஆகும்.

(A) ஏவல் விடை

(B) உறுவது கூறல் விடை

(C) உற்றது உரைத்தல் விடை

(D) வினா எதிர் வினாதல் விடை

(E) விடை தெரியவில்லை

55. "கடைக்குப் போவாயா?" என்ற கேள்விக்குப் 'போக மாட்டேன்' என மறுத்துக் கூறல், ———— விடை ஆகும்.

(A) நேர் விடை

(B) ஏவல் விடை

(C) மறை விடை

(D) உறுவது கூறல் விடை

(E) விடை தெரியவில்லை

56. 'உனக்குக் கதை எழுதத் தெரியுமா?' என்ற வினாவிற்கு 'எனக்குக் கவிதை எழுதத் தெரியும்' என்று கூறுவது

(A) நேர் விடை

(B) வினா எதிர் வினாதல் விடை

(C) இனமொழி விடை

(D) உற்றது உரைத்தல் விடை

(E) விடை தெரியவில்லை

57. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுக :

"அப்பா சொன்னார்"

(A) கட்டளை வாக்கியம்
(B) பிறவினை
(C) செய்வினை
(D) செயப்பாட்டு வினை
(E) விடை தெரியவில்லை

58. பின்வரும் தொடர்வகையை அறிந்து சரியான விடையை தேர்வு செய்க :

என் அண்ணன் நாளை வருவான் ————.

(A) விளித்தொடர்
(B) வினாத் தொடர்
(C) பிறவினைத் தொடர்
(D) செய்தித் தொடர்
(E) விடை தெரியவில்லை

59. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுக்க :

பாரதிதாசனின் இயற்பெயர் 'சுப்புரத்தினம்'

(A) பாரதிதாசனின் இயற்பெயர் யாது?
(B) பாரதிதாசன் யார்?
(C) சுப்புரத்தினம் என்று யார் அழைத்தது?
(D) பாரதிதாசனின் இயற்பெயர் சுப்புரத்தினமா?
(E) விடை தெரியவில்லை

60. விடைக்கேற்ற வினாவை தெரிவு செய்க :

விடை : கல்வி கற்றவர்க்கு அவர் கற்ற கல்வியே அழகு. ஆகையால் அழகு சேர்க்கும் பிற அணிகலன்கள் தேவையில்லை.

(A) கல்வி கற்றவர்க்கு ஏன் பிற அணிகலன்கள் தேவையில்லை?
(B) எதனால் பிற அணிகலன்களை தேவையில்லை?
(C) யாருக்கு அழகு செய்ய வேறு அணிகலன்கள் தேவை?
(D) அழகு செய்ய பிற அணிகலன்கள் தேவையா?
(E) விடை தெரியவில்லை

61. சொற்களை ஒழுங்குபடுத்திச் சரியான தொடரைத் தேர்க :

(A) நம் முன்னோரின் வாழ்க்கை இயைந்தது இயற்கையோடு

(B) நம் முன்னோரின் வாழ்க்கை இயற்கையோடு இயைந்தது

(C) இயற்கையோடு வாழ்க்கை நம் முன்னோரின் இயைந்தது

(D) இயற்கையோடு இயைந்தது வாழ்க்கை நம் முன்னோரின்

(E) விடை தெரியவில்லை

62. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குக.

மறையும் கதிரவன் காலையில் மாலையில் உதித்து.

(A) கதிரவன் மறையும் காலையில் உதித்து மாலையில்

(B) மாலையில் காலையில் உதித்து மறையும் கதிரவன்

(C) கதிரவன் காலையில் உதித்து மாலையில் மறையும்

(D) மறையும் காலையில் கதிரவன் உதித்து மாலையில்

(E) விடை தெரியவில்லை

63. அகர வரிசைப்படுத்துக :

ஒழுக்கம் உயிர் ஆடு எளிமை

அன்பு இரக்கம் ஓசை ஐந்து

ஈதல் ஊக்கம் ஏது ஔவை

(A) அன்பு, ஆடு, இரக்கம், ஈதல், உயிர், ஊக்கம், எளிமை, ஏது, ஐந்து, ஒழுக்கம், ஓசை, ஔவை

(B) இரக்கம், ஊக்கம், ஒழுக்கம், எளிமை, ஓசை, ஔவை, ஈதல், உயிர், ஐந்து, ஆடு, அன்பு, ஏது

(C) ஔவை, ஒழுக்கம், ஓசை, ஈதல், உயிர், ஊக்கம், அன்பு, ஆடு, இரக்கம், எளிமை, ஏது, ஐந்து

(D) இரக்கம், உயிர், ஊக்கம், ஏது, எளிமை, ஐந்து, அன்பு, ஆடு, ஒழுக்கம், ஓசை, ஔவை, ஈதல்

(E) விடை தெரியவில்லை

64. வேர்ச்சொல்லைத் தேர்வு செய்க.

நடக்கிறது

(A) நடக்
(B) நடக்கும்
(C) நடந்த
(D) நட
(E) விடை தெரியவில்லை

65. 'தருகின்றனர்' - இதன் வேர்ச்சொல் அறிக.

(A) தா
(B) தந்த
(C) தரு
(D) தந்து
(E) விடை தெரியவில்லை

66. ஒரு பொருள் தரும் பல சொற்கள்

முகில்

(A) மஞ்ஞை, மேகம், கொண்டல்
(B) கொண்டல், களி, மேகம்
(C) கார், கொண்டல், மேகம்
(D) கார், மேகம், மஞ்ஞை
(E) விடை தெரியவில்லை

67. தாவரத்தின் நுனிப் பகுதிகளைக் குறிக்கும் சொற்களுள் அல்லாதது

(A) துளிர்
(B) முறி
(C) குருத்து
(D) தோகை
(E) விடை தெரியவில்லை

68. காடு எனும் பொருள் தரும் சொற்களைக் கண்டறிக.

(A) அரண், அடவி
(B) ஆலை, ஆரணி
(C) இலவு, இலை
(D) ஈகை, ஈன்று
(E) விடை தெரியவில்லை

69. மரபுப் பிழையுள்ள தொடரைச் சுட்டுக.

(A) சிங்கக் குருளை உருண்டு விளையாடுகிறது

(B) குருவிக் குஞ்சு பறக்க முயல்கிறது

(C) மாங்கன்று துளிர்த்து வருகிறது

(D) கீரிக்குட்டி வரப்பில் ஓடுகிறது

(E) விடை தெரியவில்லை

70. வழுவற்ற தொடர் எழுதுக :

(A) கயல் பானை செய்யக் கற்றுக் கொண்டாள்

(B) கயல் பானை அமைக்கக் கற்றுக் கொண்டாள்

(C) கயல் பானை சுடக் கற்றுக் கொண்டாள்

(D) கயல் பானை வனையக் கற்றுக் கொண்டாள்

(E) விடை தெரியவில்லை

71. பிழையை நீக்கி எழுதுக :

நல்ல தமிழுக்கு எழுதுவோம்

(A) தமிழ்

(B) தமிழில்

(C) தமிழால்

(D) தமிழுக்கும்

(E) விடை தெரியவில்லை

72. 'புலி' - என்ற விலங்கினுடைய சரியான இளமைப் பெயரைக் கண்டறிக :

(A) குட்டி

(B) கன்று

(C) பறழ்

(D) குருளை

(E) விடை தெரியவில்லை

73. எதிர்ச்சொல்லைத் தேர்ந்தெடுத்தெழுதுதல் :

காடுருவாக்கி

(A) காட்டை எரித்து (B) காடழித்து

(C) காட்டை வெட்டி (D) காட்டை கீரி

(E) விடை தெரியவில்லை

74. தொன்மை - என்ற சொல்லின் எதிர்ச்சொல்லை எழுதுக

(A) புதுமை (B) ப்ழமை

(C) சிறுமை (D) பெருமை

(E) விடை தெரியவில்லை

75. நானிலம் - என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

(A) நா + னிலம் (B) நான்கு + நிலம்

(C) நா + நிலம் (D) நான் + நிலம்

(E) விடை தெரியவில்லை

76. பிரித்து எழுதுக :

தானென்று

(A) தானெ + என்று (B) தான் + என்று

(C) தா + னென்று (D) தான் + ளென்று

(E) விடை தெரியவில்லை

77. பிரித்தெழுதுக :

வல்லுருவம்

(A) வல் + உருவம் (B) வன்மை + உருவம்

(C) வல்ல + உருவம் (D) வல்லு + உருவம்

(E) விடை தெரியவில்லை

78. "கத்துங் குயிலோசை - சற்றே வந்து
காதிற் படவேணும்" - பாரதியார்.
இதில் வந்துள்ள வழுவமைதி

(A) இட வழுவமைதி
(B) திணை வழுவமைதி
(C) கால வழுவமைதி
(D) மரபு வழுவமைதி
(E) விடை தெரியவில்லை

79. ஆய்த எழுத்து ———— இடமாகக் கொண்டு பிறக்கிறது.

(A) மார்பு
(B) கழுத்தை
(C) மூக்கை
(D) தலையை
(E) விடை தெரியவில்லை

80. கலைச்சொல் அறிதல் :

CONSONANT

(A) உயிரெழுத்து
(B) மெய்யெழுத்து
(C) ஒப்பெழுத்து
(D) சார்பெழுத்து
(E) விடை தெரியவில்லை

81. கலைச்சொல்லின் சரியான தமிழ்ச்சொல்லை தெரிவு செய்க :

Bio Diversity

(A) உயிரியல் மண்டலம்
(B) தாவரவியல் மண்டலம்
(C) பல்லுயிர் மண்டலம்
(D) நுண்ணுயிரி மண்டலம்
(E) விடை தெரியவில்லை

82. கொடுக்கப்பட்டுள்ள சொற்களுக்கு குறில், நெடில் பொருள் வேறுபாடு அறிந்து சரியானத் தொடரைத் தேர்ந்தெடுக்க :

கல் - கால்

(A) கல் விழுந்து காலில் காயமானது

(B) கால் விழுந்து கல்லில் காயமானது

(C) காலில் சிலை செதுக்க முடியும்

(D) கல் என்பது மனித உடலின் ஓர் உறுப்பு

(E) விடை தெரியவில்லை

83. இருபொருள் தருக :

மாலை

(A) அணி, நாள்

(B) சினம், தலை

(C) கடல், முடி

(D) பொழுது, தார்

(E) விடை தெரியவில்லை

84. கொடுக்கப்பட்டுள்ள சொல்லுக்கு இரு பொருள் தருக :

தானம்

(A) கொடை, ஈகை

(B) உண்மை, உரிமை

(C) பாவம், பழி

(D) கோபம், துன்பம்

(E) விடை தெரியவில்லை

85. இருபொருள் தரும் இணையைத் தேர்ந்தெடு :

அரண்

(A) பாதுகாப்பு, கோட்டை

(B) சிவன், பாதுகாப்பு

(C) மதில், சிவன்

(D) கட்டளை, அம்பு

(E) விடை தெரியவில்லை

86. ஒருமைப் பன்மைப் பிழையற்ற தொடர் எது?

(A) முருகன் அவர்கள் அருகில் சென்றார்கள்

(B) முருகன் அவர் அருகில் சென்றார்கள்

(C) முருகன் அவர்கள் அருகில் சென்றனர்

(D) முருகன் அவர்கள் அருகில் சென்றான்

(E) விடை தெரியவில்லை

87. பிழையற்ற ஒருமை தொடர் எது?

(A) நான் அல்லோம்

(B) நான் அல்லேன்

(C) நீ அல்லீர்

(D) நீவீர் அல்லீர்

(E) விடை தெரியவில்லை

88. சொல் – பொருள் – பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | கொங்கு | 1. | மலர்தல் |
| (b) | அலர் | 2. | மகரந்தம் |
| (c) | திகிரி | 3. | இமயமலை |
| (d) | மேரு | 4. | ஆணைச்சக்கரம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 2 | 3 | 4 | 1 |
| (D) | 1 | 2 | 3 | 4 |

(E) விடை தெரியவில்லை

89. பிழை திருத்துதல் (ஒரு-ஓர்) :

கீழ்க்காணும் தொடர்களில் ஒரு-ஓர் சரியாக அமைந்த தொடர் எது?

(A) ஓர் வண்ணத்துப் பூச்சியின் சிறகசைப்பு, உலகில் எங்கோ ஓர் எதிர்விளைவை ஏற்படுத்தும் என்று அறிவியல் கூறுகிறது

(B) ஒரு வண்ணத்துப் பூச்சியின் சிறகசைப்பு, உலகில் எங்கோ ஓர் எதிர்விளைவை ஏற்படுத்தும் என்று அறிவியல் கூறுகிறது

(C) ஓர் வண்ணத்துப் பூச்சியின் சிறகசைப்பு, உலகில் எங்கோ ஒரு எதிர்விளைவை ஏற்படுத்தும் என்று அறிவியல் கூறுகிறது

(D) ஒரு வண்ணத்துப் பூச்சியின் சிறகசைப்பு, உலகில் எங்கோ ஒரு எதிர்விளைவை ஏற்படுத்தும் என்று அறிவியல் கூறுகிறது

(E) விடை தெரியவில்லை

90. பொருத்தமான பொருளைத் தெரிவு செய்க :

தேவர் அனையர் ———— அவரும்தாம்

மேவன செய்தொழுக லான்.

விடுபட்ட சீர் எழுதுக.

(A) அன்பர்

(B) நல்லவர்

(C) தீயவர்

(D) கயவர்

(E) விடை தெரியவில்லை

91. சரியான தொடரைத் தேர்ந்தெடுத்து எழுதுக :

(A) இந்தியாவின் டாக்டர் மனிதர் சலீம் பறவை அலி

(B) டாக்டர் அலி சலீம் பறவை இந்தியாவின் மனிதர்

(C) இந்தியாவின் மனிதர் பறவை டாக்டர் சலீம் அலி

(D) இந்தியாவின் பறவை மனிதர் டாக்டர் சலீம் அலி

(E) விடை தெரியவில்லை

92. 'நண்பா படி'- இது எவ்வகைத் தொடர்?

(A) வினாத் தொடர்

(B) விளித் தொடர்

(C) உணர்ச்சித் தொடர்

(D) எதிர்மறைத் தொடர்

(E) விடை தெரியவில்லை

93. சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடுத்து நிறைவு செய்க :

மதிப்புக் கூட்டுதல் என்றால் ————————

(A) எது?

(B) என்ன?

(C) யார்?

(D) ஏன்?

(E) விடை தெரியவில்லை

94. சரியான வினாச்சொல்லைத் தேர்ந்தெடு :

பெயர்ச்சொல் ———————— வகைப்படும்?

(A) எத்துணை

(B) எத்தனை

(C) ஏன்

(D) என்ன

(E) விடை தெரியவில்லை

95. சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு :

அறநெறிச்சாரம் என்பதன் பொருள் ————————?

(A) எப்படி

(B) எவ்வாறு

(C) எதற்கு

(D) என்ன

(E) விடை தெரியவில்லை

96. பொருத்தமான காலம் அமைத்தல் :

சரியான தொடரைத் தேர்ந்தெடு

(A) தமிழரசி வள்ளுவரை ஓவியமாக வரைவாள் (இறந்த காலம்)

(B) தமிழரசி வள்ளுவரை ஓவியமாக வரைகின்றாள் ( எதிர் காலம்)

(C) தமிழரசி வள்ளுவரை ஓவியமாக வரைந்தாள் (இறந்த காலம்)

(D) தமிழரசி வள்ளுவரை ஓவியமாக வரைந்து முடித்தாள் (நிகழ் காலம்)

(E) விடை தெரியவில்லை

97. பின்வருவனவற்றுள் பேச்சு வழக்கு அல்லாத தொடரைத் தேர்க :

(A) எழுதப் படிக்கத் தெரிந்து கொள்ளணும்னு விரும்பறேன்

(B) எழுதப் படிக்கத் தெரிஞ்சிக்கணும்னு விரும்புகிறேன்

(C) எழுதப் படிக்கத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன்

(D) எழுதப் படிக்கத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்பறேன்

(E) விடை தெரியவில்லை

98. சரியான எழுத்து வழக்குத் தொடரைத் தேர்க :

(A) யாரப்பா நீ? எங்கே வந்தே?

(B) யார் நீ? எங்கு வந்தாய்?

(C) யார் நீ? எங்கே வந்த?

(D) யாரப்பா நீ? எங்க வந்த?

(E) விடை தெரியவில்லை

99. நிறுத்தற்குறி அறிக. (எது சரியானது) :

(A) நல்லவன் வாழ்வான்; தீயவன் தாழ்வான்.

(B) நல்லவன் வாழ்வான், தீயவன் தாழ்வான்.

(C) நல்லவன் வாழ்வான்! தீயவன் தாழ்வான்.

(D) நல்லவன் வாழ்வான் தீயவன் தாழ்வான்.

(E) விடை தெரியவில்லை

100. பின்வரும் தொடரின் சரியான நிறுத்தற்குறியிட்டு எழுதப்பட்ட தொடரை தெரிவு செய்க.
காகத்திற்கு காது உண்டா அதற்கு காது கேட்குமா.

(A) "காகத்திற்கு காது உண்டா, அதற்கு காது கேட்குமா?"

(B) காகத்திற்கு காது உண்டா? அதற்கு காது கேட்குமா?

(C) 'காகத்திற்கு காது உண்டா! அதற்கு காது கேட்குமா?'

(D) காகத்திற்கு காது உண்டா; அதற்கு காது கேட்குமா?

(E) விடை தெரியவில்லை

**COMPUTER BASED TEST**
**PAPER - II**
**TAMIL ELIGIBILITY TEST AND GENERAL STUDIES**

# பகுதி-அ (தமிழ் தகுதி தேர்வு)

# Part-A (Tamil Eligibility Test)

**வினாக்கள் : 1–100** **மொத்த மதிப்பெண்கள் : 150**

**Questions : 1–100** **Total Marks : 150**

1. விடை வகைகளைப் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | சுட்டிக் கூறுவது | (1) | நேர் விடை |
| (b) | மறுத்துக் கூறுவது | (2) | இனமொழி விடை |
| (c) | இனமாகக் கூறுவது | (3) | மறை விடை |
| (d) | உடன்பட்டுக் கூறுவது | (4) | சுட்டு விடை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 4 | 1 | 2 | 3 |
| (C) | 4 | 2 | 3 | 1 |
| ~~(D)~~ | 4 | 3 | 2 | 1 |

(E) விடை தெரியவில்லை

2. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல் கண்டறிந்து பொருத்தமற்றதை தேர்ந்தெடுத்தெழுதுக.

| | | | |
|---|---|---|---|
| (A) | டெபிட் கார்டு | – | பற்று அட்டை |
| (B) | கிரெடிட் கார்டு | – | கடன் அட்டை |
| (C) | ஆன்லைன் ஷாப்பிங் | – | இணையத்தள வணிகம் |
| ~~(D)~~ | ஈ காமர்ஸ் | – | மின்னனுமயம் |

(E) விடை தெரியவில்லை

3. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொல்லைத் தெரிவு செய்க.

நாயு

(A) நாய்
(B) நாடு
(C) நாவாய்
(D) நாக்கு
(E) விடை தெரியவில்லை

4. ஊர்ப்பெயரின் மரூஉவை எழுதுக.

கும்பகோணம்

(A) குமரி
(B) மதுரை
(C) சைதை
(D) குடந்தை
(E) விடை தெரியவில்லை

5. ஊர்ப்பெயரின் மரூஉவை அறிந்து பொருந்தா இணையைக் கண்டறிக.

(A) புதுச்சேரி – புதுவை
(B) புதுக்கோட்டை – புதுமை
(C) கும்பகோணம் – குடந்தை
(D) நாகப்பட்டினம் – நாகை
(E) விடை தெரியவில்லை

6. ஊர்ப் பெயர்களின் மரூஉவைப் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | கோயம்புத்தூர் | (1) | நாகை |
| (b) | நாகப்பட்டினம் | (2) | புதுகை |
| (c) | புதுச்சேரி | (3) | கோவை |
| (d) | புதுக்கோட்டை | (4) | புதுவை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 4 | 2 |
| (B) | 2 | 4 | 3 | 1 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 3 | 1 | 2 | 4 |

(E) விடை தெரியவில்லை

7. சரியான நிறுத்தற் குறித்தொடரை **காண்க.**

(A) ஆ; எவ்வளவு பெரிய கரடி? கரடிக்கு மரம் ஏறத் தெரியும்.

(B) ஆ! எவ்வளவு பெரிய கரடி. கரடிக்கு மரம் ஏறத் தெரியுமா?

(C) ஆ, எவ்வளவு பெரிய கரடி? கரடிக்கு மரம் ஏறத் தெரியுமா

(D) ஆ, ஆ! எவ்வளவு பெரிய கரடி, கரடிக்கு மரம் ஏறத் தெரியுமா?

(E) விடை தெரியவில்லை

8. நிறுத்தற்குறிகளை அறிதல்

நிறுத்தற்குறிகள் (எது சரியானது)

(A) மீனே, ஏன் இப்படி தூண்டிலை இழுக்கிறாய்!

(B) மீனே! ஏன் இப்படி தூண்டிலை இழுக்கிறாய்?

(C) மீனே, ஏன் இப்படி தூண்டிலை இழுக்கிறாய்?

(D) "மீனே! ஏன்? இப்படி தூண்டிலை இழுக்கிறாய்"

(E) விடை தெரியவில்லை

9. சரியான எழுத்து வழக்குத் தொடரைக் கண்டறிக

(A) வாடைக் காத்து வீசியது
(B) வாடைக் காற்று வீசுது
(C) வாடைக் காற்று வீசின
(D) வாடைக் காற்று வீசியது
(E) விடை தெரியவில்லை

10. பேச்சு வழக்குத் தொடரைக் காண்க.

(A) "எங்கடா போறே?"
(B) எங்கே போற?
(C) "எங்கடா போகின்றாய்?"
(D) "எங்கே போகின்றாய்?"
(E) விடை தெரியவில்லை

11. எந்த இரண்டு சொற்களை இணைத்தால் கீழ்க்கண்ட புதிய சொல் கிடைக்கும் (பாடறிந்து)

(A) பாட் + அறிந்து
(B) பா + அறிந்து
(C) பாடு + அறிந்து
(D) பாட்டு + அறிந்து
(E) விடை தெரியவில்லை

12. சொற்களை இணைத்து புதிய சொல் உருவாக்குக.

வெளி, நூல், மாலை, கோல்

(A) நூல் கோல்
(B) நூல்வெளி
(C) நூல் மாலை
(D) கோல்வெளி
(E) விடை தெரியவில்லை

13. பின்வரும் விடை வகையினைச் சுட்டுக.

'கடைத்தெரு எங்குள்ளது' என்ற வினாவிற்கு 'வலப்பக்கத்தில் உள்ளது' எனக்கூறல்.

(A) நேர்விடை
(B) மறை விடை
(C) சுட்டு விடை
(D) இனமொழி விடை
(E) விடை தெரியவில்லை

14. கண்மணி நாளை பாடம் படித்தாள் – பொருத்தமான காலம் அமையுமாறு திருத்தி எழுதுக

(A) கண்மணி நாளை பாடம் படித்தாள்
(B) கண்மணி நாளை பாடம் படிப்பாள்
(C) கண்மணி இன்று பாடம் படிக்கிறாள்
(D) கண்மணி நேற்று பாடம் படித்தாள்
(E) விடை தெரியவில்லை

15. சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு.

பகுபத உறுப்புகள் ———— வகைப்படும்.

(A) எத்தனை
(B) எவற்றை
(C) எவ்வாறு
(D) எப்படி
(E) விடை தெரியவில்லை

16. சரியான வினாச்சொல்லை இட்டு நிரப்புக.

நெல்லையப்பர் கோவில் ———————— உள்ளது?

(A) எது
(B) எப்பொழுது
(C) எங்கு
(D) யார்
(E) விடை தெரியவில்லை

17. சரியான இணைப்புச் சொல்லால் நிரப்புக.

அதிக அளவில் மரங்களை வளர்ப்போம். ———————— மரங்கள் தான் மழைக்கு அடிப்படை.

(A) அதனால்
(B) ஆகையால்
(C) அதுபோல
(D) ஏனெனில்
(E) விடை தெரியவில்லை

18. சரியான இணைப்புச் சொல்லைத் தெரிவு செய்தல்.

சாலைகள் தோன்றிய பிறகே சாலை விதிகள் தோன்றியிருக்கும். ———————— இலக்கியம் தோன்றிய பிறகே அதற்குரிய இலக்கண விதிகள் தோன்றியிருக்க வேண்டும்.

(A) அதுபோல
(B) எனவே
(C) ஏனெனில்
(D) ஆகையால்
(E) விடை தெரியவில்லை

19. சரியான இணைப்புச் சொல்.

பள்ளிக்குக் கோயில் என்று பெயர் வைத்தார் பாரதியார். ஏன் அப்படி பெயர் வைத்தார்? ———— கல்விக் கூடங்களில் தான் குழந்தைகளின் எதிர்காலம் நிர்ணயிக்கப்படுகிறது.

சரியான இணைப்புச் சொல்லைத் தேர்வு செய்க.

(A) அதனால்
(B) அதுபோல
(C) எனவே
(D) ஏனெனில்
(E) விடை தெரியவில்லை

20. அடைப்புக்குள் உள்ள குலை வகை குறித்த சொல்லைத் தகுந்த வாக்கியத்துடன் பொருத்துக.

(அலகு)

(A) அவரை குலை
(B) துவரை குலை
(C) சோளம் கதிர்
(D) நெல், தினை-கதிர்
(E) விடை தெரியவில்லை

21. பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

இலக்கிய மன்ற விழாவில் முகிலன் சிறப்பாக ———— ஆற்றினார். (உரை/உறை)

(A) பேசி
(B) உறை
(C) உரை
(D) கலந்துரையாடல்
(E) விடை தெரியவில்லை

22. பின்வரும் சொல்லுக்கு இருபொருள் தரும் சொற்களை தெரிவு செய்க.

ஆறு

(A) மாலை – படி
(B) எண் – நீர்நிலை
(C) பொழுது – காலை
(D) ஓடும்நீர் – கரை
(E) விடை தெரியவில்லை

23. இருபொருள் தருக:

துய்ப்பது

(A) பொருந்துதல், பெறுதல்

(B) விளித்தல், கேட்டல்

(C) கற்றல், தருதல்

(D) வேண்டுதல், அளித்தல்

(E) விடை தெரியவில்லை

24. இருபொருள் தருக.

கல் – இரு பொருள் தருக.

(A) கற்றல் – இயற்கையாகக் கிடைக்கும் திடப்பொருள்

(B) மறத்தல் – சிறு உருண்டை வடிவமான பொருள்

(C) சுவாசித்தல் – சிறு உருண்டை வடிவமான நீர்

(D) அகழ்தல் – சிறு உருண்டை வடிவமான வாயு

(E) விடை தெரியவில்லை

25. குறில் – நெடில் மாற்றம், பொருள் வேறுபாடு

விடு – வீடு

(A) வீடுபேறு – இன்பம்

(B) தயங்குதல் – தங்குதல்

(C) அறிக்கை விடுதல் – மரவீடு

(D) விடுதி – விற்பனை

(E) விடை தெரியவில்லை

26. குறில் சொல்லை நெடில் சொல்லாக மாற்றி பொருள் வேறுபாடு வருமாறு ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

சிலை

(A) சிலை – சேலை

சிலையை சேலையைக் கொண்டு மறைத்திருக்கிறார்கள்

(B) சிலை – சீலை

சிலையைத் திரைச் சீலையால் மறைத்திருக்கிறார்கள்

(C) சிலை – சோலை

சிலை ஒரு சோலையில் வைக்கப்பட்டது

(D) சிலை – சூளை

சிலையை சூளைக்கருகில் வைத்தனர்

(E) விடை தெரியவில்லை

27. கூற்று காரணம் – சரியா? தவறா?

கூற்று : வெண்பாவால் எழுதப்பட்ட நூல் முத்தொள்ளாயிரம்.

காரணம் : மூவாயிரம் பாடல்களை கொண்டதால் அவ்வாறு அழைக்கப்படுகிறது.

(A) கூற்று சரி; காரணம் சரி

(B) கூற்று சரி; காரணம் தவறு

(C) கூற்று தவறு; காரணம் தவறு

(D) கூற்று தவறு; காரணம் சரி

(E) விடை தெரியவில்லை

28. சரியான கூற்றினைத் தெரிவு செய்க.

(அ) "ஆ" என்பது எதிர்மறை இடைநிலை.

(ஆ) வீட்டிற்கோர் புத்தகசாலை என்பது அண்ணாவின் மேடைப்பேச்சு.

(இ) வில்லுப்பாட்டு ஓர் இலக்கியவடிவம்.

(A) மூன்றும் தவறு

(B) (ஆ), (இ) சரி; (அ) தவறு

(C) மூன்றும் சரி

(D) (அ), (இ) சரி; (ஆ) தவறு

(E) விடை தெரியவில்லை

29. Equality – இச்சொல்லுக்கு ஏற்ற சரியான தமிழ்ச்சொல்லைத் தேர்க.

(A) பேச்சாற்றல்
(B) ஒற்றுமை
(C) முழக்கம்
(D) சமத்துவம்
(E) விடை தெரியவில்லை

30. கலைச் சொற்களை அறிதல்

| | | | |
|---|---|---|---|
| (a) | கண்ணியம் | (1) | Doctrine |
| (b) | வாய்மை | (2) | Preaching |
| (c) | உபதேசம் | (3) | Dignity |
| (d) | கொள்கை | (4) | Sincerity |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 4 | 1 | 3 | 2 |
| (D) | 1 | 4 | 3 | 2 |

(E) விடை தெரியவில்லை

31. கலைச் சொற்களை அறிதல்

Tornado

(A) சூறாவளி
(B) புயல்
(C) கடற்காற்று
(D) சுழல் காற்று
(E) விடை தெரியவில்லை

32. பொருத்தமான பொருளைத் தெரிவு செய்க.

இயற்கை வங்கூழ் ஆட்ட – அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் ————————.

(A) நெருப்பு (B) நீர்

(C) நிலம் (D) காற்று

(E) விடை தெரியவில்லை

33. சிலப்பதிகாரமும், மணிமேகலையும் எந்த பா-வில் அமைந்துள்ளது?

(A) அகவற்பா (B) வெண்பா

(C) வஞ்சிப்பா (D) கலிப்பா

(E) விடை தெரியவில்லை

34. பொருத்தமான பொருளைத் தெரிவு செய்க.

சரியான இணையை தேர்ந்தெடு.

இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் ————————

இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் ————————

(A) அமைச்சர், மன்னன் (B) அமைச்சர், இறைவன்

(C) இறைவன், மன்னன் (D) மன்னன், இறைவன்

(E) விடை தெரியவில்லை

35. சரியான கூட்டுப் பெயரைத் தெரிவு செய்க.

மக்கள்

(A) கூட்டம் (B) மந்தை

(C) நிரை (D) மக்கள்கள்

(E) விடை தெரியவில்லை

36. சரியான கூட்டப் பெயரைத் தேர்க.

ஆடு

(A) குவியல் (B) குலை

(C) மந்தை (D) கட்டு

(E) விடை தெரியவில்லை

37. சொற்களின் கூட்டுப் பெயரைத் தெரிவு செய்க.

எறும்புகள்

(A) கூட்டமாக (B) சாரை, சாரையாக

(C) அணி, அணியாக (D) மந்தை, மந்தையாக

(E) விடை தெரியவில்லை

38. சரியானத் தொடரைத் தேர்ந்தெடுக்க

(A) கபிலன் வேலை செய்ததால் களைப்பாக இருக்கிறார்.

(B) வேலை செய்ததால் இருக்கிறார் கபிலன் களைப்பாக

(C) களைப்பாக இருக்கிறார் கபிலன் செய்ததால் வேலை

(D) கபிலன் களைப்பாக வேலை இருக்கிறார் செய்ததால்

(E) விடை தெரியவில்லை

39. சரியான தொடர் எது? கண்டறிந்து எழுதுக.

(A) கதிரவன் மறையும் காலையில் உதித்து மாலையில்.

(B) மாலையில் காலையில் உதித்து மறையும் கதிரவன்.

(C) கதிரவன் காலையில் உதித்து மாலையில் மறையும்.

(D) மறையும் காலையில் கதிரவன் உதித்து மாலையில்

(E) விடை தெரியவில்லை

40. சரியான தொடர் எது என்பதைக் கண்டறிந்து எழுதுக.

(A) இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் என்னும் காப்பியத்தை வடித்தார்.

(B) சிலப்பதிகாரம் என்னும் காப்பியத்தை இயற்றியவர் இளங்கோவடிகள்.

(C) சிலப்பதிகாரம் காப்பியத்தை என்னும் இயற்றியவர் இளங்கோவடிகள்.

(D) காப்பியத்தை இயற்றியவர் இளங்கோவடிகள்.

(E) விடை தெரியவில்லை

41. ஒரு-ஓர் சரியாக அமைந்த தொடரைத் தேர்ந்தெடுக்க.

(A) ஒரு நாள் பகலவன் பள்ளிக்கு நடந்துவந்தான்.

(B) ஓர் நாள் பகலவன் பள்ளிக்கு நடந்து வந்தது.

(C) ஒரு நாள் பகலவன் பள்ளிக்கு நடந்து வந்தன.

(D) ஓர் நாள் பகலவன் பள்ளிக்கு நடந்து வந்தான்.

(E) விடை தெரியவில்லை

42. கீழ்காணும் தொடரில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.

அஃது நகரத்திற்குச் செல்லும் சாலை

(A) அஃது நகரத்திற்குச் செல்லும் சாலை. (B) அது நகரத்திற்குச் செல்லும் சாலை.

(C) நகரத்திற்கு அஃது செல்லும் சாலை. (D) நகரத்திற்கு செல்லும் சாலை அது.

(E) விடை தெரியவில்லை

43. கீழ்காணும் தொடரில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.

அது இல்லாத இடத்தில் எதுவும் நடக்காது.

(A) இல்லாத அது இடத்தில் எதுவும் நடக்காது.

(B) இல்லாத இடத்தில் அஃது எதுவும் நடக்காது.

(C) அஃது இல்லாத இடத்தில் எதுவும் நடக்காது.

(D) இல்லாத இடத்தில் எதுவும் அது நடக்காது.

(E) விடை தெரியவில்லை

44. நீகான் என்ற சொல்லின் பொருள் ————.

(A) கலங்கரை விளக்கம்

(B) கப்பல்

(C) பகல்

(D) நாவாய் ஓட்டுபவன்

(E) விடை தெரியவில்லை

45. வங்கம் – என்னும் சொல்லின் பொருளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

(A) பகல்

(B) கப்பல்

(C) கலங்கரை விளக்கம்

(D) நாவாய் ஓட்டுபவன்

(E) விடை தெரியவில்லை

46. சொல்லையும், பொருளையும் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | திங்கள் | (1) | இமயமலை |
| (b) | அலர் | (2) | கருணை |
| (c) | மேரு | (3) | நிலவு |
| (d) | அளி | (4) | மலர்தல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 2 | 4 | 3 | 1 |
| (C) | 1 | 2 | 3 | 4 |
| (D) | 4 | 3 | 2 | 1 |
| (E) | விடை தெரியவில்லை | | | |

47. ஒருமை பன்மை பிழை நீக்குக.

(A) யானைப் படையும் குதிரைப் படையும் சென்றார்கள்.

(B) யானைப் படையும் குதிரைப் படையும் சென்றது.

(C) யானைப் படையும் குதிரைப் படையும் சென்றன.

(D) யானைப் படையும் குதிரைப் படையும் சென்றார்.

(E) விடை தெரியவில்லை

48. ஒருமைப் பன்மைப் பிழையற்ற தொடர் எது?

(A) தமிழர்கள் உணவு பரிமாறும் முறையை நன்கு அறிந்திருந்தனர்.

(B) தமிழர்கள் உணவு பரிமாறும் முறையை நன்கு அறிந்தன.

(C) தமிழர்கள் உணவு பரிமாறும் முறையை நன்கு அறிந்தான்.

(D) தமிழர்கள் உணவு பரிமாறும் முறையை நன்கு அறிந்தது.

(E) விடை தெரியவில்லை

49. பின்வரும் தொடரில் உள்ள பிழையைத் திருத்தி எழுதுக.

பகைவர் நீவீர் அல்லர்

(A) பகைவர் நீவீர் அல்லேன்
(B) பகைவர் நீவீர் அல்லோம்
(C) பகைவர் நீவீர் அல்லீர்
(D) பகைவர் நீவீர் அல்லன்
(E) விடை தெரியவில்லை

பின்வரும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி (50 – 54)

திருநெல்வேலிப் பகுதியை வளம் செழிக்கச் செய்யும் ஆறு தாமிரபரணி ஆகும். இதனைத் தண்பொருநை நதி என்று முன்னர் அழைத்தனர். இது பச்சையாறு, மணிமுத்தாறு, சிற்றாறு, காரையாறு, சேர்வலாறு, கடனாநதி என்று பல கிளை ஆறுகளாகப் பிரிந்து திருநெல்வேலியை நீர்வளம் மிக்க மாவட்டமாகச் செய்கிறது.

திருநெல்வேலி மாவட்டப் பொருளாதாரத்தில் முதன்மையான பங்கு வகிப்பது உழவுத் தொழில். தாமிரபரணி ஆற்றின் மூலம் இங்கு உழவுத்தொழில் நடைபெறுகின்றது. இங்கு குளத்துப் பாசனமும் கிணற்றுப் பாசனமும் கூடப் பயன்பாட்டில் உள்ளன. இரு பருவங்களில் நெல் பயிரிடப்படுகின்றது. மானாவாரிப் பயிர்களாகச் சிறுதானியங்கள், எண்ணெய் வித்துகள், காய்கனிகள், பருத்தி, பயிறு வகைகள் போன்றன பயிரிடப்படுகின்றன. இங்கு விளையும் வாழைத்தார்கள் தமிழ்நாடு மட்டுமின்றிக் கர்நாடகம், கேரளம் போன்ற பிற மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகின்றன. நெல்லிக்காய் உற்பத்தியில் தமிழகத்தில் நெல்லை மாவட்டமே முதலிடம் வகிக்கின்றது.

50. திருநெல்வேலி மாவட்டப் பொருளாதாரத்தில் முதன்மையான பங்கு வகிக்கும் தொழில்

(A) நெசவுத் தொழில்
(B) உழவுத் தொழில்
(C) வணிகம்
(D) கட்டுமானத்தொழில்
(E) விடை தெரியவில்லை

51. நெல்லிக்காய் உற்பத்தியில் தமிழகத்தில் முதலிடம் பெறும் மாவட்டம்.

(A) காஞ்சிபுரம்
(B) கோவை
(C) திருநெல்வேலி
(D) சேலம்
(E) விடை தெரியவில்லை

52. தாமிரபரணி ஆறு முன்னர் எவ்வாறு அழைக்கப்பட்டது?

(A) தண்பொருநை (B) கடனாநதி

(C) தாமிரா (D) சிற்றாறு

(E) விடை தெரியவில்லை

53. திருநெல்வேலியின் மரூஉ பெயர்

(A) குமரி (B) கோவை

(C) செங்கை (D) நெல்லை

(E) விடை தெரியவில்லை

54. தாமிரபரணி ஆற்றின் கிளை ஆறுகளுள் ஒன்று

(A) பாலாறு (B) தண்பொருநை

(C) சேர்வலாறு (D) காவிரி

(E) விடை தெரியவில்லை

55. நிலத்தினிடையே என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது ————

(A) நிலம் + இடையே (B) நிலத்தின் + இடையே

(C) நிலத்து + இடையே (D) நிலத் + திடையே

(E) விடை தெரியவில்லை

56. "அருந்துணை" என்பதைப் பிரித்தால்

(A) அரு+துணை (B) அரு+இணை

(C) அருமை+துணை (D) அருமை+இணை

(E) விடை தெரியவில்லை

57. இடம்+எங்கும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்.

(A) இடவெங்கும் (B) இடம்எங்கும்

(C) இடமெங்கும் (D) இடம்மெங்கும்

(E) விடை தெரியவில்லை

58. எளிது என்னும் சொல்லின் எதிர்ச்சொல்

(A) சிறிது (B) பெரிது

(C) அரிது (D) வறிது

(E) விடை தெரியவில்லை

59. எதிர்ச்சொல்லை எடுத்தெழுதுக.
காய் என்னும் சொல்லின் எதிர்ச்சொல்

(A) முறி (B) தாறு

(C) கனி (D) வடலி

(E) விடை தெரியவில்லை

60. எதிர்ச் சொல்லை எடுத்தெழுதுதல்
அணுகு

(A) தெளிவு (B) சோர்வு

(C) பொய்மை (D) விலகு

(E) விடை தெரியவில்லை

61. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக.

(A) கர்நாடகம் (B) கேரளா

(C) இலங்கை (D) ஆந்திரா

(E) விடை தெரியவில்லை

62. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக.

(A) நான் - அல்லேன்
(B) நாம் - அல்லோம்
(C) நீ - அல்லை
(D) நீவீர் - அல்லர்
(E) விடை தெரியவில்லை

63. விகாரப் புணர்ச்சியில்லாத சொல்லைக் கண்டறிக

(A) தமிழ்த்தாய்
(B) விற்கொடி
(C) வாழைமரம்
(D) மனமகிழ்ச்சி
(E) விடை தெரியவில்லை

64. பின்வரும் வாக்கியங்களுள் சந்திப் பிழையற்ற வாக்கியத்தைக் கண்டறிக.

(A) மெய்க்கீர்த்திகள் புலவர்களால் எழுதப்பட்டு கல்தச்சர்களால் பொறிக்கப்பட்டவை.
(B) மெய்க்கீர்த்திகள் புலவர்களால் எழுதப்பட்டுக் கல்தச்சர்களால் கல்லில் பொறிக்கப்பட்டவை.
(C) மெய்க்கீர்த்திகள் புலவர்களால் எழுதப்பட்டுக் கல்தச்சர்களால் கல்லில் பொறிக்கபட்டவை.
(D) மெய்க்கீர்த்திகள் புலவர்கள் ஆல் எழுதப்பட்டு கல்தச்சர்களால் கல்லில் பொறிக்கப்பட்டவை.
(E) விடை தெரியவில்லை

65. சந்திப்பிழையற்ற வாக்கியங்களைக் கண்டறிக.

1. கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு
2. கற்றோருகு சென்ற இடமெல்லாம் சிறப்பு
3. கைபொருள் தன்னின் மெய்பொருள் கல்வி
4. கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி

(A) 1 மற்றும் 3 (B) 1 மற்றும் 4

(C) 2 மற்றும் 3 (D) 3 மற்றும் 4

(E) விடை தெரியவில்லை

66. சந்திப் பிழை நீக்குக.

பிழையற்ற தொடரைத் தேர்வு செய்க.

(A) ஆசிய யானைகளில் ஆண் யானைக்குத் தந்தம் உண்டு.

(B) ஆசிய யானைகளில் ஆண் யானைக்கும் தந்தம் உண்டு.

(C) ஆசிய யானைகளில் ஆண் யானைக்குச் தந்தம் உண்டு.

(D) ஆசிய யானைகளில் ஆண் யானைக்கு தந்தம் உண்டு.

(E) விடை தெரியவில்லை

67. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை எழுதுக.

Sentence

(A) சொற்றொடர் (B) உயிரெழுத்துகள்

(C) மெய்யெழுத்துகள் (D) சொல்லாக்கம்

(E) விடை தெரியவில்லை

68. ஆங்கிலச் சொல்லுக்கு பொருந்தாத தமிழ்ச்சொல் அறிக.

(A) ஒலியியல் – Phonology (B) இதழியல் – Magazine

(C) எழுத்திலக்கணம் – Orthography (D) மொழியியல் – Linguistics

(E) விடை தெரியவில்லை

69. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல்லை எடுத்து எழுதுக.

டிஜிட்டல் ரிவாலியுசன் (Digital Revolution)

(A) மின்னணுப் புரட்சி (B) மின்னணு புலம்

(C) மின் பரிவர்த்தனை (D) மின்னணு பயன்பாடு

(E) விடை தெரியவில்லை

70. ஒலி வேறுபாடு அறிந்து சரியான பொருளை எழுதுக.

(A) ஆறு – நதி (B) ஆரு – மரம்

(C) ஆளு – மன் (D) ஆலு – மண்

(E) விடை தெரியவில்லை

71. ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான இணையைத் தெரிவு செய்க

விடு – வீடு

(A) கைவிடுதல் – தங்கும் இடம் (B) கொடுத்தல் – உறைவிடம்

(C) விட்டு விடுதல் – பாடசாலை (D) கொடுத்தல் – கூடு

(E) விடை தெரியவில்லை

72. ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

பழந்தமிழர்கள் ———————— வழியாக போர் செய்யும் ———————— போன்ற கூர்ந்த மதியுடையவர்கள்

(A) வீரம், அரம்
(B) அரம், அறம்
(C) அறம், அரம்
(D) அகம், புறம்
(E) விடை தெரியவில்லை

73. ஒரு பொருள் தரும் பல சொற்கள்

நாவாய், வங்கம், தோணி, கலம் ஆகிய சொற்கள் எதனைக் குறிக்கும்?

(A) பல வகையான மீன்கள்
(B) பல வகையான மான்கள்
(C) பல வகையான வானூர்திகள்
(D) பல வகையான கடற்கலன்கள்
(E) விடை தெரியவில்லை

74. ஒரு பொருள் தரும் இரு சொற்கள் தருக.

வெய்யோன்

(A) பகலவன், பாரி
(B) பகலவன், சூரியன்
(C) சந்திரன், சூரியன்
(D) ஆதவன், அரசன்
(E) விடை தெரியவில்லை

75. துளிர், முறி, குருத்து, கொழுந்தாடை ஆகிய சொற்கள் தாவரத்தின் எப்பகுதியைக் குறிக்கும்?

(A) அடிப்பகுதி
(B) நுனிப்பகுதி
(C) மணிவகை
(D) இளம்பயிர்
(E) விடை தெரியவில்லை

76. பின்வரும் வினைமுற்றின் வேர்ச்சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக

பார்த்தான்

(A) பார்க்க (B) பாரு

(C) பார் (D) பார்த்த

(E) விடை தெரியவில்லை

77. கீழ்க்கண்டவற்றுள் சரியான வேர்ச்சொல் இணையைக் கண்டறிக.

(A) நட – நடக்கிறது (B) கேட்டு – கேட்டார்

(C) வாழி – வாழியர் (D) சென்று – சென்றனர்

(E) விடை தெரியவில்லை

78. வேர்ச்சொற்களைத் தேர்வு செய்க

அறிஞர்

(A) அறிஞன் (B) அரி

(C) அறி (D) அறு

(E) விடை தெரியவில்லை

79. வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயர் காண்க.

கொடு

(A) கொடுத்தல் (B) கொடுத்தோர்

(C) கொடுத்த (D) கொடுத்து

(E) விடை தெரியவில்லை

80. கொடுக்கப்பட்டுள்ள தொழிற்பெயரிலிருந்து வேர்ச்சொல்லைக் கண்டறிந்து எழுதுக.
படித்தல்

(A) படு
(B) படி
(C) படித்து
(D) படித்த
(E) விடை தெரியவில்லை

81. அகர வரிசைப்படுத்துக

(A) மோதல், மழை, மேகலை, மைலை
(B) மேகலை, மைலை, மோதல், மழை
(C) மைலை, மோதல், மழை, மேகலை
(D) மழை, மேகலை, மைலை, மோதல்
(E) விடை தெரியவில்லை

82. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்தல்
தேனி, ஓணான், கிளி, மாணவன், ஆசிரியர்

(A) மாணவன், தேனி, ஓணான், கிளி, ஆசிரியர்
(B) ஆசிரியர், ஓணான், கிளி, தேனி, மாணவன்
(C) தேனி, மாணவன், ஓணான், ஆசிரியர், கிளி
(D) கிளி, ஓணான், ஆசிரியர், மாணவன், தேனி
(E) விடை தெரியவில்லை

83. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்தல்

பக்கம், வண்டு, சங்கு, கங்கை, மங்கை

(A) மங்கை, வண்டு, பக்கம், சங்கு, கங்கை

(B) கங்கை, சங்கு, பக்கம், மங்கை, வண்டு

(C) வண்டு, மங்கை, பக்கம், கங்கை, சங்கு

(D) சங்கு, வண்டு, மங்கை, பக்கம், கங்கை

(E) விடை தெரியவில்லை

84. சொற்களை ஒழுங்குப்படுத்துக

(A) யானைகள் தாக்குவதில்லை மனிதர்களை பொதுவாக

(B) யானைகள் பொதுவாக மனிதர்களை தாக்குவதில்லை

(C) பொதுவாக தாக்குவதில்லை மனிதர்களை யானைகள்

(D) யானைகள் தாக்குவதில்லை பொதுவாக மனிதர்களை

(E) விடை தெரியவில்லை

85. முறை மாறியுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடர் ஆக்குக.

"முளையிலே விளையும் தெரியும் பயிர்"

(A) முளையிலே தெரியும் விளையும் பயிர்

(B) பயிர் முளையிலே விளையும் தெரியும்

(C) பயிர் விளையும் முளையிலே தெரியும்

(D) விளையும் பயிர் முளையிலே தெரியும்

(E) விடை தெரியவில்லை

86. 'Whatsapp' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல் தருக.

(A) இணையம்

(B) முகநூல்

(C) புலனம்

(D) இடஞ்சுழி

(E) விடை தெரியவில்லை

87. இரு வினைகளின் வேறுபாடு அறிக.

முதலாளி ——————தொழிலாளி ——————

(A) சேர்த்தார், சேர்ந்தார்

(B) குவித்தார், குவிந்தார்

(C) பணித்தார், பணிந்தார்

(D) பார்த்தார், சேர்ந்தார்

(E) விடை தெரியவில்லை

88. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுக்கவும்.

வீரமாமுனிவர் 17 ஆம் நூற்றாண்டில் படைத்த பெருங்காப்பியம் தேம்பாவணி

(A) தேம்பாவணியின் ஆசிரியர் யார்?

(B) வீரமாமுனிவரின் பெருங்காப்பியம் யாது?

(C) 17 ஆம் நூற்றாண்டில் தோன்றிய பெருங்காப்பியம் யாது?

(D) வீரமாமுனிவர் 17 ஆம் நூற்றாண்டில் படைத்த பெருங்காப்பியம் யாது?

(E) விடை தெரியவில்லை

89. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுக்க

டாக்டர் அப்துல்கலாம் 'இந்திய ஏவுகணை நாயகன்' என்று போற்றப்படுகிறார்.

(A) இந்திய ஏவுகணைத் தலைவன் யார்?

(B) இந்திய ஏவுகணை மன்னன் யார்?

(C) இந்திய ஏவுகணை நாயகன் யார்?

(D) இந்திய ஏவுகணை போராளி யார்?

(E) விடை தெரியவில்லை

90. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுதல்

பிறவினை வாக்கியத்தைத் தேர்ந்தெழுதுக.

(A) அப்துல் நேற்று வந்தான்

(B) நேற்று அப்துல் வராமலிருந்தான்

(C) அப்துல் நேற்று வந்திலன்

(D) அப்துல் நேற்று வருவித்தான்

(E) விடை தெரியவில்லை

91. தன்வினைச் தொடரைக் கண்டறிக

(A) வள்ளி மாலை தொடுத்தாள்

(B) வள்ளியால் மாலை தொடுக்கப்பட்டது

(C) மாலை வள்ளியால் தொடுக்கப்பட்டது

(D) மாலை வள்ளி தொடுத்திலள்

(E) விடை தெரியவில்லை

92. செயப்பாட்டு வினைத் தொடரைக் காண்க.

(A) அவள் பாட்டு பாடினாள்
(B) பாட்டு அவளால் பாடப்பட்டது
(C) பாட்டு அவள் பாடினாள்
(D) பாடினாள் அவள் பாட்டு
(E) விடை தெரியவில்லை

93. "ஆகாயத் தாமரை" – உவமைக் கூறும் பொருளைக் கூறு.

(A) வானத்தில் இருப்பவை
(B) குளத்தில் இருப்பவை
(C) இல்லாத ஒன்று
(D) தரையில் இருப்பவை
(E) விடை தெரியவில்லை

94. "புலி" - என்பதன் சரியான சொல்லை தேர்வு செய்க.

(A) குட்டி
(B) பரழை
(C) குழவி
(D) வேங்கை
(E) விடை தெரியவில்லை

95. உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெழுதுதல் எடுப்பார் கைப்பிள்ளை உவமை கூறும் பொருள் தெளிக

(A) பகைமை
(B) பயனின்றி இருத்தல்
(C) ஒற்றுமை
(D) சொல்பவர் பேச்சைக் கேட்டு நடப்பவர்
(E) விடை தெரியவில்லை

96. கலைச்சொல்லைப் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | Doctorate | (1) | பல்கலைக் கழகம் |
| (b) | Confidence | (2) | ஒப்பந்தம் |
| (c) | University | (3) | முனைவர் பட்டம் |
| (d) | Agreement | (4) | நம்பிக்கை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 2 | 3 | 1 | 4 |

(E) விடை தெரியவில்லை

97. நீபவனத்தை நீத்து அடிகோடிட்ட சொல்லின் பொருள் காண்க.

(A) கடம்பவனம்

(B) ஊர்பவனம்

(C) இறைபவனம்

(D) நீர்பவனம்

(E) விடை தெரியவில்லை

98. கலைச்சொல் அறிக.

பாசனத் தொழில் நுட்பம்

(A) Irrigation Technology (B) Tropical Zone

(C) Water Management (D) Conical Stone

(E) விடை தெரியவில்லை

99. விடை வகையைக் கண்டறிதல்.

நீ விளையாடவில்லையா? என்ற வினாவிற்குக் 'கால் வலிக்கிறது' என்று கூறுவது

(A) சுட்டு விடை
(B) மறை விடை
(C) உறுவது கூறல் விடை
(D) உற்றது உரைத்தல் விடை
(E) விடை தெரியவில்லை

100. பொருத்தமில்லாத விடையைத் கண்டறிக.

வினா எதிர் வினாதல் விடை

(A) இது செய்வேனா
(B) இது செய்யேன்
(C) நான் போவேனா
(D) வராமல் இருப்பேனா
(E) விடை தெரியவில்லை

COMBINED ACCOUNTS SERVICES EXAMINATION IN
TAMIL NADU STATE TREASURIES AND ACCOUNTS SERVICE AND IN
VARIOUS BOARDS / CORPORATIONS

**COMPUTER BASED TEST**

**PAPER –II**

**TAMIL ELIGIBILITY TEST WITH GENERAL STUDIES**

# பகுதி-அ (தமிழ் தகுதி தேர்வு)

# Part-A (Tamil Eligibility Test)

**வினாக்கள் : 1–100** **மொத்த மதிப்பெண்கள் : 150**

**Questions : 1–100** **Total Marks : 150**

1. இருவினைகளின் பொருள் வேறுபாடு

பரி – பறி

(A) இறங்கு – வாங்கு

(B) இரங்கு – வாங்கு

(C) இரங்கு – அபகரி

(D) இறங்கு – அபகரி

(E) விடை தெரியவில்லை

2. பொருள் வேறுபாடு அறிக :

பெரு – பெறு

(A) பெரிய செயல் – மதிப்புப் பெறு

(B) சிறிய செயல் – மதிப்புப் பெறு

(C) பெரிய செயல் – பெருகுதல்

(D) பெரிய செயல் – மதிப்புக் கொடு

(E) விடை தெரியவில்லை

3. சொற்களை ஒழுங்குபடுத்துக :

(A) எல்லாரும் வேண்டும் வாழ இன்பமாக

(B) எல்லாரும் இன்பமாக வாழ வேண்டும்

(C) வாழ எல்லாரும் வேண்டும் இன்பமாக

(D) வேண்டும் வாழ இன்பமாக எல்லாரும்

(E) விடை தெரியவில்லை

4. சொற்களை ஒழுங்குப்படுத்தி சொற்றொடராக்குதல்.
சரியான தொடரைத் தெரிவு செய்க.

(A) வருவாய் என்பது அன்று கல்வி தேடும்

(B) கல்வி தேடும் வருவாய் வழிமுறை அன்று

(C) கல்வி என்பது வருவாய் தேடும் வழிமுறை அன்று

(D) அன்று கல்வி என்பது வருவாய் வழிமுறை

(E) விடை தெரியவில்லை

5. சொற்களை ஒழுங்குப்படுத்தி சொற்றொடராக்குதல்.
சொற்களை ஒழுங்குபடுத்துக :

(A) தமிழ் அம்புவிடும் கலையை ஏகலை என்றது

(B) ஏகலை கலையை அம்புவிடும் தமிழ் என்றது

(C) ஏகலை அம்புவிடும் தமிழ் கலையை என்றது

(D) தமிழ் கலையை அம்புவிடும் ஏகலை என்றது

(E) விடை தெரியவில்லை

6. அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்தல் :
அகர வரிசை காண்க.

(A) பெருக்கி, திருத்தி, மதிக்கும், இன்பம்

(B) இன்பம், திருத்தி, பெருக்கி, மதிக்கும்

(C) மதிக்கும், இன்பம், திருத்தி, பெருக்கி

(D) மதிக்கும், திருத்தி, பெருக்கி, இன்பம்

(E) விடை தெரியவில்லை

7. அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்க :

(A) எழுத்து, ஓலைச்சுவடிகள், ஒலி வடிவம், ஔகாரம்

(B) ஓலைச்சுவடிகள், ஒலி வடிவம், ஔகாரம், எழுத்து

(C) எழுத்து, ஒலி வடிவம், ஓலைச்சுவடிகள், ஔகாரம்

(D) ஓலைச்சுவடிகள், எழுத்து, ஔகாரம், ஒலி வடிவம்

(E) விடை தெரியவில்லை

8. 'தா' – என்ற வேர்ச்சொல்லின் தொழிற்பெயர் தருக :

(A) தந்தான்

(B) தருதல்

(C) தந்த

(D) தந்து

(E) விடை தெரியவில்லை

9. 'கொடு' என்ற வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயரைத் தேர்க

(A) கொடுத்தார்

(B) கொடுப்பார்

(C) கொடுத்தோர்

(D) கொடுத்தோம்

(E) விடை தெரியவில்லை

10. 'நட' என்ற வேர்ச்சொல்லின் தொழிற்பெயரைத் தேர்வு செய்க.

(A) நட

(B) நடந்து

(C) நடத்தல்

(D) நடத்து

(E) விடை தெரியவில்லை

11. ‘வருக’ வேர்ச்சொல்லை அறிக :

(A) வருவிக்கப்பட்ட
(B) வருவித்த
(C) வருகின்ற
(D) வா
(E) விடை தெரியவில்லை

12. பின்வரும் தொடரில் உள்ள வினைச் சொல்லைத் தேர்வு செய்து, அதன் வேர்ச்சொல்லை எழுதுக.

இட்டதோர் தாமரைப்பூ

(A) இடு
(B) ஓர்
(C) தாமரை
(D) பூ
(E) விடை தெரியவில்லை

13. “வாருங்கள்” – வேர்ச்சொல்லைத் தருக.

(A) வாரும்
(B) வா
(C) வரு
(D) வந்து
(E) விடை தெரியவில்லை

14. ஒரு பொருள் தரும் பல சொற்கள் :

கொழுந்து வகை

(A) தாள், தோகை, ஓலை
(B) துளிர், தளிர், குருத்து
(C) தண்டு, கோல், தூறு
(D) சுவை, கொம்பு, கொப்பு
(E) விடை தெரியவில்லை

15. ஒரு பொருள் தரும் பல சொற்கள்.

கொத்து, குலை, தாறு, கதிர் முதலான சொற்கள் எதனைக் குறிக்கும்.

(A) பிஞ்சு வகை

(B) மணி வகை

(C) இளம் பயிர் வகை

(D) குலை வகை

(E) விடை தெரியவில்லை

16. பொருள் வேறுபாடறிந்து சரியான பொருளையறிதல்

அன்பைக் ————————.

———————— போடாதே.

(A) கொடு, கோடு

(B) கொடுத்தல், கேடு நினைத்தல்

(C) தா, போ

(D) கோடு, கொடு

(E) விடை தெரியவில்லை

17. வாணம், வானம் – ஒலி வேறுபாடறிந்து பொருள் தருக.

(A) வெடி, ஆகாயம்

(B) ஆகாயம், புல்

(C) புல், ஆகாயம்

(D) ஆகாயம், வெடி

(E) விடை தெரியவில்லை

18. வளி, வழி – ஒலி வேறுபாடு அறிந்து பொருள் அறிக :

(A) துன்பம், காற்று

(B) காற்று, நெறி

(C) நெறி, துன்பம்

(D) நெறி, காற்று

(E) விடை தெரியவில்லை

19. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை எழுதுக.

'செக்'

(A) வரைவோலை
(B) காசோலை
(C) பணத்தாள்
(D) கடன் அட்டை
(E) விடை தெரியவில்லை

20. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை எழுதுக.

Informant

(A) செய்தி
(B) தகவல்
(C) செய்தி அலுவலர்
(D) தகவலாளர்
(E) விடை தெரியவில்லை

21. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை அறிதல் சரியான இணை எது?

(A) டிமாண்ட் டிராஃப்ட் – பணத்தாள்
(B) ஆன்லைன் ஷாப்பிங் – இணையத்தள வணிகம்
(C) ஈகாமர்ஸ் – காசோலை
(D) கரன்சி நோட் – மின்னணு வணிகம்
(E) விடை தெரியவில்லை

22. சந்திப் பிழை இல்லாத தொடரைக் கண்டறிக

(A) கடைக்கு செல்லும்போது துணிப்பைகளை எடுத்துச் செல்வேன்
(B) கடைக்குச் செல்லும்போது துணிபைகளை எடுத்துச் செல்வேன்
(C) கடைக்குச் செல்லும்போது துணிப்பைகளை எடுத்துச் செல்வேன்
(D) கடைக்குச் செல்லும்போது துணிப்பைகளை எடுத்து செல்வேன்
(E) விடை தெரியவில்லை

23. சந்திப் பிழையுள்ள தொடரைத் தெரிவு செய்க.

(A) தேனினும் இனியநற் செந்தமிழ் மொழி

(B) தென்னாடு விளங்குற திகழுந்தென் மொழி

(C) வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழி

(D) ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழி

(E) விடை தெரியவில்லை

24. கீழ்க்காணும் சொற்களுள் பொருந்தாத சொல்லைத் தெரிவு செய்க.

(A) சொன்னாள் (B) நவின்றாள்

(C) பகர்ந்தாள் (D) ஆடினாள்

(E) விடை தெரியவில்லை

25. பொருந்தாச் சொல்லை எடுத்தெழுதுக.
மரங்களின் பெயர் அல்லாதது

(A) நாளிகேரம் (B) காலம்

(C) கோளி (D) வேரி

(E) விடை தெரியவில்லை

26. பொருந்தாச் சொல் இணையைக் கண்டறிக

(A) சுட்டி - நெற்றி (B) குழை - காது

(C) மருதம் - வைகறை (D) குறிஞ்சி - நண்பகல்

(E) விடை தெரியவில்லை

27. எதிர்ச்சொல்லை எடுத்து எழுதுதல்,

'நீக்குதல்'

(A) போக்குதல்
(B) தள்ளுதல்
(C) அழித்தல்
(D) சேர்த்தல்
(E) விடை தெரியவில்லை

28. எதிர்ச்சொல்லை எடுத்தெழுதுதல்

'படுகர்' - எதிர்ச்சொல் எழுதுக.

(A) மேடு
(B) பொம்மல்
(C) பள்ளம்
(D) தங்கி
(E) விடை தெரியவில்லை

29. 'இரவலர்' - என்ற சொல்லுக்கு எதிர்ச்சொல் தருக

(A) உறவினர்
(B) நண்பர்
(C) பகைவர்
(D) புரவலர்
(E) விடை தெரியவில்லை

30. சேர்த்தெழுதுதல்

'பால் + ஊறும்' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்.

(A) பால் ஊறும்
(B) பாலூறும்
(C) பால்லூறும்
(D) பா ஊறும்
(E) விடை தெரியவில்லை

31. பருத்தி + எல்லாம் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்.

(A) பருத்திஎல்லாம்
(B) பருத்தியெல்லாம்
(C) பருத்தெல்லாம்
(D) பருத்திதெல்லாம்
(E) விடை தெரியவில்லை

32. சேர்த்து எழுதுக

(A) நூல் + அகம் = நூற்றகம்
(B) நூற் + அகம் = நூல் அகம்
(C) நூல் + அகம் = நூலகம்
(D) நூல் + அகம் = நூற்பகம்
(E) விடை தெரியவில்லை

33. சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு:

"கூவல்" என்று அழைக்கப்படுவது

(A) எது
(B) எதனால்
(C) எதற்கு
(D) எவை
(E) விடை தெரியவில்லை

34. சரியான வினாச் சொல்லை தேர்ந்தெடு

பறவைகள் ———— ல் பறந்து செல்கின்றன.

(A) எங்கு
(B) எப்படி
(C) எப்பொழுது
(D) என்ன
(E) விடை தெரியவில்லை

35. பொருத்தமான காலத்தை தேர்ந்தெடு.

மங்கா காய்களை வாங்கினாள்

(A) நிகழ் காலம்
(B) இறந்த காலம்
(C) எதிர்காலம்
(D) எதுவுமில்லை
(E) விடை தெரியவில்லை

36. பொருத்தமான காலம் அமைத்தல்:

வயலில் உழவர் கூட்டம் வெள்ளம் போல் நிறைந்திருந்தது.

(A) இறந்தகாலம்
(B) நிகழ்காலம்
(C) எதிர் காலம்
(D) முக்காலம்
(E) விடை தெரியவில்லை

37. காலத்திற்கேற்ற வினைமுற்றைக் கொண்டு நிரப்புக.

மலர்விழி நேற்று மலர் ————.

(A) பறிப்பாள்
(B) பறிக்கிறாள்
(C) கொய்வாள்
(D) கொய்தாள்
(E) விடை தெரியவில்லை

38. சொற்களை இணைத்து புதிய சொல் உருவாக்குக.

உற்றார் ————

(A) உறவினர்
(B) பெரியர்
(C) சிறியர்
(D) விருந்தினர்
(E) விடை தெரியவில்லை

39. சொற்களை இணைத்து புதிய சொல் உருவாக்கல்.

தென்னம்

(A) கீற்று
(B) தட்டு
(C) குழை
(D) கூட்டம்
(E) விடை தெரியவில்லை

40. பேச்சு வழக்கு எழுத்து வழக்கு

பேருந்து நிலையம் அருகாமையில் வளவன் பால் குடித்துக் கொண்டிருந்தான்.

(A) பேருந்துநிலையம் அருகாமையில் வளவன் பால் பருகிக் கொண்டிருந்தான்

(B) பேருந்து நிலையம் அருகில் வளவன் பால் குடித்துக் கொண்டிருந்தான்

(C) பேருந்து நிலையம் அருகில் வளவன் பால் பருகிக் கொண்டிருந்தான்

(D) பேருந்து நிலையம் அருகே வளவன் பால் குடித்துக் கொண்டிருந்தான்

(E) விடை தெரியவில்லை

41. பேச்சு வழக்கு எழுத்து வழக்கு

அம்மாவிடம் சொல்லு!

(A) அம்மாவிடம் சொல்

(B) அம்மாவுக்கு சொல்றேன்

(C) அம்மாவிடம் நீயே சொல்லு

(D) அம்மா சொல்லு

(E) விடை தெரியவில்லை

42. சொற்றொடரின் இறுதியில் ———— வரும்.

(A) காற்புள்ளி ( , )

(B) அரைப்புள்ளி ( ; )

(C) முக்காற் புள்ளி ( : )

(D) முற்றுப் புள்ளி ( . )

(E) விடை தெரியவில்லை

43. நிறுத்தற்குறிகளை அறிதல் :

சரியான நிறுத்தற்குறிகள் இடப்பட்டத் தொடரைக் கண்டறிக.

(A) அந்தோ! இயற்கை அழிகிறதே?

(B) அந்தோ இயற்கை அழிகிறதே

(C) அந்தோ, இயற்கை அழிகிறதே.

(D) அந்தோ! இயற்கை அழிகிறதே!

(E) விடை தெரியவில்லை

44. பொருத்தமான நிறுத்தற்குறி இடுக :

பிழையா நன்மொழி என்று வாய்மையை நற்றிணை குறிப்பிடுகின்றது.

(A) பிழையா நன்மொழி என்று, 'வாய்மையை' நற்றிணை குறிப்பிடுகின்றது.

(B) 'பிழையா நன்மொழி' என்று வாய்மையை நற்றிணை குறிப்பிடுகின்றது.

(C) பிழையா நன்மொழி என்று வாய்மையை 'நற்றிணை' குறிப்பிடுகின்றது.

(D) பிழையா நன்மொழி என்று, 'வாய்மையை நற்றிணை' குறிப்பிடுகின்றது.

(E) விடை தெரியவில்லை

45. ஊர்ப் பெயரின் மரூஉவை எழுதுக :

புதுக்கோட்டை

(A) புதுவை

(B) புதுக்கை

(C) புதுகை

(D) புதூர்

(E) விடை தெரியவில்லை

46. ஊர்ப் பெயரின் மரூஉவை எடுத்தெழுதுக :

புதுச்சேரி

(A) பாண்டிச்சேரி

(B) பாண்டி

(C) புதுகை

(D) புதுவை

(E) விடை தெரியவில்லை

47. ஊர்ப் பெயர்களின் மரூஉவை எழுதுக :

சோழநாடு

(A) சோணாடு

(B) சோழ் நாடு

(C) சோள் நாடு

(D) சோன நாடு

(E) விடை தெரியவில்லை

48. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொல்லை எழுது :

வெதர்

(A) வானிலை
(B) தட்பவெப்ப நிலை
(C) வலசை
(D) பருவ நிலை
(E) விடை தெரியவில்லை

49. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கள் :

அறிவியல் அறிஞர்கள் சரித்திரம் படைத்தனர்

(A) விஞ்ஞானம்
(B) வரலாறு
(C) இணையம்
(D) மின்னணு
(E) விடை தெரியவில்லை

50. சரியான விடைவகையைத் தேர்ந்தெடு :

நீ விளையாடவில்லை? என்ற வினாவிற்கு கால் வலிக்கிறது என்று உரைப்பது

(A) உற்றது உரைத்தல் விடை
(B) உறுவது கூறல் விடை
(C) இனமொழி விடை
(D) ஏவல் விடை
(E) விடை தெரியவில்லை

51. விடை வகைகள் : "நீ விளையாடவில்லையா" என்ற வினாவிற்குக் "கால் வலிக்கும்" என்று உறுவதை உரைப்பது.

(A) உறுவது கூறல் விடை
(B) உற்றது உரைத்தல் விடை
(C) இனமொழி விடை
(D) வினா எதிர் வினாதல் விடை
(E) விடை தெரியவில்லை

52. சரியான இணையைத் தேர்க :

(A) ஐய வினா – இச் செயலைச் செய்தது மங்கையா? மணிமேகலையா

(B) கொளல் வினா – நீ கடைக்குச் செல்வாயா?

(C) ஏவல் வினா – உன்னிடம் பாரதிதாசன் புத்தகம் இருக்கிறதா?

(D) கொடை வினா – கவிஞர் சுரதாவின் சிறுகதைகள் இருக்கிறதா?

(E) விடை தெரியவில்லை

53. கலைச்சொல் தருக :

INDIAN PENAL CODE

(A) சட்ட ஏரையறை

(B) தண்டனைச் சட்டத் தொகுப்பு

(C) இந்தியத் தண்டனைச் சட்டத் தொகுப்பு

(D) இந்திய சட்டத் தொகுப்பு

(E) விடை தெரியவில்லை

54. அலுவல் சார்ந்த சொற்கள்

Summon

(A) அழைப்பாணை (B) விசாரணை

(C) ஆணை (D) உறுதி

(E) விடை தெரியவில்லை

55. கலைச் சொல் அறிக :

Cleaner

(A) துப்புரவாளர் (B) வங்கி அலுவலர்

(C) அஞ்சல் அலுவலர் (D) கணக்கர்

(E) விடை தெரியவில்லை

56. உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடு :
பழம் நழுவி பாலில் விழுந்தது போல

(A) எதிர்பாராத நல் வாய்ப்பு
(B) எதிர்பாராத விருந்து
(C) பயனற்ற செயல்
(D) செல்வ செழிப்பு
(E) விடை தெரியவில்லை

57. உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெழுதுக :
விழலுக்கு இறைத்த நீர் போல

(A) ஒற்றுமையின்மை
(B) தற்செயல் நிகழ்வு
(C) எதிர்பாரா நிகழ்வு
(D) பயனற்ற செயல்
(E) விடை தெரியவில்லை

58. 'பள்ளிக்குப் புத்தகங்கள் வருவித்தார்' – இது எவ்வகைத் தொடர்

(A) செய்வினைத் தொடர்
(B) எதிர்மறை வினைத் தொடர்
(C) தன்வினைத் தொடர்
(D) பிறவினைத் தொடர்
(E) விடை தெரியவில்லை

59. 'கவிதை கமலாவால் படிக்கப்பட்டது' இது எவ்வகைத் தொடர் எனக் கண்டறிக

(A) செய்வினை
(B) செயப்பாட்டுவினைத் தொடர்
(C) பிறவினை
(D) எதிர்மறைவினைத் தொடர்
(E) விடை தெரியவில்லை

60. எவ்வகை வாக்கியம் எனக் கண்டறிக

(A) உரை கவிதாவால் படிக்கப்பட்டது – செயப்பாட்டுவினைத் தொடர்

(B) அப்துல் நேற்று வந்தான் – செய்வினைத் தொடர்

(C) கவிதா உரை படித்தாள் – பிறவினைத் தொடர்

(D) அப்துல் நேற்று வருவித்தான் – தன்வினைத் தொடர்

(E) விடை தெரியவில்லை

61. 'யானை புக்க புலம் போல'

– உவமை கூறும் பொருளைக் கண்டறிக.

(A) தான்காக்குவது

(B) வீணாக்குவது

(C) உருவாக்குவது

(D) முயற்சி செய்வது

(E) விடை தெரியவில்லை

62. விடைக்கேற்ற வினாவைத் தெரிவு செய்க.

சாலைச் சந்திப்பில் நுழையும்போது அந்தச் சாலையில் ஏற்கெனவே செல்லும் வாகனங்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும்.

(A) சாலைச் சந்திப்புகளை வேகமாக கடக்கலாமா?

(B) சாலைச் சந்திப்புகளில் ஏன் பிற வாகனங்களுக்கு முதலிடம் தர வேண்டும்?

(C) சாலைச் சந்திப்புகளில் யாருக்கு முதலிடம் தர வேண்டும்?

(D) சாலைச் சந்திப்புகளில் எவற்றுக்கு முதலிடம் தர வேண்டும்?

(E) விடை தெரியவில்லை

63. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுத்தல்.
ஆய்த எழுத்து சொல்லின் இடையில் மட்டுமே வரும்.

(A) ஆய்த எழுத்து எவ்வாறு எழுதப்படும்?

(B) ஆய்த எழுத்து எது?

(C) சொல்லின் இடையில் மட்டுமே வரும் எழுத்து எது?

(D) ஆய்த எழுத்து சார்ந்து வருவது எது?

(E) விடை தெரியவில்லை

திருநெல்வேலிப் பகுதியை வளம் செழிக்கச் செய்யும் ஆறு தாமிரபரணி ஆகும். தாமிரபரணி ஆற்றின் மேற்குக் கரையில் திருநெல்வேலியும், கிழக்குக் கரையில் பாளையங்கோட்டையும் அமைந்துள்ளன. இவ்விரு நகரங்களும் இரட்டை நகரங்கள் என அழைக்கப்பட்டன. பாளையங்கோட்டையில் அதிக அளவில் கல்வி நிலையங்கள் இருப்பதால் அந்நகரைத் தென்னிந்தியாவின் ஆக்ஸ்போர்டு என்பர்.

64. திருநெல்வேலிப் பகுதியை வளம் செழிக்கச் செய்யும் ஆறு எது?

(A) தாமிரபரணி (B) வைகை

(C) காவிரி (D) பாலாறு

(E) விடை தெரியவில்லை

65. இரட்டை நகரங்கள் எவை?

(A) மதுரை, திருச்சி (B) திருநெல்வேலி, கன்னியாகுமரி

(C) திருநெல்வேலி, பாளையங்கோட்டை (D) திருநெல்வேலி, தூத்துக்குடி

(E) விடை தெரியவில்லை

66. தென்னிந்தியாவின் ஆக்ஸ்போர்டு எது?

(A) திருநெல்வேலி (B) பாளையங்கோட்டை

(C) கோயமுத்தூர் (D) மதுரை

(E) விடை தெரியவில்லை

67. கிழக்குக்கரையில் அமைந்துள்ள நகரம் எது?

(A) திருநெல்வேலி
(B) தூத்துக்குடி
(C) பாளையங்கோட்டை
(D) திருச்சி
(E) விடை தெரியவில்லை

68. பாளையங்கோட்டையில் அதிக அளவில் ———————— இருக்கின்றது.

(A) சிறைசாலை
(B) உணவு விடுதி
(C) பொழுதுபோக்கு இடங்கள்
(D) கல்வி நிலையங்கள்
(E) விடை தெரியவில்லை

69. ஒருமை-பன்மை பிழை நீக்குக.

குழந்தைகள் ———————— இயன்ற உதவிகளைப் பிறருக்குச் செய்கின்றனர்.

(A) தனது
(B) தமது
(C) தன்னால்
(D) தம்மால்
(E) விடை தெரியவில்லை

70. வேலொடு நின்றான் இடு வென்றது போலும்
கோலொடு நின்றான் இரவு.

– இக்குறட்பாவில் பயின்று வரும் அணி எது?

(A) உவமையணி
(B) உருவக அணி
(C) ஏகதேச உருவக அணி
(D) சொல் பின்வருநிலை அணி
(E) விடை தெரியவில்லை

71. ஒருமை பன்மை பிழையுள்ள தொடரைக் குறிப்பிடுக.

(A) உலகம் நிலைத்திருக்கிறது

(B) விருந்தோம்பல் பெண்களின் சிறந்த பண்புகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது

(C) நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்றனர்

(D) கல்வியும், செல்வமும் பெற்ற பெண்கள் விருந்தும், ஈகையும் செய்வதாக இருந்தது

(E) விடை தெரியவில்லை

72. சொல் - பொருள் - பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | ஈன்று | (1) | கிளை |
| (b) | கொம்பு | (2) | தந்தது |
| (c) | களித்திட | (3) | மிகுந்தசுவை |
| (d) | அதிமதுரம் | (4) | மகிழ்ந்திட |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 4 | 1 | 2 | 3 |
| (C) | 2 | 1 | 4 | 3 |
| (D) | 2 | 1 | 3 | 4 |

(E) விடை தெரியவில்லை

73. சொல் - பொருள் - பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | முகில் | (1) | சரியாக |
| (b) | சேகரம் | (2) | மேகம் |
| (c) | வாகு | (3) | சேதம் |
| (d) | வின்னம் | (4) | கூட்டம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 2 | 1 | 4 | 3 |
| (D) | 2 | 4 | 1 | 3 |

(E) விடை தெரியவில்லை

74. சரியான பொருளை அறிக.

வெற்பு

(A) வயல் (B) மலை

(C) கலை (D) அலை

(E) விடை தெரியவில்லை

75. கீழே கொடுக்கப்பட்டுள்ளவைகளில் ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம் எது?

(A) விசும்பு (B) வாரா

(C) செந்நீ (D) வளர்வானம்

(E) விடை தெரியவில்லை

76. (ஒரு, ஓர்) – நிறைவு செய்க.

அது ———————— இனிய பாடல்.

(A) ஒரு

(B) ஓர்

(C) ஒன்று

(D) ஒன்றாம்

(E) விடை தெரியவில்லை

77. 'பூக்களைப் பறிக்காதீர்' இது எவ்வகைத் தொடர்?

(A) கட்டளைத் தொடர்

(B) வினாத் தொடர்

(C) செய்தித் தொடர்

(D) உணர்ச்சித் தொடர்

(E) விடை தெரியவில்லை

78. சொற்களை மாற்றியமைத்து சரியான தொடரைத் தேர்ந்தெடு.

(A) சேரர்களின் தலைநகராக வஞ்சி விளங்கியது.

(B) விளங்கியது வஞ்சி தலைநகராக சேரர்களின்.

(C) விளங்கியது தலைநகராக சேரர்களின் வஞ்சி.

(D) வஞ்சி தலைநகராக விளங்கியது சேரர்களின்

(E) விடை தெரியவில்லை

79. சொற்களின் கூட்டுப் பெயர்களை எழுதுக.

நெல்

(A) வயல்

(B) புதர்

(C) தோட்டம்

(D) கொல்லை

(E) விடை தெரியவில்லை

80. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | வாழை | (1) | குரும்பை |
| (b) | வெள்ளரி | (2) | பிஞ்சு |
| (c) | பனம் | (3) | கச்சல் |
| (d) | மா | (4) | வடு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 3 | 2 | 1 | 4 |
| (C) | 1 | 2 | 3 | 4 |
| (D) | 2 | 3 | 1 | 4 |

(E) விடை தெரியவில்லை

81. சொல்லுக்கேற்ற கூட்டப் பெயர் காண்.

புல்

(A) புற்கள் (B) கற்கள்

(C) புல்கள் (D) புட்கள்

(E) விடை தெரியவில்லை

82. இளங்கோவடிகள் முதன்மை கொடுத்துப்பாடிய மலை ———— ஆகும்.

(A) இமயமலை (B) கொல்லிமலை

(C) பொதிகைமலை (D) விந்திய மலை

(E) விடை தெரியவில்லை

83. குழந்தையின் தலை அசையும் பருவத்தின் பெயர் அறிக.

(A) சப்பாணி (B) வருகை

(C) அம்புலி (D) செங்கீரை

(E) விடை தெரியவில்லை

84. வற்றல் தின்றான் – ஆகுபெயர் கூறுக.

(A) பொருளாகுபெயர்
(B) பண்பாகுபெயர்
(C) தொழிலாகுபெயர்
(D) காரியவாகுபெயர்
(E) விடை தெரியவில்லை

85. சரியான கலைச் சொல்லைத் தேர்ந்தெடுக்க.

HERITAGE

(A) பாரம்பரியம்
(B) கலப்படம்
(C) பண்டம்
(D) கடற்பயணம்
(E) விடை தெரியவில்லை

86. சரியான கலைச்சொற்களைத் தேர்ந்தெடுக்க.

AGRONOMY

(A) வேளாண்மை
(B) உழவியல்
(C) நீர்ப்பாசனம்
(D) நாட்டுப்புறவியல்
(E) விடை தெரியவில்லை

87. கூற்று காரணம் சரியா? தவறா?

கூற்று : தமிழ்ச் சொற்களை உச்சரிக்கும் போது உச்சரிப்பில் சிறிதளவு மட்டுமே வேறுபாடு உள்ள எழுத்துக்களை மயங்கொலிகள் என்கிறோம்.

காரணம் 1 : க, ங, ச,ந, ப,ம, த,ந ஆகிய எட்டும் மயங்கொலி எழுத்துகள்

காரணம் 2 : ழகரம் 'ம' போல இருப்பதால் 'மகர ழகரம்' என்று கூறுவது இலக்கண மரபு.

(A) கூற்று சரி, காரணம் 1 சரி, 2 தவறு

(B) கூற்று சரி, காரணம் 1,2 சரி

(C) கூற்று சரி, காரணம் 1 தவறு, 2 சரி

(D) கூற்று சரி காரணம் 1,2 தவறு

(E) விடை தெரியவில்லை

88. கூற்று (i) : போலி என்னும் சொல் "போல இருத்தல்" என்பதிலிருந்து தோன்றியது

கூற்று (ii) : போலி மூன்று வகைப்படும்

கூற்று (iii) : மூவகைப் போலிகள் மட்டுமன்றி வேறு ஒருவகைப் போலியும் உண்டு

(A) அனைத்தும் சரி

(B) கூற்று (i), (ii) சரி, கூற்று (iii) தவறு

(C) கூற்று (i), (ii) தவறு, கூற்று (iii) சரி

(D) அனைத்தும் தவறு

(E) விடை தெரியவில்லை

89. கூற்று : சிதம்பரனாரின் பிரசங்கத்தையும், பாரதியாரின் பாட்டையும் கேட்டால் செத்தபிணம் உயிர்பெற்று எழும்

காரணம் : சிதம்பரனாருக்கு வாழ்நாள் விருது வழங்கிய நீதிபதி பின்ஹேவின் கருத்து

(A) கூற்று, காரணம் இரண்டும் சரி

(B) கூற்று சரி, காரணம் தவறு

(C) கூற்று தவறு, காரணம் சரி

(D) கூற்று, காரணம் இரண்டும் தவறு

(E) விடை தெரியவில்லை

90. குறில் – நெடில் மாற்றம் பொருள் வேறுபாடு அறிக.

மனம் – மானம்

(A) உள்ளம் – பெருமைக் கேடு

(B) தனம் – பெருமை

(C) உல்லம் – கேடு

(D) உள்ளம் – பெறுமைக் கேடு

(E) விடை தெரியவில்லை

91. குறில் – நெடில் மாற்றம் பொருள் வேறுபாடு அறிக.

வளி – வாளி

(A) காற்று – குவளை

(B) காற்று – குடம்

(C) காற்று – கரண்டி

(D) காற்று – கைப்பிடி உள்ள பெரிய பாத்திரம்

(E) விடை தெரியவில்லை

92. குறில் – நெடில் மாற்றம் பொருள் வேறுபாடு.

மரி – மாரி

(A) இரத்தல் – மழை

(B) இறத்தல் – மழை

(C) மழை – இறத்தல்

(D) மழை – இரத்தல்

(E) விடை தெரியவில்லை

93. சரியான இணைப்புச் சொல்லால் நிரப்புக.

அதிக அளவில் மரங்களை வளர்ப்போம் ———— மரங்கள்தான் மழைக்கு அடிப்படை.

(A) ஆகையால்

(B) ஏனெனில்

(C) அதனால்

(D) எனவே

(E) விடை தெரியவில்லை

94. விளக்கு – இரு பொருள் தருக

(A) உண்டாக்குதல் – ஒளி தரும் சாதனம்

(B) விவரித்தல் – ஒளி தரும் சாதனம்

(C) மலர்தல் – ஒழி

(D) பாத்திரம் – ஒளி தரும் சாதனம்

(E) விடை தெரியவில்லை

95. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க.
(மொழி)

(A) மழலை விளையாடும் ———— அழகு

(B) மழலை சிரிக்கும் ———— அழகு

(C) மழலை உறங்கும் ———— அழகு

(D) மழலை பேசும் ———— அழகு

(E) விடை தெரியவில்லை

96. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க.
(தமிழ்.நூல்கள்)

(A) அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் முதல் தளத்தில் ———— உள்ளது

(B) அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் ஏழாம் தளத்தில் ———— உள்ளது

(C) அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் இரண்டாம் தளத்தில் ———— உள்ளது

(D) அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் ஐந்தாம் தளத்தில் ———— உள்ளது

(E) விடை தெரியவில்லை

97. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க.
(விளைநிலம்)

(A) ———— கள் அனைத்தும் மூடுபனியில் முழுகிக் கிடக்கின்றன

(B) ———— கள் அனைத்தும் மூடுபனியில் வளர்கின்றது

(C) ———— கள் அனைத்தும் மூடுபனியில் மிதக்கின்றன

(D) ———— கள் அனைத்தும் மூடுபனியில் ஒளிருகின்றது

(E) விடை தெரியவில்லை

98. சரியான இணைப்புச் சொல் தேர்க.

இளையான்குடி மாறநாயனாரின் வீட்டிற்கு வந்த சிவனடியார்க்கு விருந்தளிக்க தானியமில்லை. ———— அன்று விதைத்த நெல்லை அரித்து வந்து விருந்து படைத்தார்.

(A) ஆகையால்
(B) எனவே
(C) அதனால்
(D) ஏனெனில்
(E) விடை தெரியவில்லை

99. சரியான இணைப்புச் சொல்லால் நிரப்புக.

நாம் இனிய சொற்களைப் பேச வேண்டும். ———— துன்பப்பட நேரிடும்.

(A) இல்லையென்றால்
(B) ஆகையால்
(C) எனவே
(D) அதனால்
(E) விடை தெரியவில்லை

100. சரியான இணைப்புச் சொல்லைத் தேர்ந்தெடு.

அறிஞர் அடக்கமாக இருப்பர். ———— மூடர் ஆரவாரம் செய்வர்.

(A) ஆனால்
(B) ஏனெனில்
(C) எனவே
(D) அதனால்
(E) விடை தெரியவில்லை

# பகுதி-அ (தமிழ் தகுதி தேர்வு)

## Part-A (Tamil Eligibility Test)

**வினாக்கள் : 1–100** **மொத்த மதிப்பெண்கள் : 150**

**Questions : 1–100** **Total Marks : 150**

1. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல் தருக

FAX

(A) தொலைநோக்கு இயந்திரம்
(B) தொலைநகல் கருவி
(C) தொலைநகல் இயந்திரம்
(D) தொலைநோக்கு கருவி
(E) விடை தெரியவில்லை

2. பிறமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல்லை எழுதுக

மாஸ்க்

(A) தலைக்கவசம்
(B) முகமூடி
(C) மூக்கு கவசம்
(D) முகக்கவசம்
(E) விடை தெரியவில்லை

3. ஊர்ப்பெயரின் மரூஉவை எழுதுக.

கோயம்புத்தூர்

(A) புத்தூர்
(B) கோவை
(C) கோவன்
(D) கோடை
(E) விடை தெரியவில்லை

4. ஊர்ப்பெயரின் மரூஉவை எழுதுக.

திருச்சிராப்பள்ளி

(A) திருப்பள்ளி
(B) திருவைப்பள்ளி
(C) திருச்சீர்
(D) திருச்சி
(E) விடை தெரியவில்லை

5. மரூஉவை எழுதுக.

'கும்பகோணம்'

(A) மடந்தை
(B) குடந்தை
(C) சிந்தை
(D) கோயில் நகரம்
(E) விடை தெரியவில்லை

6. சரியான நிறுத்தற்குறிகள் இடப்பட்டத் தொடரைக் கண்டறிக.

(A) அடடா எவ்வளவு சிற்பங்கள்.
(B) அடடா, எவ்வளவு சிற்பங்கள்.
(C) அடடா? எவ்வளவு சிற்பங்கள்?
(D) அடடா ! எவ்வளவு சிற்பங்கள் !
(E) விடை தெரியவில்லை

7. நிறுத்தற்குறிகள் அறிதல் (எது சரியானது)

(A) சேரர்களின் பட்டப் பெயர்களில், கொல்லி, வெற்பன், மலையமான், போன்றவை குறிப்பிடத்தக்கவை.

(B) சேரர்களின் பட்டப் பெயர்களில் கொல்லி, வெற்பன், மலையமான், போன்றவை குறிப்பிடத்தக்கவை !

(C) சேரர்களின் பட்டப் பெயர்களில், கொல்லி வெற்பன் மலையமான், போன்றவை குறிப்பிடத்தக்கவை?

(D) சேரர்களின் பட்டப் பெயர்களில் கொல்லி, வெற்பன், மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை.

(E) விடை தெரியவில்லை

8. பேச்சு வழக்கு, சொற்களை எழுத்து வழக்கு சொற்களாக மாற்றுக.

சிரட்டையில் நீத்துபாகத்தை வடித்து நீட்டினான்

(A) கொட்டாங்குஞ்சியில் சோற்றை வடித்து நீட்டினான்

(B) சிரட்டையில் மேல்கஞ்சியை வடித்து நீட்டினான்

(C) அகப்பையில் நீத்துபாகத்தை வடித்து நீட்டினான்

(D) கரண்டியில் நீத்துபாகத்தை வடித்து நீட்டினான்

(E) விடை தெரியவில்லை

9. எழுத்து வழக்குத் தொடரைக் கண்டறிக:

(A) சோலைக்குள் சத்தமில்லாமல் தென்றலு வீசியது.

(B) சோலைக்குள் சத்தமில்லாமல் தென்றல் வீசியது

(C) சோலைக்குள்ளே சத்தமில்லாமல் தென்றலு வீசியது

(D) சோலையிலே சத்தமில்லாமல் தென்றலு வீசியது

(E) விடை தெரியவில்லை

10. பொருத்தமான காலம் அமைத்தல் :

கபிலன் வேலை செய்தால் ஊதியம் பெறுவான்

(A) இறந்த காலம்
(B) நிகழ் காலம்
(C) எதிர் காலம்
(D) முக்காலம்
(E) விடை தெரியவில்லை

11. விண், கோல், மாலை, மீன் இச்சொற்களை இணைத்துப் பார்த்து சரியான சொல்லை தெரிவு செய்க.

(A) மீன்வெளி
(B) விண்மாலை
(C) விண்மீன்
(D) விண்கோல்
(E) விடை தெரியவில்லை

12. பொருத்தமான காலத்தை எடுத்து எழுதுக.

குமரன் மழையில் நனைந்தனன்

(A) இறந்த காலம் (B) நிகழ் காலம்

(C) எதிர் காலம் (D) கால வழு

(E) விடை தெரியவில்லை

13. உரைத்த – வேர்ச்சொல்லைத் தருக :

(A) உரை (B) உரைத்து

(C) உரைந்து (D) உறை

(E) விடை தெரியவில்லை

14. சரியான வினாச்சொல்லைத் தேர்ந்தெடு.

கேலிச் சித்திரம் என்றால் ———————— ?

(A) யாவை (B) என்ன

(C) ஏன் (D) எப்படி

(E) விடை தெரியவில்லை

15. சரியான வினாச்சொல்லைத் தேர்ந்தெடு.

முதல் ஆழ்வார்கள் ———————— பேர்?

(A) எங்கு (B) எப்படி

(C) என்ன (D) எத்தனை

(E) விடை தெரியவில்லை

16. சரியான இணைப்புச்சொல்லால் நிரப்புக.

குயிலுக்குக் கூடுகட்டத் தெரியாது. ———————— காக்கையின் கூட்டில் முட்டையிடும்.

(A) அதனால்
(B) ஏனெனில்
(C) அதுபோல்
(D) யாது
(E) விடை தெரியவில்லை

17. சரியான இணைப்புச்சொல்லால் நிரப்புக.

அதிக அளவில் மரங்களை வளர்ப்போம். ———————— மரங்கள் தான் மழைக்கு அடிப்படை.

(A) எனவே
(B) ஆகையால்
(C) ஏனெனில்
(D) மேலும்
(E) விடை தெரியவில்லை

18. சரியான இணைப்புச் சொல்லை தேர்வு செய்க

உணவு கொடுத்தவர்களே உயிரைக் கொடுத்தவர்கள் என்பதை உணர்ந்துள்ளேன். ————————, இந்தப் பாத்திரத்தில் இருக்கும் உணவைப் பசியால் வாடும் மக்களுக்கு வழங்கப் போகிறேன்.

(A) ஆகையால்
(B) ஏனெனில்
(C) அதுபோல
(D) அதனால்
(E) விடை தெரியவில்லை

19. அடைப்புக்குள் உள்ள கொழுந்து வகை குறித்த சொல்லைத் தகுந்த வாக்கியத்துடன் பொருத்துக.

(கொழுந்தாடை)

(A) பனையின் கொழுந்து
(B) கரும்பின் நுனிப்பகுதி
(C) புளியின் கொழுந்து
(D) வேம்பின் கொழுந்து
(E) விடை தெரியவில்லை

20. இலக்கணக் குறிப்பு தருக :

கொள்க, குரைக்க

(A) வினைத்தொகை
(B) பண்புத்தொகை
(C) வியங்கோள் வினைமுற்று
(D) வினையெச்சம்
(E) விடை தெரியவில்லை

21. இரு பொருள் தருக

படி

(A) புத்தகம் – பாடுதல்
(B) படித்தல் – நூல்
(C) படிக்கட்டு – படித்தல்
(D) புத்தகம் – மாடிப்படி
(E) விடை தெரியவில்லை

22. பின்வரும் சொல்லுக்கு இருபொருள் தரும் சரியானவற்றை தெரிவு செய்க.

நகை

(A) சினம், நவமணிகள்
(B) வியப்பு, தங்கம்
(C) புன்னகை, ஆபரணம்
(D) மகிழ்ச்சி, வைரம்
(E) விடை தெரியவில்லை

23. இரு பொருள் தருக.

கூவல்

(A) நீர்நிலை, பள்ளம்
(B) துவாரம், மூங்கில்
(C) அமிழ், முழுகு
(D) சுங்கம், வரி
(E) விடை தெரியவில்லை

24. பொருள் வேறுபாடு அறிக

உழை – உளை

(A) சமைத்தல் – பிடரி மயிர்

(B) உழைப்பு – சேறு

(C) உலைக்களம் – கலைத்தல்

(D) உயிர் வாழ்தல் – கவலை

(E) விடை தெரியவில்லை

25. குறில் சொல்லை நெடில் சொல்லாக மாற்றி பொருள் வேறுபாடு வருமாறு ஒரே தொடரில் அமைத்து எழுதுக

மடு

(A) மடு – மேடு

மடுவானது மேட்டுப்பாங்கான நிலம் அருகில் இருந்தது

(B) மடு – மாடு

கழனி அருகே இருந்த மடுவில் மாடுகள் நீர் பருகின

(C) மடு –மூடு

ஓர் உழவன் சிறிது நேரம் மடுவை மூடப் பார்த்தான்

(D) மடு – மனு

கழனி அருகே இருந்த மடுவில் ஓர் மனிதன் நின்று கொண்டிருந்தான்

(E) விடை தெரியவில்லை

26. கூற்று காரணம் சரியா? தவறா

கூற்று : தில்லான், "இந்திய தேசிய இராணுவத்தின் இதயமும் ஆத்மாவும் தமிழர்கள் தான்" என்றார்.

காரணம் : இந்திய தேசிய இராணுவத்திற்கு வலுச்சேர்த்த பெருமைக்கு உரியவர்கள் தமிழர்கள்

(A) கூற்று சரி; காரணம் சரி

(B) கூற்று சரி; காரணம் தவறு

(C) கூற்று தவறு; காரணம் சரி

(D) கூற்று தவறு; காரணம் தவறு

(E) விடை தெரியவில்லை

27. கீழ்காணும் மூன்று தொடர்களுள் சரியானவற்றைத் தெரிவு செய்க

(அ) இருந்த இடத்திலிருந்தே பயணச்சீட்டு எடுப்பதை எளிதாக்கிய மிகப்பெரிய இந்திய நிறுவனம் இந்தியத் தொடர் வண்டி உணவு வழங்கல் மற்றும் சுற்றுலாக்கழகம் ஆகும்

(ஆ) வங்கி அட்டை இல்லை என்றால் அலைபேசி எண், வங்கிக் கணக்கு எண் ஆகியவற்றைக் கொண்டு பணம் செலுத்துதல் இயலாது.

(இ) திறன் அட்டைகள் என்பவை குடும்ப அட்டைகளுக்கு மாற்றாக வழங்கப்பட்டனவாகும்

(A) (அ), (ஆ) ஆகியன சரி; (இ) தவறு (B) (அ) தவறு; (ஆ), (இ) ஆகியன சரி

(C) (அ), (இ) ஆகியன சரி; (ஆ) தவறு (D) மூன்றும் சரி

(E) விடை தெரியவில்லை

28. பின்வரும் ஆங்கிலச் சொல்லுக்கு இணையான கலைச்சொல்லை அறிந்து எழுதுக.

Media

(A) மொழியியல் (B) ஊடகம்

(C) ஒலியியல் (D) இதழியல்

(E) விடை தெரியவில்லை

29. Side Effect – இதற்கு ஏற்ற கலைச்சொல்லைத் தெரிவு செய்க

(A) நோய் (B) பக்க விளைவு

(C) மூலிகை (D) ஒவ்வாமை

(E) விடை தெரியவில்லை

30. கலைச்சொல் அறிக

Inscription

(A) பொறிப்பு (B) நடுகல்

(C) அகழாய்வு (D) கல்வெட்டியல்

(E) விடை தெரியவில்லை

31. பொருத்தமான பொருளைத் தேர்வு செய்தல்

தண்டருள் என்ற சொல்லின் பொருள் ————————

(A) மேலான பொருளே
(B) அதைத் தவிர
(C) குளிர்ந்த கருணை
(D) தொண்டு
(E) விடை தெரியவில்லை

32. பொருத்தமான பொருளைத் தெரிவு செய்

திங்கள்

(A) மலை
(B) நிலவு
(C) கடல்
(D) சூரியன்
(E) விடை தெரியவில்லை

33. திருமறைக்காடு என அழைக்கப்படுவது

(A) திருக்கழுக்குன்றம்
(B) விருத்தாச்சலம்
(C) வேதாரண்யம்
(D) ஆற்காடு
(E) விடை தெரியவில்லை

34. சரியான கூட்டுப் பெயரைத் தெரிவு செய்க.

ஆட்டு

(A) கூட்டம்
(B) நிரை
(C) ஆடுகள்
(D) மந்தை
(E) விடை தெரியவில்லை

35. கீழ்காணும் சொல்லின் கூட்டப்பெயர்களைக் கண்டுபிடித்து எழுதுக.

கல்

(A) குலை
(B) குவியல்
(C) மந்தை
(D) கட்டு
(E) விடை தெரியவில்லை

36. பழம் - இச்சொல்லின் கூட்டுப் பெயர்

(A) குலை
(B) குவியல்
(C) மந்தை
(D) கட்டு
(E) விடை தெரியவில்லை

37. சரியான தொடரைத் தேர்ந்தெடுக்க.

(A) மிகப்பெரிய சாண்டியாகோ மீனைப் பிடித்தார்
(B) சாண்டியாகோ மிகப்பெரிய மீனைப் பிடித்தார்
(C) சாண்டியாகோ மீனைப் மிகப்பெரிய பிடித்தார்
(D) பிடித்தார் சாண்டியாகோ மிகப்பெரிய மீனைப்
(E) விடை தெரியவில்லை

38. சரியான தொடர் எது? கண்டறிந்து எழுதுக.

(A) பேசவும், தமிழ்மொழி படிக்கவும், எழுதவும் உகந்தமொழி
(B) படிக்கவும், பேசவும், எழுதவும் தமிழ்மொழி உகந்தமொழி
(C) தமிழ்மொழி பேசவும் படிக்கவும் எழுதவும் உகந்தமொழி
(D) எழுதவும், பேசவும் தமிழ்மொழி படிக்கவும் உகந்தமொழி
(E) விடை தெரியவில்லை

39. சரியான தொடர் எது என்பதைக் கண்டறிந்து எழுதுக.

(A) கூடுகட்டி வாழும் சிட்டுக்குருவி பறவையினத்தைச் சார்ந்தது

(B) சிட்டுக்குருவி கூடுகட்டி வாழும் பறவையினத்தைச் சார்ந்தது

(C) பறவையினத்தைச் சார்ந்து வாழும் சிட்டுக்குருவி கூடுகட்டும்

(D) சிட்டுக்குருவி பறவையினத்தைச் சார்ந்தது

(E) விடை தெரியவில்லை

40. ஒரு - ஓர் சரியாக அமைந்த தொடரைத் தேர்ந்தெடுக்க.

(A) தமிழினத்தை ஒன்றுபடுத்தும் ஓர் இலக்கியம் சிலப்பதிகாரம்

(B) தமிழினத்தை ஒன்றுபடுத்தும் ஒரு இலக்கியம் சிலப்பதிகாரம்

(C) தமிழினத்தால் ஒன்றுபடுத்தும் ஒரு இலக்கியம் சிலப்பதிகாரம்

(D) தமிழினத்தால் ஒன்றுபடுத்தும் ஓர் இலக்கியம் சிலப்பதிகாரம்

(E) விடை தெரியவில்லை

41. கீழ்காணும் தொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.
ஒரு இரவும் ஓர் பகலும் சேர்ந்தது ஒரு நாள்.

(A) இரவும் பகலும் சேர்ந்தது ஒரு நாள்

(B) ஓர் பகலும் ஒரு இரவும் சேர்ந்தது ஒரு நாள்

(C) இரவும் ஒரு பகலும் சேர்ந்தது ஒரு நாள்

(D) ஓர் இரவும் ஒரு பகலும் சேர்ந்தது ஒரு நாள்

(E) விடை தெரியவில்லை

42. கீழ்காணும் தொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.
ஒரு அழகிய சிற்றூரில் ஓர் குளம் இருந்தது.

(A) அழகிய சிற்றூரில் ஒரு குளம் இருந்தது.

(B) அழகிய ஒரு சிற்றூரில் ஓர் குளம் இருந்தது.

(C) ✓ ஓர் அழகிய சிற்றூரில் ஒரு குளம் இருந்தது.

(D) அழகிய ஓர் சிற்றூரில் குளம் ஒன்று இருந்தது.

(E) விடை தெரியவில்லை

43. சொல் பொருள் பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | விச்சை | 1. | கதிரவன் |
| (b) | ஈயில் | 2. | மலை |
| (c) | பரிதி | 3. | கல்வி |
| (d) | வெற்பு | 4. | கொடுத்தல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 2 | 3 | 4 | 1 |
| (D) ✓ | 3 | 4 | 1 | 2 |

(E) விடை தெரியவில்லை

44. உரு - இச்சொல்லின் பொருளைத் தெரிவு செய்க.

(A) ✓ அழகு (B) காற்று

(C) நாவாய் ஓட்டுபவன் (D) கப்பல்

(E) விடை தெரியவில்லை

45. சொல்லையும் பொருளையும் பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | பொக்கிஷம் | 1. | குதிரை |
| (b) | பரி | 2. | அழகு |
| (c) | சிங்காரம் | 3. | வீரன் |
| (d) | சூரன் | 4. | செல்வம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 1 | 3 | 2 | 4 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

(E) விடை தெரியவில்லை

46. பிழை நீக்கி எழுதுக :

புத்தகத்தை எடுத்தது அவன் அல்ல.

(A) புத்தகத்தை எடுத்தது அவன் அல்லன்

(B) புத்தகத்தை எடுத்தது அவன் இல்லை

(C) புத்தகத்தை எடுத்தது அவன் அன்று

(D) புத்தகத்தை எடுத்தது அவன் அல்ல

(E) விடை தெரியவில்லை

47. ஒருமை - பன்மை பிழை நீக்குக :

பிழையற்ற தொடரைத் தெரிவு செய்க.

(A) பானையை உடைத்தது கண்ணன் அல்லன்

(B) பானையை உடைத்தது கண்ணன் அன்று

(C) பானையை உடைத்தது கண்ணன் அல்லர்

(D) பானையை உடைத்தது கண்ணன் அல்லீர்

(E) விடை தெரியவில்லை

48. ஒருமைப் பன்மைப் பிழையற்ற தொடர் எது?

(A) "ஹிப்பாலஸ்" என்பவர் பருவக்காற்றின் பயனை உலகிற்கு உணர்த்தினார்.

(B) "ஹிப்பாலஸ்" என்பவர் பருவக்காற்றின் பயனை உலகிற்கு உணர்த்தினான்.

(C) "ஹிப்பாலஸ்" என்பவர் பருவக்காற்றின் பயனை உலகிற்கு உணர்த்தினார்கள்.

(D) "ஹிப்பாலஸ்" என்பவர் பருவக்காற்றின் பயனை உலகிற்கு உணர்த்தியவர்கள்.

(E) விடை தெரியவில்லை

காமராசரின் வீட்டுக்குள் ஒரு சிறுவனும் அவனுடைய தங்கையும் நுழைய முயன்றனர். ஊழியர் அவர்களைத் தடுப்பதைக் காமராசர் கவனித்தார். உடனே அவர்களை உள்ளே அழைத்தார். "யாரைப் பார்க்க வந்தீங்க" என்று அன்புடன் வினவினார். "எங்க அண்ணனுக்குத் தேர்வுக்குப் பணம் கட்ட அம்மாவிடம் வசதியில்லை. உங்களைப் பார்த்தால்... " என்று சிறுமி கூறி முடிப்பதற்குள் "அம்மா அனுப்பிவிட்டாரா?" என்று காமராசர் கேட்டார். "இல்லை நாங்களாகத்தான் வந்தோம்". அம்மா அப்பளம் போட்டு வீடு வீடாகக் கொண்டு போய் வித்துட்டு வருவாங்க. அதில் வரும் வருமானத்தை வச்சுத்தான் எங்களைப் படிக்க வைக்கிறாங்க" என்று குழந்தைகள் கூறினர். அதனைக் கேட்டதும் மாடியேறிச் சென்று பணத்தைக் கொண்டு வந்து கொடுத்தார். மறுநாள் குழந்தைகள் இருவரும் காமராசரைத் தேடி வந்தனர். "ஐயா! தேர்வுக்குப் பணம் கட்டியாச்சு. இந்த இரசீதை அம்மா உங்களிடம் காட்டிட்டு வரச் சொன்னாங்க" என்றனர். அதனைக் கேட்டு காமராசர் மனம் நெகிழ்ந்தார்.

49. காமராசரின் வீட்டிற்குள் நுழைய முயன்றவர்கள்

(A) பெற்றோர்
(B) சிறுவன் சிறுமி
(C) மக்கள்
(D) ஆசிரியர்கள்
(E) விடை தெரியவில்லை

50. இந்நிகழ்வு சிறுவனது எப்பண்பை விளக்குகிறது?

(A) பேதைமை
(B) நேர்மை
(C) அறியாமை
(D) கல்லாமை
(E) விடை தெரியவில்லை

51. மறுநாள் குழந்தைகள் வந்ததும் காமராசர் மனம்

(A) நெகிழ்ந்தார் (B) வருந்தினார்

(C) மகிழ்ந்தார் (D) கூறினார்

(E) விடை தெரியவில்லை

52. சிறுவனும் சிறுமியும் எதற்காகக் காமராசரின் வீட்டிற்கு வந்தனர்?

(A) தேர்வுக்குப் பணம் கட்ட

(B) காமராசரைப் பார்க்க ஆசைப்பட்டு

(C) விளையாட

(D) காமராசரின் வீட்டிற்குள் வேடிக்கை பார்க்க

(E) விடை தெரியவில்லை

53. காமராசர் செய்த உதவி யாது?

(A) பணத்தைக் கொடுத்தார் (B) விளையாட அனுமதித்தார்

(C) விரட்டி விட்டார் (D) அன்புடன் உணவளித்தார்

(E) விடை தெரியவில்லை

54. 'பூட்டுங்கதவுகள்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

(A) பூட்டு + கதவுகள் (B) பூட்டும் + கதவுகள்

(C) பூட்டின் + கதவுகள் (D) பூட்டிய + கதவுகள்

(E) விடை தெரியவில்லை

55. 'பொய்யகற்றும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

(A) பொய் + அகற்றும் (B) பொய் + கற்றும்

(C) பொய்ய + கற்றும் (D) பொய் + யகற்றும்

(E) விடை தெரியவில்லை

56. "நலமெல்லாம்" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

(A) நலம் + எல்லாம்
(B) நலன் + எல்லாம்
(C) நலம் + எலாம்
(D) நலன் + எலாம்
(E) விடை தெரியவில்லை

57. 'ஊக்கம்' என்பதன் எதிர்ச்சொல்லை காண்க.

(A) தளர்வு
(B) சோர்வு
(C) உயர்வு
(D) தெளிவு
(E) விடை தெரியவில்லை

58. எதிர்ச்சொற்களைப் பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | அணுகு | 1. | தெளிவு |
| (b) | ஐயம் | 2. | சோர்வு |
| (c) | ஊக்கம் | 3. | பொய்மை |
| (d) | உண்மை | 4. | விலகு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 1 | 3 |
| (B) | 4 | 1 | 2 | 3 |
| (C) | 4 | 3 | 1 | 2 |
| (D) | 3 | 1 | 4 | 2 |

(E) விடை தெரியவில்லை

59. "நீக்குதல்" என்னும் சொல்லின் எதிர்ச்சொல் தருக.

(A) போக்குதல்
(B) தள்ளுதல்
(C) அழித்தல்
(D) சேர்த்தல்
(E) விடை தெரியவில்லை

60. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக.

(A) கர்நாடகம்
(B) கேரளா
(C) இலங்கை
(D) ஆந்திரா
(E) விடை தெரியவில்லை

61. பொருந்தாச் சொல்லைக் கண்டறிதல்.

(A) அவன் அல்லன் (B) அவள் அல்லள்

(C) அவர் அல்லீர் (D) அவை அல்ல

(E) விடை தெரியவில்லை

62. பொருந்தாச் சொல்லை எடுத்தெழுதுக.
இறந்தகாலப் பெயரெச்சம்

(A) படித்து வந்தான் படித்த மாணவி

(B) படித்து முடித்தான் படித்த மாணவன்

(C) படித்த மாணவன் படிக்கும் மாணவி

(D) படிக்கும் மாணவன் படித்த மாணவர்கள்

(E) விடை தெரியவில்லை

63. கீழ்க்காணும் தொடரில் மரபுப் பிழையில்லாத தொடரினை எடுத்து எழுதுக.

(A) காகம் கரையும்; மயில் ஆடும் (B) காகம் கூவும்; மயில் அகவும்

(C) காகம் பாடும்; மயில் அகவும் (D) காகம் கரையும்; மயில் அகவும்

(E) விடை தெரியவில்லை

64. பிழை நீக்கி எழுதுக.
பிறமொழிச் சொற்களை நீக்கி எழுது.
சான்றோர் கூறும் உபதேசங்கள் நம் வாழ்க்கைக்கு ஏற்றமளிப்பவை.

(A) அறிவுரைகள் (B) அற்றம்

(C) சொற்கள் (D) அறிவிக்கை

(E) விடை தெரியவில்லை

65. சரியான தொடரைத் தேர்க.

(A) கண்ணகி சிலம்பு அணிந்தாள். (B) கண்ணகி சிலம்பு அணிந்தது.

(C) கண்ணகி சிலம்பு அணிந்தார்கள். (D) கண்ணகி சிலம்பு அணிந்தனர்.

(E) விடை தெரியவில்லை

66. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை அறிக.

(A) பேங்க் - வங்கி (B) செக் - கடன் அட்டை

(C) டிஜிட்டல் - பணத்தாள் (D) கரன்சிநோட் - குறிப்பேடு

(E) விடை தெரியவில்லை

67. ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ் சொல் அறிக.

(A) முழக்கம் – Ballad (B) பேச்சாற்றல் – Elocution

(C) ஒற்றுமை – Courage (D) துணிவு – Unity

(E) விடை தெரியவில்லை

68. ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல்லை எடுத்து எழுதுக.

டெபிட் கார்டு (DEBIT CARD)

(A) காசோலை (B) வரைவோலை

(C) பற்று அட்டை (D) கடன் அட்டை

(E) விடை தெரியவில்லை

69. ஒலி வேறுபாடு அறிந்து சரியான பொருளை எழுதுக.

(A) வரி-நீளம் (B) வரி-தொடர்

(C) வறி-வறுமை (D) வரி-வண்ணம்

(E) விடை தெரியவில்லை

70. ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து, சரியான இணையைத் தெரிவு செய்க.

பரவை-பறவை

(A) பறப்பவை - ஆழி

(B) கடல்-புள்

(C) முந்நீர்-முகில்

(D) குளவி-குழவி

(E) விடை தெரியவில்லை

71. ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து பிழையற்ற தொடரைக் கண்டறிக.

(A) கண்ணன் திருமண வீட்டிற்குச் சென்று மனமகிழ்ச்சியுடன் மணமக்களை வாழ்த்தினான்.

(B) கண்ணன் திருமண வீட்டிற்குச் சென்று மனமகிழ்ச்சியுடன் மனமக்களை வாழ்த்தினான்.

(C) கண்ணன் திருமன வீட்டிற்குச் சென்று மனமகிழ்ச்சியுடன் மணமக்களை வாழ்த்தினான்.

(D) கண்ணன் திருமண வீட்டிற்குச் சென்று மணமகிழ்ச்சியுடன் மணமக்களை வாழ்த்தினான்.

(E) விடை தெரியவில்லை

72. ஒரு பொருள் தரும் பல சொற்கள் இணையைத் தேர்ந்தெடு.

(A) அணி, மேனி

(B) அணி, வனப்பு

(C) அழகு, சிரிப்பு

(D) சிரிப்பு, வனப்பு

(E) விடை தெரியவில்லை

73. சும்பல், சிவியல், அளியல் ஆகிய சொற்கள் எதனைக் குறிக்கும்?

(A) இளம் பயிர் வகை

(B) மணி வகை

(C) கெட்டுப் போன காய்கனி வகை

(D) கெட்டுப் போன பிஞ்சு வகை

(E) விடை தெரியவில்லை

74. ஒரு பொருள் தரும் இரு சொற்கள் தருக:

கடல்

(A) முந்நீர், பௌவம்
(B) ஆழி, சக்கரம்
(C) வாரணம், வதுவை
(D) வேலி, ஆரல்
(E) விடை தெரியவில்லை

75. வேர்ச்சொல்லை பெயரெச்சமாக்குக.

பெறு

(A) பெற்று
(B) பெற்ற
(C) பெற்றான்
(D) பெற்று விட்டான்
(E) விடை தெரியவில்லை

76. கீழ்க்கண்டவற்றுள் சரியான வேர்ச்சொல் இணையைக் கண்டறிக.

(A) வரு - வருக
(B) கிள - கிளர்ந்த
(C) பொறி - பொறித்த
(D) மயங்கி - மயங்கிய
(E) விடை தெரியவில்லை

77. "ஆடினான்" – வேர்ச் சொல்லைத் தருக.

(A) ஆடுகிறாள்
(B) ஆடுதல்
(C) ஆடி
(D) ஆடு
(E) விடை தெரியவில்லை

78. வேர்ச்சொல்லின் வினைமுற்றை காண்க.

குமை

(A) குமைந்தல் (B) குமைந்து

(C) குமைந்த (D) குமைந்தன

(E) விடை தெரியவில்லை

79. கொடுக்கப்பட்டுள்ள வேர்ச்சொல்லின் வினைமுற்று கண்டறிக.

'காண்'

(A) கண்டவன் (B) காணான்

(C) கண்டான் (D) கண்டு

(E) விடை தெரியவில்லை

80. அகர வரிசைப்படி எழுதுக.

(A) உழவு, மண், ஏர், மாடு (B) மண், மாடு, ஏர், உழவு

(C) உழவு, ஏர், மண், மாடு (D) ஏர், உழவு, மாடு, மண்

(E) விடை தெரியவில்லை

81. அகர வரிசைப்படுத்துக.

(A) கணப்பறை, உடுக்கை, பிடித்தல், மகுடி

(B) உடுக்கை, கணப்பறை, மகுடி, பிடித்தல்

(C) உடுக்கை, மகுடி, பிடித்தல், கணப்பறை

(D) உடுக்கை, கணப்பறை, பிடித்தல், மகுடி

(E) விடை தெரியவில்லை

82. அகரவரிசைப்படி சொற்களைச் சீர் செய்தல்

(A) உரிமை, ஏற்றம், அழகு, இசை
(B) அழகு, உரிமை, இசை, ஏற்றம்
(C) ஏற்றம், உரிமை, அழகு, இசை
(D) அழகு, இசை, உரிமை, ஏற்றம்
(E) விடை தெரியவில்லை

83. சொற்களை ஒழுங்குபடுத்துக.

(A) அகத்தியர் வாழ்ந்த மலை பொதிகை மலை
(B) மலை அகத்தியர் மலை வாழ்ந்தார் பொதிகை
(C) பொதிகை மலை அகத்தியர் மலை வாழ்ந்தார் வாழ்ந்தார்
(D) வர்ழ்ந்தார் மலை மலை் பொதிகை அகத்தியர்
(E) விடை தெரியவில்லை

84. ஒலி மற்றும் பொருள் வேறுபாடு அறிந்து சரியான சொல்லைத் தேர்ந்தெடு :
திண் – தின்

(A) பெலன் – உண்
(B) வலிமை – உண்
(C) திண்மை – குடி
(D) செயல் – உண்
(E) விடை தெரியவில்லை

85. இரு வினைகளின் பொருள் வேறுபாடு அறிந்து சரியான சொற்றொடரைக் கண்டுபிடி.

குவிந்து - குவித்து

(A) அமைச்சர் பதவியேற்றவுடன் பாராட்டுகள் குவித்தன. ஆதரவாளர்கள் பரிசுப் பொருட்களை குவிந்தனர்.

(B) அமைச்சர் பதவியேற்றவுடன், பாராட்டுகள் குவிந்தனர். ஆதரவாளர்கள் பரிசுப் பொருட்களைக் குவித்தன.

(C) அமைச்சர் பதவியேற்றவுடன், பாராட்டுகள் குவிந்தது. ஆதரவாளர்கள் பரிசுப் பொருட்களைக் குவித்தனர்.

(D) ✓ அமைச்சர் பதவியேற்றவுடன் பாராட்டுகள் குவிந்தன. ஆதரவாளர்கள் பரிசுப் பொருட்களை குவித்தனர்.

(E) விடை தெரியவில்லை

86. அகரவரிசைப்படி சொற்களை சீர் செய்க.

(A) ஏழ்கடல், ஓலைச்சுவடி, ஊழி, அழகு, ஐயம்

(B) ஓலைச்சுவடி, ஊழி, ஐயம், அழகு, ஏழ்கடல்

(C) ✓ அழகு, ஊழி, ஏழ்கடல், ஐயம், ஓலைச்சுவடி

(D) ஊழி, ஏழ்கடல், ஐயம், அழகு, ஓலைச்சுவடி

(E) விடை தெரியவில்லை

87. சரியான வினாவைத் தேர்ந்தெடுக்கவும்.

ஜப்பானில் சாப்ட்வங்கி உருவாக்கிய இயந்திர மனிதன் பெப்பர்.

(A) இயந்திர மனிதன் என்பவர் யார்?

(B) சாப்ட்வங்கி உருவாக்கிய இயந்திரம் எது?

(C) ஜப்பானில் உருவாக்கிய இயந்திர மனிதர் யார்?

(D) ✓ பெப்பர் என்று அழைக்கப்படுவது யாது?

(E) விடை தெரியவில்லை

88. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுக்க

தமிழர்களின் வீர விளையாட்டு ஏறு தழுவுதல் ஆகும்.

(A) தமிழர்களின் வீர விளையாட்டு இது?

(B) தமிழர்களின் வீர விளையாட்டு எது?

(C) தமிழர்களின் வீர விளையாட்டு யாவை?

(D) தமிழர்களின் வீர விளையாட்டு அது?

(E) விடை தெரியவில்லை

89. கல்லில் நார் உரித்தல் எனும் உவமை கூறும் பொருள் எதுவென கண்டறிக :

(A) இயலாத செயல்

(B) எண்ணி செயல்படாமை

(C) துன்ப செயல்

(D) நீண்ட காலமாக இருப்பது

(E) விடை தெரியவில்லை

90. செய்வினைத் தொடரைக் கண்டறிக.

(A) கயல்விழி பாடாதே

(B) கயல்விழி பாடி மகிழ்ந்தாள்

(C) கயல்விழியால் பாடப்பட்டது

(D) கயல்விழி பாடி மகிழ்வித்தாள்

(E) விடை தெரியவில்லை

91. பிறவினைத் தொடரைக் காண்க.

(A) அவனைத் திருந்தச் செய்தான்

(B) அவனைத் திருப்பினான்

(C) அவனைத் திட்டினான்

(D) அவனை வருந்தினான்

(E) விடை தெரியவில்லை

92. "பசுமரத்து ஆணி போல" – உவமை கூறும் பொருளைக் கூறு.

(A) பயனற்ற செயல்
(B) மனதில் பதிதல்
(C) தற்செயல் நிகழ்வு
(D) வெளிப்படையானவை
(E) விடை தெரியவில்லை

93. உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்வு செய்க.

ஆகாயத் தாமரை

(A) பயனின்றி இருத்தல்
(B) நீண்ட காலத்திற்குரியது
(C) இருப்பதுபோல் தோன்றுதல்
(D) இல்லாத ஒன்று
(E) விடை தெரியவில்லை

94. உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடுக்க.

அவலை நினைத்து உரலை இடித்தல்

(A) பயனின்றி இருத்தல்
(B) எண்ணமும் செயலும் ஒத்துவராமை
(C) இல்லாத ஒன்று
(D) பட்டறிவில்லா படிப்பறிவு
(E) விடை தெரியவில்லை

95. சரியான கலைச் சொல்லைத் தேர்ந்தெடுக்க.

VOLUNTEER

(A) முற்போக்காளர்
(B) பேச்சாளர்
(C) தன்னார்வலர்
(D) வழக்கறிஞர்
(E) விடை தெரியவில்லை

96. சரியான கலைச் சொல்லைத் தேர்ந்தெடுக்க.

"CLIMATE"

(A) ஈரப்பதம்
(B) தட்பவெப்ப நிலை
(C) வானிலை
(D) சுழற்ச்சி
(E) விடை தெரியவில்லை

97. அலுவல் சார்ந்த சொற்கள் (கலைச்சொல்)

காணொலிக் கூட்டம்.

(A) Electronic devices
(B) Missile
(C) Video conference
(D) Nautical mile
(E) விடை தெரியவில்லை

98. விடை வகைகள்

'என்னுடன் ஊருக்கு வருவாயா?' என்ற வினாவிற்கு 'வராமல் இருப்பேனா?' என்று விடை கூறுவது ————

(A) இனமொழி விடை
(B) ஏவல் விடை
(C) நேர் விடை
(D) வினா எதிர் வினாதல் விடை
(E) விடை தெரியவில்லை

99. விடை வகைகள் :

"இது செய்வாயா?" என்று வினவிய போது, "நீயே செய்" என்று ஏவிக் கூறுவது

(A) சுட்டு விடை
(B) மறை விடை
(C) நேர் விடை
(D) ஏவல் விடை
(E) விடை தெரியவில்லை

100. விடை வகையைக் கூறுக

'கடைக்குப் போவாயா?' என்ற வினாவிற்குப் 'போக மாட்டேன்' என மறுத்துக் கூறல்

(A) நேர் விடை
(B) மறை விடை
(C) வினா எதிர் வினாதல் விடை
(D) உற்றது உரைத்தல் விடை
(E) விடை தெரியவில்லை

## POSTS INCLUDED IN COMBINED TECHNICAL SERVICES EXAMINATION (INTERVIEW POSTS)

## COMPUTER BASED TEST

## PAPER – I - TAMIL ELIGIBILITY TEST & GENERAL STUDIES

## பகுதி-அ (தமிழ் தகுதி தேர்வு)

## Part-A (Tamil Eligibility Test)

| | |
|---|---|
| வினாக்கள் : 1–100 | மொத்த மதிப்பெண்கள் : 150 |
| Questions : 1–100 | Total Marks : 150 |

1. சரியான தொடரை தேர்ந்தெடு

(A) திருக்குறளுக்கு முதன் முதலில் உரை எழுதியவர் மணக்குடவர்

(B) உரை எழுதியவர் முதல் முதலில் திருக்குறளுக்கு மணக்குடவர்

(C) திருக்குறளுக்கு உரை எழுதியவர் மணக்குடவர் முதல் முதலில்

(D) மணக்குடவர் முதல் முதலில் உரை எழுதியவர் திருக்குறளுக்கு

(E) விடை தெரியவில்லை

2. சரியான தொடரைத் தேர்ந்தெடுத்தல்

(A) உலகம் தமிழ்மொழி வாழட்டும் உள்ளவரையிலும்

(B) உலகம் உள்ளவரையிலும் தமிழ்மொழி வாழட்டும்

(C) உள்ளவரையிலும் உலகம் வாழட்டும் தமிழ்மொழி

(D) வாழட்டும் உலகம் தமிழ்மொழி உள்ளவரையிலும்

(E) விடை தெரியவில்லை

3. சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடராக்குக

(A) குசேலபுரி சமஸ்தானம் பிரதானத்தொழில் உழவுதான்

(B) பிரதானத் தொழில் உழவுதான் குசேலபுரி சமஸ்தானத்துக்கு

(C) குசேலபுரி சமஸ்தானத்துக்கு உழவுதான் பிரதானத் தொழில்

(D) உழவுதான் தொழில் குசேலபுரி சமஸ்தானத்துக்குப் பிரதானம்

(E) விடை தெரியவில்லை

4. சரியான கூட்டுப் பெயரைத் தெரிவு செய்க.

ஆடு

(A) ஆட்டுக் கூட்டம்

(B) ஆட்டு மந்தை

(C) ஆடுகள்

(D) ஆட்டுநிரை

(E) விடை தெரியவில்லை

5. சரியான கூட்டுப்பெயரைத் தெரிவு செய்க.

மாடு

(A) மாட்டு மந்தை

(B) மாட்டுக்கூட்டம்

(C) மாட்டுப் பண்ணை

(D) மாடுகள்

(E) விடை தெரியவில்லை

6. நிரல் நிறை அணி – இதில் நிறை என்பதன் பொருள் எது?

(A) வரிசைப்படுத்துதல்

(B) நிறுத்துதல்

(C) வைத்தல்

(D) அடுக்குதல்

(E) விடை தெரியவில்லை

7. எங்க நிக்கற? – இந்த பேச்சு வழக்கினை எழுத்து வழக்காக்கும் பொழுது எவ்வாறு அமையும்?

(A) எங்கு நிற்கிறது?

(B) எங்கே நிற்கிறாய்?

(C) எங்கே நில்கிறாய்?

(D) எங்கு நில்குது?

(E) விடை தெரியவில்லை

8. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது எது?

(A) வேற்றுமை உருபு
(B) எழுவாய்
(C) உவம உருபு
(D) உரிச்சொல்
(E) விடை தெரியவில்லை

9. கலைச்சொற்களை அறிதல்

சரியான இணையைத் தேர்ந்தெடுக்க

(A) Classical Literature – பண்டைய இலக்கியம்
(B) Epic literature – செவ்விலக்கியம்
(C) Ancient literature – காப்பிய இலக்கியம்
(D) Regional literature – வட்டார இலக்கியம்
(E) விடை தெரியவில்லை

10. கலைச்சொற்களை அறிதல்

சரியான இணையைத் தேர்க

(A) Irrigation – நிலப்பகுதி
(B) Consulate – துணைத்தூதரகம்
(C) Territory – வணிகக்குழு
(D) Guild – பாசனம்
(E) விடை தெரியவில்லை

11. கூற்று, காரணம் – சரியா? தவறா?

(1) மொழி காலத்திற்கு ஏற்ப மாறுகிறது

(2) எழுத்துமொழி காலம் கடந்தும் நிலைத்து நிற்கும்

(3) எழுத்து மொழியில் உடல் மொழிக்கு வாய்ப்பு அதிகம்

(4) பேச்சு மொழி சிறப்பாக அமையக் குரல் ஏற்றத்தாழ்வு அவசியம்

(A) (1), (2), (4) சரி (3) தவறு

(B) (1), (2), (3) சரி (4) தவறு

(C) (1) தவறு (2), (3), (4) சரி

(D) (1), (3), (4) சரி (2) தவறு

(E) விடை தெரியவில்லை

12. கூற்று, காரணம் – சரியா? தவறா?

(i) ஒரு பெயரைக் கொண்டு முடியும் எச்சம் பெயரெச்சம்

(ii) பெயரெச்சம் மூன்று காலத்திலும் வரும்

(iii) பெயரெச்சம் மூன்று வகைப்படும்

(A) கூற்று – (i), (ii), (iii) தவறு

(B) கூற்று – (i), (ii) சரி, (iii) தவறு

(C) கூற்று – (i), (ii), (iii) சரி

(D) கூற்று – (i) சரி, (ii), (iii) தவறு

(E) விடை தெரியவில்லை

13. கூற்று, காரணம் – சரியா? தவறா?

தமிழுக்கும் அமுதென்று பேர்! அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்

கூற்று :

(i) இப்பாடலை பாடியவர் பாரதிதாசன்

(ii) இவர் புரட்சிக்கவி என்று போற்றப்படுகிறார்

(iii) இவரின் இயற்பெயர் சுப்புரத்தினம்

(A) கூற்று – (i), (ii), (iii) தவறு

(B) கூற்று – (i), (ii) சரி, (iii) தவறு

(C) கூற்று – (i) சரி, (ii), (iii) தவறு

(D) கூற்று – (i), (ii), (iii) சரி

(E) விடை தெரியவில்லை

14. குறில் – நெடில் மாற்றம் பொருள் வேறுபாடு

பனம் – பானம்

(A) அருமை – வானகம்

(B) பருமை – பானகம்

(C) செழுமை – கானகம்

(D) கருமை – பானகம்

(E) விடை தெரியவில்லை

15. குறில் நெடில் வேறுபாடு

கண் – காண்

(A) உறுப்பு – மலர்ச்சி

(B) உறுப்பு – காட்சி

(C) உறுப்பு – எழுச்சி

(D) உறுப்பு – பயிற்சி

(E) விடை தெரியவில்லை

16. இரு பொருள் தருக

களை – இருபொருள் தருக

(A) பயிருடன் வளரும் புல்பூண்டுகள், அழகு

(B) அழகு, போதல்

(C) முதன்மை, குற்றம்

(D) அச்சம், அயர்வு

(E) விடை தெரியவில்லை

17. இரு பொருள் தருக : ஆழி

(A) ஓடுதல், மேற்கூரை

(B) கடல், மோதிரம்

(C) சந்திரன், மாதம்

(D) நதி, எண்

(E) விடை தெரியவில்லை

18. இரு பொருள் தருக

படி

(A) குணம் - தகுதி

(B) படித்தல் - வீட்டின்படி

(C) பாட்டுபடித்தல் - எழுதுதல்

(D) கீற்று - கயிறு

(E) விடை தெரியவில்லை

19. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க (வலசை போதல்)

(A) காடுகள் இடம்பெயர்தல் ———— எனப்படும்

(B) பறவைகள் இடம் பெயர்தல் ———— எனப்படும்

(C) மனிதன் இடம் பெயர்தல் ———— எனப்படும்

(D) விலங்குகள் இடம் பெயர்தல் ———— எனப்படும்

(E) விடை தெரியவில்லை

20. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க (கருப்பு).

(A) பாடகரின் முகம் வெட்கத்தில் ———— விட்டது

(B) வானத்தின் நிறம் ————

(C) அப்பாவிகளின் மனம் ————

(D) வெயிலில் அலையாதே; உடல் ———— விடும்

(E) விடை தெரியவில்லை

21. சரியான இணைப்புச் சொல்

உணவு வகைகளும் உணவு சமைக்கும் முறைகளும் மொழியில் நயம்படச் சொல்லப்படும் முறைமையைப் படித்து சுவைத்து ———— ஈர்ப்புடன் எழுதப்பழகுதல் – விடுபட்ட சரியான இணைப்புச் சொல்லைத் தேர்வு செய்க.

(A) அதனால்

(B) ஆகையால்

(C) எனவே

(D) அதுபோல

(E) விடை தெரியவில்லை

22. சரியான இணைப்புச் சொல் எழுதுக

குயிலுக்குக் கூடு கட்டத்தெரியாது; ———— காக்கையின் கூட்டில் முட்டையிடும்

(A) ஆகையால்

(B) அதுபோல

(C) அதனால்

(D) எனவே

(E) விடை தெரியவில்லை

23. சரியான இணைப்புச் சொல்

நாம் இனிய சொற்களைப் பேச வேண்டும் ———— துன்பப்பட நேரிடும்

(A) எனவே

(B) ஏனெனில்

(C) இல்லையென்றால்

(D) மேலும்

(E) விடை தெரியவில்லை

24. சரியான வினாச்சொல்லை தேர்ந்தெடு
நிலங்களை ———— வகையாக பிரித்தனர்?

(A) எப்படி?
(B) என்ன?
(C) எத்தனை?
(D) எவ்வாறு?
(E) விடை தெரியவில்லை

25. சரியான வினாச் சொல்லை தேர்ந்தெடு
கொங்கு நாட்டில் பாயும் ஆறுகள் ————?

(A) எப்படி?
(B) யார்?
(C) எவ்வாறு?
(D) யாவை?
(E) விடை தெரியவில்லை

26. சரியான வினாச்சொல்லை தேர்ந்தெடு
செப்புத் திருமேனிகளின் பொற்காலம் ————?

(A) எது?
(B) எப்படி?
(C) எவ்வாறு?
(D) என்ன?
(E) விடை தெரியவில்லை

27. பொருத்தமான காலத்தைச் சுட்டுக
நாங்கள் நேற்றுக் கடற்கரைக்குச் சென்றோம்.

(A) இறந்தகாலம்
(B) நிகழ்காலம்
(C) எதிர்காலம்
(D) கார்காலம்
(E) விடை தெரியவில்லை

28. பொருத்தமான காலம் அமைத்தல்
தமிழுக்குத் தலைகொடுத்தவன் குமணவள்ளல்

(A) முக்காலம்
(B) நிகழ்காலம்
(C) இறந்தகாலம்
(D) எதிர்காலம்
(E) விடை தெரியவில்லை

29. பொருத்தமான காலம் அமைத்தல்
மழை நன்கு பெய்தது

(A) இறந்தகாலம்
(B) எதிர்காலம்
(C) நிகழ்காலம்
(D) முக்காலம்
(E) விடை தெரியவில்லை

30. சொற்களை இணைத்து புதியசொல் உருவாக்கல்
விளக்கு, விண், மணி, விலங்கு, மேகலை எனும் சொற்களைக் கொண்டு உருவாக்கினால் வரும் சரியான சொல்லைக் கண்டறிக

(A) விலங்கு மணி
(B) மேகலை விளக்கு
(C) மணி மேகலை
(D) விண் விலங்கு
(E) விடை தெரியவில்லை

31. பேச்சு வழக்கிற்கு ஏற்ற எழுத்து வழக்குச் சொற்களை எழுதுக.
எதிர்த்தாப்புல ஒரு டீ ஸ்டால் இருக்குது

(A) எதிரில் ஒரு தேநீர்க்கடை இருக்குது
(B) எதிரில் ஒன்று டீ ஸ்டால் இருந்தது
(C) எதிர்த்தாப்புல ஒரு டீ ஸ்டால் இருக்கும்
(D) எதிரில் ஒரு தேநீர்க்கடை இருக்கிறது
(E) விடை தெரியவில்லை

32. பேச்சுவழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.

(A) "தம்பி நீ எங்க நிக்கிறே"?

(B) "தம்பி நீ எங்கே நிக்குற"?

(C) "தம்பி நீ எங்கே நிற்கின்றாய்"?

(D) "தம்பி நீ எங்கே இருக்க"?

(E) விடை தெரியவில்லை

33. நிறுத்தற் குறிகளை அறிதல்.

நிறுத்தற் குறிகள் (எது சரியானது)

(A) 'செழியன்' துணிக்கடைக்குச் சென்றான்

(B) செழியன், 'துணிக்கடைக்குச்' சென்றான்

(C) செழியன் துணிக்கடைக்குச் சென்றான்.

(D) "செழியன் துணிக்கடைக்குச்" சென்றான்

(E) விடை தெரியவில்லை

34. நிறுத்தற்குறிகளை அறிதல்

சரியான நிறுத்தற்குறியிட்ட வாக்கியத்தைத் தேர்வு செய்க.

(A) "காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை"

(B) மூன்றாம், காலம், போல் ஒன்று.

(C) சாலை, விபத்தில்லா, "தமிழ்நாடு".

(D) எத்திசையிலும் சோறு தட்டாது?

(E) விடை தெரியவில்லை

35. நிறுத்தற்குறி அறிக (எது சரியானது)

(A) திரு.வி.க. மாணவர்களிடம், "தமிழ்க் காவியங்களைப் படியுங்கள்; இன்பம் நுகருங்கள்" என்று கூறினார்.

(B) திரு.வி.க, மாணவர்களிடம். தமிழ்க் காப்பியங்களைக், படியுங்கள். இன்பம் நுகருங்கள். என்று கூறினார்.

(C) திரு.வி.க மாணவர்களிடம், தமிழ்க் காவியங்களைப் படியுங்கள்; இன்பம் நுகருங்கள் என்று கூறினார்.

(D) திரு.வி.க மாணவர்களிடம் தமிழ்க் காவியங்களைப் படியுங்கள்: இன்பம் நுகருங்கள் என்று கூறினார்.

(E) விடை தெரியவில்லை

36. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொல்

எதார்த்தம்

(A) இயல்பு (B) பழக்கம்

(C) வழக்கம் (D) பழக்கத்திலில்லை

(E) விடை தெரியவில்லை

37. ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுதுக.

கோயம்புத்தூர்

(A) கோவை (B) கோம்புத்தூர்

(C) புத்தூர் (D) கோயம்

(E) விடை தெரியவில்லை

38. ஊர்ப்பெயரின் மரூஉவை எழுதுக.

கும்பகோணம்

(A) குடந்தை (B) கும்பை

(C) குமுளி (D) குரும்பூர்

(E) விடை தெரியவில்லை

39. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொல்

நீவு

(A) நீண்ட
(B) நீ
(C) நீர்
(D) நீலம்
(E) விடை தெரியவில்லை

40. ஆங்கில சொல்லுக்கு இணையான தமிழ்சொல் தருக. சரியான இணையைத் தேர்வு செய்க.

(A) To look up - எட்டிப்பார்த்து
(B) Lute music - நெட்டுரு
(C) Chamber - நீதி நூல்
(D) Rote - பேத்தி
(E) விடை தெரியவில்லை

41. பிற மொழிச் சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல்லைக் கண்டறிக.

புஸ்தகம், Books

(A) நூல்கள்
(B) வானொலி
(C) திரைப்படம்
(D) மின்னஞ்சல்
(E) விடை தெரியவில்லை

42. கடைக்குப் போவாயா? என்ற கேள்விக்குப் போவேன் என்று உடன்பட்டுக் கூறுதல்

(A) நேர்விடை
(B) வினா எதிர்வினாதல் விடை
(C) மறைவிடை
(D) சுட்டு விடை
(E) விடை தெரியவில்லை

பத்தியிலிருந்து வினாவிற்கான சரியான விடையைத் தேர்ந்தெடு.

இருபதாம் நூற்றாண்டில் இந்திய வானியல் அறிவியல் துறையில் தமிழர்களின் பங்கு மகத்தானது. அப்துல்கலாம், மயில்சாமி அண்ணாதுரை, வளர்மதி போன்றோர் வரிசையில் மற்றுமொரு வைரம்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த அறிவியலாளர் சிவன். இஸ்ரோவின் ஒன்பதாவது தலைவர். இந்தப்பதவியை ஏற்றிருக்கும் முதல் தமிழர் என்னும் சிறப்புகளுக்கு உரியவர். 2015 ஆம் ஆண்டில் விக்ரம் சாராபாய் விண்வெளி மையத்தின் இயக்குநராக இருந்து, இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (ISRO) தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார்.

43. இருபதாம் நூற்றாண்டில் இந்திய வானியல் அறிவியல் துறையில் யாருடைய பங்கு மகத்தானது?

(A) தமிழர்
(B) ஆங்கிலேயர்
(C) சீனர்கள்
(D) கிரேக்கர்கள்
(E) விடை தெரியவில்லை

44. தமிழ்நாட்டைச் சேர்ந்த அறிவியலாளர்

(A) ஸ்டீபன்
(B) சிவன்
(C) ஐன்ஸ்டீன்
(D) எடிசன்
(E) விடை தெரியவில்லை

45. இஸ்ரோவின் ஒன்பதாவது தலைவர்

(A) சிவன்
(B) அப்துல்கலாம்
(C) வளர்மதி
(D) மயில்சாமி அண்ணாதுரை
(E) விடை தெரியவில்லை

46. இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் சுருக்கம்

(A) IRSO
(B) ISRO
(C) IORS
(D) IOSR
(E) விடை தெரியவில்லை

47. எந்த ஆண்டு விக்ரம் சாராபாய் விண்வெளி மையத்தின் இயக்குநராக இருந்தார்?

(A) 2014
(B) 2016
(C) 2015
(D) 2017
(E) விடை தெரியவில்லை

48. பிழை திருத்துக

பிழையற்ற தொடரைத் தேர்க.

(A) அவர் அல்ல
(B) அவர் அன்று
(C) அவர் அல்லர்
(D) அவர் இல்லை
(E) விடை தெரியவில்லை

49. பிழை திருத்துக

பிழையற்ற தொடரைத் தேர்வு செய்க.

(A) அது அன்று
(B) அது அல்ல
(C) அது அல்லது
(D) அது அள்ள
(E) விடை தெரியவில்லை

50. ஒருமை–பன்மை பிழைகளற்ற சரியானத் தொடரைக் கண்டறிக.

(A) வீரர்கள் நாட்டைக் காத்தாள்.
(B) வீரர்கள் நாட்டைக் காத்தது.
(C) வீரர்கள் நாட்டைக் காத்தனர்.
(D) வீரர்கள் நாட்டைக் காத்தன.
(E) விடை தெரியவில்லை

51. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | ஈன்று | (1) | மகிழ்ந்திட |
| (b) | கொம்பு | (2) | தங்குமிடம் |
| (c) | களித்திட | (3) | தந்து |
| (d) | விடுதி | (4) | கிளை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

(E) விடை தெரியவில்லை

52. சொல் –பொருள் பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| (a) | பரிதி | (1) | மலை |
| (b) | வெற்பு | (2) | கதிரவன் |
| (c) | துயின்று | (3) | கற்று |
| (d) | பயின்று | (4) | உறங்கி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 4 | 3 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 4 | 2 | 1 | 3 |

(E) விடை தெரியவில்லை

53. சொல்–பொருள் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | அவல் | (1) | வயல் |
| (b) | சுவல் | (2) | பள்ளம் |
| (c) | பழனம் | (3) | காடு |
| (d) | புறவு | (4) | பிடரி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 3 | 1 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 2 | 4 | 1 | 3 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

(E) விடை தெரியவில்லை

54. பிழை திருத்துதல் (ஒரு–ஓர்) சரியான பதிலைத் தேர்ந்தெடு.

(A) ஓர் அழகிய நகரம்
(B) ஒரு அழகிய நகரம்
(C) ஒரே அழகிய நகரம்
(D) ஒன்று அழகிய நகரம்
(E) விடை தெரியவில்லை

55. பிழை திருத்துக. கரடி ஒரு அனைத்துண்ணி.

(A) ஓர்
(B) ஒன்று
(C) ஒன்னு
(D) யொரு
(E) விடை தெரியவில்லை

56. விடை வகைகள் : 'கடைக்குப் போவாயா?' என்ற கேள்விக்குப் 'போகமாட்டேன்' என மறுத்துக் கூறல்.

(A) சுட்டு விடை
(B) மறை விடை
(C) நேர் விடை
(D) ஏவல் விடை
(E) விடை தெரியவில்லை

57. விடை வகைகள் : "உனக்குக் கதை எழுதத் தெரியுமா?" என்ற வினாவிற்குக் "கட்டுரை எழுதத் தெரியும்" என்று கூறுவது.

(A) இனமொழி விடை
(B) உறுவது கூறல் விடை
(C) சுட்டு விடை
(D) நேர் விடை
(E) விடை தெரியவில்லை

58. அலுவல் சார்ந்த சொற்கள் (கலைச் சொல்)

| | | | |
|---|---|---|---|
| (a) | Internet | (1) | தேடுபொறி |
| (b) | Anti clockwise | (2) | மின்னஞ்சல் |
| (c) | E-mail | (3) | இடஞ்சுழி |
| (d) | Search engine | (4) | இணையம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 1 | 3 | 4 | 2 |
| (C) | 4 | 2 | 1 | 3 |
| (D) | 2 | 3 | 4 | 1 |

(E) விடை தெரியவில்லை

59. கலைச்சொல்லின் பொருளறிந்து சரியான விடையை தெரிவு செய்க.

Auditor ————

(A) கணக்கர்
(B) கணக்கு எழுத்தர்
(C) பட்டயக் கணக்கர்
(D) பட்டய எழுத்தாளர்
(E) விடை தெரியவில்லை

60. கலைச் சொல்லுக்கேற்ற சரியான தமிழ்ச்சொல்லை எழுதுக.
Affidavit ————

(A) சாட்டுரை
(B) ஆணை உறுதி ஆவணம்
(C) ஆவணம் உறுதிமொழி
(D) அதிகார ஆவணம்
(E) விடை தெரியவில்லை

61. பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல
–இவ்வுவமைத் தொடர் உணர்த்தும் பொருளைத் தேர்க.

(A) பயனற்ற செயல்
(B) எதிர்பாரா நிகழ்வு
(C) அதிக துயரம்
(D) இரட்டிப்பு மகிழ்ச்சி
(E) விடை தெரியவில்லை

62. திருவிழாவைக் காண மக்கள் திரண்டு வந்தனர் – இத்தொடருக்கு ஏற்ற உவமைத் தொடரைத் தேர்க.

(A) நெல்லிக்காய் மூட்டையைக் கொட்டினாற் போல
(B) மடை திறந்த வெள்ளம் போல
(C) கிணறு வெட்டப் பூதம் கிளம்பியது போல
(D) விழலுக்கு இறைத்த நீர் போல
(E) விடை தெரியவில்லை

63. கம்பி நீட்டுதல் எனும் உவமை கூறும் பொருள் எதுவென கண்டறிக

(A) இயலாத செயல்
(B) எண்ணி செயல்படாமை
(C) விரைந்து வெளியேறுதல்
(D) புகழ்பெற்று விளங்குதல்
(E) விடை தெரியவில்லை

64. எவ்வகை வினை?
அவன் திருந்தினான்

(A) தன்வினை
(B) பிறவினை
(C) செய்வினை
(D) செயப்பாட்டு வினை
(E) விடை தெரியவில்லை

65. எவ்வகை வாக்கியம் எனக் கண்டு எழுதுதல்
"சட்டி உடைந்து போயிற்று" எவ்வகை வாக்கியம்.

(A) செயப்பாட்டு வினை
(B) செய்வினை
(C) தன்வினை
(D) பிறவினை
(E) விடை தெரியவில்லை

66. எவ்வகை வாக்கியம் எனக் கண்டறிக

(A) குமரன் மழையில் நனையவில்லை – வினாத்தொடர்
(B) அப்துல் நேற்று வருவித்தான் – எதிர்மறை வினைத்தொடர்
(C) உள்ளே பேசிக்கொண்டிருப்பவர் யார் – பிறவினைத் தொடர்
(D) குமரன் மழையில் நனைந்தான் – உடன்பாட்டு வினைத்தொடர்
(E) விடை தெரியவில்லை

67. விடைக்கேற்ற வினா அமைக்க:

1957–ம் ஆண்டு முதலே இரஷ்யா உட்பட பல நாடுகள் செயற்கைக் கோள்களை ஏவியிருக்கின்றன

(A) எந்த ஆண்டு முதல் இரஷ்யா உட்பட பல நாடுகள் செயற்கைக் கோள்களை ஏவியிருக்கின்றன?

(B) 1957–ம் ஆண்டு முதல் இரஷ்யா செயற்கைக் கோள்களை ஏவியுள்ளதா?

(C) செயற்கைக் கோள்களை பல நாடுகளும் ஏவியிருக்கின்றனவா?

(D) செயற்கைக் கோள்களை ஏவிய நாடுகள் எவை?

(E) விடை தெரியவில்லை

68. நம் முன்னோர் இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்தினர்

(A) யார் இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்தினர்?

(B) நம் முன்னோர் என்பது யாரைக் குறிக்கும்?

(C) எந்தப் பகுதியில் அகழாய்வுகள் நடத்தப்படுகின்றன?

(D) நாம் ஏன் இயற்கையோடு இயைந்து வாழ வேண்டும்?

(E) விடை தெரியவில்லை

69. இருவினைகளின் பொருள் வேறுபாடு அறிதல்
விலை – விளை

(A) செய்தல் – வியத்தல்

(B) பொருளின் மதிப்பு – உண்டாக்குதல்

(C) விரும்புதல் – மெலிந்து போதல்

(D) செடியின் இலை – நூல் இழை

(E) விடை தெரியவில்லை

70. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குதல்

(A) வழிபாட்டுக் கூட்டத்தில் மாணவர் நின்றனர் சீருடையுடன்

(B) மாணவர்கள் சீருடையுடன் நின்றனர் வழிபாட்டுக் கூட்டத்தில்

(C) வழிபாட்டுக் கூட்டத்தில் மாணவர்கள் சீருடையுடன் நின்றனர்

(D) வழிபாட்டுக் கூட்டத்தில் நின்றனர் சீருடையுடன் மாணவர்கள்

(E) விடை தெரியவில்லை

71. சரியான அகர வரிசையைத் தேர்ந்தெடு:

(A) உழவு, மண், ஏர், மாடு

(B) மண், மாடு, ஏர், உழவு

(C) உழவு, ஏர், மண், மாடு

(D) ஏர், உழவு, மாடு, மண்

(E) விடை தெரியவில்லை

72. சொற்களை ஒழுங்குப்படுத்தி தொடரை எழுதுக.

(A) கூர்மையான புலவர்களுக்கு வேல் போன்ற கருவியாகும் புகழ்மிகுந்த நல்ல தமிழ்.

(B) வேல் போன்ற கருவியாகும் நல்ல புகழ்மிகுந்த புலவர்களுக்குக் கூர்மையான தமிழ்

(C) நல்ல புலவர்களுக்குப் புகழ்மிகுந்த கூர்மையான தமிழ் வேல் போன்ற கருவியாகும்

(D) தமிழ் நல்ல புகழ்மிகுந்த புலவர்களுக்குக் கூர்மையான வேல் போன்ற கருவியாகும்

(E) விடை தெரியவில்லை

73. அகர வரிசைப்படி எழுது
கோப்பெரு – நற்கிள்ளி, காவற்பெண்டு, புறநானூறு, வீரம், சோழ மன்னன்

(A) கோப்பெரு நற்கிள்ளி, காவற்பெண்டு, சோழமன்னன், புறநானூறு, வீரம்

(B) காவற்பெண்டு, கோப்பெரு நற்கிள்ளி, சோழ–மன்னன், புறநானூறு, வீரம்

(C) சோழமன்னன், காவற்பெண்டு, கோப்பெரு நற்கிள்ளி, புறநானூறு, வீரம்

(D) வீரம், புறநானூறு, கோப்பெரு நற்கிள்ளி, சோழமன்னன், காவற் பெண்டு

(E) விடை தெரியவில்லை

74. பின்வரும் இசைக்கருவிகளின் பெயர்களை அகரவரிசைப்படுத்துக
படகம், தவில், கணப்பறை, பேரியாழ், உறுமி, உடுக்கை, தவண்டை, பிடில், நாகசுரம், மகுடி

(A) நாகசுரம், படகம், பிடில், பேரியாழ், மகுடி, கணப்பறை, தவண்டை, தவில், உறுமி, உடுக்கை

(B) கணப்பறை, தவண்டை, தவில், உறுமி, உடுக்கை, படகம், பிடில், நாகசுரம், பேரியாழ், மகுடி

(C) படகம், பேரியாழ், பிடில், நாகசுரம், தவண்டை, தவில், கணப்பறை, மகுடி, உறுமி, உடுக்கை

(D) உடுக்கை, உறுமி, கணப்பறை, தவண்டை, தவில், நாகசுரம், படகம், பிடில், பேரியாழ், மகுடி

(E) விடை தெரியவில்லை

75. அகரவரிசைப்படி சொற்களை சீர்செய்க

(A) வெந்தயம், பஞ்சு, தக்காளி, செங்கடல், குன்று

(B) குன்று, செங்கடல், தக்காளி, பஞ்சு, வெந்தயம், குன்று

(C) தக்காளி, குன்று, பஞ்சு, வெந்தயம், செங்கடல்

(D) தக்காளி, வெந்தயம், செங்கடல், குன்று, பஞ்சு

(E) விடை தெரியவில்லை

76. 'விதை' என்ற வேர்ச்சொல்லின் எதிர்மறைத் தொழிற் பெயர்

(A) விதைத்தல்
(B) விதையாமை
(C) விதைக்காதிரு
(D) விதைப்பது
(E) விடை தெரியவில்லை

77. வினைமுற்று – வினையெச்சம்
'பாடினாள் கண்ணகி' எவ்வகைத் தொடர்

(A) தொகைநிலைத் தொடர்
(B) பெயரெச்சத் தொடர்
(C) வினைமுற்றுத் தொடர்
(D) வேற்றுமைத் தொடர்
(E) விடை தெரியவில்லை

78. 'ஆள்' எனும் வேர்ச்சொல்லின் தொழிற்பெயரைக் கண்டறிக

(A) ஆளுதல்
(B) ஆளல்
(C) ஆள்க
(D) ஆளு
(E) விடை தெரியவில்லை

79. வேர்ச் சொல்லைத் தேர்வு செய்க
"செய்தான்"

(A) செய்தல்
(B) செய்
(C) செய்த
(D) செய்யும்
(E) விடை தெரியவில்லை

80. குமைந்தனை – வேர்ச்சொல்லைத் தருக

(A) குமைந்த
(B) குமைந்து
(C) குமைத்த
(D) குமை
(E) விடை தெரியவில்லை

81. ஒரு பொருள் தரும் பல சொற்கள்
வெற்பு, சிலம்பு, பொருப்பு, குன்று ஆகிய சொற்கள் எதனைக் குறிக்கும்?

(A) மழை
(B) மலை
(C) அணிகலன்
(D) குணம்
(E) விடை தெரியவில்லை

82. 'தலை' – இச்சொல்லுக்கு இணையான வேறுசொற்களைக் கண்டறிக

(A) புல், இலை
(B) சிறை, கால்சிலம்பு
(C) கட்டுதல், விலங்கு
(D) முதன்மை, சிரசு
(E) விடை தெரியவில்லை

83. ஒரு பொருள் தரும் பல சொற்கள்,
சூரியன்

(A) கதிரவன், ஆதவன், பகலவன், ஞாயிறு
(B) கதிரவன், பகலவன், திங்கள், ஞாயிறு
(C) வெய்யோன், ஞாயிறு, சந்திரன், பகலவன்
(D) ஆதவன், ஞாயிறு, கடல், வெய்யோன்
(E) விடை தெரியவில்லை

84. ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான இணையைத் தெரிவு செய்க
அலை – அழை

(A) பரவை – நீர்த்திரை
(B) குளிர்ச்சி – மது
(C) கடலலை – வரவழைத்தல்
(D) மிகுதி – கடல்
(E) விடை தெரியவில்லை

85. ஒலி மற்றும் பொருள் வேறுபாடு அறிந்து சரியான சொல்லைத் தேர்ந்தெடு
ஆணி – ஆனி

(A) எழுத்தாணி – மாதம்
(B) இரும்பாணி – வருடம்
(C) எழுத்தாணி – காலம்
(D) இரும்பாணி – நாள்
(E) விடை தெரியவில்லை

86. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லில் சரியான இணையைத் தேர்ந்தெழுது

(A) Intellectual – அறிவாளர்
(B) Symbolism – ஆய்வேடு
(C) Emblem – குறியீட்டியல்
(D) Thesis – சின்னம்
(E) விடை தெரியவில்லை

87. "ஈ" காமர்ஸ் இணையான தமிழ்ச்சொல்

(A) மின்னணுவணிகம்
(B) பற்று
(C) இணையதள வணிகம்
(D) மின்னணு
(E) விடை தெரியவில்லை

88. "டெபிட் கார்டு" என்பதன் இணையான தமிழ்ச் சொல்

(A) கடன் அட்டை
(B) காசோலை
(C) வரைவோலை
(D) பற்று அட்டை
(E) விடை தெரியவில்லை

89. மரபுப் பிழை நீக்கிய சொல்லைத் தேர்வு செய்க

(A) புறா குனுகும்
(B) மயில் கத்தும்
(C) கிளி கூவும்
(D) குயில் அகவும்
(E) விடை தெரியவில்லை

90. சரியான மரபுச் சொல்லினைத் தேர்க
சப்பாத்திக் கள்ளி ————

(A) தோகை
(B) தாள்
(C) தழை
(D) மடல்
(E) விடை தெரியவில்லை

91. சரியான மரபுச் சொல்லினைத் தேர்க
நாணல் ————

(A) தோகை
(B) புல்
(C) இலை
(D) ஓலை
(E) விடை தெரியவில்லை

92. பொருந்தாச் சொல்லைக் கண்டறிதல்
நற்றிணை – கலித்தொகை – பரிபாடல் – மதுரைக்காஞ்சி

(A) மதுரைக்காஞ்சி
(B) நற்றிணை
(C) பரிபாடல்
(D) கலித்தொகை
(E) விடை தெரியவில்லை

93. பொருந்தாச் சொல்லைக் கண்டறிதல்
முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை, திருக்குறள்,

(A) முல்லைப்பாட்டு
(B) மதுரைக்காஞ்சி
(C) திருக்குறள்
(D) பட்டினப்பாலை
(E) விடை தெரியவில்லை

94. பொருந்தா இணையைத் தேர்ந்தெழுதுக

(A) வரைந்த ஓவியம் – பெயரெச்சத் தொடர்

(B) சென்றனர் வீரர் – வினைமுற்றுத் தொடர்

(C) பொற்றொடி வந்தாள் – அன்மொழித் தொகை

(D) நண்பா படி – உரிச்சொல் தொடர்

(E) விடை தெரியவில்லை

95. இளமை – என்னும் சொல்லின் எதிர்ச்சொல்

(A) முதுமை (B) புதுமை

(C) தனிமை (D) இனிமை

(E) விடை தெரியவில்லை

96. எதிர்ச்சொல் எழுதுக
ஈதல் ×

(A) இறங்குதல் (B) ஏற்றல்

(C) வாய்த்தல் (D) சேருதல்

(E) விடை தெரியவில்லை

97. எதிர்ச்சொல் எழுதுக
இரவலர் ×

(A) புதியவர் (B) எளியவர்

(C) வறியவர் (D) புரவலர்

(E) விடை தெரியவில்லை

98. 'காடு+ஆறு' என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

(A) காட்டாறு

(B) காடாறு

(C) காட்டுஆறு

(D) காடுஆறு

(E) விடை தெரியவில்லை

99. 'அறிந்தது + அனைத்தும்' என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

(A) அறிந்தது அனைத்தும்

(B) அறிந்தனைத்தும்

(C) அறிந்ததனைத்தும்

(D) அறிந்துனைத்தும்

(E) விடை தெரியவில்லை

100. எழுத்து + ஆணி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்

(A) எழுத்துஆணி

(B) எழுத்தாணி

(C) எழுத்துதாணி

(D) எழுதாணி

(E) விடை தெரியவில்லை

# பகுதி-அ - தமிழ்மொழித் தகுதித்தேர்வு
## (பத்தாம் வகுப்பு தரம்)

# Part-A - Tamil Eligibility Test (SSLC Standard)

**வினாக்கள் : 1–100** **மொத்த மதிப்பெண்கள்: 150**

**Questions : 1–100** **Total Marks : 150**

---

1. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை கண்டறிதல்.

| | | |
|---|---|---|
| (a) | பொக்கிஷம் | 1. அழகு |
| (b) | சாஸ்தி | 2. செல்வம் |
| (c) | விஸ்தாரம் | 3. மிகுதி |
| (d) | சிங்காரம் | 4. பெரும் பரப்பு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| ~~(A)~~ | 2 | 3 | 4 | 1 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 1 | 2 | 4 | 3 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

(E) விடை தெரியவில்லை

2. விடை வகைகள் : 'கடைக்குப் போவாயா'? என்ற கேள்விக்குப் 'போகமாட்டேன்' என மறுத்துக் கூறல் எவ்வகை விடை?

(A) சுட்டு விடை
~~(B)~~ மறை விடை
(C) நேர் விடை
(D) ஏவல் விடை
(E) விடை தெரியவில்லை

3. விடை வகையைத் தேர்ந்தெழுது.

வினாவிற்கு விடையாக இனமான மற்றொன்றை விடையாகக் கூறல்

(A) நேர் விடை
(B) மறை விடை
(C) ஏவல் விடை
~~(D)~~ இனமொழி விடை
(E) விடை தெரியவில்லை

4. பொருத்தமானதைத் தேர்ந்தெடு.

Journalism

(A) அறிவியல்
(B) கலையியல்
(C) இதழியல்
(D) தொல்லியல்
(E) விடை தெரியவில்லை

5. பொருத்தமானதைத் தேர்ந்தெடு

Media

(A) ஊடகம்
(B) வானொலி
(C) தொலைக்காட்சி
(D) இணையம்
(E) விடை தெரியவில்லை

6. உவமைத் தொடர்கள் உணர்த்தும் பொருள்களைப் பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| (a) | குன்றிலிட்ட விளக்குபோல | 1. | கடமை தவறுதல் |
| (b) | வேலியே பயிரை மேய்ந்தது போல | 2. | அறியாமை |
| (c) | உடலும் உயிரும் போல | 3. | பரவிய புகழ் |
| (d) | கிணற்றுத் தவளை போல | 4. | மனமொன்றிய துணை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 3 | 2 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 2 | 1 | 4 | 3 |

(E) விடை தெரியவில்லை

7. எவ்வகை வாக்கியம் எனக்கண்டெழுதுக

தன் வினைத்தொடரைக் கண்டறிக.

(A) அகமது நேற்று வந்தான்
(B) அப்பா நேற்று வருவித்தார்
(C) பூக்களைப் பறிக்காதீர்
(D) எவ்வளவு உயரமான மரம்
(E) விடை தெரியவில்லை

8. சொற்களை ஒழுங்குப்படுத்தி சொற்றொடராக்குதல்

(A) மனிதன் உலகில் இல்லாத பறவை வாழ முடியாது
(B) பறவை இல்லாத உலகில் மனிதன் வாழ முடியாது
(C) உலகில் மனிதன் பறவை இல்லாத வாழ முடியாது
(D) வாழ முடியாது மனிதன் பறவை இல்லாத உலகில்
(E) விடை தெரியவில்லை

9. சொற்களை ஒழுங்குப்படுத்தி சொற்றொடராக்குக.

(A) திளைக்காத தமிழன் உண்டா குறளின்பத்தில்?
(B) குறளின்பத்தில் திளைக்காத தமிழன் உண்டா?
(C) தமிழன் உண்டா குறளின்பத்தில் திலைக்காத?
(D) உண்டா தமிழன் திளைக்காத குறளின்பத்தில்?
(E) விடை தெரியவில்லை

10. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க.

(A) அழகு, ஆற்றல், அன்பு, ஆக்கம், அலகு
(B) அன்பு, அலகு, ஆற்றல், ஆக்கம், அழகு
(C) அலகு, அழகு, அன்பு, ஆக்கம், ஆற்றல்
(D) ஆக்கம், அலகு, அன்பு, அழகு, ஆற்றல்
(E) விடை தெரியவில்லை

11. வேர்ச்சொல்லைத் தேர்வு செய்தல்.

கீழ்க்கண்டவற்றுள் சரியான வேர்ச்சொல் இணையைக் கண்டறிக.

வேர்ச்சொல் – வினைமுற்று

(A) சென்று – சென்றார்

(B) காண் – கண்டேன்

(C) கேட் – கேட்டார்

(D) பயின் – பயின்றாள்

(E) விடை தெரியவில்லை

12. வேர்ச்சொல்லைத் தேர்வு செய்தல்.

சரியான இணையைத் தேர்க.

வேர்ச்சொல் – வினைமுற்று

(A) நட – நடக்கிறது

(B) உண்ட – உண்கிறேன்

(C) பேசி – பேசினாள்

(D) போன – போனான்

(E) விடை தெரியவில்லை

13. வேர்ச்சொல்லைத் தேர்வு செய்தல்.

கீழ்க்கண்டவற்றுள் தவறான வேர்ச்சொல் இணையைக் கண்டறிக.

வேர்ச்சொல் – வினைமுற்று

(A) வா (வரு) – வருக

(B) தீர் – தீர்த்தோன்

(C) வீழ்ந்த – வீழ்ந்தனள்

(D) உரை – உரைத்தது

(E) விடை தெரியவில்லை

14. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல் அறிக.
சரியான இணையைத் தேர்க.

(A) Trust – சாரண சாரணியர்
(B) Volunteer – தன்னார்வலர்
(C) Social Worker – அறக்கட்டளை
(D) Scouts and Guides – சமூகப்பணியாளர்
(E) விடை தெரியவில்லை

15. கலைச் சொல் அறிதல் – பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| (a) | Conical Stone | 1. | புணர்ச்சி |
| (b) | Missile | 2. | குமிழிக்கல் |
| (c) | Combination | 3. | கருவூலம் |
| (d) | Treasury | 4. | ஏவுகணை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 1 | 3 |
| (B) | 2 | 4 | 3 | 1 |
| (C) | 2 | 1 | 4 | 3 |
| (D) | 4 | 2 | 3 | 1 |

(E) விடை தெரியவில்லை

16. ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல் அறிக.

(A) Storm – காற்று
(B) Sea Breeze – சுழல் காற்று
(C) Tempest – சூறாவளி
(D) Land Breeze – நிலக்காற்று
(E) விடை தெரியவில்லை

17. பிறமொழிச் சொற்கள் கலந்த தொடரைக் கண்டறிக.

(A) ஏழு மின் விசிறிகள் உள்ளன
(B) அதிகாரிகள் உத்தரவு போட்டனர்
(C) தங்கக் கட்டிகள் உள்ளனவா?
(D) எழுதுகோல்கள் வாங்கி வா
(E) விடை தெரியவில்லை

18. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக.

(A) கவை
(B) கொப்பு
(C) போத்து
(D) சண்டு
(E) விடை தெரியவில்லை

19. 'சோம்பல்' என்னும் சொல்லுக்குரிய எதிர்ச்சொல்

(A) அழிவு
(B) துன்பம்
(C) சுறுசுறுப்பு
(D) சோகம்
(E) விடை தெரியவில்லை

20. உதித்த – என்ற சொல்லிற்குரிய எதிர்ச்சொல்

(A) நிறைந்த
(B) குறைந்த
(C) மறைந்த
(D) தோன்றிய
(E) விடை தெரியவில்லை

21. 'அணுகு' என்பதன் எதிர்ச்சொல்

(A) தெளிவு
(B) விலகு
(C) முறையிடல்
(D) சோர்வு
(E) விடை தெரியவில்லை

22. 'தோரண மேடை' – என்னும் சொல்லைப் பிரித்தெழுதக் கிடைப்பது

(A) தோரணம் + மேடை
(B) தோரண + மேடை
(C) தோரணம் + ஒடை
(D) தோரணம் + ஒடை
(E) விடை தெரியவில்லை

கீழ்க்கண்ட பத்தியைப் படித்து வினாவிற்குறிய சரியான விடையைத் தேர்ந்தெடு. (23 – 27)

உலக அறிவை நாம் பெறுவதற்குப் பாடநூல்கள் மட்டும் போதாது. பல்வேறு துறை சார்ந்த நூல்களைத் தேடிப் படிக்க வேண்டும். அதற்குத் துணை புரிவன நூலகங்களே ஆகும். நூலகங்கள் மாவட்ட நூலகம், கிளை நூலகம், ஊர்ப்புற நூலகம், பகுதி நேர நூலகம், தனியாள் நூலகம் எனப்பல வகைப்படும். ஆசியாவிலேயே இரண்டாவது பெரிய நூலகம் சென்னையில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகமாகும். இது தரைத்தளத்தோடு எட்டு அடுக்குகளைக் கொண்டது. இதன் பரப்பளவு மட்டும் எட்டு ஏக்கர் ஆகும்.

23. பல்வேறு துறை சார்ந்த நூல்கள் கிடைக்குமிடம்

(A) பள்ளி (B) கல்லூரி

(C) நூலகம் (D) வீடு

(E) விடை தெரியவில்லை

24. கிராமங்களில் இயங்கும் நூலகம்

(A) மாவட்ட நூலகம் (B) தனியாள் நூலகம்

(C) கிளை நூலகம் (D) ஊர்ப்புற நூலகம்

(E) விடை தெரியவில்லை

25. சென்னையில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் பரப்பளவு

(A) 6 ஏக்கர் (B) 8 ஏக்கர்

(C) 10 ஏக்கர் (D) 12 ஏக்கர்

(E) விடை தெரியவில்லை

26. அண்ணா நூற்றாண்டு நூலகம் ஆசியாவின்

(A) இரண்டாவது பெரிய நூலகம் (B) மூன்றாவது பெரிய நூலகம்

(C) நான்காவது பெரிய நூலகம் (D) ஐந்தாவது பெரிய நூலகம்

(E) விடை தெரியவில்லை

27. நூலகம் என்ற சொல்லைப் பிரிக்கக் கிடைப்பது

(A) நூ + அகம்
(B) நூல் + அகம்
(C) நூல + கம்
(D) நூல் + அங்கம்
(E) விடை தெரியவில்லை

28. சரியானவற்றை எழுது

கூற்று : இந்திய தேசிய இராணுவப் படைத்தலைவராக இருந்த திவ்வான் "இந்திய தேசிய இராணுவத்தின் இதயமும், ஆத்மாவும் தமிழர்கள்தான் என்றார்".

காரணம் : இந்திய தேசிய இராணுவத்திற்கு வலுச்சேர்த்த பெருமைக்கு உரியவர்கள் தமிழர்கள்.

(A) கூற்று சரி; காரணம் சரி
(B) கூற்று சரி; காரணம் தவறு
(C) கூற்று தவறு; காரணம் சரி
(D) கூற்று தவறு; காரணம் தவறு
(E) விடை தெரியவில்லை

29. பிழையற்ற தொடரைத் தெரிவு செய்க.

(A) அவள் அன்று
(B) அவள் அல்ல
(C) அவள் அல்லள்
(D) அவள் இல்லை
(E) விடை தெரியவில்லை

30. ஒருமை பன்மை பிழை நீக்குக.

(A) மதியழகன் சூறாவளியின் போது தரைத்தளத்தில் தங்கியதால் தப்பினார்கள்
(B) மதியழகன் சூறாவளியின்போது தரைத்தளத்தில் தங்கியதால் தப்பினான்
(C) மதியழகன் சூறாவளியின்போது தரைத்தளத்தில் தங்கியதால் தப்பின
(D) மதியழகன் சூறாவளியின்போது தரைத்தளத்தில் தங்கியதால் தப்பியது
(E) விடை தெரியவில்லை

31. சொல் – பொருள்

சரியான இணையைத் தேர்ந்தெடுக்க.

(A) பரி – யானை

(B) கரி – குதிரை

(C) கமுகு – பாக்கு

(D) சிற்றில் – சிறு குகை

(E) விடை தெரியவில்லை

32. பிழை திருத்துதல் :

சரியான பதிலைத் தேர்ந்தெடு.

(A) ஓர் நகரம்

(B) ஓர் நாள்

(C) ஒரு அரசு

(D) ஒரு நகரம்

(E) விடை தெரியவில்லை

33. பிழை திருத்துதல் :

சரியான விடையைத் தேர்ந்தெடு.

(A) ஓர் ஊர்

(B) ஒரு ஊர்

(C) ஓர் பள்ளி

(D) ஒரு அணில்

(E) விடை தெரியவில்லை

34. சரியான தொடர் அமைப்பினைக் குறிப்பிடுக.

(A) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு

(B) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு

(C) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு

(D) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்குத் இடமுண்டு

(E) விடை தெரியவில்லை

35. பொருத்தமான பொருளைத் தெரிவு செய்தல்.
சிலப்பதிகாரம் எவ்வகை பாவில் அமைந்துள்ளது?

(A) வெண்பா
(B) அகவற்பா
(C) கலிப்பா
(D) வஞ்சிப்பா
(E) விடை தெரியவில்லை

36. வள்ளுவரும் தம்குறள் பாவடியால் வையத்தார்
உள்ளுவதெல்லாம் அளந்தார் ஓர்ந்து
- என்று வள்ளுவரைப் புகழ்ந்தவர்

(A) பாவேந்தர்
(B) பரணர்
(C) கவிமணி
(D) சுரதா
(E) விடை தெரியவில்லை

37. ஐம்பெருங்காப்பியம் என்னும் சொற்றொடரைத் தம் உரையில் குறிப்பிட்டவர்

(A) சிவஞான முனிவர்
(B) மயிலை நாதர்
(C) ஆறுமுக நாவலர்
(D) இளம்பூரணர்
(E) விடை தெரியவில்லை

38. கார்காலத்தைப் பெரும் பொழுதாகக் கொண்ட நிலத்தைச் சுட்டுக.

(A) முல்லை
(B) மருதம்
(C) பாலை
(D) குறிஞ்சி
(E) விடை தெரியவில்லை

39. "கரம்பிடும்பை இல்லார்" – இத்தொடரின் பொருள் கூறுக.

(A) துன்பம் தராத நல்லார்
(B) மகிழ்ச்சி தராத மாந்தர்
(C) பகை இல்லாத நட்பினர்
(D) பொருளை பதுக்கும் கையர்
(E) விடை தெரியவில்லை

40. குறில் – நெடில் மாற்றம் பொருள் வேறுபாடு அறிக.

சரியான இணையைத் தேர்க.

கல் – கால்

(A) விருப்பு, உறுப்பு

(B) பாறை, விளைவு

(C) படி, உடல் உறுப்பு

(D) காற்று, கல்வி

(E) விடை தெரியவில்லை

41. ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான இணையைத் தெரிவு செய்க.

விதி – வீதி

(A) சட்டம், தெரு

(B) பயணம், அகலம்

(C) கனவு, தெரு

(D) நாடக வகை, தெரு

(E) விடை தெரியவில்லை

42. குறில் நெடில் வேறுபாடு அறிந்து எழுதுக.

நான் ———— படிப்பேன்.

நான் ———— பிடிப்பேன்.

(A) (பாடம்/படம்)

(B) (படம்/பாடம்)

(C) (பாடாம்/படம்)

(D) (படாம்/பாடம்)

(E) விடை தெரியவில்லை

43. 'வேங்கை' என்பதன் இருபொருள் தருக :

(A) கடுமை, வேகின்ற கை

(B) மரம், புலி

(C) மரம், கழுதை

(D) செடி, வெட்கம்

(E) விடை தெரியவில்லை

44. நான் மட்டுமே தண்டனை ஏற்று நரகத்தைச் சேர்வேன். ———— என் மக்கள் அனைவர்க்கும் நலம் கிட்டும்-இராமானுசர்

சரியான இணைப்புச் சொல் கொண்டு நிரப்புக

(A) அதனால்
(B) ஆனால்
(C) எனவே
(D) ஏனெனில்
(E) விடை தெரியவில்லை

45. நல்ல அறிவும் பண்பும் உடையவர்களுக்குப் பணம் பணியாள் ———— இவை இல்லாதவர்க்கோ மோசமான எசமான்

(A) எனவே
(B) ஆனால்
(C) ஆகையால்
(D) அதனால்
(E) விடை தெரியவில்லை

46. சரியான விளாச்சொல்லைத் தேர்ந்தெடு

தொகைச் சொற்கள் ———— வகைப்படும்

(A) எத்தனை
(B) எத்துணை
(C) என்ன
(D) எவ்வளவு
(E) விடை தெரியவில்லை

47. சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு

காசி நகரத்தின் பெருமையைக் கூறும் நூல் ————?

(A) எது
(B) எவ்வது?
(C) ஏன்
(D) எதற்கு
(E) விடை தெரியவில்லை

48. 'இருக்கு' என்ற பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்று

(A) இருக்குது
(B) கீது
(C) இருக்கிறது
(D) இழுத்துக் கட்டு
(E) விடை தெரியவில்லை

49. பேச்சு வழக்கு எழுத்து வழக்கு

எல்லாரும் வேகமா எங்கே போறாங்க?

(A) எல்லாரும் வேகமாக எங்கு போறோம்?
(B) எல்லாரும் வேகமாக ஏங்கு போகிறார்கள்?
(C) எல்லாரும் வேகமாக எங்கு போவீர்கள்?
(D) எல்லாரும் வேகமாக எங்கு போய் விட்டார்கள்?
(E) விடை தெரியவில்லை

50. நிறுத்தற் குறிகள் (எது சரியானது)

தமிழ் இயல் இசை நாடகம் என முத்தமிழாய் வளர்ந்தது

(A) தமிழ், இயல் இசை நாடகம் என முத்தமிழாய் வளர்ந்தது.
(B) தமிழ் இயல், இசை, நாடகம், என முத்தமிழாய் வளர்ந்தது !
(C) தமிழ், 'இயல் இசை நாடகம்' என முத்தமிழாய் வளர்ந்தது ;
(D) "தமிழ் இயல், இசை, நாடகம் என முத்தமிழாய் வளர்ந்தது"
(E) விடை தெரியவில்லை

51. நிறுத்தற் குறிகள் (எது சரியானது)

கடல் முத்தினையும் அமிழ்தினையும் தருகிறது

(A) கடல், முத்தினையும், அமிழ்தினையும் தருகிறது.
(B) கடல் முத்தினையும், அமிழ்தினையும் தருகிறது ;
(C) கடல் முத்தினையும் அமிழ்தினையும் தருகிறது.
(D) கடல் முத்தினையும் அமிழ்தினையும் தருகிறது !
(E) விடை தெரியவில்லை

52. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொல்.

காலிங்பெல்

(A) எச்சரிக்கை மணி

(B) அழைப்பு மணி

(C) கோவில் மணி

(D) தொழிற்சாலை மணி

(E) விடை தெரியவில்லை

53. பிற மொழிச் சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல்லைக் கண்டுபிடி.

"இதே எக்ஸ்பெரிமெண்ட்டை ரிப்பீட் செய்து ஆன்சரைக் கண்டுபிடியுங்கள்"

(A) இதே செய்முறையை மீண்டும் செய்து விடையைக் கண்டு பிடியுங்கள்

(B) இதே செயல்முறையை மீண்டும் செய்து ஆன்சரைக் கண்டு பிடியுங்கள்

(C) இதே செயல்திட்ட முறையை மீண்டும் செய்து விடையைக் கண்டு பிடியுங்கள்

(D) இதே செயல்முறையை ரிப்பீட் செய்து விடையைக் கண்டு பிடியுங்கள்

(E) விடை தெரியவில்லை

54. விடை வகைகள் : "இது செய்வாயா?" என்று வினவியபோது, "நீயே செய்" என்று ஏவிக் கூறுவது

(A) ஏவல் விடை
(B) உற்றது உரைத்தல் விடை
(C) உறுவது கூறல் விடை
(D) நேர்விடை
(E) விடை தெரியவில்லை

55. நிறுத்தற்குறிகளை அறிதல்

நிறுத்தற்குறிகள் (எது சரியானது)

(A) கலாம் ஐயாவைக் காண்பதா? எப்படி.
(B) கலாம் ஐயாவைக் காண்பதா ! எப்படி !
(C) கலாம் ஐயாவைக் காண்பதா? எப்படி?
(D) கலாம் ஐயாவைக் காண்பதா ! எப்படி?
(E) விடை தெரியவில்லை

56. அலுவல் சார்ந்த சொற்கள் (கலைச்சொல்).

'Morpheme'.

(A) ஒலியன்
(B) ஒப்பிலக்கணம்
(C) பேரகராதி
(D) உருபன்
(E) விடை தெரியவில்லை

57. தவறான இணையைத் தேர்ந்தெடுக்க.

(A) Consulate – துணைத்தூதரகம்
(B) Patent – காப்புரிமை
(C) Document – பணம்
(D) Guild – வணிகக்குழு
(E) விடை தெரியவில்லை

58. உவமைகளால் விளக்கப் பெறும் பொருள்களுள் – பொருந்தாதது தேர்க

(A) விழலுக்கு இறைத்த நீர்போல – பயனுள்ள செயல்

(B) பசுமரத்து ஆணிபோல – எளிதில் மனதில் பதிதல்

(C) உடலும் உயிரும்போல – மனமொத்த நட்பு

(D) கிணற்றுத் தவளைபோல – உலகம் அறியாமை

(E) விடை தெரியவில்லை

59. உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெழுதுக.

எலியும் பூனையும் போல

(A) இணக்கம்

(B) ஒற்றுமை

(C) பகைமை

(D) வலிமை

(E) விடை தெரியவில்லை

60. எவ்வகை வினை?

கவிதா உரை படித்தாள்

(A) செய்வினை

(B) எதிர்மறைவினை

(C) பிறவினை

(D) செயப்பாட்டுவினை

(E) விடை தெரியவில்லை

61. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுக.

பிறவினை வாக்கியத்தை தேர்ந்தெழுதுக.

(A) குமரன் மழையில் நனைந்தான்.

(B) எவ்வளவு உயரமான மரம்!

(C) அப்துல் நேற்று வருவித்தான்

(D) பந்து உருண்டது

(E) விடை தெரியவில்லை

62. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்தல்.

கம்பளம், குன்று, காக்கை, செங்கடல், தேங்காய்

(A) செங்கடல், தேங்காய், குன்று, காக்கை, கம்பளம்

(B) தேங்காய், கம்பளம், குன்று, செங்கடல், காக்கை

(C) காக்கை, கம்பளம், குன்று, தேங்காய், செங்கடல்

(D) கம்பளம், காக்கை, குன்று, செங்கடல், தேங்காய்

(E) விடை தெரியவில்லை

63. கீழ்க்காணும் சொற்களை அகர வரிசைப்படுத்துக.

(A) அன்பு, இன்பம், ஆற்றல், ஈடு, உணர்வு

(B) இன்பம், உணர்வு, ஈடு, அன்பு, ஆற்றல்

(C) ஈடு, அன்பு, ஆற்றல், இன்பம், உணர்வு

(D) அன்பு, ஆற்றல், இன்பம், ஈடு, உணர்வு

(E) விடை தெரியவில்லை

64. வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயரைக் கண்டறிக.

பாடு

(A) பாடியவள்

(B) பாடுதல்

(C) பாடுகின்றாள்

(D) பாடினாள்

(E) விடை தெரியவில்லை

65. வேர்ச்சொல்லின் தொழிற்பெயரைக் கண்டறிக.

காண்

(A) கண்டல்

(B) காண்க

(C) காணுதல்

(D) கண்டான்

(E) விடை தெரியவில்லை

66. ஒரு பொருள் தரும் பல சொற்கள்

அருள், பரிவு, கருணை ஆகிய சொற்கள் எதனைக் குறிக்கும்?

(A) இரக்கம்
(B) அன்பு
(C) வறுமை
(D) ஈகை
(E) விடை தெரியவில்லை

67. ஒரு பொருள் தரும் பல சொற்கள்

ஆதவன், பகலவன், ஞாயிறு ஆகிய சொற்கள் எதனைக் குறிக்கும்?

(A) மாணவன்
(B) கதிரவன்
(C) இறைவன்
(D) முதியவன்
(E) விடை தெரியவில்லை

68. ஒரு பொருள் தரும் பல சொற்கள்

வாயு, தென்றல், வளி, புயல், சூறாவளி எனப் பல்வேறு பெயர்களில் கூறப்படுவது எது? தேர்ந்து எழுதுக.

(A) கதிரவன்
(B) ஆழி
(C) காற்று
(D) நிலம்
(E) விடை தெரியவில்லை

69. ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான இணையைத் தெரிவு செய்க.

கொடு – கோடு

(A) ஈ – கேட்டல்
(B) தா – வட்டம்
(C) கொடுத்தல் – நேராக வரைதல்
(D) கூறிய – மலை
(E) விடை தெரியவில்லை

70. சந்தி பிழையற்ற வாக்கியங்களைக் கண்டறிக.

(1) வாடைக் காற்று வீசியது

(2) வாடை காற்று வீசியது

(3) வெயில் சட்டெனத் தணிந்தது

(4) வெயில் சட்டென தணிந்தது

(A) (1) மற்றும் (3) சரி
(B) (2) மற்றும் (4) சரி
(C) (1) மற்றும் (4) சரி
(D) (2) மற்றும் (3) சரி
(E) விடை தெரியவில்லை

71. மரபுப்பிழை நீக்கி எழுது.

இல்லத்தின் அருகே கூரை ————.

(A) கட்டினர்
(B) உருவாக்கினர்
(C) வேய்ந்தனர்
(D) முடைந்தனர்
(E) விடை தெரியவில்லை

72. பொருந்தாத சொற்களை எடுத்து எழுதுக.

பாக்கு, பஞ்சு, பாட்டு, பத்து

(A) பாக்கு
(B) பஞ்சு
(C) பாட்டு
(D) பத்து
(E) விடை தெரியவில்லை

73. பொருந்தாத சொல்லை கண்டறிக.

பண்பு, மஞ்சு, கண்டு, எஃகு

(A) எஃகு
(B) கண்டு
(C) மஞ்சு
(D) பண்பு
(E) விடை தெரியவில்லை

74. 'வானமளந்தது' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

(A) வான + மளந்தது
(B) வான் + அளந்தது
(C) வானம் + அளந்தது
(D) வான் + மளந்தது
(E) விடை தெரியவில்லை

75. 'கைப்பொருள்' – என்னும் சொல்லைப் பிரித்தெழுதக் கிடைப்பது

(A) கையில் + பொருள்
(B) கை + பொருள்
(C) கைப் + பொருள்
(D) கைப்பு + பொருள்
(E) விடை தெரியவில்லை

76. 'என்றென்றும்' என்னும் சொல்லைப் பிரித்தெழுதக் கிடைப்பது

(A) என் + றென்றும்
(B) என்று + என்றும்
(C) என்றும் + என்றும்
(D) என் + என்றும்
(E) விடை தெரியவில்லை

77. 'வாசல் + அலங்காரம்'– என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

(A) வாசல் அலங்காரம்
(B) வாசலங்காரம்
(C) வாசலலங்காரம்
(D) வாசலிங்காரம்
(E) விடை தெரியவில்லை

78. ஒருமை பன்மை பிழை நீக்குக.

சரியான தொடரைத் தெரிவு செய்க.

(A) அதைச் செய்தது நான் அன்று

(B) பானையை உடைத்தது கண்ணன் அல்ல

(C) பகைவர் நீவிர் அல்லர்

(D) இவை பழங்கள் அல்ல

(E) விடை தெரியவில்லை

79. சொல் – பொருள் – பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | தெளிவு | 1. | அடங்கி இருத்தல் |
| (b) | ஓர்தல் | 2. | நற்காட்சி |
| (c) | உவசமம் | 3. | அகற்றுவதற்கு |
| (d) | போத்தற்கு | 4. | நல்லறிவு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 1 | 3 |
| (B) | 4 | 2 | 3 | 1 |
| (C) | 2 | 1 | 4 | 3 |
| (D) | 3 | 4 | 2 | 1 |
| (E) | விடை தெரியவில்லை | | | |

80. சொல்லும் பொருளும் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | குந்த | 1. | மணம் |
| (b) | மிசை | 2. | உட்கார |
| (c) | கந்தம் | 3. | கவலை |
| (d) | விசனம் | 4. | மேல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 3 | 4 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 2 | 4 | 3 | 1 |
| (D) | 2 | 1 | 4 | 3 |
| (E) | விடை தெரியவில்லை | | | |

81. எவ்வகைத் தொடர்?

பூக்களைப் பறிக்காதீர்

(A) செய்தித்தொடர்
(B) வினாத்தொடர்
(C) கட்டளைத் தொடர்
(D) உணர்ச்சித்தொடர்
(E) விடை தெரியவில்லை

82. சரியான தொடரைத் தேர்ந்தெடு.

எவ்வளவு உயரமான மரம் !

(A) கட்டளைத் தொடர்
(B) செய்தித்தொடர்
(C) வினாத்தொடர்
(D) உணர்ச்சித்தொடர்
(E) விடை தெரியவில்லை

83. சொல்லின் கூட்டப்பெயர் காண்.

பழம்

(A) பழங்கள்
(B) பழகள்
(C) பழக்கள்
(D) பழம்கள்
(E) விடை தெரியவில்லை

84. சரியான கூட்டுப் பெயரைத் தெரிவு செய்க.

ஆடு

(A) நிரை
(B) கூட்டம்
(C) மந்தை
(D) ஆடுகள்
(E) விடை தெரியவில்லை

85. பொருத்தமான நூலினைத் தெரிவு செய்க.

"அல்லில் ஆயினும் விருந்து வரின்

உவக்கும்" – என்று விருந்தோம்பலின் சிறப்பை விளக்கும் வரிகள் இடம்பெற்ற நூல்.

(A) புறநானூறு
(B) நற்றிணை
(C) சிலப்பதிகாரம்
(D) சிறுபாணாற்றுப்படை
(E) விடை தெரியவில்லை

86. கலைச்சொற்களை அறிக.

Saline Soil

(A) வறண்ட நிலம்
(B) பசுமை நிலம்
(C) களர் நிலம்
(D) பண்பட்ட நிலம்
(E) விடை தெரியவில்லை

87. கலைச்சொற்களை அறிக.

Ancient Literature

(A) நாட்டுப்புற இலக்கியம்
(B) பக்தி இலக்கியம்
(C) செவ்விலக்கியம்
(D) பண்டைய இலக்கியம்
(E) விடை தெரியவில்லை

88. கலைச்சொற்களை அறிதல்

சரியான இணையைத் தேர்ந்தெடுக்க.

(A) Missile – கடல்மைல்
(B) Launch Vehicle – ஏவுகணை
(C) Download – பதிவிறக்கம்
(D) Nautical Mile – ஏவு ஊர்தி
(E) விடை தெரியவில்லை

89. இரு பொருள் தருக

அலை

(A) நீரலை – ஆற்றல்

(B) பகல் – சேறு

(C) கடல் அலை – அலைந்து திரிதல்

(D) திரைச்சீலை – சுத்தம் செய்

(E) விடை தெரியவில்லை

90. இரு பொருள் தருக

ஆறு

(A) காவிரி – வைகை

(B) நதி – எண்

(C) கங்கை – யமுனை

(D) ஐந்து – வழி

(E) விடை தெரியவில்லை

91. மரபு பிழையற்ற தொடரைத் தேர்வு செய்க

(A) சேவல் கூவும்

(B) புறா கொக்கரிக்கும்

(C) கோழி சத்தம் போடும்

(D) கோழி கரையும்

(E) விடை தெரியவில்லை

92. சரியான இணைப்புச் சொல்

காற்றே ! வா

உன்னைப் பாடாமல்

இருக்க முடியாது

———— பாட்டின் மூல ஊற்றே

நீதான் – விடுபட்ட இணைப்புச் சொல்லைத் தேர்வு செய்க.

(A) எனவே

(B) அதுபோல

(C) ஏனெனில்

(D) ஆகையால்

(E) விடை தெரியவில்லை

93. நிறுத்தற்குறிகளை அறிதல்

நிறுத்தற்குறிகள் (எது சரியானது)

(A) ஆ! யாரது சாலையோரம் படுத்துக்கிடப்பது!

(B) ஆ? யாரது சாலையோரம் படுத்துக்கிடப்பது?

(C) ஆ; யாரது, சாலையோரம் படுத்துக் கிடப்பது?

(D) ஆ, யாரது? சாலையோரம் படுத்துக் கிடப்பது!

(E) விடை தெரியவில்லை

94. ஊர்ப் பெயர்களின் மரூஉவைக் கண்டுபிடிக்க

புதுக்கோட்டை

(A) புதுயை

(B) புதுமை

(C) புதுகை

(D) புதுவை

(E) விடை தெரியவில்லை

95. ஊர்ப் பெயர்களின் மரூஉவை எழுதுக.

திருநெல்வேலி

(A) நெல்லை

(B) நெல்லூர்

(C) நெல்வாயில்

(D) நெய்வேலி

(E) விடை தெரியவில்லை

96. ஊர்ப் பெயரின் மரூஉவை எழுது.

புதுச்சேரி

(A) புதுமுகனை

(B) புதுவை

(C) புதுகை

(D) பாண்டிச்சேரி

(E) விடை தெரியவில்லை

97. பொருத்தமான காலத்தைச் சுட்டுக.

மாடுகள் இப்பொழுது புல் மேய்கின்றன

(A) இறந்த காலம்
(B) எதிர் காலம்
(C) நிகழ் காலம்
(D) கோடை காலம்
(E) விடை தெரியவில்லை

98. பொருத்தமான காலத்தை எடுத்து எழுதுக

சரியான இணையைத் தேர்ந்தெழுதுக

(A) கண்ணன் பாடுகிறான் (நிகழ்காலம்)
(B) மாணவி எழுகிறாள் (இறந்தகாலம்)
(C) வளவன் சாப்பிட்டான் (எதிர்காலம்)
(D) குமுதா கடைக்குப் போனாள் (எதிர்காலம்)
(E) விடை தெரியவில்லை

99. பொருத்தமான காலத்தை எடுத்தெழுதுக.

சரியான இணையைத் தேர்வு செய்க.

(A) கண்ணன் படித்தான் – இறந்தகாலம்
